இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றம்
பொன்விழா சிறப்பு மலர்



HINDU OLI

ALL CEYLON HINDU CONGRESS
GOLDEN JUBILEE COMMEMORATIVE ISSUE

2007

பாகம் 2 VOLUME


























230.6
இந்து
SC/PR



இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றம்

பொன்விழா சிறப்பு மலர்

ஆண்டுகள்

50

years

HINDU OLI

ALL CEYLON HINDU CONGRESS

GOLDEN JUBILEE COMMEMORATIVE ISSUE

வெளியீடு: ஆனித் திங்கள் 2007

PUBLISHED : JULY 2007

பாகம் 2 VOLUME

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்



சிறப்பு மலரின் உள்ளடக்கம்

பாகம் 1

1 இறை வணக்கம்

2 ஆசிகளும் வாழ்த்துக்களும்

3 மாமன்ற வரலாற்றுப் பதிவுகள்

4 யாழ். இந்து மாநாடு கட்டுரைகள்

5 மட்டக்களப்பு இந்து மாநாடு கட்டுரைகள்

6 சங்கங்களும் அவற்றின் பணிகளும்

7 முகாமைப் பேரவை உறுப்பினர்கள்

பாகம் 2

8 பொன்விழா போட்டிக் கட்டுரைகள்

9 சிறப்புக் கட்டுரைகள்

10 ஆங்கிலக் கட்டுரைகள்

11 கவிதைகள்

12 நிகழ்வின் நினைவுகள் (நிழற்படங்கள்)

இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்றம்
பொன்விழா சிறப்பு மலர்

HINDU OLI

ALL CEYLON HINDU CONGRESS
GOLDEN JUBILEE COMMEMORATIVE ISSUE

மாமன்றப் பொன்விழா சிறப்பு மலரை தயாரித்து அழகுறச் சமர்ப்பிப்போர்.....



கந்தையா நீலகண்டன்
Kandiah Neelakandan
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்



எம். ஆர். இராஜ்மோகன்
M. R. Rajmohan
உப தலைவர், சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்
முகாமைப் பேரவை உறுப்பினர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்



அ. கனகசூரியர்
A. Kanagasooriar
தகவல் அலுவலர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்

சிறப்பு மலர் தயாரிப்பில் உறுதுணை வழங்கியோர்....

- ம. பாலகைலாசநாத சர்மா
- திருமதி பத்மா சோமகாந்தன்
- பால. இந்திரசர்மா

ISBN 978-955-1133-01-6

பொருளடக்கம்

பாகம் 1

பக்கம்

1. இறை வணக்கம் 11

1. பஞ்சபுராணம் 13

2. ஆசிகளும் வாழ்த்துக்களும் 15

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் – ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

1. தருமபுர ஆதீனம் – ஸ்ரீமத் மௌன குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் 17
2. திருவாவடுதுறை ஆதீனம் – சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 18
3. மதுரை ஆதீனம் – ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் 19
4. திருப்பனந்தாள் ஆதீனம் –
   கயிலை மாமுனிவர் திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் 20
5. குன்றக்குடி ஆதீனம் – தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் 21
6. பேரூர் ஆதீனம் – தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் 22
7. நல்லை ஆதீனம் – ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 23
8. சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் 24
9. பிரம்மஸ்ரீ. பா. சண்முகரத்தின சர்மா 25
10. சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் 26
11. கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாச்சாரியார் 27
12. சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் 28
13. சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் 29
14. சுவாமி அஜராத்மானந்தா மகராஜ் 30
15. தெய்வத் திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி 31
16. ஞானவித்தகர் அருட்கவி சீ. விநாசித்தம்பி 32
17. திருமதி சாந்தி நாவுக்கரசன் 33
18. திரு. வி. கயிலாசபிள்ளை 34
19. திரு. மா. தவயோகராஜா 35
20. திரு. இ. நமசிவாயம் 36

3. மாமன்ற வரலாற்றுப் பதிவுகள் 37

1.	மாமன்ற வரலாறும் அதன் பணிகளும்...	கந்தையா நீலகண்டன்	39
2.	இலங்கை இந்து மக்களின் குரல்		81
3.	Brief History of Hindusim and its Development in Sri Lanka		183
4.	From Our Diary		221
5.	மாமன்றம் மேலும் வளரவேண்டும்	வே. கந்தசாமி	230
6.	நடந்து வந்த பாதையில் பதிந்த சுவடுகள்	அ. கனகசூரியர்	231
7.	மாமன்றத்தால் மறக்கப்படமுடியாத மாணிக்கங்கள்		234
8.	மாமன்றக் கௌரவிப்பு நிகழ்வு		235
9.	Our Children		244
9.	பொன்விழா போட்டி முடிவுகள் / மருத்துவ உதவி		246

4. யாழ் இந்து மாநாட்டுக் கட்டுரைகள் 249

1.	யாழ்ப்பாணத்துத் தனித்துவமான இந்துசமய நம்பிக்கைகள்	பேராசிரியர் அ. சண்முகதாஸ்	251
2.	இன்றைய இலங்கையில் சைவமும் இதர சமயங்களில் அதன் செல்வாக்கும் – ஓர் ஆய்வு	பேராசிரியர் நா. ஞானகுமாரன்	255
3.	இந்துமத நடைமுறையில் அறிவியல்	கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்	259
4.	சமூக உளவியல் நோக்கில் இந்து சமய அழகியல்	பேராசிரியர் சபா. ஜெயராசா	263
5.	இருபதாம் நூற்றாண்டுகால இலங்கையில் இந்துமதத்தின் வளர்ச்சிப் போக்குகள்	பேராசிரியர் எஸ். சத்தியசீலன்	268
6.	இலங்கையில் இந்து சமய வழிபாட்டு மரபில் பெண்மை	முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்	272
7.	இந்து ஆலயங்களும் போசாக்குணவும்	சித்தமருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா	280
8.	இலங்கையில் சித்தர் மரபு	கலாநிதி பொன். இராமநாதன்	285
9.	இலங்கையில் சிதைவுற்ற இந்து ஆலயங்கள்	கலாநிதி. க. குணராசா	289
10.	என்றும் நிலைக்கும் எம் சமயம்	பேராசிரியர் டாக்டர் சோ.ந. கந்தசாமி	292
11.	புராணங்களின் படிப்பினைகள்	பேராசிரியர் டாக்டர் சோ.ந. கந்தசாமி	296
12.	இலங்கையில் எழுந்த இந்துமத இலக்கியங்கள்	ஈஸ்வரநாதபிள்ளை குமரன்	305
13.	ஈழத்து இந்து மதத்தில் இசைக் கருவிகள்	லயஞான வாரிதி சி. மகேந்திரன்	310
14.	இந்துமதம் எதிர்நோக்கும் சவால்கள்	குமாரசாமி சண்முகநாதன்	316
15.	இந்து நேர்த்திக் கடன்களும் மேலைத்தேய உளவியலும்	திருமதி கோகிலா மகேந்திரன்	322
16.	இலங்கை இந்துமத மரபில் சேர்.பொன். இராமநாதன்	திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்	327
17.	இந்துக்களின் சமூக கலாசாரப் பிரச்சினைகளும் சிவதொண்டர் அணியின் பங்களிப்பும்	சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன்	334
18.	மேலை நாட்டார் வருகையினால் ஈழத்து இந்துக்களின் சமய, பண்பாட்டுத் தளங்களில் ஏற்பட்ட தாக்கங்கள்	சிவகுருநாதன் கேசவன்	337
19.	ஈழத்து இந்து மதத்தில் விநாயகர் வழிபாடு	திருமதி ஜெயலஷ்மி உதயகுமார்	343
20.	இலங்கை இந்து மதத்தில் முருகன் வழிபாடு	திருமதி ஞா. கணேசநாதன்	349
21.	ஈழத்து இந்து மதத்தில் வைரவர் வழிபாடு	திருமதி கௌரி சுரேசன்	355
22.	இலங்கை இந்து மதத்தில் ஐயனார் வழிபாடு	திருமதி ஜெயமலர் தியாகலிங்கம்	361
23.	ஈழத்து இந்து சமயத்தில் மடை	செல்வி செல்வ அம்பிகை நடராஜா	369

5. மட்டக்களப்பு இந்து மாநாட்டுக் கட்டுரைகள் 375

1.	தென்கிழக்கிலங்கை இந்துக்களும் சைவத்திருமுறைகளின் பங்களிப்பும்	என். நாகராஜா	377
2.	சுவாமி விபுலானந்தரின் சமயப் பணிகள் – ஒரு நோக்கு	திருமதி. கௌரிமலர் மகேந்திரன்	380
3.	மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து மதத்தின் இன்றைய போக்கும் இளைஞர்களும்	கி. புண்ணியமூர்த்தி	388
4.	இந்துப் பண்பாட்டு மரபிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் ஆகம முறை சார்ந்த வழிபாட்டு முறைகள்	பிரம்மஸ்ரீ. ம. பாலகைலாசநாதசர்மா	399
5.	இந்து மதத்தின் தொன்மையும் இலங்கையில் அதன் தாக்கமும்	எஸ். எதிர்மன்னசிங்கம்	404
6.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகி பங்கு	ச. முகுந்தன்	408
7.	மட்டக்களப்பில் இசைக்கருவிகள்	திருமதி. ஜயந்தி திஸாநாயக்கா	416
8.	தமிழ்ப் பண்ணிசை	திருமதி. பாலாம்பிகை இராஜேஸ்வரன்	421
9.	இந்துப் பண்பாட்டின் சிற்பக் கலையில் இசை	வத்சலாதேவி சங்கரநாராயணன்	428

6. சங்கங்களும் அவற்றின் பணிகளும் 435

1.	விவேகானந்த சபை. கொழும்பு	சிவஞானச் செல்வர். க. இராஜபுவனீஸ்வரன்	437
2.	திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை	அ. திருநாவுக்கரசு	439
3.	சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் பரிபாலன சபை	சம்மாங்கோட்டார்	440
4.	கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை	சி. சிவஞானம்	441
5.	வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்	நா. சுப்பிரமணியன்	444
6.	சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்	எம்.ஆர். ராஜ்மோகன்	446
7.	கொழும்பு மகளிர் இந்து மன்றம்	நீலா தயாபரன்	447
8.	சிவயோக சுவாமிகள் நம்பிக்கை நிதியம்	த.செ. சிவசுப்பிரமணியம்	448
9.	ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்	சிவகுரு கணேசன்	449
10.	ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்	செல்வி. வடிவாம்பிகை வேல்சாமி	451
11.	அன்னை அபிராமி ஆச்சிரமம்	சுதீர் சைதன்யா	453
12.	இரத்மலானை – மொரட்டுவ இந்து மன்றம்	த. தர்மகுலேந்திரன்	455
13.	லேக்ஹவுஸ் இந்து மன்றம்	விசு. கருணாநிதி	456
14.	கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலையம்	ச. முருகானந்தன்	457
15.	கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம்	த. திரவியச்செல்வம்	458
16.	வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்	ஞா. கேதீஸ்வரன்	459
17.	மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்	மஹாராஜாஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்	463
18.	வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்	சு. பரமராஜன்	465
19.	யாழ். சாவகச்சேரி நீலகண்ட இளைஞர் சைவ அபிவிருத்திச் சபை	சி. ஜெயகணேஷன்	467
20.	அகில இலங்கை ரீதியான இந்துக்களின் உச்ச நிறுவனமும் மன்னார் மாவட்டமும்	வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன்	468
21.	மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்	மு. பவளகாந்தன்	474

22.	மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம்	திருமதி. மனோஹரி சீவரெட்ணம்	475
23.	மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட இந்து ஆலய ஒன்றியம்	க. தியாகராஜா	476
24.	மட்டக்களப்பு சைவத் திருநெறி மன்றம்	ந. மோகனமூர்த்தி	477
25.	குருக்கள்மடம் இந்து சமய விருத்திச் சபை	இ. கந்தசாமி	479
26.	கூழாவடி இந்து இளைஞர் மன்றம்	இரா. யோகேஸ்வரன்	480
27.	ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றம்,	யோ. சரவணபவன்	481
28.	குறிஞ்சிக் குமரன் கோயில் பொறுப்பாண்மைக் குழு	த. இராஜேஸ்வரன்	482
29.	மஸ்கெலியா இந்து மாமன்றம்	ஏ.ஆர்.சி. திருக்கோணப்பெருமாள்	484
30.	Hindu Educational Society	Kandiah Neelakandan	486
31.	All Ceylon Hindu Congress Member Associations		491

7. முகாமைப் பேரவை உறுப்பினர்கள் 495

1.	மாமன்ற முகாமை	497
2.	முகாமைப் பேரவையின் உறுப்பினர் விபரம்	499

பாகம் 2

8. பொன்விழா போட்டிக் கட்டுரைகள் 527

1.	இந்து மக்களிடையே மத மாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளும்	செல்வி. பிரதீபா மகாலிங்கம்	529
2.	சமுதாய முன்னேற்றத்தில் கோயில்களின் பங்கு	செல்வி. மிருநாலினி தங்கராசா	540
3.	இந்து மக்களிடையே மதமாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும்	சி.வ. இரத்தினசிங்கம்	545
4.	இந்துமக்களிடையே மதமாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும்	எம். ஸ்ராலின் சிவஞான ஜோதி	551
5.	இந்து சமயமும் சமுதாய சீர்திருத்தமும்	செல்வி தர்சினி தங்கராசா	564
6.	இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய வளர்ச்சியில் இந் நாட்டவரின் பங்கு	ஆறுமுகம் தியாகராசா	572
7.	சமய நிறுவனங்களும், சமூக சேவைகளும்	ஜெகநாதன் தற்பரன்	584
8.	புராணங்கள் தரும் படிப்பினைகள்	செல்வி வித்தியாஷினி சிவசுப்பிரமணியம்	589
9.	பல திருவுருவங்களில் நாம் வழிபடும் இறைவன் ஒருவனே	செல்வி. ஆ. திவ்யகாயத்ரி	592
10.	ஆலய வழிபாடு	செல்வி. நிஷாந்தி சிவானந்தன்	594

9. சிறப்புக் கட்டுரைகள் 597

1.	கோயிலும் வழிபாடும்	திருமதி சந்திரபவானி பரமசாமி	599
2.	சக்தி வழிபாடும் தத்துவங்களும்	வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்	603
3.	ஆலய வழிபாடும் இளைஞர் சமுதாயமும்	புலவர் க. சிவானந்தன்	611

4.	ஆகம வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறப்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும்	(அமரர்) சிவஶ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்	614
5.	சிவனது மூர்த்தத்தில் அர்த்த நாரீஸ்வரர் வழிபாட்டுச் சிறப்பு	சைவப்புலவர் பா. சர்வேஸ்வரக் குருக்கள்	617
6.	விரத விழுமியங்கள்	கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்	625
7.	நாளாந்த வழிபாடு	கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை	629
8.	தமிழ் இலக்கிய வரலாற்று நோக்கில் கிரியை மரபில் நாட்டியம்	கலாவித்தகர் திருமதி. அபர்ணா பாலகணேஸ்வரக் குருக்கள்	632
9.	திருமுறைகளும் வாழ்வியலும்	சி. சண்முகம்	636
10.	திருமுறைகளில் திருநீறு	முனைவர் (திருமதி) தேவபூபதி நடராஜா	640
11.	ஆலய அமைப்பு முறை	ஶ்ரீ விஷ்வ நாராயண சர்மா	646
12.	தியானம்	ந. கார்த்திகேயன்	650
13.	முன்னவனாய் முன்னின்று வெவ்வினையை வேரறுக்கும் ஶ்ரீ கணபதி	திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம்	654
14.	மட்டக்களப்பில் சைவப்பாரம்பரியம்	செல்வி க. தங்கேஸ்வரி	656
15.	ஶ்ரீ முன்னேஸ்வரத்தில் சைவ வழிபாட்டுத் தொன்மை	பா.சி. சர்மா	659
16.	வரலாற்றுப் பெருமை வாய்ந்த கதிர்காமம்	குல. சபாநாதன்	665
17.	ஈழத்தில் சைவ ஆலயங்களும் அறப் போதனைகளும்	செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்	674
18.	கோயில் வளர்த்த வாழ்வியல் கலைகள்	திரு.கு. குருசாமி	677
19.	19ஆம் நூற்றாண்டில் இலங்கையிலும், இந்தியாவிலும் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி	சு. துஷ்யந்	679
20.	உலகில் இந்து மக்களின் பரம்பல்	பேராசிரியர் கா. குகபாலன்	685
21.	இந்து சமயமும் அதன் சிறப்பியல்புகளும்	தொண்டர்மாமணி அ. பாளையம்	694
22.	இந்தியா சென்று சைவசமயச் சான்றோர் அவையில் புகழ் நிறுவிய ஈழத்தமிழர்	செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்	697
23.	நந்தி கொடி	பேராசிரியர் டாக்டர் சோ.ந. கந்தசாமி	702
24.	சைவ சமயத்தின் தோற்றப்பாடுகளுக்கும் அவை தொடர்பான நூல்களுக்குமான விளக்கம்	நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்	704
25.	இந்து மதங்களும் இயற்கை அனர்த்தங்களும்	சி.மு. தம்பிராசா	715
26.	சர்வதேச ரீதியில் நந்திக்கொடி ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள்	சிவநெறிச் செல்வர் சின்னத்துரை தனபாலா	718
27.	புத்த மதத்தில் இந்து தத்துவங்கள்	பன்மொழிப்புலவர் த. கனகரத்தினம்	721
28.	தொண்டர் தம் பெருமை	அருள்மொழியரசி வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்	724
29.	இந்து கலாசாரப் பண்பாடு	திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்	728
30.	பேராற்றல் மிக்க பரம்பொருள்	திருமதி பத்மா சோமகாந்தன்	730
31.	சிவயோக சுவாமிகள் அருளிய மகாவாக்கியங்கள்	தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்	733
32.	சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை	கா. சிவபாலன்	741
33.	'இந்துபோட்' இராசரத்தினமும் கல்விக் கூடங்களும்	அ. தற்பரானந்தன்	743
34.	வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அடையாளங்காணப்படும் அண்மைக்கால கல்விப் பிரச்சினைகள் சில	கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்	747

10. ஆங்கிலக் கட்டுரைகள் 755

1.	Hinduism In Medieval Sri Lanka Circa AD 1300-1600 Brahmins, Kingship and Court Life	Prof. S. Pathmanathan	757
2.	Saivism in Early Sri Lanka A Historical Perspective	Prof. S.K. Sittampalam	763
3.	Relevance of Saiva Siddhantam in the Twenty - First Century	Dr. T.N. Ramachandran	772
4.	Saiva Siddantha	Sivamani Sir Kanthiah Vaithianathan	776
5.	The Shaiva Life	S. Sivapathasundaram	779
6.	An Introduction To Saiva Siddhanta	London Meikandaar Adheenam	781
7.	Siddhantam, - its Pre-eminence and Catholicity	By A Science Graduate	784
8.	Concept of Hinduism and its Philosophy	Vanathy Ravindran	788
9.	Introducing Hindu Sculpture and Architecture	Sivanandini Duraiswamy	794
10.	Hindu Law - Sri Lankan Perspective	Justice C.V. Wigneswaran	797
11.	Laws Relating to Hindu Temples and their Management	Kandiah Neelakandan	801
12.	Customary Marriages	V. Ratnasabapathy	807
13.	Guidelines On Saiva Rituals	London Meikandaar Adheenam	810
14.	Sir Pon. Ramanathan	A.C. Nadarajah	816
15.	Saivism And Younger Generation	Kandiah Neelakandan	819
16.	Can Material Affluence Produce Peace and Happiness	Mrs. A. Kailasapillai	825
17.	The Mandukya Upanishad	S. Ammaiappar	830
18.	Prognosis and Diagnosis of Sin	V. Kailasapillai	836
19.	All That I Ask You... A heart to Love... A heart to Give... A heart to Serve...	V. Kailasapillai	842
20.	Sannittiyan: Sri Selva Sannidhi Murukan	Kandiah Neelakandan	846
21.	Vegetarianism - Food for body and soul	Dr. Vimala Krishnapillai	851
22.	Permanent Values in a Changing World	Swami Vipulananda	854
23.	Swami Vipulananda: The Educationist	K. Kanapathipillai	858
24.	Buddhism; The Fulfilment of Hinduism	Swami Vivekananda	861
25.	The Universality of Religions	Justice C.V. Wigneswaran	864
26.	One Hundred Years of Vision of Swami Vivekananda	Professor G.T. Francis de Silva	868
27.	The Universality of Christianity - An Outline	Professor Bertram Bastiampillai	869
28.	The Vision of Swami Vivekananda and the Universality of Religions	Dr. M.A.M. Shukri	873

11. கவிதைகள் 879

1.	இந்து மாமன்றம் என்றும் எழிலுடன் வாழி! வாழி!	கனகசபாபதி நாகேஸ்வரன்	881
2.	இந்துமா மன்றமெனும் இமயம் வாழ்க	சி. சரவணபவன் (சிற்பி)	883
3.	இந்து மாமன்ற இயன் மொழி வாழ்த்து	வ. சிவராசசிங்கம்	884
4.	இறையருள் எமக்கு கிட்டுவதாக	பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா	885
5.	வித்தகராம் விபுலானந்தர்	(அமரர்) இரா. மயில்வாகனம்	887
6.	அயராது பணியாற்றும் மாமன்றம் வாழ்க	திருமதி அ. பேபி சரோஜா	890
7.	விவேகானந்தர் வாழ்க	நயினை நா.க. சண்முகநாத பிள்ளை	891
8.	சீவகாருண்யமும் சிவன் கருணையும்	(அமரர்) தமிழ்ப்பேரறிஞர் கி. வா. ஜகந்நாதன்	892
9.	சமயத்தின் நோக்கம்	புலவர். ம. பார்வதிநாதசிவம்	893
10.	இந்து இளைஞர்காள், முந்துமினோ!	பாரிஸ்டர் செல்வி செ. சின்னையா	894

12. நிகழ்வின் நினைவுகள் (நிழற்படங்கள்) 895

காலத்தால் செய்த நன்றி



இறை வணக்கம்



பஞ்சபுராணங்கள்

-திருச்சிற்றம்பலம்-

தேவாரம்

(திருநாவுக்கரசர் அருளியது)

நெஞ்சம்உமக் கேயிடமாக வைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றூந்து கரந்துமிடர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

திருவாசகம்

(மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது)

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணும்நா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருவிசைப்பா

(திருமாளிகைத் தேவர் அருளியது)

கோலமே மேலை வானவர் கோவே
குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள்
காலகாலா காம நாசா
ஆலமே யமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே
ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே.

திருப்பல்லாண்டு

(சேந்தனார் அருளியது)

சேவிக்க வந்தவன் இந்திரன் செங்கண்மா
லெங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாம்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதையென் ஆர்வத் தனத்தினை
அப்பனை யொப்பமரா
மாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரிய புராணம்

(சேக்கிழார் சுவாமிகள் அருளியது)

அருளின் நீர்மைத் திருத்தொண் டறிவரும்
தெருளில் நீரிது செய்தற் காமெனின்
வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் னாகுமெனப் புகல்வா மன்றே.

-திருச்சிற்றம்பலம்-


தமிழ்ச் சங்க
நூலகம்



8

பொன்விழா போட்டிக் கட்டுரைகள்

இந்து மக்களிடையே மத மாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளும்



செல்வி. பிரதீபா மகாலிங்கம்
கள்ளியந்தீவு, திருக்கோயில் – 03

விஞ்ஞானம் முன்னேறி, சந்திரமண்டலத்திற்கும் அப்பால் சென்று, செவ்வாய்க் கிரகத்தையும் தொட்டு, படைப்பின் பல சக்திகளையும் தனதாக்கி மெய்ஞ்ஞானத்தையும் மழுங்கடித்து போலியாகப் போதிக்கப்படும் பல போதனைகளையும் பதறடித்து எமது யுகமே இந்த விஞ்ஞான உலகமெனப் பறைசாற்றித் தம்பட்ட மடித்து, தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலே இந்து மாமன்றத்தின் இந்த எழுச்சி மிகு உணர்ச்சி பூர்வமான கட்டுரைப்போட்டிகளின் தலைப்புக்கள் மதமாற்றத்தை கட்டுப்படுத்தும் கணைகளாக, இந்து சமயத்தின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாக, இளைஞர் யுவதிகளின் இதய பூர்வமான தாரக மந்திரமாக அமைந்துள்ளன வென்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையின் ஆரம்ப காலத்தை நோக்கிப் பார்க்கும் போது இந்துமதம் இயற்கையாகவே அமைந்துள்ள மதமாக, இலங்கையில் வாழ்ந்த அத்தனை மக்களின் மனம் நிறைந்த மதமாக, ஏட்டிக்கு போட்டியாக எந்த மதமும் இல்லா தனித்துவப் பெருமை வாய்ந்த மதமாக, ஆரம்ப காலத்தில் இருந்த மக்கள் தாம் நினைத்தபடி தலை நிமிர்ந்து வணங்கிய சுதந்திரமாக, சீரோடும் சிறப்போடும் செந்தமிழருக்குரிய சிறந்த மதமாக இருந்து செப்பிய நேர்த்திக் கடன்களையெல்லாம் எந்தச் சிரமமும் இன்றிச் சிறப்பாக நிறைவேற்றி மக்கள் மனங்களிலெல்லாம் நிலைத்து வேரூன்றி இருந்த மதம் தான் இந்தப் புனிதமான எங்கள் இந்துமதமாகும்.

வடவேங்கடம் தென்குமரித் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் இந்துசமயம் பரவிக்கிடந்ததாகப் பண்டைத் தமிழர் நாகரிகம் எனும் வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது. நமது ஆராய்ச்சிக்கு எட்டிய மட்டில் பார்க்கும்போது இந்தியாவின் சிந்து நதிக்கரையிலே புதைந்து கிடந்த புதை பொருட்களை நோக்கும்போது ஆரியர் இந்தியாவிற்குப் படையெடுப்பதற்கு ஐயாயிரம் வருடங்களுக்கு முன், தமிழர்கள் (திராவிடர்கள்) வாழ்ந்ததாகவும் அவர்கள் சைவ சமயத்தை வழிபட்டதாகவும் "காண்டே" எனும் அறிஞரின் ஆராய்ச்சியின்போது தென்பட்டதாக ஜவர்ஹலால் நேரு எழுதிய தமிழ்மொழி பெயர்ப்புப் புத்தகம் ஒன்றில் கூறியுள்ளார். மொகஞ்சதாரா, அம்ரி, ஹரப்பா போன்ற நகரங்களும் ஹெரடெட்டஸ், ஹீராஸ் பாதிரியார் போன்ற ஆராய்ச்சியாளர் களும் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர். ஜவர்ஹலால் நேரு இந்தியாவின் ஹிந்திக் குடும்பத்தை சேர்ந்தவர். இவரே சைவசமயம் இப்படியெல்லாம் பரவி இருந்தது என்றும் ஒரு கட்டுக் கோப்பான முறையில் வளர்ந்து வந்தது என்றும் கூறும்போது நாம் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

இந்த விடயத்தைச் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால், அந்நியரின் ஆதிக்கம் வேரூன்ற முதல், சைவ சமயம் நிம்மதி யாகவும் எந்தவித பிரச்சினைகளுமின்றி மக்கள் தானாகவே

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை.



சைவசமயத்தை வழிபட்டு வந்திருப்பதை அவதானிக்கலாம். இந்துமதத்தின் ஆரம்பம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் தமிழ்மக்களிடையே இருந்திருக்க வேண்டுமென்பது உலகு வாழ் தமிழர்களின் ஏகோபித்த முடிவாகும். தமிழர்கள் எங்கெல்லாம் பரந்து செறிந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இந்து மதம் நிலைத்து நின்ற மதமாக இருந்திருக்கிறது. நிம்மதியாக வாழ்க்கை வாழ்ந்த மதமாக இருந்திருக்கின்றது. அந்நியருடைய வருகை எப்பொழுது வந்ததோ அன்றிலிருந்தே மதமாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஆரியர் இந்தியாவிற்கு வந்தது முதல் மொழியிலே மாற்றம், மதத்திலே தடுமாற்றம், கலை கலாசாரத்திலே சிறப்பான மாற்றம், நாகரிகம், கல்வியில் மாற்றம் இப்படியான சகல மாற்றங்களும் ஒன்று திரண்டால் போல் சைவசமயத்திலே பாரிய மாற்றத்தை தோற்றுவித்தனவென்றே கூறலாம். ஆரியர்களின் அடாவடித்தனமான வேலைகளால் திராவிடரின் கலாசாரம் சிதறடிக்கப்பட்டது. இந்துசமயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாது நிர்வாகம் நடைபெற்றபடியினால் இந்து மதத்திலே பெரும் பிழவு ஏற்பட்டது. இந்து மதத்தின் பெரும் தலைகள் கூட ஆட்டம் காணத் தொடங்கியது என்றே கூறலாம். ஆனால் அதற்குப் பின்னால் வந்த ஆங்கிலேயரின் வருகைதான் மதமாற்றத்தின் உச்சக் கட்டமாக விளங்கியிருக்கிறது.

சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலே கூடுதலாகச் செறிந்து வாழ்கிறார்கள். இப்படிச் செறிந்து வாழ்கிற பகுதிகளிலேதான் மதமாற்றங்களும் அதிகமாக இடம்பெற்றுள்ளது. மதமாற்றம் ஒன்று ஆரம்ப காலத்தில் நிகழ்ந்துள்ளதை நோக்கும் போது அந்நியரின் வருகையே மூலகாரணமாக அமைந்திருக்கிறது. ஆரியர் வந்து இந்தியாவை பிடித்தார்கள். அவர்களின் அதிகாரம் மேலோங்கி நின்றது. அதனால் அவர்களின் மொழி கலை கலாசாரம் மதம் என்பன சைவ மக்களிடையே புகத்தொடங்கியது. இதனால் மதமாற்றம் நடைபெற்றது. ஆங்கிலேயர் வந்தார்கள். தங்களின் பலத்தால் நாட்டைப் பிடித்தார்கள். அதனால் அவர்களின் மதமும் மொழியும் சைவ மக்களிடையே பரவத் தொடங்கியது. எனவே இந்தியாவை எடுத்தாலும் இலங்கையை எடுத்தாலும் அந்நியரின் வருகையே ஆரம்பகால மதமாற்றத்திற்கு அத்திவாரமாக இருந்தது. அதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் அந்நியரின் ஆதிக்கத்தை முறியடிக்கக் கூடியளவிற்கு, அவர்களை எதிர்த்து நின்று சமர் செய்யக் கூடியளவிற்குப் பொருளாதார நிலையில் மந்தம், அரசியல் நெருக்கம் குறைவு, கல்வியறிவு மிகக் குறைவு, உலக நாடுகளுடன் ஒப்புறவாகுதலுக்கான ஆங்கிலக் கல்வி குறைவு, ஆயுத பலங்கள் மிகக் குறைவாக இருந்த பல காரணங்களால் வந்தவர்களை எதிர்த்துக் கொள்ள முடியவில்லை. தனித்து நின்று தங்களின் திறமைகளை வெளிக்கொணர முடியவில்லை.

இதனால் வீடிழந்து, நகரம், நாடிழந்து வாடியிருக்கின்ற தமிழர்கள் தினமும் நாடி வணங்குகின்ற தமது சொந்த மதமான இந்து மதத்தை மாத்திரம் எப்படிக் காப்பாற்ற முடியும் என்பது தான் ஆரம்பகாலக் கேள்வியாக இருந்தது. மிகப் பெரிய புத்திஜீவிகள் கூட மதமாற்ற விடயத்தில் தளர்ந்து போனவர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். காரணம் அந்நியரின் உதவி அவர்களுக்கு அவசியம் தேவைப்பட்டபடியால், அவர்களோடு இணைந்து சலுகைகளை பெற்றுக்கொண்டிருக்கிறபடியால், மதமாற்றங்களைக் கட்டுப்படுத்தி, நிறுவி வைப்பது ஆரம்ப காலத்தில் மிகக் கஷ்டமாக இருந்தது. இதனால் நமது இந்து மதத்தின் சனத்தொகை குறையத் தொடங்கியது. சமயக் கொள்கைகள் சீரழிந்து போகத் தொடங்கியது. தமிழனுக்கு என்று தனிநாடு இல்லை. தனித்துவமானதொரு தனியாட்சி இல்லை தனி இராட்சியமே இல்லை, காரணம் தமிழர்களுக்குள் ஒற்றுமை இல்லை. சாதிப்பிரிவினைகளைக் காட்டித் தானாகப் பிரிந்து வாழும் இனம் தமிழினம். தமிழர்களுக்குள்ளே தான் கூடுதலான மதங்கள் குடிகொண்டு இருக்கின்றன. அத்துடன் பொறாமையும் வஞ்சகமும் தமிழர்களின் இரத்தத்திலே ஊறியுள்ளதையும் கூறுகின்ற தமிழனின் நாணம் வெட்கித் தலைகுனிகின்ற நிலையில் உள்ளது.

ஒவ்வொரு விடயங்களையும் தனித்தனியாக நோக்குமிடத்து இது சம்பந்தமான பூரண விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையில் இருந்தகாலம் சைவசமயம் மிகவும் பின்தங்கியதாகவே இருந்தது. ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக்காலம் சைவசமயத்திற்கு ஓரளவு விடிவு காலம் கிடைத்ததென்றே கூறலாம். மாவிட்டபுரம், நல்லூர், வண்ணார் பண்ணையிலுள்ள சைவ சமயக் கோயில்கள் புனரமைக்கப்பட்டன. இதனால் சைவசமய மக்கள் கோயிலுக்கு போய் வழிபடுவது சற்று சிரமமாக அமைந்திருந்தது. இதற்குரிய காரணம் ஒல்லாந்தர் காலத்தில் பிற சமயங்கள் சம்பந்தமாகத் தீர்மானிக்கப்பட்ட கொள்கைகள் முறையாகச் செயல்படுத்தப்படாததேயாகும். இந்தக் காலகட்டத்தில் இலைமறை காய்களாக இருந்த சைவக் கோயில்கள் திருத்தப்பட்டன. முறையான பூசைகளும் நடைபெற்றதாக இளங்கதிர் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அந்நியரின் வருகையைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் சைவசமய மதமாற்றங்களின் முழுப்பகுதியும் புலனாகும். ஆங்கிலேயரின் வருகையின் பின் மதமாற்ற விடயங்களில் சில முக்கிய விடயங்களைத் தனித்தனியாகப் பார்க்க வேண்டியுள்ளது.

1. அந்நியரின் வருகை
2. பாடசாலைகள்
3. ஆங்கிலம்
4. பாதிரிமாரின் பிரச்சாரமும் விடயங்களும்
5. அரச சமயம்
6. பணப் புழக்கம்
7. உத்தியோகம் கொடுத்தல்
8. கோயில்கள் புதுப்பித்தல் – உதவி வழங்கல்
9. அச்சு இயந்திரம்
10. யாழ்ப்பாணச் சூழல்
11. பத்திரிகைகளும் துண்டுப் பிரசுரங்களும்
12. நாகரிகம்
13. பிறநாட்டுத் தொடர்புகள்
14. தாழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் மக்கள்
15. சாதிப்பிரிவினை

மேற்காட்டப்பட்ட விடயங்கள் யாவும் இலங்கையில் நடந்த மதமாற்றங்களுக்கு உதவியாக இருந்திருக்கின்றன. 1814.06.29ஆம் திகதி அன்றுதான் இலங்கையில் உள்ள சைவசமய மக்களுக்கு இருண்டகாலம் ஒன்று வந்ததென்று கூறலாம். அன்றிலிருந்து சைவசமயத்தின் வளர்ச்சி குன்றிக் குறையத் தொடங்கியது. இந்துக்களின் இருண்ட நாளாகச் சைவசமயத்திற்குக் கறைபடிந்த தினமாகக் குறிப்பிட வேண்டும் போல் எனக்குத் தோன்றுகின்றது. 1814.06.29ம் திகதி தான் இலங்கையில் கிறிஸ்தவ பாதிரிமார் கால் வைத்த நாள். கிறிஸ்தவ

சமயத்தவர்களுக்கு அது ஒரு கொண்டாட்ட நாளாக இருந்தாலும் நமக்கு – இந்துமக்களுக்கு – அது ஒரு துக்கநாளாக இருக்க வேண்டுமென்பது எனது கோரிக்கையாகும். நல்லமுறையில் நன்மைகளைச் செய்கின்றோம். பொதுவான சட்டங்களையே நடைமுறைப்படுத்துகிறோம் என்று கூறிவிட்டுச் சைவசமயத்தையே இகழத் தொடங்கினார்கள். கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதிலும் பார்க்க சைவசமயத்தை இகழ்வதை, கீழ்த்தரப்படுத்துவதை, உதாசீனப்படுத்துவதையே மிகவும் குறிக்கோளாக வைத்துப் பிரச்சாரங்களைச் செய்தார்கள். த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரத்தையும் அதுபோன்ற ஆறுமுக நாவலரின் ஏனைய நூல்களையும் ஆராய்ந்து பார்த்தால் மிசனறிமாரின் அநியாயங்களையும், அக்கிரமங்களையும் அவர்கள் இந்துமதத்திற்குச் செய்த கீழ்த்தரமான நடவடிக்கைகளையும் அறிந்து கொள்ளலாம். நாய்க்கு எங்கு அடித்தாலும் காலை உயர்த்திக் கொண்டு ஓடுவதைப்போல் ஆரியர் வந்தாலும் சரி, ஆங்கிலேயர் வந்தாலும் சரி தாக்கப்பட்டது நமது இந்துமதம் தான். 29ம் திகதியன்று இந்த இலங்கை மண்ணிலே கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காக வந்தார்களே அந்த ஆறு பாதிரிமாரும் அவர்கள் நன்றாய்ப் படித்தவர்கள், நன்மை தீமைகளை உணர்ந்தவர்கள். தாங்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றுவதை விட்டுச் சைவசமயத்திற் தீமை விளைவிக்கத் தொடங்கியிருந்தார்கள். நன்மை செய்வதாகக் கூறித் தங்களுடைய மதத்தைப் புகுத்தத் தொடங்கினார்கள். அவர்கள் நன்மை செய்த ஒவ்வொரு விடயங்களின் கருப்பொருளை ஆராய்ந்து பார்த்தால் நமது சமயத்தில் இடி விழுந்தது போல்தான் இருக்கும்.

ஆங்கிலக் கல்வி கற்பிக்கப் போகிறோம் என்று அறிவித்தல்கள் கொடுப்பார்கள். ஆனால் இங்கு கற்கப்போகும்போது எங்கள் சைவசமய முறைகளுடன் செல்ல முடியாது. நெற்றியில் திருநீறு இருக்க முடியாது. பாடசாலை ஆரம்பத்தில் எங்கள் தேவார திருவாசகங்களைப் பாடி வணங்கி ஆரம்பப் படிப்பை ஆரம்பிக்க முடியாது. இப்படியான சட்டதிட்டங்கள் இருந்த காரணத்தால் சைவ மக்களிடையே சமய அறிவு குறைந்துவிட்டது. இதனால் சைவ சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த சிறார்களின் தொகை குறைந்து கொண்டே சென்றது. ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த சில மாணவர்களின் தாய் தந்தையர்கள் பாதிரிமார் கூறிய மார்க்கப்படி நடந்து சென்றபடியால் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இது போன்ற அனேகமான மதமாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றது. மேற்படி நான் காட்டியுள்ள விடயத்தை பார்த்தால் வெளிப்படையாகத் தெரிவது ஆங்கிலக் கல்வியைக் கற்பிக்கிறோம் என்பதுதான். ஆனால் உள்ளாந்தரமாக நடந்தது சைவ சமயமக்கள் விசேடமாக மாணவர்கள் கிறிஸ்தவ மதக் கொள்கைகளைப் பின்பற்றியதும் மதமாற்றம் அடைந்ததும் தான்.

ஆங்கிலக்கல்வி நாளாந்த வாழ்க்கைக்கு அவசியம்தான். வெளிநாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு, விஞ்ஞானத் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்கும் உத்தியோகங்கள் பார்ப்பதற்கும் ஆங்கிலக் கல்வி அவசியம் தான். அதற்காக எமது இறைமைகளை இழக்கலாமா? உரிமைகளை விட்டுக் கொடுக்கலாமா? ஆன்மீகத் தன்மைகளை அற்றுப்போக வைக்கலாமா? பொன்னாலான கத்தி என்று பொக்குளிலே குத்திக் கொள்ளலாமா? மதம் பரப்ப வந்த பாதிரிமார் முதலில் மக்களின் மனதை அறியத் தொடங்கினார்கள். மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் கண்டறிந்தார்கள். அரச மதம் கிறிஸ்தவ மதம், ஆங்கிலம் அதன் அனுசரணை. ஆங்கிலமும் அரசமதமும் கிறிஸ்தவ பாதிரிமாருக்கு மிக முக்கியமாகத் தேவைப்பட்டது. மக்களின் தேவைகளை அதற்குள் புகுத்தி நிருவாகத்தை நடத்தத் தொடங்கியதால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சைவமக்கள் அந்த நிர்வாகக் கட்டமைப்பிற்குள் புகவேண்டி தேவையேற்பட்டது. இதனால் மதமாற்றம் தானாக நடக்கத் தொடங்கியது.

யாழ்ப்பாணத்தை நோக்கிப் பார்த்தால் மதமாற்றத்திற்கு அதிகமான எதிர்ப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இந்தநிலை கிறிஸ்தவ பாதிரிமாருக்குச் சாதகமாக அமைந்திருந்தது. பொதுவான சட்டதிட்டங்களுக்கு அமைவாக நிருவாகத்தை நடத்துகிறோம் என்று கூறி நடுநிலைமை வகுக்காது கூடுதலாகக் கிறிஸ்தவ சமயத்திலேயே கவனம் செலுத்தினார்கள். அரசாங்கமும் நல்ல உதவிகளைச் செய்ததால் சைவ சமயம் தனிமைப்படுத்தப்பட்டது. இதனால் மதமாற்றம் ஏற்பட்டது. அந்த நேரத்திலிருந்த, யாழ்ப்பாணத்துக் கல்வி முறை, கிறிஸ்தவப் பாதிரிமாருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. சில சைவ சமய அறிஞர்கள் புத்திஜீவிகள் சைவசமயத்தை வளர்ப்பதற்குப் பெரும்பாடுபட்டாலும் இலங்கையைப் பொறுத்தவரையில் ஏனைய பகுதிகளில் காணப்பட்ட தாபன அமைப்பு முறை இருக்கவில்லை. அதனால் மதமாற்றம் ஏற்பட இலகுவாக இருந்தது.

பௌத்தர்களை நோக்கிப் பார்த்தால் இலங்கையில் அந்நியரின் ஆதிக்கம் தலைவிரித்தாடினாலும் அவர்களுடைய தனித்துவம் குறைவடையவில்லை. இறைமையை இயன்றளவு காப்பாற்றியிருக்கிறார்கள். சீர்குலையா நல்ல அமைப்புக்களை உருவாக்கி யிருக்கிறார்கள். உதவிகளைத் தேவைகளைப் பெற்றுக் கொண்டாலும் அவர்களது சுய கௌரவம் சிதறடிக்கப்படவில்லை. இதனால் பௌத்த மதம் ஓரளவிற்குக் காப்பாற்றப்பட்டது. கண்டியில் பௌத்தகல்வி முறை சீர்குலையவில்லை என்றுதான் கூறவேண்டும். 1750ஆம் ஆண்டுகளில் உபசம்ப சடங்குமுறைகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டபடியால் நிருவாகக் கட்டமைப்பு நிவர்த்தியாக நடைபெற்றது. 1839ஆம் ஆண்டு சிறி சித்தாந்ததேரர் போன்ற பெரியார்கள் பௌத்த சமய மதமாற்றம் குறைவாக நடைபெற்றதென்றே கூறலாம். இப்படியான கட்டுக்கோப்பும் நிலையான அமைப்புமுறையும் சைவசமயத்தவர்களிடம் இருக்கவில்லை. அந்தக் காலத்தில் பௌத்தர்களிடமிருந்த உணர்வுகளும் விடாமுயற்சிகளும் சைவமக்களிடையே பரந்து காணப்படவில்லை. இந்தக் குறைபாடுகள் கிறிஸ்தவப் பாதிரிமாருக்குச் சாதகமாக அமைந்து இருந்தது. இதனால் மதமாற்றம் நடைபெறுவதற்கு நல்ல சூழ் நிலை உருவாகியுள்ளது.

சைவ சமயக் கல்வி சைவமக்களிடம் குறைவடைய இன்னு மொரு முக்கிய காரணம் இருக்கிறது. கிறிஸ்தவ பாதிரிமார் மக்களின் தற்கால தேவைகளைப் புரிந்துகொண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தாபன அமைப்பை உருவாக்கி உடனுக்குடன் தீர்த்து வைத்த காரணத்தால் கிறிஸ்தவ மதம் மேலோங்குவதற்கும் மதத்தைப் பரப்புவதற்கும் வசதியாக இருந்தது. சைவ சமய மக்களின் தாபன அமைப்புத் தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவிதமாக அமையாது கூடுதலாக மறுவுலக சிந்தனையில்தான் அமைக்கப்பட்டிருந்தது. அதனால் தற்கால தேவைகள் பூர்த்தி செய்து கொள்வதில் தாமதமும் தடைகளும் ஏற்பட்டன. இதனால் சைவ சமயக் கல்வி குறிப்பாகச் சிறார்களுக்குக் கற்பிக்கப்பட்டது மிகக் குறைவாகத் தென்பட்டது. அடுத்து இவர்களின் தாபன அமைப்பில் மானிய முறையும் புகுத்தப்பட்டு இருந்ததினால் சமயக்கல்வி குறைவடையத்

தொடங்கியது. இதைப் பயன்படுத்திய பாதிரிமார் மதமாற்றங்களைச் செய்தார்கள்.

19ஆம் நூற்றாண்டில் முதற்பகுதியில் சில சைவசமயப் பெரியார்கள் சைவப் பாடசாலைகளைக் கட்டுவதற்கு முன் வந்தார்கள். இந்த வகையில் இருபாலை சேனாதிராசா, வல்வெட்டி குமாரசுவாமி, உடுப்பிட்டி அருளம்பலம், நல்லூர் சுப்ரமணியம் போன்றோர் சமயக் கல்வியைக் கற்பித்த காரணத்தால் மதமாற்றத்தை ஓரளவிற்காவது கட்டுப்படுத்த முடிந்தது. இந்து மதத்தின் மதமாற்றம் கூடுதலாக நடைபெற்றதற்குக் கிறிஸ்தவ பாதிரிமார்களை மாத்திரம் நாம் முற்று முழுதாகக் குறை கூறமுடியாது. அந்த மாற்றத்தில் நமது படித்த பண்டிதர்களும், வித்துவான்களும், ஆசிரியர்களும் சிறிதளவாவது பங்கேற்க வேண்டும். முதலாவது பொறாமை. என்னைவிட மற்றவர்கள் செயல்படக்கூடாது என்ற பொறாமை இருக்கும் வரை நமது சமூகமும் சமயமும் முன்னேற முடியாது. தான் கற்றவைகளைத் தன் பிள்ளைக்குக் கூடக் கற்றுக் கொடுக்க முடியாத தந்தை எப்படிப்பட்டவர் என்பதை நாம் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும் "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்றும் ஒலிபெருக்கி மூலம் அடிக்கடி முழங்கித் திரிவதை நாம் அறிவோம். ஆனால் தனக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள். ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்ட பெரியார்கள், புத்திஜீவிகள் மற்றைய நமது சைவமக்களுக்குச் சொல்லிக் கொடுக்காதளவிற்கு பொறாமைக் குணம் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இளங்கதிர் ஆண்டுமலரின் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று வாசிக்கும்போது எமது நெஞ்சமெலாம் வேகுதையா! சில கல்விமான்கள் தான் கற்ற போது மிகத் தேவையான படிப்புப் பத்திரங்களை சேகரித்து வைத்திருந்து தான் இறப்பதற்குரிய அறிகுறிகள் தென்பட்ட உடனே தான் சேகரித்து வைத்த கல்விப் பொக்கிசங்களைத் தன் கண்முன்னாலே எரித்து விடுவார்கள். இப்படிப்பட்ட நிலைதான் நமது சைவசமயம் சீரழிந்து போனதற்கும், மதமாற்றம் நடைபெற்றதற்கும் காரணிகள் ஆகும்.

மக்களின் இரு கண்களைப்போல் இருந்த ஆங்கிலமும் சமயக்கல்வியும் சைவ சமயத்தவர்களுக்குப் பெரும் கஷ்டத்தையே கொடுத்திருக்கிறது. மதமாற்றம் நடைபெறுவதற்கு நமது சைவமக்களும் ஒரு காரணமாக இருந்திருக்கிறார்கள். கிறிஸ்தவப் பாதிரிமார் பாடசாலை அமைப்பதற்கான மிகப் பொருத்தமான இடங்களையெல்லாம் தெரிவு செய்து பாடசாலைகளைக் கட்டுவித்தபடியாலும், சைவ சமய ஆசிரியர் பற்றாக் குறையும், கிறிஸ்தவப் பாதிரிமாரின் அடாவடித்தனமுள்ள பிரச்சாரமும், சைவ சமயக் கல்வியைத் தடைசெய்தது. இந்தச் சூழ்நிலை மதமாற்றத்திற்கு ஏதுவாக இருந்திருக்கிறது.

அடுத்து நமது சைவ சமயத்தவர்களிடையே காணப்பட்ட சாதிப் பிரச்சினையும் மதமாற்றத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கிறது. கிறிஸ்தவ உபதேசிமார் மக்களை நன்றாக இனம் கண்டிருக்கிறார்கள். சைவ சமய மக்களிடையே என்ன பிளவுகள் இருக்கின்றன என்பதை நன்கு கண்டுபிடித்து அதனூடாக மதமாற்றத்தைச் செய்திருக்கிறார்கள். தமிழர்களிடம் இருந்த சாதிப்பிரிவினையை அறிந்த பாதிரிமார் தாழ்த்தப்பட்டதாக கருதப்படும் மக்களிடையே தங்களது கெட்டித்தனப் பிரச்சாரத்தை காட்டத் தொடங்கியுள்ளார். எங்களால் பிரித்து ஒதுக்கப்பட மக்கள் கோயிலுக்குள் வரவேண்டாம் என்று ஒரு பிரிவினரையும், நீங்கள் குறிப்பிட்ட நல்ல குடியில் பிறக்காதபடியால் உங்களால் சாமியைத் தூக்கமுடியாது என்றும், நாங்கள் மாத்திரம் தான் சாமி வலம் வரும் தேரில் ஏறிச் சவாரி செய்யலாம்; நீங்கள் எல்லாம் சாமியையும், எங்களையும் வைத்து இழுத்துப் போகவேண்டும் என்னும் பல கொள்கைகளைச் சைவசமயத்தவர்கள் வகுத்து நடந்ததை எல்லாம் கண்டறிந்த பாதிரிமார் தங்களுக்கு இச்சந்தர்ப்பத்தை சாதகமாக்கி கொண்டார்கள். "எங்களுடைய கிறிஸ்தவ மதத்தில் சாதிப்பிரிவினை இல்லை. எல்லோருக்கு சமபங்கு. கோயிலுக்குள் வரலாம் போகலாம்" என்று பாதிரிமார் தாழ்த்தப்பட்டதாக கருதப்படும் மக்களிடையே பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்கள். அதனால் பாதிப்படைந்த மக்கள், வறுமையில் வாடிய மக்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதன் விளைவு மதமாற்றத்தில் முடிந்துள்ளது. இந்தச் சாதிப்பிரிவினையால் சைவசமய மக்கள் குறைவடைந்ததென்றே கூற வேண்டும். தாழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் மக்கள் மேல்குலத்தோருக்குத் தொண்டு செய்தல் வேண்டும் என்னும் காரணத்தைக் காட்டி மக்கள் வெறுப்படையத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பம் கிறிஸ்தவப் பாதிரிமாருக்குச் சாதகமாக இருந்தது. இதனாலும் மதமாற்றம் ஏற்பட்டது.

தாழ்த்தப்பட்டதாகக் கருதப்படும் மக்கள் எங்கு அதிகமாக செறிந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கிறிஸ்தவ மதம் பரவியிருக்கும் என்பது தெளிவாகிறது. தாழ்த்தப்பட்டதாக கருதப்படும் மக்கள் மத்தியில் சைவ சமயப் பெரியார்கள் தங்களின் அதிகார வேட்கையைக் காட்டி அடக்கி ஒடுக்கி வாழ்வதற்கான முறைமைகளை கையாண்டார்கள். மேல்ஜாதிக்காரர்களுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் தோளில் இருக்கும், சால்வையோ துண்டையோ எடுத்து மரியாதை செய்தல் வேண்டும். இந்த நடைமுறையில் வெறுப்படைந்த மக்களை கிறிஸ்தவப் பாதிரிமார் தம்வசப்படுத்தி நீதி நியாயங்களைக் கூறித் தம் பக்கம் இழுத்து மதமாற்றம் செய்ததாக எமது மூதாதையர் வாயிலாக நாம் அறிகிறோம். கீழ்ச் சாதிக்காரர்களாகக் கருதப்பட்டவர்கள் ஒரு காலத்தில் தங்களுடைய தொழிலை மாத்திரம் தான் செய்ய வேண்டும். அவர்களால் வேளாண்மை செய்ய முடியாது. படித்து முன்னேற முடியாது. இதனால் அவர்கள் வறுமையின் எல்லைக் கோட்டிற்கே தள்ளப்படுகிற சந்தர்ப்பத்தை காண்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மதமாற்றங்கள் நடைபெற்றுள்ளதாக அறிகிறோம். இதை நன்குணர்ந்த பாதிரிமார் பிள்ளைகளுக்கு நல்ல படிப்பை கொடுத்தார்கள். அநாதை இல்லங்களை அமைத்து ஒதுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளையும், அநாதைப்பிள்ளை களையும் அந்த அநாதை இல்லப் பாடசாலைகளில் சேர்த்து கற்பித்து பெரிய உத்தியோகங்களும் கொடுத்தபடியால் மதமாற்றம் இலகுவாக நடைபெறத் தொடங்கியது.

அன்று பாதிரிமாரால் அமைக்கப்பட்ட அநாதை இல்லங்கள், பாடசாலைகள் இன்று பெரும் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்து கொண்டு இருக்கின்றன. இந்த அநாதை இல்லங்களில் படித்த பிள்ளைகள் 75 வீதமானோர் கிறிஸ்தவர்களாக மாறியிருப்பதை வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதையாரும் மறுப்பதற்கில்லை. எனவே மதமாற்றம் ஏற்படுவதற்கும் இந்து சமய மக்கள் மதம் மாறியதற்கும் மூல காரணம் கல்வியாகும். பெற்றோர்கள் பிள்ளைகளின் எதிர்காலம் நல்லமுறையில் அமைய வேண்டும் அவர்களும் இந்த நாட்டிலே நல்லவர்களாக, புத்தி ஜீவிகளாக வாழவேண்டுமாயின் கல்வியை கற்கவேண்டுமென நினைத்துப் பிள்ளைகளை இப்படியான பாடசாலையில் சேர்த்தார்கள். இதனால் மதமாற்றம் இலகுவாக நடைபெற்றது.

கல்வி, வறுமை, சாதிப்பிரிவினை, தான்கற்றவற்றை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்காத பொறாமைத் தன்மை;

இவ்வளவு காரணிகளோடும் கிறிஸ்தவப் பாதிரிமாரின் மதிநுட்பமான வழிநடத்தலும் சேர்ந்து சைவ சமய மக்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி மதமாற்றங்கள் உண்டு பண்ணியதைப் பார்த்தோம். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்துமதத்திற்கு பெரியதோர் ஈ. வு கிடைத்தது போல் கிறிஸ்தவப் பாதிரிமாரின் கண்டனங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு இராமல் எதிர்ப்புத் தெரிவித்து இந்து மத மாற்றத்தை தடுக்க வேண்டும் என்று துணிந்து எழுந்தார் எங்கள் தலைவன், சைவ சமய தொண்டன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். இன்றைக்கும் யாழ்ப்பாணப் பகுதிகளில் சைவசமய மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்றால், சைவ சமயத்தில் பாண்டித்துவம் பெற்ற பண்டிதர்கள் உருவாகி இருக்கிறார்கள் என்றால் ஆறுமுகநாவலர் அவர்கள் தான் காரணம் ஆகும். அவர் ஆங்கிலேயர்களது மதமாற்ற விடயங்களைக் கண்டித்துப் புனித பணியான சைவசமயத் தொண்டுகளைச் செய்த காரணமேயாகும். யாழ்ப்பாணம் முழுவதும் கிறிஸ்தவ மக்களாக மாறப்போகின்ற அந்த இறுதிக் கட்டத்திலே தோன்றி செய்தவர் தான் இந்த ஆறுமுகநாவலர். சைவ சமயத்திற்கும் சமயத் தொண்டு குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கும் இவர் செய்த சேவைகள் மறக்க முடியாதவைகள். உண்மைக்கு அழிவில்லை என்பார்கள். எங்களுடைய சைவ சமயத்திற்கு உண்மை இருந்த காரணத்தால் அது அழியவும் இல்லை! அழிக்கவும் முடியவில்லை மிசனரிமார்! குருட்டு நம்பிக்கை என்னும் துண்டுப்பத்திரிகை ஒன்று வெளிப்படுத்தியிருந்தார்கள். அப்பத்திரிகையில் சைவசமயத்தை தூற்றித் தெருக்களில் கிடக்கும் கல்லைக் கடவுளாக கும்பிடுகிறார்கள் என்று அசிங்கப்படுத்தி உண்மையில்லாச் சமயம் எனப் பிரசித்தப்படுத்தினார்கள். ஆனால் எமது சமயம் அழியவில்லை! கல்லிலும் கடவுளைக் காணலாம் எனும் தத்துவத்தை உணர்த்திக் காட்டியது இந்த இந்து சமயம். வரண்ட நிலத்தில் வேரூன்றி முளைத்த வைரம் பொருந்திய மரபுபோல் காய்ந்து வரண்டுபோன பாலை நிலத்தில் காணப்படும் பசும் புற்தரைபோல் வறுமையால் வாடுண்டு பல இன்னல்களால் மழுங்கடிக்கப்பட்டுச் சுருண்டு வீழ்ந்து தூங்கிக் கிடந்த சைவசமய மக்கள் மத்தியில் ஓர் உதய தாரகை தோன்றியது போல், இருண்ட மேகத்தில் ஒரு விடிவெள்ளி தென்பட்டது போல் ஆறுமுகநாவலர் அவர்கள் தோன்றிக் கிறிஸ்தவ பாதிரிமாருக்கு நல்ல பாடங்களை புகட்டினார். அவருடைய ஈழம் தந்த நாவலர் ஆறுமுகநாவலர் சரித்திரம் போன்ற எத்தனையோ புத்தகங்களில் இவைகளை பற்றி படித்துப் பார்க்கும்போது இன்று நாம் வணங்கும், வழிபடும் மதமான சைவ சமயம் எவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் எதிர்ப்புக்களின் மத்தியில் வளர்ந்து வந்திருக்கிறது என்பது புலனாகும்.

அமெரிக்கன் மிசன், வெஸ்லியன் மிசன், சேர்ச் மிசன் போன்ற திருச்சபைகளைச் சேர்ந்த பாதிரிமார்கள் ஆங்கிலக் கல்வியை முற்று முழுதாக இலங்கையில் கற்பித்தால் சைவசமயத்தவர்களின் பாரம்பரிய முறைகளில் இருந்து விடுவித்து முழுமையாக தமது நிருவாகத்திற்குள் கொண்டு வரலாம் என்ற ஒரு பெரிய திட்டத்தோடு 1814, 1816, 1818ஆம் ஆண்டுகளில் சில முக்கிய குழுக்களைத் தங்களுடன் இணைத்து நடத்தினார்கள். இந்தத் திட்டம் தான் சைவ சமய மக்களுக்குப் பெரும் தலை இடியைக் கொடுத்தது. உத்தியோகம் அவசியமாகத் தேவைப்பட்டவர்கள் ஆங்கிலக் கல்வியைப் படித்துத்தான் ஆக வேண்டும் என்ற நியதி உருவாகியது. அதற்காகக் கிறிஸ்தவப் பாடசாலைகளில் சேர்ந்து படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் படித்தார்கள் பட்டங்களைப் பெற்றார்கள் உத்தியோகமானார்கள் அத்துடன் கிறிஸ்தவர்களாகவும் மாறினார்கள். இந்துப் பாடசாலைகளின் கல்விக் கொள்கைகள் தற்கால தேவைக்கு ஏற்றவிதமாக அமையாது இருந்தது பெரும் குறையாகவே தென்பட்டது. 1815ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கைக்குப் பாதுகாப்புக்கள் கொடுக்கப்பட்டது போல் யாழ்ப்பாண மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. 1817ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தில் ஏற்படுத்திய கலவரங்களைப் போல் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்படவில்லை. பின் 1848இல் ஏற்படுத்திய எதிர்ப்புக் கிளர்ச்சிகளைப் போல் யாழ்ப்பாணத்து சைவமக்களிடையே நடைபெறவில்லை. மிசனரிமார் யாழ்ப்பாணத்தில் நடத்திய அரும்பெரும் சேவைகளே இதற்கு முக்கிய காரணம் ஆகும். கிறிஸ்தவப் பாதிரிமாரின் அயராத உழைப்பும் சைவமக்களிடையே காணப்பட்ட காலம் கடந்த கல்வி முறையும் பரந்தளவிலான பெரும் நிறுவனங்களின் அமைப்பு முறை இல்லாததும் பொருளாதார நிலையில் மந்த கதியாக இருந்ததும் சைவ சமயக் கல்வி வளர்ச்சிக்குத் தடையாக இருந்த காரணத்தால் சமயக் கல்வியில் தடங்கல் ஏற்பட்டது. அதனால் மதமாற்றம் ஏற்பட்டது.

நாவலர் அவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமாரின் கண்டனத் துண்டு பத்திரிகைக்கு எதிராகப் பலவிதமான துண்டுப் பத்திரிகைகளை வெளியிட்டார். அந்தத் துண்டுப் பத்திரிகைகள் சைவ மக்களிடையே பெரும் விழிப்புணர்வையூட்டியது. சைவ தூஷண பரிகாரம், விவிலிய குந்திதம், வச்சிரதண்டம் போன்ற துண்டுப்பிரசுரங்கள் மூலமாக வெளியான செய்திகள் மதமாற்றத்தை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தியது என்றே கூறலாம். இந்தத் துண்டுப்பிரசுரங்களைக் கண்டித்துப் பாதிரிமார் ஆறுமுகநாவலரிடம் விளக்கம் கோரியபோது நாவலர் அவர்கள் இங்கிலாந்து தேசத்தில் 1855ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட Wesleyan Metholic Report எனும் பத்திரிகையிலே வெளிவந்த விடயங்களைத் தான் நான் அங்கு வெளிப்படுத்திய கண்டனப் பத்திரிகையில் சுட்டிக்காட்டியுள்ளேன் என்று மிக அழகான பதிலைக் கொடுத்திருந்தார். "குனியக் குனியக் குட்டுகிறவனும் மடையன், குட்டக் குட்டக் குனிகிறவனும் மடையன்" என்பதைப்போல பாதிரிமார்கள் கொடுத்த அத்தனை துண்டுப் பிரசுரங்களுக்கும் தலையைக் குனிந்து கொண்டிராமல் எதிர்த்து நின்று வாதாடியதால் பாதிரிமார்களுக்கு இடையில் பெரும் பரபரப்பும் சஞ்சலமும் ஏற்படத் தொடங்கியது. கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்குள் ஆங்கிலக்கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்த பாதிரியார் "பார்சிவல்" அவர்கள். அவரைத் தொடர்ந்து வந்த ஜோன் வால்ரன் என்பவர் நாவலருக்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும் என்று கூடக் கூறியும் நாவலர் அஞ்சா நெஞ்சத்துடன் சைவ சமயத்தைப் பரப்புவதிலே கண்ணோட்டம் செலுத்தினார். பிள்ளைகளுக்கு ஆங்கிலப் பாடசாலை ஒன்று கட்டாயம் தேவையென அறிந்து, பணப்பற்றாக்குறை காரணமாக மடிப்பிச்சை எடுத்துப் பாடசாலையைக் கட்டிக் கொடுத்தார் என்று சொன்னால் நமது சைவ சமய கல்வி எவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாக வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது என்பது தெளிவாகும். எனவே பொருளாதார குறைபாடும் மதமாற்றத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கிறது. பணப்புழக்கம் சைவ மக்களிடையே குறைவாகக் காணப்பட்டது. பொருளாதாரக் குறைபாட்டால் நினைத்த சில விடயங்களை உடன் செய்து கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டது. பாடசாலைகளைக் கட்டுவதற்குப் பண வசதி இல்லை. துண்டுப்பிரசுரங்களை உடனுக்குடன் வெளிப்படுத்துவதில் பெரும் சிரமம்; கற்பிக்கும் ஆசிரியர்மாருக்குச் சம்பளம் வழங்குவதில் சிரமம்;

போக்குவரத்துப் பண்ணுவதில் சுணக்கம். ஆனால் இவ்வளவு விடயங்களும் மிசனரிமாருக்கு உதவியாக இருந்த படியால் மதமாற்றம் செய்வதற்கு வசதியாக இருந்தது.

அடுத்து உத்தியோகம் வழங்கலை நோக்கிப் பார்த்தால் மதமாற்றத்தின் முழுப்பங்கும் அதிலேதான் தங்கியிருக்கிறது. கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்தால் உடனே உத்தியோகம் கிடைக்கும் எனும் கருத்து அந்தக் காலகட்டத்தில் வெளிப்படையாகவே இருந்து வந்தது. தமிழர்களால் அனேகமானோர் உத்தியோகம் பார்ப்பது கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்ததால் தான் ஆகும். அக்காலத்தில் உத்தியோகம் ஒன்று பெறுவது முயற்கொம்பாகவே இருந்தது. பரீட்சையில் சித்திபெற்றால் மாத்திரம் போதாது. பரம்பரையைப் பார்ப்பார்கள். தந்தை செய்த தொழிலின் தார்ப்பரியத்தைப் பார்ப்பார்கள். தகுதியைப் பார்ப்பார்கள். இவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து உத்தியோகம் ஒன்றில் சேருவது மிகக் கஷ்டமாக இருந்தது. ஆனால் கிறிஸ்தவ மதத்தை தழுவினால் எந்தவித சிரமமும் இன்றித் தொழிலில் சேர்ந்து கொள்ளலாம். நியமனக் கடிதங்களை நின்ற நின்ற இடங்களிலே வைத்து அப்பகுதி முகாமையாளர்கள் வழங்கி வைப்பார்கள். இந்த விடயத்தின் மூலம் மதமாற்றம் அடைந்த மக்கள் ஏராளம் என்றுதான் கூறவேண்டும். மேலும் அச்சு இயந்திரத்தினால் மிக விரைவாக கண்டனத்துண்டுப் பிரசுரங்களை வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் திடிரென விழிப்புணர்வை ஏற்படுத்தி மதமாற்றங்களை செய்து வந்திருக்கிறார்கள். இன்று மாலை நடைபெறுகின்ற, தங்களுக்குச் சாதகமான விடயங்களை, அடுத்த நாள் அதிகாலையில் மக்கள் கையில் இருக்கக் கூடிய விதமாகத் துண்டுப்பிரசுரங்களைத் தயாரிப்பதற்கு இந்த அச்சு இயந்திரமே காரணமாக இருந்தது. சைவ சமய மக்கள் காலையில் எழுந்தவுடன் இப்படியான கண்டனப் பிரசுரங்களைக் கையிலே எடுத்து வாசிக்கக் கூடிய தன்மையை ஏற்படுத்தி இருந்தார்கள். எனவே இந்த அச்சு இயந்திரமும் மதமாற்ற விடயத்திற்கு ஒரு முக்கிய விடயமாக இருந்திருக்கிறது.

அடுத்து நாகரிகமான வாழ்க்கை நடைமுறையும் இளைஞர் யுவதிகளைக் கவரக்கூடிய தன்மையில் அமைந்திருந்த காரணத்தினாலும் மதமாற்றம் நடைபெறுவதற்கு உதவியாக இருந்தது. எம்மவர்கள் எமது ஆரம்பகால உடையைத் தரித்து இருந்த வேளை ஆங்கில மோகத்தில் ஈர்த்து இழுக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் ஆங்கில நாகரிகத்துக்கு ஏற்ற உடையை அணியத் தொடங்கினார்கள். இந்த நாகரிக வாழ்க்கை நமது சைவ சமய மக்களின் மதமாற்றத்திற்குத் துணையாக இருந்தது.

இவ்வளவும் நான் இங்கு கூறியவைகளெல்லாம் கடந்தகால மதமாற்றங்களைக் குறிப்பவைகளாக இருந்தது. சில சைவப் பெரியார்களின் எதிர்ப்பு முறைகளையும் பாடசாலைகளில் சைவ சமயக் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்பதையும் பார்த்தோம். ஆனால் இன்றைய நிலைப்பாடு என்ன? 18, 19ஆம் நூற்றாண்டு களைப் பார்த்தோம், யாருக்கும் எந்த தலையிடியும் கொடுக்காமல் சுதந்திரமாக வாழ்ந்து வந்த எங்கள் புனிதமான இந்துமதத்தைப் பன்றி தின்று பணம் பறிக்க வந்த இந்தப் பறங்கித் துரைமார் பாழ்படுத்தி மதமாற்றங்கள் செய்த முறைகள் பார்த்தோம். ஆனால் சைவ சமயத்து மதமாற்ற விடயத்தின் யதார்த்த நிலை என்ன? இதுதான் இன்றைய சைவமக்களின் பெரும் கேள்விக்குறியாக இருக்கிறது. அன்றைய மதமாற்றங்களின் நுட்பங்களை ஆராய்ந்து பார்த்தால் அதிலிருந்து சில விடயங்களை இன்றைய நிகழ்வோடு சேர்த்துப் பார்க்க வேண்டியதாக உள்ளது. உதாரணமாக சாதிப் பிரிவினையை எடுத்துக் கொண்டால் அன்றிலிருந்து இன்று வரை தொடர்கதை போல் தொடர்ந்து கொண்டே வருகிறது. எனவே இன்றைய நிலையை ஆராயுமிடத்துக் கீழ்க்காணும் விடயங்களை பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

1. அறநெறிப்பாடசாலைகள்
2. சைவ சமயப் போதனைகள்
3. சிறார்கள் மூலம் தாய் தந்தையருக்குச் செய்தி பரப்புதல்
4. இளைஞர் யுவதிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
5. கிராம வழிகாட்டிகள் அமைத்தல்
6. சமயக் கலைப் படைப்புக்களை வெளிப்படுத்துதல்
7. குழுக்களையும் மன்றங்களையும் அமைத்தல்
8. பிறப்பு, இறப்பு திருமண வீடுகளைச் சந்தித்தல்
9. பின்தங்கிய பகுதிகளில் சேவை செய்தல்
10. அநாதை இல்லங்கள் அமைத்தல்
11. பாடசாலைகளில் சமய பாடங்களைக் கற்பிக்க வைத்தல்
12. சமயக் கொண்டாட்ட தினங்களில் சிறார்களை விழிப்படைய வைத்தல்
13. நூலகம் அமைத்தல்

மேற்போன்ற காரணிகளைத் தனித்தனியாக ஆராய்ந்து பார்க்கும் போது, சைவசமய வளர்ச்சி மேலோங்குவதையும் சைவ சமயத்துள் பிறமதத்தவர்கள் உட்புகாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். இதனால் தொடர்ந்து நடைபெற்றுப் போகின்ற மதமாற்றத்தைத் தடை செய்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தைக் காணலாம்.

இன்றைய நிலமையை நாம் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அன்று நடந்த மதமாற்றத்திற்கும் இன்றைக்கு நடைபெறுகின்ற மதமாற்றத்திற்கும் வித்தியாசங்கள் இருப்பதைக் காணலாம். அன்று பதவிக்காகவோ பட்டத்திற்காகவோ கல்விக் காகவோ நல்ல வசதிகளுக்காகவோ அதிகார வேட்கை களுக்காகவோ சைவ மக்கள் மதமாற்றம் அடைந்ததை முன்னுக்குப் பார்த்தோம். ஆனால் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மதமாற்றங்களில் முன்னரைப்போல் அல்லாது சிறிதளவேனும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அதிகார தோரணையில் மதமாற்றங்கள் ஏற்பட்டால் மனித உரிமை மீறல் தொடர்பாகத் தனித்துவமான முறையில் நடவடிக்கை எடுக்கலாம். இப்படியான நடைமுறை இருக்கத்தக்கதாக இன்னும் மதமாற்றங்கள் நடைபெறுகிறது என்றால் எங்களின் சைவ மக்களின் பலவீனமாகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு சூறாவளித்தாக்கம் அல்லது நிலநடுக்கம் அல்லது அண்மையில் ஏற்பட்ட சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் போது எங்களுடைய சைவ சமய கட்டமைப்புக்கள் கஷ்டப்படும் மக்களுக்கு என்ன சேவைகளை செய்திருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால் பாரிய சேவைகளாக ஒன்றும் நடைபெற்றிருக்க மாட்டாது! இப்படியான சந்தர்ப்பத்தில் கஷ்டப்படுகின்ற, துன்பப்படுகின்ற, துயரப்படுகின்ற மக்களுக்கு பொதுவான உதவிகளைச் செய்து கொடுத்தல் நமது மக்களின் தலையாய கடமையாகும். இப்படியான உதவிகள் செய்யும் போது மக்களைக் கவர்ந்து கொள்ளக் கூடிய தன்மை ஏற்படுகின்றது. மக்கள் தாமாகவே புரிந்து கொள்ளக் கூடிய உணர்வு ஏற்படுகின்றது. நாங்கள் செய்கின்ற உதவிகள் தனித்துச் சைவ சமய மக்களுக்கு மாத்திரமின்றிப் பொதுவானதாக மதச்சார்பற்ற விதமாக அமைந்திருக்க வேண்டும். இந்த விதமான உதவி மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. உதாரணமாக அண்மையில் ஏற்பட்ட சுனாமியை நோக்கிப்பார்த்தால் எத்தனையோ நிறுவனங்கள் வந்து நான் முந்தி நீ முந்தி என்று

போட்டியிட்டு உதவிகள் செய்திருப்பதை அவதானிக்கலாம். அத்தனை நிறுவனங்களையும் நோக்கிப் பார்த்தால் கிறிஸ்தவ சமயத்திற்குள்ளால் அல்லது அதன் அனுசரணையோடு வந்ததாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்கள் மதத்தை பரப்பவில்லை. இப்படியான உதவிகள் மக்களைக் கவர்ந்திருக்கிறது. இந்த நிறுவன உதவிகளின் மூலமாகவும் சிலர் தாமாகவே மதமாற்றம் அடைந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே இப்படியான இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு மக்கள் அவதியுறுகின்ற சந்தர்ப்பத்திலே நமது சைவ மகா சபைகளோ, குழுக்களோ, மன்றங்களோ முன்வந்து உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படியான சைவ சமயக் கட்டமைப்புக்கள் கட்டாயமாக எம்மத்தியிலே உருவாக்கப்பட வேண்டும். மதமாற்றத்தை நிவர்த்தி செய்யும் காரணிகளுள் முக்கியமானதொன்றாக இது கருதப்படுகிறது. எமது சமூகம், எமது சமயம் பாதிப்புக்களின் மத்தியில் நின்று சரீர உதவிகளையும், பொருளாதார உதவிகளையும் தேவைக்கு ஏற்ப முதலுதவிகளையும் மதம் என்று பாராது பொதுவாக எல்லோருக்கும் செய்தால் அவைகளை (மதமாற்றங்கள்) கட்டுப்படுத்தலாம். திருமணம் மதமாற்றத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது. திருமணத்தின் மூலம் எமது சைவ சமய மக்கள் அனேகமானோர் மதமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அழகை நம்பியோ, ஆடம்பர வாழ்க்கையை நம்பியோ, உத்தியோகங்களை நம்பியோ, திருமணத்திற்குச் சென்ற எமது மக்கள் ஏராளம் என்று தான் கூறவேண்டும். இந்த நிலை மாறவேண்டுமானால் நமது மனநிலை மாற்றமடைய வேண்டும். சைவ சமயக் கொள்கைகள் ஆரம்பத்தில் இருந்தே மனதில் வேரூன்ற வேண்டும். அப்படி உறுதியாக இருக்க வேண்டுமானால் நமது சைவ சமயக் கட்டமைப்பு நிலையாக நின்று நிருவாகங்களை ஒழுங்காகச் செய்தல் வேண்டும். இப்படியான கட்டமைப்புக்குள் அல்லது குழுக்களுக்குள் ஒவ்வொரு சைவ மகனும், மகளும் இணைந்திருந்தால் திருமணத்தின் மூலமாக ஏற்படுகின்ற மதமாற்றங்களை நிச்சயமாகக் கட்டுப்படுத்தலாம். நமது சமயம் பரந்தளவில் நிருவாகங்களை நடைமுறைப் படுத்துவதும் மதமாற்றத்திற்கு ஏதுவான ஒரு காரணம் ஆகும். பரந்தளவில் நிருவாகக் கட்டமைப்பு இருப்பதினால் தனிமனித சமய சுதந்திரம் அளவுக்கதிகமாக இருக்கிறது. அதனால் அந்தத் தனிமனித குடும்பம் ஏனைய சைவ சமய மக்களுக்குத் தெரியாமல் தான் நினைத்தபடியெல்லாம் செய்கிறார்கள். தாம் விரும்பியபடி சைவ சமய முறைகளை விட்டுச் செய்ய வேண்டாத தகாத காரியங் களையெல்லாம் செய்துவிட்டு ஒரு வருடத்திற்கு ஒரு தரமோ, இரண்டு தரமோ காஞ்சிப்பட்டு வேட்டியையும் கட்டிக்கொண்டு, திறந்த மேனியுடன் திருநீற்றுப்பட்டைகளையும் சாத்திக்கொண்டு, குடும்பத்துடன் கோயிலுக்கு சென்று பொங்கல் ஒன்றைப் போட்டால் நல்ல இந்துவாக மாறமுடியுமா? இது தான் இன்றைய சைவ மக்களின் சமய வழிபாடா? உண்மையாக மனம் வருத்தி பல இந்துசமய மக்களையும் அழைத்து பக்தி வழிபாட்டை மேலோங்க வைப்பது கட்டமைப்பிற்குள் அமைகின்ற ஒரு வழிபாடாக இருக்குமல்லவா. எனவே மன்றங்களோ, குழுக்களோ, அமைக்கப் பட்டு இருந்தால் மேற்காட்டிய பூசை முறைகளுக்குள் பக்தித் தன்மையை ஏற்படுத்தலாம் அல்லவா.

கட்டமைப்பு ஒன்றில் ஒவ்வொரு சைவ மகனும் தொடர்பு கொண்டிருத்தல் வேண்டும். இந்தத் தொடர்பைக் கட்டமைப்புக்களே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் சில குடும்பங்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். இன்றைக்கு நமது சைவ சமய மக்களுக்குப் பக்கத்து வீட்டில் இருப்பவன் யார்? என்று தெரியாது. அங்கு நடைபெறுகின்ற நன்மை தீமைகளுக்குப் போகாது இருக்கிறார்கள். இந்த விடயம் நமது மக்களிடையே அதிகமாகத் தலைதூக்கியுள்ளது. இது நிவர்த்தி செய்யப்பட வேண்டுமானால் மன்றங்களோடு இணைந்த தொடர்பு இருக்க வேண்டும். ஒரு சிறு கிராமத்தில் எத்தனை சைவ சமயக் குடும்பங்கள் இருக்கின்றன என்று தெரியாது. இதற்குக் காரணம் என்ன? நமது சமயத்திலே கூட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு நிருவாகங்கள் நல்லமுறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் யார்? யார்? எந்த? எந்த? மூலைகளில் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். மதம் சம்பந்தமில்லாத, பொது உதவி வழங்கிய பாரிய திட்டங்களில் நமது சைவ சமய சபைகளோ குழுக்களோ, மன்றங்களோ நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்று பார்த்தால் அப்பாரிய திட்டங்கள் மிக மிக குறைவாகவே இருக்கின்றது. உதாரணமாக அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை நோக்கிப் பார்த்தால் பாரிய அபிவிருத்தி திட்டங் களில் நமது பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்திருக்கிறது.

அறநெறிப் பாடசாலைகள்

சைவ சமய மதமாற்றங்களை நிவர்த்தி செய்யும் வழிகளில் அறநெறிப் பாடசாலைகளை நாம் எடுத்துக் கொண்டால் நமது சிறார்களின் நெஞ்சங்களிலே பதியக் கூடியளவிற்குச் சைவ சமயப் பாடங்களைப் படிப்பதற்கு அறநெறிப்பாடசாலைகளே பொருத்தமான இடம் ஆகும். ஆரம்ப காலத்தில் இருந்து நமது சமய நெறிகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் நமது சிறார்களின் மனதிலே பதிய வைத்தால் அது கல்மேல் எழுத்துக்குச் சமமாகும். எதிர்காலத்தில் நமது சமயத்தின் நல்ல தூண்களாக விளங்க வேண்டுமேயானால் கிராமத்தில் நல்ல பண்புள்ள தலைவர்களாக இருக்க வேண்டும். ஆனால் நடை பெற்று வருகின்ற மதமாற்றங்கள் நிறுத்தப்பட வேண்டு மேயானால் அறநெறிப் பாடசாலைகளின் ஆரம்பக்கல்வி நமது சிறார்களுக்கு அவசியமாக இருக்கின்றது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பதற்கு ஏற்ப நமது சமயச் சிறார்களுக்கு அறநெறிப் பாடசாலைகளே அத்திவாரமாக இருக்க வேண்டும். இன்றைய சைவ சமய கள ஆய்வுகளை நோக்கிப் பார்த்தால் அறநெறிப் பாடசாலைகளில் நல்ல ஒழுக்க முறையாகக் கல்வி கற்றவர்களே நல்ல தலைவர்களாகத் திகழ்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இன்றைய இளைஞர் எதிர்காலத் தலைவர்கள் எனும் சித்தாந்தத்தைச் சைவ மக்களாகிய நாம் மனதில் வைத்துக் கொண்டு எங்களுடைய சிறார்களுக்கு அறநெறிப் பாடசாலையின் அவசியத்தை உணர்த்த வேண்டும். எனவே அறநெறிப் பாடசாலைகளும் மதமாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கு முக்கிய பங்கை வகிக்கிறது.

சைவ சமயப் போதனைகள்

சைவ சமயப் போதனைகளை எடுத்துக் கொண்டால் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று கிணற்றுத் தவளைகள் போல் வாழ்கின்ற நமது சைவ சமய மக்களிடையே சைவ சமயப் போதனைகள் சென்றடையச் செய்ய வேண்டும். வாசிக்கும் ஆற்றல் குறைந்தவர்களுக்கு நமது சமயப் போதனைகளைப் புகட்ட வேண்டும். இப்படியாக மக்கள் மத்தியிலே போதனைகள் சென்றடைவதற்குச் சிறந்த வழி கட்டமைப்புக்களேயாகும். கிராமத்தின் மத்தியிலோ அல்லது பிரபல்யமான இடங்களிலோ கூட்டங்களை வைத்து மக்களை விழிப்படையச் செய்தல் வேண்டும். சைவ சமய அறிஞர்களையும் புத்திஜீவிகளையும்

தருவித்துப் பிரசாரக் கூட்டங்களைச் சிறப்பான முறையில் நடத்துவோமேயானால் மக்களை விழிப்படையச் செய்யலாம். உதாரணமாகச் சைவ சமயத்தின் மாமேதையான மறைந்த கிருபானந்த வாரியார் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்து கூட்டங்களை நடத்திய பொழுது மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வுகளுக்கு அளவேயில்லை. அப்படியான பிரசாரங்களை மதமாற்றங்கள் நடைபெறுகின்ற பகுதிகளில் நடாத்தினால் அது மிகவும் பிரயோசனமாகவே இருக்கும்.

சிறார்கள் மூலம் தாய் தந்தையர்களுக்குச் செய்தி பரப்புதல்

சிறார்கள் மூலம் தாய் தந்தையர்களுக்குச் செய்தி பரப்புதல் எனும் விடயத்தை நோக்கிப் பார்த்தால் விடாப்பிடியாக மூட நம்பிக்கையில் தலை நிமிர்ந்து நிற்கும் தாய் தந்தையர்களைத் திருத்துவதற்கான சிறந்த வழி இதுவேயாகும். என்னுடைய மகன் மேடையிலேயேறி நாடகம் ஒன்று நடிக்கிறான் என்றால் எந்தத் தாய் தகப்பனும் அந்த நாடகத்தைப் பார்க்காமல் இருக்கமாட்டார்கள். அங்கே நடிக்கப்படுகின்ற நாடகத்தைப் பார்க்கின்ற தாய் தந்தையரின் மனங்களில் நாடகத்தின் எடுகோள் மிக இலேசாகப் பதியக் கூடியதாக இருக்கிறது. எனவே குடிப்பழக்கங்களை விட்டொழித்தல், சைவ சமயப் பண்புகளை எடுத்துக் காட்டல் போன்ற விடயங்களை ஆடல் பாடல் நடிப்புக்கள் மூலமாக நல்ல செய்திகளை பெற்றோர்களுக்கு வழங்கலாம். பிள்ளைகள் மூலமாகப் பெற்றோர்களுக்குச் செய்திகளைப் பரப்புவதன் மூலம் பரப்பப்படுகின்ற செய்தியின் உண்மைத் தன்மையைப் பெற்றோர்களால் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. உதாரணமாக குடிப்பழக்கத்தில் உள்ள ஒரு தந்தையையிட்டு அவரின் மகனே குடிபோதையிலுள்ள கெட்ட பழக்கங்களை நாடகத்தின் மூலமாக வெளிப்படுத்தும்போது அந்தத் தந்தைக்கு மகனின் உணர்ச்சி பூர்வமான நடிப்பு மனதிலே ஆழமாகப் பதியும் தன்மை ஏற்படுகிறது. இப்படியான தன்மைகளின் மூலம் நமது சமயப் பண்புகளை வெளிப்படுத்துகின்ற பொழுது வீட்டிலுள்ள அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். எனவே சிறார்கள் மூலம் செய்திகளைப் பரப்புவது மதமாற்றத் தடைகளை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமானதொன்றாகும்.

இளைஞர் யுவதிகளை விழிப்படையச் செய்தல்

ஒரு நாட்டினுடைய முதுகெலும்பு இளைஞர் யுவதிகளாகும். இளைஞர் யுவதிகளின் முழுமையான ஆக்கங்கள் நிறைந்த பகுதி சிறப்பான பகுதியாக மிளிரும் என்பது வெள்ளிடை மலையாகும். ஒரு குறிக்கோளை முன்வைத்து இளைஞர் யுவதிகளை அதில் ஈடுபடுத்தினால் அக்காரியம் நிறைவேறும். இன்றைக்கும் நமது பகுதிகளை எடுத்துப் பார்த்தால் இளைஞர் யுவதிகளின் ஆதிக்கங்களே அதிகமாக இருக்கின்றன. இப்படி உணர்ச்சி பூர்வமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இளைஞர் யுவதிகள் மத்தியில் நமது சைவ சமயப் பண்புகளையும் பிரசார நடவடிக்கைகளையும் அவர்கள் கையிலே கொடுத்து சேவைகளைச் செய்ய முற்படுத்த வேண்டும். சைவ சமய கொள்கைகளையும் மதமாற்றத்திற்கான எதிர்ப்பு விதப்புரைகளையும் அவர்கள் மத்தியிலே விதைத்துவிட வேண்டும். அது முளைத்து வேரூன்றி விருட்சமாகி சைவ மக்களிடையே பலனடையச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்கு பொருத்த மானவர்கள் இளைஞர் யுவதிகளே ஆகும். எனவே இந்த இளைஞர் யுவதிகளை வழி நடத்துகின்ற புத்தி ஜீவிகளோ அல்லது அமைப்புக்களோ நல்ல நிருவாக அமைப்புக்குள் வழிநடத்தப்பட வேண்டியது சைவ சமயத்தின் கட்டாய தேவையாகும். எனவே மதமாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கு இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே இளைஞர் யுவதிகளை விழிப்படைய செய்வதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கிராம வழிகாட்டிகள் அமைத்தல்

இந்த விடயம் மதமாற்ற விடயங்களில் முக்கிய பங்கு வகிக்கும் என நான் கருதுகிறேன். ஆனால் இந்த வழிகாட்டிகள் அமைக்கப்படும் பொழுது பக்கச் சார்புகள் இல்லாது சாதி வித்தியாசம் பாராது ஏழை பணக்காரன் என்ற ஒப்புரவுகள் பார்க்காது ஒரு கிராமத்தின் சகல மக்களையும் உள்ளடக்கக் கூடியவையாக அங்கத்தவர்கள் இந்த வழிகாட்டியில் அமைக்கப்படல் அவசியமானதொன்றாகும். ஒரு கிராமத்திற்குள் நடைபெறுகின்ற எல்லா விடயங்களையும் சரிபார்த்து நிர்ணயிக்க கூடிய வேலைகள் இந்த வழிகாட்டிகளின் தலையில் சுமத்தப் பட்டிருக்கிறது. இப்படியான வழிகாட்டல்கள் இருந்தால் இரகசிய மதமாற்றங்களை, இரகசிய திருமண மதமாற்றங்களை அறிந்து கொள்வது இலகுவாக இருக்கும். இவைகளை இலகுவாக அறிந்து கொள்வதற்கு இந்த வழிகாட்டிகளே காரண கர்த்தாவாக இருப்பார்கள். சமூகங்களுக்கிடையே நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் சகலதையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளக் கூடிய தன்மை ஏற்படுகின்றது. மக்களிடையே எழுகின்ற சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது. எந்தவிதமான மறைவான மதமாற்றங் களுக்கும் இடம் கொடுக்காமல் வழிகாட்டிகளே முன் நின்று தீர்த்துக் கொள்ளலாம் அல்லது நமது மேல் சபைகளோடு தொடர்பு வைத்துப் பிரச்சினைகளை வெளிப்படுத்தலாம். எனவே கிராம வழிகாட்டிகள் அமைத்தல் நமது சமய மதமாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான காரணிகளுள் பொருத்தமான தொன்றாகும்.

குழு மன்றங்கள் அமைத்தல்

இந்து சமயத்தின் வளர்ச்சிக் காகவும் சோர்ந்து போய்க் கிடக்கும் மக்களின் தேவை களுக்காகவும் சமயப் பண்பாடுகளைக் கலை வடிவில் பரப்புவதற்காகவும் மன்றங்களும் குழுக்களும் அவசியமாக நமது சைவ மக்களிடையே அமைக்கப்படல் வேண்டும். இந்தக் குழுக்களும் மன்றங்களும் ஒதுக்கப்பட்ட கிராமங்கள் தோறும் சென்று நமது சைவ கலைப் படைப்புக்களையும் கொள்கைகளையும் வெளிப்படுத்தல் வேண்டும். பித்துக்குளி முருகதாஸ் அவர்களை மன்றங்கள் மூலமாக அழைத்து நமது மக்கள் மத்தியிலே பாடல்களைப் பாடவைத்தார்கள். அதன் மூலம் மக்கள் மத்தியிலே விழிப்புணர்வு ஏற்பட்டது. குன்றக்குடி அடிகளார், சிலம்புச் செல்வர் போன்ற பேச்சாளர்களை அழைத்து இது போன்ற மன்றங்கள் சைவ சமய கொள்கைகளை திறந்தவெளி அரங்குக் கூட்டங்களிலே பேசவைத்துக் காட்டினார்கள். மக்கள் அனைவரும் திரண்டு நின்று பார்த்தார்கள். இதன் மூலமாகவும் மக்கள் விழிப்படையச் செய்தார்கள். எனவே மன்றங்களும் குழுக்களும் சைவ சமயக் கொள்கைகளைப் பரப்புவதில் மாத்திரம் இல்லாமல் மதமாற்றங்களை நிவர்த்தி செய்வதற்கும் உதவியாக இருக்கிறது.

பிறப்பு, இறப்பு திருமண வீடுகளை சந்தித்தல்

இந்த விடயத்தை நோக்குமிடத்து எமது கட்டமைப்புக்களின் பங்கு அளப் பெரியதாக இருக்கிறது. எமது சைவ மக்களிடையே பிறப்பு இறப்பு திருமண வீடுகளைச் சந்தித்தல் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். வீடுதேடிச் சந்திப்பதில் பல விடயங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பிள்ளை ஒன்று பிறந்தவுடன் கட்டமைப்புக்களோ, மன்றங்களோ அவ்விடம் சென்று சுகங்களை விசாரிப்பதால் குடும்பத்தவருக்குப் பெரும் நன்மை ஏற்படுகிறது. எங்களுடைய பிறந்த பிள்ளையைப் பார்ப்பதற்காக வந்து விட்டார்களே என்று ஒரு சந்தோசம் இரு பகுதியாருக்குமிடையே உறவுகள் பலப்படுத்தப்படுகிறது. இந்த உறவுகள் பலப்படுத்தப்படுவதால் அமைப்புக்களின் நிருவாக முறைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. நாங்கள் எல்லாம் ஒரே இனத்தை, மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நிலை நிறுத்திக் காட்டப்படுகின்றது. இதைப் போன்று இறப்பு வீட்டை எடுத்துக் கொண்டால் எங்கள் மன்றங்களின் பணி இங்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. பந்தல் போடுதல், துக்கங்களை விசாரித்தல், எடுபிடி வேலைகளைச் செய்து கொடுத்தல், பணஉதவி, பொருள் உதவி கொடுத்தல் போன்ற அவசிய தேவைகளை இம்மன்றங்களின் மூலமாக செய்து கொடுப்பதால் ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும். உறவுகள் பலப்படுத்தப்படும். இதனால் மதமாற்றங்கள் ஏற்படும் பொழுது மிக விரைவாக அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. காரணம் என்னவென்றால் மன்றங்களின் சேவைகள் பிறப்பு, இறப்பு வீடுகளில் நடாத்தப்படுவதினால் திருமண வீடுகளை நோக்கிப் பார்த்தால் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் திருமண பந்தம் மதமாற்றத்தின் ஒரு அங்கம். மன்றங்கள் திருமண வீடுகளை சந்திப்பதினால், அவர்களோடு உறவாடி வேலைகளைச் செய்து கொடுப்பதினால் திருமணத் தம்பதிகளை கவர்ந்து கொள்ளக் கூடிய தன்மை ஏற்படுகின்றது. இரகசியத் திருமணங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். பணத்திற் காகவும், பாரிய நவநாகரிகத்திற்காகவும், உத்தியோகத்திற்காகவும் மதம் மாறிப் போகிறவர்களை விரைவாக அறிந்து பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளலாம். எனவே பிறப்பு, இறப்பு திருமண வீடுகளை அடிக்கடி சந்திப்பதினால் பிற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வ தோடு மதமாற்ற வேலைகளையும் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

பின்தங்கிய பகுதிகளில் சேவை செய்தல்

இந்த விடயத்தை நாம் எடுத்துக் கொண்டால் நமது சைவ சமயம் பரந்த அளவிலான சைவ சமய நெறிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பரந்த அளவிலான கொள்கை ஒடுக்கப்பட்டதாகக் கருதப்படும் மக்களிடையே சென்றடை வதில்லை. கிராமப்புறப் பகுதிகளிலும் போக்குவரத்துக்கள் குறைவான பகுதிகளிலும் சென்றடைவதில்லை. எம்மவர்கள் மத்தியிலே இது ஒரு பெரும் குறைபாடாகவே இருந்து வருகிறது. இந்தக் காரணம் மூலமாக மதமாற்றங்கள் ஏராளமாக நடைபெற்றிருக்கிறதை நாம் அவதானிக்கலாம். இந்த நிலையை மாற்ற வேண்டும். மாற்றுவதற்கான பல வழிமுறைகளைக் கையாளலாம். கிராமங்கள் தோறும் குழுக்களையோ மன்றங்களையோ அமைக்கலாம். கிராமங்களின் இளைஞர் யுவதிகளை ஒன்று சேர்த்துப் போட்டிகளை ஏற்படுத்தி அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். போட்டி மனப்பான்மையிலே எமது சமயக் கொள்கைகளைப் பரப்பலாம். ஆலயம் சென்று வணங்குவதன் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்திப் பக்தி வழிபாட்டைக் கூட்டலாம். அவர்களின் கல்வி நிலைகளை ஆராய்ந்து தேவையான கல்வியினைக் கற்க வைக்கலாம். போக்குவரத்துக் குறைவான பகுதியிலே சுகாதார நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே காணப்படும். மகப்பேற்றுப் பெண்களை மிக இலகுவாக வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தல், சிறுபிள்ளைகளின் கொடூர வருத்தங்களை அறிந்து அதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல், அத்தியாவசிய சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல் இவை போன்ற சேவைகளைப் பின்தங்கிய பகுதிகளில் செய்து கொடுப்பதினால் எங்களுடைய மதக் கொள்கைகளைப் பரப்பிக் கொண்டு மதமாற்றங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அநாதை இல்லங்களை அமைத்தல்

இந்த விடயத்தை நோக்கும் போது நமது சைவ சமய மக்கள் மிகக் கூடுதலாகக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்ததற்கு ஆரம்ப காலத்தில் இந்த அநாதை இல்லங்களே காரணமாக இருந்திருக்கிறது. நமது சைவ சமயங்களில் அநாதை இல்லங்கள் ஆரம்பகாலத்தில் இல்லையென்றுதான் கூறவேண்டும். இப்பொழுது கூட மிகக் குறைவாகவே காணப்படுகிறது. மதமாற்றங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் நமது சைவ சமய அமைப்புக்கள் மூலமாக அநாதை இல்லங்கள் அமைக்கப்படுவது அவசியமாக இருக்கிறது. அநாதை இல்லங்களுக்கு மக்களின் மனங்களைக் கவரக்கூடிய நல்ல பண்புகள் அமைந்திருக்கிறது. உண்பதற்கு உணவு இல்லாது கஷ்டப்படும் மக்களை, வசிப்பதற்கு இல்லிடங்கள் இல்லாது கஷ்டப்படும் மக்களை, தொழில் செய்ய முடியாது வருந்திப்போய் இருக்கும் மக்களைப் படிப்பு வசதிகளற்றுத் தெருக்களில் அலைந்து திரியும் சிறார்களை விழிப்படைய வைப்பது இந்த அநாதை இல்லங்கள் ஆகும். **வறுமைக் கோட்டின் விளிம்பிலே நிற்கும் பிள்ளைகளை அநாதை இல்லங்களில் சேர்த்துக் கல்வியோடு இணைந்து நல்ல பழக்க வழக்கங்களையும் புகட்டுவதன் மூலம் சிறந்ததோர் எதிர்காலத்தை அமைக்கலாம். அந்த வகையிலே நமது சைவ சமயப் பண்புகளை இந்து சமயத்தின்** தரமான கொள்கைகளைப் பிள்ளைகளுக்கு உரமாக இட்டுக் கற்பித்தால் சைவ சமயம் தானாகவே வளரும். இதில் எந்த ஐயப்பாடுகளுக்கும் இடமில்லை. கிறிஸ்தவப் பாதிரிமார்களும் அன்றைய நிலைமையில் இதைத்தான் செய்தார்கள். அதனால் மதமாற்றம் நடந்து கிறிஸ்தவ சமயம் பரவியிருப்பதை நாம் கண்ணூடாக இந்த நிலையில் கண்டோம். இந்த நிலை மாற்றப்பட வேண்டுமானால் மதமாற்றங்கள் நிறுத்தப்பட வேண்டுமானால், சைவசமயம் தங்கு தடையின்றி வளர வேண்டுமானால் அநாதை யில்லங்கள் அமைக்கப்படல் வேண்டும். அநாதையில்லங்கள் அமைக்கும்போது முக்கியமாகச் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். அநாதை இல்லத்தில் பிள்ளைகளைச் சேர்க்கும்போது தனிப்பட்ட முறையில் சைவ சமயப் பிள்ளைகளை மாத்திரம் சேர்க்காமல் பிறமதப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டால் மிகப்பொருத்தமாக இருக்கும். எமக்கு சைவ மக்களிடையே இது பெரும் குறைபாடாகவே இருந்து வருகிறது. இன்றைக்கு எமது மத்தியிலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் குருகுலங்கள், மங்கையர்க்கரசியார் இல்லங்கள், இந்து சமய இல்லங்கள் போன்றவைகளை எடுத்துப் பார்த்தால் படிக்கின்ற அத்தனை பிள்ளைகளும் இந்து சமயப் பிள்ளைகளாகவே இருக்கின்றார்கள். ஆனால் கிறிஸ்தவர்களால் அமைக்கப்பட்ட இல்லங்களைப் பார்த்தால் எல்லாப் பிள்ளைகளும் சேர்ந்து படிக்கின்ற தன்மையைக் காணலாம். எனவே பிள்ளைகளைச் சேர்க்கும்போது

பிறமதப் பிள்ளைகளையும் சேர்த்தால் நமது சமயம் வளர்ச்சியடைவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே அநாதையில்லங்கள் அமைத்தல், எல்லாமதப் பிள்ளைகளையும் சேர்த்தல், நமது சமயப் பண்புகளைக் கற்பித்தல் போன்ற விடயங்களால் மதமாற்ற விடயங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

பாடசாலைகளில் சமய பாடங்களைப் படிப்பிக்க வைத்தல்

இந்த விடயத்தை எடுத்துக் கொண்டால் சில கிறிஸ்தவப் பாடசாலைகளில் சைவ சமயப் பாடங்கள் படிப்பிக்கப்படுவதில்லை. படிப்பிக்கப் படாமைக்கு ஆசிரியர் பற்றாக் குறையும் ஒரு காரணம் ஆகும். நமது சமய அமைப்புக்கள் இந்த விடயத்தில் கூடுதலான அக்கறை எடுக்க வேண்டும். பாடசாலைகளுக்குச் சென்று சமய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றதா? இல்லையா? என்று அறிந்து கற்பிக்கப்படாவிடின் அதற்கான காரணங்களை விளங்கி நிவர்த்தி செய்ய வேண்டும். பிள்ளைகளினுடைய சைவ சமய அறிவு குறைவடையாது பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே பாடசாலைகளில் ஒழுங்கான முறையில் சமய பாடங்கள் கற்பிக்கப் படுதல் மூலம் மதமாற்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

கொண்டாட்ட தினங்களில் சிறார்களை விழிப்படைய வைத்தல் நமது சைவ சமயத்தில் வருகின்ற கொண்டாட்ட நாட்களை நோக்கிப் பார்த்தால் ஒவ்வொரு கொண்டாட்டங்களிலும் வழமையாகச் செய்கின்ற பழைய நடைமுறைகளையே கையாண்டு வருகிறோம். இந்த நடைமுறைகளில் சிறார்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. சித்திரை விழாக் கொண்டாட்ட காலங்களில் சில இடங்களில் சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. ஆனாலும் சிறுவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பங்களிப்புக் குறைவாகவே இருக்கின்றது. கண்கட்டி முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், கிடுகு பின்னுதல், அழகு ராணி தெரிவு செய்தல் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளே நடாத்தப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் நமது சமயத்தோடு சம்பந்தமான கட்டுரைப் போட்டிகளோ, கவிதைப் போட்டிகளோ, வினாவிடைப் போட்டிகளோ, விவாதப் போட்டிகளோ நடைமுறைப்படுத்தப்படுவது மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. இதைப் போன்ற கொண்டாட்ட தினங்களிலே, நமது சமயம் சம்பந்தமான நிகழ்வுகளைப் போட்டிகளில் சேர்த்துக் கொண்டால் பார்ப்பவர்களுடைய மனதையும் கவர்ந்து கொள்ளலாம். எமது நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளலாம். எனவே நமது கொண்டாட்ட தினங்களில் சிறுவர்களுக்கான சமயம் சம்பந்தமான நிகழ்ச்சிகளைப் போட்டி மனப்பான்மையில் ஏற்படுத்தினால் சமய அறிவை இளம் நெஞ்சங்களால் புகுத்திக் கொள்வதோடு மத மாற்ற நிகழ்வையும் தவித்துக் கொள்ளலாம்.

நூலகம் அமைத்தல்

ஒரு நாட்டின் கல்வித்தன்மையை உணர்த்திக்காட்டுவது நூலகம் ஆகும். ஒரு கிராமம் விருத்தியடைய வேண்டுமாயின் கல்வி நிலையில் அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் அங்கு நூலகம் அமைய வேண்டியது அவசியம் ஆகும். நமது சைவ சமய மக்களிடையே, சமய அறிவுகள் பல்கிப் பெருக வேண்டுமேயானால், சமயம் சம்பந்தமான புத்தகங்களோடு சம்பந்தமான நூலகம் ஒன்று அமைத்தல் அவசியமாகும். நமது ஏழை எளிய மக்கள் இலவசமாகச் சமய அறிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த நூலகம் வசதியாக இருக்கும். இந்த மதமாற்றங்கள் நடைபெற்று வருகின்ற பகுதிகளிலே இந்த நூலகம் மதமாற்றங்களைத் தடை செய்யும் ஒரு கருவியாக இருக்கிறது. இதிலேயுள்ள ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள், விவேகானந்தர், சந்திரபோஸ், மகாத்மாகாந்தி போன்றவர்களது சுய சரித்திரப் புத்தகமும், அவர்கள் ஆற்றிய சேவைகள் சம்பந்தமான நூல்களையும் வாசிப்பதன் மூலம் நமது இந்து சமயம் எத்தனை கஷ்டங்களைத் தாண்டி வளர்ந்து வந்திருப்பதை அறிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட அறிஞர்களின் புத்தகங்களை நூலகம் வாயிலாகப் பெற்றுக் கொள்ளலாம். எனவே நூலகங்கள் வாயிலாகவும் மதமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இயற்கை அனர்த்தங்கள்

அண்மைக் காலங்களிலே இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படுவதை நாம் காண்கிறோம். இந்த இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்படைகின்ற மக்களுக்கு உதவி செய்தல் மதமாற்ற விடயத்தை தடுப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது நமது சைவ சமய மக்களின் அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்தலில் முன்வரவேண்டும். இப்படி உதவி செய்வதனால் மதமாற்ற நிகழ்வுகளை தடுத்துக் கொள்ளலாம்.

அண்மைக்கால நிகழ்வுகளை நோக்கிப் பார்க்கும் போது மதமாற்ற நிகழ்வுகள் மிகக்குறைவாக இருந்தாலும் மதமாற்றம் நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. அவைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமேயானால் நமது அமைப்புக்கள் துரிதமாகச் செயல்பட வேண்டும். கிராமங்கள் தோறும் இந்த விழிப்பு எனும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். இந்த விழிப்புணர்வுகள் கிராமங்கள் தோறும் சென்றடைவதைக் காணலாம். இதே போன்று இந்துசமய அபிவிருத்தி சபை, மகாசக்தி, மங்கயர்க்கரசியார் இல்லம், தரிசனம், இந்து சேவா சங்கம், இந்து மகளிர் மன்றம், சைவ மகா சபை, தபோவனம் போன்ற அமைப்புக்கள் மூலமாகவும் சமயம் சம்பந்தமான அறிவுரைகளும் சமயம் சம்பந்தமான பிரசாரங்களும் நடைபெற்று வருவதை அவதானிக்கலாம்.

தற்கால கள ஆய்வை நோக்கும்போது முற்பகலில் செய்த பயிர் பிற்பகலில் விளையும் என்பதைப் போல் அன்று பாதிரிமாரால் மதமாற்ற நோக்கத்தைக் கருத்தில் கொண்டு சைவ மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பதிலாக இன்று கிறிஸ்தவ ஆலயங்களுக்கு பல அநீதிகள் இழைக்கப்பட்டதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அண்மையிலே பொலநறுவை மாவட்டத்திலே கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று அழிக்கப்பட்டது. இதே போன்று காலி மாவட்டத்திலும் கிறிஸ்தவ தேவாலயங்கள் அழிக்கப்பட்டு மக்களுக்கும் சோகம் விளைவிக்கப்பட்டிருப்பதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த விடயங்களை நோக்கிப் பார்க்கும் போது மதமாற்றங்கள் நடைபெறுவது மிகக் கடினமான ஒரு விடயமாகத் தென்படுகிறது. தனிமனித சுதந்திரம் அளவுக்கதிகமாகப் பிரயோசனப்படுத்தப்படுகிறது. நாங்களும் எங்களுடைய மதத்திற்காகப் போராடக் கூடிய நிலைமை ஒன்று உருவாகியுள்ள போது எமது சைவ சமய மக்கள் இன்னும் ஏன் மதமாற்றங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது வினோதமான காரியமாக இருக்கிறது.

வெள்ளிக்கிழமை தோறும் ஆலயம் சென்று வணங்குவது அவசியமானது என்பதை நமது அமைப்புக்களின் மூலமாக மக்கள் மத்தியில் சென்றடையச் செய்வதும் மிகப்பொருத்தமானதாகும். மந்த நிலையில் இருக்கும் குடும்பத்தை எந்தச் சமயத்திற்கும்

பற்றிக் கொள்ளலாம் என்பது பொதுவான வாக்கு. இந்த நிலையில் உள்ளவர்களை வெள்ளிக்கிழமை தோறும் ஆலயத்திற்கு வரவழைப்பது குழுக்களின் தலையாய கடமையாகும். பூசைகள் முடிவுற்றதும் உடனடியாக வீடு செல்ல விடாமல் பிரத்தியேகக் கூட்டங்கள் வைத்துப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதினால் மதமாற்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். தமிழ் நாட்டில் முதலமைச்சர் அவர்கள் மதமாற்றத் தடைச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு எத்தனித்துக் கொண்டிருப்பதைப் பத்திரிகை வாயிலாக அறிகிறோம். இதை உற்று நோக்கும்போது அங்கும் மதமாற்றங்கள் நடைபெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. நமது இலங்கையை பொறுத்த வரையில் சிகல உறுமயக் கட்சி (ஆமதுறுமார்) மதமாற்றத் தடைச்சட்டத்தை உயிரைக் கொடுத்தாவது பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளையும் இணைத்து நிறைவேற்றுவோம் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கும் விடயத்தையும் பத்திரிகையில் அறிந்தோம். இவைகள் ஒவ்வொன்றையும் நோக்கும் போது பௌத்த மக்களிடையிலோ சைவ மக்களிடையிலோ மதமாற்றம் சிறிதளவேனும் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதுவரைக்கும் அன்று தொடக்கம் இன்றுவரை சைவ சமய மக்களிடையே நடைபெற்றுள்ள மதமாற்றங்களைக் கூறினோம். அதற்கான எடுத்துக்காட்டுகளையும் உசாத்துணை நூல்கள் மூலமாகவும் ஆண்டறிக்கை மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் எடுத்துக் காட்டியுள்ளேன். மதமாற்றத்தைத் தவிர்ப்பதற்கான களவாய்வு விடயமாகத் தற்கால விடயங்கள் சிலவற்றை எடுத்தியம்பியுள்ளேன்.

இறுதியாகத் தற்பொழுது நடைபெறுகின்ற மதமாற்றங்களைத் தடைசெய்யப்படவேண்டுமேயானால் இலங்கையிலுள்ள ஆண், பெண் அநாதையில்லங்கள் யாவும் அரசாங்கத்துக்குள் கட்டாயமாக பதிவு செய்யப்பட்டு அதனை மேற்பார்வை செய்வதற்கு சிறுவர் இல்லப் பாதுகாப்பு அதிகாரிகள் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் சென்று ஒவ்வொரு இல்லங்களின் கணக்கு வழக்குகளையும் நிருவாக முறைமைகளையும் மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகளையும் கண்டறிதல் வேண்டும். இதனால் மதமாற்றம் நடைபெறுகின்ற பிள்ளைகளின் தன்மைகளை அறிந்து கொள்ளலாம். இது கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விடயமாகிறது. மதமாற்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு நான் ஏற்கனவே குறிப்பிட்ட குழுக்களோ, மன்றங்களோ மிகத்திறமையாகச் செயல்பட்டால், இயற்கை அனர்த்தங்கள் வரும்போது சாதி மதம் பாராது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்தால் மனம் மாறிப்போகும் மதமாற்றங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

உசாத்துணை நூல்கள் :-

- ஆறுமுகநாவலர் சரித்திரம்
- ஆறுமுகநாவலரின் வாழ்க்கை வரலாறு
- பத்திரிகையில் வெளிவந்த கட்டுரைகள்
- இளங்கதிர் ஆண்டு மலரின் ஆண்டறிக்கை
- பண்டைத்தமிழர் நாகரிகம்
- தமிழரின் ஆரம்ப வாழ்க்கை வரலாறு
- தமிழும் சைவமும்
- தமிழ் தந்த பெரியார்கள்
- நேருஜியின் தமிழர் வரலாறு தமிழாக்கப் புத்தகம்
- சுவாமி விவேகானந்தரின் சுயசரிதை
- சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்
- மகாத்மா காந்தியின் சத்திய சோதனை
- முதியோர்களின் நன்மதியுரைகள்
- இந்து நதிக்கரையின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்
- ஆரியரின் வருகை



விநாயகர் வணக்கம்

விநாயகர் என்ற சொல் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக்கெல்லாம் தலைவன் எனப்பொருள்படும். எந்தக்கடவுளை வழிபட்டாலும் முதலிலே வழிபடப்படும் தெய்வம் விநாயகக் கடவுள் ஆகும். விநாயகரின் தோற்றம் பற்றி சம்பந்தரின் பின்வரும் தேவாரம் விளக்கி நிற்கின்றது.

"பிடியதன் உருவுமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

"உமை பெண் யானையின் உருவெடுத்தாள், சிவன் ஆண் யானையின் வடிவெடுத்தான். இருவரும் இணைந்தனர். தன்னை வழிபடுகின்றவர்களது துன்பங்களை நீக்குகின்ற கணபதி பிறக்குமாறு சிவன் இவ்வாறு அருள் செய்தார்" என்பது அப்பாட்டின் பொருள் ஆகும்.

நாம் எழுதத்தொடங்கும் முன் "உ" எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குவது வழமை. விநாயகர் ஓங்கார வடிவினர். அ+உ+ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடு எழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி.

மஞ்சள், சாணம், சந்தனம் முதலியவற்றால் பிள்ளையாரைப் பிடித்து வைத்தால் அவர் அனைவருக்கும் அருள்பாலிக்க எழுந்தருளுவார். விநாயக ருக்குரிய மலர்களாக அறுகு, எருக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரியகாந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன கூறப்படும். பத்திரங்களாக வன்னி, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி என்பன கூறப்படும். துளசி விநாயகருக்கு ஆகாது.

சமுதாய முன்னேற்றத்தில் கோயில்களின் பங்கு

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்
கருப்பறில் பொருப்பாளை கொடிக்கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலயக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ"

செல்வி. மிருநாலினி தங்கராசா
கல்வடி, மட்டக்களப்பு



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியாய் அண்டம் எங்கினும் வியாபித்திருக்கும் பரம்பொருளான இறைவன் ஆன்ம ஈடேற்றம் கருதி வந்து தங்கி எழுந்தருளியுள்ள இடம் கோயில். மனிதர்கள் சமூகமாக எங்கு எல்லாம் வாழ்கின்றார்களோ அங்கு எல்லாம் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. தொன்று தொட்டு இன்று வரையும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பங்கு கொள்ளும் சமூக நிறுவனமாக இது இருந்து வருகின்றது.

விண்ணிலும் மண்ணிலும் நிறைந்து நிற்கும் இறைவன் நான்கு பக்கங்களில் எல்லைக் கோடிட்டு, நான்கு பக்கங்களில் சுவர்களை நிறுவி, குறுகிய பரப்பினுள் தனது உறைவிடமாகக் கொண்டு வீற்றிருத்தல் எவ்வாறு பொருந்தும்? இவைபற்றி அறிஞர்கள் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இவற்றில் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளனர்:

பசுவினுடைய உடல் எங்கினும் குருதி பரந்தோடிக் கொண்டு இருப்பினும் அது பக்குவமடைந்து பாலாக மாட்டின் முலையில் இருந்தே பெறுகின்றோம். அதேபோல் இறைவன் அண்டம் எங்கிலும் வியாபித்து இருப்பினும் அவனை வழிபட்டு அருள் பெறும் இடமாக கோயில் கொள்ளப்படுகின்றது.

கோயில் என்பதற்குத் தேவகிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவபவனம், தேவஸ்தானம், தேவவேஸ்மம், சைத்தியம், ஷேஷத்திரம் முதலான பல பெயர்களைச் சிற்பநூல்கள் விபரித்துள்ளன.

கோயில் என்னுஞ்சொல் கோவில் எனவும் வழங்கப்படு கின்றது. "கோ" என்றால் அரசன், "இல்" என்பது வீடு. உலகிற்கு அரசனான இறைவனது வீடு கோயில் எனப்படுகின்றது.

மாமன்ற பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை.

கோயிலைக் குறிக்கும் மறுபெயரான "அர்ச்சய கிருஹம்" என்னும் சொல் வழிபடும் இடம் என்னும் பொருளையும், "சைத்தியம்" என்பது அடுக்கடுக்காகக் கட்டி எழுப்பப்பட்ட கட்டிடம் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன. இறைவன் பெருமையினை அளத்தற்குச் சிறந்த கருவி என்பதனால் "விமானம்" என்னும் நாமமும் உண்டாயிற்று. கோயிலைக் குறிக்கும் இன்னொரு சொல் "ஆலயம்". ஆலயம் என்பது ஒழுக்கத்தையும் தரும் நிலையமாக விளங்குகின்றது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற முன்னோரின் அறிவுரைக்கு அமையக் கோவில் வழிபாடானது எமது சமூகத்தில் ஆலவிருட்சம் போல் பரந்து வேர் ஊன்றிக் காணப்படுகின்றது. வழிபாட்டு அடிப்படையில் கோவில்கள் இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளதை ஆகமங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவை

1) ஆகம முறையில் அமைந்த ஆலயம்
2) ஆகம முறையில் அமையாத ஆலயம்

ஆகம முறையில் அமைந்த ஆலயத்தில் கோபுரம், விமானம், மண்டபங்கள், கர்ப்பக்கிரகம் என்பன உண்டு. இவ்வாலயங்களில் சடங்குமுறை ஆலயவழிபாடு இடம் பெறுவதில்லை. மேல் தட்டு மக்களின் பெருந்தெய்வ வழிபாடாக இது கொள்ளப்படுகின்றது.

ஆகமமுறையில் அமையாத ஆலயங்கள் சிறிய அளவில் அமைந்துள்ளன (ஓலை குடிசைகள்). சில இடங்களில் கட்டிடங்கள் இல்லை. புற்றுகள், அடையாளமாக சூலம் போன்றவற்றை வைத்து வழிபடல். இவ்வழிபாட்டு முறை சடங்கு முறையில் காணப்படு கின்றது. இலங்கையில் 200 சிறுதெய்வ ஆலயங்கள் இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

சமுதாய முன்னேற்றத்தில் கோவில்கள் மிகவும் பங்களிப்புச் செய்கின்றன. இதன் அடிப்படையில் கோவில்கள் எமது நாட்டில் ஊர்க் கோவில்கள், பிரதேச கோவில்கள் என இரண்டுவகையாக அமைந்து காணப்படுகின்றன. ஊர் கோவிலாகப் பல இருந்த போதிலும் பிரதேச கோவில்கள் சிலவே இருக்கின்றன. உதாரண மாக மட்டக்களப்பில் பிரதேச கோவிலாகச் செட்டிபாளையம் கண்ணகியம்பாள் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என்பன உள்ளன.

சமுதாய முன்னேற்றத்திற்காகக் கோவில்கள் அருந் தொண்டாற்றி வருகின்றன. அந்தவகையில் கோவில்களால் சமுதாயத்தில் தூய்மை பேணப்படுகின்றது. கோவில்களில் குடிகொண்டிருக்கும் தங்கள் நம்பிக்கைக்குரிய இறைவன் தங்கள் இல்லம் தோறும் எழுந்தருள்வான் என்று இந்துக்கள் நம்புகின்றனர். இதனால் மண்டி, மனைகளை தூய்மையாக வைத்திருக்க இந்துக்கள் விரும்புகின்றனர். அது மட்டுமன்றிக் கோயில்களில் திருக்கதவு திறந்து திருவிழாக்கள் நடைபெறும் காலப்பகுதிகளில் தமது வீட்டில் ஏதோ ஒரு சந்தோஷமான நிகழ்வு இடம் பெறுவது போன்ற உணர்வு அவர்களுக்கு எழுகின்றது. இக்காலப்பகுதியில் இந்துக்கள் தங்களையும் வசிக்கும் இல்லங்களையும் வசிக்கும் பிரதேசத்தினையும் தூய்மையாக வைத்திருக்கின்றனர். இக் காலத்தில் புலால் உண்ணல் மது அருந்துதல்..... போன்ற சில செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவை தவிர ஒவ்வொரு வாரத்திலும் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமையினை புனித நாளாக இந்துக்கள் கருதுகின்றனர். இந்நாளில் தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து தமது இஷ்ட தெய்வத்தை ஆலயம் சென்று வழிபடல் இந்துக்களின் வாராந்தச் செயற்பாடாகும்.

இந்து மதம் பல கட்டுப்பாடுகளைக் கொண்டு கட்டுக் கோப்புடன் மிளிர்கின்றது. இந்துமத கட்டுப்பாடுகளுள் தூய்மை, தீட்டு மிக முக்கியமானது. இறப்பு, பிறப்பு, மாதவிடாய் காலங்களில் கோயில் செல்வதற்கு இந்துமதம் தடைசெய்துள்ளது. காரணம் இவை தூய்மையைக் கெடுத்துத் தீட்டை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களாக இந்துமதம் கருதுகின்றது. இவை கோவில்கள் மூலமாக சமுதாயத்திற்கு எடுத்தியம்பப்படுகின்றன. உதாரணமாக கோவில்கள் அமைந்திருக்கும் பிரதேசத்தில் மரணம் நிகழ்ந்தால் இறந்த உடலை மயானத்திற்கு எடுத்து செல்லும் வரை ஆலயங்களில் மௌன பூசை இடம் பெறுகின்றது. இதன் மூலமாகச் சமுதாயத்தில் தூய்மை பேணப்படுகின்றது.

இந்துக்கள் பெரும்பாலும் ஆலயம் செல்லும்போது தனித் தனியாகச் செல்வது மிகவும் அரிது. இவர்கள் குடும்பத்துடன் செல்கின்றனர். இவர்கள் செல்லும் போது அரிசி, பழம், தேங்காய் கற்பூரம்..... முதலான பொருட்களை இறைவனுக்குக் காணிக்கையாகக் கொண்டு செல்கின்றனர். அதேவேளை உண்டியலில் பணம் இடுவது இந்துக்களின் வழமை. இது அவர்களிடத்தில் கொடுக்கும் நற்பண்பை வளர்த்துக் கொள்ள அடித்தளமாக அமைகின்றது. குடும்பமாகச் செல்லும்போது குடும்பத்தில் ஒற்றுமை, அன்பு, ஒத்துழைப்பு, பகிர்தல், கொடை, பிறநலம் பேணல், சகோதரத்துவம், விட்டுக் கொடுத்தல், சகல உயிர்களையும் சமமாக மதிக்கும் தன்மை போன்ற நற்பண்புகள் உருவாகின்றது. கோவில் மூலமாகக் குடும்பத்தில் உருவான சமூக வளர்ச்சிக்கும் பின் நாட்டின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகின்றது.

மனிதன் சக மனிதனுக்கு உதவி செய்வதோடு நின்றுவிடாது ஏனைய உயிர்கள் உயிர்வாழ்வதற்கும் தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். இதனைச் சமூகம் உணரவேண்டும். சமூகத்தில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். இதனை வலியுறுத்துவதற்காக இந்து ஆலயங்களில் அரிசிமா கோலமிடப்படுகின்றது. இதனால் எறும்பு, புழு பூச்சி போன்ற சிறுபிராணிகளுக்கு உணவுகிடைக்கின்றது. தினமும் பூசை இடம்பெற்றவுடன் நந்தி, பலிபீடத்தில் வைக்கும் பிரசாதத்தினை காகத்திற்கு எறிவது வழமை. பசுவிற்கு தானம் வழங்கல். இவை தவிர சனி விரத்தினைப் பிடிக்கும் பக்தர்கள் சமைத்த உணவில் ஒரு பிடியைக் காகத்திற்கு இடவேண்டும் என இந்துமதம் வலியுறுத்துகின்றது. இவை தவிர ஆலயங்களில் உயிர்ப் பிராணிகளான மயில், மரை, குரங்கு போன்றன வளர்க்கப் படுகின்றன. இதனால்தான் அன்று தொட்டு இன்றுவரையும் இந்துக்கள் தமது வாசலில் வெள்ளிதோறும் கோலமிடுகின்றனர். இவை தவிர நாய், பூனை, முயல், மாடு போன்ற பிராணிகளையும் கிளி, குருவி, மைனா.... போன்ற பறவைகளையும் வளர்க்கின்றனர்.

தானங்களில் சிறந்த தானம் அன்னதானம், வஸ்திர தானம், பொருட்தானம் என்பன. இதனை வழங்கும் செயற்பாட்டினை சமுதாயத்திற்கு உருவாக்கிய இடமாகக் கோவில் கொள்ளப் படுகின்றது. அன்னதானம் நாள்தோறும் இடம்பெறும் ஆலயங்களும் உண்டு. அதேபோல் மாதந்தோறும், வருடந்தோறும் இடம்பெறும் ஆலயங்களும் உண்டு. இவ்வாறு கொடுப்பதால் ஏழை எளியவர்களின் வயிற்றுப் பசியையும் நீக்க முடியும். கொழும்பு போன்ற வெளி மாவட்டத்தில் தங்கியிருந்து கல்விபயிலும் வறிய மாணவர்களின் வயிற்றுப் பசிக்கு அருமருந்தாக அன்னதானம் பயன்பட்டு வருகின்றது. இவை தவிர தீர்த்த உற்சவம் அன்று நேர்த்தியை நிறைவேற்றவும், இறந்த ஆத்மாக்களின் ஆத்ம சாந்தி வேண்டியும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. உதாரணமாக மட்டக்களப்பில்

மாமங்கப்பிள்ளையார் ஆலயம், களுதாவளை பிள்ளையார் ஆலயம் என்பவற்றில் இந்நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. வஸ்திரதானம் பூசை முடிவில் பூசையை நிறைவேற்றி வைத்த குருக்களுக்கு வழங்கப்படுகின்றது. இறந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டியும் வஸ்திரதானங்கள் ஆலயங்களில் இடம்பெறுகின்றன. பொருட்தானம் எனும்போது அவிக்காத பச்சை மரக்கறி, அரிசி, தேங்காய்..... முதலானவைகளும், உயிர்பொருளாகப் பசுவினையும் வழங்குகின்றனர். தானம் கொடுக்கும் பண்பினை இந்து ஒருவன் தனது வீட்டிலும் மேற்கொள்ள வழிவகுத்த இடமாகக் கோயில் உள்ளது. பசியுடன் வந்த பிச்சைக்காரனுக்கு உணவழித்தல், ஏழை எளியவர்களுக்கு வஸ்திரதானம், பொருட்தானம் என்பவற்றை இந்துக்கள் இன்முகத்துடன் செய்து வருகின்றனர்.

கோயில்கள் சமுதாய முன்னேற்றத்திற்கான கல்வியை வழங்கும் நிறுவனமாக இருந்து வருகின்றன. ஆரம்ப காலங்களில் போர்க்கலை, கவின்கலைகள், தத்துவங்கள், பொதுக்கல்வி என்பன கற்பிக்கப்பட்ட புராண இதிகாசங்கள், தேவாரங்கள் என்பவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆரம்பகாலங்களில் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த இடமாகக் கோயில்கள் கொள்ளப்படுகின்றன. சாருதேவி, ரங்கபதாதை, தர்மமாகதேவி.... போன்றவர்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. சோழர்கால கோயில்கள் சோழர் காலத்தில் கல்வி வழங்கும் நிறுவனமாகச் செயற்பட்டதாக புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. இன்றைய கால கட்டத்தில் எமது பிரதேச கோயில்களில் அறநெறி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. திருவிழாக் காலங்களில் திருவிழா பூசைகளை எடுத்து நடத்தும் உபயகாரர்களால் மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவைதவிர கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கும், கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்கும் சிறுதொழில் முயற்சியை மேற்கொள்வதற்கான பயிற்சி வகுப்புகளை ஆலயங்கள் நடத்தி வருகின்றன.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் கல்வி, செல்வம், வீரம் என்பன அவசியம். இவற்றின் அதிபதிகள் சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை ஆகும். இதனைச் சமூகத்திற்கு உணர்த்துவதற்காக ஆலயங்களில் வருடந்தோறும் ஐப்பசி மாதம் நவராத்திரி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆயுத பூசைக்கு அடுத்த நாள் ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இந்நிகழ்வு வீடுகள் தோறும் மட்டுமல்ல பொது இடங்களிலும், கல்விக் கூடங்களிலும் நடைபெற்று வருகின்றது. இச்செயற்பாட்டால் சமூகம் முன்னேற்றம் அடையும் என்பது உறுதி. தகவல் கூறும் தகவல் நிலையமாக கோவில்கள் சமூகத்தில் இருந்து வருகின்றன. ஊர்மக்களைச் சென்றடைய வேண்டிய தகவல் கோவில்களில் அறிவிக்கப்படுகின்றன. மக்களைச் சென்றடைய வேண்டிய செய்திகளைத் தெருத்தெருவாகக் கோயில் சார்ந்த முரசறிவிப்போர் செய்தி கூறும் மரபு ஆரம்ப காலங்களில் இருந்தது. இன்றைய நவீன யுகத்தில் தகவல்கள் ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, அண்மையில் சுனாமி அனர்த்தம் பற்றிய செய்திகளைக் கோவில்கள் மூலமாக மக்களுக்கு அறிவித்தனர். சுனாமி அனர்த்தம் இடம் பெற்று ஒரு சில நாட்களுக்கு வானொலிச் செய்திகள் கோவில் ஒலி பெருக்கி மூலமாக ஒலிபரப்பட்டதை நாம் அறிவோம்.

அன்று தொட்டு இன்றுவரையும் கோவில்கள் சமுதாயத்தில் மருந்து வழங்கும் மருந்தகர்களாகப் பரிணமிக்கின்றன. ஆரம்ப காலங்களில் ஆலயங்கள் வெளிப்படையாக மருந்தகமாக விளங்கியதாக ஆயுர்வேதம் சுட்டிக் காட்டுகின்றது. சோழர் ஆட்சிக் காலத்தில் கோயில்கள் இத்தகைய தன்மை கொண்டிருந்தாக இந்துமத வரலாறுகள் ஒப்புவிக்கின்றன. இன்று ஆலயங்களில் பயன் படுத்தப்படும். வில்வம், துளசி, வேப்பிலை, மஞ்சள், அறுகு, செவ்வரத்தம் பூ..... என்பன அதிவிசேஷ மருந்து மூலிகைகள் எனச் சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது. இவை தவிரச் சித்திரை வருடம் பிறப்பதற்கு முன் வழங்கப்படும் "மருத்து நீர்" பல மருத்துவக் குணம் நிறைந்தது. இந்து திருமணங்கள் பெரும்பாலானவை கோயில்களில் நடைபெறுகின்றன. திருமணத்தின் போது ஓமகுண்டத்தில் எரிக்கப்படும் ஆல், அரசு..... போன்ற குச்சிகளின் சுவாலைகளை மணமக்கள் சுவாசிப்பதால் குழந்தை பெறும் பாக்கியம் கிட்டும் என மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்து மத ஆலயங்களில் வழங்கப்படும் திருநீறு பற்றிப் பார்ப்போமானால் அது இந்து ஒருவரின் அடையாளச் சின்னமாகவும் பாதுகாவலாளியாகவும் இருக்கின்றது.

"நீறு இல்லா நெற்றி பாழ்" என இந்துமதம் வலியுறுத்திக் கூறுகின்றது. நவீன மருத்துவம் திருநீற்றின் மகிமை பற்றிக் கூறும் போது மனிதனின் உடலில் உள்ள கெட்ட நீரை உறிஞ்சி நோயிலிருந்து பாதுகாக்கின்றது. இதனால் இந்து ஒருவன் தன்னை நோயிலிருந்து பாதுகாத்து கொள்கின்றான். இதேபோல் தண்ணீர் ஒதி எறிதல் நிகழ்வு. ஆரம்பகாலத்தில் ஏனைய பயிர்களையும் பூச்சி, புழுக்கள் அரிக்காது பாதுகாக்க ஆலயங்களில் இருந்து ஒதிய நீரை எறிந்தனர். இதே செயற்பாடு இன்றும் உள்ளது. கிராமங்களில் இது அதிகமாகப் பேணப்படுகின்றது. இதனால் சமுதாயத்தில் மக்கள் சில விபரீதங்களை இலகுவாகக் களைவதற்கு இது துணை நிற்கின்றது.

சமூகத்தின் பொதுச்சொத்துக் கோயில் அதாவது ஏழை, பணக்காரன் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லை. இறைவன் படைப்பில் யாவரும் சமன் என்பதை வெளிப்படுத்திச் சகமக்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சகல உரிமையும் உண்டு என்பதை உணர்த்திய இடம் ஆலயம். 'இதற்கு சிறந்த சான்று ஏகலியன் (சலவைத் தொழிலாளி), திருநாளைப்போவர் நாயனார் (தில்லைப்பெருமானை தரிசிக்கத்தடை திருப்பாண ஆழ்வார் (திருவரங்கக் கோயில் செல்லத்தடை) போன்றவர்களுக்கு இறைவன் தரிசனம் கொடுத்து அருள்புரிந்ததாக இந்து மதவரலாறுகள் கூறுகின்றன. இதனைத் திருமூலர் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்கின்றார்.

கோயில்கள் சமுதாய முன்னேற்றத்திற்கான தொழில் வழங்கும் தொழில் திணைக்களமாக விளங்குகின்றன. ஆலயங்களில், வெளிவீதிகளில் கடைகள் அமைக்கப்படுகின்றன. இதனால் அவர்களுக்குத் தொழில் கிடைக்கின்றது. இவை தவிர பூ விற்றல், செருப்பு பாதுகாத்தல், கற்பூரம் விற்றல் இவைகள் மூலம் ஏழை அடியவர்கள் தொழில்களை பெறுகின்றனர். இவை தவிர ஆலயங்களின் சிலசில செயற்பாடுகளுக்குத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாகப் பாதுகாப்பாளர், கணக்காளர்... எனச் சில தொழில்களுக்கு அடியவர்கள் இணைந்து ஊதியம் பெறுகின்றனர். இவை எல்லாவற்றையும்விட பூசை செய்யும் குருக்களுக்கும் மாதாந்தம் சம்பளம் வழங்கப்படுகின்றது.

கோவில்கள் சமுதாய முன்னேற்றத்திற்கான ஒரு வியாபார நிலையமாகவும் விளங்குகின்றன. சில கோவில்களில் நிரந்தர கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கதிர்காமத்தினை கூறலாம். சில ஆலயங்களில் விசேட தினங்கள், திருவிழாக் காலங்களில் வெளிவீதிகளில் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, ஆலயங்களில் நேர்த்தியாக வந்த பொருள்கள் ஏலத்தில் விற்கப்படுகின்றன.

கைத்தொழில் வளர்ச்சிக்குக் கோயில்கள் நிலைக்களனாக சமுதாயத்தில் அமைந்து காணப்படுகின்றன. உதாரணமாகப் பூமாலை தொடுத்தல் கலையை அறிமுகப்படுத்திய இடம் கோயில். இன்று சமுதாயத்தில் ஏழையின் வயிற்றுப் பிழைப்புக்கு உதவி செய்யும் சிறு கைத்தொழிலாகப் பூமாலை விற்றல் காணப்படுகின்றது. இச்சிறுகைத்தொழில் முயற்சியில் இந்தியப் பெண்கள் கூடுதலாக இடம்பெறுகின்றனர். கொழும்பு போன்ற மாவட்டங்களில் இச்சிறுகைத்தொழில் வியாபாரம் இடம் பெறுகின்றது.

சமுதாய நிகழ்வுகளை நடத்திக் கொடுக்கும் இடமாகக் கோயில் உள்ளது. திருமணம், சிராத்த கிரியைகள், விசேட பூசைகள் (நேர்த்திக் கடன் நிறைவேற்றும் பூசை, பிறந்தநாள், திருமண நாள்... என்பவற்றில் இடம் பெறும் பூசை)

"ஏழைக்கு எழுத்தறிவித்தல்", "ஒரு பெண்ணை வாழ வைத்தல்" என்பன சிறந்த புண்ணியம் என இந்துமத வரலாறுகள் கூறுகின்றன. இப்புண்ணியத்தைச் செய்யும் புண்ணியத் தலமாக கோவில்கள் சமூகத்தில் உள்ளன. மட்டக்களப்பு பிரதேசத்தின் புகழ் வாய்ந்த முருகன் ஆலயமான சித்தாண்டி முருகன் ஆலயத்தில் மயில் கட்டு திருவிழாவன்று ஏராளமான திருமணங்கள் நடத்தப் பட்டு வருவதாக மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

"நம்பினார் கெடுவதில்லை" என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்திச் சமுதாய முன்னேற்றத்தில் பங்கெடுக்கும் அரிய பொக்கிசமாகக் கோவில் இருந்து வருகின்றது.

மக்கள் வாழ்வில் இன்பமும், துன்பமும் சுழலும் சக்கரம் போல் மாறி மாறி இடம் பெறுகின்றன. இன்பத்தை அனுபவிக்கும் மனிதன் துன்பம் வரும் போது சுழன்று விடுகின்றான். துன்பத்தை நீக்கி அருள் புரியும் சக்தி இறைவனுக்கு உண்டு என்பதை உணர்கின்றனர். இதனால்தான் தனது இஷ்ட தெய்வத்தை நினைத்து நேர்த்திப் பொருளை நேர்கின்றனர். பின் தனது துன்பம் நீங்கியவுடன் தனது இஷ்ட தெய்வத்தைக் கொண்டுள்ள கோயிலுக்கு நேர்த்தி பொருளைக் கொண்டு செல்வது இந்துக்களின் மரபு. அவர்கள் நேர்த்திப் பொருளாக உயிர் பொருளாக கோழி, மாடு, ஆடு என்பவற்றையும், கோயில் பாவனைப் பொருளாக குடம், விளக்கு, தாம்பாளம், அணிகலனாக அட்டியல், தாலி, மாலை,..... என்பனவும், அடையாளப் பொருளாக, காற்பர்தம், கண்படலம்,..... என்பவற்றையும் வழங்குகின்றனர். இவை தவிர தீர்த்தமாடுதல் காவடி எடுத்தல், அலகிடுதல், அடியளித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல் போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். நேர்த்திப் பொருளை கொடுத்தவுடன் இந்துக்கள் மனதில் திருப்தி ஏற்படுகின்றது.

சமுதாயத்தின் நன்மைக்காகப் பல கிரியைகள் பல பூசைகள் யாகங்கள் இடம்பெறுகின்றன. திருக்கதவு திறப்பதற்கு முன் ஆலயங்களில் ஊர்காவல் செய்து பொம்மை எரித்தல் கிரியைகள் இடம்பெறுகின்றன. நோய் அற்ற வாழ்வும் பாதுகாப்பும் வேண்டியும், நாட்டின் சுபீட்சம் வேண்டியும் யாகங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. உதாரணமாக, இலங்கைத் திருநாட்டின் சமாதானம் வேண்டி பல பிரதேசத்தில் உள்ள கோயில்களில் யாகங்கள் மேற் கொள்ளப்பட்டன. இதிகாசங்களில் தசரதன் பிள்ளை பேறுவேண்டி யாகம் மேற்கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. பூசை எனும் போது அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தில் உயிர் இழந்தவர்களின் ஆத்மாசாந்தி வேண்டி ஆலயங்களில் இடம் பெற்ற விசேட பூசையினைக் குறிப்பிடலாம்.

தமிழ்ப் பண்பாட்டு கலை கலாசார அம்சங்களை அழியாது பேணிப் பாதுகாக்கும் நூதனசாலை கோயில்கள் சமுதாயத்தில் விளங்குகின்றன. தமிழர்களின் திருமணமுறை, வீட்டு அமைப்பு முறை, பழக்க வழக்கம், நடை உடைபாவனைகள், மரணக் கிரியைகள்... என்பவற்றை அழியாது பேணிப் பாதுகாத்துத் தமிழ் சமூகம் சீரழிவதைத் தடுக்க வழிவகுத்த இடமாகக் கோயில்கள் உள்ளன. உதாரணமாகத் தமிழ் பண்பாட்டு உடையான பெண்கள் சேலை அணிதல், ஆண்கள் வேட்டி அணிதல் என்பன ஆலயங்களில் வலியுறுத்தப்படுகின்றன. இதனை ஆலயங்களுக்குச் சென்று பார்க்கும்போது உணரலாம். இந்துப் பெண் திருமணத்தின் பின் மாங்கல்லியம் அணிதல், தலையில் பூ சூடுதல், நெற்றியில் குங்குமம் இடுதல் அவர்களின் பண்பாடு. இதனை இந்துப் பெண்கள் தொடர்ந்து பேணவேண்டும் என்பதற்காக கோயில்களில் குங்குமம், பூ என்பன வழங்கப்படுகின்றது.

சமுதாயத்திற்கு முற்பிறப்பு, பிற்பிறப்பு பற்றிக் கூறும் ஒரே இடம் ஆலயம். முற்பிறப்பு, பிற்பிறப்பு என்பதை எடுத்துக் கூறுவதன் ஊடாகப் பாவ புண்ணியங்கள் எவை என்பதை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டிப் புண்ணிய வழியைச் செய்யத்தூண்டும் இடமாக ஆலயம் உள்ளது. பாவ புண்ணியச் செயற்பாடுகளை முத்தி என்ற செயற்பாட்டினூடாக இந்து மதம் வலியுறுத்துகின்றது. இதனைத் திருவாசகம் "புல்லாகி பூடாகி புழுவாய்....." என்ற பாடல் அடியினூடாகக் கூறியுள்ளது.

கோவில்கள் சமுதாய முன்னேற்றத்திற்காக பல பங்களிப்பினைச் செய்து வருகின்றன. அந்தவகையில் கோவில்கள் தாகசாந்தி நிலையமாக மிளிர்கின்றன. அண்மைக்காலத்தில் இடம் பெற்ற சுனாமி பேரனர்த்தத்திற்குப் பின் மக்களில் சிலர் தங்களது குடிநீரை ஆலயங்களில் பெற்றுவருகின்றனர். இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தினரும் பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. மனிதர்கள் மட்டுமன்றி ஏனைய உயிர்ப் பிராணிகளும் தமது தாகத்தை தீர்க்கும் தண்ணீரைக் கோவில்களில் பெறுகின்றன. சில கோவில்களில் நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்துப் பெண்களின் குடும்பவாழ்விற்கு வித்திட்ட இடமாக கோயில்கள் உள்ளன. தமிழர்களின் திருமண நடைமுறையில் பெண்பார்க்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. பெண்பார்க்கும் நிகழ்வு பெரும்பாலும் வீடுகளில் இடம்பெறுவது வழமை. இன்றைய காலவேகத்திற்கு ஏற்ப சிலசம்பிரதாயங்கள் மாற்றமடைந்து கொண்டு செல்வதை நாம் அறிவோம். அந்தவகையில் இன்று சில இந்துப் பெண்ணை பெண்பார்க்கும் நிகழ்வு ஆலயங்களில் இடம் பெறுகின்றது.

"அதர்மம் அழியும் தர்மம் வெல்லும்" என்பதை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டிச் சமுதாயத்தை நல்வழிப் படுத்தும் இடமாகக் கோவில் உள்ளது. அவதார சிற்பங்கள் சிறந்த எடுத்துக்காட்டு. உதாரணமாக கோயில்களில் வருடம் தோறும் இடம்பெறும் சூரசங்கார நிகழ்வு, தீபாவளி திருநாள் பூசை என்பன மக்களை ஞாபகப்படுத்தும் செயற்பாடாக கொள்ளலாம்.

இறைவன் படைப்பில் ஆணும் பெண்ணும் சரிநிகர் என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்திச் சமூகம் சீர் குலைவதைத் தடுத்து நிறுத்திய இடமாக ஆலயத்தைக் கொள்ளலாம். ஆண்,

பெண் தெய்வ ஆலயங்கள் எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். ஆண்கள் ஆண் பெண் தெய்வ ஆலயங்களுக்கும், பெண்கள் ஆண், பெண் தெய்வ ஆலயங்களுக்கும் சென்று வழிபடுவதை நாம் அறிவோம். இவை மட்டுமன்றி ஆண்களுக்கு இருக்கும் அதே உரிமை பெண்களுக்கும் உண்டு என்பதை சமுதாயத்திற்கு உணர்த்துவதற்காக சிவன் அர்த்தநாரீஸ்வரர் வடிவம், சிவலிங்க வடிவம் என்பவற்றை எடுத்தார். இதனை ஞாபகப்படுத்துவதற்காக ஆலயங்களில் இவ்வடிவ விக்கிரகங்கள், சிற்பங்கள் அமைந்து காணப்படுகின்றன.

முரண்பாடுகளைத் தீர்க்கும் நீதிமன்றங்கள், கோவில்கள் சமுதாயத்தில் இருந்து வருகின்றன. இதற்குத் தக்க உதாரணமாக ஆலயங்களில் கற்பூரம் கைகளில் வைத்தும், கற்பூரத்தினை அடித்து சத்தியம் பண்ணும் மரபு காணப்படுகின்றது. அங்கு நீதி தேவதையாக மக்கள் குடிகொண்டிருக்கும் இறைவனைக் கருதுகின்றனர். இம்மரபு நகரங்களில் மிகவும் குறைவு. எனினும் கிராமங்களில் அதிகரித்து வருகின்றன.

சமுதாயத்தில் கலைகள் வளர்வதற்குத் துணை செய்த நுண் கலைக் களஞ்சியமாகக் கோயில்கள் பெரும்பங்காற்றியுள்ளன. ஆரம்ப காலங்களில் சுண்ணாம்பு, மரம் என்பவற்றால் கோவில் அமைக்கும் மரபு காணப்பட்டது. கல்வெட்டு ஒன்றில் "எந்த மரத்தை வெட்டிப் பயன்படுத்தி விண்ணும் மண்ணும் சேர்ந்தமையும் இவ்வுலகத்தை நிறுவியுள்ளார்கள்" எனக் கூறப்பட்டுப் பல்லவர் காலத்தில் (கி. பி. 575 – கி. பி. 890) அமைக்கப்பட்ட மகேந்திரவர்மன் பாணியிலான அமைந்த மலை சரிவு, பாறைகளில் அமைக்கப்பட்டுள்ளன. பல்லவர் கால கட்டிடக்கலை பற்றி மண்டகப்பட்டு கல்வெட்டு வாசகம் ஒன்றில் "செங்கல், சுண்ணாம்பு, உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகளுக்கு விசித்திரமாக (மகேந்திரவர்மன்) அமைத்த கோயில் எனக்கூறப்பட்டுள்ளது. மகேந்திரவர்மன் தனது தந்தையான நரசிம்மன் பாணியில் ஆலயம் அமைத்தான் என வரலாறுகள் கூறுகின்றன. இக்கட்டடக் கலை குப்தர் காலத்திலும் வளர்ச்சியடைந்தது. இன்று இந்து ஆலயங்களில் கட்டடக்கலையின் உயரிய வளர்ச்சியைக் காணலாம். இக் கட்டடக்கலையின் வளர்ச்சி காரணமாக இன்று எமது பிரதேசத்தில் பல கட்டடக் கலைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றனர். இன்று அமைக்கப்படும் மனைகளும் பல கட்டட நுணுக்கங்கள் நிறைந்தவையாக காணப்படுவதை அவதானிக்கலாம்.

கோயில்கள் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பங்கு கொள்ளும் அடுத்த கலையாக இசைக்கலையைக் கூறலாம். இசையால் வசமாகாத இதயம் எது என்று கூறும் அளவிற்கு இசை வளர்ச்சி அமைந்து காணப்படுகின்றது. இசைக்கு வடிவம் கொடுத்த இடமாகக் கோயிலைக் கூறலாம், சோழர் ஆட்சிக் காலத்தில் (கி. பி 850 – கி. பி. 1259) நம்பியாண்டார் நம்பியின் திருமுறைகள், நாத முனிகளின் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் முதலியவற்றுக்கு முதலில் பண்ணிசை வகுக்கப்பட்டு ஆலயங் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. சாம வேதத்தில் இசை பற்றிய கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இறைவடிவத்துடன் இணைந்ததாக ஆலயங்களில் காணப்படும் உடுக்கு, புல்லாங்குழல், வீணை, ... இசைக் கலையின் மகத்துவத்தை சமூகத்திற்கு உணர்த்துகின்றன. இன்று ஆலயங்களில் சுப்பிரபாதம், சிவபுராணம், பஞ்சபுராணம், திருவெம்பாவை, கந்தசஷ்டி கவசம்..... போன்ற பக்திப்பரவசம் ஊட்டும் பாடல்கள் இசைக் கலையைச் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுகின்றன. பூசை வேளையில் ஒலிக்கப்படும் மணி ஓசை இசைக் கலையின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இவை தவிர கோயில்களில் இடம்பெறும் இசைநிகழ்ச்சிகள் இசைக் கலையை சமூகத்தில் வளர்ப்பதற்கு உறுதுணையாக உள்ளன. எமது பிரதேசத்தில் பாடசாலையில் இசையை ஒரு பாடமாகக் கற்பதற்கு, இசைத்துறை சார்ந்த கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படுவதற்கும் இந்து ஆலயங்களே வழிவகுத்தன.

கோயில்களில் வளர்க்கப்படும் மற்றுமொரு கலையாக நாட்டியத்தைக் கூறலாம். சிவனின் நடராசர் வடிவம் நாட்டியக் கலைக்கு உதாரணமாக கூறப்படுகின்றது. இவைதவிர ரம்பை, ஊர்வசி போன்ற நடன மங்கையர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆலயங்களில் வருடம் தோறும் இடம்பெறும் திருவிழாக் காலங்களில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. அவற்றின் ஒரு பிரிவாக நடனக்கலை இடம்பெறுகின்றது. அநேகமாக ஆலயங்களில் நிரந்தரக் கலையரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நடன அரங்கேற்றத்தின் போது நடனத்தின் சின்னமாக நடராஜர் வடிவம் இருந்து வருவது சிறப்பம்சம். எமது சமூகத்தில் காலம் தோறும் பல நாட்டிய மாமணிகள் உருவாகி வருகின்றன. இவைதவிர எமது சமூகத்தில் அமைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம், இசைநடன கல்லூரிகள் என்பனவற்றை கூறலாம். உதாரணமாக மட்டக்களப்பு, கல்லடியில் அமைந்துள்ள இசை நடனக் கல்லூரி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இவை தவிர சிற்பக்கலையின் வளர்ச்சிக்கும் ஆலயங்கள் வித்திட்டுள்ளன. ஆலயங்களில் அமைக்கப்பட்டுள்ள அவதார சிற்பங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. சிற்பக்கலையின் உயரிய வளர்ச்சியை தஞ்சைப் பெருங்கோயிலில் காணலாம். சிற்பக்கலையின் வளர்ச்சி எமது பிரதேசத்தில் காணலாம். பல சிற்பந்தர்கள் காலத்திற்கு காலம் தோன்றி கலையின் கலைஆர்வத்தைவெளிக்காட்டி வருகின்றனர். சிற்பக்கலையின் வளர்ச்சி காரணமாகத் தச்சுக் கலை, ஆபரணக் கலை, புகைப்படக்கலை என்பன வளர்வதற்கு ஆலயங்கள் வித்திட்டுள்ளன.

கோயில்கள் சமுதாய முன்னேற்றத்திற்கான பாதுகாப்பு அரணாக இருந்துவருகின்றது. மக்களின் பொதுச் சொத்து கோயில் என்பதால் மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள கோயிலை நாடிச் சென்றிருக்கின்றனர். உதாரணமாக இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் மக்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள இந்து ஆலயங்களில் சென்று தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவைமட்டுமன்றி அண்மையில் இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தின்போது மக்கள் பாதுகாப்புத் தேடி ஆலயங்களில் சென்று தங்கிப் பின் முகாம்களை நோக்கி நகர்ந்து சென்றனர். இது கண் கூடாகக் கண்ட உண்மை.

மேற்கூறிய விடயங்களை நோக்குகின்ற விடத்து ஆலயங்கள் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் சமூக நிறுவனம். இச்சமூக நிறுவனத்தின் பங்கு சமூகத்தில் என்றும் எப்பொழுதும் அழியாது நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

உசாத்துணை

இந்து நாகரிகம் (பாகம் - 3) க. சொக்கலிங்கம் M.A

இந்து கலாசார கோயில் சிற்பங்கள் பேராசிரியர் சி. பத்மநாதன்

சைவத் திருக்கோயில் கிரிகை நெறி பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
M.A (Ceylon), ph.D (Poona)

இந்து மக்களிடையே மதமாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும்

சி. வ. இரத்தினசிங்கம்
B34-1/1, மாளிகாவத்தை தொடர்மாடி,
கொழும்பு – 10

உலகில் தோன்றிய ஆதி மதங்களுள் இந்து மதமும் ஒன்றென நம்பப்படுகிறது. இம்மதம் எப்பொழுது? யாரால்? எவ்விடத்தில்? ஆரம்பிக்கப்பட்டது என்று யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. தற்போது மக்களால் பின்பற்றப்பட்டு வரும் முக்கியமான, பிரபலமிக்க மதங்களை ஆரம்பித்த கர்த்தாக்கள் யாரென்றும், அவைகள் ஆரம்பித்த இடம், காலம் முதலிய விபரங்களையும் அறியக் கூடியதாக உள்ளன. ஆனால் இந்துமதத்தைப் பொறுத்தவரை இந்த விபரங்களை எந்த ஆய்வாளரும் சரியாகக் கண்டுபிடித்து நிரூபிக்கவில்லை. ஊகங்களும் கற்பனைகளும் நிறைந்த முடிவுகள்தான் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்துமதத்தின் தொன்மை அத்தகையது. இந்து மதமோ அல்லது அதன் சாயலையொத்த ஒரு மதமோ உலகின் பல பாகங்களிலும் ஆதியில் பரந்து விரிந்து மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. கீழைத்தேய மேலைத்தேய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் விளைவாகவும், ஆங்காங்கு வழக்கிலுள்ள மொழிகளில் காணப்படும் இந்து மதத்தோடு தொடர்புடைய சொற்பதங்கள், மற்றும் வேற்று மதங்கள் பரவியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் இந்து கலாசாரத்துக்கு ஒப்பான கலாச்சார சம்பிரதாயங்கள் விரவியிருப்பதையும், கொண்டாடப்படுவதையும் உன்னிப்பாக அவதானித்தால் இந்தக் கூற்றின் உண்மை விளங்கும்.

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்து நாகரிகம் சிந்து வெளிப்பிரதேசத்தில் வளர்ச்சியடைந்து உச்ச நிலையில் இருந்துள்ளது. அதற்கப்பாலும் மத்தியதரைக் கடல் பிரதேசம் வரை பரவியிருந்த அது திடீரென அழிந்து விட்டது. சிந்து நதி தீரத்தில் அமைந்துள்ள ஹரப்பா மற்றும் மொகஞ் சதாரோ ஆகிய இடங்களில் இருக்கும் பழைய நகரங்களை ஆராய்ந்த தொல்லியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் அந்த நகரங்கள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதென்றும் அங்கு வாழ்ந்த மக்கள் திராவிட இனத்தவர்கள் என்றும் அவர்கள் சிவ வணக்கம் செய்தவர்கள் என்றும் அங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி உருவம் பொறித்த முத்திரைகள் மற்றும் சிவலிங்கம், சிவன் உருவங்கள், மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள இலச்சினைகள், ஆபரண வகைகள் ஆகியவற்றைக் கொண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக இந்த முடிவுக்கு வரப்பட்டுள்ளது. அங்கு வாழ்ந்த மிகச் சிறந்த நாகரிகம் படைத்த மக்கள் இல்லாதொழிந்து போயினர். அந்த மக்கள் எப்படி மறைந்தார்கள் என்பது இதுவரை கண்டறியப்படாமல் இன்னும் மர்மமாகவே உள்ளது.

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கட்டுரை.

பேர்சியாவினூடாக இந்திய உப கண்டத்துள் காலடி எடுத்து வைத்த ஆரியர்களுடன் அவர்கள் கலந்திருக்க வேண்டும் அல்லது அவர்களால் விரட்டி அடிக்கப்பட்டு நாட்டின் உட்பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்திருக்க வேண்டும் அல்லது அந்த இனம் முற்று முழுதாக அழிக்கப்பட்டிருக்க வேண்டும். எது எப்படி இருந்த போதும் அங்கு வழக்கிலிருந்த கடவுளர்களை ஆரியர்கள் ஏற்றுக் கொண்டதுடன் அவைகளை முன்னிலைப்படுத்தி வேதங்களும் வரையப்பட்டுள்ளன. இன்று மக்கள் அனுசரிக்கும் இந்து மதத்தின் ஆரம்ப வரலாறு இதுதான் எனக்கொள்ளப்படுகிறது.

செழுமையுடன் திகழ்ந்த சில மதங்களின் போசகர்களான மதகுருமாரும் ஆட்சியாளர்களும் சிற்சில இடங்களில் சிற்சில காலகட்டங்களில் மதங்களின் பெயரால் குடிமக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். அவர்களின் ஆதிக்க வெறியும் கொடுமை களும் அளவுக்குமீறி மக்களை வருத்திய சமயங்களில் பல மகான்கள் தோன்றி வேற்று மதங்களை ஸ்தாபித்து மக்களைத் தமது பக்கம் ஈர்த்து அவர்தம் துயர் துடைத்து வெறியர்களின் கரங்களிலிருந்து அவர்களுக்கு மீட்சி கொடுத்துள்ளனர்.

அப்படி உருவான மதங்கள்தான் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம் போன்ற மதங்களாகும். அவைகள் தோன்றிய காலங்கள்தான் மதமாற்றம் என்ற சர்ச்சையின் ஆரம்ப காலங்க ளென்று கூறலாம். அக்காலங்களில் வேதனைகள் அனுபவித்து வந்த மக்களில் பலர் இயல்பாகவே தங்களைப் புதிய மதங்களுக்கு அர்ப்பணித்துக் கொண்டனர். மதம் மாறுவதற்கு மறுதலித்த மக்களை மதமாற்றஞ் செய்வதற்குப் பலவகையான உத்திகள் பயன்படுத்தப்பட்டன. பணபலம், படைபலம், போதனாபலம் (பிரச்சாரம்) முதலிய பலங்களைப் பிரயோகித்து வலிந்து அவர்களைத் தம்வயப்படுத்தி மதம் மாறச் செய்தனர். மதங்களின் பெயரால் புனித யுத்தமென்ற போர்வையில் நாடுகளை ஆக்கிரமித்து அவற்றைச் சூறையாடியதுடன் அங்கு வாழ்ந்த மக்களையும் கத்தி முனையில் மதமாற்றம் செய்வித்ததுடன் மதம் மாற மறுதலித்தவர்களை ஈவிரக்கமின்றிக் கொன்றும் குவித்தனர். மரக்கிளையோடு தூது அனுப்பி மதமாற்றஞ் செய்த கதையையும் சரித்திரம் கூறும்.

இப்படியான மதமாற்றங்கள் இந்து மதத்தைச் சிறிது சிறிதாக உடைத்து அதனை இந்திய உபகண்டத்துள் முடக்கிவிட்டன. ஒரு காலத்தில் உலகின் பெரும் பிரதேசத்தில் கொடிகட்டிப் பறந்த இந்து மதம் தேய்ந்து தேய்ந்து சிந்துவெளி தொடக்கம் குமரிக்கண்டம் ஈறாக (இலங்கைத் தீவு உட்பட) உள்ள பிரதேசங்களுள் ஒடுங்கி விட்டது.

வர்த்தக நோக்கோடு கிழக்கு நோக்கி வந்த ஐரோப்பியர் களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக் காரர், முகலாயர் ஆகியோர் இந்து தேசத்தின் நாகரிக வளர்ச்சி யையும் செழுமைகளையுங் கண்டு அதிசயித்தனர். ஆசையும் பொறாமையும் காழ்ப்பும் எழ, ஆக்கிரமிப்பு வெறி உந்தித்தள்ள கீழைத்தேய நாடுகளைக் கைப்பற்றினர். அப்படி ஆக்கிரமித்த நாடுகளைச் சூறையாடியதுடன் அங்கு வாழ்ந்துவந்த மக்களையும் தத்தமது மதங்களுக்கு மாற்றத் தொடங்கினர், அவர்களுடைய வலைகளுக்குள் சிக்காதவர்களைச் சாம–தான–பேத–தண்டங்களைப் பிரயோகித்து மதமாற்றஞ் செய்வித்தனர். இவைகள் எல்லாவற்றுக்கும் அகப்படாது, தப்பிப் பிழைத்து எஞ்சியிருந்த மக்களிலிருந்து பெருகிய சந்ததியினரே இன்று உலகெங்கணும் காணப்படுகின்ற 73 கோடி இந்து மக்களாகும். இந்து மக்கள் தொகை உலக சனத்தொகையில் 14 சத விகிதமாகும்.

இந்தியாவில் பௌத்த ஜைன மதங்கள் ஆரம்பித்த உடனேயே பிரசாரம் மூலம் மக்களைத் தம்பக்கம் ஈர்த்துக் கொண்டனர். இலங்கையிலும் பௌத்த மதம் அசோக மன்னன் காலத்தில் புகுத்திப் பரப்பப்பட்டது. அது இலங்கையிலும் வேரூன்றித் தழைத்துவிட்டது. ஆனால் இந்தியாவில் காலூன்றி நிற்க முடியாமல் அருகிவிட்டது. ஜைனமும் பௌத்தமும் தமிழகத்தில் பரவத் தொடங்கிய சமயத்தில் அப்பர், சம்பந்தர் முதலான நாயன்மார்கள் மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகளால் காலூன்ற முடியாமல் போனதுடன் சைவ மதமும் காப்பாற்றப் பட்டுவிட்டது.

பெரிய புராணத்தில் நாயன்மார்கள் காலத்தில் அம்மதங்கள் எவ்வளவு தூரம் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவிச் சைவத்தை அழித்தொழிக்க முற்பட்டன என்ற விபரங்களையும், அந்த மதங்களைத் தென்னகத்திலிருந்து விரட்டியடித்து சைவ மக்களை அந்த மாயா லோத்திலிருந்து மீட்க நாயன்மார்கள் மேற்கொண்ட வாதப்பிரதிவாதங்கள் பற்றியும், அப்பர் சுவாமிகளும் சம்பந்தர் சுவாமிகளும் அந்த முயற்சியில் அனுபவித்த துன்ப துயரங்கள் மற்றும் அவர்கள் அடைந்த அவமானங்கள் பற்றியும், அவற்றுக்கு எதிராக அவர்கள் காட்டிய உறுதி, ஆன்ம பலம் பற்றியும் விபரமாக விரித்துக் கூறப்பட்டுள்ளன. அவர்கள் காண்பித்த மனோ பலமும் உறுதியும் இறையருளும் சேர்ந்து அவர்களுக்கெதிராகக் கிளம்பிய மலைபோன்ற எதிர் நடவடிக்கைகளை உடைத்தெறிந்து சைவத்தைக் காத்து அதை மீண்டும் தமிழகத்தில் நிலைநிறுத்தச் செய்து ஜைனத்தையும் பௌத்தத்தையும் தென்னகத்திலிருந்து முற்று முழுதாக அகற்றியும் விட்டதெனலாம். இதனால் தமிழ் நாடும், இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களும் காப்பாற்றப்பட்டன என்பது சரித்திரங் கூறும் உண்மை.

அதன் பின்னர் போர்த்துக்கேயரின் வருகையோடு இந்தியாவுக்குள்ளும் இலங்கைக்குள்ளும் கிறிஸ்தவ மதமும் காலடியெடுத்து வைத்துவிட்டது.

(போர்த்துக்கேயரின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்தியாவுக்குள் கிறிஸ்தவம் புகுந்துவிட்டது எனவும் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.52ஆம் ஆண்டில் இந்தியாவின் மேற்குக் கரையில் வந்திறங்கிய சென் தோமஸ் அடிகளார் என்பவர் கிறிஸ்தவமதபோதனைகளைச் செய்து மக்களை மதமாற்றம் செய்வித்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.)

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இந்தியாவிலும் இலங்கை யிலும் கால்பதித்த பின்னர் பல இந்து ஆலயங்களை இடித்துச் சிதைத்துத் தரை மட்டமாக்கியது மட்டுமல்லாமல் அந்த இடங்களிலேயே கிறிஸ்தவ தேவாலயங்களையும் கட்டி எழுப்பினர். மீதமிருந்த கட்டிட இடிபாட்டுப் பொருட்களைக் கொண்டு தங்களதும் தங்களது படை பட்டாங்களினதும் பாதுகாப்பிற்காகக் கோட்டை கொத்தளங்களையும் கட்டிக் கொண்டனர். இந்து மக்கள் தத்தமது மத அனுட்டானங்களை அனுட்டிப்பதற்குக் கூடத் தடை போடப்பட்டது, சைவமதக் கிரிகைகளை நிறைவேற்றிய அர்ச்சகர்கள்; மற்றும் விபூதி, சந்தனம், குங்குமம், உருத்திராக்கம், நாமச் சுண்ணம் (திருமண்) முதலிய இந்துமதச் சின்னங்களைத் தரித்தவர்கள் மட்டுமல்லாது, வாழை இலையில் உண்பவர்கள்

கூடத் தண்டிக்கப்பட்டனர். இப்படியான கொடுந் தண்டங்கள் மற்றும் வன்முறைகளைப் பிரயோகித்து மதமாற்றஞ் செய்தனர். அவர்களது கொடிய தண்டனைகளுக்கு அஞ்சிய பலர் தாமாகவே முன்வந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் வேறு வகையான மார்க்கத்தைக் கடைப்பிடித்து மதம் மாற்றும் கைங்கரியத்தை நிறைவேற்றினர். 'ஆங்கிலத்தை' ஆட்சி மொழி ஆக்கியதோடு அம்மொழியைக் கற்பிக்கவென்று கிறிஸ்தவப் பாடசாலைகளையும் ஸ்தாபித்தனர். அவ்விடங்களில் கல்வி கற்பிக்கக் கிறிஸ்தவ போதனா ஆசிரியர்களைத் தங்கள் நாட்டிலிருந்து இறக்குமதி பண்ணினர். மேலும் அங்கு கல்வி பயில்வதற்குக் கிறிஸ்தவர்களுக்கே முன்னுரிமையும் சலுகைகளும் வழங்கப்பட்டன. அப்படிக் கல்வி கற்றவர்களிலும் கிறிஸ்தவர் களுக்கு மட்டுமே அரச உத்தியோகங்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன. இவைகளைத் தாமும் அனுபவிக்க வேண்டு மென்று எழுந்த ஆவலில் எத்தனையோ பரம்பரைச் சைவர்கள், ஏன்! பிராமணர்கள் கூடத் தாமாகவே முன்வந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்டனர். அவர்தம் சந்ததியினர் இன்று பைபிளும் கையுமாகக் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு போய்வருவதைக் காணலாம். மதமாற்றஞ் செய்வதற்கு ஆங்கிலேயர்கள் கத்தியைத் தீட்டாமல் புத்தியைத் தீட்டித் தங்கள் நோக்கத்தைச் சாதுரியமாகச் சாதித்துக் கொண்டனர்.

ஆங்கிலேயர் காலத்தில் நலிவடைந்த சைவ மதத்தையும் தமிழ் மொழியையும் காக்கவென்ற இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட மகான்கள் பலருளர். அவர்களுள் ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், அரவிந்தர், ரமண மகரிஷி, இராமலிங்க சுவாமிகள், சுப்ரமணிய பாரதியார், ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் போன்ற பல ஞானியர்கள் தோன்றிப் பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் சைவத்துக்குப் புத்துயிர் கொடுத்தார்கள் என்றால் அதுவே உண்மை. அழிக்கப்பட்ட புராதன ஆலயங்கள் இருந்த பல இடங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. நகரங்கள் கிராமங்கள் தோறும் புதிதாக ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இராம கிருஷ்ண மிஷன், விவேகானந்த சபை, இந்து மாமன்றம் போன்ற சைவமகா சபைகள் ஆரம்பிக்கப்பட்டுச் சைவப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவுக்கு மதம் மாற்றும் நடவடிக்கைகளை ஒரு கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. சுதந்திரத்திற்குப் பின் பல்வந்த மதமாற்ற நடவடிக்கைகள் ஓரளவுக்கு கட்டுப் பாட்டிற்குள் வந்துவிட்டது எனலாம்.

என்றாலும் மதமாற்றம் என்பது சரித்திரத்தோடு முற்றுப் பெற்றதாகக் கொள்ள முடியாது. இன்றும் அது நாசுக்கான முறையில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் இந்துக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் கூட மதம் மாற்றுங் கைங்கரியம் கனகச்சிதமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

இன்றெல்லாம் மத மாற்றத்திற்குப் பலவந்தமோ வன்முறைகளோ பிரயோகப் படுத்தப்படுவதில்லை. அதற்குப் பதிலாகப் பணம், பிரசாரம், சேவை போன்ற பலங்கள் பலமாகப் பிரயோகிக்கப்படுகின்றன. செல்வச் செழிப்புள்ள மேற்கத்தைய நாடுகளில் இதற்கென்றே பல அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நிதி சேகரித்து நொய்ந்த இடம் பார்த்து பணமென்ற பாணத்தை ஏவிவிடுகின்றனர். அது காற்றுக் கூடப் புக முடியாத இடங்களுக்குள் எல்லாம் புகுந்து விளையாடி விடுகின்றது. பிரச்சார நூல்கள் சஞ்சிகைகளைக் கவர்ச்சிகரமாகப் பல வர்ணங்களில், பல மொழிகளில் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கின்றனர். வீடுவீடாகச் சென்று நயமாகப் பேசி வார்த்தை ஜாலங்களால் இந்துக்களைக் கவர்ந்து தம்வசம் இழுத்துக் கொள்கின்றனர். ஏழ்மைப்பட்ட இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே தங்கள் பணமெனும் பாணத்தை ஏவி விடுகின்றனர். அத்தோடு மட்டுமல்லாது, அவர்களுக்குத் தேவையான சரீர உதவிகள், உபகரண உதவிகளை, மருத்துவ மட்டத்திலும் மக்களைக் கவரும் வகையில் செய்து கொடுக் கின்றனர். இந்துப் பெரு மக்களிடம் இருந்தோ; அரசாங்கங் களிடம் இருந்தோ; பொது ஸ்தாபனங்களிடம் இருந்தோ உதவிகள் எதுவும் கிடைக்கப் பெறாத தீரா நோயாளிகள், ஆதரவற்ற அனாதைகள், அபலைப் பெண்கள், அனாதைச் சிறுவர்கள், அனாதரவுற்ற கைம்பெண்கள், வறுமையின் பிடியில் சிக்கி அல்லல் உறுபவர்கள், கல்வி வசதியற்றவர்கள், தீண்டத் தகாத சாதியினர் போன்றவர்களை இனங்கண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கின்றனர். சமூக நலன்புரி நிலையங்களை ஸ்தாபித்து, ஆதரவற்ற அவர்களை அரவணைத்து வாழ்க்கையில் அவர்களுக்கு நம்பிக்கையையும் பிடிப்பையும் ஏற்படுத்தி விடுகின்றனர். நிர்க்கதியாக வாழ்க்கையே பெரும் சுமையென்ற நிலையில் உழன்று கொண்டிருந்த மக்களுக்குப் புது வாழ்வு கிடைத்ததும் நிழல் தருவாக வருபவர்களைத் தெய்வங்களைப் போலப் போற்றுகின்றனர். அவர்கள் காட்டும் பாதையிலும் பின்சென்று விடுகின்றனர். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

இந்தியாவில் கல்கத்தா நகரின் சேரிப்பகுதிகளில் வாழ்ந்த பரம ஏழைகளையும், எவராலும் கவனிக்கப்படாமல் தெருவோரங் களில் இறப்பின் விளிம்பிலிருந்த தொழு நோயாளர்கள், புற்று நோயாளர்கள் போன்ற தீராத வியாதிக்காரர்களையும், ஒன்று சேர்த்துக் காப்பகங்களில் வைத்து வைத்திய சேவை, உணவு, உடை, உறையுள், கல்வி போன்றவற்றை வழங்கினார் ஒரு மேல் நாட்டு அம்மையார். இரக்க சிந்தையுள்ள அவர்தான் யூக்கோஸ் லாவியாவில் பிறந்து, துறவு பூண்டு இந்திய உபகண்டத்தை நாடி வந்து ஏழை எளியவர்களுக்குச் சேவையாற்றி அமரத்துவமடைந்த அன்னை திரேசா அம்மையாராவார். அவர் மேற்கு நாடுகளிலிருந்து மருந்து வகைகள், ஆடைவகைகள், உணவுப் பண்டங்கள், கட்டிடப் பொருட்கள் முதலியவற்றையும் சேவையாற்றுவதற்குப் பயிற்சி பெற்ற சேவக, சேவகிகளையும் வரவழைத்துக் காப்பகங்கள் அமைத்து ஆதரவுக்கு ஏங்கித் தவித்த மக்களுக்கு மனங் கோணாது சேவையாற்றினார். அவரது தூய சேவையைப் பாராட்டி இந்திய அரசே அவருக்கு 1971ஆம் ஆண்டுக்கான நேரு சமாதான விருதை வழங்கியது. அன்னை திரேசாவால் அரவணைத்து ஆதரிக்கப்பட்டுப் புது வாழ்வையும்; வாழ்க்கையில் நம்பிக்கையையும் கண்ட மக்கள் இயல்பாகவே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்துவிட்டனர்.

(அன்னை திரேசா ஆற்றிய சேவைகள் மட்டும்தான் சகலருடைய கண்களுக்கும் பெரிதாகத் தோற்றம் அளிக்கின்றதே அல்லாது அவரது சேவைகளின் காரணமாக இந்து மதத்திற்கு ஏற்பட்ட

ஊறுகளையிட்டு எவரும் வருத்தந் தெரிவித்ததாகவே தெரிய வில்லை.)

(2)

இன்றைய காலகட்டத்தில் இந்துக்களை மதமாற்றஞ் செய்விக்கிறார்கள் என்று பிற மதத்தவர்கள் மீது மட்டுமே முற்று முழுதாகப் பழியைப் போட்டுவிட முடியாது. இவ்வகையான சமூகச் சீர்கேடுகளுக்கு இந்துச் சமூகமும் ஒருவகையில் காரணியாக உள்ளது என்ற உண்மையை யாரும் சிந்தித்துப் பார்ப்பதுமில்லை அவற்றை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகள் எதையாவது முன்னெடுப்பதும்இல்லை.

பிற மதங்களில் இருப்பது போன்ற இறுக்கமான கட்டுப் பாடுகள் இந்து மதத்தில் இல்லை! இந்துமதம் ஒரு சுதந்திரமான மதம். யாரும் இந்து மதத்தைத் தழுவிக் கொள்ளலாம், தமது இஷ்டம் போல் மதத்தை விட்டு விலகியும் போகலாம். நாத்திகமும் பேசலாம், பிற மதமொன்றில் சேர்ந்து கொள்ளலாம், கோயிலுக்கு ஒழுங்காகப் போகலாம் போகாமலும் இருக்கலாம், இந்து சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கலாம், கடைப்பிடிக்காமலும் விடலாம். தவறுபவர்களைத் தட்டிக் கேட்க யாராலும் முடியாது. அதற்கான விதிகளோ தடைகளோ இந்துமதத்தில் இல்லை.

இஸ்லாமியன் கிரமமாகப் பள்ளிக்குத் தொழுகைக்குப் போகத் தவறுவதை அவதானித்தால், அதற்கென்றே அமைக்கப்பட்டுள்ள 'ஜமாத்' என்னும் கட்டமைப்பினர் உடனே அப்படித் தவறுபவர் களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களுடன் கலந்து பேசி அவர்கள் எதிர்நோக்கும் கஷ்ட நஷ்டங்களை அவர்களிடமிருந்து அறிந்து அவற்றை நிவர்த்திப்பதற்கான உபாயங்களை அவர் களுக்குப் போதிப்பதுடன் அவர்களுக்கு வேண்டிய அனுசரணை களையும் செய்து கொடுத்து மீண்டும் அவர்களை இஸ்லாமிய ஒழுக்கத்தை ஏற்று வாழ வகை செய்து கொடுப்பர். அதற்கான ஏற்பாடுகளும் கட்டுப்பாடுகளும் அந்த மதத்தில் நிறைய உள்ளன. அதுபோன்றே கிறிஸ்தவ மதத்திலும் உண்டு. ஆனால் இந்து மதத்தில் அப்படியான ஏற்பாடுகள் எதுவுமில்லை என்பது ஒரு குறைபாடே.

அதுமட்டுமல்ல எமது இந்து மதத்தை எவர் வேண்டு மானாலும் எப்படி வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம். அதற்கும் தடைகள் எதுவுமில்லை, தட்டிக் கேட்பவர்களுமில்லை. ஆனால் பிற மதங்களை யாரும் விமர்சிக்கவோ தாழ்த்திப் பேசவோ எழுதவோ முடியாது. அப்படி யாரும் செய்ய முற்பட்டால் சல்மான் ருஸ்டி என்பவர் படும் பாட்டை அனுபவிக்க வேண்டி ஏற்படும். மதத்தின் கொள்கைகளுக்கு எதிரான கருத்துக்களையும் எவரும் கூறமுடியாது. அப்படி யாரும் எதிர்க் கருத்துக்களை முன்வைத்தால், 'சூரியனைச் சுற்றிப் பூமி சுழல்கிறது' என்ற உண்மைத் தத்துவத்தைக் கண்டறிந்து வெளியிட்ட "கலிலியோ கலிலி" என்ற இத்தாலிய அறிஞருக்கு ஏற்பட்ட கதிதான் அவர்களுக்கும் ஏற்படும். இதுபோன்ற கட்டுப்பாடுகள் எதுவும் இந்து மதத்தில் இல்லை. திராவிட கழகங்கள் சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைக்கிறோம் என்று கடந்த சுமார் ஐம்பது ஆண்டுகளாக இந்து மதத்தை இழிவு படுத்தும் வகையில் பேசிப் பிரசாரம் செய்து வருகின்றன. அவர்களுக்கு எதிராக யாராவது போர்க்கொடி தூக்கினார்களா? ஏதோ ஒரு சிலர் மறுதலித்து அறிக்கைகளை வெளியிட்டதோடு போதுமென்று வாழா இருந்துவிட்டனர். கற்ற அறிஞர்கள், பக்திமான்கள் இந்த விடயத்தில் அதிகம் மௌனஞ் சாதித்து விட்டனர். அதுவும் ஒருவகையில் இந்து மதத்திற்குப் பலமாக ஊறுகளை விளைவித்ததை யாரும் மறுப்பதற்கில்லை.

இந்துக்களிடையே காணப்படும் கெட்டியான சாதிக் கட்டமைப்பும் அதனால் தாழ் குலத்தவர் அனுபவித்த சமூகப் புறக்கணிப்பு, தீண்டாமை போன்ற கொடுமைகளும் அவர்களில் ஒரு சிலரைச் சிந்திக்கச் செய்து, சாதிக் கட்டுப்பாடுகள் அற்ற பிற மதங்களைச் சாரச் செய்தது. சாதிப் பிசாசின் கொடும்பிடி இக்காலத்தில் சற்றே தணிந்திருந்தாலும் கலப்புத் திருமணம் செய்வதையோ, சாதிமான்களோடு சமபந்தி சமபோசனஞ் செய்வதையோ இந்துச் சமூகம் விரும்புவதுமில்லை, அங்கீகரிப்பது மில்லை. இந்து மதத்தவர் மத்தியிலுள்ள சாதிக் கட்டமைப்பும் மதமாற்றத்திற்கு ஓர் உந்து காரணியென்றால் அதை மறுப்பதற்கில்லை.

வறுமையும் கல்வி அறிவின்மையும் இந்துக்களிடையே மத மாற்றங்கள் ஏற்படுவதற்கு இன்னுமொரு முக்கிய காரணியாக உள்ளன. குறிப்பாக மலையகத்தில் தோட்டங்களில் வேலை செய்யும் இந்து மக்கள், தங்கள் மதம் பற்றிய பூரண அறிவின்மை யாலும், மதமாற்றிகளின் பசப்பு வார்த்தைகளில் மயங்கியும், வாரி வழங்கப்படும் பணத்தைக் கண்டும் மதிமயங்கியும் சுலபமாக மதமாற்றிகளின் பொறிகளில் சிக்கி வேற்று மதங்களுக்கு மாறிவிடுகின்றனர்.

வேற்று மதங்களில் இருப்பவை போன்று, மதஞ் சார்ந்த சமூக முன்னேற்றக் கட்டமைப்புக்கள் இந்து மதத்தைப் பொறுத்தவரை மிக அரிதிலும் அரிதாகவே காணப்படுகின்றன. மதம் சம்பந்தமான வேதாந்த சித்தாந்த ஆன்மீகப் போதனைகளைச் சரியானபடி நிறைவேற்றும் எமது மதம் சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைவதிலோ சீர்திருத்தங்களைச் செய்வதிலோ மிகவும் பின் தங்கியுள்ளது. இவ்விடயத்தில் புத்திஜீவிகளோ, தனவந்தர்களோ சமூக சேவகர்களோ போற்றும்படியான செயல் எதனையும் உருப்படியாகச் செய்ததில்லை.

புதிது புதிதாகக் கோயில்களைக் கட்டுவதற்கும், அவற்றுக்கு குடமுழுக்குகள் செய்வதற்கும், பெரிய எடுப்பில் ஆடம்பரமாகத் திருவிழாக்கள், அபிஷேகங்கள் போன்றவற்றைச் செய்வதற்கும், அன்ன தானங்கள் வழங்குவதற்கும், சமயச் சொற்பொழிவு களையும் மற்றும் நாடக நடன இசைக் கச்சேரிகளை ஏற்பாடு செய்வதற்கும், சமய நூல்களையும் சஞ்சிகைகளையும் அழகுற அச்சிட்டு வெளியிடுவதற்கும் பணத்தை வாரி வாரி இறைப் பார்கள். இவற்றுக்காகச் செலவிடப்படும் கோடிக்கணக்கான பணத்தில் பத்து சத விகிதமேனும் சமுதாய நலனுக்காகப் பயன் படுத்தப் படுகிறதோவென்பது சந்தேகமே. தனவந்தர்கள் இப்படியான வைபவங்களுக்கு வழங்கும் ஆதரவும் காண்பிக்கும் உற்சாகமும் சமூக நலனுக்காக காண்பிக்கிறார்களோ என்றால் இல்லையென்றே சொல்லத் தோன்றும். ஒருசில நிறுவனங்கள் தமது அற்ப வளங்களைக் கொண்டு நிர்க்கதியான பெண்கள் பிள்ளைகளுக்கு ஆதரவளித்து வருகின்றன. அவை இந்துச் சமூகத்துக்குப் போதுமானதாகத் தோன்றவில்லை.

உதாரணத்திற்கு; இராமகிருஷ்ண மிஷன், சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம், தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்கை அம்பாள் தேவஸ்தான மகளிர் இல்லம், திருமலை அன்பு இல்லம் மற்றும் இவைபோன்ற ஒரு சில இந்து அமைப்புகள் கதியற்ற பெண்கள், சிறார்களுக்கு

அபயமளித்து உணவு, உடை, உறையுள், கல்வி போன்ற பேருதவிகளைச் செய்துவருவது உண்மைதான். மட்டுப்படுத்தப்பட்ட குறைந்த நிதி வசதியோடு நிறைந்த சேவையாற்றும் இந்த நிறுவனங்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இருந்தும் ஒரு குறுகிய வட்டத்துள் சேவையாற்றும் இவற்றின் சேவைகள் கதியற்ற பல்லாயிரக்கணக்கான் இந்து மக்களுக்குப் போதுமா?

அன்னை திரேசா ஆற்றிய அதே சேவைகளைச் சேவை மனப்பான்மையுள்ள எவராவது இந்து மகனோ இந்து மகளோ தனித்தோ கூட்டாகச் சேர்ந்தோ நிறுவன ரீதியாகச் செய்திருந்தால் கல்கத்தாவில் மதமாற்றம் ஏற்பட்டிருக்க முடியுமா? இந்துக்கள் ஒன்று சேர்ந்து அந்த அபலை மக்களை அரவணைத்து ஆதரவு வழங்கியிருந்தால் இன்றும் அவர்கள் இந்துக்களாகவே இருந்திருப்பர். மதம் மாற்றிகள் இந்துக்களை மதம் மாற்றுகிறார்களே என்று அலட்டிக் கொள்ளுபவர்கள் முதலில் தங்கள் மதத்தைக் காப்பாற்றுவதற்கு ஆரோக்கியமான செயற்பாடுகளில் முனைய வேண்டியது அவசியம். மதப்பற்றுள்ள இந்துத் தனவந்தர்களின் சிந்தனைகளிலும் செயல்களிலும் பாரிய மாற்று மாற்றங்கள் தாமதமின்றிக் காணப்படவேண்டும். அப்படி ஏற்பட்டு நாம் ஆற்றக்கூடிய சேவைகளின் பயனாக இவ்விடயத்தில் முன்னேற்றங் காணமுடியும் என்பது திண்ணம். ஆயிரங்களை இலட்சங்கள் ஆக்குவதிலும் இலட்சங்களைக் கோடியாக்குவதிலும் கோடியைப் பல கோடி ஆக்குவதிலும் காண்பிக்கும் அக்கறை, திறமை, ஆற்றல் ஆகியவற்றைச் சற்றேனும் தர்ம சிந்தனையுடன் இந்த விடயத்திலும் காண்பித்தால் பல இந்துக்கள் மதம் மாறிச் செல்வதைத் தடுக்கலாமல்லவா? ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து அப்பணங்களை ஏழைப்பட்ட மக்களுக்காகச் செலவு செய்தால் சமூகமும் முன்னேறும், நலிந்த மக்கள் பிற மதங்களை நாடியோடும் செயலும் அற்றுப்போகும். அன்னை திரேசாவைப் போன்று இந்து சமுதாயத்திலும் வள்ளியம்மைகளோ, பார்வதிகளோ, பரமேஸ்வரிகளோ உருவாகி இந்து சமூகத்தில் தமது சேவைகளை மக்களுக்குப் பண்பட்ட உள்ளத் தூய்மையுடன் நல்கி எமது மக்கள் மதம் மாறுவதை ஏன் தடுத்து நிறுத்த முடியாது! இதற்கு நல்ல உள்ளம் படைத்த விசுவாசமான சேவையாளர்கள் முன்வர வேண்டும். அவர்கள் நிறுவன ரீதியாக ஒன்று சேர்ந்து கூட்டாகச் சேவை ஆற்றுவதற்கு ஏதுவான ஸ்தாபனங்களை நிதி வளங்களுடன் ஏற்படுத்திக் கொடுக்க இந்துமத விசுவாசிகளும் செல்வந்தர்களும் முன்வரவேண்டும்.

இலங்கை அரசு மத மாற்றத் தடைச் சட்டம் ஒன்றை உருவாக்கிப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முனைந்தது. அந்தச் செய்தி வெளியான உடனேயே பல தரப்பிலிருந்து எதிர்ப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் கிளம்பின. ஸ்திரமற்ற நிலையிலிருந்த அரசுக்குத் தமது கட்சியின் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன், கட்சிக்குள்ளும் பாராளு மன்றத்தினுள்ளும் எழுந்த எதிர்ப்பு அலைகளைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அப்படிச் சமாளிக்கப் படாதவிடத்து எதிர்ப்பாளர்களின் ஆதரவு இல்லாமல் பெரும் பான்மையை இழந்து ஆட்சியைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடக் கூடுமென்ற அச்சத்தில் அந்தச் சட்டமூலத்தைக் கிடப்பில் போட்டுவிட்டனர். இதில் சுவாரஸ்யமான ஒரு விடயத் தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பௌத்தர்களையோ இந்துக்களையோ தாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் மதமாற்றம் செய்வதில்லை என்று வாய் கூசாமல் கூறிவரும் ஒரு சில மதப் பிரிவினர்கள் தான் மதமாற்றத் தடைச்சட்டம் பற்றிய செய்தி வெளியான உடனேயே "ஆஹா" என்று ஆர்ப்பரித்து ஆர்ப் பாட்டங்கள், ஊர்வலங்கள் செய்து தத்தமது சாயங்களை வெளிக்காட்டி விட்டனர். இந்து மதத்திற்கு ஊறு விளைவித்ததில் முக்கிய பங்கு இஸ்லாத்துக்கும் கிறிஸ்தவத்துக்கும் நாஸ்திகம் பேசும் திராவிட இயக்கங்களுக்கும் உண்டென்பதை யாராலும், எவ்விடத்திலும் மறுக்க முடியாது.

இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் பெற்றபின் நிலைமையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது எனலாம். பலவந்தமாக மதம் மாற்றுவது நின்றுவிட்டது. ஆனால் பணம் எனும் பிசாசு அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது.

இந்து மதத்தைவிட்டு மக்கள் வெளியேறுவதைத் தடுக்க வேண்டுமானால், ஐந்து முக்கிய விடயங்களில் நமது கவனத்தை அதி தீவிரமாகத் திருப்ப வேண்டும்.

1. நலிந்த மக்களை மதமாற்றிகள் நாடுமுன் நாம் முந்திக் கொண்டு அம்மக்களை நாடிப்போய் அவர்களின் குறைநிறை களை அறிந்து அவற்றைக் களைவதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். அவர்களின் முன்னேற்றத் துக்கு வேண்டிய அவசிய தேவைகளை நாம் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இதை நிறைவேற்ற உறுதியானதும், நிதிவளம் உள்ளதுமான ஒரு கட்டமைப்பும் அதில் தொண்டாற்றச் சேவை மனப்பான்மையுள்ள ஊழியர்களும் வேண்டும்.
2. சாதி வேற்றுமையைச் சமூகத்திலிருந்து முற்று முழுதாகவே களைய வேண்டும். தீண்டாமையை முன்னிறுத்தி மதமாற்றங் கள் நடைபெற்றதை நாமறிவோம். இந்தியாவில் 'தலித்' என அழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மக்களைப் பௌத்தர்களாக 'அம்பேத்கார்' என்பவர் மதம் மாற்றிய செய்தியும், இலங்கையின் வடபகுதியிலுள்ள புத்தூர் என்னும் கிராமத்திலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை அரச அனுசரணையுடன் பௌத்தர்களாக மாற்றியதையும் இந்துச் சமூகம் மிக்க எச்சரிக்கையுடன் கவனத்தில் கொண்டு இப்படியான செயல்கள் இனிவருங் காலங்களில் நிகழா வண்ணம் பொறுப்புடன் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்து ஆலயங்களுக்கு மன்னர்கள் காலங்களில் சாசனப்படுத்தப் பட்ட, மற்றும் தனிப்பட்ட அபிமானிகள் எழுதி வைத்த நிலையான சொத்துக்களும், அவற்றின் மூலமான வருவாய் களும், நாளாந்த பூசைகள், அர்ச்சனைகள், திருவிழாக்கள் மற்றும் அபிஷேகங்கள், நன்கொடைகள் மூலமும் உண்டியல்கள் மூலமும் பெரும் பண வருவாய்களும் சேர்கின்றன. அந்த நிதிக் குவியலில் கோயில்களைப் பராமரிப்பதற்கும் அர்ச்சகர் மற்றும் பணியாளர்களின் ஊதியங்கள் வழங்குவதற்கும் செலவுசெய்து மீதமிருக்கும் பணத் தொகைகளுக்கு என்ன நடக்கிறது? அதிகமான ஆலயங்களின் அறங்காவலர்களும், மணியக்காரர்களும் உயர்மட்ட உத்தியோகத்தர்களும் அப்பணங்களைத் தமது சொத்தாக்கிக் கொள்கின்றனர். அந்த நிதியில் ஒரு சிறிதாவது சமூக நலனுக்காகச் செலவிடப் படுகின்றதோ என்றால் இல்லை என்றே கூறலாம். அந்த நிதிகளில் ஒரு

சிறு பகுதியையாவது சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன் படுத்தினாலேயே போதும், கீழ் மட்டத்திலுள்ள இது மக்களுக்குப் பேருதவியாக இருக்கும், அவர்கள் உள்ளங் குளிர வாழ்த்துவார்கள். அதுவும் ஒரு இறை சேவைதான்.

3. மதமாற்றத் தடைச்சட்டம் உடனடியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதுடன் அந்தச் சட்ட மூலத்தைக் கடுமையாக அமுல் படுத்தவும் வேண்டும்.
4. தீவிரமான மதப்பிரசாரத்தை சமூகத்தின் கீழ் மட்டத்தில் செய்யவேண்டும். எமது சிறார்களைப் பிள்ளைப் பருவத்தி லிருந்தே சமய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும். சிறு வயதிலேயே மதப்பற்றைப் பிள்ளைகளுக்கு ஊட்டிவிட வேண்டும். போதிய மத அறிவு இருந்தால் பின்னாட்களில் எவராலும் அவர்களை மதமாற்றம் செய்ய முடியாது. இந்துவாகப் பிறந்த ஒருவன் இந்துவாகவே வாழ்ந்து இந்துவாகவே மடிய வேண்டுமென்ற கொள்கைப் பிடிப்போடு வாழ்வதற்கு மக்களுக்கு வேண்டிய அறிவை ஊட்ட வேண்டும் அறநெறிக் கல்வியைக் கற்பிக்கும் பாடசாலைகளை ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கிராமங் களிலும் அமைத்து முறையாக இயங்கச் செய்வதுடன் அவற்றுக்கு வேண்டிய நிதி வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியது இந்துத் தனவந்தர்களின் கடமையாக இருக்க வேண்டும். *(இந்து மதத்தின் புனிதத் தன்மை பற்றிய பூரண அறிவு இல்லாத மக்களே மத மாற்றக் கும்பல்களின் வலை களில் சிக்கி இரையாகி விடுகின்றனர்.)* இதைக் கருத்தில் கொண்டு நமது மதம் பற்றிய அறிவைச் சிறு பராயத்திலிருந்தே எமது வருங்காலச் சந்ததியினருக்கு ஊட்டிவிட வேண்டும். இது பெற்றாரின் தலையாய கடமையாகும்.
5. இந்து மதத்திற்குக் களங்கம் ஏற்படும் வகையில் பிரசாரஞ் செய்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு அவர்கள் முன்வைக்கும் பிரசாரக் கருத்துக்களுக்கு உரிய காத்திரமான பதில்களையும் விளக்கங் களையும் உடனுக்குடன் கொடுத்துவிட வேண்டும்.

இவைகளை நமது சமூகம் சரிவர நடைமுறைப் படுத்தத் தவறும் பட்சத்தில் இந்து மதத்தை யாராலும் காப்பாற்ற முடியாது. இந்தச் சமூகத்தில் குறைபாடுகள் உள்ளவரை மக்கள் மதம் மாறிச் செல்வதை யாராலும் தடுத்து நிறுத்த இயலாது. அதில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாகவே களைந்துவிட வேண்டும். அப்படித் தவறும் பட்சத்தில் முகலாயர், ஐரோப்பியர் ஆகிய மதமாற்றிகளின் இரும்புக் கரங்களிலிருந்து தப்பிப் பிழைத் திருக்கும் இந்து மதமானது இன்றைய இந்து மக்களின் அசிரத்தை காரணமாக அழிந்து விடுமோவென அஞ்சவேண்டி உள்ளது.

"வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"



விநாயகர் ஷஷ்டி விரதம்

கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்விரதத்தால் கஷ்டங்கள் விலகி மங்கலம் உண்டாகும்.

வெள்ளிக்கிழமை விரதமும் விநாயகருக்குரிய விரத நாளாகும்.

கணபதியை முழுமுதற்கடவுளாக வழிபடுவோர் காணாபத்யர் என்றழைக்கப்படுவர்.

விநாயகரின் ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களைக் குறிக்கிறது.

அங்குசம்	-	அழித்தல்
பாசம்	-	படைத்தல்
மோதகம்	-	அருளல்
எழுத்தாணி	-	காத்தல்
தும்பிக்கை	-	மறைத்தல்

விநாயகரை வணங்க மூன்றுமுறை நெற்றியிலே குட்டிக்கும்பிடுவது வழமை. அறிவைத்தருபவர் ஞானவிநாயகன் எனப்படுவார். தெளிவான அறிவைத்தரவும் இறை ஞானத்தை ஏற்படுத்தவும் குட்டிக் கும்பிடப்படும்.

தோப்புக்கரணம் போட்டு வழிபடுவதும் மிக முக்கியமாகும். "த்வாப்யாம் கர்ண" என்பது தோப்புக் கரணம் என மருவி வழங்கி வருகிறது. இரண்டு காதுகளையும், வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் செய்யும் வணக்கம் தோப்புக் கரணமாகும். இது மூன்றுமுறை செய்யப்பட வேண்டும்.

விநாயகரின் திருமேனிகள் 32 எனவும் 16 எனவும் புராணங்கள் விவரிக்கின்றன.



இந்துமக்களிடையே மதமாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும்

எம். ஸ்ராலின் சிவஞான ஜோதி
டிக்கோயா

அறிமுகம்

மனிதன் தோன்றிய காலத்தொட்டே சமயமும் இருந்து வருகிறது. அதனை மேற்கொள்ளச் சிற்சில வேளைகளில் அவன் தயங்கினாலும் அதில் இருந்து விடுபடுதல் என்பது அவனுக்கு இயலாதகாரியமாகும். ஏனெனில், சமயம் மனிதனது வாழ்வு; அவன் ஆன்மாவுக்கு ஒளி; பாதைக்குத் தீபம். சமயம் வழியாக அவன் அடைய முயலும் உள்பொருளானது, சத்தியத்தின் உயிர்நாடி; வாழ்வின் பேரின்பம்; மனத்தின் ஆனந்தம்; அமைதியின் நித்தியத்தின் பூரணம்; அவ்வுட் பொருள் மனித உள்ளத்தின் ஆழத்தில் உறையும் கருப்பொருளாகவும் எல்லா உயிர்களுடைய வாழ்வின் சாரமாயும் உள்ளது. மனிதன் புறவுலகத்தோடு அன்றாடம் கொள்ளும் தொடர்பிலுங் கூட அவ்வுள் பொருள் கம்பீரமாக உறைவதை அறிகின்றனர். மனிதனுக்குள்ள இந்த உள்பொருள் பற்றிய அறிவை உறுதிப்படுத்தவும், அவனை ஆன்மீக வாழ்வில் முழுமை பெறச் செய்வதும் சமயத்தின் பணியாகும்.

மேலும், சமயமின்றி மனிதன் இல்லை; மனிதன் இன்றிச் சமயம் தழைக்க முடியாது என்னுமளவுக்குச் சமயத்தின் அவசியத்தன்மை சமூக அசைவு நிலைப் போக்குக்கும் அதன் ஊடாட்டத்துக்கும் உறுதுணையாக விளங்குகின்றது.

எனவே, "இந்து மக்களிடையே மதமாற்றமும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளும்" எனும் தலைப்பினூடாக மதமாற்றம் பற்றிய கருத்தாடல்களை ஆராயும் ஆழமான முயற்சியாகவே இக்கட்டுரையானது முனைப்புற்று விரியும் எனவும் நம்புகின்றேன். மேலும் இவ்வாய்வின் இறுதியில் மதமாற்றத்துக் கான காரணங்களையும், அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகை களையும், மதமாற்றத்தினால் இன்றைய இந்துக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் இனம் காண முடியும் என்ற கருது கோளையும் முன்வைக்கின்றேன்.

இக்கட்டுரையின் விளக்கம் – இலகு கருதி பின்வரும் கூறுகளாக விடயப் பரப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

1. தலைப்பு விளக்கம்

(அ) இந்து மக்கள் என்போர் யார்?

(ஆ) மதமாற்றம் என்றால் என்ன?

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்தப்பட்ட ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற கட்டுரை.

2. மதமாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள்

(அ) சாதியத்தின் இறுக்கம்
(ஆ) வர்க்க முரண்பாடுகள்
(இ) பொருளாதாரச் சிக்கல்கள்
(ஈ) மரபுகளும், மதத்தரகர்களும், மதவாதிகளும் மாறாமை
(உ) மூடநம்பிக்கையில் மூழ்கிய இந்துக்கள்
(ஊ) மதச்சுதந்திரமும் மனிதச் சுதந்திரமும் இல்லாமை
(எ) மக்களிடம் சமயத்தத்துவம்சார் அறிவின்மை
(ஏ) பெண்கள் ஒதுக்கப்படுதல்
(ஐ) அரசசார்பற்ற நிறுவனங்களும் – முன்பள்ளியும்

3. மதம் மாறிய / மாற்றப்பட்ட இந்துக்களிடையே ஏற்பட்டுள்ள / ஏற்படும் மாறுதல்கள்

(அ) வாழ்க்கையில் நிலையற்றதன்மை
(ஆ) மாறிய மதம்மீதான பற்றும், முரண்பாடுகளும் வளர்தல்
(இ) கலாசார – நாகரிக – பண்பாட்டில் ஊடாட்டச் சிதைவுகள்

4. மதமாற்றத்தினைத் தவிர்ப்பதற்கான வழி முறைகள்

(அ) சகல இந்துக்களுக்கும் சரிநிகர் சந்தர்ப்பம் வழங்குதல்
(ஆ) மக்கள் நலன்களில் பங்கு கொள்ளல் வேண்டும்
(இ) சமயம்சார் தத்துவ – போதனைகளை வெளிக்கொணர்தல்
(ஈ) நிறுவன ரீதியான வழிகாட்டல்களை நடைமுறைபடுத்தல்
(உ) கிராம மக்களுக்கான விசேட செயற்றிட்டம்
(ஊ) சட்டரீதியான நடவடிக்கைகள்
(எ) மாற்று மதத் திருமணங்களைத் தடுத்தல்
(ஏ) இந்துமதம் தொடர்பான ஒளி, ஒலி நாடா / இறுவட்டுக்களை உருவாக்கி விநியோகித்தல்
(ஐ) அறநெறிக்கல்வியின் அவசியமும், அவசரமும்
(ஒ) இந்து தர்மத்தை நவீன சமயமாக வளர்த்தல்

5. முடிவுரை

1. தலைப்பு விளக்கம்

[அ] இந்து மக்கள் என்போர் யார்?

"ஒவ்வொரு தேசிய இனத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் சமயம் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்திய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பது அதனுடைய சமயச் சிந்தனைகளாகும். தொல் பழங்காலம் முதற்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்து வரும் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணங்களும் சிந்தனைகளும் ஒன்றாக இணைந்ததன் விளைவாகத் தோன்றியதே இன்றைய இந்துசமயம் எனில் அது மிகையாகாது"[1]

ஆரிய, திராவிடப் பண்பாட்டின் கூறுகள் பல முறைகளில் கலந்து ஒரு புதிய கலை, நாகரிகத்தை உருவாக்கின. அதைப் போன்ற சமயத் துறையிலும் புதியதொரு கலவைச் சமயம் உருவாக்கப்பட்டது. அச்சமயத்தை இன்று 'இந்துசமயம்' எனவும் அதனைப் பின்பற்றுபவர்கள் இந்துக்கள் என்றும் உலகம் போற்றுகின்றது.

மேலும் உலகச் சமயங்களுள் மிகப் பழமையான இந்து மதமானது இந்தியாவில் தோன்றிற்று. இது இன்றும் இந்தியாவின் பெரும் பகுதி மக்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பெயருக்குப் பூகோள முக்கியத்துவம் உண்டு. இமயத்தின் வடமேற்குக் கணவாய்கள் வழியே இந்தியாவின் மேல் பெர்சியர்கள் படையெடுத்த போது இந்து நதி பாயும் நிலப்பரப்புக்குச் "சிந்து" என்று அவர்கள் பெயரிட்டனர். எனவே, இந்து என்ற சொல் "சிந்து" என்பதன் மருவல் ஆகும். "இந்துமதம்" என்னும் தொடருக்கு இந்து நதி பாயும் நிலப்பரப்பில் வாழும் மக்களின் மதம்"[2] என்னும் பொருள் வழங்கப்பட்டது. இந்தப்பொருள் நெடுங்காலத்துக்கு முன்பே வழக்கொழிந்து போயிற்று. இந்து மதம் இந்திய நாடு முழுவதற்கும் உரியமதம் ஆனதோடு நிற்காமல், மிக்க தொலைவிலும் பரவி, பழம் பேரிந்தியாவின் குடியேற்ற நாடுகளான சாவகம், மலேயா, போர்னியோ என்னும் நாடுகளின் மதமாயும் திகழ்ந்தது. "சனாதன தருமம், வைதீக தருமம்" என்பன இந்து மதத்திற்கு நாம் வழங்கும் பழம் பெயர்களாகும். "சனாதன தருமம்" என்பதற்கு "என்றுமுள்ள சமயம்" என்பது பொருள் இது இந்து சமயத்திற்குத் தோற்றக்கால வரையறை இல்லை என்னும் உண்மையை விளக்குகிறது. உயிர்கள் தோன்றிய காலந்தொட்டே இந்து மதமும் இருந்து வருகிறது.

எனவே மனிதன் இந்த உலகில் இன்பமாய் வாழவும் மேலான பரம்பொருளை உள்ளத்தில் உணர்ந்து உய்வதற்கு வழி காட்டுவதே இந்து சமயம் ஆகும், அதனைப் பின்பற்றுபவர்கள் இந்துக்கள் ஆவர்.

"இந்து என்ற பெயரைத்தாங்கிய யார் துன்பப்பட்டாலும் அத்துன்பம் உங்கள் இதயத்தில் நுழைந்து, உயிர்கள் சொந்த மகனின் துன்பத்தைப் போல உங்களைத் துடிக்கச் செய்யுமானால் அப்போது மட்டுமே நீங்கள் இந்துக்கள் ஆவிர்கள்"[3] என்னும் கருத்தையும் இவ்விடத்தின் பொருத்தப்பாடு கருதி முன் வைக்கின்றேன். எனவே மேற்குறித்த கருது கோள்களுக்கும், கருத்தியல்களுக்கும் – பொருத்தப்பாடுடையவர்களே இந்துக்கள்.

[ஆ] மதமாற்றம் என்றால் என்ன?

மனிதனாகப் பிறக்கின்ற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஏதாவது ஒரு சமயப் பின்னணி காணப்படுகின்றது. இப்பின்னணியானது பிள்ளையின் பெற்றோர்கள் ஊடாகவே நிர்ணயிக்கப்படுகின்றது. இதுவே அப்பிள்ளையின் வாழ்நாள் மதமாகவும் (தாய்மதம்) ஏகமனதாகவும் அனைவராலும் (சட்டப்படியும்) அங்கீகரிக்கப்படுகின்றது. இது பௌத்தமாகவோ, இந்துவாகவோ, கிறிஸ்தவமாகவோ, இஸ்லாமாகவோ இருக்கலாம். மாற்று மதத்தைக் கொண்ட பெற்றோர்களாயின் அங்கே ஆணாதிக்கத் தன்மை கடைபிடித்து ஆணினது (கணவன்) தாய்மதமே பிள்ளையின் வழிமதமாக, கடைபிடிக்கப்படும்.

இவ்வாறாக பிறப்பால் ஒரு மதத்தை வரித்துக் கொண்ட ஒருவர் பிற்காலத்தில் பல தேவைகளை வேண்டித் தன்னுடைய தாய் – பிறப்பு மதத்தினை கைவிட்டு இடையில் ஏதாவதொரு மதத்துக்கு தன்னை வெளிப்படையாக மட்டும் அர்ப்பணித்து வாழுவதே மதமாற்றம் என்னும் செயற்பாடாகும். இவ்விடத்தில் ஒருவர் மதம் மாறுவதனையும் / மாற்றப்படுவதனையும் மனங்கொள்ளத்தக்கது.

2. மதமாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள்

[அ] சாதியத்தின் இறுக்கம்

சாதி இருக்கிறதென்பது ஒரு யதார்த்தம். முதலாளித்துவ வளர்ச்சி சாதியின் வடிவத்தினை மாற்றியிருக்கிறதேயல்லாமல் அதனை ஒழித்து விடவில்லை. சாதியம் என்பது என்ன?

மார்க்சிஸ்டுகளுக்கும் ஏனையோருக்கும் இடையில் சாதியின் தோற்றம், சமூகக்கட்டு மானத்தில் பிறவற்றுடன் அதற்குண்டான உறவு, பொருளாதாரத்திற்கும் சாதிக்குமிடையிலான உறவு ஆகியவை பற்றிக் கடுமையான கருத்து வேறுபாடுகள் உள்ள போதிலும் சாதி என்பது உண்மையில் என்ன என்பது பற்றிக் கிட்டத்தட்ட ஒத்த கருத்து அவர்களிடையே காணப்படுகின்றது. அக்கருத்தின்படி "சாதி என்பது ஒரு அமைப்பு முறை, இந்த அமைப்பில் ஒரு ஆண் / பெண் எந்த ஒரு குறிப்பிட்ட குழுவில் பிறந்தனரோ, அக்குழுவின் மூலமாக அவர்களுக்குச் சமூகப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. சமூகப் படிமமுறையில் ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கென ஒத்துக் கொள்ளப்பட்ட குறிப்பான தொழில் / தொழில்கள் உள்ளன. அக்குழுவிற்குள் மட்டுமே ஒருவன் திருமணம் செய்து கொள்ள முடியும் [4]

இக்குழுவானது கட்டுப்பாடான ஒரு குழுவாகும். தன் உறுப்பினர்களுக்கென வரையறுக்கப்பட்ட நடத்தை விதிகளைக் கொண்டது. தன் உறுப்பினர் மீது ஆதிக்கம் செலுத்தவல்லது; குழு அதிகாரத்தை மீறுபவர்களை, குழுவிலிருந்து நீக்குவதற்குரிய உரிமைகளைப் பெற்றது. இப்படியொரு குழுவில் பிறந்த ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் அக்குழுவின் உறுப்பினர் ஆவான்.

இவ்வாறான சாதியத் தோற்றமானது; ஆரியப் படையெடுப் பாளர்கள் சுதேசி மக்களை அடிமைப்படுத்திய விதத்தின் மூலமாகச் சாதிகள் தோன்றின என்பர்;[5] எனினும் இந்தச் சித்தாந்தம் இனவாதத்தை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. உற்பத்தியின் உறவு / உடைமை உறவுகள் ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு ஒருசில மேல் சாதிக்காரர்களின் (முக்கியமாக பிராமணர்கள்) ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டத்திலேயே கவனம் செலுத்துகின்றனர். இவ்விதம் மேல்சாதிக்காரர்களின் ஆதிக்கத்தை ஒழித்துவிட்டால் (பார்ப்பனியர் அல்லாதோரால்) அடிப்படைப் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்ற கற்பனையில் நம்பிக்கையை வளர்க்கின்றனார்.

இன்றுமட்டுமல்ல அன்றும் உயர்சாதியினர் எனத் தமக்குத் தாமே முத்திரை குத்திக்கொண்டு செய்த அட்டூழியங்களையும் அடக்கு முறைகளையும் சுரண்டலையும் பொறுக்காத தாழ்த்தப்பட்ட அப்பாவி மக்களே அதிக அளவில் பிறமதங்களைத் தழுவுகின்றனர்[6]

சில வருடங்களாக இலட்சோபலட்சம் தாழ்த்தப்பட்ட இந்துக்கள் இஸ்லாமியர்களாகவும், பௌத்தர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மதம் மாறிக் கொண்டிருக்கின்றனர், அவர்கள் மதமாற்றத்தினைக் கண்டு உயர்சாதி இந்துக்கள் ஒப்பாரி வைப்பதனாலோ தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்று குவிப்பதனாலோ இந்து மதத்தின் குறைபாடுகளையும், அதனோடு தொடர்புடைய மதமாற்றத்தினையும் தீர்க்கமுடியாது. இந்து மதத்தின் அழிவைத் தடுக்கவும் முடியாது; இவ்வளவிற்கும் காரணமாக அமைந்த பிறப்பினடிப்படையிலான இத்தகைய சாதிவேறுபாடுகள் இந்து மதத்திலிருந்தே தோற்றுவிக்கப்பட்டது என்பது தெரிந்ததே!

முன்பு குறிப்பிட்டது போல இந்துமதத்தில் இடைக்காலத்திற் புகுத்தப்பட்ட பொய்மைகளும் புழுகுகளும் புராணத்தின் குப்பைகளும் இத்தகைய அநாகரிகமான காட்டுமிராண்டித்தன மான சாதிக்கொடுமையைப் பிறப்பித்துக் கட்டிக்காத்து வந்தன. மனு என்னும் மூடனால் வகுக்கப்பட்டதும் தர்மசாஸ்திரம் எனும் அழகிய பெயரால் அமைத்ததுதான் சாதித்திட்டம். இன்றும் சாதிவெறியர்களின் தாரகமந்திரமாக இடம்பெறுகின்றது.[7]

இன்று பிராமணரல்லாதோர் இந்து சமயக்கிரியைகளில் பங்கேற்கமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதனால் தான் இந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் / இந்துக்களால் (பிராமணர்கள்) ஒதுக்கப்பட்டவர்கள் ஏனைய சமயங்களில் சரண் புகுந்து சரிசமமாகச் சமய நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.

இந்துமத சாதித்துவம் பற்றி மகாத்மாகாந்தி கூறும் போது "தீண்டாமை இந்து சமயத்தின் ஒரு பகுதியாக இருக்கமுடியுமாயின், அது அதன் அழுகிப்போன பகுதியாகவோ அல்லது சதைச் சுரப்பாகவோதான் இருக்க வேண்டும். ஏராளமான பிரிவுகளும் சாதிகளும் இருப்பதற்கான நியாயமும் எனக்கு விளங்கவில்லை"[8] என்கின்றார்.

இன்றும் கிராமப்புறங்களில் இந்து சாதிய இறுக்கத்தினால் விஷேடமாக மதத்தினால் மக்கள் மிக மோசமாக அடக்கப்பட்டு வாழும்நிலை இருந்து வருகிறது! இவர்கள் எல்லாம் சரிசமமாக வாழ்வளிக்கும் சமயங்களை நோக்கிப் படையெனத்திரண்டு செல்கின்றனர்.

இந்துமதத்தில் தீண்டாதவர் என்றும், கீழோர் என்றும் புறக்கணிக்கப்பட்ட நலிவுற்ற சமூகத்தினர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி, கல்வியும் மருத்துவ உதவியும் பெற்றுச் சமூகத்தில் உயர்வடைந்தனர். கிறிஸ்தவ சமயத்தினர் ஏற்படுத்திய பள்ளிகளும் மருத்துவ மனைகளும் ஏதிலர் இல்லங்களும் எண்ணற்றனவாகும்"[9]

சாதிபற்றிய பெரியாரின் கருத்தாழம் – பிரகடனம் சிந்திக்கத்தக்கது. தலைப்பின் பொருத்தம் கருதி முன்வைக்கின்றேன். "நாம் சாதி வித்தியாசத்தை ஒழிக்க முற்படுகையில் மதமென்பதும் ஒழிந்து போகுமென்றால் அந்த மதம் நமக்கு வேண்டாம். இது இப்போதே அழிந்து போகட்டும். மதத்தைப் பொசுக்கும் போது வேதமும் பொசுங்கிப் போவதாக இருந்தால் அந்த வேதம் என்பதும் இப்போதே வெந்துபோகட்டும். வேதத்தை ஓட்டும் போது கடவுளும் ஓடிவிடுவாரென்றால் அந்தக் கடவுள் என்பதும் இந்த நிமிசத்திலேயே ஓடிவிடட்டும். அப்போப்பட்ட கடவுள் நமக்கு வேண்டவே வேண்டாம்"[24] என்றார்.

எனவே தொகுத்துக் கூர்ந்து நோக்குகின்ற பொழுது மதமாற்றத்துக்குப் பிரதான காரணமாக இந்து மதத்தில் இருந்து வந்த / வருகின்ற கருத்து நிலையாக சாதிய நெருக்கம் காணப் படுகின்றது. எனவே சாதியத்தைச் சுட்டெரித்து இந்துக்கள் மதம் மாறுவதைத் தவிர்ப்போம்.

இப்படி ; சுயமரியாதைச் சூரியன்

செம்பிழம்பாய் சீறியெழுந்தது
அது சாதியைச் சுட்டெரிக்கும்
முரட்டு வெறுப்பின் கறுத்தச் சுவர்களின் மேல்
பேரிடியாய் விழு
உடைத்து நொறுக்கு
நாசம் செய்.
.....
சாதிய விலங்குகளை உடைத்தெறிய...![10]

[ஆ] வர்க்க முரண்பாடுகள்

வர்க்கமும் சாதித்துவமும் ஒருங்கே வைத்து நோக்கப்பட வேண்டி இருந்தாலும்; இவ்விடய அவசியத்தன்மை கருதி இரண்டையும் வெவ்வேறாகவே நோக்குகின்றேன்.

"வரலாற்று ரீதியில், நிர்ணயிக்கப்பட்ட சமூக உற்பத்தி முறையில் தாங்கள் வகிக்கின்ற இடத்தினாலும், உற்பத்திச் சாதனங்களுடன் தங்களுடைய உறவுகளினாலும் (பெரும்பாலும் சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டு வகுத்துரைக்கப்படுவது) உழைப்பின் சமூக அமைப்பில் தங்களுடைய பாத்திரத்தினாலும் ஆகவே, சமூக செல்வத்தில் தாங்கள் செலவிடுகின்ற முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்ற மக்களின் பெருந் தொகுதிகள் வர்க்கம்" என்கின்றார் வி. கி. லெனின்[11]

முதலாளித்துவத்தில்தான் முதன் முதலில் பொருளாதாரத்தில் அதாவது உற்பத்தி தளத்தில் தெளிவாகவும் வரையறுக்கக் கூடியதாகவும் வர்க்கங்கள் உருவாகின்றன என்பதை மார்க்ஸ் இணைத்துச் சொல்கிறார். இதற்கு மாறாக முதலாளித்துவத்துக்கு முக்கிய சமுதாயங்களில் உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் வர்க்கங்கள் வரையறுக்கப்பட்டன. ஜாதி, மத, அரசியல் மற்றும் ஏனைய மேற்கட்டுமான வடிவங்களோடு இவ்வுற்பத்தி உறவுகள் பின்னிப் பிணைந்திருந்தன. இவ்வாறே முதலாளித்துவத்திற்கு முக்கிய சமுதாயங்களில் வர்க்கங்கள் இருந்து வந்தன.

எனவே முதலாளித்துவத்துக்கு முக்கிய சமுதாயங்களிலும் மதம் எனும் கருத்தமைப்பில் இந்த வர்க்க அமைப்பு வடிவமைக்கப் பட்டிருந்தன எனலாம். உயர்வர்க்கமான (உயர்சாதியினர்) பிராமணர்கள், தாழ் வர்க்கமான (தீண்டத்தகாதவர்கள் – தலித்) மக்களுக்கும் இடையில் மதத்தைத் தரகுப் பொருளாக வைத்து அவர்களை அடக்கி வாழ்ந்த ஒரு வர்க்கமாக கருதப்பட்டனர். இவ்வாறு அடக்கப்பட்ட மக்கள் தமக்கெனவும் தமது இனத்துக்கும் விடுதலை வேண்டிக் கூட்டுப் போராட்டங்களை நடாத்திய போது ஏனைய மதங்கள் தமது வாசற்கதவுகளைத் தயாராகத் திறந்து வைத்திருந்து இவர்களது போராட்டத்துக்கு முடிவுகளைக் கட்டிய போதே மதமாற்றமானது தீவிரமடைந்தது. எனவே இந்து சமயத்தில் காணப்பட்ட வர்க்க வித்தியாசமானது மதமாற்றத்திற் கான பெரும் உதவியாக இருந்து வருகின்றது / வந்திருக்கின்றன என்ற முடிவுக்கு வரலாம்"[12]

இந்த வர்க்க முரண்பாடானது தற்காலத்தில் வளர்ந்து பூதாகரமாக – பூகம்பமாக வெடிக்கின்றது. அதாவது; நகர்ப் புறங்களில் வாழும் முதலாளித்துவ வர்க்கம் கிராமப்புற மக்களை அடக்கியாண்டு அவர்களை ஒதுக்கி வைக்கின்ற ஒரு நிகழ்வாகவே நகர்ப்புறச் சமய விழாக்கள் துணைபுரிகின்றன. இவ்வாறான இந்து மதத் திருவிழாக்களில் முதலாளி வர்க்கத்தினர் தனியாகப் பெரும் திரளாகக் குவிந்திருந்து ஆராதனைகளில் தமது அந்தஸ்துக்கு ஏற்றது போல (கோயிலுக்கு பிந்தி வந்தாலும் முந்தி நிற்பதற்கு வழிவிட வேண்டும்) நடந்து கொள்ளும் முறையானது இந்த கிராமப்புற மக்களது மனங்களில் வெறுப்பினை உண்டு பண்ணுவதுடன் மதமாற்றத்துக்கும் வழியமைக்கின்றதைத் தற்காலத்தில் அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

ஆகவே பார்ப்பனர்கள் மட்டும்தான் வயிறு பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதில்லை. பிற உயர்வர்க்க – ஜாதியினரின் கெடுபிடிகளும் ஏமாற்று வித்தைகளும் சொல்லும் தரமன்று. தமது பணத்தைப் பெருக்குவதற்கும் பணத்திமிரைக் காட்டுவதற்கும் சமூகத்தில் செல்வாக்குப் பெறுவதற்கும் இந்து மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். விளைவு மக்கள் மதமாற்றத்தில் மாய்கின்றார்கள். எனவே இந்துமத வர்க்க முரண்பாடுகளைக் களைந்து பண்புள்ளவர்களாக வாழ்ந்து இந்து மதமாற்றத்தை மாற்றுவோம்!

(இ) பொருளாதாரச் சிக்கல்கள்

பொருளாதாரத்தில் சிக்கல் எனும்போது, ஏன் இந்த மக்கள் சிக்கல்படுத்துகின்றனர் / சிக்கல்பட்டனர் என்று பார்க்குமிடத்து; தொழிற்புரட்சியுடன் முதலாளித்துவம், உலகம் முன்னொருபோதும் கண்டிராத பிரமாண்டமான சாதனைகளை வரலாற்றரங்கில் நிகழ்த்தியது. "சந்தைகள் தொடர்ந்தும் மென்மேலும் வளர்ந்து விரிவடைந்தன. தேவை மென்மேலும் உயர்ந்து சென்றது. பட்டறை தொழில் முறையும் இப்போது போதாதாகியது. இந்நிலையில் தான் நீராவியும் இயந்திரங்களும் தொழிற்பண்டங்களின் உற்பத்தியில் புரட்சியை உண்டாக்கின. பட்டறை தொழில்முறை போய், அதனிடத்தில் பிரமாண்டமான நவீன தொழிற்றுறை எழுந்தது. பட்டறை தொழில் மத்தியதரவர்க்கத்தாரின் இடத்தில் கோடீஸ்வர தொழில் அதிபர்கள், பெரும் பெரும் தொழில்துறைப் பொருளுற்பத்திச் சேனைகளது அதிபதிகள் தற்காலத்து முதலாளிகள் உருவாயினர்"(13) என மார்க்ஸ் இதனை விளக்கினார்.

பிரித்தானியாவின் பிரதான வர்க்க கம்பனியான கிழக்கிந்திய கம்பனி தன் முகவர் ஸ்தாபனங்களை நிறுவிக் கொண்டு தான் பெற்ற பொருட்களுக்கு மிகக் குறைவான பெறுமதிகளை திருப்பிக் கொடுத்தது இதனடிப்படையிலேயே சுரண்டப்பட்ட மக்கள் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கினர். இதன் வழித் தோன்றல்களாகவே வாழ்ந்து வந்த மக்கள் குழுமம் தொடர்ந்தும் பொருளாதார வீழ்ச்சியில் கஷ்டப்பட்டனர்/ படுகின்றனர்.

எனவே இவ்வாறாகச் சுரண்டப்பட்டவர்களுள் அதிகமானோர் இந்துக்களாகவே உள்ளனர். 18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியிலும் கிறிஸ்தவ அதிகாரிகளது தலைமைத்துவத்தின் கீழ் வாழ்ந்த மக்கள் (இந்துக்கள்) வறுமை காரணமாக ஒரு வேலையைத் தேடவேண்டியதாயிற்று. எனவே, வேலை கிடைக்க ஆங்கிலக்கல்வி தேவைப்பட்டது. ஆங்கிலக்கல்வி கற்க வேண்டுமாயின் கிறிஸ்தவராக மதம் மாற வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது. இங்கே வறுமையினூடாக மதமாற்றம் நிகழ்த்தப்பட்ட சம்பவத்தினைக் குறிப்பிடலாம்.

தொடர்ந்து வந்த 20ஆம் 21ஆம் நூற்றாண்டுகளிலும் இந்துக்கள் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக மதம்மாறுவதுடன் மதம் மாற்றப்படுகின்றார்கள். உதாரணமாகக் கிறிஸ்தவ மத ஊழியர்கள் பெருந்தோட்டம், கிராமம் தோறும் சென்று, கல்வியிற் குறைந்த பாமரமக்களை வசியம் பண்ணி உதவியற்றவர்களுக்கு உதவி புரிந்து, பணம், தொழில், நோயாளிக்கு மருந்து உடைகள், கற்றல் உபகரணங்கள் போன்றவற்றைக் கொடுத்து வறிய மக்களை ஏமாற்றித் தமது மதத்துக்கு பலரை சேர்க்கின்ற கவலைக்கிடமான செயற்பாடும் நடைபெறுகின்றது. மேலும் பல இந்துக்கள் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கும், போர்வைகள் மற்றும் வாசனைத்திரவியங் களுக்கும் மயங்கி மதம்மாற்றி வருகின்றனர், இவை உண்மையாக நடக்கும் சம்பவமாகும்.

மேலும் கல்வி கற்கும் பொழுது வறிய பிள்ளைகளுக்கு உதவுவது போல நடித்து, அவர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் செய்து கிறிஸ்தவக் கல்லூரிகளில் சேர்த்து, கற்பித்து பட்டப்படிப்பு வரையும் இழுத்துச் சென்று மதத்தையும் மாற்றி வஞ்சகமான முறைக்காக மதத்தைப் பிரதான கருவியாக பயன்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றனர்.

இங்கே மதமாற்றம் மக்களால் ஆரம்பித்துப் பெரும் தீயாக வடிவெடுத்து வளருவதைக் கண்டு யாரிடம் முறையிடுவது.

(ஈ) மரபுகளும், மதத் தரகர்களும், மதவாதிகளும் மாறாமை

மரபு என்ற சொல், சமுதாய மொழி வழக்கில் மாற்றத்தையும் நவீனத்தையும் மறுக்குமொன்றாகவே மேலாட்டமாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. மரபு வாதம் என்பது வழக்கிலுள்ள மரபை நிலை நிறுத்தவும் சிலவேளை அதற்கும் அப்பாற்சென்று வழக்கொழிந்து போகிற ஒரு மரபையோ வழக்கொழிந்து போனஒரு மரபையோ மீண்டும் அதன் முன்னைய உச்சநிலையில் வைக்கவும் எடுக்கப்படுகின்ற ஒரு முனைப்பைக் குறிக்கிறது.

இதனைப்போன்ற மதத்தரகர்களும், மதவாதிகளும் மரபிலிருந்து மாறாத பழைமை வாதப் போக்குடன் மக்களை ஏமாற்ற எண்ணிப் பிற்போக்குத்தனத்துடன் மூட பழக்க வழக்கங்களை மக்களிடம் எடுத்துச் சென்று இறுதியில் தங்களுடைய முகத்திரை கிழிந்து, தோல்விகண்டு தொலைந்து போகிற யதார்த்தத்தையும் இங்கே மனங்கொள்ளத்தக்கது.

மதங்களின் பேரால் மனிதர் மனிதரை நீண்டகாலமாக அழித்தொழிக்கவும் அடக்கியாளவும் முற்பட்டுள்ளனர். மக்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்கவும் விதி, தெய்வசித்தம் என்றவாறான விளக்கங்களை ஏற்றுச் சமுதாய பிரச்சனை கட்குரிய விடைகளை உரிய இடத்தில் தேடாதவாறு திசை திருப்பும் ஆளும் வர்க்கங்கள் மரபுடன் கூடிய மதத்தைப் பயன்படுத்தியுள்ளன.

இவ்வாறான மரபு வழிவந்த காரணங்களினாலும் நெகிழ்வுப் போக்குகள் இல்லாததாலும் மக்கள் மத்தியில் வெறுப்படைந்து நாத்திகவாதம் பேசும் நாத்திகர்களாகவும் மாறி இறுதியில் நெகிழ்வுப் போக்கினை அதிகளவில் கடைபிடிக்கின்ற மதங்களில் தன்னை இணைத்துக் கொள்கின்றனர்.

மேலும் இந்துசமய ஆளும் வர்க்கங்களும் மதநிறுவனங்களும் சமுதாய மாற்றத்தை மறிக்கும் ஒரு கருவியாக இந்து மதத்தைப் பயன்படுத்தி வந்த சூழ்நிலையிலேயே தாழ்த்தப்பட்ட இயக்கத்திற்கும் இந்துமத நிறுவனங்களுக்குகிடையே முரண்பாடுகள் வளர்ந்து வந்துள்ளன. அது போலவே மத நிறுவனங்களின் ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம், மத நம்பிக்கை வழிபாட்டுச் சுதந்திரம் ஆகிய விஷயங்களில் குறுக்கிடும் துர்ப்பாக்கிய நிலை சமயங்களில் ஏற்பட்டதை மறுப்பதிற்கில்லை. ஆயினும் சூழ்நிலை ஏற்படுவதற்கு மதநிறுவனங்கள் பிற்போக்குவாதிகளுடன் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த நெருக்கமான உறவு ஒரு முக்கியமான காரணம் என்பதனையும் மறுக்கலாகாது.

(உ) மூட நம்பிக்கையில் மூழ்கிவாழுகின்ற இந்துக்கள்

"அச்சமே மூடநம்பிக்கையின் முக்கிய ஊற்றுக்கண்; கொடுமைக்குரிய பிரதான ஆதாரங்களில் ஒன்று. அச்சத்தை வெல்வது என்றால் அது அறிவின் துவக்கம், சத்திய வேட்கை, மதிப்பிற்குரிய வாழ்க்கையை நோக்கிய அருமுயற்சி" என்கின்றார் பேரறிஞர் பெர்ட்ராண்ட் ரஸல்.

இந்துக்களாக வாழுகின்றவர்களுள் கணிசமானவர்கள் மூட நம்பிக்கையில் மூழ்கியிருக்கின்றனர்; காரணம் தமது வாழ்க்கையில் இருக்கின்ற பயமேயாகும்! உதாரணமாகத் தீராத நோய்கள், மகப்பேற்றின்மை, மனக் கஷ்டங்கள் ஏற்படுகின்ற பொழுது, வாழ்க்கை மீதும் தமது உடம்பின் மீதும் ஒருவகைப் பயம் ஏற்படும் போது வேற்று – மாற்றுச் சிந்தனை மீது மனம் நழுவிவிடுகின்றது. எனவே இச்சந்தர்ப்பத்தில் சிறந்த ஊடகமான மதமாற்றத்தில் மூடத்தனத்துடன் முன்னேறுகின்றனர்.

குடும்பப் பிரச்சனைகள், கொடூரமான நோய்கள், பொருளாதாரச் சிக்கல்கள், உடற்குறைகள் போன்றவற்றில் சிக்குண்டு இருக்கின்றவர்கட்குச் சூழுகமான தீர்வினை வேற்று மதத்தினர் செய்கின்றனர். இதனால் ஓரளவான தீர்வும் கிடைக்கின்றது என்பதில் ஆச்சரியமில்லை. உதாரணமாகக் கொடூரமான நோயாளிகள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஒருசில ஆராதனைகளின் பின்; மேலைத்தேய நாடுகளில் இருந்து வைத்தியர்களை வரவழைத்தும் மருத்துவ முகாம்களை அமைத்தும் குறித்த நோயாளிக்கும் மற்றும் ஏனையவர்களுக்கும் இலவசமாகச் சிகிச்சையளித்தும் மருந்துகளையும் வழங்குகின்றனர். எனவே மருத்துவ சிகிச்சைகள் மூலமாகக் குணமானவர்கள் கிறிஸ்துவின் மகிமையாக அதனை ஏற்றுக்கொள்ளும் பிற்போக்குத்தன்மை யுடையவர்களாக வாழ்கின்றனர். இந்த மூடத்தனத்தையறிந்து மேலும் சில இந்துக்களும் கிறிஸ்தவர்களாக மதம் மாறிக் கொள்கின்றனர்.

இவ்வாறு, வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனைக்கும் மறைமுகமான வழியில் உதவிகள் செய்து, அதனைத் தேவனின் மகிமை என்று மக்களிடம் பறை சாற்றுவதும் மதமாற்றத்துக்கான பிரதானமான ஏதுவாக அமைகின்றது.

மேலும், மதம் மாறுகின்றவர்களுக்குத் தேவையான உதவிகளையும் பிரத்தியேகமாகச் செய்கின்றனர்; மதம் மாறினால் மாதச் சம்பளம், உடைகள், உணவுகள், சொகுசான வீடுவாசல் (அருட்சகோதரர்கள் என்போருக்கு புதிய கிறிஸ்தவ தேவாலயத்துடன் கூடிய வீடுவசதிகள், கொழுத்த சம்பளம்...) என்ற அற்பத் தேவை / சொகுசுக்காகவும் இந்துக்கள் மதம் மாறுகின்றனர்.

எனவே பாரதியின் "அக்கினிச் குஞ்சையாவது" இங்கே கொணர்ந்து இந்துக்களின் மூட நம்பிக்கைகளைத் தீயிட்டுக் கொழுத்துவோம்.

"கிழடு தட்டிய குருட்டுச் சிந்தனைகள்
சாம்பலாய்ப் பொசுங்கட்டும்"

என்றும் பெரியாரின் சிந்தனையூடாக இந்து மக்களின் மூடக் கொள்கைகளைச் சாம்பலாகப் பொசுக்கிப் புனிதமானவர்களாக வாழ வழி காட்டுவோம்!

(ஊ) மதச் சுதந்திரமும் மனிதச் சுதந்திரமும் இல்லாமை

மதமும் மத வழிகாட்டல்களும் பகுத்தறிவின் அடிப்படையில் அல்லாது ஒரு பாரம்பரியத்தின் அடிப்படையிலேயே தம்மை நிலை நிறுத்திக் கொள்வன. சமுதாயக் கோட்பாடுகள் சமுதாயத்துக்கும் மனிதனுக்குமிடையிலான உறவை வரையறுக்கின்றன. அதன் மூலம் அவை ஒரு புறம் தனி மனிதச் சுதந்திரம் பற்றிய சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. மறுபுறம் தனிமனித உரிமைகள் தொடர்பான உத்தரவாதங்களையும் முன் வைக்கின்றன.

இந்து மதம் புலனறிவுக்கும் பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட ஒரு ஞானத்தின் பேராலேயே பெருமளவும் தன்னை நியாயப்படுத்திக் கொள்கின்றது. மேலும் இந்துமதம் குறிப்பிட்ட ஒரு சமுதாய எல்லைக்கும் அப்பால் தனது ஆளுமையை வலிறுத்த

முனைகின்றது. இங்கே இந்து மதத்தின் மேலான வெறுப்புணர்வுகள் புத்தி ஜீவிகள் மத்தியில் முனைப்புறுகின்றன.

இந்துசமயம் மனிதரின் புறவாழ்விற்கும் புலனுணர்வு சார்ந்த அறிவுக்கும் அப்பாற்பட்டதெனக் கூறப்படும் கருத்துக்கள் மூலம் தன்னை நியாயப்படுத்திக்கொள்வதால், மதங்களில் ஏற்படும் மாற்றங்கள் சமுதாய மாற்றங்களைவிடக் காலத்தால் மிகவும் பிற்பட்டவையாக அமைகின்றன. பெருவாரியான சூழல்களில் மிகுந்த தயக்கத்துடனும் இவ்வாறான மாற்றங்களின்றி இந்துமத இருப்பு அசாத்தியமாகலாம் என்ற நிர்ப்பந்தத்தின் கீழுமே மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மனித விடுதலை, சமுதாயச் சீர்திருத்தம் போன்ற இலக்கு களுடன் இந்துமதம் பிறந்துள்ளது என்பதை நாம் அறிவோம். இந்து மதத்துக்குள்ளே இருக்கும் அதிகார வர்க்கங்களின் ஆதிக்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகள் இந்து மதத்தின் பேரால் உருவாகி வந்துள்ளன. இங்கே மனிதச் சுதந்திரம் பாதிப்படைவதைக் காணலாம். இவையும் இந்துக்கள் மதம் மாறுவதற்கான காரணமாக அமைகின்றன.

மதத்தை நம்பவும் நம்பாமலிருக்கவும் மனிதர்களுக்கு சுதந்திரம் இருக்க வேண்டும்! மனிதரது தெரிவுகள் மதிக்கப்படல் வேண்டும்.

இந்துமத அடிப்படையிலான சமுதாயங்களிலும் சமுதாயப் பிரிவுகளுக்குள்ளும் மதத்தால் நியாயப்படுத்தப்படும் பல்வேறு விதமான ஒடுக்குதல்கள் உள்ளன. ஆணாதிக்கம் இவற்றுள் முக்கியமான ஒன்று. மதபீடங்களின் வர்க்க நலன்கள் சுரண்டும் வர்க்கங்களைச் சார்ந்து நிற்பதும் உண்மை. ஆயினும் இவ்வாறான சூழல்களில் இச்சமுதாயங்கட்கு வெளியில் இருந்து மாற்றத்தை திணிக்கும் முயற்சிகள் – அவை எவ்வளவுதான் நல்லெண்ணம் உடையனவாய் இருப்பினும் எதிர்மாறான விளைவு களையே தரவல்லன. இது மத மாற்றத்துக்கு வழிகோலும் வன்மையான நிலையாகும்.

மனித சமுதாயங்களிடையே சமத்துவமான உறவும் அதன் அடிப்படையிலான உறவுப்பரிமாறல்களும் இருக்குமாயின் இந்து மதத்தின் அடிப்படையில் நிகழும் அநீதிகட்கெதிரான எழுச்சிகள் அச்சமுதாயத்தின் உள்ளிருந்தே எழுவது இயலுமாகும்.

ஒரு தனி மனிதனுக்கு மதச்சுதந்திரம் மனிதச் சுதந்திரத்தில் ஒரு பகுதி என்றளவில் ஆதரிக்கப்பட வேண்டிய ஒன்றாகியது. மதச்சுதந்திரம் சமுதாய நீதியையும் மனித விடுதலையையும் மறிக்கும் ஒரு கருவியாகும். மதத்தோடல்லாமல் மதத்தின் பேரால் மக்களை பிரிவுபடுத்தவும் ஒடுக்கவும் எடுக்கப்படும் முயற்சி களுடனேயே எங்கும் மோதவேண்டியுள்ளது. தனிமனித உரிமைகள் என்ற பேரில் மற்றவர்களது மத நம்பிக்கைகளைப் புண்படுத்துமாறான செயல்கள் ஊக்குவிக்கப்படக் கூடாதவை. அதே வேளை ஒருவரது மத நம்பிக்கை, இன்னொருவர் அந்நம்பிக்கை உள்ளவராயினும் இல்லாதவராயினும் அவர் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறையாக்கப்படல் மிகவும் தவறானது.

எனவே இந்து மதமானது மனிதனது பிறப்பு முதல் இறக்கும் வரை பல்வேறான சடங்கு, சம்பிரதாய சாத்திரங்கள் மூலமாக ஓர் இறுக்கமான தன்மையைக் கொண்டிருக்கின்ற படியாலும் மதமாற்றம் நிகழுவதற்கு ஏதுவாக அமைகிறது.

(எ) மக்களிடம் சமயத் தத்துவம்சார் அறிவின்மை

இந்து மதத்தைப் பொறுத்தவரையில் இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும் அது ஒரு இரகசியம் பேணுகின்ற மதமாகவே இருந்து வருகின்றது. சமயம்சார் தத்துவங்கள் மற்றும் மந்திர உச்சாடனங்கள் அனைத்தும் குறித்த மொழியில் வழங்கப்பட்டு வருவதுடன் குறித்த ஒரு வர்க்கத்தினரிடம் மட்டுமே பொதிந்து இருப்பதனை அறியலாம்.

அதாவது ஒரு மதம் சார்ந்து இருப்பதற்கு அந்த மதம் தொடர்பான தத்துவங்களில் ஓரளவாவது (முழுமைப் பெற்றிருப்பதே மேலாகும்) பரிச்சயம் இருத்தல் அவசியமாகும். உதாரணமாக 19 ஆம் நூற்றாண்டில் இந்துமதமானது கிறிஸ்தவ மதத்தினர்களால் பலவழிகளில் மதமாற்றத்துக்கு உட்படுத்தியபோது நாவலர் பெருமான் பலவழிகளில் பாடுபட்டார். அதில் முக்கியமானது துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சிறு சஞ்சிகைகள், சொற் பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள் போன்ற இன்னோரன்ன சாதனங்களூடாக இந்து மதத்தின் சிறப்புக்களையும், அருமைகளையும், பெருமைகளையும் மக்கள் மத்தியில் பெரும்பாடுபட்டு விழிப்புணர்வூட்டிய காரணத்தினால் தான் இந்துமதமானது ஓரளவாவது மதமாற்றம் என்னும் செயற்பாட்டில் இருந்து தப்பியது.

எனவே தற்போது எத்தனை இந்துக்கள் வீட்டில் எமது ஸ்ரீமத் பகவத்கீதை உள்ளது என்று பார்த்தால் மிகச் சொற்பமானவர்களிடமே இருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு கிறிஸ்தவரிடத்திலும் ஒரு பைபிள் கட்டாயம் இருப்பதைக் காணலாம். எனவே இவ்வாறான சமயம் சார் தத்துவ முத்துக்கள் இந்து மக்கள் மத்தியில் கிடைப்பது மிக அரிதானதாலும் மதமாற்றத்தினை நாடுகின்றனர் எனலாம்.

மேலும் இந்து மதத்தின் பல மந்திரங்கள் தத்துவங்கள் வேற்று மொழிகளிலேயே நடைமுறையில் இருக்கின்றபடியால் பார்ப்பனர்கள் பூசை செய்யும் போதும் கூட வணக்கஸ்தலங்களில் ஏதோ புரியாத திரைப்படத்தில் விளங்காத மொழிகளைக் (அர்த்தம் புரியாத) கேட்பது போன்ற உணர்வில் அவர்கள் என்ன செய்வார்கள்? இதே நேரம் ஏனைய பல மதங்களில் மக்களுக்கு நன்கு விளங்கும் மொழிகளில் கிரியைகள் நடத்தப்படுவதனால் அடியாருக்கும் ஆண்டவனுக்குமான தொடர்பு பல மடங்கு கூடுவதுடன் அம்மதத்தின்பாலான ஆத்மார்த்த ரீதியிலான ஈடுபாடும் அதிகரிப்பது இயற்கையே. எனவே இவ்வாறான இந்துமதத்தின் குறைபாடுகளும் இந்துக்கள் மதம் மாறுவதற்கான பிரதான காரணமாக முன்வைக்கலாம்.

(ஏ) பெண்கள் ஒதுக்கப்படுதல்

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பணியில் பெண்கள் நடத்த வந்தோம்' என்றவர்களின் நிலை இன்று மட்டும் இந்துமதத்தில் ஏன் தப்பானது? முற்காலத்திலோ இடைக்காலத்தில் சமுதாய நீதியை வகுத்தவர்கள் யார்? பெண்களைப் பழித்தும் ஒதுக்கியும் அவர்கள் உரிமையை மறுத்தும் எழுதியவர்கள் யார்? பெண்களா? மதுவும் மங்கையும் தமது போகப்பொருட்கள் எனக் கருதிய உயர்நிலையிலிருந்து ஆண்கள், பெண் அடிமைத்தனம் வலுப்பெறுவதற்கு வழிவகுத்தனர். இதற்கேற்றவாறு பல இந்து சமயப் பெரியார்களும் பெண்களைத் தாழ்த்தியே இந்து சமய வாழ்வை வகுத்தனர்.

சிவயோகம், வைகுண்டம் பெண்களுக்கு மறுக்கப்பட்டன. மோட்சவாசலின் கதவுகள் பெண்களுக்கு எப்பொழுதும் அடைபட்டே இருந்தன. பெண்கள் உலக பாவிகளின் சின்னங் களாகவும் மாயப்பேய்களாகவும் பிசாசுகளாகவும் வஞ்சகத்தின்

இருப்பிடமாகவும் நம்பத்தகாதவர்களாகவும் கருதப்பட்டனர் / கருதப்படுகின்றனர்.

இன்றும் இந்து சமயத்தின் பல சடங்கு / கிரியைகளில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் கோயில்களுக்கும் பெண்கள் சில நேரங்களில் அனுமதிப்பதில்லை. பூசகர்களாகப் பெண்களை நியமிப்பதும் ஆலய பரிபாலன சபைகளில் பெண்களை அனுமதிப்பதும் மிக மிக அரிதான ஒரு விடயமாகும். எனவே இவ்வாறாகப் பல்வேறான கருத்தியங்களின் அடிப்படையில் பெண்கள் ஒடுக்கப்பட்டனர் / படுகின்றனர்.

எனவே இவ்வாறாக ஒடுக்கப்பட்ட இந்துப் பெண்கள் ஏனைய மதங்களுக்குச் (குறிப்பாக கிறிஸ்தவம்) சென்றதும் அவர்களுக்கு விசேடமான / கௌரவமான பதவிகள் (உதாரணமாக – கன்னியாஸ்திரிகள்) கொடுக்கப்பட்டு முக்கியமான இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றனர்.

இந்து சமயத் திருமணச் சடங்குகளிலும் விதவைப் பெண்கள் ஒரங்கட்டப்படுவதும், அடிமைச் சின்னங்களை சூட்டுவதும் (தாலி, பொட்டு, மிஞ்சி) கணவன் காலைத்தொட்டு வணங்குவதும் போன்றனவும் அடக்குமுறையின் நிலைப்பாடுகளாகும். கணவனே பெண்களுக்குத் தெய்வம் என இந்துமத வேத உபநிடதங்கள் கூறுகின்றன. பெண் தந்தைக்கும், பின் கணவனுக்கும், மூத்த மகனின் பேச்சுக்கும் அடிபணிந்து நடக்க வேண்டும் எனும் உபநிடதக் கருத்துகள் இன்றும் மதப்பிரசாரகர்களால் கூறப்படுகின்றன.

"இந்து மதம் வளர்த்த நடைமுறைகளின்படி, பொட்டு கட்டி, பெண்களைக் கோயிலுக்கு அடிமைப்படுத்தும் முறை அண்மைக் காலம் வரை தமிழகத்தில் நிலவியதை யாவரும் அறிவர். கோயிலுக்கு அடிமையாக நடனமாடிப் பணிசெய்வதோடு நிலப்பிரபுக்கள், பூசாரிகளது காமக் கிழத்திகளாகவும் இவர்கள் வாழ நேரிடுகிறது. இவர்கள் திருமணம் செய்ய முடியாத சாதியராகி விபச்சாரத்தில் ஈடுபடுவதும் அனைவரும் அறிந்ததே இந்து மதக் கோட்பாடுகள், வழக்கங்கள் இவற்றை அனுமதிக்கின்றன"(25)

கணவன் இறந்ததும் மனைவி மொட்டையடித்தல், வெள்ளைச் சேலை உடுத்துதல், குங்குமம், மலர், ஆபரணங்களை ஒதுக்குதல், மதச் சடங்குகளின் போது மறைந்து நிற்றல் ஆகிய தண்டனைகள் இன்றும் இந்து மதத்தால் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

இந்துமதம் ஒரு கருத்தியலாக பெண் அடிமைத்தனத்தைப் பேணி வருகின்றது. எனவே இவ்வாறான விருத்தியடைகின்ற சந்தர்ப்பங்களிலும் மதமாற்றமானது நிகழ்கிறது என்பதனை அறியக் கூடியதாயுள்ளது. எனவே இந்துக்கள் மதம் மாறுவதற்கு இந்துப் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுவதும் காரணமாகிறது.

(ஐ) அரசசார்பற்ற நிறுவனங்களும், முன்பள்ளியும்

அனேகமாக நகர்புறம் தவிர்ந்த ஏனைய கிராமங்கள், பெருந்தோட்டப்பகுதிகள் என்பவற்றில் அரசசார்பற்ற நிறுவனங்கள் (N. G. O) சேவைபுரிகின்றன. இந்நிறுவனங்களின் தலைமைப் பீடங்கள் கிறிஸ்தவரின் ஆதிக்கத்தின் கீழ் இயக்கப்படுகின்றன.

எனவே இவர்களது அனுசரணையில் ஒவ்வொரு பிரதேசத்திலும் முன்பள்ளிகளைத் தொடக்கியுள்ளனர். இவற்றின் ஆசிரியர்களாக அனேகமாகக் கிறிஸ்தவப் பெண்களையே நியமிக்கின்றனர். இங்கே கல்வி கற்பதற்காகச் செல்லுகின்ற இந்துச் சிறார்களுக்கும் கிறிஸ்தவம் – மேற்கத்தேயம் தொடர்பான பண்பாட்டுக் கலாசாரங்களையே முழுதாகப் புகுத்துகின்றனர். ஆகவே சிறுவயதிலேயே இவர்களது சிந்தனையில் பதிகின்ற வேற்று மதத்தின் எண்ணக்கருக்கள் வளர்ச்சியடைந்து பொருத்தமான சந்தர்ப்பங்களில் மதம் மாறுவதை/ மாற்றப்படுவதை அன்றாடம் நாம் கவனித்துக் கொண்டு இருக்கின்றோம்.

மேலும் இந்த நிறுவனங்கள் வறுமைப்பட்ட பிள்ளைகளை இனம் கண்டு, அவர்களுக்குக் கல்வி மற்றும் சகல துறைகளிலும் தேவையான உதவிகளைச் செய்து மதம் மாற்றுகின்ற அநாகரிகமான செயற்பாடுகளிலும் இந்த தன்னார்வ நிறுவனங்கள் (N.G.O) மறைமுகமாக செயற்பட்டுக் கொண்டே வருகின்றன.

மனிதனுடைய மேன்மையான பண்பினைக் குறித்துக் கார்க்கி இவ்வாறு குறிப்பிடுகின்றார். "மனிதன்! எத்தனை கம்பீரமாய் இச்சொல் ஒலிக்கின்றது. எனக்கு மனிதனைவிடச் சிறந்த கருத்துக்கள் இல்லை. மனிதன் மட்டுந்தான் எல்லாப் பொருள்களுக்கும் கருத்துக்களுக்கும் படைப்பாளி, அற்புதம் செய்வோன் அவனே! இவ்வுலகில் அற்புத அழகுப் பொருள்கள் எல்லாம் தனது உழைப்பால் ஆனவை, நான் மனிதனுக்கும் தலை வணங்குகின்றேன். ஏனெனில் மனித அறிவிற்கும் கற்பனைக்கும் அப்பால் நான் இவ்வுலகில் வேறொன்றையும் காணவில்லை."

இவ்வாறு மகோன்னதமான பண்புடைய மனிதன்; மனிதனையே மிக அற்பமாக எண்ணிக் கருத்தியல் ரீதியான மதமாற்றம் என்னும் அநாகரிகச் செயலுக்குள் தள்ளுவதற்கு எண்ணற்ற சேவைகள் புரியும் போது மனிதனின் தன்மையை எவ்வாறு விளக்குவது?

3. மதம் மாறிய / மாற்றப்பட்ட இந்துக்களுக்கிடையே ஏற்பட்டுள்ள / ஏற்படும் மாறுதல்கள்

(அ) வாழ்க்கையில் நிலையற்ற தன்மை

'திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல் அறிவு வேண்டும்' என்றார் யுகக்கவி பாரதி. இங்கே இந்து மதத்திலிருந்து வேற்று மதத்துக்கு மாறியவர்களுக்குத் திண்ணிய நெஞ்சமில்லாமல் நிலையற்ற தடுமாற்றம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

அதாவது; மதம் மாற்றப்பட்டவர்களும், மதம் மாறியவர்களும் காணப்படுகின்றனர். இவர்களிடையே நிலையற்றத் தன்மை காணப்படுகின்றது. தமது தாய்ப் பிறப்பு மதத்தை விட்டுக் கொடுக்க முடியாமலும் அரைவாசியில் வரித்த மதத்தை முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாமலும் 'இரண்டும் கெட்டான்' நிலையில் வாழும் இவர்கள் நிலைத்து ஒரு மதத்தில் வாழமுடியாது தவிக்கின்றனர்.

சிலர் மதம் மாறி இருந்தாலும் இந்து சமயத்தின் பெயரை மட்டும் அப்படியே வைத்துள்ளனர். அல்லது மனைவி / கணவன் இந்துவாக இருப்பர் அல்லது வீட்டில் பெற்றோர் இந்துக்களாக இருப்பர். இவ்வாறான ஒரு சூழ் நிலையில் மதம் மாறிய / மாற்றப் பட்டவர் முழுமையான ஒரு வேற்றுமை மதத்தவராக வாழ்வது சிக்கலானதே ஆகும்.

இதன் பின் இன்னொரு முரண்பாடு எழும் மதம் மாறிய / மாற்றப்பட்ட தம்பதிக்குப் பிறக்கின்ற பிள்ளைக்கு என்ன சமயத்தை புகட்டுவது (இங்கே ஆணாதிக்கம் மேல் எழுவது வேறுவிடயம்) எந்த மதத்தின் பெயர் சூட்டுவது? போன்ற இன்னோரன்ன சிக்கல்களுடன்; இவர்கள் இறக்கும் பட்சத்தில் எம்மத முறைப்படி இறுதிக் கிரியைகள் செய்வது போன்ற சிக்கல்களுக்குள் அகப்பட்டு

நிலையற்ற தன்மையுடையவர்களாக மதம் மாறிய இந்துக்கள் வாழுகின்றனர் / வாழுவார்கள் என்பதிலும் எவ்வித ஐயமுமில்லை.

(ஆ) மாறிய மதம் மீதான பற்றும் முரண்பாடுகளும் வளர்தல்

இந்து மதத்தில் இருந்து மாறியவர்களுக்கு அம்மதம்மீதான அதிதமான பற்றும் பயன்பாடும் காணப்படும். தொடர்ந்து ஆலயங்களுக்குச் செல்வதுடன் அங்கு நிகழும் நிகழ்வுகளில் பங்கேற்றுத் தம்முடைய தனித்துவத்தினைக் காட்டிக் கொள்வது என்பன அவர்களது அதிதீவிரப் போக்கை வெளிக்காட்டுகிறது.

பிற்காலங்களில் ஏனைய இந்துக்களை மதம்மாற்றுகின்ற செயற்பாடுகளில் இவர்களது பங்களிப்பும் அதிகமாகும். "மதம் மாறிச் சென்ற பெரும்பாலானவர்களின் நிலை மிகவும் பரிதாப கரமாக உள்ளது. அற்ப சொற்ப சலுகைகளுக்காக மதம் மாறியவர் களின் வாழ்வு, சில காலத்துக்குச் சுற்றத்தவர் அதிசயிக்கும் வகையில் ஆடம்பரமாகவே இருக்கும்; இலவச பணவுதவியால் மதிமயங்கி மகிழ்ச்சியில் திளைத்திருப்பார்கள். ஆனால் சில மாதங்கள் சென்றதும் மூளைச்சலவை செய்யப்பட்டு அவர்கள் மீது சில நிபந்தனைகள் விதிக்கப்படும்; அதாவது மேலும் சிலரை மதம் மாற்றினால் மட்டுமே பண உதவி தொடர்ந்து கிடைக்கும் என்பதே அந்த நிபந்தனையாக இருக்கும். சில காலம் துள்ளித் திரிந்தவர் களின் கதி அதோகதிதான்; இதனை வெளியே சொல்லமுடியாமலும் மீண்டும் உறவினரிடம் செல்ல முடியாமலும் தவிப்பார்கள்; வெளியுலகத்திற்காக நடிக்க ஆரம்பிப்பார்கள்; வேறு வழியின்றி மதம் மாற்றும் வெறி கொண்டு அலைவார்கள். இது மதம் மாறிய பலர் இரகசியமாகக் கூறிய உண்மைத் தகவல்கள்"[26]

மதம்மாறி அல்லற்பட்டவர்கள் பலர் மீண்டும் தாய் மதத்திற்குத் திரும்ப வந்துள்ளனர். மதம் மாறியவர்களை மீண்டும் இந்துக்களாக மாற்றுவது தொடர்பாக மகாத்மா காந்திக்கும் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கும் இடையில் நடந்த விவாதத்தில் "ஏமாற்றப்பட்டுத் திசைமாறிப் போனவர்கள் திரும்பி வரும் போது யாரைப்பிரிந்து அவர்கள் போனார்களோ – அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பே – எனவே தவறை உணர்ந்து திரும்பி வருபவர்களை வரவேற்பது தானே இயல்பு" என்று கூறிய காந்தி மதம் மாறியவர்கள் மீண்டும் இந்து சமயத்துக்கு வருவதை வாழ்த்தியுள்ளார்.

இவ்வாறு கூர்ந்து நோக்கின் இன்னொன்று நினைவுக்கு வருகின்றது. இந்து ஒருவர் கிறிஸ்தவராக மதம் மாற்றம் பெற்றுச் சென்ற பிறகு தம் சமயத்தைப்பற்றிப் பலவாறு விமர்சிப்பதும், தாம் விரும்பியபடி சொல்லாடல்களைத் தொடுக்கவும் தயங்கமாட்டார்; இதன் விளைவாக வீணே முரண்பாடுகள் முளைத்ததையும் அவதானித்திருக்கின்றோம். இவ்வாறு மதம் மாறி விவாதம் செய்தவர்களின் குடும்பத்தில் யாராவது திடீர் என்று இயற்கையாக இறக்குமிடத்து, இது மதம் மாறியதால் கடவுள் எனக்குத் தந்த தண்டனை என்று மீண்டும் தாய் மதத்துக்கு வருகின்ற நகைப்பான செயற்பாடுகளையும் நாம் அடிக்கடி அறியக் கூடியதாயுள்ளது.

மேலும் வேற்று மதத்தில் இணைந்து கொண்ட இந்துக்கள் அதீதமான தீவிர செயற்பாடுகளையும் காட்டுவது; அம்மதத்தில் ஏற்கனவே ஆரம்பத்திலிருந்து இருக்கின்றவர்களுக்கு ஒரு வெறுப்புத் தன்மையையும் கசப்புத் தன்மையையும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்வதனால் ஒரே மதத்தைச் சார்ந்த இரண்டு குழுக்களுக்கிடையில் முரண்பாடுகள் முற்றிச் சில வேளை கைகலப்பிலும் முடிவுற்று வருவதைக் காணலாம்.

(இ) கலாசார – நாகரிக – பண்பாட்டில் ஊடாட்டச் சிதைவுகள்

"கலாசாரம் என்பது எல்லாத்துறைகளிலும் மனிதனுடைய நடவடிக்கையின் சாதனைகள், அவனுடைய மூளை மற்றும் உடல் உழைப்பின் விளைவுகளின் மொத்தத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே கலாசாரம் என்பது சமூகத்தின் பொருளாதார மற்றும் ஆன்மீக சாதனைகளின் மொத்தம்; அது சமூகத்தின் கலாசார மரபுகளை உள்ளடக்கியிருக்கிறது. மனித இனத்தின் முன்னேற்றத்துக்கு உதவுகிறது"[15]

மனித வளர்ச்சியை இரண்டாகப் பகுக்கலாம். அவற்றினை அகவளர்ச்சி, புறவளர்ச்சி எனலாம்; அதாவது பண்பாடு என்பது அகவளர்ச்சி எனவும், நாகரிகம் என்பது புற வளர்ச்சியையும் குறித்து நிற்கிறது [16]

பண்பாடு குறித்துப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூறுமிடத்து "பண்பாடு என்று குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீக பொருள்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும். பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழினுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்."[27]

எனவே இவ்வாறான வரம்புக்குள் அடக்கப்படுவதே கலாசார – நாகரிக – பண்பாடாகும். இவை ஒவ்வொரு மதத்தவருக்கும், இனத்தவருக்கும் வேறுபடலாம். ஆனால் அவை மதத்துக்கிடையிலும் இனத்துக்கிடையிலும் கலத்தல் கூடாது. இன்றைய காலப்போக்கில் கலாசார, நாகரிக, பண்பாடு என்பவற்றில் சிதைவுகளை ஏற்படுத்தும் காரணிகளுள் மதம் மாறிய / மாற்றப்பட்ட இந்துக்கள் முனைப்படைந்து வருகின்றனர்.

எடுத்துக்காட்டாக இந்துக்களது கலாசாரப் பண்பாடும், கிறிஸ்தவர்களது கலாசாரப் பண்பாடும் முற்றிலும் வேறுபட்டதாகும். ஆனால் ஓர் இந்து கிறிஸ்தவராக மதம் மாறியவுடன், தன்னுடைய இரண்டு மதங்களதும் பண்பாட்டு கலாசார நாகரிகத்தையும் ஒன்றாகப் பிணைத்துக் கேவலமான நிலைக்கு தம்மை ஆட்படுத்திக் கொள்கின்றார். உதாரணமாக, உடைகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், பேச்சு வழக்கு, பெயர் சூட்டுதல், கலையம்சங்கள், அணிகலன்கள், குடும்ப அமைப்பு, உணவு முறைகள், வதிவிட அமைப்பு, சுகாதார மருத்துவ முறைகள், விளையாட்டுக்கள், பொழுது போக்குகள் போன்ற இந்து கிறிஸ்தவத்துக்குள்ளும், கிறிஸ்தவம் இந்துக்குள்ளும் ஊடாட்டமாகி ஒருவித கலப்புத்தன்மை பிறப்பதைக் காணலாம். அதாவது கீழைத்தேய மேலைத்தேய கலை, கலாசார பண்பாட்டு நாகரிகங்கள் கலப்பதனால் ஒரு முழுமையான – தூய்மையான கலாசார பண்பாடு இல்லாது ஒழிக்கப்படுவதனை நாள்தோறும் அவதானிக்கக் கூடியதாக உளது.

4. மதமாற்றத்தினைத் தவிர்ப்பதற்கான வழி முறைகள்-

[அ] சகல இந்துக்களுக்கும் சரிநிகர் சந்தர்ப்பம் வழிவிடுதல்

"ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில் இழிவு கொண்ட மனித ரென்பது இந்தியாவில் இல்லையே மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே!"(17)

என ஆர்ப்பரிக்கின்றார் பாரதியார்.

இந்து மதம் தொடர்ந்து உயிர்த்துடிப்புடன் உலகின் தலை சிறந்த மதங்களுள் ஒன்றாகத் திகழ வேண்டுமானால் அதற்கு ஒரே வழி பாரதி காட்டிய வழியைப் பின்பற்றுவதேயாகும்.

பிறப்பினடிப்படையில் குலப்பெருமை கற்பித்துக் கொண்டு உழைக்கும் மக்களைச் சூத்திரர் எனவும் அவர்களுள்ளும் ஒரு பகுதியினரைத் தாழ்ந்த குலத்தினர் தீண்டத்தகாதவர்கள் எனவும் ஒதுக்கி வைத்துச் சாஸ்திரங்களையும் குலக்கோத்திரங்களையும் வகுத்துக்கொண்டவர்கள் யார்? தாழ்த்தப்பட்டவர்களா? பழைமை பழைமை என வாய்கிழியப் பேசுபவர்கள் பழமைக் கருத்துக்களை யார் யார் எவ்வெப்பொழுது வகுத்துக் கொண்டனர் என்பதைச் சிந்தித்தார்களா?

சமூகத்தில் மேல்நிலையில் வாழ்ந்தவர்கள், தமது விஷேடமான உரிமைகளையும், நலன்களையும், சலுகைகளையும் நிலை நிறுத்துவதற்கு அப்பாவி இந்து மக்களின் உழைப்பைச் சாதியின் பெயராலும் பாவபுண்ணியங்களின் பெயராலும் சுரண்டி கொடுப்பதற்கும், பெண் வர்க்கத்தை அடிமையாக்கித் தமது சுகபோகப் கருவியாக பயன்படுத்துவதற்கும் சமயத்தையும் தெய்வத்தையும் கூடப்பயன்படுத்தத் தவறவில்லை. இந்து மதத்தில் காணப்படுகின்ற இத்தகைய குறைபாடுகளைக் களைந்து மக்களை மக்களாக மதிக்க வேண்டும்.

உழைக்கும் அப்பாவி இந்துமக்கள் மிகவேகமாக விழிப்படைந்து வரும் இன்றைய காலகட்டத்தில் இனிமேலும் அவர்களைச் சாதி, சமயம், தெய்வம், சாத்திரம், வர்க்கம், கோத்திரம் முதலியவற்றின் பெயரால் ஏய்த்துப் பிழைக்கக்கூடாது. இந்துமதத்தில் இவ்வாறாக நிலவிவரும் பெருங்குறைபாடுகளை அடியோடு அழித்துச் சமயவாழ்வையும் உலகியல் வாழ்வையும் செம்மையுற இணைத்து, இவ்வுலக வாழ்க்கையின் முன்னேற்றத் திற்கு ஏற்ற சாதனமாக இந்து மதத்தை மலர்ச்சியடையச் செய்ய வேண்டும். அன்றேல் இந்துமதமே அழிந்துபட வேண்டும் என்ற நெருக்கடியான நிலைக்கு இன்று மதம் தள்ளப்பட்டுள்ளது என்பதையும் அனைவரும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

"மானுடம் என்பது மனிதர்களை மனிதர்களாக மதிப்பது, சுய சிந்தனைத் தேடல், மனித உறவின் மகத்துவத்தில் நம்பிக்கை வைத்தல், அவற்றினூடே மானுடத்தை மேம்படுத்தல் என்பனதான் மானுடத்தின் சாரமாகும். மனிதன் மனிதனாக இருப்பதும் மனிதனாக உயர்வதும் மானுடத்தின் அடிப்படை இயல்புகளாகும்"(18) என்கின்றார் பேராசிரியர் கா. சிவத்தம்பி; எனவே இந்துக்கள் அனைவரும் மானுடர்களாக வாழ வேண்டுமாயின் அனைவரையும் சரிசமமாக நோக்குகின்ற பார்வை வேண்டும்.

எனவே இந்துமதத்தில் தற்போது தலைவிரித்தாடுகின்ற சாதி, வர்க்கம், பொருளாதாரம், மரபுகள், நிறம், பிரதேசம் போன்ற எவ்வாறான வேறுபாடுகளுமின்றி அனைவரும் இந்துக்களே என்ற ஓரணியில் நின்று சகலரும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து இந்துமத மாற்றத்தினை எதிர்கொண்டு செயற்படுவோம்!

[ஆ] மக்கள் நலன்களில் பங்கு கொள்ள வேண்டும்

அனைத்து உயிர்கள் மீதும் கருணையுள்ளங் கொண்ட இந்துக்களாகிய நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம்? அப்பாவிச் சீவன்கள் மீது இரக்கம் கொண்டு ஒரு நேரக்கஞ்சி யாவது காய்ச்சி வார்க்காது அவர்கள் குற்றுயிரும் குலையுயிருமாக ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கையில் நாமோ இருக்கின்ற இலட்சக்கணக்கான கோயில்களும் கோபுரங்களும் போதாதென இலட்சோபலட்சம் ரூபா பணத்தைக் கொட்டி கோயில் களுக்கு ராஜகோபுரங்கள் அமைத்து அழகு பார்க்கின்றோம். அதனால் நாம் மக்களது நலனைப்பற்றி சிந்திக்கின்றோமா?

புதிதாகப் பொற்றேர், வெள்ளித்தேர் முதலியன செய்து வெள்ளோட்டம் விட்டு வேடிக்கை பார்த்து மகிழ்கின்றோம். அபிஷேகம் என்று ஆயிரம் இலட்சத்தை அழிக்கின்றோம். இவை இந்துமதத்தின் அழிவைத்தடுக்குமா? சமய வாழ்வும் சமயப் பணிகளும் மக்கள் வாழ்க்கை நலனோடு இணைந்து செல்ல வேண்டும். சமயத்தையும் வாழ்வையும் தனித்தனியாக நோக்காது சமூகத்தின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் முதன்மையாகக் கொண்டதாகச் சமயமும் வாழ்வும் இரண்டறக் கலந்து நிற்றல் வேண்டும். மக்களது நலனை கருத்திற் கொள்ளாது எந்தச் சமயமும் நீண்டகாலம் உயிர்த் துடிப்புடன் நிலைக்கமாட்டாது. இவற்றைக் கடைபிடித்து மக்கள் நலனுடன் செயற்பட்டு ஒழுகினால் எமது இந்து மதத்தாரை மதமாற்றம் என்னும் போர்வைக்குள் போகாது தடுக்கலாம்.

இந்து மதத்திற் சமூக சேவை முக்கிய பெருமையுடைய தொன்றாகும். என்றாலும் வேதனைக்குரிய நிலையிலேயே உள்ளது. "மக்கள் சேவை மகேசன் சேவை" என வாய் கிழியப் பேசும் நாம் மக்களின் பொருட்டு ஏதாவது உருப்படியான பணியைச் செய்கின்றோமா? சாதிப் பிணக்குகளை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் அழித்தொழிக்க முயல்கிறோமா? மாறாக மனுதர்மத் தையும் புராணங்களையும் காட்டி அழிந்து கொண்டிருக்கும் சாதிக் கொடுமையை அழியவிடாது புத்துயிரூட்ட முயற்சிக்கிறோம். மக்கள் மத்தியில் நிலவும் மூடநம்பிக்கைகளையும் அறியாமை களையும் போலி வேடங்களையும் கண்டித்து அவற்றை அகற்ற முயல்கிறோமா? இவற்றுக்கெல்லாம் விடை கண்டால் மக்கள் நலன்களில் பங்கு கொண்டதாக அர்த்தம் கிடைக்கும். எனவே இவற்றைச் செய்யின் இந்துமதத்தின் மதமாற்றங்களைத் தடுத்துத் தரணிபுகழ் பரப்பும் இந்துமதத்தை மேலும் தளைக்கச் செய்யலாம்.

எனவே மக்களிடம் சென்று, அவர்களது இன்ப – துன்பங் களில் இரண்டறக் கலந்து, முடியுமான சேவைகளைப் புரிந்து எம்மிடையான இடைவெளியை அழித்து இன்பம் காண்போம்!

[இ] சமயம்சார் தத்துவ – போதனைகளை வெளிக் கொணர்தல்

"இந்துக்களைப் பொறுத்தவரையில் தங்களுடைய சமயத்தின் தத்துவங்களில் பரீட்சயமற்றவர்களாகவும் – இந்துமதக் கருத்துக்களை அறியாதவர்களாகவும் வாழ்கின்றனர். காரணம், ஏலவே கூறியது போன்று இந்துமதத்தின் பலவிடயங்கள் இன்றும் இரகசியமாகப் பேணப்படுவதும் மற்றும் மக்களுக்குப் போதிக்காது தங்களுக்குள்ளேயே பூட்டி வைத்துப் பாதுகாக்கும் மூடக்கொள்கையினர் வாழ்வதுமேயாகும்.

ஒவ்வொரு இந்துவுக்கும் (கிறிஸ்தவத்தைப் போன்று) முதலில் ஒரு பகவத்கீதை (இலகுவாக்கிய மொழிநடையுடன்) கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

மேலும் இந்துசமயத்தின் தத்துவங்களை இலகுவான மொழி நடையில் துண்டுபிரசுரங்கள், சிறு சஞ்சிகைகள், சிறு நூல்கள் போன்றவற்றினை மலிவுப்பதிப்புகளில் தாராளமாக அச்சிட்டு மக்கள் மத்தியில் மத ஊழியர்களின் துணையுடன் விநியோகித்து இந்துமதத் தத்துவம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் வேண்டும். தற்போது சங்க நாதம், இந்துவே! எனும் சஞ்சிகைகள் உயர் வர்க்கத்தாரிடம் மட்டுமே அதுவும் ஆங்காங்கே கிடைக்கிறது. இவற்றை விரிவுபடுத்த வேண்டும்.

நாம் இந்துமதத் தத்துவத்தில் பூரணமற்றவர்கள் என்பதற்கு சில விளக்கங்களை வாசகர் நலனுக்காக முன்வைக்கின்றேன்.

அரபு நாட்டில் முகமது என்று ஒருவர் தோன்றி உலகத்தை ரட்சிக்க வருவார் என்று வேதவியாசர் எழுதிய பதினெண் புராணங்களில் ஒன்றான பவிஷ்ய புராணத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டிருப்பதாக ஒரு முஸ்லீம் எழுத்தாளர் சரடு விடுகிறார்.

புராணங்களையும் பகவத்கீதையையும் படித்தவர்கள் என்றும் படிக்கத் தகுதியுடையவர்களென்றும் சொல்லிக் கொண்டு அலைகின்ற பூனூல் போட்ட அர்ச்சகர் கூட்டம் இன்றுவரை முஸ்லிம் மௌலவிக்கோ கிறிஸ்தவ பாதிரிக்கோ பதில் சொல்ல முன்வரவில்லை. பதில் சொல்ல விரும்புகின்றவர்களுக்கு பவிஷ்யபுராணமும் தெரியாது பகவத்கீதையும் தெரியாததே காரணமாகும்.

"ஏன் இன்றும் அர்த்தமுள்ள இந்துமதம் என்ற துண்டுப் பிரசுரம் வெளியிட்டு கிறிஸ்தவ அமைப்பினர் அதில்; வேதத்தையும் சிவனடியாரான பட்டினத்தடிகளும் ஜேசுநாதரைப் புகழ்வதாக புருடா விட்டுக் கொண்டிருக்கின்றனர். கந்தசஷ்டி கவசத்தையும், மகிஷாசுர மர்த்தினி (அயிகிரி நந்தினி) போன்ற வழிபாட்டுப் பாடல்களையும் அதே தாள ராக பல்லவியுடன் புகுத்திப் பொருள் மாற்றம் செய்து மக்களிடம் ஒலிபரப்பி வருகின்றனர். காலப் போக்கில் நமது அசலை அழிக்க முற்படுவர்"(28)

இந்துக்கள் ஒவ்வொருவரும் நம்முடைய வேதங்களையும் ஆன்மீக நூல்களையும் அர்த்தம் புரிந்து, நாம் படிக்கத் தவறி விட்டால் இவற்றால் நமக்கு நன்மை விளையாமல் போவது மட்டுமன்றி எதிரிகள் நம்முடைய ஆன்மீக நூலை வைத்தே நம்மை அழித்துவிட வாய்ப்பிருக்கிறது. நாம் எப்பாடு பட்டாவது வேத சாரமான பகவத்கீதையை மட்டுமாவது படிக்க வேண்டும்"

மற்றும் அறநெறி வகுப்புக்கள் கட்டாயத்தின் பேரில் விரிவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டும். மேலும் சமஸ்கிருத மொழியில் காணப்படுகின்ற அனைத்து மந்திரங் களையும் தமிழ்மொழி ஆக்கம் செய்து சகலருக்கும் கிட்டக் கூடியவகையில் வழி செய்தல் வேண்டும்.

மேலும் ஊடகத்துறைகள் மூலமும் மக்களைக் கவரக்கூடிய வகையில் பல்வேறான சமயம்சார் நிகழ்ச்சிகளைத் தனியான அலைவரிசையின் மூலமாக நடாத்துவதுடன் அவை தொடர்பான மக்களது அபிப்பிராயங்களையும் தெரிந்து செயற்படுத்துதல் வேண்டும்.

இந்து சமயத் தத்துவங்களை மக்கள் மத்தியில் தெளி வாக்குவோம்!

(ஈ) நிறுவன ரீதியான வழிகாட்டல்களை நடை முறைப்படுத்துதல்

சமூகத்திலுள்ள உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதுதான் நிறுவனம் ஆகும். இது நெறிகளையும், விதிமுறைகளையும் கொண்டிருக்கின்ற ஓர் ஒழுங்கமைப்பாகும். எனவே இவ்வாறான ஓர் இந்துமத தலைமைப்பீடம் கொழும்பில் ஸ்தாபித்துத் தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும். கிராமம், தோட்டப்புறம், நகர்ப்புறம் என்பவற்றுள் இருக்கும் இந்துக் கோயில்களை உடனடியாகச் சமய ரீதியில் பதிவு செய்தல் வேண்டும்.

மாவட்ட ரீதியில் கிளை நிறுவனம் / மன்றங்களை உருவாக்கி அந்தந்த இடத்திலுள்ள பெரியார்களை இனங்கண்டு சமய நிகழ்வுகளுக்கு நியமிக்க வேண்டும். மேலும் இந்துமதம் தொடர்பான விசேட தினங்களில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு சமயப் பெரியார்களை அழைப்பித்துச் சமயச் சொற் பொழிவுகளை நடாத்துவதற்கு இந்த நிறுவனங்கள் ஏற்பாடு செய்வித்தல் வேண்டும்.

பிரதி வெள்ளிக்கிழமையும் இந்து வியாபாரத்தானங்கள் அனைத்தும் மாலை நான்கு மணிக்கு மூடப்படல் வேண்டும். அனைத்து இந்துக்களும் ஆலயங்களில் ஒன்று கூடித் தமது சமுதாயத்திலுள்ள பின்தள்ளப்பட்ட (பொருளாதாரம், நோய், குடும்பப் பிரச்சனைகள்) மக்கள் தொடர்பாகக் கலந்துரையாடி ஓர் தீர்வினை எடுக்கச் செய்வதற்கு இந்து தலைமைப் பீடங்கள் வலியுறுத்த வேண்டும்.

அவ்வாறே இந்நிறுவனங்கள் மூலமாகக் கவிதை, நடனம், கட்டுரை, நாடகம், விவாதம், கவியரங்கம் போன்ற இன்னோரன்ன கலையம்சங்களில் போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியவர்கட்கு பரிசில்களையும், பாராட்டுக்களையும் வழங்குதல் வேண்டும். இவை தொடராக அமுல்படுத்துதல் வேண்டும்.

மற்றும் தபால் மூலமான சமயம்சார் வேதபாடங்களை நடத்தி நற்சான்றிதழ்கள் இந்நிறுவனத்தின் ஊடாக வழங்க வேண்டும். மேலும் பிரதி வெள்ளிதோறும் இந்துமதம் தொடர்பான ஏதாவதொரு அற்புதம், அருமைகள், பெருமைகள் உள்ளடங்கலாக கதாப்பிரசங்கங்களை நிகழ்த்துதல் வேண்டும்.

அத்துடன் மாதாமாதம் ஒன்று / இரண்டு எனும் அடிப் படையில் சமயச் சிந்தனைகளை அச்சிட்டு நிறுவனத்தினூடாக இந்து மக்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

(உ) கிராம மக்களுக்கான / பாமரர்களுக்கான விஷேட செயற்றிட்டம்

இந்து மதத்தவர்களிடையே அதிகளவான மதமாற்றங்கள் நிகழ்வது கிராமம் மற்றும் பெருந்தோட்டங்களிலாகும். எனவே தான் இப்பகுதியினர் மீது விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

விஷேடமான தினங்களில் மற்றும் பிரதி வெள்ளிதோறும் பெருந்தோட்டத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் உட்பட மற்றும் வேறு ஸ்தாபனங்களில் தொழில் புரியும் இந்துக்கள் அனைவரும் பி.ப. 3.00 மணிக்கு வேலை முடித்துக் கோயிலுக்குச் செல்லவேண்டிய வழக்கத்தினை இந்துமத ஊழியர்களின் மூலமாக நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

மேலும் கிராமப் பகுதிகளில் வாழும் மக்களின் குடும்பப் பிரச்சினைகள், திருமணப்பிணக்குகள், தீராநோய்கள், கல்விப் பிரச்சனைகள் போன்றன பற்றி அவர்களுடன் கலந்துரையாடிப் பொருத்தமான சமயம்சார் நிறுவனங்களுடன் இணைத்து அவற்றுக்கான ஓரளவான தீர்வுகளை இந்துமத ஊழியர்கள் மூலமாக உடனடியாகச் செய்வித்தல் வேண்டும்.

வீட்டில் / கோயில்களில் செய்யப்படுகின்ற சடங்கு / கிரியை களில் ஈடுபடுகின்றவர்கள் முடிந்தளவு இலவசமாகச் சடங்குகளை செய்தல் வேண்டும். இவர்களிடம் பாரபட்சம் காட்டாது சமமான

வகையிலான கிரியைகளைச் செய்வதுடன் சமமாகப் பழகுவதும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

மேலும் கிராமப்பகுதிகளில் படித்தவர்களை இனங்கண்டு அவர்களுக்கு இந்துசமயப் போதனைகளைப் பயிற்றுவித்து அதனை மக்களிடம் எடுத்துச் செல்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதிகளில் கொண்டாடப்படும் திருவிழாக்களை ஆகம முறைப்படி நடாத்துவதற்கும், ஆகம முறைப்படி ஆலயங்களைக் கட்டுவதற்கும், பூசைகளை நிகழ்த்துவதற்கும் ஆவன செய்வித்தல் வேண்டும்.

மற்றும் மாலை நேரங்களில் கிறிஸ்தவ மத ஊழியர்கள் இந்து வீடுகளுக்குச் செல்வதைத் தடுப்பதற்கு, இந்துமத ஊழியர்கள் இந்து இல்லங்களுக்குச் செல்கின்ற வழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் இந்துக்கள் இந்துக்களாக வாழ வழிவகுக்கலாம்.

கிராமப் பகுதிகளில் இன்றுவரையும் நிலவிவருகின்ற மூடநம்பிக்கைகளை முற்றாக அழிப்பதற்கு இந்துமதத் தெளிவினை மக்களது மத்தியில் நிலை நாட்டுதல் வேண்டும்.

கிராமங்களில் வாழுகின்றவர்களிடம் அதிகளவான கல்வித் தகைமை இல்லாத காரணத்தினால், முடிந்தளவு கதாப்பிரசங்கங்கள், நடமாடும் நாடகச்சேவை போன்றன மூலமாக மக்கள் மனங்களில் இந்து மதத்தின் செழுமைகளையும், பெருமைகளையும், மனித விழுமியங்களையும் விதைப்பதனூடாக மதமாற்றங்களைத் தடுத்து நிறுத்தலாம்.

[ஊ] சட்டரீதியான நடவடிக்கைகள்

சட்டங்கள் மூலமாக இந்துமதமாற்றத்தை தடுத்தல் மிகவும் முக்கியமான விடயமாக நான் கருதுகின்றேன். காரணம் தற்போது கட்டாக்காலி மாடுகள் போல மதத்தை மாற்றிக்கொண்டு அலையும் மக்களது மத்தியில் இவ்வாறான நடவடிக்கையே பொருத்தமாகத் தெரிகின்றது.

2004 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி பாராளுமன்றத்துக்குச் சமர்பிக்கப்பட்ட சட்டமூலங்கள்; அதன் மூலமாகச் சட்டத்தில் நிகழும் மாற்றங்கள் மூலமாக மதமாற்றத்தை தடுத்து நிறுத்தலாம்.

அதன்படி – 2 ஆவது வாசகத்தில் எவரேனும் ஒரு நபரினால் பிறிதொரு நபர் நிர்ப்பந்திக்கப்பட்டு, தூண்டப்பட்டு, வஞ்சகமான செயல் மூலமாக ஒரு மதத்தில் இருந்து இன்னொரு மதத்துக்கு மாற்றப்படுவது தவறாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய செயல் ஒன்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ புரிவதும் அத்தகைய முயற்சியில் ஈடுபடுவதும் ஒத்தாசை / உதவிபுரிவதும் குற்றமாகும்"[19]

இவ்வாறான சட்டம் அமுலுக்கு வந்தால், இந்துக்களை வஞ்சகமாக மதமாற்றம் செய்யும் பல சமய ஊழியர்கள் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டுக் கொள்வார்கள் என்பதில் மாற்றமில்லை.

இச்சட்டமூலத்தின் 3 (அ) வாசகத்தின் மூலம் மதம் மாறியவர் தனது பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் மறைமுகமாகவோ நேரடியாகவோ மதம் மாறுவதற்கான மதச்சடங்கைச் செய்துவரும், வசதிகளை வழங்கிவரும் செயலாளரிடம் அறிவிக்க வேண்டும்.

இத்தகைய அறிவித்தலை வழங்கத்தவறும் எத்தகைய நபரும் 5 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் ரூபா 1,50,000 மிஞ்சாத அபராதவிதிப்புக்கும் கட்டுப்படல் வேண்டும்[20] எனவும் சட்டமூலம் 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தனிப்பட்ட தேவைகளின் நிமித்தம் எவ்விதமுமான அழுத்தமின்றி, தன்னிச்சையாக மதத்தை மாற்றிக் கொண்ட நபர் ஒருவர் தொடர்பிலும் கூட அவரது அத்தகையதொரு முடிவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.

அத்துடன் இச்சட்டமூலத்தின்படி, மற்றுமொரு விடயம்; ஆள் ஒருவரின் அனுபவமின்மை, நம்பிக்கைத் தேவைப்பாடு, புத்தி கூர்மை, குறைவு, அறியாமை, வறுமை / இடர்நிலைகள் ஆகியவற்றை பயன்படுத்திப் அத்தகைய மதமாற்றம் இடம் பெற்றிருப்பின் அதுவும் சட்டவிரோதமானதாக விபரிக்கப் பட்டுள்ளது. இதுவும் கிறிஸ்தவர்களால் இந்து மக்கள் மதமாற்றம் செய்யும் போது அவர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது.

மேலும் ஒரு இந்துவை புறம்பான மதமொன்றின் வழிபாட்டு முறையில் பங்கேற்கச் செய்விக்கவோ / மதக்கூட்டமொன்றில் கலந்துகொள்ளச் தூண்டுதல் அளிக்கவோ முடியாதபடி சட்டங்களை அமைத்தல் வேண்டும்.

இவ்வாறாகப்பட்ட சட்டநடவடிக்கைகள் அமுலுக்கு வந்து நடைமுறைப்படுத்தப்படுமாயின் இந்துக்கள் மதம்மாறுவதனைத் தடுக்கின்ற மிகச்சிறந்த வழியாக வேறு எதனையும் கருத முடியாது.

[எ] மாற்று மதத் திருமணங்களைத் தடுத்தல்

இதுவும் சட்டத்தின் மூலமாகவே கொணரப்பட வேண்டிய அம்சமாகும். 'காதலுக்கு மதம் இல்லை' என்ற கருத்தியல் வழங்கி வருகின்ற போதும் இங்கேதான் கட்டாயமாக மதம் மாற்றப் படுகின்ற நிகழ்வு கடைபிடிக்கப்படுகின்றது. ஆண் / பெண் பலவந்தமாக இந்துவில் இருந்து வேறுமதத்துக்கு மதம் மாற்றப்படும் பொழுது இதற்கான ஏதுவாக நாம் கருதுவது காதல் திருமணம் தான்! எனவே மாற்றுமதத் திருமணங்களைத் தவிர்த்தல் நன்மை பயக்கும்.

இதனைத் தொடர்ந்தும் இவர்களது பிள்ளைகளுக்கும்; ஏலவே குறிப்பிட்டது போல, பெயர் வைப்பதில், இருந்து கலை கலாசார, பண்பாட்டுக்குள் வளர்வது வரையான பிரச்சினைகளை ஏற்படுத்தும் / ஏற்படுத்துகிறது. எனவே இதற்கு அடிப்படையான மாற்று மதத்திருமணங்களைத் தடுத்தல் என்பது அவசரமும் அவசியமுமான எண்ணக் கருவாக இருந்து வருகிறது. இதே பொருத்தப்பாடுகளையே இந்துவுடன் பௌத்தமும், இஸ்லாமும் கலந்தாலும் ஏற்படும் என்பதனை நினைவிருத்திக் கொள்வோம்.

[ஏ] இந்து மதம் தொடர்பான ஒளி, ஒலி நாடா / இறுவட்டுக்களை உருவாக்கி விநியோகித்தல்

இந்து மதத்தில் காணப்படுகின்ற திருமுறைகள், திருப்பாசுரங்கள் போன்றவற்றிற்கு உரிய இராகம், தாளம் என்பவற்றைப் பயன்படுத்தி இசைவடிவங்களில் உருவாக்கம் செய்து அவற்றை இந்துக்களுக்கு வழங்குவதன் மூலமாக மதமாற்றத்தைத் தடுக்கலாம்.

மற்றும் இந்துமத கருத்துக்களை உள்ளடக்கிய பட்டிமன்றங்கள் கதாப்பிரசங்கங்கள் எனும் வடிவில் ஒலிப்பதிவு செய்து இந்து சமூகத்தினருக்கு விநியோகிப்பதன் மூலமாக அல்லது ஒவ்வொரு இந்துக் கோயில்களுக்கும் வழங்கி அவற்றை மக்களது மத்தியில் பொதுமைப்படுத்துவதன் மூலமாக மக்கள் மனங்களில்

இந்துமதக் கருத்துக்களைப் பரப்புவதுடன் மதமாற்றம் என்னும் எண்ணக்கருவினைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்க்கலாம்.

(ஐ) அறநெறிக்கல்வியின் அவசரமும் அவசியமும்

அறநெறிப்பாடசாலைகளின் தேவை பற்றிச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். "சமயக்கல்வியும், ஒழுக்கவியலும், அறிவியற் கல்வியும் தனித்தனியாகவன்றி ஒன்றாக இணைக்கப் படல் வேண்டும். உலகப் பெருஞ் சமயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும் வரலாற்றுடன் இணைந்ததாகவும் சமயக்கல்வி அமைய வேண்டும்"(21) என்று விபுலாநந்தர் விரும்பினார்.

1989ஆம் ஆண்டு முதல் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடுபூராகவும் இக்கல்வி நடைபெறுகிறது என்று நம்பப்படுகிறது. ஆனால் நடைமுறைப்படுத்துவது சொற்ப அளவேயாம். மேலும் வாழ்வியலோடு இணைந்து வழிகாட்டுவது தான் அறநெறிப் பாடசாலையின் நோக்கமாகவும் முன்வைக்கப் பட்டது.

இதில் முக்கியமாக இந்து சமயத்தின் தத்துவங்கள், சிறப்புக்கள், பெருமைகள், அற்புதங்கள், இசைப்பாக்கள் என்பவற்றோடு காலை, மாலை இரவு வழிபாடுகள், வீட்டுக் கிரியைகள், விழாக்கள், விரதங்கள், பெற்றோர் மூத்தோரைக் கனம் பண்ணல் போன்றவற்றிற்கு முதலிடம் கொடுத்து நடாத்த வேண்டும்.

இப்பாடசாலைகளில் மாணவர்கள் மட்டுமன்றிக் கல்வி கற்க முடியாத ஏனையோரும் சேர்ந்து இந்து சமயக்கல்வி அறிவைப் பெற முடியும். அறநெறிப்பாடசாலைகளில் சத்துணவுத்திட்டம் மற்றும் சீருடை என்பன பல இடங்களில் நடைமுறையிலுள்ளன ஆனால் அவை விரிவுபடுத்தப்படல் அவசியமாகும்.

மேலும் இக்கல்வி கோயில்களிலேயே கட்டாயமாக நடாத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவும் இந்துமத ஆசிரியர்களால்தான் வகுப்புகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கல்வியின் நோக்கம் சமயக்கல்வியுடன் சீரிய வாழ்க்கை முறைகளுக்கேற்ப ஒழுக்கமுறைகளைப் போதிப்பதும், இளம் சிறார்களின் மனதில் அன்பு, பக்தி, கடமையுணர்ச்சி போன்ற வற்றை உருவாக்கி உன்னதமான இந்துவாக உருவாக்குவதே. அறநெறிப்பாடசாலைகளின் நோக்கமுமிதுவே!

மேலும் இப்பாடசாலைகள் மூலமாக இந்துசமயத்தின் திருப்பாசுரங்களை முறைப்படி ஓதுவதற்கும் பண்ணோடு இசைபாடுவதற்கும் தக்கபடி பயிற்றுவித்தல் ஆரோக்கியமான இந்து சமுதாயத்தை உருவாக்கலாம்.

(ஒ) இந்துதர்மத்தை நவீன சமயமாக வளர்த்தல்

"உயர்ந்தன யாவற்றிற்கும் ஒரு மரபு, பாரம்பரியம் என்பன உண்டு என்ற வகையில், இந்து மதத்திற்கும் உண்டு. ஆனால் மரபு மாற்றத்திற்கும் உள்ளாகல் ஆகாதென்றோ, புதியன புகுதல் கூடாதென்றோ கூறுதல் பொருத்தமாகாது என்பன புதுமையில் நாட்டம்கொள்வோர் கருத்தாக உள்ளது. இந்துசமயம், கல்வி என்பன என்றும் தேக்கநிலையில் இருந்தால் வளர்ச்சியற்றனவாகி விடும்"[22]

பாரம்பரிய சமயத்தில் போதனைகளே அதிகம். மறுமை பற்றிய உணர்வே மிகுதி, தனிமனித ஈடேற்றம், தான் மட்டும் முத்தியடைவதற்கான முயற்சிகளே ஊக்குவிக்கப்படுகின்றன. சாதி, வர்க்கம், வர்ண வேறுபாடுகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. சமயவாதிகள் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுப் பூசல்களையும் வெறித்தன்மைகளையும் பெருக்குகின்றனர். சமூகத்திலிருந்து ஒதுங்கி வருகின்றனர். சமூகப் பிரக்ஞை இல்லை. மூட நம்பிக்கைகள், மூடப்பழக்க வழக்கங்கள் மிகுதியாக உள்ளன. சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள், ஆடம்பர விழாக்கள் என்பவையே சமயம் என்று எண்ணப்படுகின்றது. பாரம்பரிய இந்து மதம் மக்களுக்கு வழிகாட்டும் பாதையாக அன்றிப் போதையாகவும் போர்வையாகவும் வந்துவிட்டது.

"உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது; உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும், இல்லதில் இருந்து உள்ளது தோன்ற மாட்டாது." எமது சமயத்தின் இக்கொள்கை சற்காரிய வாதம் எனப்படும். சமயத்தை நவீனப்படுத்த முனையும் போது இக்கருத்தினை மனதில் கொள்ளுதல் அவசியம் ஆகும்.

இடைக் காலத்தில் இந்துசமயத்தில் வலிந்து புகுத்தப்பட்ட மாசுகளை நீக்க வேண்டும். தற்கால சமூகத் தேவைகளைக் கால உணர்வோடு சிந்தித்து இந்து சமயத்தை நவீனப்படுத்த வேண்டும்.

காலத்தின் தேவையை நிறைவேற்றுவதாக இந்து சமயம் மறுசீரமைக்கப்படல் அவசியம் ஆகும். இந்துசமயம் விஞ்ஞானத் துடன் இணைய வேண்டும். விஞ்ஞானம் சமயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தில் ஆன்மீகம் செறியும் போதுதான் முரண்பாடுகள் அழிவுகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். சமயத்தையும் விஞ்ஞானத்தையும் இணையச் செய்வதற்கே முன்னுரிமை வழங்குவதாய் அமைய வேண்டும். அதே வேளை இந்துசமயத்தின் ஆன்மீக அடிப்படை பேணப்படுதலும் அவசியம் ஆகும். விஞ்ஞானமும் இந்துசமயமும் ஒன்றிற்கொன்று முரண்படாமுறையில் வளர்ச்சி பெற்று வரும் போதுதான் இரண்டுமே வாழமுடியும். மனித குலம் தழைக்க முடியும்.

சமயப்பணிகள் சமூகப் பிரக்ஞையோடு ஆற்றப்பட வேண்டும். சமயம் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தப்படுதல், அறிவியல் விழிப்பு, சமயப்பொறை, சமரசநோக்கு என்பவற்றை ஏற்படுத்தல் என்பன சமய நவீனத்துவத்துடன் இணைய வேண்டும்.

மானுட வாழ்வில் மதமானது முக்கிய இடத்தைப் பெறுகிறது. சமயங்கள் காலத்தின் தேவைகளையும் சமூகத்தின் தேவைகளையும் உணர்ந்து மாறுதல்கள் அவசியம் வேண்டற் பாலன எனத்தெளிந்து கொள்ளும் பட்சத்தில், அவற்றை ஏற்றுத் தமதாக்கி அமைதிகாணும் பட்சத்திலேயே அவை வாழும் சமயங்களாக நிலைக்கும். இவ்வாறு சமயம் நவீனமயப்படுத்தலும் வேண்டியதே என்பதை சுவாமி விபுலாநந்தர் ஏற்றுக்கொண்டார்.

எனவே இந்து மதமாற்றத்தினை தடுப்பதற்கு இவ்வாறான ஒரு புதிய கோணத்தை இந்துமதத்தின் மீது செலுத்துவோமாயின் அது நவீனத்துடன் நல் ஒளி பரப்பி மீண்டும் மக்கள் மனங்களில் பிரகாசிக்கும்.

5. முடிவுரை

முடிவாக; இந்துமதமானது தன்னாலும், ஏனைய அந்நிய சக்தி மதத்தவர்களாலும் மாற்றத்துக்குள்ளாகிவருகின்றது. இவர்கள் மக்களின் அறியாமை, பேராசை முதலிய பலவீனங்களைப் பயன்படுத்தி அவர்களை மதம் மாற்றுகின்றனர். இதற்குப் பல வழிகளையும் கையாளுகின்றனர். இந்துப் பெரியார் கூறிய கருத்துக்களைத் திரித்துக்கூறி இழிவுப்படுத்துவது, காலத்தால் முந்திய இந்துமதக் கருத்துக்களைத் தமது மதக்கருத்தெனப் பொய்கூறி மக்களை ஏமாற்றுவது, மக்களின்

இயலாமைகளைப் பயன்படுத்தி (வறுமை) கபட நோக்குடன் பணம் பொருள் கொடுத்து வருவது, அநாதைச் சிறுவர்களைப் பராமரிப்புப் போர்வையில் மூளைச்சலவை செய்து மதத்தைத் திணிப்பது, உறைவிட முகாம்களை நடாத்தி இளைஞர்களைப் பல்வேறு புலனின்பக் கவர்ச்சிகள் மூலமும், காதல் கல்யாணம் என்ற போர்வையிலும் வளைத்துப் போடுவது, நற்செய்திக் கூட்டங்கள் என்ற பெயரில் நோய்கள் குணமாகிறது என்ற திட்டமிட்ட நாடகம் மூலம் மக்களை ஏமாற்றுவது என்பவற்றுடன் இந்து மதத்திற்குள்ளேயே காணப்படுகின்ற சாதியம், வர்க்கம், மரபு மாறாமை, பெண்கள் ஒதுக்கப்படுதல், சமயத்தத்துவம் விளக்கமின்மை போன்ற இன்னோரன்ன ஏதுக்களால் மதமாற்றம் நிகழுகின்றது என்பதை அகபுற முறைகளில் ஆராய்ந்து கண்டோம்.


இந்து மதமாற்றத்தை தவிர்ப்பதற்கான வழிகளாகச் சமசந்தர்ப்பம், நலனில் பங்கு, சமயதத்துவ விளக்கம், நிறுவன ரீதியான நடவடிக்கைகள், பாமரருக்கான விஷேடதிட்டம், சட்ட நடவடிக்கைகள், மாற்றுமதமணம் தடுத்தல், இந்து முன்பள்ளி ஆரம்பித்தல் போன்ற இன்னோரன்னவாறான பல கருத்தாடல்கள் மூலமாக வழிவகைகளையும் ஆராய்ந்துள்ளோம்.

தொகுத்து நோக்கும் பொழுது இந்துக்களுக்கிடையே மதமாற்றம் நடைபெற்றது / நடைபெறுகின்றது. அதனை தடுத்து நிறுத்த வேண்டும். அப்போதுதான் தனிமனிதனையும், சமூகத்தையும் வாழ்வாங்கு வாழவைப்பதற்கு இந்துமதம் பயன்படும். உலகச் சமயங்களின் அடிப்படை உண்மைகளை ஒவ்வொருவரும் உணர்ந்து சமயப் பூசல்களுக்கு இடமளிக்காமல் சமயப் பொறையுடையவர்களாக வாழ வேண்டும். இந்துக்களாக பிறந்த ஒவ்வொரு இந்துவும் இறக்கும் வரையும் புனிதமான இந்துக்களாகவே இருந்து வாழ்ந்து காட்டுவோம்.

இந்துவாக வாழ்வோம்! இந்து தர்மம் காப்போம்!!

சான்றாதாரங்கள்

1. தட்சிணாமூர்த்தி, அ – தமிழர் நாகரிகமும் பண்பாடும், இந்தியா 1994 p. 75
2. மகாதேவன் T.M.P – இந்து சமயத்தத்துவம், புதுடில்லி 1955 p. 11
3. இலங்கை சின்மயா மிஷன் – இந்து விழிப்பு, கொழும்பு 2004 p.
4. கெய்ல் ஓம்வெட் – வர்க்கம் சாதி நிலம், சென்னை 1998 p. 60
5. மே. கு. நூ p. 11
6. திருவுருவ பிரதிஷ்டை சிறப்பு மலர் S.P.N.C.O.E - 1998 p 05
7. சிவசக்தி – 2002 றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் p. 47
8. மகாத்மா காந்தி – சத்திய சோதனை, மதுரை 1994 p. 165
9. தட்சிணா மூர்த்தி, அ – தமிழர் நாகரிகமும் பண்பாடும், இந்தியா 1994 p. 573
10. கெம்ஸ் ஓம்வெட் – வர்க்கம் சாதி நிலம் சென்னை– 1998 p. 41
11. பெர்பேஷ்கினா, ஸி – வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்றால் என்ன? முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1987 p. 104
12. வேலுப்பிள்ளை, ஆ – தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் யாழ்; 1978 p. 159
13. கார்ல் மார்க்ஸ் – கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை, முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ 1995 பிரெடரிக் ஏங்கெல்ஸ் – p. 44
14. சிவசேகரம் சி – மரபும் மார்க்ஸிய வாதியும், சவுத் விஷன் 1999 p. 24
15. வரலாற்று பொருள் முதல்வாதம் என்றால் என்ன? p. 199
16. தட்சிணாமூர்த்தி. அ – தமிழர் நாகரிகமும் பண்பாடும் இந்தியா 1994 p. 03
17. சுப்ரமணிய பாரதி. சி – பாரதியார் கவிதைகள், சென்னை 1996 p. 53–54
18. ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை (33வது) பெப்ரவரி 2003 p. 33
19. தினக்குரல் பத்திரிகை August 11 – 2005 (கட்டுரை)
20. தினக்குரல் பத்திரிகை August 11 – 2005 (கட்டுரை)
21. சுதந்திரத்திற்குப் பின் இலங்கை (கட்டுரைத் தொகுப்பு) இலங்கை 1998 p. 83
22. சுதந்திரத்திற்குப் பின் இலங்கை (கட்டுரைத் தொகுப்பு) இலங்கை 1998 p. 72
23. ராமநாதன். கே – பாரதி படைத்த புதுமை இந்தியா 1982 p. 56
24. இரவீந்திரன். ந – பின் நவீனத்துவமும் அழகியலும், இலங்கை – 1997 – p. 16
25. கணேசலிங்கம். செ – பெண்ணடிமை தீர – சென்னை 1985 p. 32
26. மதம் மாற்றுவது ஒரு குற்றம் 1994 p. 02
27. சிவத்தம்பி. கா – இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் – கொழும்பு, 1993 p. 17
28. கர்மயோகி ஸ்ரீமான் நரசிம்மன் கோபாலன் – இந்துவே உன்னை அறிந்து கொள் (இதழ் 24), கலியுகாதி – 5103 வருடம் p. 02



ராஜ கோபுரம்

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பன ஆன்றோர்வாக்கு. கோயிலிலே மிக உயர்ந்த அமைப்புடன் விளங்குவது ராஜ கோபுரமாகும். இதற்கு தூல லிங்கம் என்பது பெயர், [தூலம் – கண்ணால் பார்க்கக்கூடியது] யோகிகள். "பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்", என கோபுரத்தை குறிப்பிடுவர்.

சுப்பிர பேதாகமத்தில்

"தூரஸ்ய சிகரே த்ருஷ்ட்வா யாவத் கைலாச பூதலம்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கோபுரத்தில் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூர இடமும் பூலோகக் கைலாசம் என்று அழைக்கப்படும்.

கோபுரம் மூன்று அடுக்குகள் கொண்டும் அமைந்துள்ளது. இது – ஜாக்ரம், சொப்னம், சுசுப்தி எனும் மூன்றைக் குறிக்கும். அதுபோல்

ஐந்து அடுக்கு – ஐம்பொறிகளைக் குறிக்கும்.
ஏழு – ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பவையைக் குறிக்கும்.
ஒன்பது – ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றைக் குறிக்கும்.



இந்து சமயமும் சமுதாய சீர்திருத்தமும்

செல்வி தர்சினி தங்கராசா



"யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர் – பகவதி பாரத்
அப்யுத்தான – மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்"

மனிடர்க்குரிய குறைகளைக் கடவுள் அறிகிறார். மானிட இனத்திற்கு நன்மை புரியும் பொருட்டு அவர் மனிதராகிறார். "தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கிறேன். யுகந்தோறும் அறத்தை நிலைநிறுத்தவும் மறத்தை அழிக்கவும் நல்லோர்களைக் காக்கவும் நான் வருகிறேன்" என்றார் கிருஷ்ண பரமாத்மா.

தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கி மிகவும் வேகமாக அழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் சமுதாயத்தில், மானிடர்களை நல்வழிப்படுத்தி, தர்மத்தை நிலைநாட்டி, மனிதனை மனிதனாகவும், மனிதப் பண்புள்ளவனாகவும் உருவாக்கும் மேன்மைமிக்க சமயம் இந்து சமயமாகும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய சமயம் எனப் பெரியோர்களால் போற்றப்பட்ட சமயம் எமது இந்து சமயம்.

உலகில் உள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் மஹா புருஷரால் அந்தந்தக் கால தேசத்துக்கு ஏற்றவாறு தோற்றுவிக்கப் பட்டது. நமது இந்து மதம் ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல், உலகம் தோன்றின முதல் ஆண்டவராலே தோற்றுவிக்கப்பட்டு, எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் ஏற்ற வகையில் அநாதியாய் இருந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கை ஒழுக்கத்தை, சமுதாய ஒழுக்கத்தை அதிகமாக வற்புறுத்துவது இந்து மதம் தான்! அதன் பண்பாடுகள் உன்னதமானவை. அதன் சடங்குகள் அர்த்த முள்ளவை. இந்துக்கள் சொன்ன தத்துவம் வேடிக்கைக் கதையல்ல. யாருக்கு நீ பாவம் செய்தாலும் அதற்குத் தண்டனை உண்டு என்பது அழிக்க முடியாத உண்மை. பெருங்கதைகளும் அவற்றுக்குள் உப கதைகளுமாக எழுதப்பட்ட நமது இதிகாசங்களின் பாத்திரப் படைப்புத் தான் எவ்வளவு அற்புதம். அவை கூறும் வாழ்க்கைத் தத்துவங்கள் தான் எத்தனை.

நம்பிக்கை, அவநம்பிக்கை ஆணவம், மீட்சி, காதல், கற்பு, ராஜதந்திரம், குறுக்குவழி, நட்பு, அன்பு, பணிவு, பாசம், கடமை – இப்படி வாழ்க்கையின் எத்தனை கூறுகள் உண்டோ, அத்தனையையும் நமது இதிகாசங்கள் காட்டுகின்றன.

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பெறும் கட்டுரை இது.

மகாபாரதத்தை எடுத்துக்கொண்டால் பொறுமைக்கு துடிதுடிப்புக்கு பீமன்; ஆண்மைக்கும் வீரத்திற்கும் அர்ச்சுனன்; மூத்தோர் வழியில் முறை தொடர நகுலன், சகாதேவன்; பஞ்சபூதங் களையும் தன்னுள் அடக்கிக் கொண்ட சக்திமிக்க ஆன்மாவாக பாஞ்சாலி; உள்ளதெல்லாம் கொடுத்துக் கொடுப்பதற்கு இல்லையே என்று கலங்கும் வள்ளலாகக் கர்ணன்; நேர்மையான ராஜ தந்திரத்துக்கு எடுத்துக் காட்டாகக் கண்ணன்; தாய்ப் பாசத்திற்குக் குந்தி, இவ்வாறான பாத்திரங்களின் சிருஷ்டியிலேயே சம்பவங்கள் கருக் கொண்டு விட்டன. இந்தக் கதை வெறும் ஆணவத்தின் அழிவைத் தருமத்தின் வெற்றியை மட்டும் குறிப்பதல்ல. லௌகீக வாழ்க்கையிலும் ஒவ்வொருவருக்கும் பயன்படக் கூடிய படிப்பினை இருக்கிறது.

காதல் என்றால் என்ன? என்பதைக் காட்டக் கூடிய இலக்கியம் இராமாயணத்திற்கு மேல் ஒன்றில்லை. ஆண்டாள் திருப்பாவையைப் படித்தாற் கூட நமக்கு மெய்சிலிர்க்கிறது. மனித ஆன்மாவின் தெய்வீக ராகத்தை அது மெய்சிலிர்க்கக் காட்டுகிறது. அஃதன்றியும் கடவுளைக் காதலனாகப் பாவிப்பது என்ற சம்பிரதாயத்தை முதலில் துவக்கியதும் இந்துமதம்தான். ஆனால் முருகனையும் பரம சிவனின் வேறு சில வடிவங்களையும் காதலனாகப் பாவிக்கும் வழக்கம் இருந்ததே தவிர சக்தியையோ, பிறபெண் தெய்வங்களையோ காதலியாகப் பாவிப்பது இல்லை. அங்கேயும் இந்துக்கள் பண்பாடு காத்தார்கள். காதல் என்பது பாசத்தின் முதிர்ச்சியாகவே காட்டப்பட்டது. சில இடங்களில் காம உணர்ச்சி அதிகரித்திருந்தால் அது பரிபூரண நிலையைக் குறிக்கும். ஆதி மூலத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட தெய்வீக நிலையைக் குறிக்கும். தீண்டாமை என்பதும், தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்பதும் வெறுப்பின் அடிப்படையிலே தோன்றிய சாதிப்பிரிவுகளாக இந்து மதத்தின் மூல வேதங்கள் எவையும் கூறவில்லை. நாடார், முதலியார், செட்டியார் என்ற சாதிப் பெயர் எதையும் இந்து வேதங்களில் காணமுடியாது. இங்கே சாதிப்பிரிவின்றி மனிதன் ஒருவனை ஒருவன் அனுசரித்து வாழும் முறையை இந்துமதம் உருவாக்கியது. வேறு எந்த மதத்தவரும் இந்துக்களைப் போல் இறைவனோடு நேரடியாகப் பேசுவதில்லை. இறைவனுக்கும் மனிதனுக்கும் அதிக இடைவெளியில்லாமல் சிருஷ்டித்தவர்களும் இந்துக்கள்தான். மூலமாக முளைத்தெழுந்தவனை உறவினன் ஆக்கிக் கொண்டவர்களும் இந்துக்கள் தான். காதல் வாழ்க்கையும் திருமண வாழ்க்கையும் கடவுளிடம் கண்டவர்கள் இந்துக்கள்தான். ஏழைக்கும் கடவுளைச் சொந்தக்காரனாக அவனை ஆண்டியாகக் கண்டவர்களும் இந்துக்கள் தான். எங்கே தொட்டாலும் எதைப் பிடித்தாலும் இந்துக்கள் உருவாக்கிய பாத்திரங்கள் நம்மை வெறும் அதீத உலகிற்குக் கொண்டு போகவில்லை. லௌகீக உலகத்தை எடுத்துக் காட்டுகின்றன. அந்தக் கற்பனையின் சிறப்பை வியக்காமலிருக்க முடியாது! சொல்லப் போனால் அத்தகைய கற்பனை, உலகத்தில் இந்தப் பல்லாயிரம் ஆண்டுகளில் வேறு எவனுக்கும் கிடையாது.

சுவாமி விவேகானந்தர் வீர இளைஞர்களுக்குக் கூறிய அறிவுரையில் "நமது சமயத்தின் மகத்தான உண்மைகளை உலகமெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள். உலகம் அவற்றுக்காகக் காத்து கொண்டிருக்கிறது" என்று கூறியுள்ளார். அத்தோடு இந்துக்கள் தங்கள் கடந்த கால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கு ஏற்ப, அவர்களின் எதிர்காலம் மேலும் மேலும் பெருமைக்குரியதாக அமையும் எனக்கூறியுள்ளார். உயர்ந்த தத்துவங்களையும் இறைவனுடன் இணைக்கும் இலகுவான பக்தி வழியையும் கொண்டுள்ள எமது சமயத்தின் மேன்மை இன்று மேலை நாடுகளில் பல மேலை நாட்டு மக்களை இந்துவாக மாறச் செய்து, அவர்கள் மூலம் பல இலட்சக்கணக்கான இந்து ஆன்மீகத் தொண்டர்களை உருவாக்கி வருகிறது. குறிப்பாக "ஹரே ராமா ஹரே கிருஷ்ணா" அமைப்பு போன்றவைகளைக் கூறலாம்.

தமிழர் ஒருவர் காலையில் குளித்துவிட்டுக் கட்டுகட்டாக விபூதி பூசினார். அதைப் பார்த்த ஓர் ஆங்கிலேயேன் அவரிடம் கேட்டான், "ஏன் இப்படிச் சாம்பலை அள்ளி நெற்றியில் பூசுகிறீர்கள்?". தமிழர் பதில் சொன்னார் "இந்த உடம்பு என்றாவது ஒருநாள் சாம்பலாகப் போகிறது என்பதை தினமும் நினைவுபடுத்திக் கொள்கிறோம். அதன் மூலம் கெட்ட புத்தி விலகி விடுகிறது" என்றார். ஆங்கிலேயேர் திகைத்துப் போனார்.

யாக்கை நிலையாமையை இந்து சமய தத்துவ ஞானிகள் அடிக்கடி கூறி வந்திருப்பது மனிதனை விரக்தியடையச் செய்வதற்கு அல்ல, வாழ்க்கையில் ஒரு தைரியத்தை உண்டாக்குவதற்கே.

"விட்டு விடப் போகுதுயிர்
விட்டவுடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்"

என்று பட்டினத்தார் மரணத்தைச் சுட்டிக் காட்டியது, ஒருநாள் மரணம் வரப்போகிறது என்பதை உணர்ந்து அதுவரை வாழ்க்கையை நேர்மையாக நடத்துமாறு செய்வதற்கே. இந்த ஞானம் ஒவ்வொரு சராசரி மனிதனுக்குக் கூட ஒருநாள் வருகிறது.

"காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா" என்று பாடியவர் இறைவன் படைத்த உடலை அவமானப் படுத்துவதற்காகப் பாடவில்லை. பொய்யான இந்தக் காயத்தைக் காப்பாற்ற நீ பொய் சொல்லாதே, நீ திருடாதே, பிறரை ஏமாற்றாதே என்று எச்சரிப்பதற்காகப் பாடினார். உடலின் நிலையாமையை மனிதன் உணர்ந்து கொண்டிருந்தால் கூடுமானவரை அவன் மனதில் நாணயம், நேர்மை, இரக்கம், கருணை எல்லாம் வளர்ந்து விடுகிறது. அளவுக்கு மிஞ்சிய பற்று அடிபட்டுப் போவதுடன் கடற்பாம்பின் கால்கள் போல் ஆசைகள் தினந்தோறும் பரவாமல் கிடைத்த வரைக்கும் நிம்மதி என்ற மனம் உண்டாகும். மரணத்தின் மகத்தான சக்தியை மரணம் வரும் முன்பே மனிதனை அறிந்து கொள்ளச் செய்வது, இந்து சமயவாதிகளின் நோக்கங்களில் ஒன்றாகும். எதையும் அளவோடும், நியாயமாகவும் பகிர்ந்து அனுபவிக்கும் உணர்ச்சிக்கு இது அடித்தளம்.

இந்துக்களின் குடும்ப வாழ்க்கை பலவித சம்பிரதாயங்களைக் கொண்டது. அந்தச் சம்பிரதாயங்கள் பற்றிச் சுவாமி விவேகானந்தர் அமெரிக்க சொற்பொழிவுகளில் கூறுகிறார்.

இந்துக்களின் இலட்சியப் பெண்மணி தாய். அன்னையே முன்னறி தெய்வம். இறுதியாக அறியப்படுத்துவதும் அன்னையையே. பெண் என்ற சொல் இந்துவுக்குத் தாய்மையையே நினைவு படுத்துகிறது. ஆண்டவனையே அவர்கள் அன்னை என்றுதான் வணங்குகிறார்கள். இந்துவின் குடும்பம் என்பது தாய்மையே தலையாகக் கொண்டது. இதிலே இன்னும்

ஒரு கௌரவத்தை இந்து மகன் தாய்க்கு அளித்தான். அதாவது, தாயின் முன்னிலையில் மனைவியோடு பேசுவதில்லை.

கணவன் பெயர் 'சங்கரன்' என்றிருந்தால், இதே சங்கரன் என்ற பெயரில் அவனுக்கொரு தம்பியோ, வேலைக்காரனோ இருக்கலாம். அவனை 'டேய் சங்கரா?' என்று அழைக்க நேரிடலாம். அது கணவனை அவமானப் படுத்துவதாக அமையலாம். ஆகவே தான் கணவன் பெயரைச் சொல்லக்கூடாது என்று வைத்தார்கள்.

பெண்ணுக்கு அடக்கம் போதிக்கப்பட்டது. சத்தம் போட்டுச் சிரிப்பது இழிவான பெண்களின் குணம் என்று கூறப்பட்டது. அதனால் 'நகைத்தல்' என்று மெல்லச் சிரிப்பதை இந்துமதம் பெண்ணுக்கு வலியுறுத்தியது. அந்தச் சிரிப்பையும் அவள் பிற ஆடவர் முன்னிலையில் சிரிக்கக் கூடாது. காரணம், யாராவது ஒரு ஆடவன் அந்தச் சிரிப்பைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடும். நேருக்கு நேராக அவள் யாரையும் பார்க்கக் கூடாது. இந்தப் பார்வை, சிரிப்பு இரண்டையும் ஒரு குறளில் சொன்னான் வள்ளுவன்.

"யான் நோக்குங் காலை நிலன் நோக்கும், நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்"

ஆம்! பாராதபோது பார்க்கும். மெல்ல நகும். அவ்வளவு தான் நாணம் என்பது. தமிழ்ச் சொல்தான் என்றாலும், இந்துப் பெண்களுக்கு அது பொதுச் சொல்லாகும். இந்துக்கள் இந்த நாணத்தை மனப் பழக்கமாகத் தொடங்கி, உடற்பழக்கமாகவே ஆக்கிவிட்டார்கள். இந்துப் பெண்களுக்கு நாணம் சொல்லித் தெரிய வேண்டிய கலையல்ல! அது அவள் இரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. இவையனைத்தும் இந்து மதத்தின் பலமான கட்டுக்காவற் சம்பிரதாயங்கள். இவற்றை மீறுவோர் உண்டு. தவறுவோர் உண்டு. இவர்கள் சமுதாய அங்கவீனர்கள் இந்து சட்டங்கள் மட்டுமல்லாது, சம்பிரதாயங்களும் கூட சகல வழிகளிலும் செம்மையான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கிறது.

ஒரு மனிதனுக்கு உடை, உணவு, உறையுள் எப்படி முக்கிய மானதோ அதேபோல் மிக முக்கியமானது மதமேயாகும். அதிலும் மனிதனை நல்வழிப்படுத்தி, இப்படித்தான் வாழ வேண்டும் என வாழ வழி வகுப்பது இந்துமதமே. எப்படியும் வாழலாம் என்ற கருத்தை இந்து மதத்தினர் என்றுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் "எப்படியும் வாழலாம் என்று வாழ்வது இழிவு வாழ்வு. இப்படித்தான் என்று வாழ்வது தான் இந்து வாழ்வு". இக்கூற்றுக்கிணங்க தனி ஒவ்வொருவரும் தன்னை உணர்ந்து வாழ வழிவகுப்பது இந்து மதமேயாகும். இந்து மதம் மனிதனுக்குக் கற்றுத் தரும் விடயங்களில் மிக முக்கியமானது உண்மை பேசுவதாகும்.

"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலக்கத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்றார் வள்ளுவர். எல்லாவற்றிலும் உண்மை பேசுவது என்று முடிவு கட்டிக் கொண்டால், இந்தப் பாதகங்களில் இருந்து நீ விடுபட்டு விடுவாய் என்கிறது வேதம். இந்துமதம் "உண்மையே பேசு, உண்மையே பேசு" என்று அது வெறும் வார்த்தையாகச் சொல்வது கிடையாது. உண்மை பேசியவன் எப்படி வாழ்ந்தான் என்பதற்கு கதைகளையும் சொல்லி இருக்கிறது. அரிச்சந்திரனுடைய வரலாறு நாம் அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டிய வரலாறாகும். அவன் தன் வாழ்க்கையில் உண்மையே பேசினான் என்ற ஒரு காரணத்திற்காக அவன் வாழ்க்கையே ஒரு சரித்திரமாகி விட்டது.

இந்தப் பொய் சொல்லுகிறவனைத் திருத்துவதற்குத் தான் இந்து மதம் பல உபந்நியாசங்களைச் செய்தது. 'பொய் சொன்னால் நாக்கு வெந்து போகும்' 'பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடையாது.' 'பொய் சொன்னால் புற்று வைக்கும்' என்றெல்லாம் பயந்து பொய் சொல்லாமல் இருப்பதற்கு மத அடிப்படையிலே தான் மனிதன் கற்றுக் கொள்கிறான். அதனால்தான் தனி மனித ஒழுக்கத்தை இந்து மதம் காப்பற்றுகிறது என்றனர் நம் முன்னோர்கள். மேலும் மனிதனுடைய தனி வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதும், சீர்ப்படுத்துவதும் இந்துமதமேயாகும். சத்தியம் என்பது மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலேயும் நேர்மையாக நடப்பதாகும். புராண இதிகாசக் கதைகளிலே கூட 'மனோ வாக்குக் காயங்களாலே அவன் நியாயமாக நடந்தான்' என்று தான் வரும். இம்மூன்றாலேயும் நாணயமாக இருக்கும் ஒரு மனிதனை உலகம் மதிக்கும் என்பதற்குக் காந்தியடிகள் ஒரு உதாரணம். நேரு ஒரு உதாரணம். ஆப்ரகாம் லிங்கனிலிருந்து உலகப் புகழ் பெற்ற அத்தனை மனிதர்களும் உண்மை சொன்னதாலேயே புகழ் பெற்றார்கள். தவிர மிகப் பிரமாண்டமான பணி செய்ததனால் மட்டும் புகழ் பெற்றவர்களல்ல! ஆனால் எப்பொழுதும் எந்தக் கட்டத்திலும் உண்மையே பேச வேண்டும், பொய்யே சொல்லக் கூடாதா? என்று கேட்டால் அதற்கும் வள்ளுவன். ஒரு வழி வகுத்துக் காட்டியுள்ளான். நல்ல காரியம் நடக்கும் என்றால் அதற்காகப் பொய் சொல்லலாம். "பொய்மையும் வாய்மையிடத்து புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்றான் வள்ளுவன் பத்துப் பொய்யைச் சொல்வதனால் ஒரு பெண்ணின் திருமணம் நடந்து விடும் என்றால், அந்தப் பொய்யைச் சொல்லலாம். இருபது பொய்யைச் சொல்லி ஒரு குழந்தையைக் காப்பாற்றி விட முடியுமானால் அந்தப் பொய்யைச் சொல்லலாம். பொய்மை வாய்மை ஆகிறது எப்போது? புரை தீர்ந்த நன்மை பயக்கும் போது. ஆனால் பொய்யே சொல்லி வாழலாம் என்று எவ்வளவுதான் பொய் சொல்லி, ஊரையும், உலகத்தையும் சுற்றி வந்தாலும் நாம் சொன்ன பொய் நம்மையே வந்து திருப்பித் தாக்கும் என்பதனை வரலாறு காட்டுகிறது; வேதம் காட்டுகிறது, புராணம் காட்டுகிறது, இதிகாசம் காட்டுகிறது.

இந்தப் பொய்யிலிருந்து மனிதனையும், நாட்டையும் மீட்பதற்கான ஒரு கருவி இந்து மதமாகும். ஒரே துணைக்கருவி இறைவன் தெய்வ பக்தி வளர 'நமக்கேன் வம்பு, ஆண்டவன் நம்மைச் சபித்து விடுவான். ஆண்டவன் நம்மைக் கொன்று விடுவான்' என்று பயந்து பொய் சொல்லாமலேயே இருக்கப் பழகியவர்கள் பலர் உண்டு.

ஆகவே மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்றால் அவனுக்கு மத நம்பிக்கை வேண்டும். அந்த மத நம்பிக்கையிலேயும் அவனை ஒழுங்காகத் திருத்திச் செம்மையாக வாழ வைக்கின்ற மதம் இந்து மதம். அதுதான் அர்த்தமுள்ள இந்து மதம். ஒருதாய் தன் மகன் சமுதாயத்தில் மிகவும் பேரும் புகழுடன் வாழவே விரும்புகிறார். அதேபோல் தான் இந்து மதம் மட்டுமே மனிதனைப் பண்பாளனாக வாழ வைக்கிறது. ஆடம்பரமின்மை, தற்பெருமையின்மை, அகங்காரமின்மை, அஹிம்சை, பொறுமை,

நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம், தாய், தந்தைக்கு அடிபணிதல் போன்ற நற்குணங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியதே இந்துமதம். புலன்களும், பொறிகளும் மனிதனுக்கு உள்ளவையே. அவற்றை கட்டுப்படுத்த மனிதனால் முடியும் என்பது நமது ஞானிகளின் வாதம். சமயத்துறையில் அதனைச் சாதிக்க முடியும் என்பதை அவர்கள் காட்டினார்கள். சராசரி மனிதன் புற உணர்ச்சிகளால், அகவுணர்ச்சிப் பாதிப்பால் புறத்தோற்றத்திலும் மாறுதலடைகிறான். இதனையே "அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்" என்றார் வள்ளுவர்.

துன்பங்களிலிருந்து விடுபட, நமது சித்தர்களும், ஞானிகளும் சொல்லிப் போன வழிகள் ஏராளம். பாதிப்புகள் தவிர்க்க முடியாதவை. அந்தப் பாதிப்புக்களைத் தாங்கிக் கொள்ளும் சகிப்புத் தன்மை பயிற்சியின் மூலமும், அனுபவங்களின் மூலமும் வரும். ஓடிக் கொண்டிருக்கும் வெள்ளத்தை அணைகட்டி நிறுத்துவது போல் பிரார்த்தனை துயரங்களை நிறுத்துகிறது.

இயற்கையாகவே அது ஒரு மனச்சாந்தியை உருவாக்குகிறது. துன்பம் ஓரளவு குறைந்தாலும், பிரார்த்தனை பயனுள்ளதாகத் தோன்றுகிறது. நம்பிக்கை வைக்கின்ற மருத்துவர் மருந்துக்குப் பதிலாக வெறும் தண்ணீரையே ஊசி மூலம் ஏற்றினாலும் நோய் குறைந்துவிட்டது போலத் தோன்றுகிறது. அப்படித் தோன்றுவதற்கு நம்பிக்கைதான் பிரதானம். அதே போல் நம்பிக்கையோடு பிரார்த்தித்தால் விதியின் வேகம் குறைந்து, விரோதித்து நின்ற விதி, நிச்சயம் ஒத்துழைப்புத் தரும்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்று ஒருவரியில் சொல்லி வைத்தார்கள் நம்முடைய மூதாதையர்கள். நம்பிக்கையே வெற்றிக்கும், நிம்மதிக்கும் அடிப்படை.

ஆதிமனிதன் கடலைக் கண்டு பயந்தான். அடுத்த மனிதன் கொஞ்சதூரம் கடலுக்குள் நடந்து பார்த்தான். அவனுக்கு அடுத்தவன் நீந்திப் பார்த்தான். இன்னொருவன் கட்டையைப் பிடித்துக் கொண்டு பயணம் போனான். கட்டை படகு ஆயிற்று. படகு கப்பலாயிற்று. பயணம் சுலபமாயிற்று. கடலும் கடக்கக் கூடியதே என்ற நம்பிக்கை வந்தது. உலகம் உருண்டை என்ற உண்மையும் தெரிந்தது. விமானத்தின் பறக்கும் உயரத்தையும், வேகத்தையும் கொஞ்சங் கொஞ்சமாக அதிகப்படுத்திக் கொண்டே போன மனிதன் சந்திரமண்டலம் வரை பயணம் போகலாம் என்ற நம்பிக்கை கொண்டான். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை. இன்பமும் நிம்மதியும் நம்பிக்கையில் தான் தோன்றுகின்றன. நல்ல தொழிலாளியாக இருந்தால் மோசமான முதலாளி கூட அன்பு காட்டுகிறான். அதுபோல் நம்பிக்கையுள்ள பக்தனாக இருந்தால் குட்டித் தேவதைகள் கூட இரட்சிக்கின்றன. துன்பங்களை களைவதற்கு நம்பிக்கையே முக்கியம். நம்பிக்கை கொண்டவர்களை அந்தச் சக்தி எப்படியும் வாழ வைக்கும். மனிதனின் பலவீனமான மனதை அறிந்துதான் இந்துக்கள் நம்பிக்கையோடு வழிபடுவதை வற்புறுத்தினார்கள். எத்தகைய துயரங்களிலிருந்தும் விடுபடுவதற்கும் வழி சொன்னார்கள். ஒவ்வொரு சிருஷ்டியிலும் சிக்கல் இருக்கிறது என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்தச் சிக்கலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கே ஒவ்வொரு ஜீவனும் வாழ்க்கை நடத்துகிறது.

ஆகவே பிரார்த்தனையை ஒரு யோகமாகவும் பயிற்சியாகவும் கொண்டு, நம்பிக்கையை வளர்த்துக் கொண்டே வந்தால், துன்பங்கள் விலகாவிடினும், அவற்றைப் பற்றிய பயம் நீங்கி, நிம்மதி ஏற்பட்டுவிடும். நிம்மதியற்று வாழ்வைத் துறந்து ஓட வேண்டும் என நினைப்பவர்களுக்குக் கூட இல்வாழ்விலிருந்தே செவ்விய நெறியில் ஒழுகிச் சிந்தையைக் கட்டுப்படுத்தித் தெய்வ தரிசனத்திற்கு வழ்கோலாக அமைந்துள்ளது, இந்துமதத்தில் கூறப்பட்டுள்ள விரத அனுஷ்டானங்களும் வழிபாட்டு முறைகளேயாம்.

மனித மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்குச் சாந்தியையும் அமைதியையும் அளித்து அவனை ஆனந்தப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வது இறைவழிபாடாகும்.

அகமும், புறமும் தூய்மைபெறின் இறையருள் தானாகவே வந்தடைகிறது. வாழ்வைப் பற்றிய சிக்கலில் மனதை ஈடுபடுத்திக் கொண்டு தவிக்கும் கோடான கோடி மக்களுக்கு மனதையும், உடலையும் தூய்மையாக்கி எண்ணியதை எண்ணியபடி நடத்தி வைக்கிறான் இறைவன். வாழ்வில் தோன்றும் இன்னல்கள், ஏமாற்றங்கள், சஞ்சலங்கள், கிரகதோஷங்கள் யாவற்றிலிருந்தும் நாம் விடுதலை பெற்று மனச்சாந்தியோடு அமைதியான வாழ்வைப் பெற பக்தி மார்க்கமே சாலவும் சிறந்தது. எனினும் இன்றைய உலகியல் சூழல்களால் இறைவனை நினைக்கவே நேரமின்றித் தடுமாறிக் கொண்டிருக்கும் எமக்கு எல்லா நலன்களையும், எப்பொழுதும் பொழிந்து கொண்டிருக்கும் இறைவனை மறவாது நெஞ்சார நினைத்து, வாழ்த்தியும் வணங்கியும் இருத்தலே மனிதப் பிறவியின் கடமையாகும். எனவே இக்கடமையைக் குறிப்பிட்ட நாட்களேனும் நிறைவேற்ற முயற்சிக்க வேணும். இந்நாட்களையே விரத நாட்கள் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.

விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள். இவ்விரதமாவது மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் மெய்யன்போடு விதிப்படி விசேடமாக வழிபடுதலாகும். இறைசிந்தையோடு இருப்பதே உபவாசம் என்பர். இது ஆன்ம ஈடேற்றத்துக்காகச் செய்யப்படும் சாதனை. பெரியோர் கூறும் புண்ணிய வழியினுள் ஒன்றான தவம், விரதம் அனுஷ்டித்தலாகும். இவ்வாறு செய்வதால் மனம், புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் காமம், குரோதம், கோபம், மதம், மதார்ச்சியம் போன்ற தீய எண்ணங்களிலிருந்து விலகி நல்லதோர் வாழ்க்கையை அமைத்திட ஆறறிவு படைத்த மானிட வர்க்கத்திற்கு இவ்விரதமுறைகள் கிடைத்தற்கரிய பேறாகும்.

உலகத்தில் அதிகம் சாப்பிட்டுச் செத்தவர்கள் உண்டே தவிர, குறைத்து சாப்பிட்டு மாண்டவர்கள் குறைவு. காஞ்சிப் பெரியவர்கள் ஒரு பிடி அவலிலும், பாலிலுமே காலம் கடத்துகிறார். நெய்யும், சர்க்கரையும் அதிகம் சாப்பிடுகிற பிராமணர், வெங்காய சாம்பார் சேர்த்துக் கொள்கிறார்கள். ஏனெனில் வெங்காயம் கொழுப்பை கரைக்கும். மலையில் வாழ்ந்த சித்தர்கள் காய், கனி, கிழங்கு கலந்த மூலங்களோடு சரி. இந்துக்கள் வாரத்தில் ஒருநாள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உணவுச் சரிமானத்தை ஒழுங்குபடுத்துவதே உண்ணாவிரதத்தின் நோக்கம். இது இறைவன் பெயரால் வழங்கப்படும் தேக ஆரோக்கியம். தெய்வ பக்தியோடு இந்துக்கள் ஆரோக்கியத்தைக் கலந்தார்கள். காந்தியடிகள் தேசபக்தியும் கலந்தார். உண்ணா விரதத்தை ஒரு

ஆயுதமாக்கித் தேசபக்திக்கு அதனைப் பயன்படுத்தினார். தன்னை வருத்திக் கொள்ளும் அந்த முறையின் மூலம் அந்நிய அதிகார வர்க்கத்தை அவர் நடுங்க வைத்தார். அவரது தேக ஆரோக்கியத்திற்கும் கூட, அவர் மேற்கொண்ட உண்ணா விரதங்கள் பயன்பட்டன. மகாகவி பாரதியார் சொல்வது போல நிறையச் சாப்பிடக்கூடாது என்பதும் தவறு. நிறையச் சாப்பிட வேண்டும் என்பதும் தவறு. அளவறிந்து சாப்பிட வேண்டும், இன்னும் சில அதிசய இந்துக்கள் உண்டு. அவர்கள் ஒரு மாதம் முழுக்க உப்போ, நெய்யோ உணவில் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். உடம்பில் உப்போ, கொழுப்போ சேராமல் காப்பாற்ற எவ்வளவு அற்புதமான வழி! இந்துமதம் ஆரோக்கியத்தையும், பக்தியையும் ஒன்றாக இணைக்கிறது.

காற்றுக்கு இலைகள் அசைகின்றன. மலர்கள் அசைகின்றன. கொடிகள் அசைகின்றன. ஆனால் மலைகள் அசைவதில்லை. அசைவது பலவீனத்தைக் காட்டுகிறது. அசையாதது உறுதியைக் காட்டுகிறது. சளசளவென்று பேசுகின்றவன் எவ்வளவு பெரிய கெட்டிக்காரனாக இருந்தாலும் சொற்பொழிவாளனாக இருந்தாலும் தன் பலவீனத்தைக் காட்டிக் கொள்கிறான். மௌனிமுட்டாளாக இருந்தாலும் பலசாலியாகக் காணப்படுகிறான்.

பேசாமல் இருப்பது பெரும் திறமை. பேசும் திறமையைவிட அது மிகப் பெரியது. அதனால்தான் ஞானிகளும், பெரிய மேதைகளும் குறிப்பிட்ட சில காலங்களில் மௌன விரதம் அனுஷ்டிக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்பி அதை சுருக்கமாகத் தெளிவுபடுத்துகிறவன் பெரிய மரியாதையை பெற்றுவிடுகிறான். சிறிய விஷயத்தைக் கூட வளைத்து வளைத்து பேசுகின்றவன் கேலிக்கு ஆளாகிறான். பயனில்லாத சொற்களை பாராட்டுகிறவனை 'மக்கட் பதடி' என்றான் வள்ளுவன். ஞானிகள் சில விஷயங்களைக் கூறுகிறார்கள். அவை பொன்மொழிகளாக விடுகின்றன. பைத்தியக்காரர்கள் பதினாயிரம் பேசுகிறார்கள். அவை சீந்துவாரில்லாமல் போகின்றன. மௌனம் ஒரு மகத்தான ஞானம், அது தெய்வீகக் கலை.

ஒரு குடும்பம். கணவன் மனைவி இருவர், கணவனுக்கு மனைவியிடம் கோபம். ஆனால் அதை வெளியில் சொல்லவில்லை. மனைவியிடம் பேசாமல் இருக்கிறான். அவன் அவளைத் திட்டியிருந்தால் அது சாதாரணமாகப் போயிருக்கும். அவன் பேசாமல் இருப்பதே அவளைச் சித்திரவதை செய்கிறது. மௌனம் தொடரத் தொடர அவள் தாகம் அதிகரிக்கிறது. திடீரென்று ஒரு வார்த்தை அவன் பேசிவிட்டான். அவளுக்கு தெய்வமே கண் திறந்தது போன்று தெரிகிறது. பத்து வார்த்தை திட்டி, நாலு உதை உதைப்பதை விட அந்த மௌனம் மகத்தான சக்தியைப் பெற்று விடுகிறது.

கோயிலில் இருக்கின்ற சிலை வருகின்ற பக்தனிடமெல்லாம் பேசத் தொடங்குமானால் பக்தனுக்கு அலுப்புத் தட்டிவிடும். அது மௌனமாக இருக்க இருக்க பக்தன் தான் பேசுகின்றான், பாடுகிறான், புலம்புகிறான். சலனமற்ற மௌனம் பல அர்த்தங்களை கொண்டது. பேசாமல் இருப்பவனே பெரிய விஷயத்தை சொல்பவன். ஏராளமான வரிகளை கொண்ட இலக்கியங்களைவிட ஏழுவார்த்தையில் அடங்கிவிட்ட திருக்குறள் உலகத்தை கவர்ந்துவிட்டது. காலங்கள் தோறும் துணைக்கு வருகிறது. நிலையான தத்துவத்தை சொல்கிறது.

ஆரோக்கியத்திற்கு மௌனம் மிகமுக்கியம். தவம் புரிகின்றவன் 'ஓம் நமசிவாய' என்ற வார்த்தையைக் கூட சொல்வ தில்லை. மௌனமாக இருப்பவனுக்கு ஆகாரம் குறைவாக இருந்தால் கூடப் போதும். அதிகம் பேசுவதால் அடிவயிறு சூடாகிறது. தீனி அதிகம் கேட்கிறது. உடம்பு பெருத்து விடுகிறது.

வாரியார் சுவாமிகள் சாதாரணமான நேரங்களில் பேசுவது குறைவு. சொற்பொழிவிலும் அலட்டிக் கொள்ளாமல் பேசுவார். அந்த இரண்டு மணி நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் இரண்டொரு வார்த்தை தான் பேசுவார். அதனால் ஒருவேளை சாப்பாடே அவருக்குங் போதுமானதாக இருக்கிறது. குரல் கணீர் என்று கம்பீரமாக ஒலிக்கிறது. நோயாற்ற வாழ்வுக்கு அவர் இலக்கணமாகிறார்.

மௌனத்தின் சக்தியை உணர்ந்துதான் இந்துக்கள் தவம் புரிந்தார்கள். நிஷ்டையில் அமர்ந்தார்கள். மௌன விரதம் மேற் கொண்டார்கள். நீண்டநாள் பேசாமல் இருப்பது என்பது ஒருவகை நிர்விகல்ப சமாதி. அதை மேற் கொண்டவன் ஞானத்தை தேடினால் அது நிச்சயம் கை கூடும்.

போலியான ஆரவாரத்தை இந்துமதம் தவிர்க்கிறதே தவிர, நமது கடவுள் வடிவங்கள் அனைத்துக்குமே தூய்மையான இசை ஆதார வடிவமாக நிற்கிறது. கடவுள் பக்திப்பாடலில் நெஞ்சம் நெகிழ்கிறது. வீணை இல்லாத கலைமகளா? புல்லாங்குழல் இல்லாத கிருஷ்ணனா? நாட்டியம் ஆடாத நடராஜரா? விஞ்ஞானத்தில் ஒரு உண்மை உண்டு. சிலவகையான அலைகள் உடம்பை ஆட்டிப் படைக்கின்றன. நான்கு வேதங்களையும் ஓதும் போது நான்கு வகையாக ஓதுகிறார்கள். அந்த ஒலி அலைகள் வானவெளியையும் சுவாசிக்கின்ற காற்றையும் சுத்தப்படுத்துகின்றன. ஓம் என்ற பிரணவ மந்திரத்தினைக் கூட்டாக உச்சரிக்கும்போது அந்த ஒலி இயற்கையில் எதிரொலிக்கிறது. இடைவிடாத கோயில் மணி யோசையில் காற்றே சங்கீத மயமாகி விடுகிறது. வீணை, வயலின், சிதார் போன்ற நரம்புக் கருவிகளில் பிறக்கும் இசை, காது நரம்புகளைச் சுகப்படுத்தி இதயத்தை மென்மையாக்குகிறது. அந்த இசையின் மூலமும் நாட்டியத்தின் மூலமும் இயற்கையாகவே ஒரு நிம்மதியை மனிதன் பெற முடியும்.

நமது இசையில் பக்தி ரசத்தோடு காம ரசமும் அதிகம் கலந்திருப்பதற்குக் காரணம் இதுதான்! கண்ணனைப் பற்றிப் பாடிய ஆண்டாளும், காதல் உணர்வுகளையே ஒருவகை ஞானமாக வெளியிட்டாள். காதல் என்பது மத விரோதமானது அல்ல என்பதால் தானே கம்பனுக்குப் பிறகு அருணகிரிநாதராயினும், ஆண்டாளாயினும், மற்றும் ஆழ்வார்கள், நாயன்மார்களாயினும் அனைவருமே அதைப் பக்தியோடு கலந்து கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய இசையின் தாற்பரியத்தைக் காஞ்சிப் பெரியவர்கள் கீழ்க்கண்டவாறு சொல்கிறார்கள். 'இசையின் மூலமாகவே ஈஸ்வர அனுபவத்தைப் பெறமுடியும்' என்பது அவர்களின் வாதம். வேத அத்தியானம், யோகம், தியானம், பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியாசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தைத் தெய்வீகமான சங்கீதத்தின் மூலமும் நல்ல ராக, தாள, ஞானத்தின் மூலமும் சுலபமாகவும், சௌக்கியமாகவும் பெற்றுவிடலாம். இப்படித்தர்ம

சாஸ்திரம் எனப்படும் ஸ்மிருதியை தந்திருக்கும் யக்ஞவல்கிய மஹரிஷியே சொல்லியிருக்கிறார். நம் மனத்தைத் தெய்வீகமான சங்கீதத்தில் ஊற வைத்து அதிலேயே கரைந்து போகச் செய்தால் கஷ்டமில்லாமல் ஈசுவரனை அனுபவிக்கலாம். நாம் பாடி அனுபவிக்கும் போதே இந்த சங்கீதத்தைக் கேட்கிறவர்களுக்கும் இதே அனுபவத்தைத் தந்துவிடலாம். வேறு எந்தச் சாதனையிலும் பிறருக்கு இப்படிச் சமமான அனுபவ ஆனந்தம் தரமுடியாது.

மன அமைதியை நாடிச் செல்லும் பக்திப் பணிக்கு இப்படி ஒலி எழுப்புவது அவசியமா? அது அமைதியைக் குலைத்து விடாதா? என்று வினவிய போது இந்து மத மெய்ஞானி சுவாமி சின்மயானந்தர் அளித்த பதிலாவது எந்த விஷயத்தையும் நாம் மனப்பூர்வமாகப் புரிந்து கொள்வதற்குப் பார்ப்பதும், கேட்பதும் மிகவும் முக்கியமானது. தானே படித்து அறிவு பெறுபவர்கள் மிகச் சொற்பமே. அதனால்தான் பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உரையாற்றுகிறார்கள் மற்றும் எழுதிக் காட்டி, படம் வரைந்து கற்பிக்கிறார்கள்.

பஜனைகளில் பாடும் போது இந்தப்பலன் நமக்குப் பக்திப் பணியிலும் கிடைக்கிறது. வாய்விட்டுப்பாடும் போது அவன் பிறர் பாடுவதைக் கேட்டுத் தொடர்ந்து அதில் சிந்தனையை ஊன்றிக் கொள்கிறான். தன்னைச் சுற்றியுள்ள அனைவரும் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து வருவதை அவன் கவனிக்கிறான். அதனால் அவனுக்கு அந்த மனநிலையில் ஒன்றிப் போவது எளிதாகி விடுகிறது. அவசரமிகுந்த, நெருக்கடி நிறைந்த இன்றைய வாழ்க்கையில் இப்படிப் பஜனை மூலம் பக்திப் பணியில் ஈடுபடுவது ஒரு சுலபமான வழி. இனிய இசையிலும், அழகான சந்தத்திலும் இப்படிச் சொற்களை அமைத்துப் பாடும் போது மனம் அதில் தொடர்ந்து இனிமையுடன் ஈடுபடுகிறது. தடம் மாறிச் செல்லும் மனதை திருப்பும் முயற்சியே பஜனை. கடும் விரதம் அனுஷ்டித்து யாத்திரை செய்ய முடியாதவர்கள் இவ்வாறான பஜனைகளில் கலந்து கொள்வதனால் வாழ்வில் கிடைக்கப் பெறாத பேரின்பத்தைப் பெறமுடியும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.

பஜனைகளின் மகத்துவத்தை உணர்ந்துதான் பசி, தாகம், சோர்வு இவைகளை இலட்சியம் செய்யாது வானளாவிய மரங்கள், முட்கள், செடிகள், கற்பாறைகள், மேடு பள்ளங்கள் மட்டுமின்றி விஷ ஜந்துக்கள், மிருகங்கள் நிறைந்த வனந்தாண்டிச் சபரிமலை யாத்திரை செல்லும் ஐயப்ப பக்தர்கள், அடியார்கள் மனதை ஆனந்த நிலைக்கு அழைத்துச் செல்லும் சரண கோஷங்களை முழங்கிச் சபரிமலை யாத்திரைக்குப் புறப்படுகின்றனர். "சாமியே சரணம் ஐயப்பா" என்று உரக்க சரண ஒலி செய்யும் போது ஐயப்ப யாத்திரை செய்பவர்களின் ஒருவனாக வந்து காட்டு விலங்குகளின் அபாயங்களிலிருந்து யாத்திரீகர்களைக் காத்தருளுகிறான் என்பது அவர்களின் நம்பிக்கை.

தெய்வத்தின் பெயரால் மனிதர்களை ஒன்று கூடச் செய்து சமத்துவத்தை நிலை நாட்டி வரும் யாத்திரை இந்து மதத்தினால் ஏற்படுத்தப்பட்ட மற்றுமோர் சமுதாய சீர்திருத்தப் பணியாகும்.

சபரிமலை யாத்திரையின் போது சாதி, சமய வேறுபாடுகள் சரணம் போட்டு பறக்கின்றன. ஏழை பணக்காரர் என்ற பேதமில்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற எவ்வித வித்தியாசமும் இல்லை, எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற உணர்வோடும், அன்போடும் பண்போடும் மேற்கொள்கின்ற யாத்திரையே இந்தச் சபரிமலைப் புனித யாத்திரை. வாழ்வில் பல சிக்கலில் மாட்டிக் கொண்டு, தினமும் அல்லற்பட்டு உழன்று வரும் நாம் வருடத்திற்கு ஒரு முறையாவது, சில நாட்களாவது தூய மனத்துடன், மெய்யான பக்தியுடனும், நல்ல சிந்தனையுடனும், மனதைக் கட்டுப்படுத்தி, விரதங்களிலிருந்து பூஜைகள், அன்ன தானங்கள், தான தருமங்களை இயன்றவரை சக்திக்கேற்றவாறு செய்து தெய்வப் பணி மேற்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பினை இந்த சபரிமலை யாத்திரை நமக்குத் தருகிறது. சபரிமலை யாத்திரையின் போது பல ஆறுகளிலும், குளங்களிலும், மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடிவரும் சுனைகளிலும் நீராடுவதால் பலவித அரிய மூலிகைகளின் குணங்களைப் பெற்ற நீரின் உதவியால் நம் உடலிலுள்ள சில நோய்கள் நீங்கிக் குணம் பெற வாய்ப்புகள் கிடைக்கிறது. மலை வழியில் செல்லும் போது வீசும் தென்றற் காற்றும், தெளிந்த நீரோடையாக ஓடிவரும் சுனைநீர், ஏராளமான மூலிகை மருந்துகளைத் தொட்டுத் தழுவிப் பாய்ந்து வருவதால் அந்நீரை அருந்துகின்ற நாம், சில தீராத நோய்களும் நீங்கப் பெற்றுக் குணம் பெறுகிறோம். பல உயர்ந்த மலைகளில் ஏறும் வாய்ப்புக் கிடைப்பதால் இருதயம் பலம் பெறுகிறது. இரத்தம் சுத்தமடைகிறது. கெட்ட உணர்வுகள் பட்டுப் போகின்றன. பிறவி ஊமைகளும் பேச வாய்ப்புண்டாகிறது.

ஐயப்பனும், வாவர் சுவாமியும் இரண்டறக் கலந்து நின்று அருள் புரிவதைப் போலவே இஸ்லாம் மதத்தாரும் மாலை அணிந்து, இருமுடி தாங்கிப் பெருந் திரளாக வந்து வழிபட்டு அருள் பெறுகிறார்கள். இதனால் இந்து இஸ்லாம் மத ஒற்றுமை உணர்வு வளர்கிறது. சமத்துவம் என்றால் என்ன? என்பதை நடைமுறையில் நடத்திக் காட்டப்படுகிறது. எந்தத்தலை சபரிமலை ஐயப்பனின் அபிஷேகத்திற்குள்ள முத்திரையை தாங்குகிறதோ அந்தத்தலை பிரபஞ்சத்துயர் எனும் சுமை இல்லாமல் இன்பம் எய்தும், சனி பகவானால் ஏற்படக் கூடிய பெருந்துயர்கள் விலகிப் போகின்றன. பலனைக் கருதி ஆண்டவனை வணங்கினாலும், தெய்வத்தை உபாசிப்பதால் அளவிட இயலாத நன்மைகள் பல உண்டாகின்றன. தொடர்ந்து பதினெட்டு வருடங்கள் முறையாகப் பதினெண் திருப்படிகளும் கடந்து, ஐயப்பனாகிய பரப்பிரம்மத்தை தரிசனம் செய்கின்ற பக்தர்களுக்கு மறுபிறப்பு ஏற்படாது. அவர்களுக்கு முத்தி கிடைகிறது. ஆகையினால் உண்மையான பக்தியுடனும், உள்ளன்பு மிக்க நம்பிக்கையுடனும் குரு உபதேசம் பெற்றுச் சபரிமலை நோன்பு அனுஷ்டிக்க வேண்டும். பக்தியைக் கண்டால் பகவான் பிரகாசிக்கின்றார். பகவான் பிரகாசிக்கச் சித்திகள் யாவும் கிடைக்கின்றன. அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டு வராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை. இதயபூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகின்றான்.

இறைவனை எப்படி வணங்குவது? என்று சுவாமி விவேகானந்தரிடம் வினவிய போது அவர் கூறியதாவது, அன்பு வழியே அவனை வணங்கும் வழி. இப்பிறப்பிலும், மறுப்பிறப்பிலும் உள்ள எதையும் விட அன்புக்குரியவன் என்று அவனை வணங்க வேண்டும். நமது வேதங்கள் முழங்குவதும் இந்த அன்பு நெறியே. "பெருமானே! எனக்கு செல்வமோ, செல்வங்களோ, பொருட்களோ வேண்டாம். ஆனால் நான் பயன் கருதாது அன்பு கொள்ளவும், தன்னலமின்றி அன்புக்காகவே அன்பு செய்யவும் எனக்கு அருள் செய்" என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். இத்தகைய

இறையன்மை ஒருவன் பெறும்போது அவன் அனைவரிடத்தும் அன்பு பாராட்டுகிறான். எவரிடத்தும் வெறுப்புக் கொள்வதில்லை. தூய்மையாக இருப்பதும், மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான் எல்லா வழிபாடுகளினதும் சாரமாகும்.

அன்பு என்பது மிகமிகப் பெரியது. அதை உயர்ந்தவர்க்கே கொடுக்க வேண்டும். உயர்ந்தவர் அல்லாதவர் அதை மதிப்பதில்லை. ஆண்டவன் ஒருவனே உயர்ந்தவன். அவன் மேல் செலுத்தும் அன்பு வீணாவதில்லை என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

உலக வாழ்வில் சுகம் என்பது நிலையற்றது. அது நிச்சயமாக நிலைத்து நிற்பதில்லை அடர்ந்த மரத்தின் கிளைகள், ஆடுகிற போது இடுக்கு வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்து பாய்ந்து விட்டு, அடுத்த நிமிடமே நிழல் வந்து மூடிக் கொள்வது போல மனித வாழ்வில் துன்பத்திற்கு நடுவில் கொஞ்சம் இன்பம் தலையை எட்டிப் பார்த்து விட்டு ஓடி விடுகிறது. இறைவனின் நியதியில் நிரந்தரமாக இன்பத்தை அனுபவித்தவனும் இல்லை. நிரந்தரமாகத் துன்பத்தில் உழன்றவனும் இல்லை. எல்லாச் செல்வங்களையும் நிரந்தரமாக எவனுக்கும் இறைவன் வழங்கியதில்லை.

"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை
அடுத்தூர்வ தஃ தொப்ப நில்"

என்றார் வள்ளுவர். எப்போது நீ போடும் திட்டம் தோல்வியுறுகிறதோ, அப்போது உனக்கு மேலானவன் அதை நடத்துகிறான் என்று பொருள். எப்போது உன் திட்டங்கள் வெற்றி பெறுகின்றனவோ, அப்போது இறைவன் உனக்கும் அனுமதியளித்து விட்டான் என்று பொருள்.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் – ஒன்றை
நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்"

என்பது முன்னோர் பழமொழி. வீழ்ச்சியில் கலக்கமோ எழுச்சியில் மயக்கமோ கொள்ளாதே! அடுத்த பாதை என்ன, பயணம் என்ன என்பது உனக்கு தெரியாது, எல்லாம் தெய்வத்தின் செயல் என்றார்கள் நம்முன்னோர்கள்.

"ஆண்டவனின் அவதாரங்களே ஆண்டவன் சோதனைக்குத் தப்பவில்லை" என்று நமது இதிகாசங்கள் கூறுகின்றன. தெய்வப் புருஷன் ஸ்ரீராமனுக்கே பொய்மான் எது? உண்மை மான் எது என்று தெரியவில்லையே! அதனால் வந்த வினைதானே! சீதை சிறையெடுக்கப்பட்டதும் ராமனுக்குத் தொடர்ச்சியாக வந்த துன்பங்களும்.

சத்திய தெய்வம் தருமனுக்கே சூதாடக்கூடாது என்ற புத்தி உதயமாகவில்லையே! அதன் விளைவுதானே பாண்டவர் வனவாசமும் பாரதயுத்தமும். முக்காலமும் உணர்ந்த கௌதமனுக்கே பொய்க் கோழி எது, உண்மைக் கோழி எது என்று தெரியவில்லையே! அதனால் தானே அகலிகை கெடுக்கப்பட்டதும், சாபம் பெற்றதும். ஆம்! இறைவனின் சோதனை எவனையும் விடாது என்பதற்கு, இந்தக் கதைகளை நமது இந்துமத ஞானிகள் எழுதி வைத்தார்கள். துன்பங்கள் வந்தே தீருமென்றும் அவை இறைவனின் சோதனைகள் என்றும் அவற்றுக்காகக் கலங்குவதும், கண்ணீர் சிந்துவதும் முட்டாள் தனமென்றும் மனிதனுக்கு உணர வைத்து, துன்பத்திலும் ஒரு நிம்மதியை கொடுக்கவே இத்தகைய இதிகாசங்களை எழுதி வைத்தார்கள். இதன் மூலம் வலியுறுத்தப்படுவது யாதெனில் "இந்து மதத்தின் சாரமே லௌகீக வாழ்க்கையை நிம்மதியாக்கித் தருவது" என்பதையே.

நதியின் ஓட்டம் பள்ளத்தை நோக்கியே இருப்பதுபோல, அந்த நாயகனின் ஓட்டமும் எளிமையான நேர்மையை நோக்கியே இருக்கும். ஒன்றும், அறியாமல் செய்யும் தவறுகள் பாவங்கள் அல்ல, அவை வெறும் தவறுகளே, அவற்றுக்கு உடன் மன்னிப்பு கிடையாது. "அறியாமல் செய்கின்ற பிழைகள் அப்பொழுதே மன்னிக்கப்படுகின்றன" என்பது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் வாக்கு. பாவம் என்று குறிப்பிடும் போது நாம் அறியாமல் செய்த பிழைகள் பாவக் கணக்கில் சேர்க்கப்படாது.

புண்ணியம் என்பது என்றும் எதிலும் நாம் செய்யும் நன்றி. ஆகவே பாவம் செய்யாமல், புண்ணியம் செய்து கொண்டே இறைவனைத் தியானித்தால் எமது வாழ்நாளில் நிச்சயம் அதிர்ஷ்டம் உண்டாகும்.

இந்துமதத்தில் தொட்ட இடமெங்கும் நவமணிகள் தட்டப்படுகின்றன. தர்மம் என்ற வார்த்தையின் மூலம் கோயிலிலிருக்கும் தெய்வத்தை மனிதனுடைய இதயத்தினுள் கொண்டு வரமுயன்றார்கள். அன்புள்ள தெய்வம், கருணையுள்ளவன் தெய்வம், கற்புள்ளவன் தெய்வம், பண்புள்ளவன் தெய்வம் என்று மனித நிலையின் மேம்பாடுகளைத் தெய்வ நிலைகளாகக் குறித்தார்கள். அதனால்தான் கீழ்த்தர உணர்வுகளிலிருந்து மனிதனை மேல் நோக்கிக் கொண்டுவருவதற்கு, "மதம்" என்ற ஒரு அமைப்பு தேவைப்பட்டது.

சராசரி கடமைகளில் இருந்து மனிதனை அப்புறப்படுத்தாமல் அவன் இருக்கும் இடத்தையே கோயில் ஆக்கமுடியும் எனக் காட்டியது இந்துமதம். மழையை வரவழைப்பவளும் வாழைமட்டையை எரியச் செய்பவளும் மட்டுமே பத்தினியல்ல! கணவன் கண்களில் மழை வராமலும் அவன் உள்ளத்தில் கனல் எரியாமலும் பார்த்துக் கொண்டவளே பத்தினி. "பிற புருஷனை அவள் மனத்தால் நினைத்தாலும் கற்பிழந்து விடுகிறாள்." என்று இந்துமதம் அச்சுறுத்துகிறது. பெண்ணுக்கு அதை அதிகம் வலியுறுத்தினாலும் ஆணுக்கும் அது வேண்டும் என்கிறது இந்துமதம்.

திருமணத்தின் போது பெண்ணுக்குக் கழுத்தில் மாங்கல்யம், ஆடவனுக்குக் காலிலே மெட்டி போடுகிறார்கள். இவை ஏன்? நிமிர்ந்து நடந்து வரும் ஆடவன், கண்ணுக்கு எதிரே நடந்து வரும் பெண் கழுத்தில் மாங்கல்யம் இருப்பது தெரிந்து, 'அவள் அந்நியன் மனைவி' என்று ஒதுங்கி விடவேண்டும். தலைகுனிந்து நடக்கும் பெண்ணின் கண்களுக்கு எதிரே வரும் ஆடவன் கால் மெட்டி தெரிந்து 'அவன் திருமணமானவன்' என அவள் ஒதுங்கி விடவேண்டும்.

"கற்புடைய பெண் விரும்பினால் சூரியனையே உதிக்காமல் செய்யலாம்" என்று கூறும் நளாயினியின் கதை இவையெல்லாம் பொய்க் கதைகள் என்று வாதிடலாம். ஆனால் அவர்களைப் போல தன் மனைவியும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறவனுக்கு இவை மெய்க்கதைகளே. கற்பு என்றொரு வேலி போட்டுப்

பெண்களைத் தெய்வமாக்கிக் குடும்பத்தை மகிழ்ச்சி கரமாக்குகிறது இந்துமதம். அந்த ஒழுக்கம் வளரவேண்டு மென்பதற்கு இந்துமதம் சான்று காட்டி நீதி சொல்கிறது.

குடும்பத்தைக் கோயில் ஆக்கிக் கொள்ள முடியாதவர்கள், துயரங்களைக் கொட்டி அழுவதற்காக ஏற்படுத்திக் கொண்ட இடங்களே கோயில்கள்.

தனிமையில் ஒரு முகப்படுத்தப்படாத மனது, சந்நிதானத்தில் ஒருமுகப்படுத்தப்படுகிறது. சிந்தனைக் குழப்பங்களில் ஆழ்ந்து விடாமலிருக்கத் தேங்காய் உடைப்பதிலும் தீபாராதனை காட்டுவதிலும் சிந்தனை திருப்பிவிடப்படுகிறது. குறைந்த பட்சம் மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கே இந்து மதம் முயற்சிக்கிறது.

இறைவா! உன் சந்நிதியில் கற்பூரம் ஏற்றப்படுகிறது. உனக்குச் செய்யப்படும் நைவேத்தியத்தில் வாழைப்பழமும், தேங்காயும் வைக்கப்படுகின்றன. கற்பூரம் தன்னை அழித்துக் கொள்கிறது. அது எரிந்து முடிந்த பிற்பாடு ஒரு கரித்தூள் கூட மிஞ்சுவதில்லை. வாழை மட்டை, தண்டு, இலை, பூ, காய், பழம் அனைத்தையும் தந்து உதவுகிறது. இவற்றில் எந்தப்பாகமும் வீணாவதில்லை. மனிதனும் அப்படி உலகிற்குப் பயன்பட வேண்டும் என்ற இந்துக்களின் ஆசையையே இது குறிக்கின்றது.

மனிதனைத் தெய்வமாக்க இந்துமதம் விரும்புகிறது. கள்ளம், கபடமற்ற வெள்ளை உள்ளங்களையே மதம் வளர்க்கிறது. பொய் சொல்லாத சந்நியாசி, நாணயம் தவறாத சம்சாரி இருவரையும் அது உற்பத்தி செய்கிறது. நாணயம், இரக்கம், மனிதாபிமானம் பற்றி இந்துமதம் பிறமதங்களை வெறுப்பதில்லை. அதன் பரந்த கரங்கள் அத்தனை மதங்களையும் அணைத்துக் கொண்டே வளர்ந்திருக்கின்றது.

எறும்பைக் கூட மிதிக்காத அளவுக்குக் கொல்லாமை, இருப்பதைப் பகிர்ந்து கொடுக்குமளவுக்கு, வள்ளல் தன்மை, மனிதாபிமானத்தை இப்படி வளர்க்கிறது இந்துமதம். இயலாமையிலும் திருடாமையைப் போதிக்கிறது இந்துமதம்.

இந்துமதம் சொல்லும் மனிதாபிமானத்தின் சுருக்கம் என்ன? நன்மை செய்தவனுக்கு நன்றி காட்டு. தீமை செய்தவனை மறந்துவிடு. நீ முடிந்தால் நன்மை செய். தீமை செய்யாதே. ஒவ்வொரு மனிதனும் இதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் பகையும், நோயும் இல்லாத சமுதாயம் உருவாகும். அந்தச் சமுதாயத்தை உருவாக்குவதே இந்து மதத்தின் நோக்கம்.

இன்றைய இளைஞன் அப்படி ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். பத்துப்பேரை நல்லவர்களாக்குவது போல் ஒரு புனிதமான பணி, உலகத்தில் வேறெதுவும் இல்லை. அதற்கு இளைஞர்கள் கைக்கொள்ள வேண்டிய ஒரே நம்பிக்கை மத, நம்பிக்கை. மதமும் அது காட்டும் தெய்வமும், அதன் வழி வந்த அவதார புருஷர்களுமே, ஒரு நேர்மையான ஞானம் மிக்க சமுதாய கர்த்தாக்கள். இன்று வரையில் நிரூபிக்கப்பட்டுள்ள உண்மை "ஒரு நல்ல இந்து, ஒரு நல்ல மனிதனாகத்தான் இருப்பான்"என்பதே!



விநாயகருக்கு விருப்பமான சில பொருட்களும் தத்துவங்களும்

விளாம்பழம்

விளாம்பழத்தின் புறஓடும் உள்ளீடான பழமும் தொடர்பில்லாமல் வெவ் வேறாக இருக்கின்றன. இரண்டிற்கும் தொடர்பற்ற இந்நிலை பழம் பழுத்த பிறகு அமைகின்றது. உடலும் உள்ளமும் பக்தியில் ஈடுபடும் போது அவைகளுக்கு எந்த பந்த பாசமும் தொடர்பும், கட்டும், பற்றும் இருக்க கூடாது. இந்த பற்றற்ற நிலையை உணர்த்துவது விளாம்பழம்.

மோதகம்

இதனை எருக்கலாம் கொழுக்கட்டை என்று கூறுவது வழக்கம். விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது. கொழுக்கட்டை மாவுக்குள் பூரணம் வைத்து மடித்து செய்யப்படுவது [முதம் -ஆனந்தம், சுவைத்து உண்ணும் போது ஆனந்தத்தைத் தருவது மோதகம்]

மாவு - உடல், பூரணம் - உயிர் பூரணம் பக்குவத்துடன் செய்யப்படுகின்ற உணவுக் கலவை அவித்த பயற்றம் பருப்பு + சர்க்கரை + தேங்காய்த் துருவல் இவற்றின் கலவை பூரணமான நிறைவான உயிர்முத்தி பெறக்கூடிய முழுத்தகுதியை பெறுகின்றது. இது மோதகம் உணர்த்தும் உட்கருத்து. மோதகம் இனிமையாகவும், சுவையாகவும் எல்லோரும் விரும்பும் பொருளாக இருப்பது போல விநாயகரும் உயிர்களுக்கு இனியவராக இருக்கின்ற இன்னொரு தத்துவத்தையும் விளக்குகின்றது.

தேங்காய்

வழிபாட்டில் உடைக்கப்படுகின்ற தேங்காய் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. தேங்காயில் மட்டை, நார், ஓட்டுப் பகுதிகள் என்ற மூன்றும் மும்மலங்களைக் குறிக்கும். இவை நீக்கப்பட்டவுடன் நீர் - உயிர் - இறைவனது திருமுன் அர்ப்பணிக்கப்படுகின்றது. இது ஒரு கருத்து.

தேங்காயின் வெண்மை சத்துவக் குணத்தையும் மூன்றாம் கண் ஞானக் கண்ணையும் தெரிவிக்கின்றன. அதாவது சத்துவக்குணத்துடன் பக்தியுடன் சஞ்சலம் இல்லாமல் ஞானக் கண்ணால் இறைவனை தரிசிக்க வேண்டும் என்ற வழிபாட்டு முறையை இது தெரிவிக்கின்றது. இது மற்றொரு கருத்து.



இருபதாம் நூற்றாண்டில் இந்துசமய வளர்ச்சியில் இந் நாட்டவரின் பங்கு

ஆறுமுகம் தியாகராசா



"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்ற படி தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்து இந்து சமய வளர்ச்சிக்காக 19ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் தோன்றி 20ஆம் நூற்றாண்டில் தொண்டாற்றியவர் பலர். 20ஆம் நூற்றாண்டில் தோன்றிப் பணி செய்து, 21இலும் தொடர்பவர் பலர். இவர்களில் பல்துறைகளில் ஈடுபட்டவர்கள் இருந்தார்கள், இருக்கின்றார்கள். சமயத்தோடு தமிழையும், தமிழோடு சமயத்தையும் இணைத்துத்தான் இவர்களது சேவையும் தொண்டும் இருந்தது. இயல், இசை, நாடகம் என்ற வகையில் சமய வாழ்வியலைப் பாமர மக்களும் புரியும் வகையில் சேவை செய்தவர்களை இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமது எழுத்தாலும், பேச்சாலும் செயல்பட்டவர் பலர், எழுத்தால் நெறிப்படுத்தியவர் பலர், பேச்சால் வழிப்படுத்தியவர் பலர், பாடல்களால் பண்படுத்தியவர்கள் பலர், செயற்பாட்டால் உருக்கொடுத்தவர்கள் என்று இவர்களின் பணிகளை வகைப் படுத்தலாம். சொன்னபடியும், எழுதியபடியும், கற்பித்தபடியும் வாழ்ந்து காட்டியவர்கள் தான் இன்னும் எம்மால் மறக்கமுடியாதவர் களாகவும் இறையடி சேர்ந்தும் எம்மோடு வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களைத் தொட்டுக்காட்டாமல் இன்றைய சமூகத்திற்கு எமது சமய விழுமியங்களை எடுத்துக் கூறாமல் இருக்கவும் முடியாது. இந்த வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் நல்லதொரு அர்ப்பணிப்பைச் செய்கின்றது. இதனால் இன்றைய சமுதாயத்திற்கு பல அரிய தேடல்களைத் தேடிக்கொடுத்த ஒரு நல்ல சேவை ஒன்று நிறைவேறுகின்றது என்று நம்பலாம். பொன்விழாப்பொலிவோடு மேலும் தொடரட்டும் இறைபணி என்று கூறி "இருபதாம் நூற்றாண்டில் இந்துசமய வளர்ச்சியில் இந்நாட்டவரின் பங்கு" என்ற வகையில் எனது சமர்ப்பணம்.

நாவலரின் இறுதிமூச்சு

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 1879ஆம் ஆண்டு ஆடி மாதம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசையன்று நல்லை ஆறுமுகநாவலர் ஓர் சமயப்பிரசங்கம் செய்தார். பிரசங்க முடிவில் இதுதான் எனது கடைசிப் பிரசங்கம் என்றும் கூறினார். தமக்கே உரித்தான முறையில் பிரசங்கத்தில் பேசும்போது "கடந்த 32 வருடங்களாக உங்களின் ஏச்சையும், பேச்சையும் கேட்டுக் கொண்டு பிரசங்கம் செய்தேன். எனக்குப்பின் இந்துசமயம் குன்றிப்போகும் என்றும் பலர்

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பெறும் கட்டுரை இது.

பேசுவதும் எனக்குத் தெரியும். என்னைப்போல் படித்தவர்கள் சன்மார்க்க நெறியாளர்கள் பலர் வருவார்கள். ஆனால் கைமாறு கருதாது என்னைப்போல் போதிக்க எவரும் வரமாட்டார்கள்" என்று கூறி முடித்தார்.

அப்போது சேர் பொன் இராமநாதன் அவர்கட்கு வயது 28. இவரே நாவலருக்குபின் முதன் முதலில் அவரின் எண்ணக் கருவுக்கு உருக்கொடுத்துச் செயலாற்ற முற்பட்டார் என்று கூறலாம்.

சேர் பொன். இராமநாதன் 1851 - 1930

1851ஆம் ஆண்டு சேர் பொன்னம்பல முதலியாரின் மகனாகப் பிறந்த இராமநாதன் கொழும்பிலும், சென்னையிலும் கல்வி கற்று சட்டத்துறையில் சிறந்த ஒரு வழக்கறிஞராகினார். புகையிரத விசாரணைச் சபையிலும் உறுப்பினராகியிருந்தார். வேறுபல அரசசேவைகளிலும் இருந்து பணியாற்றி 1905இல் சேவையில் இருந்து ஓய்வு பெற்று 1911இலும், 1917இலும் சட்டசபைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு அரசியலில் மிகுந்த செல்வாக்குடன் பிரகாசித்தார். அரசியல் ஞானியாக மட்டுமல்ல சிறந்த ஒரு சிவஞானியாகவும் விளங்கினார். தமிழ்நாடு திருப்பெரும் அருட்பரமானந்தரை தமது ஞானகுருவாக ஏற்று உபதேசம் பெற்றார். அரசியலில் இருந்த போதும் சரி, அரசியலைத் துறந்தபோதும் சகல மக்களையும் சமனாகப்பேணி தன்சேவையைச் செய்தார்.

1906ஆம் ஆண்டிலும், 1922ஆம் ஆண்டிலும் தமிழ் நாட்டில் நடந்த சைவ சித்தாந்த மகா நாடுகளில் தலைமைதாங்கி ஆற்றிய உரையும் அறிவுத்திறனும் அனைவரையும் கவர்ந்தது. தமிழ் நாட்டில் வெளியான "அம்பலவாணர்" என்னும் பத்திரிகை இவரைப் புகழ்ந்து எழுதியதாக அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் இந்து மகளிரும், இளைஞரும் தனித் தனியாகக் கல்விகற்று சமய கலாசார விழுமியங்களைப் பேணி நற்பிரஜைகளாக வரவேண்டும் என்னும் எண்ணத்தில் 1913இல் மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரியையும், அத்தோடு திருநெல்வேலியில் 1921இல் பரமேஸ்வராக் கல்லூரியையும் கட்டினார். அத்தோடு மாணவர் வழிபாடு செய்வதற்காக பரமேஸ்வரன் கோவிலையும் கட்டினார். இவைகள் இன்று பெருமைமிக்க சர்வகலாசாலைகளாக திகழ்கின்றன. பகவத்கீதைக்கு ஓர் ஆராய்ச்சி உரையைத்தந்தார். தமிழ் நாட்டில் கொடைக்கானல் என்ற இடத்தில் குறிஞ்சிக்குமரன் கோவிலைக்கட்டி குமரனையும் அங்கு எழுந்தருளச்செய்து திருப்தி கொண்டார்.

கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோவிலைக் கருங்கல் கட்டுமானத்திருப்பணியாக கட்டி நிலையான ஒரு புகழையும், புண்ணியத்தையும் சேர்த்துக்கொண்டார். சுமார் 30 வருடங்கள் 20ம் நூற்றாண்டில் இந்து சமய வளர்ச்சிக்கு அரும் தொண்டாற்றி 26.11.1030இல் இறையடி சேர்ந்த அவர் பூதவுடல் இராமநாதன் மகளிர்கல்லூரி வளாகத்தில் சமாதி வைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெரியார்களை ஈழத்திற்கு அழைத்து வந்து இங்கு நிரந்தரமாக வசிப்பதற்கும், அவர்களின் சேவையை இலங்கை மக்கள் பெற்று பலன் பெறவும் செய்தார். ஒருவர் இவரின் மருகராகவும் பின்பு ஆகிவிட்டார். அவர்தான் திரு சு. நடேசபிள்ளை. மற்றவர், பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ணபாரதியார். இவர்கள் இருவரும் ஈழமக்கட்கு ஆற்றிய சேவை அளப்பெரியது.

சேர் பொன் அருணாசலம் 1853 - 1924

கொழும்பு ஆனைக்குட்டி சாமியார் மேல் அதீதபக்தி கொண்டவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறந்த பாண்டித்தியம் உடையவர். இவரும் தமது தமையனாராகிய சேர் பொன் இராமநாதன் போன்று சட்டத்துறையில் மிகவும் பிரபல்ய மாக விளங்கினார். கொழும்பு வாழ் இந்துப் பெருமக்களுக்கு அவர்களின் கலாசார விழுமியங்களைப் பேணுவதற்குக் கொழும்பில் ஓர் அமைப்பு கட்டாயம் தேவையென்று வற்புறுத்தி வந்தார். கதிர்காமதலம் பற்றிய ஓர் நூலையும் எழுதிய இவர் திருமுரு காற்றுப்படையையும், தாயுமானார் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். கொழும்பு விவேகானந்த சபையின் தலைவராக இருந்து பெரும் சேவையைச் செய்தார். தனது ஞான குருவான ஆனைக்குட்டி சுவாமியாருக்குச் சமாதி அமைத்ததோடு, முகத்துவாரம் அருணாசலேஸ்வரம் கோயிலையும் கட்டியுள்ளார். 1924ல் மதுரையில் இறையடி சேர்ந்தார்.

சேர் அருணாசலம் மகாதேவா 1885 - 1969

தனது பாட்டனாரும், தந்தையாரும் கல்வி கற்ற றோயல் கல்லூரியில் கல்வி கற்ற இவர் சட்டத்துறையில் முடிக்குரிய சட்ட வாதியாகக் கடமையாற்றினார். சட்ட சபையிலும், அரசாங்க சபையிலும், 1947ஆம் ஆண்டு வரை இலங்கை பாராளுமன்றத்திலும் இருந்த இவர் உள்நாட்டு விவகார அமைச்சராகவும் இருந்தார். இந்து ஆலோசனைத் தலைவராகவும், பொன்னம்பலவாணேசர் கோயில் அறங்காவலராகவும் இருந்து பெரும் தொண்டாற்றினார். வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் காப்பாளராக இருந்து சிறந்த சேவை செய்தார். 08.06.1969இல் இறையடி சேர்ந்தார்.

உயர்திரு சேர் அம்பலவாணர் கனகசபை 1856 - 1909

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் தோன்றிய பெருமகனார் சட்டத்துறையில் மிகவும் சிறப்புடன் பணியாற்றினார். பலதுறை களில் பெரும்பதவிகளை வகித்தவர். 1903 தொடக்கம் – 1926 வரை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவராக இருந்தார். இக்காலத்தில் நாவலர் பெருமானின் எண்ணத்தையும் கருத்தையும் நல்ல முறையில் செயல்படுத்தினார். 1909இல் திருச்சியில் நடந்த சைவ சித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமைதாங்கிச் சிறப்புரையாற்றி ஈழத்திற்கு பெருமைப் தேடித்தந்தார்.

உயர்திரு ரி. பொன்னம்பலம்பிள்ளை

இவர் இலங்கையைத் தாயகமாகக்கொண்டவராக இருந்தும் தென் இந்தியாவில், திருவிதாங்கூரில், பல அரச பதவிகளைப் பெற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்து ஈழத்திற்குப் பெருமைதேடிக்கொடுத் தார். இப்பெரியார் மாணிக்கவாசகர் பற்றிய நூலையும், கொடுங்களூர் கோயில் பற்றிய வரலாற்று நூலையும், நாஞ்சில் நாடு, செங்கோடு ஆகிய வரலாற்றுப் பெருமை பெற்ற இடங்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையையும் எழுதியுள்ளார். 1912இல் காஞ்சி புரத்தில் நடந்த சைவ சித்தாந்த மகாநாட்டிற்குத் தலைமைத் தாங்கி ஆங்கிலத்தில் சிறந்த ஒரு சொற்பொழிவைச் செய்து பெரும் நன்மதிப்பைப் பெற்றார். 1911ஆம் ஆண்டில் திருவிடமும் சைவமும் என்னும் தலைப்பில் சிறப்பு மிக்க ஒரு கட்டுரையைப் பாளையங்கோட்டை சைவ சமய விருத்தி மலரில் எழுதி வெளியிட்டுப் பெருமை பெற்றார்.

அம்பலவாண நாவலர் 1860 - 1915

1915ஆம் ஆண்டு நடந்த சமாஜ விழாவிற்குத் தலைமை தாங்கினார். இவர் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையை பிறப்பிடமாக கொண்டவர். 1860இல் பிறந்த இவர் நாவலர் மேல் அதீத பக்தி கொண்டவர். நாவலர் சற்குருமணி மாலை என்னும் நூலை இயற்றினார். உமாபதி சிவம் இயற்றியதாகக் கூறப்படும் "பௌஷ்கர விருத்தி"யை வடமொழியில் அச்சிட்டு வெளியிட்டார். பெரிய புராணத்தில் நிறைந்த பயிற்சியுடையவர். வட்டுக்கோட்டை சைவ வித்தியாசாலையை நிறுவியவரும் இவரே. சிறந்த பேச்சாளர்களில் இவரும் தனக்கென ஒரு இடத்தை வகித்தவர்.

1916இல் மயிலாப்பூரில் நடந்த சமாஜ விழாவில் தலைமை தாங்கி விழாவைச் சிறப்புற நடாத்திய பெருமைக்குரியவர் திரு. குகதாசன் சபாரத்தின முதலியார் அவர்கள். யாழ்ப்பாணம் கொக்குவிலில் 1858இல் பிறந்தார். இவர் ஆறுமுக நாவலரிடம் சிறிது காலம் கற்றவர் என்றும் அறியமுடிகின்றது. 1858 முதல்– 1922வரை அரச சேவையில் இருந்துள்ளார். 1919ஆம் வருடம் இராசவாச முதலியார் என்ற பட்டத்தைப்பெற்றார். "ESSENTIALS OF HINDUISM" என்னும் நூலை 1896இல் எழுதியதோடு ஈச்சுர நிச்சயம், பிரபஞ்ச விசாரம், திருஞான சம்பந்தர் வரலாறு (ஆங்கிலத்தில்) மறுபிறப்பு உண்மை, பண்டைத்தமிழர்களின் சமயக் கொள்கை, சரவணபவ மாலை, நல்லை நான் மணிமாலை, கொக்குவில் சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை, கொக்குவில் சிவசுப்ரமணியர் மும்மணிக் கோவை, இந்து மதத்தின் முக்கிய அம்சங்கள், சிவான்மபோதம், சைவோத்தரம் என்னும் நூல்களை எழுதியுள்ளார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும் உள்ளார். இவரால் எழுதப்பட்ட தமிழர் சமயம் என்னும் ஆங்கில ஆராய்ச்சிக் கட்டுரையை, தமிழில் மொழிபெயர்த்து, இவரது ஆத்ம நண்பரான சென்னை சைவப் பெரியார் திரு. செ. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் இந்து சாதனப் பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டுள்ளார். 1922.11.15இல் இவர் இறையடி சேர்ந்தார்.

1918இல் கும்பகோணத்திலும் 1920இல் மாயூரத்திலும் நடந்த பெருவிழாக்களில் பெருமையுடன் தலைமைதாங்கிச் சிறப்பித்தவர் யாழ் வண்ணார்பண்ணை சின்னத் தம்பிப்பிள்ளையின் புதல்வரான சுவாமி நாத பண்டிதர். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சீடர்களின் பரம்பரையில் வந்த வித்தகர். சைவசித்தாந்த சாகரம். இவர் சிவஞான படியத்தை முதன்முதலில் பதிப்பித்தவர். தேவாரத் தலமுறையையும் பதிப்பித்ததோடு, திருமுறைப்பெருமையெனும், தலைசிறந்த ஆராய்ச்சி முகவுரையையும் எழுதினார். சிவஞானபோத மாபாடி, திருக்கோவையார் உண்மை, தேவார அடங்கன் முறை, திருவிளையாடற்புராணம், குமரகுருபரபிரபந்தம், சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தம் முதலிய சைவ சித்தாந்த நூல்களை வெளியிட்டார். (சிறந்த நூல்களை சேகரித்தும், செந்தி நாதையர் சேகரித்து வைத்திருந்த நூல்களை விலைக்கு வாங்கியும்) சிறந்த ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்துப் பாதுகாத்து வந்தார். இவரின் சமயத்தொண்டையும், தமிழ்ப்பற்றையும் மெச்சி தருமபுர ஆதீனம் இவருக்கு "வித்துவ சிரோமணி" என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தது. இவர் இவ்வுலக வாழ்வை நீத்த துக்கச் செய்தியை அறிந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பண்டிதரைக் குறித்து பின்வருமாறு பாடி இரங்கினார்.

"சொன்னார்கள் அந்தோ சுவாமிநாதப்பெரியோன்
மன்னான பண்டிதரும் மாண்டானால் – என்னேதான்
இந்து முடித்தான் சமயம் என்படுமோ என்படுமோ
செந்தமிழும் என்படுமோ தேர்"

ஆம்! எந்த அளவு சுவாமிநாத பண்டிதர் இந்து மதத்திற்கும், தமிழுக்கும் சேவைபுரிந்தார் என்பதற்கு இந்தக் கவி ஒன்றே போதும்.

மட்டு நகர் தந்த விபுலானந்த அடிகள் (1892 - 1947)

1935இல் திருவண்ணாமலையில் நடந்த சமாஜ விழாவிற்கு தலைமைதாங்கி, மிகவும் சிறப்பாக நடாத்திய பெருமைக்குரியவர் ஈழத்தாய் பெற்றெடுத்த மட்டுநகர் காரை விபுலானந்த அடிகள். இவர் நாவலர்பெருமானுக்குப் பின் அவதரித்த ஒரு பெருமகனார். ஆங்கிலத்திலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற அடிகள். மதுரைச் தமிழ்ச்சங்கப் பண்டிதராகி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கடமைபுரிந்த வேளையில், இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து துறவறம் பூண்டார். யாழ் நகருக்கு நாவலர் எப்படியோ அப்படி மட்டக்களப்பில் சைவசமய நெறிமுறை குன்றிவிடக்கூடாது என்ற நோக்கில், பல பாடசாலை களையும் அனாதைப் பிள்ளைகள் இல்லங்களையும் அமைத்து செம்மையான சேவையைச் செய்து வந்தார். விஞ்ஞானம் பற்றிய பல கட்டுரைகளைச் சிறந்த முறையில் எழுதிச் செந்தமிழ் பத்திரிகையில் வெளியிட்டார். மதங்க சூளாமணி, ஆங்கில வாணி முதலிய நூல்களை வெளியிட்டு வைத்தார்.

இவர் செய்த பெரும்பணி 'யாழ் நூல்' வெளியீடாகும். எவரும் சிந்திக்காத ஒரு செயற்கரிய ஆய்வு செய்து மறைந்து போன யாழை மீட்டுத் தந்து, மீட்டும்படி ஊக்குவித்த இசை வள்ளல், கொடை வள்ளல் என்றும் இவரைக்கூறலாம்.

திருக்கொள்ளம்புத்தூரில் 'யாழ் நூல்' அரங்கேற்றம் கண்ட பின்னர் ஆன்மா சாந்திபெற்ற ஞானி 1935ஆம் வருடம் திருவண்ணா மலையில் நடைபெற இருந்த சமாஜ விழாவிற்கு வருகைதந்த அடிகளாரை புகையிரத நிலையத்தில் இருந்து நகருக்கு ஊர்வலமாக அழைத்துச்சென்ற அந்த கண்கொள்ளாக் காட்சியைக் காணக்கண் ஆயிரம் வேண்டும் என்று குல சபாநாதன் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்ல! அன்று அவர் ஆற்றிய அழகொழுகும் தமிழ் பேருரையைக் கேட்டுச் செவிமடுத் தோரில் தானும் ஒருவன் என்றும் கூறியுள்ளார். ஆம்! விபுலானந்தர் காலம் இலங்கையில் ஒரு பொற்காலம்தான்.

1953இல் சமாஜ விழாவிற்குத் தலைமைதாங்கி சிறப்புச் செய்த பெரியார் யாழ் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாக கொண்ட சட்டதரணி திரு. வி. நாகலிங்கம் அவர்கள். தனித்தன்மை கொண்ட மறை மலையடிகளுடைய மிக நெருங்கிய நண்பர். தமிழிலே எழுத வேண்டும் என்ற ஆர்வலர். சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், கந்தரலங்காரம் ஆகியவற்றின் உரையாசிரியரான கொழும்பு திருவிளங்கம் அவர்களிடம், சித்தாந்த சாஸ்திரங்களைப் படித்து இந்துசமய வாழ்விற்குப் பல தொண்டுகளைச் செய்தார். இரத்தினபுரியில் வாழ்ந்த இவரது நண்பரான திரு. கே. சிதம்பரநாதன் அவர்களின் தொடர்பால் அங்கு செல்லும் காலங்களில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். வழக்கறிஞரான இவர் வாதத்துறையிலும் சிறப்புடன் திகழ்ந்ததோடு சமயப் பிரசாரங்களிலும் சிறப்புற்று மலையகத்தில் சமய உணர்வை வளர்த்தார்.

சேர் கந்தையா வைத்தியநாதன்

"மாந்தையில் ஒரு தேன் பொந்து இருக்கின்றது. அதைக் கண்டுபிடித்துச் சைவர்கள் அனைவரும் பருகி உய்ய வேண்டும்" என்ற நாவலர்பெருமானின் கூற்றை மெய்யாக்கி நாம் அனைவரும் தேனைப்பருக செய்த பெருமகனார். நல்லடியார் திருக்கூட்டத்தில் தமக்கென ஒரு இடம் பெற்றவர். 1950ல் சேர் பட்டம் பெற்று 1954இல் விருது நகரில் நடந்த சமாஜப் பெருவிழாவில் தலைமைதாங்கி ஆற்றிய உரையைக் கேட்ட அனைவரின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரின் ஆற்றலையும் அறிவுத் திறனையும் பலரும் பாராட்டி, பேசியும் எழுதியும் உள்ளார்கள். யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாக கொண்ட இப்பெருமகனார் இலங்கை நிர்வாக சேவையில் நற்பணி புரிந்த சிறந்த ஒரு சேவையாளர்.

1947 – 1953 வரை இலங்கை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவருக்கு இருந்த அரசியல் ஞானத்தால் உலக அரங்கில் இலங்கைக்கு அழியாப் புகழை ஈட்டித்தந்தார். இவர் நாவசைய நாடசையும் என்னும் அளவிற்கு அரசியலில் வல்லமை பெற்றிருந்தார். கைத்தொழில் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது பல திட்டங் களை உருவாக்கி நன்மதிப்பைப்பெற்ற இவர் அரசியலும், அரச சேவையிலும் இருந்து இளைப்பாறிக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட நாவலர் கழகத்தின் அதிபராகிச் சிறிது காலம் கடமையாற்றினார். கொழும்பு இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட இவர் இக்கல்லூரியின் அதிகார சபையின் தலைவராகிப் பல சேவைகளைக் கல்லூரிக்கு செய்ததோடு, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவராகவும் ஆகி மன்றத்தின் வளர்ச்சியில் பெரிதும் உழைத்தார். இந்துமத தத்துவத்தின் ஞானத்திலும், சமய ஆராய்ச்சியிலும் அதிக சிரத்தையுடன் செயல்பட்டார்.

திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் தலைவராகிய நாள் முதல் எம்பெருமானின் திருப்பணியில் அயராது உழைக்கத் தொடங்கினார். இவரது சேவைக்கு நிகராக யாதையும் எடுத்துக்கூறமுடியாத அளவிற்குப் பணியாற்றித் திருக்கேதீச்சரப் பெருமானின் திருக்கோயிலைப் பண்டைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று அல்லும் பகலும் உழைத்த பெரியார் என்றால் மிகையாகாது. 20ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற பெரிய ஒரு தெய்வத்தொண்டு திருக்கேதீச்சரத்திருப்பணி. இந்த தொண்டில் ஈடுபட்டு செயலாற்றிய அனைத்துப் பெரியார்களும் இந்து மதத்திற்கு அரும்பெரும் சேவை செய்த பெரியார் வரிசையில் வைத்துக் கௌரவிக்கப்படவேண்டியவர்களே.

1955இல் சிதம்பரத்திலும் 1956இல் பெண்ணாகடத்திலும் நடந்த சமாஜப் பெருவிழாக்களில் தலைமை தாங்கிச் சிறப்புற நடாத்திய பெருமை பெற்றவர் திரு. சுப்பையாபிள்ளை நடேச பிள்ளை அவர்கள். (சேர் பொன் இராமநாதன் அவர்களின் மருகர்) இவர் தஞ்சை இலக்கண இராமசாமிப்பிள்ளை அவர்களின் வழித்தோன்றலர். இந்த இராமசாமிப்பிள்ளை அவர்கள் பிற்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ அருட்பரமானந்த சுவாமிகள் என்று மறு நாமம் பூண்டு சேர் பொன் அருணாசலம் அவர்கட்கும், சேர் பொன் இராமநாதன் அவர்கட்கும் ஞான குருவாக இருந்தார். இவரின் பேரனார்தான் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் பிறப்பால் தமிழ் நாட்டவர். திருமண பந்தத்தாலும், செயற்கரிய செய்த சேவையாலும் ஈழத்தவரானார். இவரைச் சேர் பொன் இராமநாதன் தனது பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக நியமித்து பின் தனது மகளான சிவகாமசுந்தரிக்கு இவரைத் திருமணம் செய்து மருகராகவும் ஏற்றுக்கொண்டார். தமிழ், இலக்கியம், சமயம், இலங்கைச் சரித்திரம் போன்றவற்றில் தலைசிறந்த அறிவும், ஆற்றலும் பெற்றிருந்த திரு. சு. நடேசபிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் பேருரையாற்றும் சொல்லாற்றல் பெற்றவர். பல்துறைகளிலும், சிறப்பான ஆற்றல் பெற்ற இவர் இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு இவரது மாமனார் எந்த வகையில் அரும்பாடுபட்டுச் சேவை செய்தாரோ அந்தத் துறைகளில் எந்த குறையும் வராமல் கண்ணும் கருத்துமாக உழைத்ததோடு, அவர்களால் அமைக்கப்பெற்ற நிறுவனங்களின் முகாமை யாளராகவும் இருந்து பணியாற்றினார். வட இலங்கையில் ஓர் இசைக்கல்லூரி ஒன்று வேண்டும் என்ற பெருவிருப்பத்தோடு செயல்பட்டு அந்த எண்ணமும் நிறைவுறக் கண்டு மகிழ்ந்தார். பக்திச்சுவைசொட்ட பாடும் ஆற்றல் கொண்ட திரு. நடேசபிள்ளை கதிர்காமநாதர் திருப்பள்ளி எழுச்சி, சகுந்தலை வெண்பா முதலிய நூல்களை இயற்றியவர். வட இலங்கையில் ஓர் இந்து கலாசாலை அமைய வேண்டும் என்ற எண்ணங்கொண்டு செயற்பட்டு வெற்றியும் கண்டார்.

திருமதி சிவகாமசுந்தரி நடேசபிள்ளை

தனது தந்தையாரின் இறப்பின் பின் தன் கணவரான திரு. சு. நடேசபிள்ளை பொறுப்புக்களை ஏற்று நடத்துவதற்கு உறுதுணையாக இருந்து சகல வழிகளில் பூரணமான ஒத்துழைப் பையும் நல்கி தம் மூதாதையரின் தொண்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர் திருமதி சிவகாமசுந்தரி அம்மையார்.

மேலைப்புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை (1844 - 1907)

சைவம் வளர்த்த சான்றோர் வரிசையில் இப்பெரியாரை எவரும் மறக்கமுடியாது. சமயப்பிரசங்கத்திலும், நூல் ஆக்கப் பணியிலும், உரை எழுதும் ஆற்றல் மிக்க இவர் கூர்மபுராணஉரை, பழனித்தலபுராண உரை, சைவசித்தாந்த சுருக்கம் ஆகியவற்றை எழுதியுள்ளார். தமிழ் அகராதி தொகுத்த பெருமையும் இவரைச் சாரும். தமிழிலும் வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் ஈழத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டிலும் பல பிரசங்கங்களைச் செய்து பெருமைதேடித் தந்தவர். தமிழ் நாட்டின் சிறந்த தமிழ் அறிஞர் களான திரு. வி. கல்யாணசுந்தரனார், உலகநாதமுதலியார் போன்றோரின் ஆசானாகவும் இருந்தவர் என்றால் அந்த அளவு சிறப்புற்றிருந்தார் என்பதைக் கூறவும் வேண்டுமா! இதனைக் கருத்தில் கொண்டுதான் போலும் பெரியார் சைவப்புலவர் க. சி. குலரத்தினம் அவர்கள் இப்படி எழுதியுள்ளார் – "வருடத்தில் மார்ச் மாதம் 26ம் திகதியைப் புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை ஐயாவின் நினைவாக கொள்வோமாக".

சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் (1855 - 1922)

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் வாழ்ந்த அம்பலவாணர் தம்பதிகளின் மைந்தராக 1855.01.18இல் பிறந்தார். இவர் தந்தையாரும் சைவ சித்தாந்த நூல்களிலும், புராண இதிகாசங் களிலும் நல்ல பாண்டித்தியம் உடையவராக இருந்ததோடு தமது இல்லத்தில் திருமுறைகளை ஓதல், ஓதுவித்தல், புராண படனங் களைப் படிப்பித்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபட்டிருந்தார். புகழ்பெற்ற சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களுக்கு ஆசிரியராகவும் இருந்தவர். இப்படியான சூழலில் வளர்ந்த

குமாரசாமிப் புலவர் இயற்கையாகவே சைவசமய நூல்களில் மிகவும் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். பண்டிதமணி முருகேசு பண்டிதரிடமும், நாகநாத பண்டிதரிடமும் தமிழையும், வடமொழியையும் கற்றுத் தேறினார். சிறந்த சொற்பொழிவாளராகத் திகழ்ந்த இவரை நாவலர் பெருமான் வியந்து பாராட்டியுள்ளார். குமாரசாமிப்புலவரின் கல்வித்திறமையை நன்குணர்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளை தம்மால் தொடங்கி வைக்கப்பெற்ற சைவ வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராக நியமித்தார். உதயபானு, விஞ்ஞான வர்த்தனி, இலங்கை நேசன் போன்ற பத்திரிகைகளில் இலக்கிய, சமய ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வந்தார். ஏழாலை சைவப்பிரகாச வித்தியாசாலையில் இருந்து விலகிய பின் 1902ஆம் ஆண்டில் இருந்து ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியசாலையின் தலைமை ஆசிரியராகி அமரராகும் காலம் வரை இப்பாடசாலையில் இருந்து சேவை செய்தார். இக்காலம் ஒரு பொற்காலம் என்றுதான் கூறவேண்டும். மதுரையில் கூடிய சங்கத்தில் புலவரை சங்க அங்கத்தவராகச் சேர்த்து வைத்த பண்டிதரைத் தேவர் அவர்கள் மேலும் இவரை புகழ் ஏணியில் ஏற்றி வைத்தார். புலவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் சிறந்த பேச்சாளராக இருந்ததால், இலக்கிய சமய பிரசாரங்களில் தலைசிறந்த ஒருவராக இருந்து, தமிழுக்கும், சமயத்திற்கும் அரும் தொண்டாற்றியதோடு, பல நூல்களையும் எழுதியுள்ளார். சிறப்பாகத் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்ற நூல் மூலம் 20ஆம் நூற்றாண்டில் தமிழுக்கும், சமயத்திற்கும் தொண்டாற்றிய பல ஈழத்துப்புலவர் பெருமக்களை அறிமுகம் செய்துள்ளார். இவர்களில் பலர் நல்லை நகர் ஆறுமுக நாவலரின் மாணாக்கர் களாகவும் இருந்துள்ளார்கள் என்பதையும் நம்மால் அறியமுடி கின்றது. இவர்கள் பல நூல்களை இயற்றியும் நாவலர் வழியில் சமயத்திற்குத் தொண்டு ஆற்றி உள்ளனர்.

புலவர் பெருமக்கள்

1.	சிறுப்பிட்டி	சி. வை. தாமோதரம்பிள்ளை	1832 – 1901
2.	நல்லூர்	திருஞானசம்பந்தபிள்ளை	1849 – 1901
3.	நல்லூர்	பொன்னம்பலபிள்ளை	1836 – 1902
4.	கோப்பாய்	சபாபதி நாவலர்	1843 – 1903
5.	உடுப்பிட்டி	கு. கதிரவேற்பிள்ளை	1829 – 1904
6.	இணுவில்	அம்பிகைபாகர்	1884 – 1904
7.	இணுவில்	நடராசையர்	1844 – 1905
8.	சுழிபுரம்	ஞானசம்பந்த உபாத்தியாயர்	– 1906
9.	புலோலி	நா. கதிரவேற்பிள்ளை	1844 – 1907
10.	உடுப்பிட்டி	சிவசம்பு புலவர்	1852 – 1910
11.	மாதகல்	ஏரம்பையர்	1847 – 1914
12.	ஊரெழு	சரவணமுத்துப்பிள்ளை	1848 – 1916
13.	நீர்வேலி	சிவப்பிரகாச பண்டிதர்	1864 – 1916
14.	தெல்லிப்பளை	ச. சிவானந்தையர்	1873 – 1916

திரு. மு. திருவிளங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிறந்த இவர் சிறந்த கல்வி மானாகத் திகழ்ந்தார். இளமையில் இருந்தே இறை உணர்வு ஊட்டப் பெற்ற இவர் தேவாரதிருமுறைகளில் அதிக நாட்டமுடையவராகவும் இருந்தார். கொழும்பு தோமஸ் கல்லூரியில் சில காலம் ஆசிரியராக இருந்தார். ஆசிரியராக இருந்த காலத்தில் திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்றவற்றைக் கற்பதில் ஆர்வம் காட்டிய இவர் சகலவிதமான ஆன்மீக நூல்களையும் கற்றுத் தெளிந்தார். இவர் யோகர் சுவாமிகளின் திருவருள் நோக்குக்கும் இலக்கானார். யோகரின் அருட்கடாட்சம் கூட்ட அருணந்தி சிவாச்சாரியார் அருளிய சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குச் சிறந்த ஓர் உரையை எழுதியதால், இந்த 20ஆம் நூற்றாண்டில் முன்பு எழுதப்பட்ட ஆறு உரைகளுக்கும், மேலான ஒரு விளக்க உரையை இவர் எழுதியுள்ளார் எனப் போற்றப்பட்டார்.

"1934ல் முன்பு எழுதப்பெற்ற ஆறு உரைகளையும் நன்கு கற்று திருவாளர் கொழும்பு திரு. மு. திருவிளங்கம் என்ற பேரறிஞர் ஒரு தெளிவான விளக்கவுரையை இந்த 20ம் நூற்றாண்டில் இயற்றியுள்ளார்" என்று சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தினர் குறிப்பிட்டுள்ளனர். சென்னை அறநிலைய நிர்வாகத்துறை ஆணையர் திரு. அ. உத்தராண்டராமன் ஐ. ஏ. எஸ் அவர்கள் 1960இல் மேற்கூறிய கருத்தை தானும் கூறிப் பாராட்டியுள்ளார்.

புலோலி சு. சிவபாதசுந்தரம் (1878 - 1953)

ஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து திருக்கேதீச்சரத்தின் மகத்துவத்தைத் தமது ஆக்கபூர்வமான எழுத்துக்களால் சைவசமயிகளை சிந்திக்க வைத்தவர் புலோலி நகர் தந்த தமிழ்ப்பெரியார், சைவத்தின் மூச்சு சு. சிவபாதசுந்தரம் **B.A** அவர்கள். இவரது ஊக்கத்தின் பயனாக 19.10.1948இல் கொழும்பில் கூடிய சைவப் பெருமக்கள், திருக்கேதீச்சரத் திருப்பணிப் புனருத்தாபன சபையை ஆரம்பித்தார்கள். இச்சபையின் தலைவராகச் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களுடன் தானும் தனது உடல், பொருள், ஆவிகளை அர்ப்பணித்துத் திருப்பணிக்கு முற்றுமுழுதாகச் செயற்பட்டார்கள். தனது முதுமைப்பருவத்திலும் இத்திருப்பணியைச் சிறப்பாக செய்து முடிக்கவேண்டும் என்ற உந்துதலால் மலேசியா நாட்டில் உள்ள சைவ அன்பர்களிடம் இருந்து நிதி பெறுவதில் பெரிதும் உதவினார். திருக்கேதீச்சரத்தில் ஆனந்த தாண்டவம் செய்யும் அற்புதமான நடராசர் திருவுருவத்தைச் சொந்த தேட்டத்தின் மூலம் செய்து கொடுத்தார்.

கலைப்பட்டதாரியான இவர் புலோலி வேலாயுதம் ஆங்கில வித்தியாலயத்திலும், யாழ் பரமேஸ்வராக் கல்லூரியிலும் ஆசிரியரா கவும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் அதிபராகவும் பணியாற்றியபோது ஒரு நல் மாணவ சமுதாயத்தை உருவாக்கினார். பெரியார் பல தமிழ் நூல்களை எழுதிய அதே வேளை சைவபோதம் 1ஆம், 2ஆம் புத்தகங்களையும், திருவருட்பயன் விளக்கவுரை, சைவக் கிரிகை விளக்கம், திருப்பெருவடிவம், திருவாசகமணிகள், சைவ சித்தாந்தம், சைவசமயசாரம் போன்ற நூல்களை எழுதிப் பெரும் தொண்டாற்றினார். இவரைப்பற்றிப் பண்டிதமணி இப்படிக் கூறினார். "**பெரியாரது வாழ்க்கை சமய வாழ்க்கை யாகும். அவரின் மூச்சு சைவ மூச்சாகும்**"

பெயரும் புகழும் பெற்ற பெண்மணி ஒருவர் தான் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காகச் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் பல தவறுதல் இருப்பதாகக் கண்டு கொதித் தெழுந்த தருமபுர ஆதீனம், இந்த பெண்மணியின் கருத்திற்குத் தக்கபதிலை எழுதக்கூடியவர் இலங்கையில் உள்ள திரு. சிவபாத சுந்தரம் தான் என்று கருதி, இவரை இதுவிடயமாக தக்கபதிலை அனுப்பும்படி பணித்தார்கள். சிவபாதசுந்தரம் அவர்களும் சைவத் திருமுறைகளில் தக்க சான்றுகளைக் காட்டி ஆங்கிலத்தில் பெண்மணியின் கருத்தினை மறுத்து எழுதி

அனுப்பினார். இதனால் பெரும் மதிப்பு பெற்று ஆதீனத்தால் பாராட்டுப்பெற்றார். இது ஒன்றேபோதும் எம்மவர் செய்த தொண்டை நாம் அறிய.

திரு. சு. இராசரத்தினம் (1884 - 1970)

20ஆம் நூற்றாண்டில் சைவம் வளரவேண்டும் என்ற எண்ணத்தில் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட பெரியார் இந்து போட் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். 1884ஆம் ஆண்டு ஆடி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் யாழ் மத்திய கல்லூரியிலும், கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்று கொழும்பு சட்டக்கல்லூரியில் சட்டம் கற்றுக் குடியியல் சட்டத் துறையில் சிறந்து விளங்கினார். யாழ் மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிபதியாகவும் பணியாற்றினார்.

அப்போதைய அரசியல் சூழ் நிலையால் சைவமும் தமிழும் பெரிதும் பாதிப்புள்ளாகும் நிலையைக்கண்டு தமது பதவிகளைத் துறந்துவிட்டு மார்கழி 1923ஆம் வருடம் சேர் பொன் இராமநாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையாளராகவும், செயலாளராகவும் இருந்து அயராது உழைத்தார். சைவச்சிறுவர்கள் சைவச்சூழலில் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கில், யாழ்ப்பாணக் குடாநாடு, தீவகப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் சிலாபம், புத்தளம் போன்ற பிரதேசங்களிலும், மலைநாட்டுப் பகுதிகளிலும் சைவப்பாரம்பரியகளைப் பேணும்வகையில் 1958ஆம் வருடத்தில் மொத்தமாக 187 பாடசாலைகளை அமைத்து நிர்வகித்து வந்தார். இத்தகைய பாடசாலைகளில் கல்வி புகட்டுவதற்குச் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அவசியம் தேவை என்பதை உணர்ந்த இவர் 1928ஆம் ஆண்டில் தனது முயற்சியால் யாழ் திருநெல்வேலியில் ஓர் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை உருவாக்கினார். 1963ஆம் ஆண்டு வரை 1500க்கு மேற்பட்ட சைவதமிழ்பண்பாட்டில் பாண்டித்தியம் உடைய ஆசிரியர்கள் உருவானார்கள். இது திரு. சு. இராசரத்தினம் அவர்கட்குக் கிடைத்த ஒரு பெருமதிப்பாகும். 1930ஆம் ஆண்டில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான இரண்டு விடுதிகளை ஆரம்பித்து இதில் ஆதரவற்ற அனாதைப்பிள்ளைகளைச் சேர்த்து அவர்கள் படிப்பதற்காக இரண்டு பாடசாலை களையும் அமைத்தார். சமூகத்தில் பின்தங்கிய பிள்ளைகளையெல்லாம் பல எதிர்ப்புக்களின் மத்தியில் இப்பாடசாலையில் சேர்த்துக் கல்வி கற்க வைத்தார். பன்னிரு திருமுறைகட்கும் முன்னுரிமை கொடுத்துப் பாடசாலைகளில் பண்ணிசை ஆசிரியர்களை 1954இல் நியமனம் செய்து அதிலும் மனநிறைவு கண்டார். 35 வருடம் அளவற்ற சேவை செய்து இந்துபோட் என்றால் இராசரத்தினம் என்ற அழியாப்புகழைத் தேடிவைத்துவிட்டு 1970ஆம் ஆண்டு பங்குனி மாதம் 12ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இவர் இந்த 20ஆம் நூற்றாண்டில் சைவத்திற்கும், தமிழ் மக்களுக்கும் செய்த பணி பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டியதாகும்.

திரு. க. இராமச்சந்திரா (1895 - 1975)

தீவுப்பகுதிகளில் இருதயம் என்று போற்றப்படும் நயினையம் பதியைத் தமது பிறந்த மண்ணாகக் கொண்டவர் அமரர் இராமச் சந்திரா அவர்கள். புனித பூமியாகப் போற்றப்படும் நயினாதீவு, இராமச்சந்திரா என்ற நல்முத்தை தந்ததால் மேலும் உலகில் போற்றப்படும் பெருமையைப் பெற்றுக்கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. திருவண்ணாமலையில் ரமணமகரிசியின் ஆசீர் வாதத்தைப் பெற்ற இவர் அவரின் உத்தம சீடராகத் தனது வாழ் நாள் முழுவதும் திகழ்ந்தார்.

1914ஆம் ஆண்டில் புகையிரதப்பகுதியில் சாதாரண ஒரு பயிலுனராக இணைந்த இவர் சேவையில் இருந்து இளைப்பாறும் பொழுது இந்தத்திணைக்களத்தின் அதி முக்கிய பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இவரை இலங்கையில் ஓர் இல்லற ஞானி என்று எல்லோரும் கௌரவித்து மதித்தார்கள். இவர் தன் வாழ் நாளில் தனது அறிவாலும், எழுத்தாலும், பேச்சாலும் இந்து சமயத்திற்கு ஆற்றிய சேவையை விபரிப்பதாயின் விரியும். சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன். இந்த விடயங்கள் பலருக்கு வியப்பாகவும் இருக்கும்.

1. யாழ்ப்பாணத்திற்கும் தீவுகளுக்கும் இணைப்புப் பாதையான பண்ணைப் பாலத்தை அமைப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர் என்பதை பலரும் அறியார்.
2. கொழும்பில் இந்துசமய பெண்பிள்ளைகள் கல்வி கற்பதற்கு ஒரு தனியான பாடசாலை வேண்டும் என்று தனது நண்பரான எம். எம். குலசேகரத்தோடு இணைந்து 1931இல் பாடசாலையை அமைத்தார். (சைவ மங்கையர் கழகம்)
3. ஐரோப்பிய நாடுகளுக்கும், இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் பல முறை இந்துசமய சார்பான மகாநாடு களுக்குச் சென்று தமிழிலும், ஆங்கிலத்திலும் எல்லோரும் மெச்சும்படியான உரைகளை நிகழ்த்தியுள்ளார். சிறப்பாக அந்த நாட்டு வானொலிகளிலும், ஒளிபரப்புச் சேவைகளிலும் தோன்றி உரையாற்றியுள்ளார். 1960இல் இலண்டனில் பி.பி.சியிலும் 1963இல் அமெரிக்காவிலும், 1968, 1969இல் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் சிறப்பாக உரையாற்றி ஈழமண்ணின் பெருமையை மேம்படுத்தியுள்ளார்.

1915இல் அனுராதபுரத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்ததும் சிறிய ஓலைக்கொட்டிலில் ஓர் வேலாயுதம் இருந்ததையும் அதனைப் பராமரித்துவருபவர் யார் என அறிந்து அவரின் சம்மதத்தோடு சிறிய ஓர் மடலாயம் ஆக ஆக்கினார். இன்றைய புதியநகர் ஸ்ரீ கதிரேசன் கோயில் அனுராதபுரத்தில் தோன்றுவதற்கு மூலகாரண மாக இருந்தது இந்தச் சிறிய மடாலயம் தான் என்பதைப் பலரும் அறியார்.

1924இல் நாவலப்பிட்டிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இராமச்சந்திரனார் மலைநாட்டுத் தமிழ் சைவச்சிறுவர்களின் கல்வி நிலையைக்கண்டு மிகவும் மனம் நொந்து மிகுந்த சிரமத்துடன் 12 சிறு பிள்ளைகளைச் சேர்த்து அங்கு பேரளவில் இருந்த இந்து வாலிபர்சங்கத்தில் ஓர் பாடசாலையை ஆரம்பித்தார். இந்த வித்தியாலயம் தான் நாவலப்பிட்டி கனிஸ்ட வித்தியாலயம் என்ற பெயரிலும், இவரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட மற்றைய பாடசாலை, குமார மகாவித்தியாலயமாகவும் இன்றும் திகழ்கின்றன.

1947இல் இந்துசமய சஞ்சிகை ஒன்று மாதவெளியீடாக வரவேண்டும் என்ற ஆவலால் திரு. நா. முத்தையா அவர்களை ஆசிரியராகவும், தான் கௌரவ ஆசிரியராகவும் இருப்பதாகக் கூறி ஆத்மஜோதி என்ற மாத வெளியீட்டை திரு. நா. முத்தையா மூலம் வெளியிட்டு வைத்தார். நாவலப்பிட்டியில் இருந்து இந்த சஞ்சிகை வெளிவந்து இந்து தர்மத்திற்கு ஆற்றிய சேவையை யாவரும் அறிவர். இன்று எங்கு பார்த்தாலும் கூட்டு வழிபாடு, பஜனை சபைகளும் நிறைந்துள்ள இந்த ஈழ நாட்டில், 1939இல்

தனது இல்லத்தில் முதன்முதலாக இப்படியான ஒரு வழிபாட்டு முறையை ஆரம்பித்து வைத்து அடியார் பலர் சூழ பாடி மகிழ்ந்தவர் இசைமச்சந்திரா.

1927இல் இலங்கை வந்த மகாத்மாவின் காலடி பட்ட புனித இல்லமாக இவரது இல்லம் திகழ்ந்தது. அத்தோடு 15 தொடக்கம் 20ஆம் நூற்றாண்டில் அவதாரம் எடுத்து இந்து மதத்திற்குச் சேவை செய்த மகான்களின் பிறந்த தினங்களை மிகச் சிறப்பாக கொண்டாடிய பெருமையும் இவரைச்சாரும். இதனால் பல கண்டனங்கட்கும் இவர் ஆளானார் என்பதும் உண்மை.

1940இல் நாவலர் பெருமானின் வரலாற்றை எழுதும்படி கவியோகி சுந்தரானந்தரைக் கேட்டுக்கொண்டதோடு அதற்கான அச்சுக்கூலியையும் அவருக்கு அனுப்பி வைத்தார். நாவலர் பெருமான் மீது வற்றாத பேரன்பு பூண்டார் என்பதைத் தனது பாடல் மூலம் இப்படிக் கூறுகின்றார். "அச்சமுற்ற அடிமைகளாய் அயலார்க்கஞ்சி" என்ற பாடலில் ஈற்றடியில் "எழில்நல்லை நாவலர்தாள் ஏத்துவோமால்" என்று போற்றுகின்றார். "இவர் ஓர் சிறந்த கவிஞர். இவர் பாடிய பல பாடல்கள், எழுதிய பல நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவரைப் பற்றிப் தமிழ் பேரறிஞர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இப்படிக் கூறியுள்ளார். "இராமச்சந்திரனார் பழைய இந்திய தத்துவ உலகினைத் தமிழ் உலகத்திற்கும், மேல் நாட்டிற்கும் அறியச் செய்துவரும் ஒரு சைவப்பெரியார்." பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இப்படிக் கூறுகின்றார். "இராமச்சந்திரனார் சமய தத்துவ, இலக்கிய, கவிதை, சரித்திர, வானசாஸ்திரம் போன்ற பல்கலைகளிலும் முழுகித்திழைத்த முதிர்ந்த அன்புக்கனி!"

நயினை சுவாமிகளின் நல்லாசிகளைப்பெற்ற இராமச் சந்திரனார், அவரின் கட்டளைப்படி இந்து சமயத்திற்கு அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார். சமரச ஞானக்கோவை என்ற நூலை எழுதியதால் பெரும் புகழ் பெற்றார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 1899

தந்தை வழியால் மட்டுவிலையும் தாய்வழியால் தனங் கிளப்பையும் கொண்டு, தமிழ்த்தாயும் சைவமும் செய்த நற்பயனால் அவதரித்தவர்தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். தந்தையார் ஓர் பரோபகாரி. புராண இதிகாசங்களில் நல்ல பாண்டித்தியம் உள்ளவர். அவரின் மகனாகப் பிறந்த பண்டிதமணி இயற்கையிலேயே ஆற்றல் மிக்கவர். தந்தையாரின் புலமையும், ஊக்கமும் இருந்தும் 10 வயதுடன் படிப்பை நிறுத்தி விட்டு துடுக்குத்தனத்துடன் திரிந்த இவருக்கு 18ஆம் வயதில் கல்வி பயில வேண்டும் என்ற ஆர்வம் மீண்டும் ஏற்பட்டது. நாவலர் காவியப் பாடசாலையில் தங்கும் இடவசதியுடன் கல்விகற்க ஆரம்பித்தார். இவருக்கு ஆசான்களான சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் நல்லூர் நாவலர் வழி உறவினர் கைலாசபிள்ளை போன்றோர் இருந்தனர். நான்கு ஆண்டுகளில் ஓர் உச்ச விவேகியானார் கணபதிப்பிள்ளை. 1922இல் தனது குருவான குமாரசாமிப்புலவர் மறையும்வரை பண்டிதர் பரீட்சை எடுக்கப் பயந்து இருந்த இவர் 1926இல் பண்டிதர் பரீட்சை எடுத்து மிகத் திறமையாகப் பரீட்சையில் தேறினார். நாவலர் பாடசாலையில் அதிபராகினார். திருமணத்திற்கான பூர்வாங்க நடவடிக்கையில் உறவினர் முயன்றனர். திருமணம் வேண்டாம் என்று முடிவு செய்தார். திருநெல்வெலி சைவாசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். திருநெல்வேலி கலாசாலை வீதியில் சிறு குடிசை ஒன்றை அமைத்து அங்கேயே இருந்து பலருக்குக் குருகுலக்கல்வியை புகட்டிவந்ததோடு, நூற்றுக்கணக்கான பண்டிதர்களையும், ஆயிரக்கணக்கான நல் ஆசிரியர்களையும் உருவாக்கினார். தஷ்சகாண்டத்திற்கு சிறந்த ஓர் ஆய்வுரையும், விரிவுரையும் தந்து மேலும் எண்ணிக்கைக்கு அடங்காத கட்டுரைகளையும் தந்தவர். சிறந்த ஒரு ஞானப் பொக்கிஷம். பேசும்போது அடக்கமும், அருளும் அவர் முகத்தில் தோன்றி பக்திநிலையை ஏற்படுத்தும். சுவாமி விபுலானந்தரை மட்டக்களப்பு பண்டிதமணி பெரியதம்பிக்கு அறிமுகம் செய்து வைத்தவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைதான் என்றால் வியப்பாக இல்லையா!

திருவாசகம் சி. சபாரத்தினம் சுவாமிகள் (1904 - 1988)

திருக்கேதீஸ்வரம் என்றால் அடியார் மனதில் அடுத்து தோன்றும் திருவாசக மடம். திருவாசகம் என்றால் மனதில் தோன்றும் உருவம் சபாரத்தினம் சுவாமிகள்.

யாழ்ப்பாணம் அல்வாய் சின்னத்தம்பி என்பவருக்கும் பாண்டியன் தாழ்வு சின்னத்தங்கத்துக்கும் 28.03.1904இல் சற்புத்திரராக பிறந்தார். இளம் வயதில் இருந்தே யோகர் சுவாமிகளின் அருட்பார்வைக்கு ஆளாகிய சுவாமிகள் பக்குவப்பட்ட ஓர் பண்புள்ள ஆசிரியராகப் பணிபுரிந்தார். யோகர் சுவாமிகளைப் போலவே இவரும் செய்த தொழிலைக் கைவிட்டுத் திருத்தல யாத்திரையைக் கைக்கொண்டார். சிதம்பரம் முதலான பல பதிகளைத் தரிசனம் செய்த பின்னர் நிலையாக திருக்கேதீச்சரத்தில் நிலை கொண்டார். திருவாசக மடம் ஒன்றை அமைத்து அடியவர்க்குப் பசிப்பினி தீர்த்து பக்குவமான உபதேசங்களைச் செய்து பல அடியார்களை பக்குவப்படுத்தித் தொண்டு நெறியில் வழிப்படுத்தினார். திருக்கேதீச்சரத்தில் உள்ள மடங்கள் எல்லாம் திருநிறை அருள் மடங்களாக மாறிச்சேவை செய்வதற்கு ஒரு தூண்டாமணி விளக்காய்த் திகழ்ந்தவர் இவர் என்றால் மிகையாகாது. சேர் கந்தையா வைத்தியநாதன் ஐயாவுக்குத் திருப்பணிக்கு உதவியவர் சுவாமிகள் என்று அவர் தம் அடித்தொண்டராகிய சி. சரவணமுத்து சுவாமிகள் கூறியுள்ளார். 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் செயற்கரிய செய்து இறையடி சேர்ந்தார் சுவாமிகள்.

திரு. சி. சரவணமுத்து சுவாமிகள்

1948ஆம் வருடம் திருக்கேதீஸ்வரத்தில் திருப்பணியாற்றிய முதல் கூட்டத்தில் பங்கெடுத்துச் செயற்பட்டவர்களில் தவத்திரு செல்லப்பா சுவாமிகளும், திரு சரவணமுத்து சுவாமிகளும் பெரும் பங்காற்றியவர்கள். இந்தச் சரவணமுத்து சுவாமிகள் பூர்வீகம் புங்குடுதீவு. கொழும்பில் தெமட்டகொடையில் பெரிய வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் உரிமையாளராக இருந்தவர். திருக்கேதீஸ்வரத் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்குத் திருப்பணி சபைக்குத் தம்மாலான பூரண ஒத்துழைப்பை நல்கியதோடு திருவாசக மடத்தில் நடைபெற்ற சகல சமய நிகழ்வுகளுக்கும் பொறுப்பாக இருந்து செயல்படுத்திய ஒரு கர்மவீரர். மார்கழி என்றால் திருவாசக மடத்தில் பெருவிழாத்தான். ஈழத்து அறிஞர் பலரை அழைத்து இரவு பகலாக திருவாதிரைக்கு முன்னாக 10 நாட்களும் சொற்பொழிவுகள், புராண படனங்கள் திருமுறைப் பாராயணம் பல சமய நிகழ்ச்சிகளையும் நடாத்தி வருவார். அத்தோடு இந்த நாட்களில் தரிசனத்திற்காகவரும் அடியார்க் கெல்லாம் அமுது படைத்து இன்பம் கண்டவர் இவர். இவர்

ஆற்றிய தொண்டின் மகத்துவம் இவரின் மறைவின்பின் எல்லோராலும் நன்கு உணரப்பட்டது. செய்யவேண்டிய பணியைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்து நிறைவான பதத்தை அடைந்த ஒரு தொண்டர் திரு. சரவணமுத்து சுவாமிகள்.

ஏழாலை தந்த செம்மல்கள்

யாழ்குடாநாட்டில் இந்துசமயத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயலாற்றிய பல சான்றோர்களையும், அறிஞர்களையும் தந்து சால்புறக்கண்டு மகிழ்ந்த மண் ஏழாலைக்கிராமம். 19/20ஆம் நூற்றாண்டுகளில் பலரும் வியப்புறும் வண்ணம் என்கடன்பணி செய்துகிடப்பதே என்ற முறையில் நாவலர் பெருமான் இறையடி சேர்ந்தபின் தோன்றிய பலருள் 20ஆம் நூற்றாண்டில் புகழ்மணம் கமழச் சேவை செய்தோரில் திரு. அருளானந்தசிவம் (ஞானவிளக்கம் பெறுமுன் ஐ. பொன்னையா) திரு மு. ஞானப்பிரகாசம், திரு. நா. முத்தையா, திரு. சி. கந்தசாமி போன்றோர் ஆற்றியவற்றைச் சிறிது விளக்கலாம் என எண்ணுகின்றேன்.

1919இல் அருளானந்தசிவம், ஏழாலை மேற்கில் சைவசன் மார்க்க வித்தியாசாலையையும், ஏழாலை சைவமகாஜன வித்தியா சாலையையும், அமைத்து அவர்காலத்தில் ஏற்பட்ட சமயப்பூசலால் ஏற்பட்ட தாக்கத்தைச் சமநிலைப்படுத்திச் சைவச் சிறார்களை சமய கல்வியில் ஊக்குவித்தார்.

திரு. மு. ஞானப்பிரகாசம்

திரு. மு. ஞானப்பிரகாசம் B.A. BSC யாழ்ப்பாணம் சைவக்கலாசாலையில் சித்தாந்த வித்தகர் என்று கௌரவிக்கப் பட்டவர். திருக்கேதீஸ்வரப் பெருமானின் திருப்பணிகளில் தம்மை அர்ப்பணித்து அரும் தொண்டாற்றியவர், சிறந்த சைவப் பிரசாரகராகத் திகழ்ந்தார்.

திருக்கேதீஸ்வரத்திருப்பணியில் ஈடுபட்டு அரும் சேவை செய்தவர் பலர். அவர்களின் சேவையை எம்மால் மறக்கமுடியாது. அவர்கட்கு எல்லாம் கேதீஸ்வரப்பெருமான் திருவருட் கடாட்சம் கிடைக்கவேண்டும். குறிப்பாக நான்கு பேரை குறிப்பிட்டே ஆகவேண்டும் என்று கூறியும் எழுதியும் உள்ளார் திருக்கேதீஸ்வரத் திருப்பணித்தலைவர் சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் அவர்கள். அவர்கள் காட்டிய அந்த நால்வர்கள்:

1. திருப்பணிச்சபையின் அவசியம் பற்றியும், கேதீஸ்வரத்தான் மகத்துவம் பற்றியும் இலங்கை எங்கும் பிரசாரம் செய்து சைவ அடியார்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய கொழும்பு பெரியார் சு. சிவசுப்ரமணியம் சட்டத்தரணி.
2. திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணியில் அரும் பங்காற்றி வெற்றிகண்டதோடு எதிர்காலத்தில் கோயில் எப்படியெல்லாம் அமையவேண்டும் என்று எழுதி வைத்துச்சென்ற சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன்.
3. சேறும், கரியும் நிறைந்து மண்மேடாக இருந்த பாலாவித்திருக் குளத்தை தொன்மை நிலைக்குப் புனரமைத்து தந்த நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். ஆறுமுகம்.
4. இன்றும் எம்மோடு இருந்து அரிய பெரிய சேவைகளை தேவையறிந்து செயலாற்றி 1976இல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் முன் செய்யவேண்டிய திருப்பணிகளை யெல்லாம் செய்து முடித்து எம்மை வழி நடத்தும் சைவப் பெரியார் இரா. நமசிவாயம் அவர்கள்.

திரு. சி. கந்தசாமி

கொழும்பு விவேகானந்த சபையின் நீண்டகால சமயச் செயலாளராகப் பல்லாண்டுகாலம் செயலாற்றிச் சபைக்கும், இந்து சமயத்திற்கும் செயற்கரிய பணியை ஆற்றியவர் ஏழாலை தந்த செம்மல் திரு.சி. கந்தசாமி

திரு. நா. முத்தையா ஐயா

ஆத்மஜோதிக்கு இரண்டு கண்கள் ஆரம்ப காலத்தில். இதில் ஒரு கண் பலகாலம் ஆத்மஜோதிக்குத் தன் அறிவாலும், ஆற்றலாலும் ஊக்கம் கொடுத்தது. அதுதான் அமரர் க. இராமச் சந்திரனார். மற்றையது அறிவு, ஆற்றல், எழுத்து, பேச்சு என்றவகையில் செயல்பட்டு ஜோதியை உலகெங்கும் ஒளிபரப்பி வந்தது. இந்த இரண்டு கண்களில் ஒன்று நயினை தந்த நல்முத்து, மற்றையது ஏழாலை தந்த பெரும் செல்வம் அமரர் நா. முத்தையா அவர்கள். இவர்தான் இந்த 20ஆம் நூற்றாண்டில் இந்துசமய நெறிபரப்ப வந்த ஆத்மஜோதி. இந்து சமயத்திற்கு இவர் ஆற்றிய சேவை அளவுகோல் இல்லை என்றே கூறலாம். இராமச் சந்திரனாரைத் தன் ஞானகுருவாகக் கொண்டிருந்ததோடு அவரின் வாழ்க்கை வரலாற்றையும், இலங்கையில் ஓர் இல்லற ஞானி என்ற நூலாக எழுதி வெளியிட்டு அவரின் நல் ஆசியையும் பெற்ற பெருமைக்குரியவர். தன்னால் பங்கு பற்ற முடியாத எந்த விழாக்களிலும், வைபவங்களிலும் கலந்து சிறப்பிக்கும்படி திரு இராமச்சந்தினரார் திரு. முத்தையா அவர்களை அனுப்பி வைத்து பெருமைப்படுத்தினார். அந்த அளவுக்கு முத்தையா அவர்கள் மேலிருந்த பற்றே ஆகும். திரு. முத்தையா இந்து சமயத்திற்காக ஆற்றிவரும் எழுத்துப்பணியும், பேச்சும் மேலும் மேலும் வளரவேண்டும் என்ற பெருநோக்கமாகும். இதனை முத்தையா அவர்களும் தனது எழுத்து மூலம் மேலும் இராமச்சந்திரனாரைப் பற்றி எழுதும்போது குறிப்பிட்டுள்ளார்.

இராமனுக்கு இலக்குவன் தம்பியாகி எவ்வாறு அவனது சுகதுக்கங்களில் பங்குபற்றி செயற்பட்டானோ, அதே போன்று ஆத்மஜோதி என்ற தீபம் உலகெங்கும் பிரகாசித்து ஒளிவிட உற்ற தம்பியாக திரு. நா. முத்தையா இருந்து செயல்படுத்தினார். இவர்கள் இருவரும் சமயத்திற்காக ஆற்றிய தொண்டு நாவலர் பெருமானுக்குப்பின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

அனுராதபுரம் ஸ்ரீ கதிரேசன் கோயில்

ஆரம்பத்தில் பழைய நகர கடைவீதியில் சிறிய ஓலைக் கொட்டகைக்குள் இருந்த ஒரு வேலை பராமரித்துவந்த முருகன் என்பவர் இறந்த பின் சில காரணங்களால் இந்த வேல் ஒட்டுப் பள்ளம் என்ற இடத்தில் சிறிய ஓர் மடாலயத்தில் வைத்துப் பூஜிக்கப்பட்டு வந்தது. 1927ஆம் ஆண்டில் மீண்டும் அந்த இடத்தில் இருந்து இந்த வேலை எடுத்து வந்து மாவடி என்ற இடத்தில் தருமசாதனமாகக் கிடைத்த ஒரு ஏக்கர் காணியில் ஒரு கோயிலைக் கட்டி 1931ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்து விழாக்களை நடத்தி வந்தார்கள். இந்தக் கைங்காரியத்தில் திருவாளர்கள் துன்னாலை செல்லையா, எஸ். எஸ். சரவணமுத்து, ச. சிற்றம்பலம், முருகுப்பிள்ளை, சி. நா. சிற்றம்பலம் போன்ற பெருமக்கள் அரிய தொண்டாற்றினார்கள். 1942இல் அனுராதபுரம் புதிய நகரத்திட்டத்தால் மீண்டும் இந்த முருகன் இடம்பெயர வேண்டிய நிலைக்கு ஆளானார். புதிய நகரில் 1962ஆம் ஆண்டில் திருப்பணிகள் ஆரம்பித்து 1964ஆம் ஆண்டில் ஆவணி 25இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. விவேகானந்தா தமிழ்

வித்தியாலயத்தின் முகாமையாளராக திருவாளர்கள் வி. இராமசாமி (சட்டத்தரணி) 1944 – 1946, எஸ். கந்தசாமி 1947, சோ. சிவராமலிங்கம் (1948 – 1956) ந. பத்ம நாதன் 1957 – 1960 வரையும் சேவையாற்றியுள்ளார்கள். சாரதாதேவி பாலர் பாடசாலை ஆரம்பித்து அதன் முகாமையாளராகத் திரு. இ. சதாசிவம்பிள்ளை (1967 முதல் 1975 வரை) இருந்து சேவை செய்தார்கள். இந்த வகையில் கோயில், பாடசாலை, சபை என்ற மூன்று ஸ்தாபனங்களிலும் இருந்து சேவையாற்றியவர்களில் இவர்கள் முதன்மையானவர்கள் என்றால் மிகையாகாது. இந்த பெரியார்களின் நன் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனங்களின் இன்றைய நிலைமையை அவதானிக்கும்போது மனம் வெந்து புண்ணாகின்றது. மீண்டும் தொன்மையான நிலையில் இவை செயற்படுமா? இறைவன்தான் பதில் கூற வேண்டும்.

மாவை தந்த சதாசிவம் (யோகர் சுவாமிகள்) (29.05.1872 - 23.04.1964)

1872ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி மாவிட்டபுரம் அம்பலவாணர், சின்னாச்சி அம்மை தம்பதியினருக்கு மைந்தராக பிறந்தார் சதாசிவன். பிறந்தது மாவிட்டபுரம். வளர்ந்ததும், படித்ததும் தந்தையாரின் ஊரான கொழும்புத்துறையில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். இளம் வயதில் பெற்றோரை இழந்த சதாசிவன் சிறிய தந்தையாரின் உதவியுடனும் மாமியாரின் அரவணைப்புடனும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலம் படித்து வந்தார். இவர்களின் அரவணைப்பில் தொடர்ந்தும் இருக்க விரும்பாத சதாசிவன் 7ஆம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்திக்கொண்டார், வேலைதேடிப்புறப்பட்ட இவருக்குக் கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தில் ஒரு வேலையும் கிடைத்தது. வேலை நேரம் தவிர ஓய்வு நேரங்களில் உலகியல் வாழ்வில் நாட்டமற்றவராகிச் சமய நூல்களைக் கற்பதிலும், தனித்திருப்பதிலும் மிகவும் நாட்டம் கொண்டார். இவரின் போக்கினையும், செயற்பாடுகளையும் அவதானித்த சக நண்பர்கள் இவரை "யோகி யோகி" என்று அழைக்கத் தொடங்கினார்கள். இவரின் தன்மையை அறிந்த பொறியியலாளர் புறவுனி (BROWNE) என்பவர் இவரைக் "கடவுள் மனிதன்" (GOD MAN) என்று அழைக்கத் தொடங்கினார். உத்தியோகத்தில் பற்றுக் குறைந்தது. தொழிலை விட்டார், கொழும்புத்துறை வந்தார். நல்லூரில் இருக்கும் செல்லப்பாச் சுவாமிகளை சரண் அடைந்தார். குருவும், சீடனும் ஆனார்கள். குருவின் கட்டளைப்படி யோகர் கால் நடையாகக் கதிர்காமம் புறப்பட்டார். அப்போது வயது 34. கதிர்காமம் சென்று கொழும்பு, மலைநாடு என்று பல இடங்களும் சுற்றிய பின் மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். அப்போது வயது 38. இவரும் வந்து சேரச் செல்லப்பா சுவாமிகளும் சமாதி ஆகிவிட்டார். இவரிடம் கண்ட மாற்றத்தையும் செயற்பாடுகளையும் கண்ட மக்கள் இவரை யோகர் சுவாமிகள் என்று அழைக்கத் தொடங்கினர். கொழும்புத்துறையில் ஓர் இலுப்பை மரத்தடியில் அமர்ந்து இருந்து, தன்னை நாடி வந்தவர்கட்கு அருளாசி வழங்கியதோடு அவர்களைக் கொண்டு பல சமயப்பணிகளையும் செய்யத் தூண்டினார். தம் ஞானகுருவின் கட்டளைப்படி, பலரும் சமய ஞானம் பெற்றவர்களாகியதோடு, தமது தொண்டாகச் சுவாமிகள் ஆசியுடன் ஜனவரி 1935ஆம் ஆண்டில் இருந்து இந்து சாதனம் என்ற மாதவெளியீடு தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டனர். அக்காலத்தில் இருந்து இந்து சமயத்திற்கு இந்தச் சஞ்சிகை ஆற்றிவந்த சேவை விலை மதிக்கமுடியாத ஒன்றாகும். நிலையான ஓர் மண்டபத்தில் சுவாமிகளின் போதனைகளையும் புராண படலங்களையும் திருமுறை பாராயணங்களையும், தியானத்தையும் செய்ய ஒரு பொது மண்டபம் வேண்டும் என்ற கருத்தில் சுவாமிகளின் அடியார்கள் அவரின் கருத்தைக் கேட்டபோது முதலில் இணங்க மறுத்த சுவாமிகள் பின் சம்மதம் தெரிவித்தார். அந்த மண்டபம் தான் யாழ் காங்கேசன் வீதியில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள (1953.11.04இல் அமையப் பெற்ற) சிவதொண்டன் நிலையமாகும். இதன் சேவை நாளும் வளர்ச்சி பெற்று இன்று கிழக்கு மாகாணத்தில் செங்கலடி என்ற இடத்தில் இந்த நிலையம் ஒன்று அமையப் பெற்று அரும் பணியாற்றி வருகின்றது.

சுவாமிகளின் அருட்பாடல்களைத் தொகுத்து 1959இல் "நற்சிந்தனை" என்ற ஓர் நூலை முதல் முதலாக வெளியிட்டனர். "சிவதொண்டர் நிலையம்" இப்போ "சிவதொண்டன் சபை"ஆகச் செயற்படுகின்றது. இந்த வகையில் இந்து சமயத்திற்காக ஒரு மறுமலர்ச்சியைத் தன் அடியவர்கள் மூலம் தோற்றுவித்தவர் யோகர்சுவாமிகள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதர் தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் - 1919

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் செல்லையாக் குருக்கள் கனகாம்பாள் தம்பதியாருக்கு 1919ஆம் ஆண்டில் மகனாக பிறந்த இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் சிவசுப்ரமணியம். இவர் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும், யாழ் இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்றுத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும் மொழிகளிலும் நல்ல பாண்டித்தியம் உடையவராக இருந்தார். இளமையில் இருந்தே இவரது நாட்டம் சங்கர சுப்பையர் சுவாமிகளின் இன்னிசைகளிலும், விரிவுரைகளிலும் சென்றது. இளமையில் இசைஞானம் கைவரப்பட்டதால் தானும் இசையோடு கூடிய சமய பிரசாரங்களில் செல்லவேண்டும் எனும் தூண்டுதலால் சங்கர சுப்பையா சுவாமிகளிடம் தனது கருத்தைக்கூற அவரும் இவரை ஆசீர்வதித்ததோடு தான் பிரசங்கத்திற்கு பாவித்துவந்த சுருதி வாத்தியத்தையும் வழங்கி ஆசீர்வதித்தார். தனது 18ஆவது வயதில் இன்னிசைப் பேருரையை ஆரம்பித்த சுவாமிகள் நாளடைவில் சங்கரசுப்பையரின் மறைவின்பின், சமயப் பிரசங்கத்தில் பூரணமாகத் தன்னை அர்ப்பணித்து, யாழ்ப்பாணம் வண்ணை சி. எஸ். எஸ் மணி ஐயர் என்ற பெயருடன் புகழடைந்தார். பின்பு கதாப் பிரசங்கங்கள், பிரபல்யமடைய "மணிபாகவதர்" என்ற பெயருடன் உலாவந்தார். தனது முறைப் பெண்ணான யோகாம்பாள் என்பவரைத் தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்ட இவர் ஒரு மகனுக்கு தந்தையாராகவும் ஆனார். தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று பல நாட்கள் தொடர்பிரசங்கங்களைச் செய்து வந்தார். இலங்கையில் இவரது காலடி படாத இடங்கள் இல்லை என்றே கூறலாம். இவரது இந்தப் பணியால் சைவ உலகம் பெரும் பயனைப் பெற்றது. நாவலர் பெருமானின் அந்திம கால கனவும் நனவாகியது. ஆம்! "ஈழத்தில் ஒரு ஆதீனம் இல்லையே!" என்ற அவர் மனக் குறை தீர மணிபாகவதர் 1966ஆம் ஆண்டில் துறவு பூண்டு மதுரை திருஞானசம்பந்த ஆதீன 291ஆவது குருமகாசன்னிதானமாகச் சோமசுந்தர பரமாச்சிரம சுவாமிகளிடம் மந்திர உபதேசம் பெற்று, காவி உடையும் தரித்து ஸ்ரீமத் சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் ஆனார். நல்லை ஆதீன

முதல்வர்போல் சமயப்பிரசாரத்திற்காக மனம், மொழி, மெய்யால் பாடுபட்டவர்கள் வெகுசிலரே. இவரின் சமய பிரசங்கத்திற்கு கூடும் மக்கள் வெள்ளம் இறுதி வரைக்கும் இருந்தே செல்லும். பொருள்வளம் குன்றியதாயினும் அருள்வளம் நிரம்பிய ஆதீனத்தின் செயற்பாடுகளால் நல்மனம் படைத்த பலர் பல வகையாலும் நிதி உதவியும், பொருள் உதவியும் செய்து வந்தார்கள். இதனால் ஆதீனம் சமயப்பணியைத் தளர்வின்றிச் செய்து வந்தது. 20ம் நூற்றாண்டில் ஈழத்தில் அமைந்த ஒரு தலை சிறந்த சமய நிறுவனமாகத் திகழ்வதற்கு வழிகோலியவர் ஆதீனமுதல்வர். தனக்குப்பின் ஆதீனத்தை நல்ல முறையில் தலைமை தாங்கி நடாத்துவதற்குத் தகுதியான ஒருவரை 1977.04.07இல் இளவரசுப்பட்டம் கட்டித் தன் உடனிருந்து ஆதீன கருமங்களைக் கவனிக்க வைத்தார். அவர் தான் இன்றைய 2ஆவது மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகள். தனது குருநாதனின் பணியை அன்றுபோல் இன்றும் சிறப்பாகச் செய்து வருகின்றார்.

கரம்பன் மகாதேவ சுவாமிகள் - 1874

21.08.1874ஆம் திகதி கரம்பன் சைவப்பெரியார் இராமநாதன் அவர்கட்கும் அவர் தம் மனைவியார் அன்னபூரணத்திற்கும் மூத்த மகனாகப் பிறந்தவர்தான் வைத்திலிங்கம் என்பவர். இவர் ஆறுமுக நாவலரின் மாணவராகி முத்துக்குமாரு உபாத்தியாயரிடம் கல்வி கற்றுக் கொண்டார். மட்டக்களப்பில் பெரும் தனவந்தராக இருந்த வைத்திலிங்கம் என்பவரிடம் கணக்காளராக இருந்த வைத்தி லிங்கம் துறவு பூண்டபோது ஊர்மக்களால் தம்பையாச் சுவாமி என்று அழைக்கப்பட்டார். தான் பிறந்த ஊரான கரம்பனில் சைவப்பிள்ளைகள் படிப்பதற்கான பாடசாலை இல்லாதிருப்பதைக் கண்டு மனம் நொந்த தம்பையா சுவாமிகள் குஞ்சரி என்ற அம்மையாரால் தர்மசாதனம் செய்த ஒரு காணியில் 1917ஆம் ஆண்டில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். கரம்பொன் முருக மூர்த்தி கோயிலுக்கு அருகாமையில் இருந்ததால் சண்முகநாத வித்தியாசாலை என்ற பெயரை சூட்டி வைத்தார். இப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்கட்கு வீடு வீடாகச் சேர்த்த பிடி அரிசிமூலம் கிடைத்ததைச் சம்பளமாகக் கொடுத்தார். பலர் வேதனம் இல்லாமலே கல்வியையும் புகட்டினார்கள். தானும் ஆசிரியராகச் சில காலம் இருந்தார். இந்தப் பாடசாலைதான் பெரும் வளர்ச்சி கண்டு இன்று கரம்பன் சண்முகநாத வித்தியாலயமாகத் திகழ்கின்றது. தம்பையா சுவாமிகள் பின் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்திருக்கும் வேதாந்த மடத்தில் சேர்ந்தார். அப்போது மடத்தின் பொறுப்பாளராக இருந்த கனகரத்தினம் சுவாமிகள் இவரை திருப்பெருந்துறைக்கு அழைத்துச்சென்று சுவாமி மகாதேவா என்ற தீட்சா நாமத்தைச் சூட்டிக் காவி உடையும் தரிப்பித்தார். கரப்பனில் சைவமறுமலர்ச்சிக்கும், சைவ ஒழுக்கநெறிக்குமாகத் திருமுறை ஓதல் பயிற்சியும் கொடுத்து, தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்கு வித்திட்டவர்கள் மகாதேவா சுவாமிகள், தவத்திரு இராமலிங்க சுவாமிகள், வடிவேற்சுவாமிகள் ஆகியோர்.

கரம்பன் சிவகுருநாத வித்தியாசாலை - 1926 (மகாதேவ சுவாமிகளின் சீடர்கள்)

தம்பையா சுவாமிகளின் உறவினர் கரம்பன் ஆ. சோமசுந்தரம் பிள்ளை, இவர் நெடுந்தீவில் சில காலம் ஆசிரியராக இருந்து தனது சொந்த ஊருக்கு வந்து, சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற உந்துதலால் புராணபடனத்தில் ஈடுபட்டார். கரம்பன் சண்முகநாத வித்தியாசாலையில் வேதனம் வாங்காமல் கல்வியும் புகட்டி வந்தார். இவரின் முயற்சியால்தான் கரம்பன் கிழக்கில் 1926இல் சிவகுருநாதவித்தியாசாலை உருவானது. இப்பாடசாலையில் பல மாணவர்கள் கல்விகற்று வந்தார்கள். இவருடைய மூத்த மகனார் சோ. சிவபாதசுந்தரமும், இளைய மகனார் தியாகராசாவும் சைவசமயத்திற்காகத் தொண்டாற்றியவர்கள். திரு சோ. சிவபாதசுந்தரம் "மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்" "சேக்கிழார் அடிச்சுவட்டில்" ஆகிய நூல்களை எழுதினார்கள். தியாகராசா தேவார திருமுறைக்கு ஆராய்ச்சி உரை எழுதியதோடு தந்தையாரைப்போல் புராண படனங்களையும் செய்து வந்தார்.

ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள்

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வடிவேல் சுவாமிகள் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் உள்ள வேதாந்த மடத்தின் மகாதேவா சுவாமிகளிடம் கற்றுத் தேர்ந்து அவரிடமே ஞானம் பெற்று, துறவு பூண்டார். தனது இளமைக் காலத்தில் தான் பிறந்த மண்ணில் பரமானந்தவல்லி ஆச்சிரமத்தை அமைத்து பலவித தொண்டுகளையும் செய்துவந்தபோது இவருக்கு கொழும்புத் துறை யோகர் சுவாமிகளின் கட்டளை ஒன்று கிடைத்தது. அந்த கட்டளையின்படி ஆரம்பமானதே கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமம்.

1957ஆம் வருடம் ஆரம்பமான இந்த ஆச்சிரமத்தில் 10 அம்ச திட்டம் ஒன்றைத் தாமாக ஏற்படுத்தி அவற்றை நல்முறையில் செயல்படுத்தி அரிய சேவை செய்து மற்றையவர்கட்கு ஓர் எடுத்துக்காட்டாக செயல்பட்டார். பின்தங்கிய இடங்களில் பாடசாலைகளை அமைத்தல், தேவையான இடங்களில் வழிபாட்டிற் காக ஆலயங்களை அமைத்தல், பழைய ஆலயங்களைப் புதுப்பித்தல், திருமுறை வகுப்புக்களையும், பண்ணிசை பயிற்சிகளையும் வழங்கல், இந்துசமய பிரசாரம், போதனை, கூட்டு வழிபாடும், பஜனையும் செய்தல். தியானவாழ்வும், தத்துவ நூல்களையும் கற்பித்தலும் சமய பெரியார்களை அழைத்துச் சமயபோதனைகள் நிகழ்த்தல், அனாதைச் சிறுவர்களை பராமரித்து அவர்களின் உயர்கல்வி வரையும் அவர்களை நெறிப்படுத்தல் போன்ற செயல்பாடுகளுடன் சகல விதமான சமய விழாக்களையும் உரிய காலங்களில் செய்து வருவதுடன், மலைநாட்டுப் பகுதியிலும், கிழக்கு மாகாணம், வன்னி பெருநிலப்பரப்பிலும், கொழும்பு போன்ற இடங்களிலும் சென்று சமயப் பிரசாரம் செய்து இறைபதம் அடைந்தார்.

எமது இந்துசமய சம்பந்தமான நூல்களை எழுதியும், நூல்களுக்கு உரை எழுதியும் சிறப்புச் செய்தவர்கள் வரிசையில் சிறப்பாகச் சிலரை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

1970இல் சைவசித்தாந்த திறவு கோல் என்ற தலைப்பில் சிவஞான போதத்திற்கு, சிறந்த உரை எழுதி பல பேரறிஞர்களின் பாராட்டைப் பெற்றவர் யோகர்சுவாமிகளின் அதிபக்தர் சரசாலை திரு. ச. தியாகராசா அவர்கள்.

1981இல் திருச்செந்தூர் அகவலுக்கு மிகத்தெளிவான உரை எழுதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் புங்குடுதீவு வித்துவான் பொன். கனகசபை அவர்கள்.

திருக்கேதீஸ்வரம் கௌரிநாயகி மேல் சிறந்த ஒரு பிள்ளைத் தமிழைப் பாடியதால் பேராசிரியர் க. கைலாசபதியாலும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையாலும் பெரிதும் பாராட்டை

பெற்றவர் புங்குடுதீவு பேராசிரியர் சி. இ. சதாசிவம் பிள்ளை யவர்கள்.

திண்ணபுரம் சுந்தரேசர் புராணத்தைப்பாடி 20ஆம் நூற்றாண்டில் ஒரு தலபுராணத்தை தந்த பெருமையைப் பெற்றார் எமது நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தந்த இளமுருகனார். தங்கத்தாத்தா தந்த இந்த தங்கப்புலவர் தலபுராணம் பாட, துணைவியார் பண்டிதை இ. பரமேஸ்வரி உரை தந்தார். இது ஒரு தனிச் சிறப்பாகும். இது எல்லோருக்கும் கிடைக்கும் பாக்கியம் அல்ல! இது நாம் செய்த பெரும் பேறு.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் மேல் ஓர் பிள்ளைத் தமிழைத் தந்து மகிழ்ந்தார் கவிமணி வ. சிவராசசிங்கம். பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடல்களை வியந்து பலரும் பாராட்டியும் எழுதியும் உள்ளார்கள். மாத்தறை கதிர்காம ஆலயப் புனரமைப்பில் முன்னின்று உழைத்தவர் கவிமணி வ. சிவராச சிங்கம் என்பது பலருக்கு தெரிந்தால் நல்லது.

"யாழ்ப்பாண வைபவமாலை" என்ற நூலைத்தந்து, ஆய்வாளர்கட்கும் கற்போற்கும் உறுதுணை செய்தவர் சைவப் பெரியார் முதலியார் குலசபாநாதன் அவர்கள். நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருப்பணி மலரை 1957இல் எழுதி வெளியிட்டு "மணிபல்லவம்" என்ற இடம் எது என்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தவர் இவர்.

"ஆகமாமிர்தவர்ஷினி" என்ற நூலைத் தமிழில் எழுதி, இந்து சமய குருமார்கட்கும், கிரிகைகளை அறிய விரும்புவர்கட்கும் ஒரு வழிகாட்டி நூலாகத் தந்தவர் நயினை பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்.

தமது ஆகமக் கிரிகைகளுடன், சமய புராணங்களிலும் நன்கு பாண்டித்தியம் பெற்றவர்களாகவும், சிறந்த பிரசங்கங்களை ஆற்ற வல்லவர்களாகவும், எமது குருமார்கள் இருந்தார்கள், இருக் கின்றார்கள். இந்தவகையில் 20ஆம் நூற்றாண்டில் இருந்து அமரர்கள் ஆனவர் பலர். இவர்கள் ஆற்றிய சேவை பெரிதும் போற்றப்பட வேண்டும். காரைநகர் வேதாகம கிரியாபூஷணம் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள், அச்சுவேலி வைதீக சிகாமணி சிவஸ்ரீ ச. குமரசாமிக் குருக்கள், திருமலை சிவகாம வித்தியா பூஷணம், சிவஸ்ரீ இ. கு. பூர்ணானந்தக் குருக்கள், முன்னேஸ்வரம். சிவஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள், யாழ் நல்லூர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள், நயினை பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள், யாழ். நாயன்மார்கட்டு சிவஸ்ரீ சோ. சாம்பசிவக்குருக்கள், கீரிமலை ஸ்ரீமத் தி. குமாரசாமிக் குருக்கள், இலக்கியப் பேராசான் பிரம்மஸ்ரீ சீ. ஸ்ரீநிவாசக்குருக்கள் M.A. யாழ் வண்ணை க. வை ஆத்மநாதசர்மா போன்றோரை நினைவில் கொள்வோம்.

செயற்கரிய செய்தார்

பேராதனையில் குறிஞ்சிக் குமரன் கோயிலைக் கட்டுவதற்கு அரும் பாடுபட்டு உழைத்தவர் பேராசிரியர் பே. கனகசபாபதி அவர்கள். தனது எண்ணம் நிறைவுறக் கண்டு மகிழ்ந்த இப்பேராசான் தனது தொண்டினால் இளைய சமுதாயத்தில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, இளைஞர்களே ஆலயத்தின் சகல கருமங்களிலும் இணைந்து சேவையாற்றவும் செய்தார்.

மாங்குளம் புதுவிளாங்குளத்தில் 1963ஆம் ஆண்டில் ஓர் சிவன் கோயிலைக் கட்டி அப்பிரதேச மக்கள் வழிபாடியற்ற வழிகாட்டியவர் அமரர் குருநாதர் சபாரெத்தினம்.

நடராசப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்ட வம்மிக் குளம் சிவாலயத்தை நிறுவி 1940 ஆம் ஆண்டு வரை பராமரித்து வந்தவர் தவத்திரு சி. கந்தசுவாமியார். தனது இறுதிக்காலத்தில் இவ்வாலயத்தை வழிபடும் மக்கள் சபையிடம் ஒப்படைத்து அமரரானார்.

இரத்தினபுரியில் ஓர் சிவாலயம் வேண்டும் என்ற யோகர் சுவாமிகளின் வாக்கை ஏற்று, சைவப் பெரியார் த. வேலுப்பிள்ளை தனது காணியைத் தருமசாதனம் செய்து கொடுத்தார். 1935ம் வருடம் திருப்பணி ஆரம்பமாகி 1938இல் பூர்த்தியாகியது. இவ்வாலயத்தில் திரிபுரசுந்தரி சமேத இரத்தினேஸ்வரர் எழுந்தருளி குடமுழுக்குக் கண்டார் 1938இல்.

ஈழத்தில் சைவம் தழைத்தோங்க இறுதி மூச்சுவரை செயல்பட்ட நல்லைநகர் நாவலர் பெருமானுக்குச் சிலையெடுக்க வேண்டும் என்றும், ஆண்டுவிழா கொண்டாடி மலர் வெளியிட வேண்டும் என்றும் சொல்லாலும் செயலாலும் வெற்றிகண்டு மனநிறைவு கொண்டவர் அமரர் மெய்கண்டான் நா. இரத்தின சபாபதி அவர்கள்.

1982இல் உலகம் வியக்க இந்துமாநாடு நடத்த வேண்டும் என்றபடி எல்லோரும் போற்ற விழாவெடுத்துச் சிறப்புப் பெற்றவர் இந்து சமய இந்துகலாச்சார தமிழ் அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்கள். இவ்விழாவையொட்டி ஆத்மஜோதி ஓர் சிறப்பு மலரையும் வெளியிட்டதும் நாம் அறிந்ததே.

"ஆம்! பொருள் நமதே ஆனால் அறம் பிறற்காவதுண்டோ" என்றபடி, சிவதர்மவள்ளல் மில்க்வைற் க. கனகராசா அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். நாவலருக்கு சிலை அமைக்க வேண்டும் என்று "மெய்கண்டான்" ஆசைப்பட்டார். எண்ணரிய சிலைகளைக் கொடுத்துதவி வழிபடு இடங்கள் தோறும், இந்து சமய மன்றங்கள் தோறும், நாவலருக்கு அஞ்சலி செலுத்த வைத்த பெருமை சிவதரும வள்ளலைச் சாரும். பனைஓலையில் ஏடும், மில்க்வைற் சஞ்சிகையில் மறக்கவும், மறைக்கவும் முடியாத பல தகவல்களையும் தந்து எமது சமயப் பெரியார்களையும் அவர்கள் செய்த சேவைகளையும் அறியும்படி செய்த ஒரு பெருமகன் க. கனகராசா.

தமது பேச்சாலும், பிரசங்கத்தாலும், இசையாலும், எழுத் தாலும், வாழ்ந்து காட்டி அமரத்துவம் அடைந்தவர்களும், இன்றும் வாழ்ந்து, வழிகாட்டிக் கொண்டிருப்பவர்களும் சிலர் உளர். அந்தவகையில் அமரத்துவம் அடைந்தவர்கள் வரிசையில்–

திருப்பூங்குடி ஆறுமுகம், யாழ் வண்ணையூர் கணேசசுந்தரம், சிலாபம் உடப்பூர் பெரி சோமஸ்கந்தன், இணுவையூர் பிரம்மஸ்ரீ க. வீரமணிஐயர் போன்றோர், இறையருளால் தமக்குக் கிடைத்த குரல்வளத்தால் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் செய்த வில்லிசை மூலமான இறைத் தொண்டும், கவித்திறம்மிக்க வீரமணிஐயர் பாடிய இனிமையான பல பாடல்களும் கேட்கும் தோறும் உளம் பூரித்து மெய் சிலிர்க் கவைக்கும் "கற்பகவல்லி நின் பொற்பதம் பிடித்தேன்" என்ற பாடலைத் தந்து பெருமை தேடியவர் கவிமணி வீரமணி ஐயர். இது போன்ற பல பாடல்களை இவர் பாடி உள்ளார். பல படைப்புக்களைத் தந்துள்ளார் எதிர்பாராத வேளையில் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

இயல், இசை நாடகம் என்ற வகையிலும் எமது இந்துசமய விழுமியங்களைப் பாமர மக்களும் அறிந்து தெளிவு பெற வேண்டும், என்றவகையிலும் கலையரசு சொர்ணலிங்கம், நடிகவேள் வி. வி. வைரமுத்து போன்றோரின் சேவையை மறக்கமுடியாது; மறக்கவும் முடியாது. இந்தவகையில் இந்தக்கலையை பெரிதும் பாராட்டி எழுதியும் ஊக்கமும் கொடுத்து

வந்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன். இவர் ஆற்றிய சேவைக்கு அளவுகோல் இல்லை.

தமது ஆற்றல் மிக்க எழுத்தால் இந்து சமயம் பற்றிய ஆக்க பூர்வமான பல ஆய்வுக் கட்டுரைகளையும் சமயப் பெரியார்கள் பற்றியும், அவர்கள் ஆற்றிய சேவைகள் பற்றியும், அவர்கள் வரலாறுகள் பற்றியும் 20ஆம் நூற்றாண்டில் அவ்வப்போது எழுதிய பேராசிரியர்கள், புலவர்கள், பண்டிதர்களையும் இங்கு காட்டாமல் விடுதல் முறையல்ல. இந்தவகையில் பேராசிரியர் ஆ. வி. மயில் வாகனம், பேராசான் பொன். பூலோகசிங்கம், கலாநிதி க. கைலாச நாதக் குருக்கள், கலாநிதி வி. தனஞ்சயராசசிங்கம், பேராசிரியர் வி. சிவசாமி, பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் க. சிற்றம்பலம், பேராசிரியர் ப. சந்திரசேகரம், பேராசிரியர் க. கைலாசபதி, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவசிரோன்மணி கணேசையர், பண்டிதர், கா. பொ. இரத்தினம், சைவப்புலவர், க. சி. குலரெத்தினம், முதலியார், குல. சபாநாதன், வித்துவான் எவ். எக்சி. நடராசா, மாணிக்க இடக்காடர், கா. கி. நடராசா, ஆ. கந்தையா, எம். ஏ. வித்துவான், மு. சபாரெத்தினம், ம. அம்பிகைபாகன், வித்துவான் வேந்தனார், சைவப்புலவர் இ. வடிவேலு, தம்பலகாமம் க. வேலாயுதம், இணுவையூர் வை. அனவரதவிநாயகமூர்த்தி, ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், பண்டிதர் செ. சிவப்பிரகாசம், பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை, செ. தனபாலசிங்கம், டாக்டர் செ. சிவஞானம் (நந்தி), ஆசிரியமணி க. சொக்கலிங்கம் (சொக்கன்), வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதை தங்கேஸ்வரி கந்தையா போன்றோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

20ஆம் நூற்றாண்டில் தொடங்கி 21இலும் அளப்பரிய சேவை செய்பவர்களில் முக்கியமாக எம் மனக்கண்ணில் தெரிபவர் இன்று அனைவராலும் அன்னையென்று அழைக்கப்படும் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். இவர்களின் சிவத்தொண்டும், தவவாழ்வும், சிறந்தோங்கும் சேவைகளும், எண்ணில் அடங்கா – எழுதி முடியாது. பேச்சால், எழுத்தால், கருமத்தால் தனக்கென ஒருவழி கொண்டு நடப்பவர் நடக்கட்டும் சேவை. அவர் வழியில் செல்ல நாமும் முயல்வோமே!

1989இல் சங்குஸ்தாபனம் செய்யப்பட்டு 1995இல் குடமுழுக்குக் கண்ட பெருங்கோயில், வவுனியா கோவில் குளம் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில். கோயில் குளத்திற்கு நிலையான பெயரை நிறுத்திச் சிவப்பணியுடன், திருப்பணியும், அறப்பணியும் முட்டின்றி நடக்கும் ஒரு சிவலோகம் என்றால் மிகையாகாது. "தாயும் நீயே தந்தையும் நீயே" என்று சரணாக இருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சரணாலயமாகத் திகழும், "இந்த ஆலயத்தின் அறங்காவலர்கள் சிவலோகத்தில் இருந்து வந்த கணநாதர்களாக இருக்குமோ! என்று நான் எண்ணுகின்றேன்" என்றார் வவுனியா முன்னாள் அரச அதிபர் க. கணேசு. நினைக்கப் படைக்கின்றார்கள், இந்த அறங்காவலர் என்று வியப்புற்றுப் பேசினார். ஆம்! அவர் கூறிய அந்த அறங்காவலர்களில் இருவர் அமரராகி விட்டார்கள். திரு. நா. இராமநாதன், சி. சண்முகம் ஆகியோர். இன்று எம் கடன்பணி செய்து கிடப்பதே என்று செயலாற்றுபவர்கள் இருவர் – சிவமணி ஆ. நவரெத்தினராசா, ஆ. உமாதேவன் ஆகியோர். இவர்களின் சேவையும் பணியும் மற்றைய சமய நிறுவனங்கட்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கட்டும்.

இன்று சமய விடயமான ஐயப்பாடுகட்கு ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமாயின் தேடிச் சென்று விளக்கம் கேட்டால் உரிய விளக்கத்தைத் தரவல்லவர்களில் இருப்பவர் இருவர். அளவெட்டி அருட்கவி விநாசித்தம்பி அவர்களும் வடகோவை சிவஸ்ரீ. வை. மு. பரமசாமிக் குருக்களும் என்றால் அது மிகையாகாது. இவர்கள் கடந்த நூற்றாண்டில் ஆற்றியது போல் இந்த நூற்றாண்டிலும் மேலும் பல்லாண்டு வாழ்ந்து எமக்கு வழிகாட்ட வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

நிறைவாக

20ஆம் நூற்றாண்டின் அரை நூற்றாண்டு முடிந்தகால கட்டத்தில் ஆரம்பமான அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆரம்பம் முதல் படிப்படியாக வளரும் போது, பல அரிய பெரிய காரியங்களைச் செய்து வந்ததையும் அறிவோம். 1959ஆம் ஆண்டில் இருந்து இம்மன்றின் செயல்பாடுகளில் இணைந்து பணிபுரிந்த பல பெரியார்களின் நேரடியான பழக்கமும், அவர்களின் மூலம் ஏற்பட்ட தொடர்புகளும் இன்றும் என்னால் மறக்க முடியாது. குறிப்பாகப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், ஆ. சின்னத்தம்பி, அருள்தியாகராசா, நா. முத்தையா, ஐ. தி. சம்பந்தன், ஆ. குணநாயகம் போன்றோரின் தொடர்பு என்னை நெறிப்படுத்தி வழிப்படுத்தியது என்றால் மிகையாகாது. இவர்களைப் போல் ஏனைய அனைத்து அன்றைய உறுப்பினர்களும் இன்றைய உறுப்பினர்களும் இந்து சமயத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார்கள், உழைக் கின்றார்கள், என்று கூறி தொடரட்டும் சேவையென வேண்டி நிறைவு செய்கின்றேன்.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே."

உசாத்துணை :

1.	மகாசிவராத்திரி சிறப்பு மலர்	1970
2.	ஸ்ரீலங்கா	1960
3.	ஞானதீபம்	1964
4.	அனுராதபுரம் பொன்விழாமலர்	1975
5.	இலங்கையில் ஓர் இல்லற ஞானி (நா.மு)	
6.	காரை மணிவாசகர்விழா மலர்	1979
7.	விபுலானந்தர் உள்ளம்	
8.	உலக இந்து மாநாடு (ஆத்மஜோதி)	1982
9.	மில்க்வைற் செய்தி	1977/78/85
10.	இலங்கை இந்து	1976
11.	ஆத்மஜோதி	1982
12.	கருணாகரப்பிள்ளையார் கும்பாபிஷேகமலர்	1973
13.	திருக்கேதீஸ்வர வரலாறு பட்டுச்சாமி ஒதுவார்	
14.	புலவர் சரிதம்	1951
15.	ஆகமாமிர்தவர்ஷனி ஐ.கை	
16.	நயினத் தேர் திருப்பணி மலர்	1957
17.	ஈழத்தில் சைவம் க.சி. குலரெத்தினம்	1976
18.	உள்ளக் கமலம் – விபுலானந்தர் மலர்	
19.	பக்திமலர் (க.நா)	
20.	சிவஞானசித்தியார்	1971
21.	திருச்செந்தூர் அகவல்	1981
22.	சித்தாந்த சைவநெறித் திறவுகோல்	
23.	ஏழாலை (நா.மு)	
24.	சிவதத்துவமலர் – வவு.சி.கோ	1995

சமய நிறுவனங்களும், சமூக சேவைகளும்

ஜெகநாதன் தற்பரன்



அறிமுகம்

பண்டைய காலத்திலும் சரி, சமகாலத்தினைப் பொறுத்த வரையிலும் சரி, சமூகத்தின் தேவைகளுக்கு அமைவாகத் தோற்றம் பெற்ற காரணத்தினாலும் சமயக் காரணங்களுக்கும், சமூகச் செயற்பாடுகளுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதனாலும் சமயம், சமூகம் இரண்டையும் இரு வேறுபாடான துறைகளாக நாம் நோக்குதல் என்பது கடினமானதே. சமய நிறுவனங்களும் சமூக சேவைகளும் ஒருமித்துச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமன்றி அதுவே பாரம்பரியமாகவும் அமைந்து காணப்படுவதனை நாம் நோக்க வேண்டும். 'வேலன் வெறியாடல்' என்கின்ற சமயக் காரணத்தினூடாகவே சமூகத்தின் மாற்றங்களினை ஏற்படுத்தத்தக்க "நாடகத் துறை" உருவாகியது என்பதனைத் தமிழ் நாடக மரபில் அவதானிக்கலாம். இந்த வகையில் சமய நிறுவனங்களும் சமூக சேவைகளும் என்பதனை நாம் சற்று விரிவாக நோக்குதல் இன்று அவசியமாகவே உள்ளது.

சம காலத்தினைப் பொறுத்தவரையில் மக்களது தேவைகள் மாறிவரும் உலகிற்கு ஏற்ப நீண்டு கொண்டு செல்வதனாலும், சமயம் / மதம் என்பதனைத் தவிர மனிதன் வேறொன்றுக்கும் பயப் படாத நிலைமையுருவாகியுள்ளமையினாலும், அமைதி வேண்டியோ அன்றிப் பிறதேவைகருதியோ சமூகம் அல்லது சமூகக் கட்டமைப்புத் தேடிவரும் இடமாகச் சமய அமைப்புக்கள் காணப்படுவதனாலும் அல்லது இத்தகைய சேவைகளினை வழங்கிவருகின்ற அமைப்புக்களாகச் சமயம் சார் அமைப்புக்கள் காணப்படுவதனாலும் சமயம் என்பதனையும் சமூக சேவைகளினையும் நாம் மிக நெருங்கிய துறைகளாகக் கொண்டு – இரண்டுமே மக்களுடன் தொடர்புடையன என்ற வகையில் ஓர் அறிமுகத்தினை வைத்துக் கொண்டு, மேலதிக ஆய்வினை மேற்கொள்ளுதல் பொருத்தமானது. இங்கு சமயம் எனப்படும் போது இறைவன் வழியைப் பின்பற்றும் ஒழுக்கநெறியாகி அனைத்து மதங்களினையும் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், பிரதானமாக இந்துசமயத்தினையும், சமூகம் எனும் போது மக்களும் மக்கள் சார்ந்த இடம் எனவும் – இக்கட்டுரையினைப் பொறுத்த வரையில் – கொள்ளுதல் பொருத்தமானது என்றே எண்ணுகின்றோம்.

சமயம் - சமூகம் - ஓர் வரலாற்று மீள்பார்வை

ஆதிகாலம் தொட்டே சமயத்திற்கும், சமூகத்திற்கும் பல்வேறு தொடர்புகள் இருப்பதனை நாம் பல்வேறு ஆதாரங்கள் மூலம் எடுத்து நோக்கலாம். இயேசுவின் வரலாற்றினை நாம் எடுத்து

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் பாராட்டுப் பெறும் கட்டுரை இது.

நோக்கின் சமூகத்தின் (இயேசு மற்றும் சீடர்களினது) வாழ்க்கை முறைமை பின்பு சமயமாகியமையும், புத்தர் பெருமானது வாழ்வு முறையை நோக்கிய சமயத்தவர்கள் பௌத்தத்தினைத் தோற்று வித்தமையும் இவ்வாறே இந்துக்களது சமூகக் காரணங்கள் அல்லது செயற்பாடுகள் அத்துடன் கலை, கலாசாரப் பின்புலம் ஆகியவற்றைச் சமய அனுஷ்டானங்களாக நாம் காண்கின்றோம். சமூக அங்கத்தவர்கள் யாவரும் இறைவன் வழி வந்தவர்களாகச் சிருஷ்டிக்கப்படும் முறைமைகளினைத் திருமண வைபவம், சூரன்போர், கொலு வைத்தல், கொடியேற்றம் உட்படத் திருவிழாக் காலம் எனப் பல்வேறு முறைமைகளில் நாம் சமயத்துடன் தொடர்பு படுத்திக் காண்கின்றோம். இவ்வாறே பல்வேறு சமயக் கட்டமைப்புக்கள் அல்லது செயற்பாடுகள் சமயத்தினூடாகச் சமூகத்தின் ஒற்றுமையினை நன்கு எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. சமயத்தினைப் பொறுத்தவரை அங்கு ஒழுக்கம், அறம், அன்புக்கு அடைக்கலமாதல், கட்டுப்படல், ஒற்றுமை, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வழிமுறைகளினைக் கையாளும் வழி வகைகள் குறித்துப் பல்வேறு முறைமைகளில் விளக்கங்களினை எடுத்துக் காட்டுவதனை நாம் காணலாம். அதிலும் நாம் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மற்றும் பௌத்த மதங்களினை மதரீதியான வேற்றுமையினைத் தவிர்த்து மேற்படி விடயங்களினூடாக நோக்குவோமானால் அங்கு ஒற்றுமை மேம்படுத்தும் வழிமுறைகள் தெளிவாக விளக்கப்படுவதனைக் காணலாம். இதனை நாம் வேற்றுமையில் ஒற்றுமை எனக் கொள்ளுமிடத்து உலக சமாதானம் என்கின்ற விடயப்பரப்புக்கு அத்திவாரமாக அமைந்து காணப்படுவதனை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக இத்தகைய நிலை உணராமல் கழிந்துவிட்ட காலங்களுக்கு மத்தியில் இக்காலத்தில் இவ் உண்மை நன்கு உணரப்படுமானால் உலக சமாதானம் எட்டப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. இதனை அல்லது இத்தகைய அடிப்படைக் கருத்தினை நாம் பல்வேறு சமயக் காரணங்களில் காணலாம். இந்து சமய வழிபாட்டு முறைமைகளில் தேர்த்திருவிழா (அனைவரும் ஒன்றுகூடி வடம் பிடித்து ஒற்றுமையை நிலைநாட்டல்), கிறிஸ்தவ வழிபாட்டில் இறைவழிபாடு யாவும் நிறைவுற்ற பின்பு அருகில் நிற்பவருக்கு அமைதியுண்டாவதற்கு வேண்டிய வழிபாடு (ஒருவரையொருவர் அன்புடன் அரவணைத்து, முகம் நோக்கி அமைதியை வெளிப்படுத்தும் முறைமை), முஸ்லிம் மக்கள் தொழுகையின் பின்பு ஒருவரையொருவர் கட்டியணைத்து "இறைவன் துணை நிற்பாராக" எனச் சகபாடியை மகிழ்வித்தல், பௌத்த மதத்தினை எடுத்துக் கொண்டால் அங்கு அனைவருக்கும் தமது அன்பை வெளிப்படுத்தும் முகமாக இன்முகத்துடன் வரவேற்று நன்கு உபசரிக்கப்படும் பண்பு எனச் சமயம் பலவானாலும் அங்கு கூறப்படும் சமய, சமூகக் கருத்துக்கள் வழங்கப்படுகின்ற சமூக சேவைகள் ஒன்றாகவேயுள்ளன. சமய நிறுவனங்கள் அதன் கட்டமைப்பு, நிறுவனக் கோட்பாடுகட்கு அமைவாக இந்நிலை வேறுபட்டாலும் அவை சமூகத் தேவைகளினை (The needs of the society) திருப்திப்படுத்துவன என்ற வகையிலும், "பல்வேறு வழிவகைகளில் சென்றாலும் செல்லுமிடம் ஒன்றே" என்ற முதுமொழி போன்று சமய நிறுவனங்கள் காட்டி நிற்கின்ற அடிப்படைக் கரு (Main concept or Theme) மனஅமைதி, சமூக ஒற்றுமை (Mental relief and cooperative manner among the society) என்ற வகையிலும் ஒருமித்தே காணப்படுகின்றன.

சமூக அமைப்புக்கள் சமய நிறுவனங்களுடன் தொடர்புற்றுக் காணப்படுவது என்பதுவும் இங்கு எடுத்து நோக்கப்படவேண்டிய பிறிதொரு பிரதான அம்சமாகவே காணப்படுகின்றது. வரலாற்றின் முன்னைய காலங்களினை நாம் எடுத்து நோக்கினால் இங்கு தனிப்பட்ட சிலருக்குச் சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு இறைவன் மீது உண்டான நம்பிக்கை காரணமாக அங்கு இறைவழிபாடு பல்வேறு வழிமுறைமைகளில் தோற்றம் பெறலாயிற்று.

குறிப்பிட்ட சில அங்கத்தவர்கள், சமூகமாக இணைந்து சமயத்தின் வடிவமாகிய கோயிலை உருவாக்கி அதன்வழி சமூகக் கட்டமைப்பு உருவாகியதாயிற்று. எனினும் இறைவன் வழி ஒற்றுமை என்கின்ற முறைமை அங்கு பின்பற்றப்படவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் சாதி, சமூக ரீதியாக சமூகக் கட்டமைப்புக்கள் கிராம பிற்பட்ட பகுதிகளில் இன்றும் நிலைத் திருப்பதனை நாம் காணலாம். இவ்வாறான நிலைமை இன்று மிகமிகக் குறைந்து காணப்பட்டாலும் இன்றும் இத்தகைய நிலை காணப்படுவதனை, உள்ளதனை எவரும் மறுக்கமுடியாது. இவ்வாறாக உருவாக்கப்பட்ட சில காலங்களின் பின்பு தமது வளங்களது அமைவுகளுக்கு ஏற்பத் தமது சேவைகளினைப் படிப்படியாக விஸ்தரிக்கத் தொடங்கின. அல்லது மக்களது சமூகத்தினது தேவைகளுக்கு ஏற்பச் சமய நிறுவனங்களது செயற்பாடுகள் அதிகரிக்கப் படலாயிற்று என்று கூடச் சொல்லலாம். (The action of the religious organization was increased because of the needs of the society) இவ்வாறாகச் சமய நிறுவனங்கள் பின்வரும் வழிவகைகளில் சமூக சேவைகளினை வழங்குவதற்கு ஆரம்பித்தன.

- இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவம்
- சமூகத்தினருக்கான வழிகாட்டல் முறைமைகள்
- கல்விச் சேவைகள்
- சிறுவர் இல்லம் உட்பட்ட புனர்வாழ்வுச் சேவைகள்
- புகலிட வசதிகள்
- விசேட, பிற தேவைகளில் மக்களுக்கு உதவுதல்

என அடிப்படை முதன்மையான விடயங்களினை மையப்படுத்திச் சமூக சேவைகளினை வகைப்படுத்தச் செயற்பட்டன எனலாம். மேற்படி வழிவகைகளில் பல்வேறு சேவைகளினை சமூகத்தின் தேவைகளுக்கு (Services based on the needs of the society) அமைவாகப் பல்வேறு மதங்கள் வழங்கி வந்த போதிலும் அவை ஒருமித்த கருத்தையே கொண்டிருந்தன. ஆயினும் ஆங்காங்கு சில இடங்களில் போட்டியும் அதன்வழி தோன்றலாயிற்று.

இவ்வாறான போட்டிகள் சமூகத்தின் தேவைகளுக்கு அமைவாகச் சமய நிறுவனங்கள் தோற்றம் பெற்றதனால் அல்லது சமூக கட்டமைப்புகளுக்கு அமைவாகச் சமய அமைப்புக்கள் தோன்றிச் செயற்படத் தொடங்கியதனால் ஏற்பட்ட விளைவாகக் கருதலாம். எது எவ்வாறாயினும் மதம் என்கின்றபோது அது அத்தகைய அணுகுமுறையென்றாலும் ஒற்றுமைக் கருத்தையே வலியுறுத்துகின்றன என்ற அடிப்படைக் கருத்து முரண்படலாயிற்று. இதன் காரணமாகச் சில நடைமுறை சிக்கல்களும் முரண்பாட்டுச் சிக்கல்களும் உருவாகத் தொடங்கின.

உதாரணமாக நாம் சாதாரணமாக ஓர் கிராமப்பகுதியை எடுத்து நோக்கின் அங்கு சமய நிறுவனங்களின் அங்கமாகிய கோயில் மற்றும் சிறு அமைப்புக்கள் பகுதி மக்களுக்குச் சிறப்பாகத் தனியே போட்டியிட்டு இயங்குவதனைக் காணலாம். பாரம்பரியத்தினால் சாதி அல்லது தர நிர்ணயம் அல்லது ஒதுக்கப்பட்ட நிலைமையினால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சமூக சேவைகளினைக் குறிப்பிட்ட சில வட்டத்திற்குள் மட்டும் செய்வதனூடாக அதனையும் போட்டியிட்டுக் கொண்டு செய்வதனூடாகச் சமூகசேவைகள் ஊடாக எதனையும் பெரிதாகச்

சாதித்துவிட முடியாது. இதனையே நாம் வரலாற்றின் பல்வேறு செயற்பாடுகள் மூலமும் காண்கின்றோம். பாரம்பரியமாகக் கட்டிக் காப்பாற்றிய சமூகத்தின் அமைப்பு முறைமை பற்றிய (ஜாதி அல்லது குலம்) ஆழமான மாற்றமுடியாத சிந்தனை காரணமாகப் பல்வேறு சிக்கல்கள் உருவாகுவது யாமறிந்ததே. மக்கள் மனங்களில் சமய நிறுவனம் என்கின்றபோது நினைவுக்கு வருவது கோயில் (கோ + இல். அரசன் (இறைவன்) வாழ்கின்ற உறைவிடம்) என்பதுவே. பல்வேறு காரணங்களின் நிமித்தம் மக்கள், மக்கள் கூட்டம் (சமூகம்) தமது மனரீதியான விடுதலைகளுக்கும் இங்கு செல்வதுண்டு. மக்களது தேவைகள் அதிகரிக்கப்படும்போது சமய நிறுவனங்களது கட்டமைப்புக்களிலும் மாற்றங்கள் என்பது அவசியமாகிவிட மத ரீதியான போட்டிகளும் தலைதூக்கின. தியானம், யோகாசனம், அறநெறிப் போதனை அடைக்கலம் வழங்குதல் எனப் பல வழி முறைகளில் ஆற்றப்படும் சமூக சேவைகள் ஒன்றாகக் காணப்படுகின்ற பொழுதிலும் சமய நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் என்கின்ற போது அங்கு போட்டியும் அதன் விளைவாகச் சில சிக்கல்களும் சமூகத்தின் முரண்பாடுகளும் சமயத்திற்குள், சமூகத்திற்குள் சமூக ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டுவருகின்றன.

சமகால நிலைமை

மாறிவரும் நவீன உலகத்திற்கு அமைவாகப் பல புதிய கருத்துக்கள், அறிவியல் சார்ந்த அணுகு முறைமைகள் தோற்றம் பெறுவதனால் குறித்ததொரு விடயப்பரப்பு சம்பந்தமான நிலையான கருத்து என்பது மக்களது மனங்களில் இல்லாத ஒன்றாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாகப் பாரம்பரியக் கருத்துக்களினையும், பண்பாட்டுக் கலாசார அம்சங்களினையும் மட்டுமே பேணிக் காப்பாற்றியவாறு மக்கள் நம்பி வாழ்ந்து விடுவதென்பதும் இயலாத காரியமாகவே காணப்படுகின்றது. அத்துடன் போட்டிகளுக்கு மத்தியில் உள்ள உலகில் சமய நிறுவனங்கள் கூடச் சமூக சேவைகள் உட்படப் பல்வேறு சேவைகளினை வழங்குவதற்கு அவற்றினூடாகச் சிறப்பான இடத்தினைப் பெறுவதற்காகவும் செயற்படவேண்டிய கட்டாயத் தேவையில் சமகாலம் உள்ளது. ஏனெனில் விஞ்ஞான யுகமாகிய சமகாலத்தில் பாரம்பரியக் கருத்துக்களோ அல்லது காலத்தினைப் பருமட்டாகக் கூறும் ஏட்டுச் சுவடிகளினூடாகக் கூறப்படும் வரலாறோ மக்களது மனங்களில் சமயக் கருத்துக்களினை நிலைபெறச் செய்யப் போதுமானதாக காணப்படவில்லை என்கின்ற பொதுவான குற்றச்சாட்டு சமகாலத்தே உள்ளது. மதரீதியாகச் சேவைகளினை சமூகங்களுக்குச் செய்ய முற்படுகின்ற சமய நிறுவனங்கள் சமூக அபிவிருத்தியை (Societ/ Community Development) ஓர் அம்சமாக நோக்குவதனால் தமது மதத்திற்கு ஆட்களினை விஸ்தரிக்கின்றன அல்லது மக்கள் மயப்படுத்துகின்றன.

இதுவே மத மாற்றாகி விடுகின்றபோது சமூகக் கட்டமைப்பில் பாரிய சீரழிவுகளினைக் கொண்டுவருவதற்குக் காரணமாகச் சமய நிறுவனங்கள் அமைந்துவிடுவதுடன், அத்தகைய சீரழிவிலிருந்து கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பினைச் சமூக சேவையாகக் கொள்ளவும் தயாராக வேண்டும்.

சமகாலத்தினைப் பொறுத்தவரையில் சமய நிறுவனங்கள் சமூக சேவைகள் என்பதற்கு அப்பால் தூரநோக்கில் நாட்டின் தலை விதியையே மாற்றிவிடுகின்ற அளவுக்குச் செயற்பட்டதனையும் நாம் நினைவூட்டிப் பார்க்க வேண்டும். நல்ல விளைவுக்காகச் சமூக சேவைகளுக்கும் அப்பால் நாட்டின் ஸ்திரத் தன்மையினையே சமய நிறுவனங்கள் மாற்றிவிடுவது என்பது சந்தோஷமானதே. ஆனால் சமய நிறுவனங்களது முடிவில் தான் தேசியத்தின் இறைமை, மக்களது உரிமைகள் (குறிப்பாக சிறுபான்மையினரது) தங்கியுள்ளது என்று கூறுவதென்பது ஜனநாயக நீரோட்டத்தில் சற்று வேடிக்கைக்குக்குரிய விடயமாகவே உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை பௌத்த மகாசங்கத்தினர், இந்தியாவினைப் பொறுத்தவரை பாரதீய ஜனதா தள ஹிந்து பரிசுத்த சபை போன்ற அரசியலில் அமுக்கம் கொடுக்கும் குழுக்களாகக் (Pressure Groups) காணப்படுகின்றன. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இந்நிலைமைக்காக ஒருபுறம் சந்தோஷப்பட்டாலும் மறுபுறம் சிறுபான்மைச் சமய அமைப்புக்களது கருத்துக்களும் இவ்வாறாகக் கவனத்தில் கொள்ளப்பட்டனவா? என வினவுகின்ற போது அதுவும் வேடிக்கைக்குரிய விடயமாகவே உள்ளது. எனவே சம காலத்தேயுள்ள நிலைமை போன்று அல்லாமல் அரசியல் நீரோட்டத்தில் சம அந்தஸ்து என்பது சகல சமய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டே ஆக வேண்டும். இதற்கு முன்னோடியாக நில நிகழ்வுகள் இந்துசமய கலாசார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டாலும் இது

- அரசின் தார்மீகப் பொறுப்பென,
- கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியதென,
- தனது பங்குகளில் மிகமுக்கியமானதொன்றென,

அரசு உணர வழிவகைகள் செய்யப்படுதல் வேண்டும். (The Govt. should realize about their roles, status for the equity)

சமய அமைப்புக்களிளை அவை வழங்கும் சமூக சேவைகளினைக் கொண்டு இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை வருமாறு:

1. சிறிய அளவில் சமூக சேவைகளினை ஆற்றிவரும் சமய நிறுவனங்கள்.

கிராமியப் பிரதேச வட்டத்திற்குள் (Village & Divisional) இவற்றினது சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். எனினும் சில சந்தர்ப்பங்களில் மாவட்ட அளவில் செயற்பட வாய்ப்புக்கள் உண்டு என்கின்ற பொழுதிலும், அல்லது தேசிய அளவில் தொடர்புகளினைக் (Network) கொண்டிருக்கும்.

2. பெரிய அளவில் – தேசிய ரீதியாக – அரசியல் செல்வாக்குச் செலுத்துமளவுக்குச் சமூக சேவைகள் ஆற்றிவரும் சமய நிறுவனங்கள்.

இந்த நிலையில், கிராமம் தொடக்கம் தேசியம் வரை படிப்படியான கட்டமைப்புக்கள் மூலம் சமூக சேவைகளினை வழங்கிவரும் நிறுவனங்கள், தமது கட்டமைப்பில் அதிகப்படியாகத் தனிநபர்களினைத் தமது அங்கத்தவர்களாகக் கொண்டிருப்பதனால், இலகுவில் அங்கு அரசியல் செல்வாக்குச் செலுத்தி விடுகின்றன. இதுவே காலப்போக்கில் அரசினது குழுக்களாகச் செயற்படவும் காரணமாகி விடுகின்றது.

இவ்விரு நிலைமைகளுக்கு மத்தியில் கூடப் பல்வேறு சமய நிறுவனங்கள் பல்தரப்பட்ட சமூக சேவைகளினை வழங்கி வருகின்ற போதும் தனித்தனியே அவ்வமைப்புகள் யாவுமே தமக்கென வகைப்பாடுகளினைக் (CRITERIAS) கொண்டே செயற்பட்டு வருகின்றன. இருப்பினும் தமக்கென வகைப்பாடுகளினைக் கொண்டே செயற்பட்டு வருகின்றமையினால் சமூகத்தின் சேவைகளினைப் பூரணமாக வழங்கக் கூடிய நிலைமையில் அனேகமான சமய அமைப்புக்கள் இல்லை என்றே கூற வேண்டும்!


மக்களது தேவைகளில் ஒரு சிலவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சித்தாலும் அத்தீர்வு முழுமையாகக் கிடைக்காத நிலையில் அல்லது அத்தீர்வு எட்டப்படும் முன்பே சமய நிறுவனம் பல்வேறு நிலைமைகளால் மூடப்பட வேண்டிய அவலநிலையே தான்

சமகாலத்தினைப் பொறுத்தவரை பலரும் முகம் கொடுக்கின்ற சிக்கல்களாக உள்ளது.

இதனையே நாம் உலகளாகிய ரீதியில் நோக்குவோமானால் மதம் என்கின்ற பெயரில் தலிபான் அமைப்புக்கள் பல பெண்கள் மீது அடக்கு முறைமைகளினைக் கட்டவிழ்த்து விட்டதனையும், முஸ்லிம் இந்து மக்களிடையே பாரிய, தீராத பிரச்சனையாகவே உருவெடுத்து விடுகின்ற (வருடாவருடம்) பாபர் மசூதி – ராமர் கோயில் விவகாரம், உலகளாவிய ரீதியில் பாரியளவில் கிறிஸ்தவ மதத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பாரிய பிரச்சார நடவடிக்கைகளும், மதமாற்று நடவடிக்கைகளும் என சமகால நிலைமை என்பது சற்று "கவலைக்கிடமான" நிலைமையாகவே உள்ளது.

நிலைமை எவ்வாறான பொழுதிலும் மக்கள் சார்ந்த சமூகமும் சமூக சேவைகளினூடாகச் சமய நிறுவனங்களினையும் ஒரே கூரைக்குள் கொண்டு வருவதற்கு முயற்சிக்காமல் பல்வேறு போட்டிக் கிளைகளாகப் பிரித்து நிற்பதுவும், மதங்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வுகளும், சமூகக் கட்டமைப்பினால் உருவாகிய உள்ளூர் வழக்கங்களும் எனச் சமய நிறுவனங்களது மூட நம்பிக்கை என்பதுவும் கவலைக்கிடமான நிலையாகவே உள்ளது. இதன் விளைவாகக் கிராமங்களில் மட்டுமன்றி நகரங்களிலும் பல்வேறு வகைச் சாஸ்திர சம்பிரதாயங்கள் தோற்றம் பெற்றுள்ளமையினையும் கை ரேகை சாஸ்திரம், காண்டம், உரு ஆடல், பார்வை பார்த்தல் எனப் பல்வேறு தொழில்சார் நடவடிக்கைகள் (மக்களுக்கோ அன்றி வழங்கப்படுகின்ற சேவைகளிலோ நம்பிக்கைத் தன்மை ஓரளவுக்கு இருப்பினும்) தோற்றம் பெற்று அதுவே சில இடங்களில் சேவையாகவும் அமைந்து வருகின்றது.

இவ்வாறாகச் சமய நிறுவனங்கள் ஆற்றுகின்ற சமூக சேவைகள் மக்களினது தேவைகளினை மையப்படுத்தியதாகக் (Needs Based) காணப்படுகின்ற போதிலும் சமய அமைப்புக்கள் தமது குறிக்கோளினை இலகுவில் கொண்டு செல்வதற்காக அல்லது நடைமுறைப்படுத்துவதற்காகச் சமூகசேவைகள் என்கின்ற பெயரில் சமூகத்தினை உள்வாங்குகின்றன அல்லது தம்மகத்தே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மக்களது தேவைகளினை ஓரளவுக்கு நிறைவேற்றுகின்றன என்றே கூறவேண்டும். இந்நிலை மாற்றம் பெற வேண்டும். காலம் விரைவில் மாற்றம் பெறுவதற்கு அமைவாகச் சமய நிறுவனங்களோ வழங்கப்படுகின்ற சமூக சேவைகளோ மக்களது மனங்களினை பூரணமாக அல்லது பெரும்பான்மையாகவேனும்



திருப்திப்படுத்துவதற்கு இயலவில்லை அல்லது வழங்கப்படுகின்ற சேவைகள் பிரதிபலிப்பதாக இல்லை என்றே கூறவேண்டும். எனவே தேவைகளினை மையப்படுத்தியாக அமைந்து காணப்படுகின்ற சமூகத்தின் மீதான சேவைகள் உரிமைகளினை மையப்படுத்தியதாக (Right based) மாறுதல் வேண்டும். உரிமைகள் பூரணமாக அனுபவிக்கப்பட்டுச் சமூகத்தின் பொறுப்புக்கள் உணரப்படும் பட்சத்தில் சமூக மாற்றம் என்பதுவும் சமய நிறுவனங்களினூடாக ஒற்றுமை, சாந்தி, சமாதானம் எனப் பல் வேறு புரிந்துணர்வு நிலைமைகள் உருவாகுவதற்கும், சமநிலைமையைத் தோற்றம் பெறச் செய்வதற்கும் ஏதுநிலைகள் உண்டு. அன்றேல் சமகால நிலைமை சற்று விஸ்தீரணப்படுத்தப்பட்டுச் சமூக மட்டங்களிலும் கட்டமைப்புக்கள் உருவாகிப் பல்வேறு சிக்கல் களினை, பிரச்சினைகளினை உருவாக்கி விடுவதுடன் சமூகப் பிரச்சினைகள் உருவாக்கப்படவும் ஏதுநிலைகள் அதிகமாகவே காணப்படும் என்பதில் ஐயமில்லை. சமகால நிலைமையினை நாம் பின்வரும் கட்டமைப்புகள் மூலம் சிறப்பாக எடுத்து நோக்கலாம். பிரதேசம் என்கின்ற போது ஏதோ ஒரு தேவைக்காக ஒற்றுமைப்படுகின்ற மத அமைப்புக்களும் சமய நிறுவனங்களும் கிராமம் / பிரிவு என்கின்ற நிலைமையில் வேற்றுமைப் பண்பை நிலையாகக் கொண்டிருப்பதனையும், சமூக சேவைகளுக்காகவோ அன்றித் தமது சமூகத்தின் தேவைகளுக்காக மாவட்டம் வரை ஒற்றுமையாகச் செயற்படும் சமய நிறுவனங்கள் மதம் என்கின்ற கருத்து வருகின்ற போது வேற்றுமையினை அடிப்படையாகக் கொள்வதனையே இக் கட்டமைப்பு அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது.

எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள்

சமய நிறுவனங்கள் சமூக சேவைகள் என்கின்ற பெயரில் சமூகத்தின் உரிமைகளினை நிலைநாட்டுவதற்கான செயற்பாடு களில் பூரணமாகச் செயற்படுத்த முடியாத நிலை காரணமாகப் பல்வேறு பிரச்சனைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. அவற்றில் சில வருமாறு.

1. சமூகக் கட்டமைப்புக்கள் சமயத்தின் அடிப்படையில் அமைக் கப்பட்டதனால் சமய ரீதியாக அனைத்துத் தரப்பினரையும் ஒற்றுமைப்படுத்துதல் என்பது இலகுவானதல்ல.
2. சமய நிறுவனங்கள் வழங்குகின்ற சமூக சேவைகள் குறிப்பிட்ட சில சமூகத்தினரையே உள்வாங்குகின்றன. இது மக்கள் மனங்களில் வேற்றுமைப்படுத்தப்பட்ட செயற்பாடாக அமைந்துவிடுவதுடன் ஆன்மீகம் சார்ந்தவர்களுக்கு இறைவன் மீதான ஏற்புடமை மற்றும் நம்பிக்கைகள் அற்றுப் போவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.
3. சமய ரீதியான சமூகக் கட்டமைப்புகளுக்கு மத்தியில் போட்டி யும், பொறாமையும் இதன் விளைவாகச் சமூகத்தில் முரண் பாட்டுச் சிக்கல்களும் ஏற்பட்டு விடுவதற்கான ஏதுநிலைகள் உள்ளன.
4. போட்டியினடிப்படையில் செயற்படும்போது முதலிடத்தில் இருக்கும் அல்லது அதிக சலுகை / கவர்ச்சிப் பண்பு கொண்ட மதம் நோக்கி அதாவது அதிகப்படியான சமூக சேவைகளினை வழங்கும் சமய நிறுவனம் நோக்கி சமூகத்தின் படையெடுப்பு என்பது சாதாரண நிகழ்வாக நடைபெறுவதனை நாம் இன்றும் நோக்கலாம். இதனால் மதமாற்றம் என்பதுவும் சமூகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு நகர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது குறிப்பிட்ட சமூகத்தின் இயல்பான வாழ்வின் நாளாந்தச் செயற்பாடுகள் தாக்கம் பெறுவதுடன் "சமூகக் காரணிகள்" நிலைபெறாத் தன்மையும் ஏற்பட்டுவிடுகின்றது.

5. சமய நிறுவனங்கள் சமயம் சார் கருத்துக்களினைப் பூரண மாக / தெளிவாக / இலகுவான மொழிநடையில் சமூகத்தின் மத்தியில் எடுத்தியம்பச் செய்யவேண்டும். அத்துடன் பிற சமூக சேவைகளினையும் ஆற்றுவதனூடாகச் செய்ய வேண்டும். இரண்டுக்குமான சமநிலை பேணப்படாத விடத்து மக்கள் மனங்களில் ஏதுநிலைகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தீர்வுகள் அல்லது பிரேரணைகள்

1. சமய நிறுவனங்கள் தமது சேவைகளினை மத ரீதியாக மட்டும் மேற்கொள்வதனை விடுத்து சமூக சேவைகளினைச் சமூகத்தின் உரிமைகளினை மையப்படுத்தியதாகப் பங்களிப்பு முறையில் செயற்படுத்தி அவற்றின் வழியாக மதக் கருத்துக் களினையும் அறக் கருத்துக்களினையும் நிலை நாட்டுதல் சாலச் சிறந்தது.
2. மூட நம்பிக்கைகள் சமயப் பழக்கவழக்கங்கள் யாவும் பூரண ஆதாரங்களுடன் ஏற்புடைமைக் கருத்துக்களாக மக்கள் மனங்களில் நிலை நாட்டப்பட்டு, இவை ஆவணங்களாக்கப் பட்டு, அடுத்துவரும் சந்ததிகட்குக் கடத்தப்படவேண்டும்.
3. மக்கள் / சமூகம் மத்தியில் சமயம் / மதரீதியான நம்பிக்கைகள் மக்கள் மனங்களில் நிலைபெறச் செய்வதற்குப் பல்வேறு வகைகளில் நவீன தொழில்நுட்ப முறைமைகளுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.
4. பல்வேறு மதங்களுடன் இணைந்த ஓர் செயற்பாட்டுக் குழு பல்வேறு மட்டங்களில் அமைக்கப்பட்டு மதரீதியான ஒற்றுமைக் கலாசாரத்தினை சமூக மேம்பாட்டினூடாக உருவாக்குவதற்கு இந்துசமயம் முன்னோடியாகச் செயற்படலாம்.
5. நவீன தொழில்நுட்ப முறைமைகள் இல்லாமல் நாளாந்த மக்கள் வாழ்க்கை இல்லை என்றாகிவிட்ட போது சமூக சேவைகளிலும் குறிப்பாகச் சமய நிறுவனங்களது நவீன முறைமைகள் (Modern Techniques) அறிமுகப்படுத்தப்படலாம். இந்நிலை உணரப்பட்டு விரைவில் செயற்படுத்தப்படவும் வேண்டும்.
6. சமயம் என்பது பல்வேறு சமூகத்திரையும் இறைவழி கொண்டு செல்வதனாலும், சமூகத்தில் பலர் எங்கும் கிடைக்காத நிம்மதி தேடிச் சமய நிறுவனங்களினை நாடி வருவதனாலும் எக்காரணம் கொண்டும் அரசியல் சமயம் இரண்டையும் தொடர்புபடுத்தப்படாத, சமூக சேவைகள் வழங்கப்படுதல் வேண்டும். பௌத்த மதமும் மகாசங்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணியைக் (குறிப்பாக பண்டாரநாயக்கா குடும்பத்தினரை) செல்வாக்குச் செலுத்தியது போலல்லாமல் இந்துசமய கலாச்சார அமைச்சு போன்று அரசியலினைச் சமய ரீதியான சமூக மேம்பாட்டுக்குப் பின்னணித் தேவையாக வைத்துச் செயற்படுவது போன்ற நிலைமை அனைத்துச் சமூகங்களுக்கும் அவசியம் தேவையானதே.
7. பல்வேறு மதங்களுடன், பிறசமூக அமைப்புக்களுடன் கருத்துக்களினைப் பரிமாறவும் பரந்த செயற்பாட்டிற்கும், (To exchange the ideas and to coves the people in widely) சிறந்த ஒரு வலைப்பின்னல் (Network) முறைமை கிராமப் பகுதியிலிருந்து தேசியம் வரை விஸ்தரிக்கப்படல் வேண்டும்.
8. நிலைமைகள் ஒழுங்காகக் கண்காணிக்கப்பட்டுக் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு மாற்றுச் சட்டங்கள் அல்லது சட்டத் திருத்தங்கள் அமுலுக்கு வருதல் வேண்டும். இதன் மூலம் பல்வேறு அமைப்புக்கள் சிறப்பான சேவைகளினை வழங்கவும் மதமாற்றம் போன்ற முரண்பாட்டுச் சிந்தனைகள் நடைமுறைப்படுத்தப்படாமல் போவதற்கான ஏதுநிலை உருவாகவும் சாத்தியக் கூறுகள் உண்டு.
9. நிலைமைகள் கண்காணிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டு நல்ல விடயங்கள் அணுகுமுறைகள் (Good Practice) பிற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுவதுடன் வேண்டிய மாற்று ஏற்பாடுகள் (Alternatives) நடைமுறைக்குக் கொண்டு வரப் படுதல் அவசியம்.

தொகுப்பும் / முடிவும்

தற்காலத்தினைப் பொறுத்தவரை சமய நிறுவனங்கள் அதீத முயற்சியுடன் ஆற்றுகின்ற சமூக சேவைகள் சமகாலத் தேவை களினை நிவர்த்தி செய்வதற்கேதுவாகச் செயற்பட்டு வருகின்றது என்பது, எவரும் மறுக்கமுடியாத உண்மையே. எனினும் மதரீதியாக நாம் வேற்றுமை நோக்காது பரந்தளவில் சிறப்பாகச் செயற்படுதல் அவசியம் என்ற நிலை தோற்றம் பெறுகின்றமை தவிர்க்கப்பட வேண்டியது. இத்தகைய நிலைமையில் இருந்து கொண்டு ஒவ்வொரு தனிநபரும் சிந்திப்பதனூடாகவும், மாற்று வழிமுறைகள் செயல் வடிவம் பெறுவதற்கு வேண்டிய தமது பங்கும் பொறுப்புக்கள் குறித்து (Roles & Responsibilities) உணர்ந்து செயற்படத் தயாராவார்களாயின் தனிநபர், சமூகமாகி, நாடாகி, உலகமாகி உலக ஸ்தானத்தில் இந்துமதம் உலக ஒற்றுமைக்கும், மதக்கருத்துக்களது ஏற்புடைமைத்தன்மைக்கும், உலக சமாதானத்திற்கும், முதன்மையானதாகக் காணப்படும் என்பதில் ஐயமேதுமில்லை. இத்தகைய எண்ணங்கள் செயல் வடிவமாக்கப்பட்டு உண்மைநிலை உணரப்படும். அது வரையில் நமது செயற்பாடுகள் தொடரட்டும்.

உசாத்துணை :

1. சண்முகலிங்கன். என் (2002), பண்பாட்டின் சமூகவியல், பக் 02, 07, 13
2. சிவத்தம்பி. கா (1999) இலங்கைத் தமிழ்ப் பண்பாடும் கலைகளும், அறிமுகம் – கட்டுரை.
3. உமாகேசன். எஸ், வீரகேசரி (12.05.2004 – புதன் – பக். 04) "மதவாதம் தோன்றினால் மனிதநேயம் சிதைந்து போகும்"
4. US Govt. Report (1999) "Religion's Freedom in Srilanka - 1999"
5. பரமவிரம்ச ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள், குமுதம், 03.05.2004, "கோவிலா சூதியா" உற்சாகத் தொடர் 61, பக் 123.
6. "Informal Dispute resoluation in North & East", publication of Center for policy alternatives, page 19.
7. கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடனான கலந்துரையாடல் 21.06.2005 (வெள்ளி).
8. வீரகேசரி வார வெளியீடு, 16.05.2004, பக் 35, "நிகழ்காலத்தில் வாழ்வதே நிரந்தரமானது"
9. புத்தூர், கரணவாய், நயினாதீவு, வட்டுக்கோட்டை சமூகத்தவர்களது அனுபவப் பகிர்வு.
10. J. THATPARAN, SERVICE AS A CULTURAL VAULE IN THE PRESENT RELEGIOUS ORGANIZATIONS IN JAFFNA - STUDY REPORT (2004).
11. புள்ளிவிபர திணைக்கள, கட்டமைப்பு (INFRA STRUCTRE) மாதிரி.

புராணங்கள் தரும் படிப்பினைகள்

செல்வி வித்யாஷினி சிவசுப்பிரமணியம்
ஹைலண்ட் கல்லூரி, ஹட்டன்



வையத்துள் மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், வாழ்வாங்கு வாழ்வதற்கு அவன் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன என்பதையெல்லாம் கருப்பொருளாகக் கொண்டு மனித மேம்பாட்டிற்காகத் தோன்றியவையே புராணங் கள். இந்து சமய இலக்கிய வரலாற்றிலே பல வகையிலும் முக்கியத்துவமுடையதாக விளங்கும் புராணங்கள் ஆன்மாக் களுக்கு அருளும் நோக்குடன் இறைவன் திருவிளையாடலாக நிகழ்த்திய நிகழ்ச்சிகளை சாதாரண மக்கள் மனதிலே ஆழப் பதிக்கவல்ல முறையிலே கதை கூறுகின்ற உத்தியைக் கையாண்டு பக்தியைப் பரப்பும் நோக்குடன் அமைக்கப்பட்டன.

சமய தத்துவங்களையும், கருத்துக்களையும் பாமரமக்களுக்கு எளிமையாக எடுத்துக் கூறுவதனால் புராணங்கள் இந்து சமய மரபிலே சிறப்படைந்துள்ளன. இந்துசமயத்தின் பண்பாட்டுக் கருவூலங்களாகக் கொள்ளப்படும் புராணங்களில் பல கதைகள் இணைக்கப்பட்டிருப்பதோடு பஞ்ச லக்கணங்களையும் கொண்டி ருக்கிறது. இவை கதைகள் மூலமாக பாமரமக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் சமய தத்துவங்களை விளக்குவதோடு மனித விழுமியங்களைக் கூறி அன்றாட வாழ்க்கையில் பிரச்சினைகளை எவ்வாறு அணுகவேண்டும், எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக் கூடாது என்ற வாழ்க்கைக்கு உகந்த படிப்பினைகளையும் எடுத்துக் காட்டுகிறது.

மனிதர்கள் பலவீனமுடையவர்கள். குறிப்பாக ஆசைக்கு அடிமையாகும் இயல்புடையவர்கள். மண்ணாசை பெண்ணாசை, பொன்னாசை என்பன மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. இவ் ஆசைகளில் இருந்து எப்படி விடுபடுவது, ஆசையினால் வரும் துன்பங்கள் எவை என்பதையும் எடுத்து இயம்புகின்றது.

புராணங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது. தர்மத்தின் அத்தி வாரத்தில் வாழ்க்கையைக் கட்டியெழுப்பப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. "தர்மம் தலைகாக்கும், நாம் செய்கின்ற பாவ புண்ணியங்கள் தாம் நம்மைப்பற்றித் தொடரும் என்னும் கருத்தும், வாழ்வில் பற்றை விலக்க வேண்டுமே ஒழிய வாழ்க்கையை விலக்க வேண்டியதில்லை என்றும், கடமையைச் செய்பவனை எதிர்பாராதே, செயலிலே துறவு, அன்பு இறைவன் மீது பக்தி செய்யும் முறை, சமரசப் போக்கு, பிற உயிர்களுக்குச் செய்யும் தொண்டுகள், இல்லறத்தில் நின்று இறைவனை

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய
மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில்
முதலாவது பரிசு பெற்ற கட்டுரை.



அடையும் முறை போன்ற பல படிப்பினைகளை எடுத்துக் கூறுகின்றன.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்"

இதைத்தான் புராணம் கூறுகிறது. உனக்கிட்ட கடமைகளை ஒழுங்காகச் செய்தல், அதுவே உயர் நிலையை அடையும் தகுதியை வளர்த்துக் கொடுக்கும். விரதம் அனுட்டிக்கும் முறையில் மனதிற்கு, மனத்தூய்மைக்கு முதலிடம் கொடுக்கிறது.

"மனத்தின் கண் மாசிலனாதல் தான் உயர்ந்த அறம்"

இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதுடன் பல அறக் கருத்துக்களைப் போதிக்கும் உயர்வான மனிதாபி மானத்துடன் கூடிய புராணங்களை சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு போற்றுகின்றார்.

"புராணங்கள் இந்துக்களைப் பன்னெடும் காலமாக தலைமுறை தலைமுறையாக தர்மநெறியில் வழி நடாத்தி வருகின்றது" என்கிறார்.

புராணம் என்பது பழைய வரலாறு எனப்பொருள் தருகின்றது. புராணம் என்பதற்கு சூரிய புராணம் அன்று தொடக்கம் இன்றுவரை நிலவி வருவது என்றும், மச்ச புராணம் பழைய காலத்துப் படிப்பினை நிகழ்ச்சிகளைக் கூறும் நூல் என்றும் கூறப்படுகின்றது. சமய உண்மைகளைச் சரித்திரப் பாரம்பரியத்துடன் இணைத்து, படிப்பினை ஊட்டும் வகையில் பாமரமக்கள் படித்து இன்புறும் வண்ணம் பாடப் பெற்றவையே புராணங்கள்.

புராணங்கள் எம்மைப் போல் வாழ்ந்து இறையருள் பெற்ற அடியார் பெருமையையும் உள்ளத்தூய்மையுடன் வழிபடும் அடியார்க்கு இறைவன் அருள்புரியும் திறத்தையும் எடுத்துக் கூறுவதுடன் எக்காலத்தும் இறைவன் "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான்" என்ற படிப்பினையையும் எடுத்துக் கூறுகின்றன. சமுதாயத்தில் சமய வாழ்வும் தெய்வ நம்பிக்கையும் சாந்தி சமாதானத்துடன் நாம் வாழ வழிவகுக்கும் என்ற தத்துவத்தையும், இறைவன் ஆன்மாக்கள் அனைவருக்கும் ஒரே விதமாக அருள் பாலிக்கும் தன்மையையும் எடுத்துக் கூறுகின்றது.

எவரையும் பழித்தல், பகைத்தல், இழித்துரைதல், பிறர் மனம் நோகும்படி நடத்தல், பிறர்க்கு மனத்தாலும் தீங்கு நினைத்தல் என்னும் குற்றங்கள் எதுவும் இன்றி அமைதியாக வாழ்ந்த மக்களது வாழ்க்கையைப் புராணங்கள் எடுத்தியம்புவதால் அவற்றை நாம் படிக்கும் போதும், புராண படலமாகக் கேட்கும் போதும் நாமும் அப்படி வாழவேண்டும் என்ற மனநிலை உருவாகின்றது.

அத்துடன் ஆலய அமைப்புமுறை கிரியை போன்றவற்றையும் விரதம் அனுஷ்டிக்கும் முறை, தலம், தீர்த்தம், தலயாத்திரை போன்ற சமய மரபுகளையும் ஒருவன் பிறந்தது முதல் திருமணம் செய்யும் வரை மேற்கொள்ள வேண்டிய பூர்வக்கிரியைகளையும், இறந்ததன் பின் செய்யும் அபரக்கிரியையையும் கூறுகின்றன. அதுமட்டுமன்றி குழந்தைகளுக்கு அமுதூட்டுதல், சோதிடம் பார்த்தல், மன்னர் அரசு கட்டில் ஏறுதல் போன்ற விடயங்களையும் கூறுவதனால் புராணங்கள் இந்துசமயத்தின் கருவூலமெனவும், சமய தத்துவக் கருத்துக்களை எளிமைப்படுத்தும் இலக்கியம் எனவும், வைதீக சமய மரபையும் வாழும் இந்து மதத்தையும் ஒன்றிணைக்கும் பாலம் எனவும் போற்றப்படுவது சாலச் சிறந்தது.

புராணங்களில் கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளை யாடற் புராணம் என்பன மிகமுக்கியமானவை. கந்தபுராணம் ஒரு வாழ்வியற் காப்பியம். மனிதனாகப் பிறந்தவன் எவ்வாறு தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பதைச் சிறப்பாக எடுத்துக் கூறும் நூல். நன்றி மறந்தால் வரும் கேட்டினைச் சித்தரிக்கும் ஒப்பற்ற அறநூல். சிவத் துரோகிகளுடன் கூட்டுச் சேர்வதால் வரும் பெரும் துன்பத்தை விளக்கி நமக்கு எச்சரிக்கை விடுகின்றது. இந்தப் புராணத்தில் கூறப்படாத அறத்தின் கூறுகள் வேறு எந்தப் புராணத்திலும் கூறப்படவில்லை. அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு மெய்ப் பொருள்களையும் விளக்கி நிற்கும் ஞானப்பெருநூல். பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் இரங்கியும் இறங்கியும் வந்து அருள்புரிவான் என்பதை விளக்கும் அற்புதம் நிறைந்த விழுமியக் கருத்துக்களை தத்துவார்த்த ரீதியாக எடுத்து விளக்குகின்றது.

சூரபத்மன் தனக்கு வரந்தந்து வாழ்வளித்த சிவபெருமானை மறந்து அவரது திருக்குமாரரான முருகப்பெருமானுடன் தொடர்ந்தும் போர் செய்யத் துணிவது நன்றியைக் கொன்ற செய்கையையும், நன்றி மறந்ததால் வரும் கேட்டினையும் பாமரமக்களுக்கு விளங்கக் கூடிய முறையில் விளக்கியுள்ளதுடன், சிறந்த படிப்பினையாக அதாவது நாம் எவ்வளவு தீமை செய்தவர் களாக இருந்தாலும் முருகனது திருவருள் கைகூடப்பெறும் நிலையையுடையவர்களானால் அத்தீமையாவும் நீங்கப்பெற்று மேலான பெறுதற்கரிய பேற்றைப் பெறுவோம் என்ற படிப்பினையை சூரபத்மன் வரலாறு மூலம் தெட்டத் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. மேலும் கந்தபுராணத்தின் படிப்பினைக் கருத்து என்னவெனில் உயிர்கள் விதி வழி தவறி ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களால் வினைப்பயனை அனுபவித்துத் துன்புறுகின்றன. பின் இறைவனை நினைத்து அன்பால் வழிபட்டு திருவருளின் துணை கொண்டு மும்மலங்களை நீக்கி இறவாத இன்பமுத்தியைப் பெறுகின்றன. இந்தப்படிப்பினையையே கந்த புராணம் சித்தரிக்கின்றது.

பெரியபுராணத்தை நோக்கினால் "தொண்டர் குலமே
தொழுதகு குலம்"

என்பதை வற்புறுத்துகின்றது. ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டையும், இறை வழிபாடு செய்ய சாதி சமயங்கள் குலம் கோத்திரம் குறுக்கிடப் போவதில்லை என்பதையும் வெளிப்படுத்துகிறது. பெரியபுராணம் 63அடியார் வரலாற்றைக் கூடுவதுடன் சிறப்பாகச் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப் பட்ட பகுதி சாதாரண மக்கள் வாழ்க்கை நடைமுறையையும், படிப்பினையையும் ஊட்டக்கூடியதாக உள்ளது. அதாவது கன்மம், மறுபிறப்புத் தத்துவம், சுவீகாரம், பலதார திருமணம், சடங்கு முறை, கோயில் வழிபாடு, இலட்சிய வாழ்க்கை தொண்டின் சிறப்பு, வழிவழியடிமைமுறை, பெண் சுதந்திரம், பக்தி, ஈகை, ; கொடை, பொய்ச்சத்தியம் செய்தல் தகாது என்பன போன்ற இன்னோரன்ன படிப்பினையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

சுந்தரரின் திருமண வேளையில் சிவன் கிழப் பிராமணராக வந்து அத்திருமணத்தைத் தடுத்து ஆட்கொள்கின்றார். இச்செயல் ஆன்மாவானது வினைவழி விலகிப் பிற ஆகாமிய வினைகளைச்

செய்ய விடாது இறைவனே உரிய வேளையில் வந்து வழி காட்டு வார் என்பதையும், அகந்தை மிகுதியுடன் தேடிய பிரமா விஷ்ணு வால் கூட அறிய முடியாத பரம்பொருள் தன்மீது அன்பு பூண்டொழுகும் அடியார்க்கு எளியனாக வருவான் என்ற படிப்பினையையும், நாள்தோறும் திருமுறை ஒதும் சமய மரபு பேணப்பட்டது என்பதையும், இல்லற ஒழுக்கம், விருந்தோம்பல் உபசாரம் முதலிய பண்பாடுகளும் அழகாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

பெரியபுராணம் எடுத்துக் கூறும் படிப்பினை ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் உயிர்களை அநாதியே பீடித்துள்ளன. முற்றுணர்வும், வரம்பிலாற்றலும் பேரருளும் உடைய இறைவன் தானே உயிர்களைப் பற்றியிருக்கும் ஆணவப் பிணிப் பினை அகற்றுவதற்காக தனு, கரண, புவன போகங்களைப் படைத்து அளித்து உயிர்களை வாழச்செய்து பாசப்பிணி அகற்றி மீண்டும் பிறவா நெறியாகிய வீடு பேற்றினை வழங்கி அருளு கின்றான் என்பதும், மக்கள் தமது பந்த பாசம் அகலக் கருணை வடிவான இறைவனை அன்பினால் வழிபட்டு திருவருள் பதியப் பெற வேண்டும் என்பதும் பெரியபுராணம் காட்டும் படிப்பினை யாகும்.

மக்கள் மத்தியில் எழும் பிரச்சினைகளுக்கு மூல காரணமாக விளங்கும் அன்பில்லாமையையும், உண்மை பேசாமையையும் தடுத்து நிறுத்துவதற்காகவே முற்காலத்தில் புராணங்கள் எழுந்தன. வாய்மை தவறக்கூடாது என்பதற்காகவே எழுந்த அரிச்சந்திர புராணம் காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷமாகும். இதில் மனைவியை இழந்து நாட்டை இழந்து ஏனைய சுகபோகங்களை இழந்தும் வாய்மை தவறாத அரிச்சந்திரனின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டுள்ளது. இப்புராணம் இன்றைய சமுதாயத்திற்கு ஒரு படிப்பினையாகும்.

புராணங்கள் யதார்த்த உலகின் ஊழல்களைச் சுட்டிக்காட்டி மறைமுகமாக இலட்சியங்களை எடுத்துக்காட்டுகிறது. இவற்றோடு மனித நல்வாழ்விற்கு தேவையான நற்பண்பையும் வேறுபட்ட மனிதப் பண்பையும் இலகுவாக தெளிவு படுத்துகின்றது. எனவே புராணங்களின் இலட்சியம் அவை தோன்றுவதற்கான அடிப்படைக் காரணம் ஒரு ஒழுக்கமான அன்பு நிறைந்த நேர்மையான சிறந்த சமுதாய வாழ்வை விருத்தி செய்வதற்கே ஆகும். எனவே வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தினர் ஆகிய நாம் புராணங்கள் கூறும் வழி முறைகளையும், அறக் கருத்துக்களையும் பின்பற்றிச் சிறந்ததோர் சமுதாய வளர்ச்சிக்கு வழிசமைப்போமாக.



கடவுள்

அண்டப் பகுதி யினுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்றுநின் றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின். -திருவண்டப்பகுதி

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருத்தலாற் சிறியவைகளாகத் தோன்று கின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவைகளே. ஆதலால், இந்தப் பூமியையும், சூரியனையும், எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார்தான் சொல்ல வல்லவர்!

இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

"அன்பும்சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

ஆதலால், அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வளவு அன்புடை யவளாய் இருக்கிறாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பிலும் கோடானு கோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக் காணும்போது குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடைகிறது. ஆதலால், தாயினும் பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும் போதும், அவரைக் கோயிலிலே காணும்போதும் நாம் எல்லையில்லாத ஆனந்தம் அடைய வேண்டும்; நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதா னெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.

பல திருவுருவங்களில் நாம் வழிபடும் இறைவன் ஒருவனே

செல்வி ஆ. திவ்யகாயத்திரி
விவேகானந்தா கல்லூரி, கொழும்பு – 13



சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். சிவம், பரம்பொருள், மெய்ப்பொருள், இறை என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. இறைவன் ஒருவனே. அவனே பரம்பொருள். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன் அவன் ஒருவனே மெய்ப்பொருள். அவனுக்கு ஈடான பொருள் ஒன்றும் இல்லை. பிரம்மம், உண்மை எல்லாம் ஒன்றே, சிவம் பசுபதி எனவும் போற்றப்படுகின்றான். பசு என்றால் ஆன்மா, பதி என்றால் தலைவன். ஆன்மாக்கள் அனைத்திற்கும் தலைவர் என்பதன் பொருளாகும். பரம்பொருள் மெய்ப்பொருள். அது தோன்றுவதும் இல்லை; அழிவதும் இல்லை.

சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாரும் இல்லை

என்னுந் திருமந்திரம் பாடலடிகள் சிவத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. பரம் ஒன்றே முழுமைத்துவமானது. அதனால் அதற்கு ஈடானது மேலானது என்று மற்றொன்றுமில்லை.

தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத தலைமகன்

எனத் திருமந்திரம் மொழிகின்றது. இறைவன் இந்த மண், விண் மற்றும் எல்லா இடங்களிலும் நிறைந்து காணப்படுகின்றான். அவன் சத்து (உட்பொருள்) ஆகவும், சித்து (அறிவுடைய பொருள்) ஆகவும், ஆனந்தம் (இன்பமான பொருள்) ஆகவும் விளங்கு கின்றான். ஆகவே இறைவன் சச்சிதானந்தன் எனவும் அழைக்கப்படுகிறான். இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்று மூன்று நிலைகளிலிருந்தும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய மூர்த்திகளினூடாக ஆற்றுகிறார். இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள பெருங்கருணையின் பொருட்டு இவ்வைந்தொழில் களையும் ஆற்றுகின்றான்.

ஆம்! இறைவன் ஒருவனே. ஆனால் நாம் பல்வேறு நாமங்களிலும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், முருகன், விநாயகன், இலக்குமி, துர்க்கை, சரஸ்வதி போன்ற பல்வேறு வடிவங்களில் இறைவனை வழிபடுகின்றோம். எமது அலைபாயும் மனதை ஒருநிலைப்படுத்தி உண்மைப் பரம்பொருளை உணர, அதுவாகவே யிருக்க குறிப்பிட்ட நாமரூபம் அவசியம் ஆகிறது. மனதால் உருவகிக்கக்கூடிய ஒன்றிலேயே மனம் ஒரு முகப்பட முடியும். எனவேதான் விக்கிரகங்கள் தேவைப்படுகின்றன.

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய
மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில்
முதலாவது பரிசு பெற்ற கட்டுரை.

மக்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறுபட்ட இயல்புடையவர் களாகவும் வெவ்வேறு ஆன்மீக நிலைகளிலும் காணப்படு கின்றனர். எனவே அவர்களின் அந்தந்த நிலைக்கேற்ப, இயல்புக்கேற்ப இறைவனை நாம் பல்வேறுபட்ட நாம ரூபங்களில் வழிபடுகின்றோம். நாம் குறிப்பிட்ட ஒரு நாம ரூபத்தை மட்டும் கொண்டிருந்தோமானால் எமது மதம் இன்று அழிந்திருக்கும். தூக்கியெறியப்பட்டிருக்கும். மக்களுக்காகவே மதம், மதத்திற்காக மக்களல்ல!

ஒவ்வொரு நாம ரூபத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு, வரலாறு உண்டு. ஒவ்வொரு விக்கிரகமும் ஒரு தத்துவத்தை எடுத்துக் கூறுவதாக அமைகின்றது. ஆகவே அவரவர் தமக்கேற்ற, தமக்குப் பிடித்த வடிவத்தை இஷ்ட தெய்வமாக வழிபட்டு அந்தத் தத்துவ நிலையில் உயர்ந்து மெல்லலாம்.

சுவாமி விவேகானந்தர் கடவுட் தத்துவத்தைப் பற்றிக் கூறுகையில் "பிரபஞ்சத்தலைவரும், பிரபஞ்சத்தைப் படைத்து, காத்து, அழிப்பவருமான முழுமுதற்கடவுள் ஒரு நிர்குணத்தத்துவம் அந்தத் தத்துவத்தின் உருவத் தோற்றங்களாகிய நீங்கள், நான், பூனை எல்லாம் கருணைக்கடவுள்" என்கிறார்.

உடலின் துணை கொண்டு உள்ளிருக்கும் ஆத்மாவை அறிந்து கொள்ள முயல்வது போன்று கருணைக்கடவுளாகிய விக்கிரகத் துணை கொண்டு நிர்க்குணத்தத்துவமாகிய கடவுளின் சான்னியத்தைத் தெரிந்து கொள்ள முயலுகின்றோம்.

"ஒன்றவன் தானே"
"ஒருவனே தேவன்" என்று திருமந்திரமும்,
"ஏகம் சத் விப்ரா வஹிதா வதந்தி"

என்ற வேதவாக்கியமும், இந்துமத ஞானிகளும், அறிஞர்களும் இதனை மக்களுக்குப் போதிக்கின்றனர். "அதாவது உண்மை ஒன்றே, அதனை ரிஷிகள், ஞானிகள் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கின்றனர்" என்பதே அந்தச் சுலோகத்தின் உட்பொருளாகும்.

இறைவன் உருவமற்றவன். அவனை மனத்தில் நினைத்ததற் காகவும் மனம், மொழி மெய்யினால் வணங்குவதற்காகவும் திருவுருவம் தாங்குவதால் உருவ நிலையில் வைத்து வழிபடு கின்றோம். பல்வேறு மூர்த்திகளுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அனைத்தையும் சிவம் பரம்பொருள் என்று அதனை காணும் சிவநெறி எம்மிடையே ஆழமாக வேரூன்றியிருக்கிறது. இது எங்கள் சைவ மரபின் தனித்துவமாகும். "மெய்ப்பொருள் ஒன்றே. அறிஞர்கள் அதனை பலபெயர் கொண்டு அழைக்கின்றனர்" என்னும் வேதவாக்கு இறைவன் ஒருவனே என்று கோட்பாட்டை மேலும் வலியுறுத்துகின்றது.

நடைமுறை வாழ்க்கையை எடுத்துக் கொண்டோமேயானால் ஒரு வீட்டுக்குத் தலைவராக இருப்பவர் ஒரு வீட்டுக்கு நல்ல தலைவராகவும், தன் மனைவிக்கு அன்பான கணவராகவும், பிள்ளைகளுக்குத் தந்தையாகவும், அலுவலகத்தில் அதிகாரியாகவும், தன் அப்பாவிற்கு அன்பு மகனாகவும், நண்பர்களுக்கு நண்பனாகவும் இருப்பார். இது போன்றே தெய்வமும் பல்வேறு பரிணாமங்களில் நாம ரூபங்களில் வழிபடப்பெற்றாலும் உட்தத்துவ உண்மை ஒன்றே; கடவுள் ஒன்றே!

இறுதியாக, இறைக்காட்சி பெற்ற பிறகுதான் அவரைப்பற்றிச் சரியாகப் பேசமுடியும். அப்படி இறைக்காட்சி பெற்றவனுக்கு, உணர்ந்தவனுக்கு, அதுவாகவேயிருப்பவனுக்கு, இறைவர் உருவ முடையவர், அதே வேளையில் உருவமற்றவர் என்பது தெரியும். அவர் இன்னும் என்னென்னவாகவோ உள்ளார் என்பதுவும், அவரைப் பற்றிக் கூறுவது சாத்தியமில்லை என்பதுவும் தெரியும். யார் எப்போது கடவுள் நினைப்பில் இருக்கிறாரோ? அவர் பல உருவங்களில் காட்சியளிக்கிறார், பல நிலைகளில் காட்சியளிப் பார், அவர் பல குணங்களையுடையவர், அதே நேரம் குணங் களற்றவர் என்பதை அவனே அறிவான். "பச்சோந்தி பல நிறம் கொண்டது, நிறமற்றதும் கூட" என்பதை மரத்தடியில் இருப்பவனே அறிவான். அவனாலேயே அறிய முடியும். ஆகவே நாம் இறை நினைப்பிலேயே மூழ்கி அந்தப் பிரம்மத்தை உணர்ந்து கொண்டு அதுவாயிருப்போமாக!

"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் வன் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வம் நீயே"

தேவாரத்தின் மூலம் தந்தை, தாய், துணை, சுற்றம், மற்றெல்லாம் பொருளும் பலவடிவங்களில் நாம் வணங்கும் இறைவன் ஒருவனே, அவனே சிவன் என்று வலியுறுத்துகிறார் அப்பரடிகள்.




கொடி மரம்

இராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கொடிமரம் காணப்படும். கொடிமரம் சூக்குமலிங்கம் எனப்படும். இதன் அடிப்பாகம் சதுரமாக இருக்கும். இது இறைவனின் படைப்பை உணர்த்தும் பிரமபாகமாகும். அதன் மேலுள்ளது எண் கோண வடிவமாகும். இது காத்தலைச் செய்யும் விஷ்ணு பாகமாகும். அதன் மேலே உருண்டு நீண்டபாகம் அழித்தல் தொழிலைச் செய்யும் உருத்திர பாகமாகும். ஆதலால் கொடிமரம் மும்மூர்த்திகளையும் முத்தொழில்களையும் உணர்த்தி நிற்கிறது. இதையே வடமொழியில் "த்வஜஸ் தம்பம்" என்று கூறுவர். அசுரர்களை அகற்றவும் சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும் ஆலயத்தைக் காக்கவும் அடியார்களைப் பாதுகாக்கவும் கொடி மரம் வைக்கப்படுகின்றது. சிவன் கோயிலில் கொடிச் சீலையின் மேற்பகுதியில் நந்தியையும், தேவி ஆலயமாயின் சிங்கத்தையும், விநாயகர் எனின் எலியையும் (மூஷிகம்), முருகன் எனின் மயிலையும் வரையவேண்டும்.

மனித குண்டலினிச் சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடி மரமாகவும், கொடி மரத்திலுள்ள 32 வளையங்களும், முள்ளந்தண்டிலுள்ள 32 எலும்பு களையும், கொடிக் கயிறுகள் இடகலை, பிங்கலை எனும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும் போது ஆன்மா பேரானந்தத்தை எய்துகிறது என்பது இந்துக்களின் நம்பிக்கை.


மேலும் சிந்தாந்திகள், கொடித்தம்பம் - பதி எனவும், கொடிக்கயிறு - பாசம் எனவும், கொடிச்சீலை - பசு எனவும்கூறுவர்.

உயிர் எவ்வாறு பாசத்துடன் இணைந்திருந்து பதியாகிய இறைவனை அடைகிறது எனும் தத்துவமே கொடியேற்றம் என சித்தாந்திகள் செப்புகின்றனர்.



ஆலய வழிபாடு

செல்வி நிஷாந்தி சிவானந்தன்
இந்துக் கல்லூரி, சாவகச்சேரி



"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழம்பெரும் முதுமொழியாகும். இந்துக்களாகிய நமக்கு ஆலய வழிபாடு முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. ஆலயவழி பாடானது எமது சமய ஒழுக்கத்தில் ஓர் அங்கமாகும். ஆ+லயம் என்பதே ஆலயம் என்றாகிறது. ஆ என்பது ஆன்மா, லயம் என்பது. ஒன்றித்தல் என்ற கருத்தை ஆலயம் உடையது. எனவே ஆன்மாக்களின் மனத்தை ஒருவழிப்படுத்தி இறைவனிடம் ஒன்றிக்கச் செய்வது ஆலயம் ஆகும். ஆலய வழிபாடு பற்றி நோக்குவதற்கு முன்னர் ஆலய அமைப்புப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

ஆலயங்களில் பல்வேறு மண்டபங்கள் காணப்படுகின்றன. அவையாவன அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம் அல்லது உருத்திர கோபுர மண்டபம் என்பனவாகும். ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையில் நேராகப் படுத்திருப்பதைப் போன்ற அமைப்பை உடையன. ஆலய அமைப்பின் பிரதான பகுதியான கர்ப்பக்கிரகம் சிரசினைக் குறிக்கிறது. அர்த்தமண்டபம் கழுத்தையும், மகாமண்டபம் மார்பையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அலங்காரமண்டபம் மற்றும் சபாமண்டபம் இரண்டு கால்களையும் கோபுரம் பாதங்களையும் குறிக்கும்.

பொதுவாக ஆலயங்கள் கிழக்குத் திசையை நோக்கியே அமைக்கப்பட்டிருக்கும். வடக்கு மற்றும் மேற்கு நோக்கியும் சில ஆலயங்கள் அமைக்கப்படும். ஆலயத்திலே தூலலிங்கமாக விளங்குவது கோபுரமாகும். திருக்கோயில்களின் மகாமண்டபத்தில் மூர்த்திக்கு எதிரில் ஓமகுண்டமும், ஸ்தம்ப மண்டபத்திலே நந்தி, பலிபீடம், கொடிமரம் என்பனவும் உள்ளன. ஆலயத்தில் மனிதனின் முள்ளந்தண்டுபோல் அமைந்திருப்பது கொடிமரம் ஆகும். கொடிமரத்தில் கொடிச் சீலையும், தருப்பைக் கயிறும் சுற்றப்பட்டிருக்கும். கொடிமரம் சிவத்தையும், நந்தி வரையப்பட்ட சேலை ஆன்மாவையும், தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கும். கொடிமரத்தை ஆதாரமாகக் கொண்டு சீலை இருப்பது போல சிவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா இருக்கிறது. பாசம் வலிகெட்ட நிலையில் ஆன்மா சிவத்தைச் சாரும் என்பதை கொடிமரம் குறிக்கிறது.

மாமன்றம் பொன்விழாவையொட்டி நடத்திய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை.

நந்தி பக்குவ ஆன்மாவைக் குறிக்கிறது. இது உலகப் பொருள் மீது உள்ள பற்றினை விட்டுவிட்டு சிவத்திற் பற்றுவைத்து பேரின்பத்தைப் பெறமுடியும் என்பதை உணர்த்துகிறது. பலிபீடத்தைப் பத்ரலிங்கம் அல்லது பாரத்தை நீக்கும் சிவசக்தி என்பர். இது எமது தீய எண்ணங்களைப் பலியிட்டு தூயவராகிச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்துகிறது. கோயிலில் மூல விக்கிரகம் அமைந்துள்ள இடம் கருவறை ஆகும். இதன் மேல் உயரமாக அமைந்துள்ள பிரதேசம் விமானம் அல்லது தூபி எனப்படும். இதன் உச்சியில் கலசங்கள் காணப்படும். சில சந்நிதிகளில் எமது உடலில் உயிர் இருப்பதைப் போல ஒரு சுற்றுப் பிரகாரம் காணப்படும். மூன்று பிரகாரம் அமைந்த கோயில்கள் தூலசரீரம், சூக்குமசரீரம், காரண சரீரம் ஆகிய மூன்றையும் ஒப்ப அமைந்தவை. ஐந்து பிரகாரம் இருப்பின் அவை அன்னமயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனும் ஐந்து பகுதிகளை ஒப்பவையாகும். இவை தவிர ஒவ்வொரு சுவாமிக்கும் உரிய திசையில் அவர்களின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

இனி திருக்கோயிலிற்குச் செல்லும் முறை பற்றிச் சிறிது நோக்குவோம். ஆலயப் பூசைகள் அதிகாலை, காலை, மதியம், மாலை, இரவு, நள்ளிரவு எனும் ஆறு காலங்களில் நடைபெறும். தற்போது ஆலயங்களில் இரண்டு (காலை, மாலை), மூன்று (காலை, மாலை, மதியம்) ஆகிய வேளைகளிலேயே நடைபெறுகின்றது. ஆலயம் பரிசுத்தமான இடம் ஆகும். எனவே அங்கு செல்வோர் தமது உள்ளத்தையும், உடலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். உடலுக்கு உள்ளத்தையும் அழுக்காக்குவ துடன் ஆலயப் புனிதத்தையும் கெடுக்கும். ஆகவே முறைப்படி ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து அனுட்டானமும், செபமும் முடித்துக்கொண்டு செல்லுதல் வேண்டும். தீட்சை பெறாதோர் ஆசாரங்களுடன் விபூதி தரித்துச் செல்லவேண்டும். செல்லும்போது வெறுங்கையுடன் செல்லாது அபிடேகத்திற்கு வேண்டிய பஞ்சகௌவியங்கள், இளநீர், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம் ஆகியவற்றை எடுத்துச் செல்வது சிறந்ததாகும்.

இனி நாம் விடயப் பரப்பினுள் நுழைவோம். இறைவனின் திருவருளைப்பெற திருக்கோயிலிற்குச் சென்று அவனை மெய்யன்போடு வழிபடவேண்டும். இறைவனின் திருவுருவத்தை அழகிய விக்கிரகங்களாக அமைத்து ஆலயங்களில் வழிபடப் படுகிறது. இறைவன் எமக்குப் பெறுதற்குரிய பேறான மனிதப் பிறவியைத் தந்துள்ளார். அப்பிறவியைப் பெற்ற நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெற வேண்டும். நாம் இறைவனைப் பல்வேறு நாமங்கள் சொல்லியும், பல்வேறு வடிவங்களிலும் வழிபட்டாலும் அவன் ஒருவனே என்பதை நாம் உணர வேண்டும். ஆலயங்கள் ஆன்மீக உணர்வை மக்களிடம் வளர்க்கின்றன. இறைவனைத் தரிசிப்பதால் எமது வினைகள் ஒழிந்து முக்தி சிந்திக்கின்றது. ஆலய வழிபாட்டால் மக்களிடம் ஒழுக்கம், பண்பாடு ஆகியன விருத்தியடைவதோடு அமைதி, சாந்தம் போன்ற நற்குணங்களும் ஏற்படுகின்றன. இப்படி ஆலயங்களால் மக்களடையும் நன்மை குறித்தே 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்றி' எனும் வாசகங்கள் தோன்றின.

ஆலயம் செல்வோர் ஆலயத்திற்கு அருகில் சென்றதும் அங்கிருக்கும் நீர்நிலைகளில் வாய், கை, கால் என்பவற்றை அலம்பிச் சுத்தம் செய்ய வேண்டும். பின்பு தூலலிங்கம் ஆகிய கோபுரத்தை வணங்கி சிலநாமங்களை உச்சரித்துக்கொண்டு உள்ளே செல்லவேண்டும். துவார பாலகரை வணங்கி கொடித் தம்பத்தையும், பலீபிடத்தையும், நந்திதேவரையும் வணங்கி பலீபிடத்திற்கு இப்பால் நந்தி தேவரைக் கடக்காது வீழ்ந்து வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். கிழக்கு அல்லது மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கேயும், வடக்கு அல்லது தெற்கு நோக்கிய சந்நிதிகளில் கிழக்கேயும் தலைவைத்து வணங்க வேண்டும். அட்டாங்க நமஸ்காரமானது தலை, மோவாய், இருகை, இருபுயம், இரு முழந்தாள் எனும் எட்டு உறுப்புக்கள் நிலத்திலே பட வீழ்ந்து வணங்குதலாகும். இவை தவிர த்ரியாங்க மற்றும் ஏகாங்க நமஸ்காரங்களுள்ளன. த்ரியாங்க நமஸ்காரம் சிரசிலே கரங்களைக் கூப்பி வழிபடுதலையும், ஏகாங்க நமஸ்காரமானது மார்பில் இரண்டு கரங்களையும் கூப்பி வழிபடுதலைக் குறிக்கும்.

மூலமூர்த்திக்கும் நந்திக்குமிடையில் நின்று வணங்குதல், திரையிட்டபின் வணங்குதல், அபிடேகம் மற்றும் நிவேதன காலங்களில் வணங்குதல் தகாத வணக்கங்களாகும். பகல் பன்னிரண்டு மணியாகிய உச்சிவேளையின் பின் சூரிய அஸ்த மனத்திற்கு முன் ஆலயம் சென்றால் மேற்கே சூரியன் இருப்பதால் காலை நீட்டக்கூடாது. நின்றபடி கரங்களைச் சிரசின் மேல் குவித்து திரியாங்க நமஸ்காரம் செய்யலாம். நமஸ்காரம் செய்தபின் கோயிலைச் சுற்றி வலம் வருதல் வேண்டும். இது பிரதட்சிணம் என்று அழைக்கப்படும். வலம் வருதலின் போது கரங்களைக் கூப்பி இறை நாமங்களைச் சொல்லிக்கொண்டு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது போன்ற தடவைகள் வலம் வர வேண்டும்.

அபிடேகம் நடைபெறும்போது பிரதட்சிணஞ் செய்யக் கூடாது. பலிபீடத்திற்கும் மூலஸ்தான மூர்த்திக்கும் இடையே செல்லக் கூடாது. பிரதட்சிணஞ் செய்யும் போது உலக போகங்களை விரும்பியோர் இடப்பக்கமாகவும், மோட்சத்தை விரும்புவோர் வலப்பக்கமாகவும் பிரதட்சிணஞ் செய்தல் தகும். கர்ப்பிணிப்பெண் பூமியைப்பார்த்துக்கொண்டு மிகவும் மெதுவாகச் செல்லவேண்டும். பிரதட்சிணஞ் செய்யும் பிரகாரத்திலே தூபியின் நிழலேனும், கொடிமரத்தின் நிழலேனும் இருந்தாலதை மிதியாமற் செல்ல வேண்டும். பிரமச்சாரிகள் வலப்பக்கமாகவும், சந்நியாசிகள் இடப்பக்கமாகவும் பிரதட்சிணஞ் செய்யக்கடவர். சிவனை 3,5,7,9,15,21 ஆகிய தரங்களும், விநாயகரை ஒரு தடவையும், சூரியனை இருதடவையும், விஷ்ணுவையும், பார்வதியையும் நான்கு தடவைகளும் பிரதட்சிணஞ் செய்யவேண்டும்.

பிரதட்சிணஞ் செய்து முடிந்தபின் துவாரபாலகரை வணங்கித் திருநந்தி தேவரிடம் இறைவனை வணங்க அனுமதி பெறுதல்

வேண்டும். முதலிலே விநாயகரைத் தரிசித்து நெற்றியிலே மும் முறைகுட்டி மும்முறை தோப்புக்கரணம் போடவேண்டும். பின்பு சிவனை வணங்கி விட்டு சுப்ரமணியர், உமாதேவியார், விஷ்ணு போன்றோரையும் வணங்க வேண்டும். சமயகுரவர் மற்றும் நாயன் மாரின் சிலைகளிருந்தால் அவர்களையும் வழிபட வேண்டும். இறுதியாக அர்ச்சகரிடம் விபூதி வாங்கித் தரித்துவிட்டு சண்டேஸ்வரர் சந்நிதியை அடைந்து சிவதர்சன பலனைத் தரும்படி மும்முறை கைதட்டி வணங்கவேண்டும். பின்பு பலிபீடத்திற்கு இப்பாலிருந்து பஞ்சாட்சர மந்திரம் செபித்துவிட்டுச் செல்லலாம். வீடுதிரும்பும் போது சிவனுக்கும், நந்தி தேவருக்கும் புறங்காட்டாது திரும்ப வேண்டும்.

ஆலயவழிபாட்டால் பலர் முத்தியடைந்துள்ளனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், திருநாளைப்போவார், வரகுண பாண்டியன், மார்க்கண்டேயர், நமிநந்தி அடிகள் ஆகியோர் திருக் கோயில் வழிபாட்டால் முக்தியடைந்தோர் ஆவர். இவர்களில் நமிநந்தி அடிகளின் வரலாறு பற்றிநோக்குவோம். இவர் சோழ நாட்டிலே ஏமப்பேனூரிலே வாழ்ந்தார். நாள்தோறும் ஆலயஞ்சென்று இறைவனை வழிபடுவார். ஒருநாள் ஆலயம் சென்ற அவருக்கு ஆலயம் முழுவதும் விளக்கேற்ற ஆசைவந்தது. தம் வீட்டிற்குச் சென்று நெய் எடுத்துவர நேரம் போகுமாகையால் அருகிலிருந்த வீட்டில் நெய் கேட்டார். அங்கிருந்தவர்கள் சமணர்கள். தீயைக் கையிலேந்திய உங்கள் கடவுளுக்கு ஏன் விளக்கு? "இங்கு நெய்யில்லை. வேணுமென்றால் குளத்துநீரை எடுத்து தீபம் ஏற்றுங்கள்" என்று கூறினார்கள். எனவே வருந்திய அவர் இறைவனின் சந்நிதியில் போய் விழுந்து வணங்கினார். அப்போது "குளத்து நீரை எடுத்து தீபம் ஏற்றுக" எனும் அசரீரி கேட்டது. அதன்படியே அவர் எண்ணற்ற தீபங்களை ஏற்றி மகிழ்ந்து கொண்டார்.

இதைக்கண்ட யாவரும் வியந்து போற்றினர். இவர் இவ்வாறு திருவிளக்குத் தொண்டும் பிறதொண்டுகளும் செய்து வைகாசிப் பூசத்தில் முத்திபெற்றார். எனவே இத்தகைய பெருச்சிறப்புக்கள் வாய்ந்த ஆலய வழிபாட்டை நாமும் செய்து முத்தியின்பம் அடைவோமாக.



கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப் படுதல் போல ஆன்மா நயப்படுதற்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படும். உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள்; உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்வதற்கும் கருவியாயுள்ளவை. கருவிகளினும் பார்க்கக் கருவிகளை யுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. ஆகவே உடம்பை நயப்படுத்துதற்கு வேண்டிய உணவினும், மனத்தை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால், இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். 'திருக்கோயிலை வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை' என்றார் திருநாவுக்கரசு நாயனார். 'கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை' என்றார் திருவள்ளுவ நாயனார்.

"ஆக்கையாற் பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்
வாக்கையாற் பயனென்.' - திருநாவுக்கரசுநாயனார்.

"கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்." - திருவள்ளுவர்.

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திருஐந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணியர் தொண்டர் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ்சிலர் சிவலிங்க பூசை செய்வர். இன்னுஞ் சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.


YOGENDRA
KASTOOI



9

சிறப்புக் கட்டுரைகள்



கோயிலும் வழிபாடும்

"திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்
பருக்கோடி பத்திமையால் பாடா ஊரும்
பாங்கினொடு பல தளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர் பறித்துண்ணாவூரும்
அவையெல்வாமூரல்ல அடவி காடே"

(திருநாவுக்கரசர்)

திருமதி சந்திரபவானி பரமசாமி
உதவி விரிவுரையாளர்,
மொழியியற் துறை, களனிப் பல்கலைக்கழகம்

இங்கே திருக்கோயில் இல்லாததும் திருவெண்ணீறு அணியாததுமான ஊர்கள் திரு+இல்+ஊர்கள். அதாவது லக்சுமி அங்கே உறைய மாட்டாள். அழகில்லா ஊர்களாகும். திரு என்பது அழகையும் லச்சுமியையும் குறிக்கும்.

கோயில் என்பது பொதுவாக எல்லாக் கோயிலையும் குறித்தாலும் சிறப்பாகச் சிதம்பரத்தைக் குறித்து நிற்கும்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் "ஆலயமில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பதும் பெரியோரால் பேசப்பட்டவை, பேசப்படுபவை. கோயில், ஆலயம், பதி, சந்நிதி போன்ற பதங்கள் கோவிலைக் குறித்து நிற்கும் பதங்கள் ஆகும். கோவில், கோயில் என்றும் வழங்கப்படும். கோ+இல் வகர உடன்படுமெய் பெற்றுக் கோவில் எனப்புணரும். கோயில் என்பதும் மெய்ம்மயக்கமாகக் கொள்ளப்படும். "கோ" என்பது இறைவனையும் "இல்" என்ப அவனுறையும் இடத்தையும் குறித்து நிற்கும். "ஆலயம்" என்பது "ஆ" ஆன்மாவைக் குறித்து ஆன்மா லயப்படும் இடம் எனப்படும். பதி என்பது இறைவனைக் குறித்து அவனுறையும் இடம் பதி என் அழைக்கப்படும். "ஒருநாளும் திருக்கோயில் சூழாதார் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" எனப் பேசுவார் அப்பர் பெருமான். ஊர்கள் தோறும் ஏன் பல ஆலயங்கள் அமைகின்றன என்பதற்கு ஞானசம்பந்தப் பெருமான்



"ஊரைச் சேரும் எண்பத்தினான்கு நூறாயிரமாம் யோனிபேதம்
நிரை சேரப்படைத்து அவற்றின் உயிருக்கு உயிராய்
அங்கங்கே நின்றான் கோயில்"

எனப்பாடுவார்.

அதாவது நூல்களில் சொல்லப்படுகின்ற எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களையும் ஒருங்கே முறையாகப் படைத்து யோனி பேதங்களில் உள்ள எல்லா உயிர்களுக்கும் தானே உயிராக அந்தந்த ஊர்கள் தோறும் பெருமான் தங்கியிருக்கும் கோவிலெனக் காட்டுகிறார். இறைவன் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் எனக் கூறி எல்லா இடமும் நீக்கமற நிறைந்து பரம்பொருள் இருந்தாலும் எவ்வாறு நிலத்தினுள்ளே உள்ள நீரை நாம் கிணற்றிலிருந்து பெறுவது போல ஆலயத்திலேயே இறைவனை நாடி நாம் செல்ல வேண்டும்

ஒரு கோயிலில்

தத்துவங்கள்	–	96
கலைகள்	–	64
மூலாதாரம்	–	06
துவாரங்கள்	–	09
பூதங்கள்	–	05
வேதங்கள்	–	04
சாஸ்திரங்கள்	–	06
குணங்கள்	–	03
ஜாதி	–	02
கடவுள்	–	01
	–	196

ஆகிய பிரமாணங்கள் அமைய வேண்டும். ஆலயம் மனித உடம்பைப் போன்றே அமைக்கப்பட்டிருக்கின்றது.

பாதங்கள்	–	முன் கோபுரம்
முழங்கால்	–	ஆஸ்தான மண்டபம்
தொடை	–	நிர்த்த மண்டபம்
தொப்புள்	–	பலிபீடம்
மார்பு	–	மகா மண்டபம்
கழுத்து	–	அர்த்த மண்டபம்
தலை	–	கர்ப்பக்கிரகம்
வலது செவி	–	தட்சணாமூர்த்தி
இடதுசெவி	–	சண்டேசுவரர்
மூக்கு	–	ஸ்நபன மண்டபம்
புருவ மத்தி	–	லிங்கம்
தலையின் உச்சி	–	விமானம்
சோத்திரம்	–	சரீரப்பிரஸ்தாரம்

உடலானது தோல், இரத்தம், நரம்பு போன்ற ஏழுவகைத் தாதுக்களால் ஆனது போல ஆலயமும் செங்கல், காரை, கம்பி போன்ற ஏழுவகைப் பொருட்களால் அமைக்கப்படுகிறது. கல்லினாலே கோயில்கள் அமைக்கும் முறை பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மன் காலத்திலேயே தோன்றியது. பின்னர் வந்த சோழ மன்னர்கள் சிறந்த பல கோயில்களை அமைத்ததுடன் கோயில்களின் பராமரிப்புக்காகவும் வாத்தியக்காரர்கள், ஓதுவார்களுக்காகவும் நிலங்களை மானியமாக வழங்கினர்.

ஆலயத்தின் ராஜகோபுரத்தை எவ்வளவு தொலைவில் இருந்து பார்க்கும் போதும் உயர்வான எண்ணங்கள் தோன்றி தெய்வீக உணர்வுடன் அதை வணங்குவர். அதனால் நம் பாவங்கள் அழிக்கப்படுவதனாலேயே "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "கோபுர தரிசனம் பாவ விமோசனம்" போன்ற மகா வாக்கியங்கள் எம்மிடையே வழங்கப்பெறுகின்றன. ராஜகோபுரத்தில் மேல்நிலை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என மேல் நோக்கி அமையும். அங்கே சிற்பங்கள், தேவகணங்கள், தெய்வ வடிவங்கள், பறவை வகைகள், மிருகங்கள், மனிதர்களின் வடிவங்கள் புராண இதிகாசக் கதைகள் அமைக்கப்படும். கோபுர வணக்கம் முடிந்து, கால், கை, வாய் கழுவி உள்ளே சென்றதும் முதலிலே தோற்றமளிப்பது பலிபீடம் ஆகும். பலிபீடத்தின் முன்னே நாம் விழுந்து வணங்க வேண்டும். நாம் கோயிலினுள்ளே எம்முடன் எடுத்துச் சென்ற தீய எண்ணங்கள், குரோதங்கள் யாவையும் பலியிட்டு விட வேண்டும். அதன் பின்னர் மேலான உயர்ந்த சிந்தனைகளுடன் ஆலயத்தை வணங்க வேண்டும். கொடிமரம் அடுத்துக் காணப்படும். கொடிமரம், பலிபீடம், நந்தி என்பன மூலஸ்தானத்தை நோக்கி அமைக்கப்பட்டிருக்கும். கொடிமரத்தின் முன்னே மட்டுமே நாம் விழுந்து வணங்க வேண்டும். கொடித்தம்பம், அதிலேற்றப்படும் கொடி, கயிறு என்பன முறையே, பதி, பசு, பாசம் எனக் குறிக்கப்பட்டு ஆன்மா தன்னைப் பிடித்துள்ள மலங்களை நீக்கி எவ்வாறு பரமாத்மாவை அடையமுடியும் என்பதைக் காட்டி நிற்கும். சிவனின் வாகனமான நந்தி கர்ப்பக்கிரகத்தை (மூல மூர்த்தியை) பார்த்த வண்ணம் இருப்பது ஜீவாத்மா பரமாத்மாவை அடையும் உயர்ந்த குறிக்கோளாகும். நாம் மூலவரை வணங்க நந்தியெம்பெருமானின் உத்தரவு பெற்ற பின்பே வணங்கலாம். இங்கே நந்தனார் சிவனை வழிபடுவதற்காக நந்தியை விலகச் செய்த வரலாறு நினைவு கூரத்தக்கது. மூலவருக்கும் நந்திக்குமிடையே நாம் குறுக்கே போகக்கூடாது. மூலவரான சிவலிங்கத்தை வணங்க கர்ப்பக்கிரக வாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் துவார பாலகர்களையும் வணங்கி அனுமதி பெறவேண்டும்.

ஆலயங்களில் மூலமூர்த்தி கருங்கல்லிலும் உற்சவமூர்த்தி செம்பினாலும் அமைக்கப்படும். ஒரு கல்லுடன் மற்றொரு கல்லை உரஞ்சுவதால் நெருப்பு உண்டாகிறது. சிவவேள்வி வளர்த்து வேள்வியால் எழும் சிவஒளியை நிறைகுடமென்கிற கும்பத்திலே சேகரித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரமாகிய கடவுளை நிறுவுவதால் சோதிமயமான ஒளியின் ஆற்றல் கற்சிலையில் இருப்பதனால் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யும் உருவங்களைக் கல்லில் அமைத்தனர். செப்புக் கம்பிக்கு மின்பாய்ச்சும் ஆற்றலுண்டு. மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உயர்வு கருதித் திருவீதியிலே பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்தனர். கர்ப்பக்கிரகத்தில் காணப்படும் மூலமூர்த்தியின் கீழ் வைக்கப்படும் யந்திரத்துக்குப் பிரதிஷ்டை செய்யுமுன்னர் தொடர்ந்து நடைபெறும் மந்திர உச்சாடனங்களால் சக்தி சேகரிக்கப்பட்டுப் பலவகை மூலிகைகளால் ஆன மருந்தினால் மூடப்பட்டுப் பிரதிஷ்டை நடைபெறும்.

புதிய ஆலயம் அமைத்து அதற்குக் கும்பாபிஷேகம் செய்யப் படும். சம்பந்தர் "கபாலீச்சரம் அமர்ந்தான் பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" எனக் கூறுவதிலிருந்து கும்பாபிஷேகம் என்பது பெருஞ்சாந்தி என்றும் அழைக்கப்படும்.

கும்பத்திலுள்ள நீரால் அபிஷேகம் செய்தல் என்பது பொருளாகும். கும்பம் சிவவடிவமாகும். கும்பத்தின் மீதுள்ள உடை – தோல், மேலே பூசிய செம்மண் – இரத்தம், கும்பத்து மண் – ஊன், தர்ப்பை – எலும்பு, மேலே சுற்றிய நூல் – நரம்பு, கும்பத்தில்

இடும் பொன் – வீரியம், மந்திரம் – உயிர், கீழிட்ட நெல் முதலிய தானியம் – ஆசனம் என ஆகமம் கூறுகிறது. கும்பாபிஷேகத்துக் காக அமைக்கப்படும் யாகசாலையில் அனுக்ஞை, விக்கினேஸ்வர பூசை, இரட்சோக்கனம், கிருகமகம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிர கணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கலாகர்ஷணம் ஆகிய கிரியைகள் இடம்பெறும். கும்பாபிஷேகத்தின் பின் மகாபிஷேகம் நடைபெறும். இறைவனைப் பிம்பத்திலிருந்து கும்பத்திலும் கும்பத்திலிருந்து சிலைக்கும் எழச்செய்ததால் ஏற்பட்ட களைப்புத் தீர்வதாகப் பாவித்து அபிடேகத் திரவியங்களால் அபிடேகம் செய்து நிவேதிப்பது மகாபிஷேகம். கும்பாபிஷேகம் நடந்த நாளில் இருந்து 45 நாட்கள் சிறப்பாக அபிடேகம், ஆராதனை நடந்து 45வது நாள் மண்டலாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கு முன் பிம்பத்துக்கு அணியப்படும் காப்பு நாண் 45ம் நாள் அகற்றப்படும்.

சக்தி மூர்த்தங்கள் பிராணா மந்திரத்தால் ஆவாஹனம் செய்யப்பட்டு மந்திர உச்சாடத்தினால் கலசத்தில் உள்ள நீரில் கலக்கப்படுகிறது. அந்நீரைத் தெய்வ உருவில் ஊற்றும் பொழுது மூலமூர்த்திக்குச் சக்தி கொடுக்கப்படுவதனால்தான் அம்மூல மூர்த்தி பக்தனுக்கு வரம் கொடுக்கும் மூர்த்தியாகிறது. அச் சக்தியுடன் நாளாந்தம் நடைபெறும் சிறந்த பூசைகள், மந்திரங்கள், மணியோசைகள் மூலம் அச்சக்தி மேலும் சிறப்படைகிறது.

திருக்கோயிலின் அமைப்பில் பரிவாரத் தெய்வங்கள் முக்கியமானவை. நந்தி, கோயிலின் வாயிலில் காவல் புரியும் துவாரபாலகர்கள், மூலவரை நோக்கியவாறு வாயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சூரிய சந்திரர்கள், பாதுகாவலனாக இறைசந்நிதியை நோக்கியிருக்கும் பைரவர் என்பன பரிவாரத் தெய்வங்கள். சிவன் ஆலயங்களில் சிவனின் இடப்புறத்தில் தேவி அமர்ந்திருப்பாள். சில இடங்களில் தனிக்கோயிலிலும் இடம் பெறுகிறாள். இறைவனின் வலப்பாகத்தில் கணபதிக்கும் இடப்பக்கத்தில் முருகனுக்கும் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப் பட்டிருக்கும். மூலவரின் வடக்குப் புறத்திலிருக்கும் சண்டேசுவரர், நவக்கிரகங்கள், சிவனின் அடியார்களான 63 நாயன்மார்கள், சிவாலயங்களில் விஷ்ணுவும் பரிவாரத் தெய்வமாக மேற்குப் புறத்தில் லிங்கோற்பவருக்கு எதிரே கிழக்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்படும். மூலஸ்தானத்திற்குத் தெற்குப் புறச்சுவரில் நர்த்தன கணபதி, தட்சணாமூர்த்தி, மேற்குப்புறத்தில் லிங்கோற்பவர், வடக்குப் பக்கத்தில் பிரம்மா, துர்க்கையும் அமைக்கப்பட்டிருக்கும்.

பொதுவாக ஆலயங்களில் உள்ள ஐந்து பிரகாரங்கள் எமது உடலில் உள்ள அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் ஆகிய ஐந்து கோசங்களையும் குறிக்கும் மூன்று பிரகாரங்கள் தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் ஆகிய மூன்று வகை உடம்பையும் குறிப்பதாகும். நாம் மூன்று அல்லது ஐந்து முறை இறைவன் பிரகாரங்களைச் சுற்றுவது இறைவன் மூவகையுடம்பையும் ஐந்துவித கோசங்களையும் கடந்து நிற்கிறான் என நினைவுறுத்தும். ஆலயத்தில் வலம் வரும்போது பரிவாரத் தெய்வங்களைத் தனித்தனியாக வலம் வருதல் கூடாது.

ஆகமக்கோயில்களை விட கிராமியத் தெய்வங்களைக் கொண்ட பல ஆலயங்கள் காணப்படுகின்றன. மாரியம்மன், முருகன், காளியம்மன், ஐயனார், மதுரைவீரன், காத்தவராயன், முனியாண்டி, முனியப்பர், வைரவர் ஆகிய மூலமூர்த்திகளைக் கொண்ட கிராமியக் கோயில்களும் காணப்படுகின்றன. அவ்வாலயங்களில் கரகம் பாலித்தல், ஊர்வலம் போன்ற விழாக்கள் மூன்று நாட்கள் அல்லது பத்து நாட்கள் நடைபெறும். கோயில்களில் நித்தியபூசை, காமியபூசை என்பன நடைபெறும். நாள்தோறும் நடைபெறும் பூசை நித்திய பூசை ஆகும். நித்திய பூசையில் ஏற்படும் குறைபாடுகள் நைமித்திய பூசையில் சரிசெய்யப்படும். காமிய பூசை பயன்கருதிச் செய்யப்படும் பூசையாகும்.

உட்பிரகாரத்தைச் சுற்றிவரும் பொழுது வீண்வார்த்தைகள் பேசாது தேவார, திருவாசகங்களை அல்லது ஓம் நமசிவாய ஓம் சிவாயநம, ஓம் சரவணபவ, ஓம் சக்தி, ஓம் நமோ நாராயணா போன்ற மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு சுற்றிவர வேண்டும். பூசை நடைபெறும்போது தூபம், பல்வேறு தீபங்கள், கற்பூரதீபம் மற்றும் உபசாரங்கள் காட்டப்படும்போது மனமொன்றிய நிலையில் கண் இறைவனது சொரூபத்தில் நிலைத்து நிற்க வழிபட வேண்டும். தீபஒளியில் இறைவனைக் காண்பதற்கே தீபம் காட்டப்படுகிறது. அந்நேரத்தில் இறைவனைத் தீபஒளியில் தரிசியாது அடியார்களிடையே நிலத்தில் விழுந்து வணங்குவது பாவமாகும். பலிபீடத்தின் முன்மட்டுமே விழுந்து வணங்க வேண்டும். பூசைகள் நடைபெற்று வேதபாராயணம், பஞ்சபுராணம் ஓதப்படும். அந்நேரத்தில் ஆலயத்தில் உரையாடிப் பூசைக்கு இடையூறு செய்யக் கூடாது. இதனாலன்றோ "ஆலயத்துள் யாதொன்றும் பேசற்க" "அமைதி பேணவும்" போன்ற வார்த்தைகள் எழுதித் தொங்கவிடப்படுகின்றன. பூசை ஆரம்பிக்கும் முன்பும் பூசையின் பின்பும் எல்லோரும் சேர்ந்து பஜனைகள் பாடவேண்டும். ஆண், பெண், பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றிப் பஜனைகளில் எல்லோரும் பங்கேற்க வேண்டும். இறைவனின் பல நாமங்கள் மீண்டும் மீண்டும் பஜனைகளில் பாடப்படுவதால் ஒருருவம், ஓர்நாமம் இல்லாத இறைவனை நாமும் பேராயிரம் பரவிப் பாடும்போது இறைவன் மகிழ்ச்சியடைவான். நாமும் மற்றவர்களுடன் ஒன்றுபட்டுப் பயனடைகிறோம்.

இறைவனைக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" நாதநாமம் நமசிவாயத்தை ஓத வேண்டும். வணங்கும் போது –

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் கவிர்த்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்று
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே"

என்று மணிவாசகப்பெருமான் இறைவனை வணங்கும் முறையை எம் கண்முன்னே காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைமலர்
உச்சிமேல் குவித்து
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார்
பணிந்தார்"

எனக் காட்டுகிறார். ஆலயவாசலில் –

"இன்னிசை வீணையார் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்

என்று வழிபடுபவர்களின் முறைமையைப் படம்பிடிக்கிறார் மணிவாசகர்.

பக்தியிலே திளைத்த சித்தர்களும் ஞானிகளும் தம்முள்ளத்தின் உள்ளேயே இறைவனைக் கண்டார்கள். திருமூலர் திருமந்திரத்திலே –

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பெருமாற்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்றும் – நாவுக்கரசர்

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக
நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"

என்றும்

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமா காளை தாதை கழலடி காணலாமே"


என்றும் பாடி ஞானம் என்ற தீயினால் சோதிப்பிளம்பாக இருக்கின்ற இறைவன் கழலடியைக் காணலாம் என்ற அழகிய சித்தாந்தக் கருத்தைக் கூறுகிறார். நாயன்மார்கள் உள்ளத்தைக் கோயிலாகக் காட்டினார்கள். பூசலார்நாயனார் மனதிலே கட்டிய கோயிலில் இறைவன் எழுந்தருளினார். தாயுமானவர் –

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"


என இறைவனை மனக்கோயிலில் கண்டார். சண்டேஸ்வரர் மணலிலே ஆலயம் அமைத்து பாலாபிஷேகம் செய்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுக் கோவிலில் ஆலயம் அமையப் பெற்றதைப் பெரியபுராணம் காட்டும். தேவார திருவாசகங்களில் இறைவன் சுடுகாட்டைக் கோயிலாகக் கொண்டமையும் பேசப்படுகிறது. "கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை" எனப்பாடுவார் மணிவாசகர்.

கோயில்களும் ஆலய நிர்வாகங்களும் வெறும் பணம் ஈட்டுதலை நோக்கமாகக் கொள்ளாது ஆலயங்கள் பரிபாலிக்கப்பட வேண்டும். சங்கீதம், நடனம் போன்ற கலைகளை வளர்ப்பதுடன் அறநெறிப்பாடசாலை, முன்பள்ளி, தையற்பயிற்சி, கணனிப்பயிற்சி என்பவை அளிக்கப்படும் இடமாகவும் அமைய வேண்டும். ஆலயமண்டபத்திலே செய்யமுடியாவிட்டால் ஆலயத்துக்காக அமைக்கப்பட்ட வேறுநிலையங்களில் இவற்றை நடத்தலாம். "அன்பே சிவம்" சிவம் என்றால் சைவம். எனவே எல்லோரிடமும் அன்பு காட்ட வேண்டும். "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" எனக்கொண்டு கருமமாற்ற வேண்டும். வெறும் அர்ச்சனைகளால் பக்தியை வளர்க்க முடியாது. மனிதப்பிறப்பின் இரகசியம் முக்திபெறுதல். அதற்கான வழிகளைத் தேடல். "காலை நேரம் மனம் ஒருநிலைப்படுகிறது." தேவ நற்செறிகடல் தாழினை காட்டாய்" என இறைவன் பாதாரவிந்தங்களை அடைய வழிகாட்டுகிறார் மாணிக்கவாசகர். நாமும் அவர் கூறியது போல அவனருளாலே அவன் தாள் வணங்க வேண்டும் சிவாச்சாரியார்களும் ஆலயங்களில் பூசையுடன் சில நிமிடங்களாவது ஆலய வழிபாடு, பூசை சம்பந்தமான விளக்கங்கள் பற்றி எடுத்துக் கூறவேண்டும்.

ஆலயவழிபாட்டிலே இறுதியாகச் சண்டேஸ்வரரை வணங்க வேண்டும். மூலமூர்த்திக்குப் படைக்கும் நைவேத்தியம், அணியப் படும் மாலை ஆகியவை இறுதியில் சண்டேஸ்வரருக்கு அளிக்கப் பட்டு பூசை முடிவுபெறும். அவரது முன்னிலையில் ஓசையுடன் கைகளைத் தட்டுவதோ உடைகளில் உள்ள நூலைப் பிடுங்கிப் போடுவதோ கூடாது. எனவே எம் மூதாதையோரால் அமைத்து வழிபாடியற்றிக் காட்டப்பட்டவாறு நாமும் கோயில்கள் அமைத்து முறையான வழிபாடு செய்து இறையருள் பெறுவோம்.




பலிபீடம்



பலிபீடம் ஆன்மாக்களின் ஆணவ மலங்களை அழித்துக் பக்குவப்படுத்தி புனிதப்படுத்துகிறது. பத்திரப்படுத்துவதால் அதற்கு பத்திரலிங்கம் என்று பெயர்.

சிவாலயங்களில் நந்தி தேவருக்கு பின்னுள்ள பலிபீடம் பிரதான பலிபீட மாகும். இவை பொதுவாக ஆலயத்தின் பிரதான மூர்த்தியின் பாதங்களைத் தாங்கியதாக தாமரை வடிவில் இருக்கும். பலிபீடத்தின் அருகே சென்று நம்மிடமுள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்யங்களைப் பலி கொடுத்ததாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அஹங்காரம், மமகாரம் பலியிடப்பட்ட பின்னரே தெய்வ தரிசனத்தைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசத்தில் பலிபீடம் பாசத்தை உணர்த்து கிறது. மிகப் பெரிய சிவாலயங்களிலே எட்டுத்திக்கிற்கும் பலிபீடம் அமைத்து வழிபடுவதை இன்றும் காணலாம்.



சக்தி வழிபாடும் தத்துவங்களும்

வாகீச கலாநிதி கனகசபாபதி
நாகேஸ்வரன் M.A
முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா



'சைவசித்தாந்த தத்துவம்' தென்னாட்டவர்க்கேயுரிய தனித்ததொரு கோட்பாடாகும். பதி, பசு, பாசம் என்னும் முப் பொருளுண்மைக்குள் ஊடுபாவாகத் திகழ்வது சக்தி தத்துவமாகும். 'பசு' வெனப்படும் ஆன்ம தத்துவத்தின் முத்திப் பேறு திருவருள் பதிதலாகிய 'முத்தி' என்று சைவசித்தாந்தம் பேசும். ஆணவம், கன்மம், மாயையெனும் மும்மலங்களில் வலியுறுத்தும் ஆன்மாவாகிய உயிரில் திருவருட் சக்தி பதிதலைத் 'தாடலை' என்று பேசுகின்றது. சைவ சித்தாந்தக் கோட்பாடு. 'திருவருட் சக்தி' பதிதலெனப்படும் நிலையே ஆன்மாவின் பிறவிப்பெரும் பயனாகிய முத்திப் பேறு. எனவே 'சக்தி தத்துவம்' என்பது வெளிப்படையாய்த் தானாய் விளங்கி நிற்பதொன்றல்ல; எந்தவொரு கிரியையிலும் உள்நின்று உறுநி பயக்கும் தத்துவமே 'சக்தி தத்துவம்' ஆகும்.

'சிவமும் சக்தியும்' பின்னமுடையவை. சிவலிங்க தத்துவத்திலுள்ள ஆவுடையார் சக்தியின் அம்சம் என்பர். தில்லை நடராசரது 'தூக்கிய திருவடி சக்தியின் திருப்பாதமே' என்பது விளக்கம். 'யாதொரு தெய்வங்கொண்டீர், அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவர் என்பது சித்தாந்த தத்துவம். பல பந்தங்களை ஆன்மாவிடத்தே பதியவிடாமல் சிவசம்பந்தமுறும் படியாக, ஆன்மாவைத் திருவருள் செய்து உய்விக்கும் அருட்டிறத்தினைச் சக்தி தத்துவம் என்று விளக்கஞ் செய்யலாம். 'இயங்குகின்ற பொருள் சக்தி' யென்றும் 'இயக்கு விக்கும் பொருளுமாயிருப்பதும் சக்தியே' என்பதும் சைவசித்தாந்த விளக்கமாகும். செம்மை ஒளிச்சோதியும் நீல ஒளிச்சோதியும் இணைந்த, ஒன்றித்த, பொருந்திய நிலையே சிவசக்தி வழிபாடென்பது நம் முன்னோர் கண்ட உண்மை.

காலத்தால் முற்பட்ட வழிபாடாகவே இன்று சக்தி வழிபாடு பல்வேறு அறிஞர்களினாலே நிறுவப்பட்டிருக்கிறது. சக்திவழிபாடு என்பது ஷண்மதக் கோட்பாட்டுக்கு முன்னரேயே நிகழ்ந்துள்ளது. படைப்பாற்றல் 'உற்பத்தி' என்பவற்றுடன் தொடர்புடையனவாகவும் தாய்மைப் பேறு (கருவுறல்) (Fertility Cult)) கருதியும் சக்தி வழிபாடு ஆரம்பத்திலே தோற்றம் பெற்றிருந்தமையைச் சிந்துவெளிச் சான்றுகள் மெய்ப்பித்துள்ளன. உலக ஒளியாகவுள்ள சூரியன் ஆண் தெய்வம் எனில் 'உஷை' பெண் தெய்வம் எனும் நிலையிலே வேதகாலவழிபாட்டு மரபு தோற்றம் பெற்று நிலவி வந்துள்ளது. ஆகவே 'ஆற்றல்' களனைத்தும் – இயற்கையின் விசித்திர விநோதங்களனைத்தும் வழிபாட்டு மரபுடன் சங்கமிக்கும் போது பெரும்பாலும் பெண் அம்சம், சக்தி தத்துவம் பொருந்தியே மனிதவர்க்கத்தினராலே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவைபற்றிய சிந்தனையின் விரிவே இன்று மானுடத்துவம், அருளியல், உளவியல், அணுவியல், தியானம், இயற்கையின் திருவிளையாடற் கோலங்கள் என்றெல்லாம் விளக்கப்படுகின்றன.

விளைச்சலைத்தரும் நிலம் – நிலமடந்தை – பூதேவி – பூமாதேவி என்றழைக்கப்படுகிறாள். இவளை 'பூதேவி' என்னும் பெயருடைய சக்தியாக்கி மகா விஷ்ணுவுடன் இணைக்கப்பட்டாள். தாங்கும் ஆற்றலுக்குத் 'தாய்மை' என்று சொல்லப்பட்டது. இதனால் 'பராசக்தி' என்னும் பேராற்றல் உருவாக்கப்பட்டது. முழுமுதற் சக்தியிலிருந்து பிரிந்த பிற சக்திகளுக்கு வெவ்வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. இயற்கையாகவேயுள்ள மலை, கடல், நதி, காற்று, தீ, சந்திரன், தென்றல், புயல், நட்சத்திரங்கள், பூகம்பம் என்பன பெரும்பாலும் பெண் ஆற்றலின் தோற்றப்பாடுகளே என்னும் ஐதிகமும் நம்பிக்கையும் உண்டு. அவ்வாறே சிருஷ்டிக்கப் பட்டுள்ளன. குளிர்ச்சியும், இதமும், மகிழ்ச்சியும் இன்பமும் செய்வனவெல்லாம் பெண் தன்மைக்குள்ளடக்கப்பட்டன. இதனால் வளங்களும், திறன்களும் மனிதனுக்குச் சுமையாக்கப்பட்டிருக்க வில்லை மாறாகத் தெய்வ சங்கற்பமாகவும், தெய்வத் திருவருளா கவுமே இவையனைத்தும் மனிதனால் நம்பப்பட்டன. ஆற்றல் களைப் பெண் தெய்வங்களாகக் கண்டு காட்டிய பாங்கினால் கல்வி, செல்வம், வீரம், விவேகம், சாதனைகள் எல்லாம் கதை முறையில், இயற்கை உண்மை அறிவுக்கு மாறுபடாமல் ஆக்கி மிகப் பொருத்தமாயமைத்தனர்.

சக்தியை 'மலைமகள்' என்றனர். உலகியலுண்மைப்பண்புடன் இணைத்தும், பொருத்தியும், சார்த்தியும் பெண் தன்மையின் விகசிப்பை அனுபவிக்கவும் பழகிக் கொண்டனர். இதன் விளக்கமே நடைமுறையில் 'சக்தி தத்துவம்' என்று பரப்பப்பட்டது. மலையிலே 'பிறந்த சந்தனம்' மலைக்கு மணம் தராது. அதனை நுகர் வோருக்கே நறுமணந் தருவது. முத்துக் கடலிலே பிறப்பினும் கடலுக்கு அணி செய்யாது. அதே போன்றவள் தான் தலைவி என்கிறது சங்கப்பாடலான கலித்தொகை. மலையிலே பிறந்த சந்தனம் பூசுபவர்களுக்குக் குளிர்ச்சியையும், வாசனையையும் இதத்தினையும் தரும். "மலையிலே சந்தனம் பிறந்தாலும் மலைக்கவைதாம் என் செய்யும்? என்பது உண்மையே!! எனவே பெண்ணாகிய சக்தி எங்கு பிறந்தாலும் அவளோடு வாழ்பவருக்கே இன்பம் செய்வாள். ஆதலாலே ஆரம்பத்தில் தம்மளவில் நிறை வையும், முழுமையையும் தந்த சக்தி – முப்பெருஞ்சக்திகளாகவே பரிணமித்துக் கல்வி, செல்வம், வீரம் என்பவற்றின் ஆற்றலாலே ஆண் தெய்வங்களுடன் இணைக்கப்பட்ட தத்துவமே இந்து சமயத்திலே இன்று நிலவும் பெரும் தத்துவமாகும்.

கல்விக்கரசியாகிய கலைமகளாம் சரஸ்வதிக்கு நாயகன் பிரம்மா. செல்வத்திருவான அலைமகளாம் மகாலட்சுமிக்கு நாயகன் திருமால் எனும் மகாவிஷ்ணு. வீரமகளான துர்க்கைக்கு உருத்திரன் நாயகன் எனப்பட்டான். பெரும்பாலும் ஆண்பாற் தெய்வங்களுக்குப் பெண்பாற் தெய்வங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. ஆயினும் பெண் தெய்வங்களனைத்தும் ஆண் தெய்வங்களோடு தான் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன என்ற கொள்கை இந்துமதத்திலில்லை. பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்பன வருணாச்சிரம தர்மங்களென்று அழைக்கப்படும். சைவ சமய வாழ்நெறி நால்வகை ஆச்சிரம வழக்கை நெறியைக் கொண்டிருந்தாலும் இல்லற வாழ்வின் மேன்மையையே 'இவ்வழிபாடு' உணர்த்தி நிற்கிறது. உலகப்படைப்பனைத்தும் ஆண், பெண் என்றே படைக்கப் பட்டுள்ளன. எண்பத்துநான்கு நூறாயிரம் 'யோனி பேதம்' என்பது சைவசித்தாந்தம். உலகின் இயக்கத்திற்காகவே உலகப்படைப்புக் களின் உணர்வு நலனுடன் சிவனும் சக்தியும் இயங்குகின்றனர் என்னும் விளக்கம் கடவுட்பண்பை விளங்கிக் கொள்வதற்கு உதவுவதாகலாம். 'கற்பிதங்கள்', 'எடுகோள்கள்' என்பன கடவுட்டத் துவங்களை மெய்ப்பிக்கப் பேருதவி புரிந்துள்ளன. 'மெய்யியற் கோட்பாடுகள்' பல சக்தி வழிபாட்டுத் தத்துவங்களுடன் இயைந்து செல்கின்றன. மகாலட்சுமி பாற்கடலிலே தோன்றினாள்.

நம் சைவசமயத் தெய்வமாகிய சிவபிரான் தன்னைத் துறவு நிலையிற் சேர்த்துக் கொள்ளாது கங்கையும் உமையுமாகிய இரு மனைவியரையும், பிள்ளையார், முருகனென்னும் இரண்டு மக்களையும் உடையனாய்த் தனக்கு அன்பே வடிவென்பதை உணர்த்தலாயினார். 'அன்பு' வடிவினனாய் ஆண்டவனைக் கற்பிதம் செய்வதால் மனைவி, மக்கள், மருமகன் மற்றும் மாமன், மாமி, அப்பன், அம்மை, ஐயன், சுற்றம் என்றெல்லாம் இயல்பான மானுடர் வாழ்க்கை முறைமைத் தொடர்புகள் கற்பிக்கப் பட்டுள்ளன. இவ்வரும் பேருண்மையை மாணிக்க வாசகப் பெருமான்.

"தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
"பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ"
பெண்பால் உகந்திலனே பேதாய் இருநிலத்தோர்
விண்பாலியோ செய்தி வீடுவர் காண் சாழலோ"

எனப் பாடியுள்ளார். எண் குணங்களைக் கொண்ட எல்லாம் வல்ல சிவமுதல்வனுக்கு மனைவியாரும் மக்களும் உளர்போலும் என நினைந்து நமது முழுமுதற் தெய்வத்தை இழிவாக நினைத்து விடவேண்டாம். சிவன் சிற்றின்பலோலனல்லன்! சிவனுடன் காமம் பொருந்தாது! சிவன் காமத்தைத் தகனம் செய்தவன்! அதாவது மன்மதனையே அழித்தவன். முப்புரங்களான பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகளையும் தகர்த்தவன். காலனையும் மார்க்கண்டேயர்க்காய்க் கடிந்தவன். பல்வேறு சக்திகளையும் ஏற்றுத் தன்னுடலிலே தங்கி நிற்பவன். தாருகா வனத்து முனி பத்தினிகளுக்கும் தமது பேருருளை எளிமையாக நல்கிக் காட்சி கொடுத்தருள் புரிந்தவன். தனது எளிமைப் பண்பைக் காட்டி நின்று அனைவர்க்கும் இன்னருள் செய்யும் வைரவமூர்த்த வடிவம் கொண்டவர். ஆண்தன்மையினராய் அனைத்துயிர்களையும் ஈர்த்தருள் புரிபவர்; எளிமைக் காட்சியினர். ஆகவே சிவனுக்கு மனைவி மக்களென்ற தொடர்பெல்லாம் அன்பினையும், அரவணைப்பினையும் புலப்படுத்தும் அடையாளங்களேயாம். ஆதலினாலே அப்பனின் பெருங்கருணையின் விகசிப்பே சக்தியைத் தன்பால் வைத்துள்ளமை எனலாம்.

இனி, அம்பாள் சிவனுடன் புணர்பவளல்லள்: 'உண்ணா முலை உமையாள்' என்றும், 'அழியாத கன்னிகை', 'அழகுக் கொரு வரும் ஒவ்வாதவல்லி', 'அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்' என்றெல்லாம் அழைக்கப்படுகின்றாள். அம்பாளின் சிற்பத்திலுள்ள இரு முலைகளும் ஒன்று 'பரஞானம்'; மற்றையது 'அபரஞானம்' என்று சைவசித்தாந்தம் விளக்குகின்றது. இக்காரணங்களாலே சாமானிய மானுடப் பெண்ணுக்குரிய மாதவிடாய், காமம், இன்பம், உறவு, காதல், கருவுறல், யோனிவாய்ப் புதல்வர்ப் பெறுதல் என்னும் அம்சங்கள் அம்பாளுக்கில்லை. எனவே சக்தியைத் 'தாய்', 'அன்னை', 'மாதா', 'அம்மா', 'மனைவி' என்பதெல்லாம் உபசார வழக்குகளே. எல்லாம் வல்ல சிவ முதல்வனோ ஊனுடம்புடையன் அல்லன். அவன் அருளாகிய சக்தியுடன் கூடிய திருமேனியையுடையவன். அவ்வருளே அம்மை வடிவாய் அப்பனை எஞ்ஞான்றும் பின்னி நிற்குமென்பது,

"அருளுண்டாம் ஈசற்கு அதீ சக்தியன்றே
அருளும் அவனன்றி இல்லை – அருளின்று
அவனன்றே இல்லை அருட் கண்ணார் கண்ணுக்கு
இரவிபோல் நிற்கும் அரன் ஏய்ந்து"

என்னும் சிவஞான போதச் சூத்திரத்தாலறியலாம்.

கேதார கௌரி விரதம்

சிவசக்தி இணைப்பை விளக்குவதற்கு உதவும் விரதம் கேதார கௌரி விரதமாகும். இவ்விரதம் கேதாரநாதராகிய சிவனைக் கேதாரகௌரி அம்பாள் விரதமிருந்து சிவனில் ஒரு கூறாயின வரலாற்றை உணர்த்துவது, சற்று விரிவான விவரிப்பாயினும் 'சக்தி தத்துவத்தை' அச்சொட்டாக விளங்கிக் கொள்ள உதவவல்லது இக்கதையென்பதால் இக்கட்டுரையிலேயே விவரிக்க முற்பட்டுள்ளேன். பொறுமையுடன் படிக்கவும்.

ஐப்பசி மாதம் அமாவாசை கூடிய நன்னாளில் சிறந்த இந்தக் கேதாரேஸ்வர விரத பூஜையைச் செய்ய வேண்டும் என்பது ஸ்கந்த புராண வாக்கு. இக்கதையைக் கேட்பதால் சகல சௌபாக்கியங்களும் ஐஸ்வர்யங்களும் பெருகும். ஆரோக்கியம், ஆயுள், புகழ் அனைத்தும் விருத்தியாகும். 21 நாட்கள் தொடர்ந்து செய்து வந்தால் பரிபூர்ணபலன் இகத்திலும் பரத்திலும் உடன் சித்திக்கும் என்பது எம்பெருமான் வார்த்தையாகக் கௌதமர் கூறுகிறார்.

புரட்டாதி மாதம் அஷ்டமித் திதி சுக்கில பட்சத்திலிருந்து பூசையைத் தொடங்கி அமாவாசை வரை செய்ய வேண்டும் என்கிறது ஸ்காந்தம். 21 மஞ்சள் சரடுகளைக் கையில் கங்கணமாகக் கட்டிக் கொண்டு சுத்தமான இடத்தில் ஒரு கும்பத்தைப் பூஜையில் உள்ளபடி அலங்கரித்து வைத்து, பட்டு வஸ்திரத்தாலும் 21 சரடுகளாலும் சுற்றி அதில் நாணயம் போட்டு அல்லது நவரத்தினம், தங்கம், பவளம் போட்டுச் சந்தனம் புஷ்பம் கொண்டு முறைப்படி அர்ச்சித்து 21 மறையோர்களையும் வழிபட்டுப் பூஜையைச் செய்ய வேண்டும்.

ஆதிகாலத்தில் ஸ்ரீ கைலாயத்திலே நவரத்தினங்களினாலிழைத்த சிங்காசனத்தின் மீது பரமேஸ்வரரும், பார்வதி தேவியும் கொலுவீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், அஷ்டவசுக்கள், கின்னரர், திம்புருடர், கருடகாந்தர்வர், சித்த வித்யாதரர், ஜனகஜனாதர், ஸனத்குமாரர், தும்புருநாரதர் மற்று முண்டான தேவரிஷிகள் பிரதி தினம் வந்து பரமசிவனையும் பார்வதி தேவியையும் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்து கொண்டு போவார்கள். இப்படியிருக்க ஒருநாள் ஸமஸ்த தேவர்களும், ரிஷிகளும் வந்து ஈஸ்வரனையும், ஈஸ்வரியையும் பிரதஷிண நமஸ் காரம் தோத்திரம் செய்து விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் எதாஸ்தானங்களுக்குப் போகிற சமயத்தில் பிருங்கி என்கிற ரிஷி ஒருவர் மாத்திரம் பார்வதி அம்மனைப் புறம்பாகத் தள்ளி ஈஸ்வரரை மாத்திரம் பிரதஷிண நமஸ்காரம் செய்து ஆனந்தக் கூத்தாடினார். அப்பொழுது பார்வதி அம்மனுக்கு மகா கோபமுண்டாகிப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், தேவேந்திரன் முதலான முப்பது முக்கோடி தேவர்களும் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், கருடகந்தர்வர், சித்தவித்யாதரர், ஜனகஜனாதனர், ஜனத் குமாரர், தும்புருநாரதர், கௌதமர், அகத்தியர் மற்றுமுண்டான தேவர்களும் வந்து ஈஸ்வரரையும், நம்மையுங் கண்டு வணங்கிப் போகின்றனர். இந்தப் பிருங்கி மஹ ரிஷி நம்மைப் புறம்பாகத் தள்ளி ஈஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நின்றானேயென்று கோபத்துடனே பரமேஸ்வரி கேட்கப் பரமேஸ்வரன் சொல்லுகிறார். "பர்வதராஜகுமாரியே! பிருங்கி ரிஷி பாக்கியத்தைக் கோரினவனல்ல. மோட்சத்தைக் கோரினவனான படியால் எம்மை மாத்திரம் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்தான்" என்று சொல்ல, பரமேஸ்வரி பிருங்கி ரிஷியைப் பார்த்து 'ஓ பிருங்கி ரிஷியே உன் தேகத்திலே இருக்கிற ரத்தமாமிசம் நம்முடைய கூறாச்சுதே! அவைகளை நீ கொடுத்து விடு' என்று சொல்ல அப்பொழுது பிருங்கி ரிஷி தன் சரீரத்திலிருந்த ரத்த மாமிசத்தை உதறிவிட, பின்பு தன்னுடைய உதறிய ரத்த மாமிசத்தை எடுத்துக் கொள்ளப் பிறகு, பிருங்கி மஹரிஷி நிற்கமுடியாமல் அசக்தனாயிருப்பதைப் பார்த்த பரமேஸ்வரர், "ஏ பிருங்கி மஹ ரிஷியே ஏன் "அசக்தனானாய்" என்று கேட்கப் பிருங்கி பரமனை வணங்கி "பரமேஸ்வரா அம்பிகையை நீக்கித் தங்களை மட்டும் வணங்கினதால் அம்பிகை கோபித்து அடியேனுக்களித்த தண்டனை இது" என்று கூற, பரமேஸ்வரன் மனமிரங்கி ஒரு தண்டைக் கொடுக்க, பிருங்கி மஹரிஷி தண்டை ஊன்றிக் கொண்டு மறுபடியும் பரமேஸ்வரனை நமஸ்கரித்துவிட்டு ஆச்சிர மத்திற்கு எழுந்தருளினார். பிறகு பரமேஸ்வரி பரமேஸ்வரரைப் பார்த்து "நீர் என்னை அவமதிப்புச் செய்யலாமோ?!" இனி எனக்குக் காரியமென்னவென்று கைலாயத்தை விட்டுப் பூலோகத்தில் வால்மீகி மஹரிஷி சஞ்சரிக்க நின்ற பூங்காவனத்தில் ஒரு விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிருந்தாள். அத்திசையில் 12 ஆண்டு மழையின்றி விருட்சங்கள், செடிகள் உலர்ந்து வாடியிருக்க அவைகளெல்லாம் தளிர்த்துத் தழைத்துப் புஷ்பித்துக் காய்த்துப் பழுத்து இன்னும் அனேக பூச்செடிகளெல்லாம் (மல்லிகை, முல்லை, கொங்கு, இருவாட்சி, மந்தாரை, பாரிசாதம், சண்பகம், சிறுமுல்லை, புன்னை, பாதிரி, வில்வம், பத்திரி, துளபம் மற்று முண்டான சகலஜாதி புஷ்பங்கள் விஸ்தாரமாகப் புஷ்பித்துப் பரிமளித்துச் சுற்றிலும் நாலு யோசனை விஸ்தீரணம்) பரிமளம் வீசின. அந்தச் சமயத்தில் வால்மீகி மஹரிஷி தம் பூங்கா வனத்தைப் பார்த்து அதிசயப்பட்டு 12 வருடம் மழையில்லாமல் உலர்ந்திருந்த விருட்சங்களெல்லாம் இப்பொழுது தளிர்த்துப் புஷ்பித்துக் காய்த்துப் பழுத்திருக்கின்ற ஆச்சரியம் என்னவோ? தெரியவில்லை என்று மனதில் நினைத்துக் கொண்டு பூங்காவனத்திற்கு வந்தவர். வந்தவர் சகல புவனகர்த்தாவகிய பரமேஸ் வரன், பரமேஸ்வரி, பிரம்மா, விஷ்ணு வந்திருக்கிறார்களோ! அவர்களைக் காண வேண்டுமென்று அந்த வனமெல்லாம் சுற்றி ஆராய்ந்து பார்க்கையில் ஸ்ரீ பார்வதி தேவி வில்வ விருட்ஷத்தின் அடியில் எழுந்தருளியிருக்க கண்டு மூவருக்கு முதன்மையான தாயே! முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் 48 ஆயிரம் முனிவர் களுக்கும் ஒப்பற்ற தெய்வமாய் நின்ற பராசக்தியான ஈஸ்வரியே நான் எத்தனை கோடி தவஞ்செய்தேனோ இந்தப் பூங்கா வனத்திலே எனக்குக் காட்சி கொடுக்கக் கைலாயத்தை விட்டுப் பூலோகத்திற்கு நீர் எழுந்தருளின தென்னவோ' என்று வால்மீக முனிவர் கேட்க, பார்வதி தேவியார், வால்மீகி முனிவரே, நீ கைலாயத்திலே பரமேஸ்வரரும் நாமும் ஒரு நவரத்ன சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான தேவர்களும் மற்றுமுண்டான மஹரிஷிகளும் வந்து இருவரையும் நமஸ்கரித்துப் போனார்கள். பிருங்கி முனிவர் சுவாமியை மாத்திரம் நமஸ்கரித்து நம்மைப் புறம்பாகத் தள்ளினான். அப்பொழுது இவனா நம்மைப் புறம்பாகத் தள்ளுகின்றவனென்ற கோபத்துடன் என் கூறான இரத்த மாமிசத்தை வாங்கிக் கொண்டேன்.

அப்பொழுது பரமேஸ்வரர் அவனுக்கு ஒரு தண்டு கொடுத்தார். இப்படிச் செய்யலாமோ என்று கேட்டதற்கு அவர் மறுமொழி சொல்லவில்லை. ஆகையால் நமக்குக் கோபம் பிறந்து பூலோகத்திற்கு வருகிறபொழுது இந்தப் பூங்காவனத்தைக் கண்டு இங்கே தங்கினோம் என்று பார்வதியம்மையார் வால்மீகருக்கு உரைக்க, அவரும் அம்பிகையைத் தன் ஆச்சிரமத்திற்கு எழுந் தருளும்படி வேண்ட அம்பிகையும் அவரிஷ்டப்படியே எழுந்தருள முனிவர் அம் மனிதருக்கு ஒரு ஆசிரமமும் ஒரு நவரத்ன சிம்மாசனமும் உண்டு பண்ணி அந்தச் சிம்மாசனத்தின் மீது எழுந்தருளினபின் பரமேஸ்வரி வால்மீகி முனிவரைப் பார்த்து 'ஓ தபசியே இந்தப் பூலோகத்தில் நான் ஒரு விரதம் அனுஷ்டிக்க வேண்டும். நூதனமும் மேலான தூய்மையுமான விரதம் ஒன்றிருக்குமாயின் அதை எனக்குச் சொல்ல வேண்டும்' என்று கேட்க, வால்மீகி முனிவர், தாயே! லோகமாதாவே, அபிராமியே, திரிபுரபம்மாரி, சிவகாமி, கௌரி, கைலாசவாசகி, விபூதி ருத்ராக்ஷி, கிருபாசமுத்ரி, கிருபாநந்தி, தேவஸ்ரூபி உம்முடைய சன்னிதானத்தில் அடியேன் ஒரு விண்ணப்பஞ் செய்கின்றேன். கோபமில்லாமல் கேட்டுத் திருவுளம் பற்றவேண்டும் என்று சொல்ல, அதென்னவென்று அம்பிகை கேட்க ஜெகத்ரக்ஷகியே! இந்தப் பூலோகத்தில் ஒருவருக்குந் தெரியாத ஒரு விரதமுண்டு. அந்த விரதத்திற்குக் 'கேதாரேஸ்வரர் நோன்பு' என்று பெயர் அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்க வில்லை நீர் அந்த விரதத்தை அனுஷ்டித்தால் இஷ்டசித்தியாகும் என்று சொன்னார். அதைப் பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக் காலத்தில் எவ்விதமாக அனுஷ்டிக்க வேண்டும் என்பதை விவர மாய்ச் சொல்ல வேண்டும் என்று கேட்க, வால்மீகி சொல்லுகிறார்,

"புரட்டாதிமாதம் சுக்கிலபட்ச தசமி தொடங்கி ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம் தீபாவளி அமாவாசை வரைக்கும் 21 நாள் பிரதி தினம் ஸ்நானஞ் செய்து சுத்த வஸ்திரமணிந்து ஆலவிருஷத்தின் கீழ் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அபிஷேகம் செய்து விபூதி சந்தனக்ஷதை புஷ்பஞ் சார்த்தி வெல்ல உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம், வாழைப்பழம், தேங்காய், பாக்கு, வெற்றிலை இவைகளை வகைக்கு ஒன்றாக வைத்து வில்வார்ச்சனையைத் தூபதீபம் நைவேத்தியஞ் செய்து நமஸ் கரித்து இருபத்தோரிழையிலே ஒரு கயிறு முறுக்கி அதைத் தினம் தினம் ஒரு முடிவாக 21 நாள் முடிந்து தினமும் உபவாசமிருந்து நைவேத்தியஞ் செய்து அதிரசத்தையுண்டு 21 நாளும் கிரமமாக இவ்விரதத்தை அனுஷ்டித்தால் 21 ஆம் நாள் தீபாவளி அமாவாசை தினம் பரமன் ரிஷபவாகன புருஷராய்க் காட்சியளித்துக் கேட்ட வரத்தையும் கொடுப்பார். வால்மீகி சொல்லக் கேட்டு அம்பிகை சதுர்த்தி அமாவாசைவரை 21 நாளும் வால்மீகி தெரிவித்தபடி நியம நிஷ்டையுடன் உபவாசமிருந்து விரதம் அனுஷ்டிக்க, பரமேஸ் வரியின் விரதத்திற்கு மகிழ்ந்து பரமன் தேவகணங்கள் புடைசூழக் காட்சியளித்து இடப்பாகத்தைப் பரமேஸ்வரிக்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரராகக் கைலாயத்திற் கெழுந்தருளி வீற்றருந்தார்" என்று வால்மீகி சொல்லி முடித்தார்.

கேதாரகௌரி விரதத்தை அனுஷ்டிப் போருக்கான தகைமை

ஐந்து மாதத்திற்கு மேல் கர்ப்பணியாக இல்லாத பெண்களும் மாதவிலக்கு நீங்கப் பெற்ற பெண்களும் 21 நாட்களும் விரதமிருக்கலாம். மற்றப் பெண்கள் மாதவிலக்கு அம்முறை வந்தபின் அமாவாசைத் திதிக்கு முன்னுள்ள ஒன்பது நாட்களோ ஏழு நாட்களே மூன்று நாட்களோ அல்லது அன்றலதோ இவ்விரதத்தை அனுஷ்டித்து 21 முடிச்சிடப்பட்ட கயிற்றை இடது புயத்திலோ அல்லது இடது மணிக்கட்டிலோ கட்டிக் கொள்ளலாம்.

பலன்கள்

தம்பதியர் ஷேமமாக இருத்தலுக்கும், பிணி நீங்கலுக்கும், வறுமை நீங்கிச் செல்வம் பெறுவதற்கும், கன்னியர்களுக்குத் திருமணம் விரைவில் நடைபெறவும், சிவனருளைப் பரிபூரணமாகப் பெறுவதற்கும் இந்நோன்பு நோற்பர்.

சைவமரபில் 'பராசக்தி' என்பது மேலான சக்தி என்பதனைக் சுட்டி நிற்கின்றது. சக்தியின்றி வாழ்வென்பதில்லை. சக்தியின் துணையே வாழ்க்கைக்கும் வாழ்க்கையின் சகல முயற்சிகளுக்கும் உறுதுணையாக அமைகின்றது. இவ்வகையில் சக்தி அருள் வடிவாகவும் விளங்குவது அறியக்கிடக்கின்றது. இதனையே சிவஞான சித்தியாரும்,

"அருளது சக்தியாகும் அரன் தனக்கு
அருளையன்றித் தெருள் சிவமில்லை
அந்தச் சிவமின்றிச் சக்தி இல்லை"

என அழகுறக் குறிப்பிடுதல் நயக்கத் தக்கதாகும்.

பிரபஞ்சத்தின் தோற்றம் ஒடுக்கம் ஆகியவற்றிற்குக் காரண மாக அமைவது சக்தியே. இச் சக்தி வழியே தான் பிறப்பு, வளர்ச்சி, அழிவு எனும் தொழிற்பாடுகள் ஓர் ஒழுங்கு நெறியில் அமைவுறு கின்றன. படைக்கும் சக்தி பிரம்ம வழியும், காக்கும் சக்தி விஷ்ணு வழியும், அழிக்கும் சக்தி உருத்திரன் வழியும் நடைபெறுவதாகச் சைவசமயம் காட்டி நிற்கின்றது. உண்மையில் ஒரே சத்தியே இம் மூன்று வேறுபட்ட செயல்களினைக் குணங்களினைக் கொண்ட தாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இதுவே திரிமூர்த்தி தத்துவம் இலகுபடுத்தி நிற்கும் விளக்கமுமாகும். முத்தொழிலை ஆற்றும் நிலையில் சக்தியானது பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி என அழைக்கப்படுதலும் நோக்கத்தக்கது. இங்கு சக்தி பல்வேறுபட்ட நாமங்களினால் சுட்டப்பெற்றாலும் அடிப்படையில் ஒன்றென்பது தெளிவு.

அஞ்ஞான அரக்கர்களை அழித்தொழிப்பதில் பராசக்திக்கு நிகர் பராசக்தியேயாகும். மதுகைடபர், மகிஷாசுரன், சும்பநிசும்பர் எனும் அரக்கர்களினை அழித்தொழித்துத் தர்மத்தைக் காக்கின்ற வகையில் அவள் தருமச் செல்வியாக மிளிர்கின்றாள். ஒவ்வொரு அரக்கர்களின் அழிவும் ஒவ்வோர் அசுரத்தனத்திற்கும் தேவியாற்றும் வதமாகப் பொருள் சுட்டுதல் சாத்தியமாகும். பொய்ம்மை, மோசடி போன்ற செயல்களுக்கு நாயகமாக வாழ்ந்திருந்த சும்பநிசும்பர்களினை வதம் செய்து நிசும்பசூதனி என அழைக்கப்பட்டதேவி அரக்கர்களை மாத்திரம் அழித்தொழிக்கவில்லை பொய்ம்மை, மோசடி போன்ற அசுரர் குணங்களினையும் அடியோடு அழித்து நின்றாள். காம அகங்காரங்களுடன் கொடிக்கட்டிப் பறந்த மகிஷாசுரனை வதம் செய்து "மகிஷாசுரமர்த்தனி" எனச் சிறப்புடன் அழைக்கப்பட்ட நாயகி அரக்கனை மாத்திரம் அழிக்கவில்லை, அவனுடன் கூடியிருந்த அழுக்குடைக் குணங்களையும் அழித்தொழித்தார் என்பதே உண்மையாகும். இதுபோலவே ஆணவம், மமதை, செருக்குப் போன்ற குணங்களோடிருந்த மதுகைடபரை ஒழித்து

நின்று மதுகைடப நாசினி எனப் பெருமைபெற்ற காளி அரக்கரோடு கூடியிருந்த அசுரக் குணங்களையும் அழித்தொழித்தாள் என்பதே பெறத்தக்கதாகும். இவ்வாறு ஜீவகோடிகள் அனைத்தினதும் நன்மை நாடுகின்ற அன்பே வடிவான அம்பிகை, இழிநிலை கண்டு, வெஞ்சினமும் வீராவேசமும் கொண்டு, மனித குலவாழ்வின் வளத்திற்கு வழிசமைத்தாள் என்பது வெள்ளிடை மலையாகும்.

'பின்கலநிகண்டு' உமையின் பெயர்களைப் பின்வருமாறு நிரற்படுத்துகின்றது.

"ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சக்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச் செல்வி, மலைமகள், சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, பார்வதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மணி, சிவை, உமையம்மை, அரணிடத்தாள், சுகமீன்றாள், பவானி, அன்னை, புண்ணிய முதல்வி" என 38 திருநாமங்களைச் சுட்டி நிற்கின்றது. அம்மன் திருக்கோயில்கள் ஈழத்துச் சைவமக்களது வழிபாட்டு மரபில் நன்னிலையிலே பேணப்பட்டு வருகின்றன. வட இலங்கையிலுள்ள சக்திபீடம், ஸ்ரீபுவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் நயினைதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானமாகும். தெல்லிப் பழைத் துர்க்கையம்மன் கோயில், கோயிற் குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மன் திருக்கோயில், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில், பருவதவர்த்தனி அம்மன் கோயில், சிவகாமி அம்பாள், மாரியம்மை, மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், வீரமாகாளி அம்மன், தையல்நாயகி அம்மை, மீனாட்சியம்மை, மஹாமாரியம்மை, காளிகா பரமேஸ்வரி அம்மை, சிவமுத்துமாரி அம்மை, ஏழாலை வசந்த நாகபூசனி அம்மை, வாராஹியம்பாள், நாச்சியம்மன், திரௌபதையம்மன், விசாலாட்சியம்பாள், சிவகாம சுந்தரி அம்மை, சண்டிகாபரமேஸ்வரி அம்பாள், காளிகாதேவி எனும் பேச்சியம்மன், அடுப்பனாச்சியம்மன், முதலிப்பேத்தியம்மன் எனப்பல அம்மன்களுக்கு முதலிடம் கொடுக்கும் ஆலயங்களையும் காணமுடிகிறது.

திருவாசகம் அம்மையும் அப்பனும் கலந்த திருவுருவைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. பாடல் வருமாறு :

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கும் குளிர்ந்தூதாய் கோத்தும்பி"

நம்கையினால் நாம் அனைத்தும் செய்வதுபோல் நங்கையால் (உமையால்) நாடனைத்தும் சிவபிரான் செயல்படுத்துகிறான் என்று திருக்களிற்றுப்படியார் என்னும் சைவசித்தாந்த நூல் கூறுகிறது.

சிவத்தையும் சக்தியையும் உலகில் பார்க்கும் கணவன், மனைவி போலக் கொள்ளக்கூடாது என்பதைச் சிவஞானசித்தியார் என்னும் நூலில் அருணந்தி சிவம் கூறுகிறார். சிவம் சக்தியாகிய தத்துவத்தைக் கொடுக்கிறது. பிறகு சக்தி தத்துவம் சிவமாகிய தத்துவத்தைக் கொடுக்கிறது. இவ்வாறு சிவமும் சக்தியும் சேர்ந்து இவ்வுலக உயிர்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயுமாகி அமைகிறார்கள். ஆயினும் பவன் என்று சிறப்பாக ஓதப்படும் சிவன் பிரம்மச்சாரியாகும். பால்மொழி எனப்படும் உமை கன்னியாகும். ஆகவே சிவசக்தி சேர்க்கையே உலகில் காணப்படும் ஆண், பெண் போலக் கருதக்கூடாது. தவத்தினாற் பெறப்படும் ஞானத்தைப் பெறுவதன் மூலமே சிவசக்திகளின் உண்மையான தன்மையை அறியலாம்.

"சிவம் சக்தி தன்னை ஈன்றும் சக்தி சிவத்தை ஈன்றும்
உவந்து இருவரும் புணர்ந்து உலகு உயிர் எல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரியாகும். பால்மொழி கன்னி ஆகும்
தவந்தரு ஞானத்தோர்க்கு இத்தன்மை தான் தெரியும் அன்றே"
(சிவஞானசித்தியார், 167)

சைவசித்தாந்தத்தில் கூறப்படும் செய்திகளுள் மிகமுக்கியமான இரு செய்திகளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் அவை:

1. தெய்வங்கள் பலபெயரில் கூறப்பட்டாலும் சிவபிரான் ஒருவரே முழுமுதற் கடவுள்.
2. அக்கடவுளை நாம் நம் முன்னே காண்பதற்கு நம் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

'கடவுள்' ஒருவர் என்றால், பிறர் எல்லாம் அவர் ஆட்சிக்கு உட்பட்டவரே. நவக்கிரகங்கள் சிவபிரான் ஆணையைச் செயல் படுத்துகிறார்கள். ஆகவே சிவபிரான் திருவருளை நினைந்து அறிய வேண்டும்.

நாகபாம்பு, குங்குமம், வேம்பு, அரசு, ஆல், வன்னி மரம், மாமரம் என்பன தெய்வங்களாகவே கொள்ளப்பட்டு வணங்கி வழிபடப் படுகின்றன. அலஹபாத் அகோபிதேவி கோயில் கருவறையில் குங்குமம் கலந்த தண்ணீர்த் தொட்டியே தேவி. 'அம்மன் கோவில் சேலை' அம்மனாகவே கருதத்தக்கது.

"தேவி அம்சங்கள்" சிற்பமரபு, இலக்கியமரபு, புராணமரபு, திருமுறைமரபு, விரதமரபுகளிவற்றுடன் இணைந்து தொடர்புபட்டனவாகக் காணப்படுகின்றன. சிவன், சிவை தொடர்பினைப் புராணாசிரியர்களும் பொருத்திக் காட்டுவர். திருநாவுக்கரசர் திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சியைச் சேக்கிழார்,

"வெள்ளிவெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்பென இடப்பாகம்
கொள்ளும் மலைவியாளுடன் கூடவீற்றிருந்த
வள்ளலாரை முன் கண்டனர் வாக்கின் மன்னனார்"

என்று பாடுகிறார்.

அம்மை தீயோரை அழிக்கும்போது கடுஞ்சினம் கொள்ளுகிறார். இவ்வாறு சினம் கொண்ட அம்மையின் கோலத்தைத் தான் நாம் 'உருத்திரகாளி' என்கிறோம். காளி என்ற சொல் கணம் என்ற பொருளையுடைய 'காளம்' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும்.

தாருகாசுரனால் துன்பமடைந்த தேவர்கள் பெண்ணுருக் கொண்டு சிவபெருமானை அடைந்து தமது குறைகளைக் கூறினர். பெண்ணாலன்றி வேறு எவராலும் இறவாவரம் பெற்றிருந்தான் தாருகன். அவனை வென்று வருமாறு சிவபெருமான் சக்திக்குக் கட்டளையிட்டார். அப்போது தேவியின் ஒருகலை சிவனின் விஷக்கறை படிந்து கயற் கண்ணில் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுரு காளமாகிய

விஷக்கறை படிந்து வந்ததால் காளி எனப் பெயர் பெற்றது. இவ்வகையில் தோன்றிய காளி தன் கோபத் தீயால் தாருகனை நீறாக்கினாள். எனவே காளி கோபங் கொண்டதற்குக் காரணம், தாருகன் என்னும் அரக்கனை அழித்துத் தேவரையும் மக்களையும் வாழவைப்பதற்கே என அறிந்து கொள்ள வேண்டும்.

மகிடாசுரன் தேவர்களுக்குக் சொல்லொணாத் துன்பம் செய்து வந்தான். தேவர்கள் இவனிடம் முறையிட்டனர். சிவனுக்குப் பெருங்கோபம் உண்டாயிற்று. அக்கோபம் பெண்ணுருவாய்த் திரண்டது. அதுவே 'உருத்திரகாளி' உரு என்பர். எருமைத் தலை கொண்ட மகிடாசுரனை உருத்திரகாளி சிங்கவாகனத்தின் மீது 18 தேர்களுடன் சென்று அழித்தான் என்பதும் ஒரு புராணக் கதை. வட மொழியிலே 'துர்க்கை' என்பர். தமிழில் கொற்றவை என அழைப்பர்.

தாருகன், மகிடாசுரன் ஆகிய இரண்டு அரக்கர்களையும் அழிக்கச் சினங் கொண்ட அம்மையாகிய உருத்திரகாளி பற்றிய குறிப்புத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் வரக் காணலாம்.

"வென்றிமிரு தாரகனது ஆருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளி கதமோவ
நின்று நடமாடியிட நீடுமலர் மேலால்
மன்றல் மலியும் பொழில் கொள்வன் திருவையாறே"
(1812)

என்னும் தேவாரத்தில் தாரகனது உயிரை அழிக்கத் தோன்றிய கோபமிகு காளி உருத்திரகாளி பற்றிய குறிப்பு வருகின்றது.

"புகழ் புகலி கழுமலஞ் சீர்ச்சிரபுரம் செங்குரு
வெம்போர் மகிடற் செற்று
திகழ் நீலி நின்மலன் நன்மை யினைகள்
பணிந்துலகில் நின்ற ஊரே" (2274)

என்னும் பாடலில் சம்பந்தர் சீர்காழி பற்றிப் பேசும்போது மகிடாசுரனைச் சினங் கொண்டு காளி வென்ற செய்தியைக் குறிப்பிடுகிறார். எனவே தேவாரத்தில் தாருகாதரன், மகிடாசுரன் ஆகிய அரக்கர்களை அழித்த உருத்திர காளி பற்றிக் காண்கிறோம்.

சிவபெருமான் காளியோடு நடனமாடாது போயிருந்தால், உலக முழுதும் புலால் மணக்கும், வேல்கொண்ட காளியின் கோபத்திற்கு ஆளாகி அழிந்திருக்கும் என்று சிவபெருமானின் நடனத்திற்கு மாணிக்கவாசகர் காரணம் கூறுகிறார்.

ஸ்ரீ சக்கரபூசை வழிபாடு

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோயிலிலும், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை அம்மன் திருமுன்னிலையிலும் ஸ்ரீ சக்கர பூசை வழிபாடு வெகு விமர்சையாக மாதந்தோறும் வரும் பூரணைத் தினங்களிலே இடம் பெற்று வருகின்றன. ஸ்ரீசக்கரம் என்பது அம்பாளைக் கிடந்த கோலத்தில் அமர்த்திப் பூசித்து வணங்குதலாகும். பீஜஅட்ஷரங்கள், மந்திரங்கள் என்பனவும் சக்கரமும் பிரதானமான அம்சங்களாகும். 'மந்திர உச்சாடனம்' முக்கியம். சக்கரங்களைப்பற்றிப் பேசும் திருமூலர் சக்தி தத்துவங்களைப் பலமுறை பலவிடங்களில் விளக்குகிறார். மந்திரமும், யந்திரமும், பாவனையும், தத்துவமும் இணைந்ததே ஸ்ரீசக்கர வழிபாடாகும். திருமூலர்,

"முத்து வதனத்தி முகர் தோறும் முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொழ
வித்ததி என்னுளே மேவி நின்றாளே" (1194)

என்று பாடுகிறார். திருமூலரே இலங்கையைச் "சிவபூமி" என்றும் அழைத்துள்ளார். உலக இயக்கமும் வாழ்வும் வாழ்வில் தவமும் தவத்தின் பயனாய் வீடுபேறு அடைதலும் சக்தி இல்லாமல் இல்லை என்கிறார் திருமூலர்

"அவளை அறியா அமரரும் இல்லை
அவள் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவள் அன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவள் அன்றி ஊர்புகும் ஆறு அறியேனே" (1053)

பெரிய தெய்வத்தன்மை பொருந்திய அறம் முதலிய நான்கு வேதங்களை அருளிய பராசக்தி திசைகளையே ஆடையாகக் கொண்டு பாதம் பூமியைக் கடந்தும் முடி வானத்தைக் கடந்தும் இருக்கச் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களாகிய மணிகள் இழைத்த அணிகள் ஒளிர அழகுடன் நிற்பவள் (திருமந்திரம், 1148) என்று அண்டசராசரங்களை அடக்கிய அவரின் விசுவரூபத்தைக் காட்டுகிறார் திருமூலர்.

இறைவன் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் ஆதலின் சக்தி திரிபுரை எனப்படுகின்றாள்.

'சக்தி என்று தனியாக ஒன்று இல்லை; சிவபெருமானின் அருளே சக்தியாகும்' என்ற கருத்து ஆழமாகச் சிந்தித்துணரத் தக்கது.

எல்லாம்வல்ல பரம்பொருள் சிவம். சிவத்தின் குணமே அருள். அருளுடைய சிவம் குணி. குணம் இன்றிக் குணி இல்லை. குணி இன்றிக் குணம் இல்லை. இந்தச் சக்தியை வெளிப்படுத்தாமல் இருக்கும் நிலை இறைவனின் சொரூபநிலை உயிர்களுக்குப் பயன்படுதல் நோக்கி வெளிப்படுத்துகின்ற நிலை தடத்தநிலை வெப்பத்தைத் தரத் தீர்மானிப்பது சிவம். செயற்படுத்துவது சக்தி. சக்தி ஒன்றே எனினும் தொழிற்படு நோக்கில் பலவகைப்படுகிறது.

சக்தி பலவகைச் சக்தியாகிப் பலவகைத் தொழிலாற்றினாலும் தன் ஆற்றலில் ஒரு பொழுதும் குறையாதவர். சிவத்தின் காதலியாய்ச் சிவத்தைப் பொருந்தி ஐவரை மக்களாய்ப் பெற்றாலும் கன்னிமை அழியாத கன்னியாகவே சக்தி விளங்குகிறாள் என்று விளக்குகிறார் திருமூலர்.

"கன்னியும் கன்னி அழிந்திலள் காதலி
துன்னி அங்கு ஐவரைப் பெற்றனாள்" (1118)

உயிர்ப்பாற்றல்' என்பது சக்தியாகிய ஆற்றல் என்பது தான்.

பராசக்தியை மதிமண்டலத்திலே வைத்து உண்மையாய் வணங்க வல்லவர் விதியையும் அது வரும் வழியையும் வெல்லலாம் என்கிறார் திருமூலர்.

"அது இது என்று அவரே கழியாதே
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதிமது மேவிப் பணிய வல்லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிடலாமே" (1231)

ஒரே இறையாம் சிவத்தின் அருளே சக்தி. சக்தி ஒருத்தியே பல்வகைச் செயற்பாடுக்காகப் பலப்பல பெயர்களில் உருவங்களில் சக்தி வெளிப்படுகிறாள். சக்தி இல்லாமல் எதுவும் இல்லை. எல்லாம் சக்தியே, சிவத்தோடு பிரிப்பின்றி இருக்கும் நிலையை உணர்ந் தறிந்தே வழிபாடு செய்திடல் வேண்டும். செய்தால் இகபரநன்மையை எளிதில் அடையலாம். பலபல நெறிகளாய் நின்று உயிர்களுக்கு அருள் புரிகின்றவள் சக்தி. அச்சக்தி ஒருவன் ஆகிய சிவனின் வேறு ஆகாதவள். ஆதலின் சக்தியை அச்சிவனோடு ஒன்றவைத்தே அவரை அடையும் இலக்காகக் கொண்டு தியானிக்க வேண்டும். தியானித்தால் அம்மையப்பராகிய அவ்விருவரிடையே அடங்கி ஆனந்தம் அடையலாம். திருமந்திரம் மேல்வருமாறு கூறும்.

"நெறி அதுவாய் நின்ற நேரிழையாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞகனோடும்
குறியது கூடிக் குறிக் கொண்டு நோக்கும்
அறிவொடும் ஆங்கே அடங்கிடலாமே" (1240)

கருணை புரிவதிலும், குற்றங்களை மன்னிப்பதிலும், அன்பு காட்டி வளர்ப்பதிலும் தந்தையைவிட ஒருபடி மேலானவள் தாய் எனவே அவளை வணங்கி, அருள்பெற்று அவள் மூலமாகச் சிவனை அடைய வேண்டும். அதனால் சிவநெறியில் அம்பிகை வழிபாடு சிறப்புப்பெற்று "எழுதா எழில் உயிர்ச்சித்திரம்" ஆகியவள் வள்ளலார் வணங்கிய மாணிக்கவல்லி.

அம்பிகை அனைத்து உயிர்களுக்கும் அன்னை, அண்டசரா சரம் யாவையும் பெற்றவள். அவருக்கு நரை, திரை, மூப்பு ஒன்றும் உண்டாகவில்லை. அருள் என்பது சிவபெருமானை விட்டு நீங்காதது. ஆதலால் அவனுடைய திருமேனியின் இடப்பாகத்தில் அம்பிகை வீற்றிருக்கிறாள்.

பாற்கடலிலே தோன்றிய ஆலகால நஞ்சைச் சிவபெருமான் அள்ளி உண்டான். சிவனுண்ட நஞ்சு அவன் கழுத்தில் கறுப்பாக வந்துசேர, அவன் உடல் முழுவதும் அது பரவிவிடக்கூடாது என்று அம்பிகை, தனது கருணையால் நஞ்சை அமுதமாக மாற்றினாள். எனவே சக்திவழிபாட்டின் தத்துவார்த்தங்களனைத்தும் உலக உயிர்வர்க்கத்தின் நிலைபேற்றுக் கென்றே வகுக்கப் பட்டுள்ளமையைக் காணமுடியும்.

இலக்கியம் வர்ணனை, புகழ்தல், சிறப்பித்தல் என்ற நிலைகளினின்றும் சக்தியின் விகசிப்பை நோக்கலாம். படிக்காசுப் புலவர் அம்பாளிடத்தில் பின்வருமாறு இரக்கிறார்.

"அம்மா! முருகனுக்கு வேல் தந்தாய். சிவபெருமான் அம்மியின் மீது வைக்கக் கால் தந்தாய்! சம்பந்தருக்குப் பால் தந்தாய். காமனுக்கு மூவரும் அஞ்சக் கோல் தந்தாய் எனக்கென்ன தந்தாய்"? என்று கேட்டு மேல்வருமாறு பாடியுள்ளமை காணத்தக்கது.

"வேல் கொடுத்தாய் திருச் செந்தூரார்க்கு
அம்மியின் மீது வைக்கக்
கால் கொடுத்தாய் நின் மணவாளனுக்கு
கவுணியர்க்குப்
பால் கொடுத்தாய் மதவேளுக்கு
மூவர் பயப்படச் செங்
கோல் கொடுத்தாய் அம்மையே
எனக்கேதும் கொடுத்திலையே".

என்பது அவர் பாடல்.

அம்பாளின் திருப்பெயர்களுளொன்று மீனாக்ஷி. மீன் தன் பார்வையால் தன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்கும். அம்மை தன் அருள் நோக்கினால், அருட்பார்வையால் அனைத்துயிருக்கும் நலம் தருவள். நயனதீட்ஷை என்று இதனைக் கூறுவர். அருட் கண்ணை முதன்மைப் படுத்தி அம்மையை விசாலாட்சி என்றும் காமாட்ஷி என்றும் அழைக்கும் மரபு சைவத்தில் காணப்பெறுவதாகும். (அட்சி – கண்) குமரகுருபரரும், அபிராமிப்பட்டரும், "கடைக்கண் நல்காய்" "விழிக்கே அருளுண்டு" என்றெல்லாம் பாடுவர்.

பரம்பொருளிடத்திலும் இருபெருங் கூறுகள் ஒலிக்கின்றன. அந்த இருபெரும் கூறுகளைத் "தனிப்பெருந்தலைமை", "அருட்பெருங் கருணை" என இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம். தனிப்பெருந்தலைமையைப் பரம்பொருளிடத்தே உள்ள ஆண்மைக் கூறாகவும் "அருட்பெரும் கருணை"யைப் பரம்பொருளிடத்தே உள்ள பெண்மைக் கூறாகவும் கருத வேண்டும். தனிப்பெருந் தலைமையை முதன்மைபடுத்துவோர் இறைவனை ஆண் உருவில் காண்கின்றனர். 'அருட்பெருங் கருணையை' முதன்மைப் படுத்துவோர் இறைமையைப் பெண் உருவில் காண்கின்றனர். ஆண் சிலைகளை வடிக்கவும், பெண் சிலைகளை வடிக்கவும் என இரு தன்மைகள் கொண்ட கற்களைச் சிற்பவல்லுநர்கள் பயன் படுத்துவதும் இத்தொடர்பிலே இணைத்து நோக்கத்தக்கது. அம்மன் சிலைகளைப் பொழிவதற்கென்றே கற்கள் தேர்ந்தெடுக்கப்படு வதுண்டு.

அறியாமை, ஆணவம், ஆசை என்னும் மூன்றும் தெய்வப் பெண்மையால் அழிக்கப்படுகின்றன. பெண்களால் நமக்குத் தீங்கில்லை என்றும், பெண்களைத் தவிரவேறு யாராலும் கொல்லப்படக் கூடாது என்றும், வரம் பெற்ற அசுரர்களே தேவியின் திரு அவதாரத்திற்குக் காரணமானவர்கள். ஆகவே அரக்கர் குலம் நிலவுலகில் வாழும் வரை தேவியின் கட்டுப்பாடும் இருந்தே தீரும். நன்மையும் தீமையும் சேர்ந்ததே பிரபஞ்சம். எனவே அசுரகுணமும் தேவகுணமும் தான் பிரச்சினை. பிரச்சினைகள் தீர்க்கும் பேராற்றல் இறைக்கே உண்டு.

சக்தி வழிபாட்டு மரபில், தேவியின் வரலாற்றில் பல்வேறு கோரமான சண்டைக் காட்சிகள் வருகின்றன. அவற்றைத் தீவினைகளை ஒழிக்கத் தேவி புரிந்த மறக்கருணைச் செயல்கள் என்றே கொள்ள வேண்டும். அறுவைச் சிகிச்சை புரியும் ஒரு மருத்துவரின் செயல் போன்றதாகவே இதனைக் கொள்ள வேண்டும்.

'முத்துமாரி' என்பதில் சின்னமுத்து, பெரியம்மை (Small Pox, Chichen Pox) என்பவை கொப்புளங்களின் அளவு மற்றும் நோய்க் கொடுமையை வைத்துக் கொடுக்கப்பட்ட பெயர்கள். நோய் கண்டவரின் வீட்டுக்கு வேறு யாரும் போகக் கூடாது. வீட்டு வாசலில் அம்மனுக்கு மிகவும் பிடித்த வேப்பிலையைக் கொத்துக் கொத்துகச் செருசி வைத்துவிடுவார்கள். அந்த வீட்டில் நோய் தீரும் வரை, அதாவது அம்மா திரும்பிப் போகும் வரை வேறு எந்தப் பூசையும் கிடையாது. கொண்டாட்டம், பண்டிகை எதுவும் கிடையாது. பூக்கள் கிடையாது. அம்மா வந்த வீட்டுக்காரர்களும் வேறு எங்கும் போகக் கூடாது. திருக்கோயிலுக்குப் போகக் கூடாது என்பன நிரந்தரமான கொள்கைகள். (Pox) அம்மை என்பது வைரஸ் நோய்கள் இன்றுவரை ஒரு தெளிந்த குறிப்பிட்ட மருந்து கிடையாது. வைரஸ் கிருமிகள் மிக எளிதில் பரவக் கூடியவை; தொற்றக் கூடியவை. வேப்பிலை ஒரு இயற்கையான கிருமிநாசினி

இவற்றின்மூலம் அம்மை நோய்க்கு அம்பிகையைத் தொழுது பரிகாரம் காணும் வழக்காறு இன்றும் உண்டு. பிற மதத்தினரும் சின்னம்மை கண்டால் முத்துமாரியம்மனை வழிபட்டுச் 'செவ்விளநீர்' த் தீர்த்தம் பெறுவர்.

"அனல நயன நாகம் பத்மபீடஸ்த்த மீடே
நகில புவன தைவம் சீதளம் மாரிரூபம்".

இந்த ஸ்லோகம் சீதளரூபிணியாகிய மாரியம்மனது குளிர்ச்சியைக் குறிக்கிறது. மழைத் தெய்வமாயும், கொடிய வெப்பு நோயை மாற்றும், சீதளத் தாயாகவும் முத்துமாரி அம்பாள் விளங்குகின்றாள்.

சக்திபீடம்

இந்தியாவில் 51 சக்தியீடங்கள் இருக்கின்றன 'சக்தியீடமரபு' எப்படி உருவாயிற்று என்று காண்பது இன்று அத்தியாவசிய மாயுள்ளது. இத்தொடர்பிலே தொன்மையான 'பழமரபுக்கதை' ஒன்றுள்ளது. 'கணவனாகிய சிவபெருமானின் சொல்லையும் மீறித் தந்தை தட்சனின் (தக்கப்பிரசாபதி) யாகத்திற்குச் சென்ற அம்பிகை அவமதிப்பிற்கு ஆளானார். தன் தவறுக்குப் பிராய்ச்சித்தமாகத் தீயுட்புகுந்து தன்னைமாய்த்துக் கொண்டாள். மாய்ந்த அம்மையின் உடலைத் தோளில் சுமந்துகொண்டு சிவபிரான் ருத்ரதாண்டவம் ஆட, அதனை நிறுத்த நினைத்த விஷ்ணு தனது சக்கரத்தால் அம்மையின் உடலைச் சிதைத்தார். உடலின் பாகங்கள் புண்ணிய பூமியாகிய பாரதத்தில் 51 இடங்களில் விழுந்தன. அவையே 51 சக்தியீடங்கள் என அழைக்கப் பெறுகின்றன என்ற கதை பலரும் அறியாத தொன்று. கன்னியாகுமரி, திருக்குற்றாலம், மதுரை, திருவானைக்கா, திருவாரூர், காஞ்சிபுரம், அம்பகரத்தூர் என்ற ஏழு சக்தியீடங்கள் தமிழகத்திலுள்ளன. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் இலங்கையில் யாழ்ப்பாணத்து நயினாதீவு என்னும் மணிபல்லத்தில் உள்ளது. இலங்கையிலுள்ள ஒரேயொரு சக்தியீடம் 'ஸ்ரீபுவனேஸ்வரியீடம்' என்றழைக்கப்படும் மணிபல்லவத்தில் உள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானம் என்பது குறிப்பிடற்பாலது. 'சக்தியீடம்' என்பது நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தானமேயாகும். சக்திவழிபாட்டுத் தத்துவங்களை உணர்ந்து அம்பாளை வழிபடுவோமாக!



கடவுள் பூசைக்குரிய பூக்கள்

விநாயகர்	- அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி
சிவன்	- கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி
விஷ்ணு	- துளசி, மாதவி, குருந்து, வாகை, மத்யாணி, கருங்கால் கொன்றை, முருக்கு, அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருக்கொழுந்து
பிரமன்	- அலரி
முருகன்	- வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள்
சூரியன்	- தாமரை
உமா	- நீலோத்பலம், தாமரை, சூரியகாந்தி, செம்பவளமல்லி, நந்தியாவர்த்தை
இலக்குமி	- நெய்தல், செந்தாமரை
சரஸ்வதி	- வெண்தாமரை
வரலட்சுமி	- ஐந்துமடல் கொண்ட தாழம்பூ
துர்க்கை	- செவ்வெருக்கு சிவப்பு, அரலி, கொன்றைமலர்
அக்னி	- வன்னி

நவக்கிரகங்கள் - பூசைக்குரிய பூக்கள்

சூரியன்	- செந்தாமரை	சந்திரன்	- வெள்ளரலி
செவ்வாய்	- செண்பகம்	புதன்	- வெண்காந்தள்
வியாழன்	- முல்லை	வெள்ளி	- வெண்தாமரை
சனி	- கருங்குவளை	ராகு	- மந்தாரை
கேது	- செவ்வல்லி		

கடவுளுக்கு ஆகாதபூக்கள்

விநாயகர்	- துளசி
சிவன்	- தாழம்பூ
விஷ்ணு	- அட்சதை (எருக்கம்பூ, ஊமத்தம்பூ)
வைரவர்	- நந்தியாவர்த்தம், மல்லிகை
சூரியன்	- வில்வம்
உமா	- நெல்லி
துர்க்கை	- அறுகு
இலட்சுமி	- தும்பைப்பூ
சரஸ்வதி	- பவளம்

எல்லாத் தெய்வங்களுக்கும் மல்லிகை, முல்லை, கருங்குவளை முதலிய பூக்களையும் உக்கிரமான தெய்வங்களுக்கு செந்நிறப் பூக்களையும் வழிபாட்டில் பயன்படுத்தலாம்.



ஆலய வழிபாடும் இளைஞர் சமுதாயமும்

புலவர் க. சிவானந்தன்


இளைய தலைமுறை குறித்து ஒரு நாளிதழ் எழுதியிருந்த ஆசிரியத் தலையங்கம் எனது சிந்தனைகளுக்கு வித்திட்டது.

"இளைஞர்கள் மத்தியில் பொதுவாகப் பரந்த அளவில் விரக்திவேதனைகளுக்கு மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உருவாகியுள்ளது. ஒருவகையில் ரிஷி மூலத்தையும் நதி மூலத்தையும் தேடுவது ஒரு நீண்ட பயிற்சியாகவே அமையும். ஆயினும் இன்று இறை நம்பிக்கையும் வழிபாடும் கலாசாரப் பிடிப்பும் இளைய தலைமுறையினரிடமிருந்து அருகிப் போவது துரதிர்ஷ்டவசமான நிலையாகும்.

இன்று சமய பாரம்பரியங்கள் நம்பிக்கைகள் யாவும் சிதைந்து காற்றில் போன கதையாக; எப்படியும் வாழலாம் என்ற நிலையில் வாழ முற்படும் சூழ்நிலை உருவாகின்றது. இந்தப் புதிய போக்கு வாழ்வின் அமைதிக்கும் எழுச்சிக்கும் எந்த வகையிலும் உதவமாட்டாது" என்கிறது அந்தத் தலையங்கம்.

அறிவியல் அறிவின் கூர்மை மட்டும் நமது வாழ்க்கைக்குப் போதாது. அருளியல் அறிவின் விரிவும் நமது வாழ்க்கைக்குத் தேவை. தேவைகளை இனங்கண்டு தேடிப் பெற்றுக் கொள்வதே வாழ்வின் குறிக்கோளாதல் வேண்டும்.

ஆலயங்களுக்கு இளைஞர்கள் கும்பிட மட்டும் வருவதில்லை. பத்து வீதம் வழிபாடு செய்வார்கள். ஆலயத்தை, ஆண்டவனை, அறங்காவலர்களை, அர்ச்சகர்களை, அடியார்களை அவதானிப்பதில் ஒரு பகுதி நேரத்தைச் செலவு செய்கிறார்கள். இது உண்மை. வெற்றுரையன்று, இளமைத்துடிப்பை அல்லது முறுக்கை ஆலய வழிபாட்டில் இறுக்கி, இறைவன் பால் உறைத்த பக்திகொள்ள வைக்கும் மேற்குறித்த அம்சங்கள் ஆன்மீக விளக்கமாய், அருள் தருவதாய், சேவை நிறைந்ததாய், தூய்மையானதாய், கடும் அன்பினில் கும்பிடும் குறிக்கோள் உடையதாய் அமைதல் வேண்டும்.



இளைஞர்களின் கவனிப்பில் கிடைக்கும் கருத்தமைவிலேயே மீண்டும், மீண்டும் ஆலய வழிபாட்டிற்கு அவர்கள் வருகிறார்கள். ஆலய ஒழுங்கு, அபிடேக விசேடம் அர்ச்சனைச் சிறப்பு நிர்வாகத்திறன், பக்திச் சூழல் முதலியவற்றால் இளைஞர் சமுதாயம் ஆலய வழிபாட்டில் தோய்ந்து உறைய வழிபிறக்கும். ஆலய வழிபாட்டில் தத்துவமும் யதார்த்தமும் இணைந்த நிலைப்பாடு இருத்தல் வேண்டும். இந்த இணைவின் இணக்கப்பாட்டினாலேயே இளைஞர்களின் இதயங்கள் இழுக்கப்படுகின்றன.

இளைஞர்களை வழிபாட்டில் ஈர்க்கும் வழி துறைகளை ஆலயங்கள் மேம்படுத்த வேண்டும். அறங்காவலர்கள், அர்ச்சகர்கள், அடியார்கள் ஆகிய முத்திறத்தோரும் கோலங்களில் காட்டும் அக்கறையோடு, குணங்களிலும் அக்கறை காட்ட வேண்டும். குணம் ஒரு மூன்றும் திருத்துசாத்துவிகமாக வேண்டும். இதுவே இளைஞர்களை ஆலய வழிபாட்டின் பால் ஈர்க்கும்.

நமது இறைவனே, ஈர்த்து ஆட்கொள்பவன். (அங்குமிங்கும் அலைபவர்களையும், அலையும் மனங்களையும்) "ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே" என்பது திருவாசகம். இறைவனே ஈர்த்தெடுக்க விரும்பும்போது இறைவனைச் சார்ந்தவர்கள் விலக்கிவைக்க விரும்பக்கூடாது. சார்ந்ததன் வண்ணமாதல் தத்துவம் நடைமுறை வாழ்க்கையில் யதார்த்தமாக வேண்டும்.

திருக்கோயில்களில் திருமுறைகளைப் படிக்கவும் திருத்தொண்டில் கலக்கவும் ஆர்வம் கொள்ளும் இளைஞர் களையும், யுவதிகளையும் உற்சாகப்படுத்த வேண்டும். பயந்து கொண்டும் கூசிக் கொண்டும் வருபவர்களை அன்புகாட்டி ஆலயப்பணிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும். வழிபாடு எல்லா யதார்த்தங்களுக்கும் உண்மைகளுக்கும் இட்டுச் செல்லும் ஒரு சாதனமே. வழிபாட்டின் உச்சம் துறவுநிலை அல்ல. அன்பு கனிந்த இன்ப உறவுநிலையே என்பது இளைஞர்களுக்கு விளங்கும் வகையில் போதனைகள் செய்தல் வேண்டும். யோகம், ஞானம், தியானத்திற்கு முன்பு ஆலய வழிபாட்டால் அன்பும் இரக்கமும் பற்றும் உறுதியும் இளைஞர்களிடையே வளர்க்கப்படல் வேண்டும். "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்பதுவே முதல் பாடமாக வேண்டும். பின்பு பாசம், பயனாய் அது சமுதாயத்திற்கு உதவும்.

நமது தலைப்பு "ஆலயங்கள் சமுதாய மையங்கள்" என்னுங் கருத்தில் வழிபாடு என்பதும் சமுதாயம் என்பதும் தொனிப் பொருளாய் விளங்குவதை மனங்கொள்ள வேண்டுகிறேன்.

ஆலய வழிபாட்டிற்கு மீசையை விலக்கல், காவி கட்டல், உருத்திராக்கம் அணிதல் போன்ற புறச்சின்ன அலங்காரங்கள் இளைஞர்களுக்குத் தேவையில்லை. திருநீறு தரித்தல், சித்தத்தை கடவுள்பால் செலுத்தல் இரண்டுமே போதுமானது. அகத் தூய்மையே ஆலயவழிபாட்டின் ஆணிவேர்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீரபிற" என்றார் வள்ளுவர். "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்றார் சுவாமி விபுலானந்தர். அடியார்களை மதித்துப் பேணும் இயல்பினையும் இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இளைஞர்களும் யுவதிகளும் மதித்து ஏற்றுக் கொள்ளும்படி அடியார்களும் பக்குவநிலையில் பழுத்த மனத்தினராய் விளங்குதல் வேண்டும். அழுக்கு மனத்து அடியார்களை இளைஞர் சமுதாயம் ஏற்க மறுக்கும்.

ஏழாம் நூற்றாண்டிலே இளைஞரான திருஞான சம்பந்தசுவாமிகளுக்குப் பின்னாலும் முதியோரான திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப் பின்னாலும் இளைஞர் படையே எழுந்து திரண்டு சென்றது என்றாலும் அதற்குச் சம்பந்தரிடமும் அப்பரிடமும் இருந்த தகுதிகளே காரணம். அவர்கள் தரித்துக் கொண்ட சிவ சின்னங்கள் மட்டுமல்ல என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். தகுதிகளை வளர்த்துக் கொள்ள ஆலயங்களைச் சார்ந்தோர் முனைந்து பாடுபட வேண்டும். ராமகிருஷ்ண பரமஹம்சர் தான் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடாமல் விடும்வரை ஒரு குழந்தைக்கு இனிப்புச் சாப்பிடாதே என்று அறிவுரை கூற மறுத்த செய்தி இங்கு நினைவு கூரத்தக்கது. தகுதியும் நம்பிக்கையும் ஆலய வழிபாட்டின் இரு தூண்களாகும்.

ஆலய வழிபாட்டில் இளைஞர்களுக்குத் தன் நம்பிக்கையையும் கடவுள் நம்பிக்கையையும் ஊட்ட வேண்டும். இவ்விரு நம்பிக்கை களுமே சமுதாய வளர்ச்சிக்கு உந்து சக்தியாகும். வழிபாட்டில் விளக்கமே வாய்க்காலாகும். விளங்கிக் கொள்ள வேட்கையுறும் இளமைக்குத் தெளிவு தர வேண்டும். தேறலின் தெறிவே என்பது திருமுறை.

கம்பியில்லாத் தந்தியை கண்டுபிடித்த விஞ்ஞானியான மார்க்கோனி ஆலய வழிபாட்டை ஆரம்பத்தில் விரும்பாதவன். ஆலயத்தில் நின்று ஆண்டவனைக் கூப்பிட்டால் ஆகாயத்தில் இருக்கும் அவனுக்கு அது எப்படிக் கேட்கும் என்று கேட்டுக் குழம்பிய மார்க்கோனி தனது கண்டு பிடிப்புக்குப்பின் தனது பெற்றோரும் மற்றோரும் தனக்குப் போதித்தது உண்மையே என்று தெளிந்து ஆலயவழிபாட்டிற்குப் போனவன்.

நான் படித்த கல்லூரிக்குத் தென் தமிழ் நாட்டிலிருந்து காவி உடை தரித்த துறவி ஒருவர் வந்தார். அவருடைய ஆன்மீகச் சொற்பொழிவைக் கேட்க இளைஞர்கள் கல்லூரியால் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். வேண்டா வெறுப்பாகத்திரண்ட இளைஞர்கள் மத்தியில் அத்துறவி ஆன்மாவின் வீடுபேறு பற்றி உரையாற்றினார். அப்போது உதைபந்தாட்ட காலம். அவர் அன்றைய உதைபந்தாட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டார். "பதினான்கு விளையாட்டு வீரர்களுக்கு இடையில் ஒரு பந்துபடும் பாட்டினைப் பார்த்திருப்பீர்கள். அதை அங்கும் போக விடமாட்டார்கள், இங்கும் போக விடமாட்டார்கள். எல்லோருமாகக் காலால் உதைப்பார்கள். தலையால் இடிப்பார்கள். உதையையும், இடியையும் வாங்கி, வாங்கித் தடைக்குள் நுழைய எத்தனிக்கும்போது கீப்பர் கையால் பிடித்து தன் காலுக்குள் வைத்து பெரிய அடியும் கொடுப்பார். துன்பப்பட்ட பந்து நேரம் வாய்த்ததும் தடைக்குள் புகுந்து வெற்றியைப் பெற்றுவிடுகிறது. இதுபோலவேதான் ஒரு ஆன்மா அங்கும் இங்கும் அலைப்புற்று அல்லல்பட்டு, அடிபட்டு இறுதியில் வீடுபேறு அடைகிறது" என்று பேசி முடித்தார். வேண்டாவெறுப்போடு ஆன்மீக உரைக்குவந்த இளைஞர்கள் வியந்து போனார்கள். அத்துறவியின் காலில் விழுந்து வணங்கி விபூதி பெற்றுக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சி நடந்த யாழ் – இந்துக் கல்லூரியின் அன்றைய இளைஞர்கள் சமுதாயத்தின் பலமுனைகளிலும் ஆளுமைமிக்கவர்களாய் இன்று திகழ்கிறார்கள்.

வழிபாடு ஒரு பலம், கம்பீரம், ஆளுமை, மனிதனை முழுமைப்படுத்தும் ஒரு நிகழ்வு. அன்பு, இரக்கம், தொண்டு முதலியவற்றிற்கு உந்துசக்தியாகும். உயரிய ஊட்டமே வழிபாடு. வழிபாட்டின் விளக்கத்திற்கு மொழியே முதற்காரணமாகும். புரியும் மொழி வழிபாட்டினையே இளைஞர் சமுதாயம் பெரிதும் விரும்புகிறது. ஆலயங்களில் திருமுறைத்தமிழ் அர்ச்சனையும் இடம் பெற்றால் இளைஞர் சமுதாயத்தின் வழிபடு கடமைக்கு வாயில் அமைத்தவர்களாவோம்.

நமது இறைவனே தமிழ் அர்ச்சனையைத் தன்வாயால் கேட்டதாக வரலாறு உண்டு. "அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் எம்பிரார்க்குச் சொற்தமிழ்பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்" என்பது உலகப் பிரசித்தம். திருமுறைத் தமிழ் அர்ச்சனையை நாடெங்கும் ஆலயங்களில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். பக்தி வளர்ச்சிக்கு இது வித்தாக அமையும்.

ஆலயங்களில் மெய்யடியார்கள் போல் கோலங்காட்டி நடைமுறை வாழ்வில் பொய்யுடையாராய் நடந்துகொள்ளும் பலரால் இளைஞர்கள் வழிபாட்டில் இடைஞ்சல்கள் ஏற்படுவதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பொய்யாயினவெல்லாம்

போயகன்று மெய்யானவை மேற்கிளம்பும் சூழ்நிலை உருவாக வேண்டும். 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்" என்றும் திருவடி வணக்கத்தால் மெய்மையான மனிதர்களாய் விளங்கி இளைஞர் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாய் இலங்க வேண்டும்.

தென்தமிழ் நாட்டில் கடவுள் மறுப்பு இயக்கம் தோன்றி ஆலயத்திற்குப் போகாதே, ஆண்டவனை நம்பாதே என்று பிரசாரம் செய்தமைக்குக் காரணமான சூழல் நமது ஆராய்ச்சிக்குரியதே! ஆலயத்தைச் சார்ந்தவர்கள் செய்த தவறுகளை ஆலயத்தின் மேலும், ஆண்டவனைச் சார்ந்தவர்களின் குற்றங்களை ஆண்டவன் மேலும் சுமத்தியதால் ஏற்பட்ட உற்பாதங்களே அவை. ஆயினும் அவ்வியக்கம் வெற்றி பெறவில்லை. ஆலயத் தொடர்புடையோரும் ஆதீனங்களும் கொடுத்த நல் விளக்கங்களால் இளைஞர் அணி இன்று சிவனடியார் திருக்கூட்டங்களாய் இயங்குவதைக் காண முடிகிறது.

ஆலய வழிபாட்டு விளக்கங்களாலும் சில விபரீதங்கள் நடந்துவிடக் கூடும். எதனையும் தேடி அறிந்து தெளிந்து உணர்ந்து வெளிப்படுத்த வேண்டும். "ஆலய வழிபாட்டினை முடித்துக் கொண்டு ஆலயத்திலே சிறிதுநேரம் உட்காருகிறோமே இது ஏன்?" என்று ஒரு இளைஞர், அடியார் ஒருவரைக் கேட்டார்.

"நமக்குமேலே ஏறிய தெய்வங்கள் இறங்கிப் போவதற்காக" என்று அவர் பதில் சொன்னார். இளைஞர் குழம்பிப் போனார். இறைவன் நம்மில் ஏறி இருப்பது நமக்கு நல்லதுதானே. புறம்புறம் திரிபவன். இல்லங்கள் தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன். வழிக்குத் துணையாய் வருபவன், வினைத்துணையான நமக்குத் தனித்துணையாக உள்ளவன். நீக்கமற எங்கும் நிறைந்தவன் – என்றெல்லாம் படித்தேனே. நமது அனுபூதிச் செல்வர்கள் சொன்னதெல்லாம் பொய்யா? இந்தப் பெரியவர் ஏறிய இறைவன் இறங்கிப் போவதற்காகவே கோயிலில் கொஞ்ச நேரம் இருக்கிறோம் என்கிறாரே என்று யோசித்து யோசித்துக் குழம்பினான்.

இவர்களுக்குப் பக்கத்தில் இருந்து கொண்டு இவர்களைக் கவனித்த இன்னுமொரு அடியார் கூறினார் 'இறைவன் சந்நிதானத்தில் நின்றுவிட்டுப் போகக்கூடாது. இருந்துவிட்டும் போக வேண்டும். நின்றும், இருந்தும், கிடந்தும் அவன்தாள் பணிதல் வேண்டுமென்றார்கள் நமது அனுபூதிச் செல்வர்கள்" என்றார். அவ்விளைஞன் தெளிந்து தேறினான். இப்படியான விளக்கம் அவ்விளைஞனுக்குக் கிடைக்காது போனால் இந்த இளைஞனின் நிலை என்ன? நினைத்துப் பாருங்கள்.

இளைஞர்களே! ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அன்பு செய்யுங்கள். தொண்டு செய்யுங்கள். இல்லையேல் சும்மா இருங்கள். "சும்மா இரு சொல்லற என்றாலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என்ற அருணகிரியார் இளைஞராய் இருந்து அனுபவப்பட்டவரே. அலங்காரங்களாலும் அனுபூதிகளாலும் நம்மை வழிப்படுத்துபவரே.

ஆலயம் சார்ந்தோரே! என்னதான் விளக்கம் அளித்தாலும் சில இளைஞர்கள் குழப்புவதற்குமே ஆலயத்திற்கு வருகிறார்கள். வழிபாடு அவர்கள் நோக்கமாய் இருப்பதில்லை. அழிபாடுகளுக்கே அவர்கள் வருகிறார்கள் என்று உண்மையாய் உளமார நீங்கள் அவதானித்தீர்களாயின் ஆண்டவனிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு "மிண்டுமனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்" எனக் கூறிக்கொண்டு குழப்பும் இளைஞர்களைக் குறிவைத்து அப்புறப்படுத்துங்கள். ஆலயங்களுக்கு அந்த உரிமை உண்டு. அது ஆண்டவன் கட்டளை.



திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள்

- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்.
- ஒரே முறை பிரகாரத்தில் வலம் வருதல்.
- எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்.
- நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல்.
- பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்.
- வீண்வார்த்தை பேசுதல், பொய்பேசுதல் இரைந்து சிரித்தல்.
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம்வருதல்
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்
- காம எண்ணங் கொள்ளல்
- கம்பளி ஆடை அணிதல்
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் தரித்தல், புகைத்தல்
- விக்கிரகத்தைத் தொடுதல்.
- தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
- உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்.
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல்

ஆகம வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறப்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும்

பிரதிஷ்டா பூஷணம்,
சிவாகமஞானபானு சிவாச்சாரியார்
(அமரர்) சிவஶ்ரீ சுவாமிநாத
பரமேஸ்வரக் குருக்கள்
நயினை, யாழ்ப்பாணம்



"அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற மூதாட்டியின் வாக்கிற்கு அமைய மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் பெருமை கொள்ள வேண்டும். மனிதன் என்ற சொல் "மன்" என்ற வடமொழி வினையடியில் இருந்து பிறந்தது. அதை அடிப்படையாக வைத்துத்தான் பல மொழிகளிலும் மனிதன் குறிப்பிடப்படுகிறான். "மன்" என்றால் "நினைத்தல்" என்பது பொருள். நினைக்கக் கூடிய கருவியாகிய மனதை வைத்திருப்பவன் மனிதன். யாரை நினைக்க வேண்டும்? என்ற கேள்விக்கு அப்பர் சுவாமிகள்,

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும்
தந்த இறைவனை

என்று கூறுவார். அப்படி இறைவனை நினைக்கத்தான் நமது முன்னோர்கள் கோயில்கள் என்ற இறை நிலையங்களை நிறுவியுள்ளனர்.

ஆதிகாலம் தொட்டே இந்து மதத்தவர்க்கு இறைவன் என்ற ஒரு உயர்பொருள் உண்டு எனும் எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஆதலால் தான் ஆதியில் உருவத்தைப் பார்க்க முன் இறை உயர்வைப் பார்த்தனர். இயற்கைச் சக்திகளை இறைவனாகக் கண்டு வழிபட்டனர். இவற்றை வேதங்களில் சிறப்பாகக் காணலாம். பின்பு உருவங்களைக் கொடுத்து வழிபட்ட இந்து மதத்தினர் அவற்றுக்குரிய ஒழுங்கு விதிகளை அறியாது பழங்குடித் தமிழர்கள் காடு, ஆறு, குளக்கரை ஓரம், ஆலமரங்கள் போன்ற இடங்களில் இறைவனை வணங்கினர். இது சிறப்பாகச் சங்க காலத்தில் காணலாம். அக்கால நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் –

"காடும் காவும் காவின் பெறு துருத்தியும்
யாதும் குளனும் வேறு பல்வைப்பும்"

என்று குறிப்பிடுகிறார். சங்கமருவிய காலத்தில்தான் கோயில் என்ற நிலை உருப்பெறத் தொடங்கியது. விக்கிரகங்கள் அமைப்பதற்குரிய பொருட்களை ஆகமங்கள் சிறப்பாகக் கூறியுள்ளன. அப்பொருட்களைப் பயன்படுத்தியதாக மணிமேகலை என்னும் காப்பியம்

"மண்ணிலும், கல்லினும், மரத்தினும்
சுவரினும், கண்ணி தெய்வதம் காட்டுநர் வகுக்க"

என்று குறிப்புத் தருகிறது. எவ்வாறுதான் விக்கிரகங்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைக்க வேண்டிய விதிகளையும் வழிபாடாற்ற வேண்டிய நெறிகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டும். அவற்றைச் சிறப்பாக விளக்க வைத்தவையே ஆகமங்கள் ஆகும். "ஆகமம்" என்றால்

இறைவனிடம் இருந்து வந்தது என்று பொருள்படும். இதையே திருமூலர் 10ஆம் திருமுறையான திருமந்திரத்தில்,

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என நிறுவியுள்ளார். ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள 28 ஆகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களின் மூலம் இறைவனை அடைவதற்கான வழிகளைக் காட்டி நிற்கின்றன. ஆமங்கள் விளக்கும் கிரியைகள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயசித்தம் எனும் நான்கு பகுதிகளாக விளக்கம் தருகின்றன. அவற்றைப் பின்பற்றியே வழிபாடு செய்ய வேண்டும். விக்கிரகங்களிலோ அல்லது கோயிலிலோ ஏதாவது குற்றம் ஏற்படுமாயின் அதற்குரிய ஆகம முறையைச் செய்து கொள்ள வேண்டும். குற்றமுள்ள விக்கிரகங்களை வழிபடுவதால் அந்தத் தேசத்தில் மழையில்லாமல் போகும் என்பதை அஜிதாகமம் பின்வருமாறு கூறுகிறது.

"ஜீர்ண லிங்கத்து பேரம் வா யத்ர து பூஜ்யதே
தத்ராநாவ்ருஷ்டி ஜாப்திர்வார்ததெ நாதர ஸம்சய"

இதையே திருமந்திரமும்

ஆற்றருநோய் மிக்கு அவன் மழையின்றி
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கற்றுவதத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

எனக் கூறுகிறது. (பாடல்517) ஆகவேதான் கோயில் அமைப்பு முறையை ஆகமங்களும், சிற்பசெந்நூல்களும் சிறப்பாகக் கூறி அதில் அமைக்கப்பட வேண்டிய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்யும் முறையையும் நான்கு விதமாகக் கூறியுள்ளன.

அதாவது ஒரு கிராமத்தில் புதிதாக ஒரு ஆலயம் அமைத்து விக்கிரகத்தை எழுந்தருளச் செய்வது அநாவர்த்தனப்பிரதிஷ்டை எனப்படும். ஒரு இடத்தில் லிங்கம்(அல்லது ஏதாவது விக்கிரகம்) சமுத்திரத்தினாலோ நதியினாலோ அல்லது தீய மிருகங்களால் வேறு இடத்திற்கு அசைக்கப்பட்டால் அது ஆவர்த்தனப் பிரதிஷ்டை ஆகும். விமானங்களில் வர்ணம் இல்லாமல் புதிதாக வர்ணம் தீட்டிக் கோயிலைப் புதுப்பிப்பதற்காகப் பாலாயம் அமைத்துப் பிரதிஷ்டை பண்ணுவது புனராவர்த்தனம் எனப்படும். சண்டாளர்கள், பாபிகள், திருடர்கள் விம்பங்களைத் தொட்டால் அந்தத் தோஷம் நீங்குவதற்காகச் செய்வது அந்தரிதம் ஆகும்.

ஆகமத்தில் "விக்கிரகம்" என்ற சொல் "மேலான இடம்" அல்லது "விசேஷமாக எழுந்தருளும் இடம்" என்று பொருள்படும். "பிரதிஷ்டை" எனும்போது "பிர" என்பது "சிறப்பாக" அல்லது "உயர்வாக" என்ற பொருளையும், "திஷ்ட" என்பது "நிற்றல்" எனும் கருத்தையும் தருகிறது. எனவே விக்கிரக பிரதிஷ்டை என்பது "விஷேடமாக எழுந்தருளும் சிலையில் இறைவனைச் சிறப்பாக நிற்கச் செய்தல்" என்று பொருள்படுகிறது. கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பதால் பாவங்கள் எல்லாம் நீங்குகின்றன என்பது சமய நம்பிக்கை. அதன் சிறப்பை சம்பந்தர் மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரரைப் பற்றிப் பாடும்போது

"உரிஞ்சாய வாழ்க்கை யமனுடைய போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
குருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தாள்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

எனக் கும்பாபிடேகச் சிறப்பைக் கூறுகிறார். ஆதலால்தான் அன்றுதொட்டு இன்றுவரை கோயில் கட்டுவதிலும் அதைப் புதுப்பிப்பதிலும் இந்து மதத்தவர்கள் அதிக ஈடுபாடு கொடுத்து வருகின்றனர். இதையே அப்பர் சுவாமிகள் ஐந்தாம் திருமுறையில் திருமீயச்சூர் எனும் இடத்தில் கோயில் கொண்டு இருக்கும் இறைவனை நோக்கி,

"தோற்றுங் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுற"

எனத் தோன்றியுள்ள கோயிலுடன் தோன்றும் கோயிலையும் சிறப்பித்துள்ளார்.

முன்பு அநாவர்த்தனம் செய்த கோயில்களை மீண்டும் 12 வருட முடிவிலோ அல்லது அதற்கு முன்னமோ புனராவர்த்தனம் செய்ய வேண்டும் எனக் காமிகாகமம் கூறுகிறது. புனராவர்த்தன பிரதிஷ்டையில் பாலஸ்தாபனம் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதனை இரண்டுவிதமாகக் காரணாகமம் கூறுகிறது.

முதலாவது, கிராமம் அல்லது நகரம் அல்லது இராஜதானி இன்னும் மற்ற இடங்களில் பிரதான ஆலயம் கட்டியபின் முதன்முதலாக புனராவர்த்தனம் செய்வதற்காகக் கட்டப்படுவது பாலாலயம் அல்லது பாலஸ்தாபனம் எனப்படும் இதை காரணாகமம்,

"க்ராமேவா நகரேவாவி பத்தநே ராஜதாநிகே
ஏதேக்ஷுவ்ஷ்வந்யேக்ஷுஷு தேஷு மூலஸ்தாநஸ்ய யத்பரா"

பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்து பின் மூலாலயத்தில் மூலலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துவிட்டுப் பாலாலயத்தை நீக்க வேண்டும். பின்பு மூலாலயம், பீடம், விம்பங்கள் பழுதுபட்ட காலத்தில் இவைகளைக் கம்பத்தில் ஆவாஹித்து பாலவிம்பத்தில் சேர்ப்பதற்கு, இரண்டாவது அல்லது அதற்குப் பிற்பட்ட புனராவர்த்தனத்திற்காக அமைக்கும் ஆலயம் தருணாலயம் எனப்படும். இது சுப்பிரபேத ஆகமத்திலும், அம்சுமானாகமத்திலும் காணப்படுகிறது.

"ஆத்யம் பாலக்ரஹம் கல்ப்யம் மூலகெஹம் தத் பரம்
மூலலிங்கம் பிரதிக்ஷ்டாப்ய பச்சாத் பாலக்ரகம் தீயஜேத்
பந: பிராசாதகரணெ சின்னேபிந்நெ ரவீக்ருதே"

பாலாலயத்தில் ஸ்தாபனம் செய்தபின்பே மூலாலயத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். பாலஸ்தாபனம் இல்லாத பிரதிஷ்டை பல கெடுதல்களை உண்டாக்கும் என ஸுக்ஷ்மாகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் குறிப்பாகப் புத்திர பௌத்திரர்களுக்குத் தீமை ஏற்படும் என்று விளக்கப்பட்டுள்ளது.

"பாலஸ்தாபந விநாயதர புத்ர பௌத்ர விநாசநம்"

பாலஸ்தாபனம் அமைக்கப்பட வேண்டிய திக்குகளைக் காமிகாமமம் சிறப்பாகக் கூறுகின்றது. இக்காமிகாமமம் பாலஸ்தானம் இன்றி மூலஸ்தாபனம் இல்லை என்றும் கூறுகின்றது.

"பாலஸ்தானம் விநாவித்வான் மூலஸ்தானனம் ந காரயேத்"

மூலவிக்கிரகம் சிலாவிக்கிரகமாக இருந்து அதில் ஏதேனும் பழுது (ஜீர்ணம்) ஏற்பட்டால் அவற்றை அகற்றும் அல்லது சீர்திருத்தம் விதி முறைகளை ஆகமங்கள் வகுத்துள்ளன. எந்தப் பொருளால் விக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கிறதோ பின் அது பழுதுபட்டபின்

அதே பொருளால் அமைக்கப்பட வேண்டும் என்பதை விம்பாகமம் கூறுகிறது.

"ம்ருண் மயம் சேத் ம்ருதாகுர்யாத் தாருசேத் தாருணாதரு
லோகஜம் யதி லோகெந சிலாயாம் சைலயம் யதி"

(சிலை) விக்கிரகத்தை நோக்குமிடத்து அதன் முகம் இமைகள், மூக்கு, கண் போன்றவை குற்றமுடையதாயின் அதை விலக்கிப் புதியதொரு விம்பத்தை ஸ்தாபிக்க வேண்டும் என ரௌரவ ஆகமம் விளக்கி, அப்பழைய விக்கிரகத்தைச் சமுத்திரத்தில் விடும்படியும் கூறுகின்றது.

"ப்ருரேகா பக்ஷ்ம ரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஸர்வாங்கானாம் க்ஷயம் த்ருஷ்டவா ப்ரதிமாம் ச
விஸர்ஜயெத"

"சைலஜம் த்ருவபேறும் யதங்கஹீநம் பவேத்யதி
தத்பேரம் ச சமாதாய சமுத்ரெ பிரக்ஷி வெத்ததா"

மேலும் தலை, புஜம், கால்கள், சேதம் ஏற்பட்டாலும் அதை விலக்கி அவ் விக்கிரகத்தை சமுத்திரத்தில் விடவேண்டும் என்பதை பூர்வ காரணகாமம் (பாடல்234) விளக்குகிறது.

"ப்ருரேகா பக்ஷ்மரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஏதாஸாம் ச க்ஷ்யம் த்ருஷ்ட்வா ப்ரதிமாம் பதிவர்ஜயெத்
தத்பேரம் து பரிக்ராஹ்ய சமுத்ரே து விநிஷியபேத"

இதையே சுப்பிரபேதாகமமும் கூறுகிறது.

"சர்வாங்கநாம் க்ஷயம் த்ருஷ் ட்வா ப்ரதிமாம் ச விஸரியெத்"

லலிதாகமம் எனும் ஆகமத்திலும்

"சிலாவிக்கிரகத்தில் ஏதாவது அங்கம் குள்ளமுடையதாயின் அதை எடுத்து சமுத்திரத்தில் விட வேண்டும்" என்று பின்வருமாறு கூறுகிறது.

"சைலம் ச த்ருவபேரம் யதங்க உற்நம் பவேத்யதி
தத் பேரம் ச சமாதாய சமுத்ரே ப்ரக்ஷிவெத்தது"

விம்பாமத்திலே குற்றமுள்ள விக்கிரகத்தை நதியில் விடுத்து புதிய விக்கிரகத்தை அதே பொருள் கொண்டே அதாவது முன்பு எந்தப் பொருள் விக்கிரகம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதோ அதே பொருள் கொண்டே அமைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இது பற்றி முதலிலியே குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இதே கருத்தை ஸுக்ஷமாகமம் 48வது படலம். (11வது வரி முதல் 14வது வரி வரை உள்ளவை) விளக்குகிறது. அதில் மண்ணால் உலோகத்தால், கல்லினால் செய்யப்பட்ட விம்பங்களில் குற்றம் அல்லது நெருப்புப் பட்டால் அதைப் 'பூஜையில் பயன்படுத்தக் கூடாது" என்றும் அப்படி பூஜை செய்யின் ராஜாவிற்கு அழிவும். நாட்டிற்கு கேடும் விளையும் என்றும் "அதை நீரில் விடவேண்டும்" என்பதையும் சுட்டிக்காட்டி எந்தப் பொருளால்தான் புதிய விக்கிரகம் செய்யப்பட்டிருக்கிறதோ அதே பொருளால்தான் புதிய விக்கிரகம் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது.

"தஸ்மாத் பேரம் சமுத்ருத்ய ஜலெ வாவி ஸ்தலே விவா"

மேலும் "சிலா சேச் சைலஜம் ஸ்வயம" என்றும் விளக்குகிறது. ரௌரவாகமும் சிலையில் செய்யப்பட்டிருந்தால் மீண்டும் செய்யும் போது சிலையால்தான் செய்யப்பட வேண்டும் என

"சிலையா சைலஜம் குரு"

(55ஆவது படலம் 10ஆவது வரி) விளக்கி நிற்கிறது. குமாரதந்திரத்திலும் இக் கருத்து,

"எந்தப் பொருளினால் ஒரு விக்கிரகம் செய்யப் பட்டிருக்கிறதோ பின் ஜீர்ணமாகி விலக்கிய பின் அதே பொருளால்தான் விக்கிரகத்தைச் செய்ய வேண்டும்." என்றும் கூறுகின்றது.

"யத்வஸ்துனா க்ருதம் பேரம் குர்யாத் தத்வஸ்துவர புன:"

ஸ்ரீமகுடாகமத்தில்

"சலிதம் பதிதம் வாவி நந் ஸ்ரேதோ விவேதிதம"

(150வது பாடல்) என்ற குறிப்பு காணப்படுகிறது. அதாவது "விக்கிரகத்தில் ஏதாவது அசைவுகளோ அல்லது ஒரு அங்கம் விழுந்தாலோ அதை நதியில் சேர்க்க வேண்டும்." என்று கூறுகிறது. லலிதம் எனும் மூலாகமத்தில் இருந்து வந்த குமார தந்திரத்தில் "சிலாவிக்கிரகம் பழுது அடைந்தால் அதை உரிய வாகனத்தில் சகடை, யானை, ரதம் அல்லது சிவிகையில் ஏற்றி சமுத்திரத்தில் அல்லது தடாகத்தில் அல்லது கிணற்றில் விடவேண்டும்" என்று விளக்கப்பட்டுள்ளது.

"சைலஜம் ஜீர்ணம் சமுத்ருத்ய சகடே வா கஜே விவா
ரதே வா சிவிகாயாம் வா விநிநா ரோப்ய பத்திமான்
சமுத்ரெ வா தடாகேவா கூவேவாவி விசர்ஜயேத்"

இவ்வாறு விக்கிரகங்களுக்கு ஏற்பட்ட குற்றத்தை நீக்கும் முறையைக் கூறிய ஆகமங்கள்.

சிலா விக்கிரகமே எல்லோரும் வழிபடுவதற்கு ஏற்றது என்றும் கூறியுள்ளது. இது சிறப்பாக காமிகாமத்தில்

"சைலஜம்ச ப்ரஹ்மானாதி சதுர்வானாதி ஸாரேன சதுர்விதம"

சுப்பிரபேதாகமத்தில் "எல்லோருமே கருமைச் சிலையை வழிபடலாம்" என்று கூறப்பட்டுள்ளது.


"ஸர்வேஷாந்து சிலாக்ருக்ஷணா ஸர்வஸம்பத் கரிஸ்ம்ருதா"

இதைச் சிற்ப ரத்னாகரம் எனும் சிற்ப நூல்

"சூத்திரர்களுக்கு கருமைச் சிலையே ஏற்றது
சூத்ர..... கிருக்ஷ்ணாச்ச"

என்று கூறுகின்றது. எனவே, இவ்வாறு ஆகமங்கள் விதிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி இறைவனைப் பிரதிஷ்டை பண்ணி இறையருள் நிறைபெற்று முறைவாழ மறைபோற்றும் இறைவனையே வேண்டுவோம்.

சுபமஸ்து. அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்.



சிவனது மூர்த்தத்தில் அர்த்த நாரீஸ்வரர் வழிபாட்டுச் சிறப்பு

சைவப்புலவர்
பா. சர்வேஸ்வரக் குருக்கள்
(லண்டன்) B.A (Hons)

உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களையும் ஆண், பெண் என்ற இரு வேறு நிலைகளில் நாம் காணமுடியும். ஆனால் அவை இருவேறுபட்ட நிலையாக இருந்தாலும், அவை இரண்டினதும் சேர்க்கையால் தான் உலக இயக்கம் நடை பெறுகிறது.

இலக்கியங்களில் இரவு பெண்ணாகவும், பகல் ஆணாகவும் வர்ணிக்கப்படுகின்றது. சூரியன் தந்தையாகவும், சந்திரன் தாயாகவும் கூறப்படுகின்றது. ஆகாயத்தை ஆணாகவும், பூமியைப் பெண்ணாகவும் வேதம் போற்றுகிறது.

இவ்வாறாக ஆண் – பெண், இரவு – பகல், வளர்பிறை – தேய்பிறை, உத்தராயணம் – தக்ஷிணாயம், வலம் – இடம், ஏற்றம் – இறக்கம், நேர் – எதிர் போன்ற பல இரட்டைப் பொருட்கள் இணைந்து ஒரு முழுச் செயலை நிறைவேற்றுகின்ற திறனை நாம் அறியலாம்.

மனிதர்கள் மாத்திரமன்றி விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலிய அனைத்து ஜீவராசிகளிலும் ஆண், பெண் என இருபால் பண்புகள் இருக்கின்றன. இவற்றிற்கு முன்னோடியாகத் தெய்வங்கள், தேவர்கள் என்பவர்களிடையேயும் ஆண், பெண் வேறுபாட்டுத் தன்மை இருந்துள்ளது என்பதை சமய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு யாம் வரலாற்று ரீதியாக அறியலாம்.

வடமொழி இலக்கியங்களில் அர்த்த நாரீஸ்வரர்

கணவனின் ஒருபாகமே மனைவி எனும் கருத்துப் பிராமணங்களில் காணப்படுகிறது. சதபதப் பிராமணம் பின்வருமாறு கூறுகின்றது: ஆத்மன் (பிரபஞ்சத்தை உள்ளடக்கிய புருஷன்) தனிமையாக மகிழ்ச்சி அடையமாட்டான். எனவே தன்னிலிருந்து பெண்ணைத் தோற்றுவித்தான். தனியாக இருந்த ஆத்மனிட மிருந்து ஆண்டவனின் தோழமைக்காகவே பெண் தோற்றுவிக்கப் பட்டாள். எனவே பதியாகிய கணவன் பாதியாகவும், பத்தினியாகிய மனைவி பாதியாகவும் "பதிபத்னீ" எனப் போற்றப்படுகின்றனர். பதிபத்னீ இருவரும் சேர்ந்த நிலையைத் தம்பதி என்ற சொல்லால் வேதங்கள் போற்றுகின்றன. தம்பதி எனின் கணவன் – மனைவி ஆகிய இருவரும் சேர்ந்திருக்கும் நிலையாகும்.

இவ்வாறு இணைந்திருந்து உலக நன்மைக்கும், தோற்றத் திற்கும் மூல வடிவமாகக் காணப்படும் திருவருட்கோலமே "பெண்பாதித் தலைவன்" எனப்படும் அர்த்தநாரீஸ்வர வடிவமாகும். உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இன்பம் பெறவும், மகிழ்வுடன் வாழவும் அர்த்த நாரீஸ்வரர் தத்துவ மூர்த்தி யாக விளங்குகின்றார்.

சைவ சித்தாந்த நூல்கள் இறைவனின் வடிவத்தைச் சொரூப நிலை, தடத்த நிலை என இரண்டாகக் கூறுகிறது. இவற்றை முறையே இயல்பு நிலை, சார்பு நிலை எனக் கூறலாம்.



இயல்பாகப் பிரகாசமுடைய சக்தியைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தனியாக இறைவன் இருக்கும் நிலை அல்லது சொரூப நிலை எனப்படும். இந்நிலையில் எவரும் இறைவனை உணர முடியாது.

எனவே உலக ஆன்மாக்களின் நன்மை கருதித் தன்னை விரிவுபடுத்திய நிலை சார்பு நிலை அல்லது தடத்த நிலையாகும். ஞானமயமான சக்தி பராசக்தி எனப்படும்.

சக்திதன் வடிவேதென்னிற் தடையிலா ஞானமாகும் என்பது சித்தியார் வாக்கு. இப்பராசக்தியும் இயல்பு நிலையில் ஆன்மாக்களால் அறியப்படாமலே இருக்கும். எனவே ஆன்மாக்கள் மீதுள்ள கருணையினால் தன்னுள் அடக்கப்பட்ட சக்தியை வெளிப்படுத்திக் காட்ட இறைவனும் இறைவியும் எடுத்த சிவசக்தி வடிவமே அர்த்தநாரீஸ்வர வடிவமாகும்.

சிவன் எந்த வடிவங்கள் எடுக்கிறானோ சக்தியும் அந்த வடிவங்களை எடுப்பாள் என்பதைச் சித்தியார் பின்வருமாறு கூறும்.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம்
அவளும் நிற்பள்"

இறைவனது சில மூர்த்தங்கள் அறுபத்து நான்கு எனச் சிவபராக்கிரமம் எனும் நூல் விபரிக்கின்றது. இவற்றுள் மகேஸ்வர வடிவங்கள் இருபத்தைந்தும் அடங்கும்.

இவ்விருபத்தைந்து மூர்த்தங்களுள் அர்த்தநாரீஸ்வர வடிவம் சிவசக்தி இணைந்த வடிவமாகப் போற்றப்படுகிறது.

சொல்லும் பொருளும் எனப் பிரிவுபடாமல் நிற்கும் நிலையைக் காளிதாசர் "வாகர்த்தாவிவ சம்விருத்தௌ" எனக் கூறிப் பார்வதி பரமேஸ்வரௌ" என இறைவனையும் இணைத்துப் போற்றுகிறார்.

ஒருசெயல் எம்மால் செய்து நிறைவேற்றப்படவேண்டுமெனின் அச் செயலைச் செய்து நிறைவேற்ற வேண்டிய ஆற்றல் எமக்கு இருக்க வேண்டும். ஒரு செயலைத் சொல்லலாம் ஆனால் செய்து முடிக்க இயலாது, அதற்கு ஆற்றல் வேண்டும். இதனை

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்" என்றார் வள்ளுவர்.

சிவனைச் செயலாகவும், சக்தியை ஆற்றலாகவும் நாம் உணரலாம். செயலும் ஆற்றலும் இணைந்து ஒரு காரியத்தை வெற்றியடையச் செய்யும் என்பதை

சித்தத்திலே நின்று சேர்வதுணரும்
சிவசக்தி தன் புகழ் செப்புகின்றோம்"

என்று பாரதியாரும் கூறினார்.

சிவனை ஆக்கம் எனக் கொண்டால், அவ் ஆக்கத்தை நிறைவேற்றும் ஊக்கமாகச் சக்தியை நாம் கூறலாம்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை" என்றார் வள்ளுவர்.

ஊக்கம் உடையவனுடைய செயல் குறித்த இலக்கினை அடையும் என்பது குறள்

"ஆதிப் பரம் பொருளின் ஊக்கம் அதை
அன்னை எனப் பனிதல் ஆக்கம்"

எனப் புரட்சிக் கவிஞர் பாரதியார் சிவசக்திப்பிணைப்பை மேலும் விபரிக்கிறார். எனவே செயலும், ஆற்றலும், ஆக்கமும், ஊக்கமும் இணைந்த தத்துவத்தை அர்த்தநாரீஸ்வர வடிவம் குறிக்கிறது.

தேவி பாகவதம் என்னும் நூலில் தேவியானவள் பின்வருமாறு கூறுகிறாள்:– "எனக்கும் பரமசிவனுக்கும் எப்போதும் பேதமில்லை. நாங்கள் இருவரும் ஒன்றே" இக்கூற்று இருவடிவங்களும் இணைந்து ஒரு வடிவமாகப் போற்றப்படும் நிலையை உணர்த்துகிறது.

அர்த்தநாரீஸ்வர வடிவத்திற்குச் சமமாகச் சிவலிங்க வடிவத்தை நாம் ஒப்பிட முடியும். லிங்கம் சிவனாகவும், பீடம் சக்தியாகவும் கூறப்படுகிறது. உலகத்தின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமான வடிவமே சிவசக்தி வடிவமாகப் போற்றப்படும் சிவலிங்க வடிவமும், அர்த்த நாரீஸ்வரவடிவமுமாகும்.

காமிகாமம் அர்த்தநாரீஸ்வரரை "உமார்த்தர்" என்ற பெயரால் குறிப்பிடுகிறது. விஷ்ணு தர்மோத்திரம் என்ற நூல் அட்டமியில் சிவனையும் நவமியில் அம்பாளையும் இரண்டும் சேர்ந்த நாளில் உமாமகேஸ்வரனையும் வழிபடவேண்டும் எனக்கூறுகிறது.

ஆதிசங்கர் சிவானந்தலகரி என்னும் நூலில், சிவனும் சக்தியும் இணைந்து பக்தர்களுக்கு உண்மையான பலன்களை வழங்குபவர்களாகவும் தவத்தின் பயனாக விளங்கி மூவுலகுக்கு நன்மை செய்பவர்களாகவும், தியானிக்கும் போது மீண்டும் மீண்டும் தோன்றுபவர்களாகவும், ஆனந்தத்தோடு விளங்கும் ஞான ரூபத்தை உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள் எனக் காப்புச் செய்யுளில் அர்த்த நாரீஸ்வரர் வடிவத்திற்கு விளக்கம் சொல்கிறார்.

புராணங்களில் லிங்கபுராணம், கூர்மபுராணம் என்பன சிவசக்தி இணைந்த வடிவத்தைப் போற்றுகின்றன.

லிங்கபுராணம் "பீடம் மகாதேவி, லிங்கம் மகேஸ்வரன்" என்று கூறும். சிவபுராணம் பீடம் அம்பாள் என்றும், லிங்கம் சிவன் என்றும் கூறுகிறது. சிந்து வெளிகாலத்திலும் சிவசக்தி வடிவமான சிவலிங்க வழிபாடு இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு வடமொழி இலக்கியங்களிலும், புதைபொருள் சின்னங்களிலும் அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் தத்துவத்தையும் தொன்மையையும் காணலாம்.

தமிழ் இலக்கியங்களில் மங்கை பங்கன்

தமிழ் இலக்கியங்களிலும் பல இடங்களில் சிவனும் சக்தியும் இணைந்த வடிவத்தை எடுத்து விபரிக்கின்றன.

எமது சமயமும் தமிழும் நீண்ட காலத் தொடர்புடையவை. தொன்மையானவை. இரண்டும் இணைந்து எமது சமயப் பண்பாட்டை வளர்த்து வந்துள்ளன.

உமையொருபாகன் பற்றிய சிந்தனையை அகம், புறம், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம் என்பன சிறப்பாகக் கூறுகின்றன.

புறநானூறு தனது கடவுள் வாழ்த்தில் சிவசக்திப் பிணைப்பை காட்டுகின்றது.

"பெண்ணுரு ஒருதிறன் ஆகிநின்று அவ்விரு
தன்னுள்ளடக்கி கரக்கிலும் கரக்கும்"

பிற்காலத்தில் சொரூபநிலை, தடத்தநிலை எனப் புகழ்ந்துரைக்கப்பட்ட சித்தாந்தச் செய்தியின் மூலவடிவத்தைப் புறநானூறு காட்டியுள்ளது.

சக்தியாகிய பெண்ணுடன் சேர்ந்து நின்று சார்புநிலையில் இறைவன் நிற்பான். அல்லது அச்சக்தியைத் தன்னுளடக்கி இயல்பு நிலையாகிய சொரூப நிலையிலும் இறைசக்தி நிற்கும் என்பதை யாம் அறியலாம். இத்தத்துவம் மேற்படி பாடலில் அமைந்துள்ளது. இது சிவசக்தி வடிவத்தையே குறிக்கிறது.

ஐங்குறுநூறு தனது கடவுள் வாழ்த்தில் "நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இருதாள் நிழற்கீழ் மூவகை உலகும் முகிழ்ந்தன முறையே" எனக் கூறுகிறது.

மூவகை உலகும் உமைபாகத்தன் திருவடிகளிலிருந்து தோற்றம் பெற்றன என்பது இதன் கருத்து. எப்படி லிங்கவடிவம் உலகத்தோற்றத்திற்குக் காரணமானதோ அதே தத்துவத்தை அர்த்தநாரீஸ்வர வடிவம் உணர்த்துகிறது என்பதை மேற்படி பாடல் உறுதி செய்கிறது.

கலித்தொகை தனது குறிஞ்சிக் கலியில் "ஈர்ஞ்சடை அந்தணன் உமையமர்ந்து உயர்மலை இருந்தனன்" என இறைவன் உமையோடு இருந்த சிறப்பைக் கூறுகிறது. சிலப்பதி காரம் வேட்டுவவரியில் –

"கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்தவே நிற்பாய்"

என மங்கை பாகனாக இறைவன் வீற்றிருந்து மெய்யன்பர்கள் புகழ்பாடுவதைக் கேட்பார் எனக் கூறுகிறது. மேலும்

"பாகம் ஆளுடையான்
திங்கள் வாழ்சடையான்"

எனச் சிவசக்தி இணைப்பைக் கூறுகிறது.

உலகப் பொதுமறையாக விளங்கும் திருக்குறளில் முதற்குறள் சிவசக்தி வடிவத்தின் இணைப்பை உடையதாகக் கருத முடியும்.

இறைவனைப் பகவன் என்றும், சக்தியை ஆதியென்றும் நாம் குறிப்பிடலாம். ஆதிபகவன் முதற்றே உலகு என வள்ளுவன் கூறியதை உற்று நோக்கின் அர்த்த நாரீஸ்வரர் தத்துவம் புலப்படும்.

ஆதி, பகவன் என்பன இரு சொற்கள் ஆனால் இரண்டும் இணைந்தே ஒன்றாக விளங்குகின்றன. இவ்வாறே சிவன் சக்தி இரண்டும் இணைந்து ஒன்றாக விளங்குகின்றன. அத்துடன் உலகு தோற்றம் பெறவும் இயங்கவும் இவ் இரண்டின் இணைப்பும் அவசியமாகும். எனவே "ஆதிபகவன் முதற்றே உலகு" எனக் கூறினார்.

தக்கயாகப் பரணிபாடிய ஒட்டக்கூத்தர் சக்தி தத்துவத்தைச் சிவனுடன் இணைத்து "தேவீ நீ உன் தலைவனை ஒரு பாதியாகக் கொண்டு மனம் மகிழ்கிறாய்" எனப் பின்வருமாறு பாடுகிறார் :

"ஓரோர் கூறும் ஒருவராக நேராகி உடைய
கேள்வர் ஓர் பாதி ஒருகாதல் கூர்வானே"...

இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் மாதொருபாகன் பற்றிய சிந்தனை சிலவற்றை நாம் காணலாமீ.

பக்தி இலக்கியங்களில் உமையொருபாகன்

திருமுறைகள் இறைவனும் இறைவியும் சேர்ந்திருக்கும் நிலையைப் புகழ்ந்து பாடுகின்றன.

சம்பந்த சுவாமிகள் தனது பாடல்கள் பலவற்றில் உமையொரு பங்கனைப் பாடுகிறார்.

"உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்" என்றும்

"வேயுறு தோழிபங்கன்"

"செந்துவர் வாயுமை பங்கன்"

"வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த"

எனவும் இறைவன் உமையோடு இருந்து அருள் நல்கும் காட்சியைப் பாடினார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ பெண்ணில் நல்லாளொடும் வீற்றிருக்கும் பெருந்தகையைக் கண்ணால் கண்டு தொழ வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

அப்பர் சுவாமிகள் இணையுருக்காட்சியைச் சிறப்பாகப் புகழ்கிறார்

"உரு இரண்டும் ஒன்றோடொன்று ஒவ்வா அடி"

என அர்த்த நாரீஸ்வரர் பாதப் பெருமையைப் பேசுகிறார்.

இறைவன் எமது துன்பத்தைக் குறைப்பதற்கு இணைவடிவ மாகவே வருவார் என்பதை "மதுவரி கொன்றை துன்னு சடை பாகம் மாதர் சூழல் பாகமாக வருவார்" எனக் கூறியருளினார்.

இறைவன் பெற்ற மகளாக இருந்த உமையம்மையார், இறைவனிடம் இருந்து பிரிந்து தவம் செய்து அவரது இடப்பாகம் பெற்ற வரலாற்றைத் தனது பாடல் ஒன்றில் பாடுகிறார். "பெருந்திரு இமவான் பெற்ற பெண் கொடி பிரிந்த பின்னே வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்த மன்னும் அமர்ந்திடு மேனிதன்பால் அங்கொருபாகத்திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"

இந்தியத் திருத்தலங்கள் பல உள. அத் தலங்களின் பல இடங்களில் அர்த்தநாரீஸ்வர சிற்பங்கள் ஓவியங்கள் நிறைந்துள்ளன. காஞ்சிபுரத்திலும் ஓர் அர்த்தநாரீஸ்வர சந்நிதி உள்ளது.

திருவெற்றியூர் எனும் தலத்தில் பாகம் பிரியாள் என்னும் பெயருடனும் ஒரு சந்நிதியுண்டு. இத்தலத்தின் மீது பாடல் பாடிய அப்பர் சுவாமிகள் சிவனுடைய மூன்று கண்களில் ஒன்றரைக்கண் அம்பிகையினுடையது எனச் சுவை படப் பாடுகிறார். இதனால் சிவனை "ஒன்றரைக் கண்ணன்" எனக் குறிப்பிடுகிறார்.

இன்று அரைக்கண்ணுடையார் யாரும் இல்லை இமைய
மென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணும் கொடுத்து உமையாளையும் பாகம்
வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூருறை உத்தமனே.

உமாதேவியார்க்குப் பாதி இடம் கொடுத்த காரணத்தால் சிவனுக்கு ஒன்றரைக்கண், அம்பாளுக்கு ஒன்றரைக்கண் எனப் பகுத்துச் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும் இன்னுமொரு பாடலில் "இறைவனே வில் ஏந்திய கை இடதுகை. அது அம்பாளுடையது, வில்லின் நாண் வலித்த வலது கரம் உன்னுடையது. இவ்வாறு இருக்கத்திரிபுரதகனம் செய்த பெருமை உனக்கெவ்வாறு சேரும் என்பதை இயம்புவாயாக" என

வினவுகிறார். எனவே சிவனும் சக்தியும் சேர்ந்தே ஒரு செயலைச் செய்து முடிக்க முடியும் என முடிவு கூறுகிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பல பாடல்களில் மங்கை பங்காளனைப் பாடி மகிழ்கிறார்.

"மங்கை பங்காளனை மாசிலா மணியை"

"மங்கையோர் கூறுடையான்"

"உமையோர் கூறுடையான் உருவே திருக்காளத்தியார்"

என்று பல இடங்களில் உமாபதியைப் போற்றுகிறார்.

திருவெண்ணை நல்லூரில் பாடிய பதிகத்தில் –

"மழுவாள் வலன் ஏந்தி மறை ஒதிமங்கைபங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுனதொழிலே"

என்று பாடி மங்கை பங்காளனைத் தொழுவதால் பல துயர்கள் நீங்கும் எனப் பாடுகிறார்.

திருவாசகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் சிவசக்தி பெருமையைப் போற்றிப்பாடுகிறார். திருச்சாழல் என்னும் பகுதியில் சிவன் சக்தியோடு சேர்ந்திருக்காவிட்டால் உலக வாழ்க்கையில் உயிர்கள் ஆண், பெண் தொடர்பின்றி உயர்வடையாது என்பதைத் "தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடி, பெண்பால் உகந்தின்னேற் பேதாய் இருநிலத்தோர், விண்பாலியோ கெய்தி விடுவர் காண் சாழலோ

திருபள்ளியெழுச்சிப் பாடலில் இறைவனும் இறைவியும் இணைந்து ஒவ்வொரு மெய்யடியார்களுடைய சிறிய குடில்கள் தோறும் எழுந்தருளிய சிறப்பினை –

"பந்தனை விரலியும் நீயும் நின்னடியார்
பழங்குடில் தோறும் எழுந்தருளிய பரனே" என்று கூறுகிறார்.

திருவெம்பாவைப் பாடலில் அர்த்தநாரீஸ்வரர் வடிவமாக மாத்திரமன்றிப் பல்வேறு தனிவடிவமும் தாங்கி எம்மை வந்து காப்பான் என்பதை "பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்" எனவும் இறைவனும் இறைவியும் சேர்ந்திருந்து திருவருளாகிய அருள் நீரைத் தருவது போல் காட்சிதரும் பொய்கையில் நீராடுங்கள் எனப் பாடுகிறார். "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடுவில் புகப்பாய்ந்து" எனவும் கூறுகிறார்.

எம்மையாழும் சக்தியாகிய உமையம்மையாரைவிட்டு பிரியாதவன் சிவன் என்பதை "நந்தம்மை ஆளுடையான் தன்னிற் பிரிவிலா எங்கோமான்" என இறை சக்தி மகிமையைப் பாடுகிறார்.

இம்மங்கைப் பாகவடிவமே தொன்மைக் கோலம். அக்கோலத்தைக் கண்டு அரச வண்டே நீ குளிர்ந்து ஊதுவாயாக எனத் திருக்கோத்தும்பியில் பாடுகிறார்.

"தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெண்நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடை தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பி"

எனக் கூறுவதன் மூலம் அர்த்தநாரீஸ்வர வடிவச் சிறப்பம்சத்தையும் அவ்வடிவத்தின் பழம் பெருமையையும் உணர்த்துகிறார்.

திருப்பொற்சுண்ணம் என்னும் பகுதியில் இறைவன் மங்கள நீராடுவதற்காகத் தயாரிக்கப்படும் பொடியை –

"மங்கை பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடகமாமலை அன்னகோவுக்
காடற்பொற்சுண்ணம் இடித்த தாமே"

எனப்பாடி மங்கை பங்கினன் திருமுழுக்காடப் பொற்சுண்ணம் இடிப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறு சமய குரவர்கள் நால்வரும் அர்த்தநாரீஸ்வர வடிவத்தின் மேன்மையையும் சிறப்பையும் பாடியருளினார்கள்.

ஏனைய திருமுறை ஆசிரியர்களும் இவ்வடிவத்தின் பெருமையைப் பாடியுள்ளனர். சேந்தனார் திருவிசைப்பாவில்

"மங்கையோர் பங்கத் தெய்வரு மருந்தை
வருந்தி நான் மறப்பனோ பிணியே"

என இவ்வடிவம் எமது பிணியை நீக்கும் எனப்பாடுகிறார். திருப்பல்லாண்டில்

"அன்னநடைமடவாள் உமைகோள்"

எனவும் பாடிச் சிவனையும் சக்தியையும் இணைக்கிறார்.

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் உமைபாகனை உயர்த்திப் பல இடங்களில் கூறுகிறது. இறைவன் ஐந்தொழிலைச் செய்வதற்காக உமைபாகனாக நடமாடுகிறார் என்பதை

"ஆன தொழிலருளாலைத் தொழில்செய்தே
தேன்மொழிபாகன் திருநடமாடுமே"

எனவும் சிவனுக்குப் பாகமாக இருந்து ஆன்மாக்களுக்கு நன்மை செய்கிறார் என்பதை

"அதுவிதுவென்றவமே கழியாத
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லானைப்
பதிமதுமேவிப் பணிய எல்லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிடலாமே"

புலனொடுக்கத்துடன் சிவசக்தியை வழிபட்டால் சகல சித்திகளும் கைகூடம். அறிவு பெருகும்.

"நெறியதுவாய் நின்ற நேரிழையாளைப்
பிறிவது செய்யாது பிஞ்ஞகனோடுங்
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவொடும் அங்கே அடங்கிடலாமே"

உலக இன்பமும் பேரின்பமும் பெறும் மூர்த்தமாக அர்த்தநாரீஸ்வர வடிவம் போற்றப்படும்.

பரமனும் அம்மையும் சேர்ந்திருக்கும் அக்காட்சியைக் கண்டு தொழுதால் ஞானம் கைகூடும் என்பதை

"எந்தை பரமனும் என்னம்மை கூட்டமும்
முந்தவுரைத்து முறைசொல்லின் ஞாமாம்"

எனத் திருமூலர் கூறுவார். அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின் பெருமையை மற்றும் ஒருபாடலிலும் பாடுகிறார். சிவசக்தி

சேர்ந்திருக்கும் உருவ வழிபாட்டால் சிவனது அருளும் சக்தியினது அருளும் வேறுபாடின்றி அருளாகவும் ஆற்றலாகவும் எம்மை வந்தடையும்.

சத்தன் அருள்தரின் சக்தி அருளுன்டாஞ்
சக்தி அருள்தரின் சத்தன் அருளுண்டாம்
சக்தி சிவமாம் இரண்டும் தன்னுள்வைக்க
சக்தியும் என்சித்தித் தன்மையுமாமே

சிவனும் சக்தியும் இணைந்திருந்து நடத்தும் திருவிளையாடலே உலகம் என்பதை

"சக்தி சிவன்றன் விளையாட்டுத் தாரணி
சக்தி சிவமாம் சிவன் சக்தியாம்..."

இவ்வாறு திருமந்திரத்தில் காணப்படும் அர்த்தநாரீஸ்வர தத்துவப் பெருமைகளைக் காணலாம்.

பெரியபுராணத்தில் சேக்கிழாரும் உமைபாகனைப் புகழ்கிறார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவாலாய்த் திருக்கோயிலில் யாழிசைத்த முறையினைக் கூறும்போது

ஆலயவாயமர்ந்தார் கோயில் வாயிலை அடைந்து நின்று...
... தேவனார் குழலாள் பாகர் பாளிகன் யாழிவிட்டார்.

எனவரும் பாடலில் குறிப்பிடுகிறார். அடியார் திருக்கூட்டச் சிறப்பைக் கூறும் போது

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கிலும்
மாதோர் பாகர் மலர்த்தான் மறப்பிலார்
ஒதுகாதல் உறைப்பின் நெறி நின்றார்
கோதிலாத குணப்பெருங் குன்றனார்"

என இறைவனும் இறைவியும் இணை பிரியாத திருக்கோலத்தை மறக்காதவர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள் எனக்கூறி மாதோர் பாகவடிவம் வீரமும் தரவல்லது எனச் சுட்டுவதைக் காணலாம்.

பரவையார் உமாதேவியார் தோழி என்பதைக் குறிக்கும் போது

"சம்புவின் பங்கினாள் திருச்சேடி பரவையார்"

எனவும் புற்றிடம் கொண்டாரைப் பணிந்து சங்கிலியாரை மணம் முடித்துக் தருமாறு சுந்தரர் வேண்டுகின்ற செய்தியை

"மங்கை ஒருபால் மகிழ்ந்துதவும் அன்றிமனிநீர்
முடியின்கண்..."

எனக்கூறி அர்த்தநாரீஸ்வர வடிவத்தைக் கூறுகிறார்.

அதாவது இறைவன் இறைவியொடு மகிழ்ந்துள்ளார். சுந்தர் சங்கிலியாரை விட்டுப் பிரிந்துள்ளார். எனவே தன்னைச் சங்கிலி யாருடன் சேர்த்து விடுமாறு பாடுகிறார். பிரிந்தவர்களைச் சேர்ப்பதற்கு அர்த்த நாரீஸ்வர வடிவத்தைக் குறிப்பிட்டுச் சேக்கிழார் பாடும் சிறப்பினைக் காணலாம்.

எனவே குடும்பத்தில் அன்பு, அமைதி நிலவும் உமைபாகன் வடிவ வணக்கம் பொருத்தமானதாகும்.

இவ்வாறு பெரியபுராணம் சிவதேவி பற்றிய பல சிந்தனை களைச் சொல்கிறது...

அருணகிரிநாதர் தனது பாடல்களில் உமாநாயகனைப் பாடும் பல சந்தர்ப்பங்களைக் காணலாம். வேர்வாங்கு வகுப்பு எனும் நூலில்

"அங்கதர் வாமாக்கனை" எனவும், கந்தரலங்காரத்தில்

"ஒருவரை பங்கில் உடையான்" எனவும் குறிப்பிடுகிறார்.

திருப்புகழ் பாடல்களிலும் பல இடங்களில் சிவசக்தி பெருமையைப் போற்றுகிறார்.

"அரனார் இடங்கொள் மலைமாது"

"இறைவன் பங்கில் உமை"

"சிவனொடு பக்கத் துறைந்த மங்கை"

"நாதரிடமேவு மாது"

"கண்ணுதல் இடத்திலுற்ற புண்ணிய ஒருத்தி"

இவ்வாறு பல பாடல்களில் மங்கை பாகனைப் பாடுகிறார்.

சித்தாந்த சாஸ்திரங்களும் மாதொரு பாகனும்

சித்தாந்த சாஸ்திரங்களும் அம்மை அப்பனைப் பெருமையாகப் பேசுகின்றன. திருக்களிற்றுப்படியார் என்னும் நூல் ஆகமங்கள், ஆறு சமயங்கள், யோகங்கள் யாவும் தோன்றுவதற்குப் காரணமான திருவடிவம் உமை ஒரு பாக வடிவமேயாகும். அவ்வடிவம் இல்லை எனில் மேற்கூறப்பட்டவை தோற்றம்பெறாது என்பதை –

"ஆகமங்கள் எங்கே ஓதுசமயம்தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே – பாகத்
தருள் வடிவம் தானும் ஆண்டிலரேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு" எனக் கூறுகிறது.

உலகில் எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாக மாதொரு பாகனார் தான் வருவார் என்பதைச் சிவஞானசித்தியார் எனும் நூல் கூறும்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகிய
மாதொருபாகனார் தான் வருவார்"

உலகில் உள்ள அனைத்தும் சிவசக்தி மயம் என்பதை

"சக்தியுஞ் சிவமாகும் சக்திதான் சத்தனுக்குச்
சக்தியாஞ் சத்தன் வேண்டிற்றெல்லாமாஞ்சக்தி தானே"

இவர்கள் இருவரும் இணைபிரியாமல் சேர்ந்து இருந்தாலும் சிவன் பிரமச்சாரி என்றும் சக்தி கன்னி என்றும் கூறுகிறது.

"சிவன் சக்தி தன்னை ஈன்றுஞ் சக்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திடுவரும் புணர்ந்திங்குலகுயிர் எல்லாமின்றும்
பவன் பிரமச்சாரியாகும் பான்மொழிகன்னியாகும்"

உலகில் உள்ள அனைத்தும் இவ்வாறு இருமையாக இருந்தாலும் இணைந்து ஒருமையாகச் செயற்படும் திறமைதனை

"சக்தியும் சிவமுமாய் தன்னையில் வுலகமெலாம்
ஒத்தொவ்வாணும் பெண்ணும் உயர்குணகுனியுமாகி"
எனச் சித்தியார் எடுத்துரைக்கிறது.

சிவனது அருளாகச் சக்தியைச் சித்தியார் போற்றுகிறது.

"அருளது சக்தியாகும் அரன்றனக் கருளையின்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"
என இரண்டின் பிணைப்பை எடுத்துக்காட்டுகிறது.

இறைவன் ஆன்மாக்களின் பொருட்டுச் சக்தியோடு வேரறக் கலந்து நின்று அருள் பாலிக்கும் முறைமையைத் திருவருட்பயன்

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"
என்று கூறுகிறது. இவ்வாறு இறைவனின் அர்த்த நாரீஸ்வரப் பெருமைகளைப் பல நூல்கள் வாயிலாக அறிகின்றோம்.

அபிராமிப் பட்டர் காட்டும் அம்மை அப்பன்

அபிராமி அம்மனின் உபாசகராக இருந்த அபிராமிப் பட்டர் அவர்கள் பதிகத்திலும் அபிராமி அந்தாதியிலும் உமைபாகனைத் துதிக்கிறார்.

"அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகவானி"
என்றும் அபிராமி அம்மை பதிகத்திலும், சொல் பொருள் என வேறுபடாமல் நிற்கும் அர்த்த நாரீஸ்வர வடிவத்தை

"சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே" எனவும்

"வாமபாகத்தை வவ்வியவளே"

"வவ்விய பாகத்திறைவரும் நீரும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமே"
என்றும் கூறுவதன் மூலம் மங்களவடிவினராக இருக்கும் அர்த்தநாரீஸ்வர வடிவத்தைக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இன்னொருபாடலில்,

"வேலிப்பிரான் ஒருகூற்றை மெய்யில் பறித்தே
குடிபுகும் பஞ்சபான பயிரவியே" என்று பாடுகிறார்.

"உமையும் உமையொரு பாகமும் ஏகஉருவில்
வந்திங் எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்"
எனப்பாடுவதின் மூலம் அன்பின் வடிவமாகச் சிவசக்தி இணைப்பைக் குறிப்பிடுகிறார்.

"உறைகின்ற நின்திருக்கோயில் நின் கேள்வர் ஒருபக்கமோ"
என்ற வரி மூலம் சிவனுடைய ஒரு பாகத்தைக் கோயிலாகக் கொண்டு சக்தி உறைகிறாள் என விளக்குகிறார்.

எனவே அர்த்தநாரீஸ்வர வடிவம் ஒற்றுமையைப் பேணி அன்பை வளர்க்கும் திருவுருவமாகும். அர்த்தநாரீஸ்வரர் போல் ஒரே உருவில் இல்லாத பல மக்கள் வடிவங்கள் உண்டு. உமாமகேஸ்வரர், உமாசகித சந்திரசேகர மூர்த்தி, கல்யாண சுந்தரர், மீனாட்சி சுந்தரேசர் போன்ற பல தெய்வ உருவங்கள் அன்பின் வடிவங்களாக அமைகின்றன. இவை போக வடிவங்கள் எனப்படும்.

வீரபத்திரர், பிக்ஷடனர் போன்ற வடிவங்கள் கோர வடிவங்கள் எனப்படும். தக்ஷணாமூர்த்தி யோகவடிவம் எனப்படும். அர்த்த நாரீஸ்வர வடிவம் போக வடிவமாகும். இது சிவபோக வடிவம் ஆகும். இவ்வழி பாட்டின் மூலம் யாம் சுகபோகங்களையும், சிவபோகங்களையும் பெறலாம்.

இன்றும் இறைவர் தாம் மாதொருபாகனாகக் காட்சியளிக்கும் ஒரு சிவாலயம் உண்டு. "ரிஷிவந்தியம்" எனும் கிராமத்திலுள்ள தேவலாயத்தில் சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கும் சிவலிங்கத்தில், தேன் அபிஷேகம் நடைபெறும் வேளையில் சிவன் அர்த்த நாரீஸ்வரராகத் தம்மைக் காண்பிக்கும் விந்தையை நேரடியாகக் காணலாம்.

அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் - தோற்றம்

இம்மூர்த்தம் தோற்றம் பெற்றதற்குப் புராணங்கள் பல காரணங்களைக் கூறுகின்றன. அவற்றுள் தல புராணங்களாக விளங்கும் அருணாசலபுராணம், திருவான்மியூர்ப்புராணம், கேதாரேஸ்வர புராணம் என்பவை கூறும் காரணத்தை நாம் நோக்கலாம்.

அருணாசல புராணம் கூறும் போது அம்பிகையானவள் தான் ஈசனோடு இணைபிரியாமல் இருக்க வேண்டும் என்பதை விரும்பித் தவம் இருந்து அப்பேற்றினைப் பெற்றாள். அதற்குக் காரணம் ஒரு முறை பார்வதி அம்மை இறைவனது கண்களைத் தனது கைகளினால் மூடினாள். அவ்விருகண்களும் சூரியன், சந்திரன் ஆகையால் அவை மூடப்படவே உலகம் முழுவதும் இருளடைந்தது. இது ஈசுவரனுக்கும், ஈசுவரிக்கும் ஒரு கணப்பொழுதாக இருந்தாலும் உலகிற்கு நெடுங்காலமாகவே இருள் சூழ்ந்தது. இதனால் உலகமெங்கும் தடுமாற்றம் ஏற்பட்டது.

உலகத்தில் தீமை விளையத் தான் காரணமாக இருந்ததை எண்ணி, அதற்காக அம்பிகை தனது குற்றத்தைப் போக்க காஞ்சிபுரத்தில் அவதரித்து லிங்கபூசை செய்தாள். அப்போது வெள்ளப் பெருக்கு ஏற்படவே அம்பிகை தான் பூசை செய்த லிங்கம் அழியாமல் அதனை இறுகக்கட்டியணைக்கும் போது இறைவன் காட்சிகொடுத்தார்.

அப்போது அம்பாள் அவரிடம் தனக்கு இடப்பக்கம் தரும்படி வேண்டியதாக வரலாறு உண்டு.

"கண்ணுதல் உனக்கு வேண்டும் வரமெது கழறுக என்றான்
எண்ணுதல் பிரிதொன்றில்லையிடல் புறம் கருதி என்றான்"
அம்பாளுக்கு இடப்பக்கம் தருவதாக வரமளித்த அப்பேற்றினை அருணாசலத்தில் தருவதாகக் கூறினார்.

அருணாசலத்தில் தோன்றிய இறைவன்

"பெண்ணும் ஆணுமாய் உலகுயிர்ப் பொருளெல்லாம்
பிரிதோர்
அண்ணதாகிய பீடமும் இலிங்கமும் ஆனோம்
என்னும் நீயென நாமென இரண்டில்லை மரமும்
உன்னலாகிய வரமும் நிகர்த்துடன் உறைவோம்"

எனத் தனது இடப் பாகத்தை அருளினார். மரமும் மரத்தின்கண் உள்ள வைரத் தன்மையும் போல பிரிவின்றிச் சேர்ந்திருப்போமெனச் சிவசக்தியின் தொடர்பினைக் புலப்படுத்தினார்.

திருவான்மியூர்ப் புராணமும் கேதாரீஸ்வர புராணமும் பிருங்கி முனிவரோடு தொடர்புபடுத்தி அர்த்தநாரீஸ்வரர் பெருமையைக் கூறுகிறது.

சிவனும் சக்தியும் அர்த்தநாரீஸ்வரராக வடிவமெடுத்து இருந்தபோது பிருங்கி என்ற முனிவர் சிவனை மட்டும் வணங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் வண்டு வடிவம் எடுத்து சிவனைமட்டும் வணங்கினார். இதனால் ஆத்திரமடைந்து சக்தி முனிவரிடமிருந்து அனைத்துச் சக்தியையும் எடுத்துவிட்டாள். முனிவர் சக்தியற்றவராக ஆனார். சக்தியிழந்த முனிவரைப் பரமன் நோக்கி "பராசக்தி வேறு, சுவாமி வேறு என்று நினைப்பது தவறு" என்று சொல்லி முனிவரை நல்வழிப்படுத்தினார். பிருங்கி முனிவர் காரணமாக அர்த்தநாரீஸ்வர வடிவம் தோற்றம் பெற்றது எனத் திருவான்மியூர்ப் புராணம் கூறும்.

கேதாரீஸ்வர புராணம் இக்கதையைச் சற்று வித்தியாசமாகக் கூறுகிறது. பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வணங்கியபோது சக்தியானவள் சிவனிடம் முனிவர் அவ்வாறு செய்தமைக்கு காரணம் என்ன என வினவியபோது "காமியத்தை விரும்பு பவர்கள் உன்னையும், மோட்சத்தை விரும்புபவர்கள் என்னையும் வணங்குவர்" எனச் சிவன் பதில் கூறினார்.

அதைக்கேட்ட அம்மை கோபம் கொண்டு முனிவரின் உடலில் உள்ள சக்தியின் அம்சமான மாமிசம், உதிரம் ஆகியவற்றை எடுத்துவிட்டார். எலும்பு மட்டும் கொண்டு நின்ற பிருங்கி முனிவருக்குச் சிவன் மூன்றாவது கால் ஒன்றை நல்கினார். உடனே கோபம் கொண்ட அம்பிகை பூலோகத்தில் கேதாரம் என்ற இடத்தில் ஆசிரமம் அமைத்து இருந்தாள்.

அவ்விடத்தில் ஆசிரமம் கொண்ட கௌதம முனிவர் அம்பிகையைக் கண்டு "கணவரான பரமேசுவரனை அனுசரியாமல் தனியே வெளியே வந்தது முறையன்று. ஆகவே அக்குற்றம் நீங்கப் புரட்டாதி மாதத் தசமித் திதி முதல் அடுத்துவரும் அமாவாசை வரையுள்ள இருபத்தியொரு தினங்கள் கேதாரகௌரீசுவர விரதம் இருந்தால் அக்குற்றம் நீங்கும் என்றும், சிவனருள் உனக்குக் கைகூடும்" எனவும் கூறினார். அவ்வாறு அம்பாள் விரதமிருந்து சிவனருள் பெற்ற அவருடலில் பாதி இடமெடுத்தாள்.

பிருங்கி காரணமாக அம்பிகை தாம் செய்ய இடம் கேதாரம் என்பதைக் கந்தபுராணம் கூறும்.

"தன்னை நீக்கியே சூழ்வுறும் தவமுடைப் பிருங்கி
உன்னிநாடிய மறைகளின் முடிவினையுணரா
என்னையாருடையானிடம் சேர்வன் என்றிமையக்
கன்னி பூசனை செய்த கேதாரமுன் கண்டான்"

இன்றும் சைவமக்கள் மத்தியில் அனுஷ்டிக்கப்படும் கேதாரகௌரி விரதம் அர்த்தநாரீஸ்வர விரதமேயாகும். இதனை 21 தினங்கள் அனுஷ்டிப்பர். இதனால் குடும்ப ஒற்றுமை அன்பு என்பன நிலவும், பிரிந்தவர்கள் ஒன்று கூடவும், சுமங்கலிகள் தீர்க்க சுமங்கலிகளாக வாழவும், கன்னிப்பெண்களுக்கு நல்வாழ்வு கிடைக்கவும் வழிபிறக்கும். அத்துடன் இகவாழ்வில் சுகபோகங்களும் மறுவாழ்வில் சிவபோகங்களும் கிடைக்கும். மகாபுராணமாகிய ஸ்காந்த புராணமும் பின்வருமாறு கூறுகிறது :

பிரம்மா பல உயிர் வர்க்கங்களைப் படைக்க எண்ணிச் சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நான்கு மைந்தர்களை உண்டாக்கினார். ஆனால் அந்நால்வரும் ஞானமார்க்கத்தை நாடினர். பின் பிரம்மா சிருஷ்டித் தொழிலைத் தானே தொடங்க அது சரியாக வராமல் நால்வரையும் அழைத்துக் கொண்டு திருமாலிடம் சென்றனர். திருமால், படைப்பினை நாம் மேற்கொள்ள முடியாது, இது ஈசுவர கிருபையால் தான் கைகூடும், எனக்கூறி ஆறுபேரும் கைலையை அடைந்தனர். திருமால் சிவனிடம் பிரமனின் படைப்புப் கண்ணிலிருந்து ஒரு தீப்பொறி வெளிக் கிளம்பி ஆறுபேரையும் சாம்பராக்கியது. அடுத்த கணம் ஈசன் தனது இடது தோளை நோக்கி அரும்பார்வை செய்த போது அப்பெருமானுடைய சக்தியாகிய உமாதேவியார் தோன்றினார். அப்போது தோன்றிய அம்மையைத் தமது இடப்பாகத்தில் அமரச்செய்து இருவரும் சேர்ந்து சாம்பரை நோக்கிக் கடைக்கண் செய்ய அறுவரும் மீண்டும் உயிர்பெற்றெழுந்தனர். அப்போது

தத்துழி ஈசன் தன்னைத் தனயரும் அயனும் மாலும்
வந்தனை செய்து போற்ற மாயவன் வதனம் நோக்கி
நந்தமது அருளதாகும் நங்கையோடு இனிது சேர்ந்தோம்
முந்தையின் வேதாச் செய்கை முற்றிடும் போதி – என்றார்

எனவே சிவசக்தியின் ஐக்கியத்தாலேயே உலகப்படைப்பு ஒழுங்காக நடைபெறும் என்ற தத்துவத்தை விளக்கிக் காட்டி அர்த்த நாரீஸ்வர வடிவம் தாங்கி பிரம்மா விஷ்ணு முதலியோருக்குத் தெளிவாக விளக்கினார்.

இவ்வடிவத்தைத் தொழுதபின்பே பிரம்மாவின் சிருஷ்டி வெற்றிகரமாக அமைந்தது என்பர். அர்த்தநாரீஸ்வர வடிவம் ஆத்மீக உலகிற்கும் மட்டுமன்றி விஞ்ஞான உலகிற்கும் தத்துவப் பொருளாக விளங்குகின்றது எனின் மிகையில்லை.

விஞ்ஞானவிளக்கம்

விஞ்ஞான உலகிலும் இது மாறுபட்ட குணங்கள் ஒன்றாக இணைந்து இயங்கும் தன்மையைக் கவனிக்கலாம். மின்கலங்களில் நேர்முனையும் எதிர்முனையும் இணைந்து மின்னைக் கடத்தும் ஆற்றல் பெறுகின்றன.

காந்தலியலில் ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று தள்ளும் எனவும், ஒவ்வாத முனைகள் ஒன்றை ஒன்று கவரும் எனவும் கூறப்படுகின்றது. ஒரு காந்தத்தின் வடமுனைவு இன்னொரு காந்தத்தின் தென் முனைவோடு இணையும்.

உடலில் ஓடும் இரத்தத்தில் வெண்ஜீவஅணு, செஞ்ஜீவஅணு என்ற இரு வகைப்பிரிவுகள் உள்ளன. இவை இரண்டும் இரத்தோட்டத்தில் மிகப் பிரதான உறுப்பாகும். வெண்ஜீவ அணுவைச் சிவமாகவும், செஞ்ஜீவ அணுவைச் சக்தியாகவும் எடுத்தால் சிவசக்தியின் வடிவமாகவே இரத்தோட்டம் நடைபெறுவதை உணரலாம்.

சிவனுக்கு இடப்பாகத்தில் சக்தி இருப்பதும் உடலியல் அமைப்பில் இதயம் இடப்பாகத்தில் இருப்பதும் ஒரு தத்துவ உண்மையைப் புலப்படுத்துவதாகும்.

அன்பு இரக்கம் கருணை என்பன இதயம் உள்ளவர்களின் குணமாகும். பொதுவாகப் பெண்களை அன்பின் உறைவிடமாகக் கூறுவது மரபு. எனவே பெண்ணையும் இடப்பாகமாக வைத்திருத்தல் கருணையின் தோற்றமாகக் குடும்பத்தில் அவர்கள் விளங்க வேண்டும் என்பதைக் குறித்துக்

காட்டும் அமைப்பாக அர்த்தநாரீஸ்வர வடிவம் காட்சியளிக்கிறது.

தொகுத்து நோக்கின் அர்த்தநாரீஸ்வர மூர்த்தம் பல தத்துவப் பின்னணிகளைக் கொண்டதாகும். உலகத்தில் படைப்பையும், இயற்கை இன்பத்தையும் வெளிப்படுத்தும் உண்மை வடிவமாகத் தோற்றமளிக்கிறது. அன்பு கருணை, அருள், இன்பம், இரக்கம் முதலிய நற்பண்புகளை வெளிப்படுத்தும் மூர்த்தமாக அமைந்துள்ளது.

அர்த்தநாரீஸ்வர வழிபாட்டில் அறிவு, வீரம், ஆற்றல் என்பன எமக்கு வளர்கிறது. ஞானம் கிட்டுகிறது. இதனால் காலத்திற்குக் காலம் அர்த்தநாரீஸ்வர வடிவம் போற்றப்பட்டுள்ளது. பூவும் மணமும் போல், பாலும் சுவையும் போல், சூரியனும் கதிரும் போல், சந்திரனும் குளிர்மையும் போல், சிவனும் சக்தியும் இணைந்த ஒருமை வடிவமே அர்த்தநாரீஸ்வர வடிவமாகும்.

உசாத்துணை நூல்கள்

01. இராமநாதபிள்ளை, ப. திருவாசகம் விளக்கவுரை, அப்பர் அச்சகம், சென்னை, 1968
02. இரத்தினவடிவேலு முதலியார், சிவபராக்கிரமம், பூமகள் விலாச அச்சுக் கூடம், சென்னை, 1984
03. கலைவாணி இராமநாதன், சைவசித்தாந்த மெய்ப்பொருளியல், கார்த்திகேயன் பிறைவேர் லிமிட்டெட், 1998
04. குமாரசாமிக் குருக்கள். ச, சிவபூசை விளக்கம், சிவானந்த குருகுலம், 1965
05. குமாரசாமிக் குருக்கள். ச, முப்பொருள் விளக்கம், கலாதேவி யந்திரசாலை, சுன்னாகம், 1969
06. கைலாசநாதக்குருக்கள். கா, சைவத்திருக்கோவில் கிரியை நெறி, இந்து கலாபிவிருத்திச்சபை, கலாநிலையம், 1963
07. கோபாலகிருஷ்ண ஐயர். ப, இந்துப்பண்பாட்டு மரபுகள், வித்தியா வெளியீடு, யாழ்ப்பாணம், 1992
08. கோபாலகிருஷ்ண ஐயர். ப, சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல், கலாநிதிப் பட்டத்திற்காக யாழ் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு – 1981 (பிரசுரிக்கப்படாதது)
09. சிவகுருநாதபிள்ளை. பா, சிவவடிவங்கள், தமிழ்ப்பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, 1991
10. சுப்பிரமணியம். நா, இந்திய சிந்தனைமரபு, சவுத்ஏசியன் புக்ஸ், 1993
11. சைவசமயச் சொற்பொழிவுகள், சைவ சித்தாந்த மகாசமாசம், சென்னை, 1959
12. ஞானகுமாரன். நா, சைவசித்தாந்த தெளிவு, சாந்தி அச்சகம், 1994
13. ஞானசம்பந்தன். அ. ச, பெரியபுராணம் ஓர் ஆய்வு, சேக்கிழார் ஆராய்ச்சிமையம், 1994
14. திருவிளக்கம். மு, சிவஞானசித்தியார் சுபக்கம், யாழ்ப்பாணக் கூட்டுறவு தமிழ்நூற் பதிப்பகம், 1971
15. பஞ்சாட்சரக் குருக்கள். பி. பா, ஸ்ரீமத் அர்த்தநாரீஸ்வர மகிமை
16. பன்னிருதிருமுறை பெருந்திரட்டு, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகத்தாரின் ஆயிரத்தெட்டாவது வெளியீடு, 1964
17. பாலசுப்பிரமணியம். சி, சங்க இலக்கியப் பார்வைகள், நறுமலர் பதிப்பகம் – 1989
18. வித்தியானந்தன். சு, தமிழர்சால்பு, பாரி புத்தகப்பண்ணை, இரண்டாம் பதிப்பு, 1971
19. ஸ்ரீவிருஷ்ணதத்தபட், இந்துமதம் பாகம் 1, காந்திய இலக்கியச் சங்கம் மதுரை, 1967



உருத்திராக்கம்

உருத்திராக்க மகிமை : உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டபோது, சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்தியமணியே உருத்திராக்கம் என்பர். எனவே, ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகிறது. இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றுக்கு அறிகுறி. பத்தினிப் பெண்களுக்குத் திருமாங்கலியம் எங்ஙனம் புனிதமான ஆபரணமாக விளங்குகிறதோ, அங்ஙனமே சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் போற்றி அணிய வேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கிறது. உண்மையடியார்களைச் சைவ நெறியினின்றும் பிறழாமற் காக்கும் இரட்சை யாகவும் இது விளங்குகின்றது.

உருத்திராக்க வகைகள் : ஒருமுகம் தொடக்கம் பதினாறுமுகம் வரை கொண்ட மணிகள் உண்டு. ஒவ்வொரு வகை மணிக்கும் ஒவ்வொரு அதி தேவதை கூறப்படுகிறது. பொன்னிறம், கருநிறம், கபில நிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஒரே இன மணிகளாலான மாலைகளே அணியத்தக்கன.

உருத்திராக்க தாரணம் : சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராணபடனம், சிவாலய தரிசனம் போன்ற சாதனைகளை செ-யும் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியம். உறங்கும்போது, மலசலங்கழிக்கும்போதும், ஆசௌச காலத்திலும் தரிக்கலாகாது. ஆசாரமற் றோரும் தரிக்கலாகாது. சிவதீட்சை பெற்றவர்கள் இதை அணியவேண்டும். சிகை, சிரம், காது, மார்பு, தோள்கள், கைகள் ஆகியவை உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்கள். எத்தனை முகங்கொண்ட மணிகளை எவ்வெவ் இடங்களில் அணியலாம் என்றும், ஒவ்வோர் இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதா- இருக்கவேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செ-ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகளைக் கொண்ட தாயிருக்கும். செபமாலை மனத்தை இறைவனிடம் செலுத்தும் சிறந்த சாதனமாகும்.



விரத விழுமியங்கள்

மனித வாழ்க்கையில் ஆன்மிகத்தின் பங்கு மகத்தானது. அது உணரப் பெற்றால், வாழ்வு சீரும் சிறப்பும் பெறும். ஒவ்வொரு மனிதனிடமும் ஆன்மிக வளம் உண்டு. ஆன்மிக வளத்தைச் செவ்வையாகப் பயன்படுத்தி, வாழ்க்கையில் அமைதியையும் சாந்தத்தையும் அடைய முயற்சிப்பதும் அடையப் பெறுதலும் மனித வாழ்க்கையின் முதன்மைக் குறிக்கோளாகும். மனிதன் மனிதத் தன்மைகள், மனிதப் பண்புகள் உடனான மனிதனாக வாழவும், அதன் பயனாகத் தெய்வ நிலைக்கு உயர்த்தப் பெற்றுத் தெய்வீகப் பண்புகள், இயல்புகளுடன் நல்ல வண்ணம் வாழவும், ஏனையோரையும் அவ்வாறு வாழ்விக்கவும் உதவுவது ஆன்மிகம் ஆகும். ஆன்மிக விழுமியங்கள், மனித வாழ்க்கையில் சாதனைகள் ஆகவேண்டும். மனிதரின் இம்மை, மறுமை வாழ்க்கை, மேம்பாடு அடைய வழிவகுப்பது ஆன்மீகமே. ஆன்மிகத்தை மறுப்பவர், நல்ல முறையில் வாழ மறுப்பவர் ஆகிவிடுகின்றனர். ஆன்மிகத்தை ஓம்புபவர்கள் தமக்கும் பிறர்க்கும் உபகாரியாகவும் விளங்குகின்றனர்.

விரதமும் ஆன்மிகமும்

கலாநிதி
குமாரசாமி சோமசுந்தரம்

விரதம், இல்லறத்தில் நின்று வாழ்பவர்க்கும்; தவம் துறவறத்தார்க்கும் உரிய ஆன்மிக சாதனைகள் எனக் கூறப்படுகிறது.

இல்லற விரதிகள், உலகில் வாழ்ந்து கொண்டே, அறத்தைப் பேணி; பொருள் ஈட்டி; ஈதல் செய்து; அன்பு வழி நின்று இன்பம் துய்த்து; தூய வாழ்வு வாழ்ந்ததன் பயனாகவும் – இறைவனை மனம், மொழி மெய்யினால் பக்தி சிரத்தையோடு வழிபட்டும், ஒவ்வொரு கருமத்தையும் ஆற்றப் புகுமுன், இறைவனை விசாரித்து, ஒப்புதல் பெற்று ஆற்றிவந்ததன் விளைவாகவும், இறைவனடி சேர்ந்து முத்தியின்பம் பெறுதலை விரதமாகக் கொள்வர்.



ஆன்மிக வாழ்வு என்பது மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல் தூய்மை என்பவற்றுடன் கூடிய வாழ்வு. இறைவனை முன்வைத்து வாழும் போதே தூயவாழ்வு கிட்டுகிறது. தூய வாழ்விற்கு விரதங்கள் துணை செய்கின்றன. விரதங்கள், விழுமியங்கள் சார்ந்தனவாக அமைந்திருத்தலே, அவை தூய, விழுமிய வாழ்வின் மலர்ச்சிக்குத் துணை போகக் காரணமாக விளங்குகின்றன.

ஆன்மிகம் என்பதில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள் ஒன்று உள்ளமை தொனிக்கிறது. இந்தப் பரம்பொருளே உலகம் உட்பட அண்டங்கள் அனைத்திற்கும் அவற்றின் கண் உள்ள சராசரப் பொருள்கள் யாவற்றிற்கும் மூலமும் முதலுமாக உள்ளது. அவற்றின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் என்பன எல்லாவற்றிற்கும் பரம்பொருளே மூலகாரணம். இப் பரம்பொருளையே, ஈசன், கடவுள், இறைவன், ஆண்டவன் என்று குறிப்பிடுவர். சைவர்கள் சிவம் என்கின்றனர். நாம் எந்நிலையிலும் கடவுளை விட்டு விலகி வாழ இயலாது.

கடவுளால் விரும்பப்படுபவைகளைச் செய்வதும், விலக்கப் பட்டவற்றைச் செய்யாதொழித்தலும் ஆன்மிகச் செயற்பாடுகள் ஆகும்.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன; இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய், தந்தை முதலிய பெரியோர்களை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்" – நான்காம் பால பாடத்தில் நாவலர் பெருமான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடவுளை விசாரித்துக் கருமமாற்றுதல் என்பது கடவுளால் விரும்பப்படுகின்ற அன்பு, நீதி, கருணை, பொறை, அடக்கம், உண்மை, கொடை, அடக்கம் முதலிய விழுமியங்களையும் கொல்லாமை, புலாலுண்ணாமை, களவு செய்யாமை, கள்ளுண்ணாமை, பிறன்மனை, விழையாமை, பொய்யாமை, இன்னா செய்யாமை முதலிய அறச் செயல்களையும் விரதமாகக் கொள்ளல்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் மனிதப் பிறவி யெடுத்ததன் பயனை எய்துவதற்கும் நாம் எமது வாழ்வில் நித்தமும் மேற்கொள்ள வேண்டிய உயர் மானுடப் பண்புகள், விழுமியங்கள் ஆகும். இவற்றை வாழ்வில் உறுதியுடன் வழுவாது அனுட்டித்தல் நித்திய விரதமாகக் கொள்ளப்படுகிறது. இத்தகைய நித்திய விரதங்கள் விழுமியஞ் சார்ந்தவை – ஆன்மிகம் நோக்கியவை – மனித வாழ்க்கையை மேன்மைப்படுத்துபவை.

தவம் என்னும் ஆன்மிகச் சாதனை

தவம் என்பதன் உரு, தமக்கு நேருகின்ற நோய், துன்பங்களைப் பொறுத்தலும், எந்த உயிர்க்கும் தீங்கு இழைக்காமல் இருத்தலும் என வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகிறார்.

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" –திருக்குறள்

பொறையும் இன்னா செய்யாமையும் விரதங்களில் அடங்கும் விழுமியப் பண்புகள் ஆகும். துறவிகள் அல்லாதோர் யாவருக்கும் இம்மானுடப் பண்புகளை மேற்கொள்ளல் விரதமாகும். துறவி களுக்கு அது தவம் ஆகும்.

மகாத்மா காந்தி சத்தியத்தையும் அஹிம்சையையும் வாழ்நாட்பூராகவும் விரதமாகக் கொண்டு ஒழுகினார். அதனால் ஆன்மிக வழுவைப் பெற்றிருந்தார். விரதம் என்பது உடலைப் பொறுத்த விடயம் அன்று; அது உள்ளம், ஆத்மாவைப் பொறுத்த விடயமாகும். எனவே விரதம், தவம் என்பன ஆன்மிகம் சார்ந்தன எனப்படுகின்றன. உயிரின் வளர்ச்சிக்கு – ஆன்ம விருத்திக்கு விரத விழுமியங்கள் போஷிக்கின்றன.

விரதம் என்பது சங்கல்பம்

நம்முடைய உயிருக்கு உறுதி பயப்பவற்றை விடாது கடைப் பிடித்து ஒழுகுதல் விரதம் ஆகும். 'விரதத்தை மேற்கொள்வேன்' என எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி சங்கல்பம் ஆகும். உதாரணங்களாகச் சில கீழே தரப்படுகின்றன.

- "நினைக்கத் தக்கவற்றில் ஞாபகமும்; நினைக்கத் தகாதவற்றில் மறதியும் என் விரதம்"
- "இகழ வேண்டியவற்றில் இகழ்ச்சியும், போற்றத்தக்கவற்றில் இகழாமையும் ஆகிய இரண்டும் என் விரதம்"
- "நல்லவற்றில் கவனமும், நல்லதல்லாதவற்றில் அலட்சியமும் ஆகிய இரண்டும் என் விரதம்."
- "அறியத்தக்கவற்றை அறிவதும் அறியத்தகாதவற்றை அறியாமலிருப்பதும் ஆகிய இரண்டும் என் விரதம்"
- "நல்லவற்றைக் கேட்பதும் தீயவற்றைக் கேட்காமலிருப்பதும் ஆகிய இரண்டும் என் விரதம்"
- "உண்மை பேசுவதும், பொய் பேசாமையும் ஆகிய இரண்டும் என் விரதம்"
- "உயிர்க்குறுதி பயக்கும் விரதத்தை அனுட்டிப்பதும், விரதத்தை மீறி நடந்து கொள்ளாமல் இருப்பதும் ஆகிய இரண்டும் என் விரதம்"
- "தவம் செய்தலும் தவம் அல்லாத அவத்தில் மனத்தைச் செலுத்தாமல் இருப்பதும் ஆகிய இரண்டும் என் விரதம்"

மேற்கூறப்பட்டவை பிரமச்சாரிக்குரிய விரதங்கள் எனச் சிறப்பாகக் கூறப்பட்டாலும், பொதுவில் எல்லோருக்கும் உரிய விரதங்களாக ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக உள்ளன. இவ்விரதங்கள் விழுமியங்கள் சார்ந்தவை. எனவே அவை மானுடத்தை விழுமிய நிலைக்குக் கொணர்ந்து, மனித வாழ்க்கையை மேம்படுத்துவனவாய் அமைகின்றன.

நல்லொழுக்கம், நற்பண்புகள் என்பன ஆன்மிகத்தில் முதன்மைப் படுத்தப்படுகின்றன. எனவே அவற்றை விரதமாகக் கொண்டு அனுட்டித்து வருவதால் வாழ்வு சிறக்கும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" – திருக்குறள்

எனவே நல்லொழுக்கம் மேலான விரதமாகும். ஒழுக்க வாழ்வு தவம் ஆகும். "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" – குறள் நீதியை உபாசித்தல் விரதமாகும். அன்பினை ஆராதித்தல் விரதம் ஆகும். "நீதியே சிவம்"; "அன்பே சிவம்" – இது சைவத்தின் நிலைப்பாடு.

தர்மம் என்பது அவரவர்க்குரிய கடமைகள் மற்றும் பொறுப்புகள். அவற்றை வாழ்க்கையில் தவறாது பேணி வருதல் விரதம் ஆகும். அன்பு, நீதி, தர்மம், கருணை, அஹிம்சை, உண்மை என்பன மேலான வாழ்க்கை விழுமியங்கள். அவற்றை அனுட்டித்து வருதல் விரதம் ஆகும்.

காப்பது விரதம்

நமது உலகியல் வாழ்வு ஆன்மிக விழுமிய வாழ்வாக மிளிர, நாம் ஆன்மிக சாதனைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும். ஆன்மிக சாதனைகள் விரதங்களாக அனுட்டிக்கப்பட வேண்டும்.

"..... எழுக புலருமுன்
தொழுது வணங்குக தூநீறணிக
அன்னை பிதாவின் அடியினை வணங்குக
கண்ணைப் போலக் காக்க அறத்தை

அழுக்காறு கோபம் அவா ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒரு போதும் மறவாதுறவு கொள்ளுக
கொல்லாமை, கள்ளாமை வேண்டும்
கோபம், பொறாமை கொள்ளாமை வேண்டும்
எல்லார்க்கு மன்பு செய்ய வேண்டும்
நல்லாரிணக்கமே வேண்டும்
நடுநிலைமை மாறாதிருக்க வேண்டும்"

–சிவயோக சுவாமிகள்

இவற்றை வாழ்வில் காப்பது விரதம். விரதம் என்பது பிரதிக்ஞை. அது காத்து ஒம்பப்பட வேண்டியது. விதிக்கப்பட்டவற்றை மேற்கொள்ளலும் விலக்கப்பட்டவற்றைச் மேற்கொள்ளாமல் தவிர்த்தலும் பிரதிக்ஞையாக உள்ளன.

விரதம் - வரைவிலக்கணம்

"விரதமாவது, மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்" – என்று நாவலர் பெருமான் வரைவிலக்கணம் தந்துள்ளார்.

"விரதம் என்றால் சங்கல்பத்துடனும் உபவாசம் முதலிய நியமங்களுடனும் கூடச் செய்யப்படும் சத்கர்மா – நல்ல காரியம்" – இவ்வாறு ஒரு விளக்கம் அமைகிறது.

விரதத்தை உபவாசம் என்று அழைக்கும் வழக்கமும் உண்டு. உபவாசம் என்பது உடனுறைதல், உடன் வாசஞ்செய்தல் என்னும் பொருளை உடையது. விரதத்தை மேற்கொள்ளும் விரதி, கடவுளோடு உறைகின்றார் என்பது இதிலிருந்து பிறக்கும் கருத்து.

விரதம் மேற்கொள்ளப்படுவதன் நோக்கம்

இறைவனின் திருவருளைப் பெறுதல் – அதன்வழி இக, பர சுகங்களையும், முத்தியின்பத்தையும் அடைதல்.

இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு, முன் நிபந்தனை களாக மன அடக்கம்; புலனடக்கம்; இராட்சத, தாமத குணங்களின் அடக்கம் என்பன உள்ளன. இத்தடைகளை நீக்குவதற்கு விரத விழுமியங்கள் உதவுகின்றன.

விரதம் ஒரு விசேட வழிபாடு. "மனம் முதலிய அகக் கருவி களையும்; மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய அறிகருவி களையும்; கை, கால் முதலிய தொழிற் கருவிகளையும் இறைபணி செய்யக் செலுத்துவதே வழிபாடாகும்" எனக் கூறப்படுகிறது.

மன அடக்கம், புலனடக்கம் - விரதம்

விரதம் அனுட்டித்தல் மற்றும் இறைதொண்டு செய்தல் என்பவற்றின் மூலம் மனத்தையும் பொறிகளையும் இறைவன்பால் சேர்க்க வேண்டும். அப்போதுதான் அவை அடங்கும் நிலை ஏற்படும்.

மனத்தைக் குரங்கிற்கும் குதிரைக்கும் ஒப்பிடுவர் பெரியோர்கள். மனம் ஒரு நிலையில் நிற்பதில்லை அது அலைந்து திரியும் இயல்புடையது. பல்வகைப்பட்ட நினைவுகள், எண்ணங்கள், சிந்தனைகள் என்பவற்றால் மனம் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும். "சும்மா இருக்கின்ற திறனரிது காண்" – என்கிறார் தாயுமானவர். மனத்தை ஒரு நிலைப்படுத்துவதன் மூலம் வாழ்வு மேன்மை பெறும். அதற்குச் சாதனை வேண்டும்; இறையருளும் வேண்டும். விரதமனுட்டித்தல் மனத்தை ஒருநிலைப் படுத்தக் கூடிய சாதனையாகும்.

ஐந்து புலன்களும் மனிதர்க்கு வஞ்சனையையே செய்கின்றன. மனம் போன போக்கில் அவை செல்கின்றன. மனம் எம்மை ஆட்டிப் படைக்கின்றது. மனம் ஐம்பொறிகள் வழி போகாது நிற்றற் பொருட்டுத்தான் உணவை முற்றாக விடுத்தலும், சுருக்குதலும் வேண்டும். விரதத்தின் போது இறை சிந்தனையோடு இருத்தல், மனம் முதலிய உட்கரணங்களையும் ஐந்து பொறிகளையும் எமது ஆட்சியின் கீழ் கொணர்ந்து நற்சிந்தனை, நற்செயல், நல்லோரிணக்கம் மற்றும் இறைபணிகள் என்பவற்றில் அவற்றைச் செலுத்துதல் ஆகியவற்றின் மூலம் மன அடக்கம், புலனடக்கம், மற்றும் இராட்சத, தாமத குணங்களின் ஒடுக்கம் என்பவற்றை ஏற்படுத்தலாம்.

தனித்திரு - பசித்திரு - விழித்திரு

விரதத்தின் முக்கிய அம்சங்களாக இவை மூன்றும் உள்ளன. தனித்திருத்தல் ஆன்மிக சாதனையாகும். இயல்பாகவே ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங் களுடனும் கூட்டுச் சேர்ந்தே காணப்படுகின்றது. இவற்றினின்றும் படிப்படியாக விலகியும், உலகப் பற்றுக்கள், பந்தங்களுடன் சேர்ந்திருக்காது அவற்றினின்றும் விடுபட்டுச் சுதந்திரமாக இருத்தல், தனித்திருத்தல் ஆகும். நாம் நாமாகவே இருத்தல் விரதத்திற்கு அவசியமாகும். அப்போதுதான் நாம் சிவத்தோடு உபவாசம் செய்ய வாய்ப்பாக இருக்கும். ஒவ்வாதவைகளுடனும், ஒவ்வாதவர்களுடனும் கூட்டுச் சேர்ந்தால் இறைவனின் அருள் கிடைக்காது. இறைவனின் திருவருளைப் பெறுவதற்குக் கூடாதவற்றினின்றும் எம்மை விடுவித்துத் தனித்திருக்க வேண்டும். இறைவன் தானகவே கீழிறங்கி வந்து எம்மை ஆட்கொண்டு அருள்பாலிப்பான்; எம்முடன் சேர்ந்து உடனுறைவான். அதுவே உபவாசம் ஆகும். தனித்திருத்தல் விரத விழுமியம் ஆகும். மௌன விரதம் தனித்திருத்தலுக்கு உபகாரமாக அமைகின்றது.

பசித்திருத்தல் என்றால் மேலோட்டமாக நோக்கும் போது உணவு, நீர் உட்கொள்ளாதிருத்தல் அல்லது அவற்றைச் சுருக்கிக் கொள்ளுதல் என்ற கருத்தினைக் கொள்வர். பசியைப் பொறுத்தல் மூலம் – மன அடக்கம், புலனடக்கம் சாத்தியமாகிறது. பசிவந்திடப் பத்தும் பறந்திடும் என்பர். அப்படிப்பட்ட பசியைப் பொறுத்திருத்தல் விரதமாகும். பசி தாகத்தினால் ஏற்படுகின்ற கோபம், ஆத்திரங்கொள்ளல், பொறுமையின்மை, வன்முறைகள், மயக்கம், கொடும் பேச்சு முதலிய தீய உணர்ச்சிகளை அடங்கச் செய்தல், பொறுத்தல், தாங்கிக் கொள்ளல் என்பன விரதமாகும். பசித்திருத்தல் விரதவிழுமியம் ஆகும். இறைவனுடன் சேர்ந்து உடனுறைய வேண்டும் என்பதில் பசி; நல்லவற்றை நாட வேண்டும், நல்லவற்றைப் பேசவேண்டும், நல்லவற்றைப் புரிய வேண்டும், நல்லோருடன் இணங்கியிருக்க வேண்டும் என்பவற்றில் பசி, தாகம் ஏற்படுதல் பசித்திருத்தல் ஆகும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்னும் விழுமியம் விரதங்கள் ஊடாகச் செயற்பாடாகின்றது. ஒரு நேர உணவையோ, ஒரு நாள் உணவையோ விட்டுவிடுவதன் மூலம் பலரின் பசியைத் தீர்க்கக் கூடிய நிலைமை தோன்றுகின்றது. விரதத்தின் சமூக நோக்கும் உணர்தற்பாலது.

உபவாசம் என்பது அன்ன ஆகாரம் தண்ணீர் இன்றிப் பசித்திருத்தல் எனக் கொள்ளப்படுகிறது. எமது இறைவனுடன் மனம், வாக்கு, காயம் ஒப்ப உடனுறையும் போது தான் உபவாசம் என்னும் விரதம் நிறைவெய்துகிறது. நாம் இறைவனுடன் வாசம் செய்வோமானால், ஒவ்வொரு கருமத்தையும் ஆற்றப்புகுமுன் இறைவனை விசாரித்து நல்லவற்றைப் புரிந்து அல்லவற்றைப் புரியாது தவிர்த்து வாழலாமல்லவா?

விழித்திருத்தல் நித்திரையை ஒழித்தல் மாத்திரமன்று. சிவனைத் தியானிப்பதில் வணங்கி வழிபாடு செய்வதில் விழிப்பாயிருத்தல்; நல்லவற்றைச் சிந்திப்பதில், பேசுவதில், புரிவதில் விழிப்பாயிருத்தல்; தீயனவற்றை விலக்குவதில் விழிப்பா யிருத்தல் என்பனவும் அடங்கும். எனவே, விழிப்பாயிருத்தல் விரத விழுமியம் ஆகின்றது.

முக்கியமாக மனத்தையும் ஐம்புலன்களையும் நாம் ஆட்சி செய்ய வேண்டும். அவற்றிற்கு நாம் அடிமையாதல் ஆகாது. இந்நிலையை நாம் அடைவதற்கு உதவுவது விரதங்களேயாகும்.

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு விரதம்

உயிரின் தேவையையும், ஆன்மிகத் தேவையையும், சமூகத் தேவைகளையும், ஒழுக்கத் தேவையையும் பூர்த்தி செய்ய விரதங்கள் எவ்வாறு உதவுகின்றன என்று கண்ட நாம் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு விரதங்கள் எவ்வாறு வழி செய்கின்றன என்பதை நோக்குவோம். விரதங்களின் முக்கிய அம்சம் உணவைச் சுருக்கியோ, முற்றிலாக விடுத்தோ இருத்தல் மூலம் உணவு உட்கொள்ளலைக் கட்டுப்படுத்துதல். உடல் ஆரோக்கியத்தைச் சீராகப் பேணுவதற்கு இயற்கை எமக்குக் காட்டிய நல்வழியாக விரதம் அமைகின்றது. விரதம் மேற்கொள்ளப்படும் போது, ஈரல், சிறுநீரகம், சுவாசப்பை, இரத்தக் குழாய்கள், தோல் பகுதிகள் என்பவற்றில் தேங்கி நிற்கும் கழிவுப் பொருள்கள், நச்சுப் பொருள்கள் அகற்றப்படுகின்றன. விரதத்திற்கு பின் உடல் புத்துணர்ச்சி பெறுவதையும் ஆற்றல் பெறுவதையும் உணரமுடிகிறது. உடல் பருமனைக் குறைப்பதற்கு விரைவில் பயன்தரும் முறை விரதம் அனுட்டித்தல்.

உடல் உறுப்புக்களுக்கு ஓய்வு தருவதுடன் விரதம் பல நோய்களை நீக்க வல்ல மருந்தும் ஆகிறது. உடலின் கொழுப்பைச் சமநிலைப்படுத்துவதோடு இரத்த அழுத்தத்தையும் சீர் செய்கிறது. மன அழுத்தம், மனநெருக்குகை, மன உளைச்சல் என்பனவற்றால் அவதிப்படுவோர், மனத்தில் உயர்ந்த ஆன்மிக சிந்தனைகளை, விரதங்கள் மேற்கொள்வதன் மூலம் உண்டுபண்ணுவதால், மன அமைதி பெறுகின்றனர். உளப்பிணிகள் உடல் ஆரோக்கியத்தையும் கெடுக்கின்றன. "நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்குக், கூற்றங்குதித்தலும் கை கூடும்" என்பது வள்ளுவம் தருங்கருத்து. விரதம் உடல், உள நோய்களைத் தணித்து, ஆரோக்கியத்தைப் பேணி, ஆயுளை நீடிக்கிறது என மருத்துவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

"அன்னம் அடங்க ஐந்தும் அடங்கும்" என்பது முதுமொழி. நோயின்றி ஆரோக்கியத்துடன் வாழ இறைவன் நமக்களித்த வரப்பிரசாதம், விரதம் என்னும் மருத்துவ அறிஞரின் கூற்று, பொருள் பொதிந்தது.

உடல் அழுக்குமன்று, இழுக்குமன்று. உயிர் வாழுகின்ற கோயில், உடம்பு என்பர். "உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்றும் "உடம்பார் அழியின் உயிரார் அழிவர்" என்றும் உடம்பை ஏற்றிப் போற்றுகின்றார், திருமூலர். விரதம் அனுட்டித்தல், உடம்பை வளர்க்கவும் அதன் வழி உயிரை வளர்க்கவும், அதனை ஈடேற்றஞ் செய்யவும் உதவுகின்றது.

விரதமும் தூய்மையும்

விரதம் அனுட்டித்தல் அகந்தூய்மை, புறந்தூய்மை ஆகியவற்றைப் பேண வழிவகுக்கின்றது. இறை சிந்தனையோடிருத்தல், மனம் மற்றும் புலன்களை இறைபணிகளில் செலுத்துதல், இறைவனோடு உபவாசம் செய்தல், தானதர்மங்கள் செய்தல், சத்சங்கம் மற்றும் நல்லோருடன் இணைந்திருத்தல், கோபம் கொள்ளாதிருத்தல், உண்மை பேசுதல், பிறர் நலம் பேணுதல், தொண்டுகள் புரிதல், கொல்லா அறம் பேணுதல்; காமம், பகைமை கொள்ளாதிருத்தல், உற்ற நோய் நோன்றல், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகல், பணிவுடையன் இன்சொலன் ஆதல், மனத்துக் கண் மாசிலன் ஆதல் – அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகியவற்றை விலக்குதல் போன்ற விரத விழுமியங்களைப் பேணுவதன் மூலம் அகந்தூய்மை சித்திக்கிறது. சித்தம் அழகியர் ஆக விரதிகள் வந்து விடுகின்றனர். அப்போது தூய எண்ணங்கள் அவர்களின் உள்ளங்களில் தோன்றுகின்றன. அவை தூய வாக்குகளாகவும், தூய செயல்களாகவும் வெளிப்படுகின்றன. இந்தவகையில் அகந்தூய்மை பேண விரதங்கள் உதவுகின்றன. விரதகாலங்களில் இவை ஆன்மிகப் பயிற்சியாகவும், ஏனைய காலங்களில் இவை தொடர்ச்சியாக வாழ்வில் நிலைத்து நிற்கவும் வேண்டும்.

விரதங்கள் புறந்தூய்மை பேணுவதற்கும் சந்தர்ப்பங்களை அளிக்கின்றன. உடல் தூய்மை; வாழுமிடம் மற்றும் சுற்றாடல் தூய்மை; ஆடை, உணவு பாத்திரங்கள் எனபவற்றைச் சுத்தமாக வைத்திருத்தல் என்பன விரதகாலங்களில் மிக நுணுக்கமாகப் பேண வேண்டிய நியமங்கள் ஆகும்.

புறந்தூய்மை நீரால் அமையும் என்பர். "சுத்தம் சோறிடும் எச்சில் இரக்க வைக்கும்" என்பது பழமொழி. சமூகச் சூழலையும் இயற்கைச் சூழலையும் மாசடையாமல் பாதுகாப்பதற்கும், சுகாதாரப் பழக்க வழக்கங்களைச் சமயரீதியாகக் கடைப்பிடிக்கச் செய்வதற்கும் விரதங்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

நீராடி உடலைச் சுத்தம் செய்தல், தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல்; வீடு, சுற்றாடல் என்பவற்றைக் கூட்டிக் கழுவி, அழுக்குகளை அகற்றுதல்; சமையல் பாத்திரங்களை விளக்கிக் கழுவுதல் என்பன விரத நியதிகளாகக் கொள்ளப் படுகின்றன. மஞ்சள் நீர் தெளித்து, சாம்பிராணி தூபம் காட்டி வீட்டையும் சுற்றுப் புறங்களையும் பரிமளிக்கவும் தெய்வீகமணங் கமழவும் செய்யப்படுகிறது. இத் தெய்வீகச் சூழல் மனத்திற்கு ஓர் இதத்தையும் இன்பத்தையும் தருகின்றதை உணர்கின்றோம். யாவும் அழகாகத் தோன்ற, மகிழ்ச்சிக் குறைவேது? பீடைகள் அகன்று வீட்டில் விடிவு ஏற்பட்டு விடும். நாம் செய்வன யாவும் நல்ல காரியங்களாக அமைவதுடன், வெற்றியும் உறுதியாகி விடுகின்றது.

விரதம் அனுட்டித்தலை முன்னிட்டு மேற்கொள்ள சைவ ஆசாரத்தினால் இத்துணை நன்மைகள் ஏற்படுகின்றன என்றால், வாழ்க்கை பூராவும் சைவ ஆசாரங்களையும் சைவ ஒழுக்கங் களையும் மேற்கொள்வோமானால் நாமும், சமுதாயமும் எத்துணை நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது உணர்தற்பாலது. எனவே விரத விழுமியங்கள் ஓம்பப்பட வேண்டியன.

விரதங்கள், பக்திமார்க்கத்தில் முக்கியமான சமயக் கடமைகளாக உள்ளன. அதேவேளை மனிதவாழ்க்கையில் சைவ ஆசாரங்கள், சைவ ஒழுக்கங்கள், சைவ விழுமியங்கள் என்பனவற்றைப் பேணி வளர்க்கக் களம் அமைத்துத் தருகின்றன. விரதமனுட்டித்தல் வெறுமனே சமயக்கடமை அல்லது சமயக்கிரியை என்ற நிலைப்பாட்டுடன் மாத்திரம் மட்டுப்படுத்திப் கொள்ளாது, அகன்ற, சூழ்ந்த, அறிவு பூர்வமான பார்வையில், விரத விழுமியங்கள், மனிதன் மனிதத் தன்மைகளோடு வாழ்தல், இறைவனின் படைப்புக்களில் அன்பு செலுத்துதல், சமூகத்துடனும் இயற்கைச் சூழலுடனும் இணங்கியும், பொருந்தியும் வாழ்தல் ஆகிய மனித விழுமியங்களைப் பயிற்சி செய்யவும் வழிவகுக் கின்றன என்பதை நாம் உணர்ந்துகொண்டு ஒழுகுதல் இன்றியமையாததாகும்.



நாளாந்த வழிபாடு

கலாபூஷணம் பண்டிதர்
சி. அப்புத்துரை



அறிமுகம்

நாம் சிவனை வழிபடும் சைவர்கள். எங்கள் முழுமுதற் கடவுள் சிவன். விநாயகர் சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர், உமையம்மை சிவமூர்த்தங்கள், சிவனுடைய இந்த மூர்த்தங்களும் சைவசமயத்தவர்களின் வழிபாட்டிற்குரியவையே. சிவனையும் சிவமூர்த்தங்களையுமே நம் வழிபடு தெய்வங்களாகக் கொள்ள முடியும். சிவனை மட்டுந்தான் வழிபடவேண்டிய நிலையிலுள்ள நாம் சிவமூர்த்தங்களிலும் சிவனைக் காணும் முறைமையாலே அவற்றையும் வழிபட முடியும்.

சைவனுக்கென்றொரு வாழ்வியலுண்டு. சைவனுக்கென் றொரு பண்பாடு உண்டு. சைவனுக்கென்றொரு கோலம் உண்டு. பார்த்த பார்வையிலே ஒருவன் சைவனா அல்லனா என்று கண்டுகொள்ள முடியும். அந்த அளவிற்குச் சைவம் அவன் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. சைவ சமயத்தவனின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் சைவசமய வாழ்வுடன் தொடர்புடையவைதான். காலைக் கடன்களை நிறைவு செய்தல், வீட்டினை – வீட்டுச் சூழலைத் துப்புரவு செய்தல், புனிதப்படுத்தல், அலங்காரங்கள் செய்தல், தன்னைப் புனிதமாக்கல், வழிபாட்டு முயற்சிகளில் ஈடுபடல், உணவுப் பொருட்களைப் பெறுதல், பக்குவஞ் செய்தல், உண்ணுதல், வருவாய்க்குரிய முயற்சிகளைச் செய்தல் என்பன எல்லாம் சைவ சமய வாழ்வியலின் அடித்தளத்திருந்து எழுவது தெரிகிறது. இந்த வாழ்வியல் முறையைப் புரிய வைப்பது சேக்கிழார் தந்த பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம். பெரிய புராணத்துள்ள நாயன்மாரது வரலாறுகள் இந்தக் கருமங்களை மிக இலகுவாக்கி விளங்க வைக்கின்றன. சைவ வாழ்வு என்பது இதுதான் என்று நாயன்மார் வாழ்வு முறை எமக்குச் சொல்லி நிற்கின்றன. காலையில் நாங்கள் எழுகின்றபோதோ அல்லது எழுந்தபின் இருக்கின்றபோதோ "சிவசிவா" என்று சொல்லிக் கொள்ளுவோம்; அல்லது "முருகா" என்று சொல்லுவோம். இந்த உபயோகங்கள் எல்லாம் எம்மை அறியாமலே நிகழ்பவை. ஆனால் அவையெல்லாம் இறைவனுடனானவை.

சைவ ஆசாரம்

சைவ ஆசாரம்... அது என்ன? பலர் பேசியதைக் கேட்டிருக்கிறோம்; புதிதாக ஒன்றுமில்லை. எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் கைக்கொள்பவை தான். ஒழுக்கம், ஒழுங்கு, சுத்தம், புனிதம், தூய்மை முதலான எல்லாம் ஒன்றாகி நிற்பதொரு நிலைதான் அது எனலாம். சைவ ஆசாரத்திற்கு எடுத்துக் காட்டாவதும் நாயன்மாரது வாழ்க்கை முறைகள்தான். அவர்கள் வாழ்வு ஒழுங்கானது. ஒழுக்கத்துடனானது; சுத்தமானது; புனிதமானது; தூய்மையானது; அதேவேளை நேரியது. இவற்றைப் போற்றுவது மூலம் நாங்களும் ஆசாரசீலர்களாகலாம். பண்டை நாள்களில் வாழ்ந்த

எம் முன்னோர் போதிய கல்வி அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக இருந்ததில்லை. அறிவியலை அவர்கள் கேள்விப்பட்டதேயில்லை. கணனி என்றால் "இறாத்தல் என்ன விலை?" என்று கேட்கும் நிலை அவர்களுடையது. அந்த அளவிற்கு அறிவு வளர்ச்சியில் அவர்கள் பின்னின்றார்கள்.

ஆனால் சைவ ஆசாரத்தில் அவர்கள் மிக மிக வளர்ந்து காணப்பட்டனர். அவர்கள் சைவ நெறிக்கண் நின்றார்கள்; சைவர்களாயே வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் சைவ வாழ்வு மிக உயரியதாகவே காணப்பட்டது.

நாளாந்த வழிபாடு

வழிபாடு: இறைவனை ஆராதித்தல். நாளாந்த வழிபாடு: ஒவ்வொருநாளும் இறைவனை வணங்குதல். இந்த நாளாந்த வழிபாடு என்னும் உபயோகம் ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் முறைமையையே உணர்த்துவதாக எம்மனதிற் பட்டுவிட்டது. எல்லோரும் அப்படித்தான் எண்ணுகிறார்கள். எல்லோரும் எண்ணுகின்றபோது நாம் விலக்கானவர்களில்லையே! நாமும் அவர்களுடனாகித்தான் சிந்திக்க வேண்டும். நாம் சிந்திக்கக் கூடிய ஜீவன்கள். எனவே எமக்கென்றும் ஒரு தனித்துவம் இருக்கத்தானே வேண்டும். ஆகவே நாம் நாமாகவே சிந்திப்போம். எங்குமுள்ளவனாகிய இறைவனை ஆலயத்திற்குச் சென்று வழிபட்டாற்றான் நாளாந்த வழிபாடாகுமா? மற்றொரு கருத்து; நாங்கள் செய்யும் எந்தக் கருமத்தையும் இறைவழிபாட்டுடன் தானே ஆரம்பிக்கின்றோம். அவையெல்லாம் நாளாந்த வழிபாட்டுள் அடங்குமா? கோயிலிற் செய்வதுதான் நாளாந்த வழிபாடாகுமெனில் வீட்டில் வேலைத் தலத்தில் நாளும் நடைபெறும் வழிபாடுகளையெல்லாம் நிறுத்தி விடுவதா? அல்லது அவற்றையும் ஆலயத்திற்குக் கொண்டு செல்வதா? இப்படியொரு சஞ்சல நிலை ஏற்படுவது இயற்கைதான்.

எனவே, நாளாந்த வழிபாடு என்னும்போது நாம் இரண்டு பிரிவுள் அதனை அடக்கிச் சிந்திக்க வேண்டியவர்களாகின்றோம். ஒன்று ஆலயத்தில் நடைபெறும் நாளாந்த வழிபாடு. மற்றையது வீடு முதலான இடங்களில் நடைபெறும் நாளாந்த வழிபாடு. இவற்றுள் வீட்டுடனான நாளாந்த வழிபாடுதான் என்றும் நடைபெறக் கூடியது. மற்றையவை இடையீடுபட்டுப் போகக் கூடியவை. ஆகவே வீட்டுடனான-வழிபாட்டுச் சிந்தனைகள் விரிவான கருத்துப் பரிமாற்றத்திற்கு உள்ளாக வேண்டும்.

நாளாந்த வழிபாடு - வீட்டில்

வீட்டில் நடைபெறும் சகல வேலைகளும் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகின்றன. இந்தவகை வழிபாடு களனைத்தையும் நாளாந்த வழிபாட்டுடனாக்கிக் கொள்ளத்தான் வேண்டும். அவை நாளாந்தம் நடைபெறுபவை என்பதால் நாளாந்த வழிபாட்டுடனாக்கிக் கொள்ளலே முறைமையாம். அதிகாலையில் நாம் நித்திரை விட்டெழும் போதே "சிவசிவ" என்று சொல்லிக் கொண்டோ அல்லது "முருகா" என்று சொல்லிக் கொண்டோ தான் எழுகின்றோம். அந்த நேரத்திலேயே எங்களை அறியாமல் வழிபாடு தொடங்கி விடுகிறது. தொடர்ந்து விபூதி தரிக்க வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிப்பு. சைவ வினாவிடை முதலாம் புத்தகத்தில் விபூதி தரிக்க வேண்டிய நேரங்கள் பற்றி நாவலர் குறித்துள்ள இடத்தில்:

> "நித்திரை செய்யப் போகும்போதும், நித்திரை விட்டு எழுந்த உடனும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும் போதும், சூரியன் அஸ்தமிக்கும் போதும், ஸ்நானஞ் செய்தவுடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனம் செய்த பின்னும் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ள வேண்டும்"

என்னும் விபரங் காணப்படுகிறது. இந்த நிகழ்வு நடைபெறுஞ் சந்தர்ப்பமெல்லாம் நாளாந்த வழிபாட்டுடனானவை தானே! தொடர்ந்து தேவாரம் ஓதுதல் என்பவற்றைச் செய்து காலைக் கடன் கழிக்கும் முயற்சியில் தொடர்புபடலாம். மலசல மோசனஞ் செய்யும் வேளையிற் கூட சிவ நினைவு இருக்கத்தான் செய்யும். நீருள் அமிழ்ந்து குளிக்கும் போது சிவ சிவ என்று சொல்லிக் கொண்டுதான் குளிக்க வேண்டும். நீரை மொண்டு தன்மீது ஊற்றி நீராடும்போதும் சிவ நினைவுடன் செய்வதுதான் பொருத்தமானது. ஈரந் துவட்டுதல் முதலான நிகழ்வுகளின் போதும் ஏதாவதொரு திருமுறைப் பாடலை வாய் ஓதிக் கொண்டிருக்க வேண்டும்.

> *"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல்*
> *வையத்து*
> *முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்*
> *மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்*
> *பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே"*

என்பனவாய திருப்பாடல்கள் ஓதப்படக் கூடியவை. உரத்து ஓத வேண்டுமென்றில்லை. தன் காதிலே தான் கேட்டுக் கொண்டிருந்தாற் போதுமானது. சிவ சிந்தையை நிலை நிறுத்துவதுதான் நோக்கம்.

நீராடுவதற்கு முன்பாக வீட்டினையும் சுற்றாடலையும் கூட்டித் தூய்மையாக்க வேண்டும். பின்னர் சாணத்தை நீரிலே கரைத்துச் சுற்றுப்புறமெங்குந் தெளிக்கலாம். நாளாந்தம் சாணி கரைத்த நீரைத் தெளிப்பது முடியாத காரியமெனக் கண்டால் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய தண்ணீரைத் தெளித்து இலேசாக மஞ்சள் நீர் தெளித்துவிடலாம். பட்டணப் பகுதிகளில் வெற்று நிலம் இல்லாதிருக்கலாம். சீமேந்து போடப்பட்ட நிலமெனில் நீராற் கழுவிவிடலாம்.

நிலம் அமைந்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ப வீட்டின் முன்னே வாயிலுக்கு நேராகக் கோலம் போடலாம். மண் நிலமானால் சாணத்தால் மெழுகிக் கோலமிடலாம். சீமேந்து நிலமானால் நீரினாற் கழுவிவிட்டுக் கோலம் போடலாம். எந்தநாளுங் கோலம் போடல் தவறாகாது. வேலை நெருக்கடி காரணமாகக் கோலம் போட முடியாதெனக் கண்டால் விசேட காலங்களில் மட்டும் போட்டுக் கொள்ளலாம். வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மார்கழிமாதம், நவராத்திரி, திருமணநாள், நிச்சயதார்த்தம், பொன்னுருக்கல், பூப்புனித நீராட்டு விழா, அந்தியேட்டி, வருடாந்தத் திதிநாள், திருக்கார்த்திகை, ஆவணிச் சதுர்த்தி, தைப்பூசம், சிவராத்திரி என வரும் சிறப்பு நாள்களைக் கோலம் போடும் நாள்களாகக் கொள்ளலாம். போடப்படுங் கோலம் வீட்டில் நடைபெறும் நிகழ்வை அறிவுறுத்தவல்லதாய் அமைய வேண்டும். இந்த நிகழ்வுகள் எல்லாம் சிவ உணர்வை வளர்ப்பன என்று நினைய வேண்டும். இதற்காக வெள்ளை அரிசி மா மட்டுந்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இப்போது அலங்காரத்தை நோக்கமாகக் கொண்டு வெவ்வேறு நிறங்களும் வெவ்வேறு

பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. அந்த முறைமை சிவ சிந்தனைக்கு ஊறுவிளைப்பது. எனவே தவிர்க்க வேண்டும். அமங்கல நிகழ்வின்போது கோலம் போடுதல் இல்லை என்பது நினைவிலிருக்க வேண்டும்.

இதன் பின்னர்தான் நீராட வேண்டும். தொடர்ந்து வீட்டில் வழிபடுமிடத்தைப் புனிதமாக்கித் தீபமேற்றி நிவேதிக்கக் கூடியனவாக உள்ளவற்றை நிவேதித்து வழிபடலாம். நிவேதிக்கும் போது எது இல்லை என்றும் துன்பப்பட வேண்டியதில்லை. திருமுறை நூல்களுள் எதையாவது ஒன்றை வைத்துத் தீபாராதனை செய்து வழிபடவேண்டியது அவசியம். திருமுறை நூல் ஒன்றும் இல்லையென்றால் தேவார திருவாசகம் முதலானவை அச்சிடப்பட்ட ஒரு நினைவு நூலையாவது வைத்து வழிபடலாம்., தொடர்ந்து நடைபெற வேண்டிய வேலைகளை மனத்திலே கொண்டு அவற்றுக்குப் பாதிப்பேற்படாத வண்ணம் வழிபாட்டினை மேற்கொள்ளலாம். தொடர்ந்து இறை நினைவுடனாக உணவு கொள்ளல் நல்லது. இந்த வேளை ஆலயத்திற்குச் செல்லலும் தொடரலாம். இது எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாக அமையுமோ என்பது கேள்விக்குரியது.

மதிய உணவு கொள்ளும்போது நீர் வளாவுதல், உணவில் சிறிதளவு எடுத்து ஒரு பக்கமாக வைத்து வழிபடல் என்பன நடைபெறுவதைப் பல சைவர்களிடம் காணுகின்றோம். சூரியன் மறைந்ததும் விளக்கேற்றி வழிபாடாற்றுவதும், தொடர்ந்த எமது முயற்சிகள் நிறைவாகியதும் சிவ சிந்தனையுடன் படுக்கையினிடமாதலும் நிகழும். படுக்கை இடமாகி இருந்து நினைய வேண்டிய திருப்பாடல்கள் உண்டு. சிறப்பாக மணிவாசக சுவாமிகள் அருளிய அடைக்கலப்பத்து என்னும் பதிகத்தில் பதிந்துள்ள திருப்பாடல்கள் பத்தினையும் நினைந்து பார்க்கலாம். முடியாவிடத்து ஒரு சில திருப்பாடல்களையாவது நினையலாம். அதுவும் முடியவில்லையெனில் ஒரு திருப்பாடலையாவது பாராயணஞ் செய்து துயிலலாம்.

"செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாயுன் அடைக்கலமே"

இது அந்தப் பதிகத்து முதலாவது திருப்பாடல். துயிலத் தொடங்கும் போது பின்னே நிகழ்வது எதுவும் எமக்குத் தெரியாது. ஆதலின் எம்மைப் பூரணமாக அவனுக்கு அர்ப்பணித்து நிறைவான சரணாகதி நிலையில் துயில்வது மனத்திற்கு அமைதி தருவது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

நாளாந்த வழிபாடு - தொழிலிடத்தில்:

மாணவர்களாக இருந்தாலென்ன, பெரியவர்களாக இருந்தாலென்ன எதையும் எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி சிவமயம் எழுதித்தான் மேலுந் தொடருவோம். எழுத்து முயற்சி உள்ளவர்களுக்கு இது நாளாந்த வழிபாட்டு முறையாக இருக்கின்றது. வாகனங்களைச் செலுத்துபவர்கள் தமது இருக்கையில் இருந்து கொண்டு அல்லது நிற்கவேண்டிய இடத்தில் நின்று கொண்டு இறைவனை நினைந்து ஆராதித்து விட்டுத்தான் வாகனத்திற் கைவைக்கின்றார்கள். இது நாளும் நடைபெறுவது.

சந்தையிற் பொருள் விற்பனை செய்பவன் சிவ சிந்தையுடன் கொடுத்து இறை அர்ப்பணமாகச் சிறுதொகையை ஒதுக்கி வைத்து விட்டுத் தான் வியாபாரத்தைத் தொடர்வான். கடைக்காரன் நாளும் தீபாராதனை செய்தே தன் முயற்சியைத் தொடர்வான். பலகாரம் செய்பவர் முதல் எடுக்கப்படுவதைக் கடவுளுக்கு நிவேதித்துத் தொழிலைத் தொடர்வார். இந்த முறைமை யெல்லாம் கல்வி வளச் செறிவு இல்லாத தொழிலாளரிடத்தும் நாளுங் கண்டு கொள்ளலாம். இந்தவகைத் தொழிலாளி யாராகவிருந்தாலும் நாளும் வேலை ஆரம்பிக்கும் போது தனது முதல் வருவாயின் ஒரு பகுதியைச் சிவனுக்கு அர்ப்பணித்து வழிபடுவது தவறாத ஒரு செயலாக அமைந்துவிடுகிறது.

கதிரையிலமர்ந்து மேசையிலுள்ள கோவைகளைப் புரட்டிப் பார்த்துக் கையொப்பமிடுபவரும் சிவனை நினைந்து கொண்டுதான் சேவையைத் தொடர்கின்றார். அவருக்கு அதுதான் தொழிலிட நாளாந்த வழிபாடு. சில அலுவலகங்களில் படம் வைத்துக் கற்பூர தீபத்தை நாளும் ஏற்றித்தான் கும்பிட்டு வேலை ஆரம்பிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் திருமுறை ஆராதனை செய்துதான் படிப்புத் தொடங்குகிறது. மரவேலை செய்பவர்கள், இரும்பு வேலை செய்பவர்கள், கல்லிற் சிற்பஞ் செய்பவர்கள் நாளுங் காலையில் தமது ஆயுதங்களில் இரண்டொன்றை இறைவன் முன் நிவேதித்து வழிபட்டு வேலையை ஆரம்பிப்பர்.

இப்படிச் சிந்திக்கும் போது நாளாந்த வழிபாடு என்பது சுருங்கி அல்லது விரிவு பெற்றுத் "தொடர்ந்த இறைசிந்தனை யுடனாகி" என்ற பொருளுடனாகி நிற்கலாம். நாளாந்த வழிபாடு எனவே நாளுஞ் சிந்தித்தல் என்றாகும். நாளுஞ் சிந்தித்தல் எந்த நேரமும் நினைதல் என்றாம்.

நாளாந்த வழிபாடு - ஆலயத்தில்:

ஆலயங்களில் நாளாந்த வழிபாடு செய்தல் எல்லோருக்கும் சாத்தியப்படக் கூடிய ஒன்றன்று. அதிகாலை வேலைக்குப் போய் இரவு திரும்பி வீடு வருபவர்கள் இருக்கிறார்கள். அதன்பின் அவர்கள் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொண்டு ஆலயம் சென்று வருவது முடியாத காரியம். எனவே தான் அவர்கள் தொழிலிடத்திற்குச் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் கோயிலின் முன்புறத்தே நின்று நாளாந்த வழிபாட்டை நிறைவு செய்து கொள்கின்றார்கள். அவர்கள் செய்யக்கூடியது அவ்வளவு தான்.

துடக்குடன் கூடியவர்களும் ஆலயஞ் செல்ல முடியாது. ஆலய வளவிற் போய் நிற்பதும் பொருத்தமற்றது. துடக்கு நீங்குவதுவரை அவர்கள் ஆலயமுன் புறத்திற்குக் கூடப் போகாதிருப்பதுதான் பொருத்தமானது.

ஓய்வு பெற்று வீடுகளில் இருக்கும் முதியவர்கள், எட்டு மணித்தியாலங்களுடன் வேலை நிறைவு பெறுபவர்கள் ஆலயங்களிலும் நித்திய வழிபாடு செய்யலாம். இவர்கள் வழிபாடு நாவலர் பெருமான் எழுதிய சிவாலய தரிசனவிதி என்பதற் கமைவாக இருக்கவேண்டும்.



தமிழ் இலக்கிய வரலாற்று நோக்கில் கிரியை மரபில் நாட்டியம்

"கலாவித்தகர்"
திருமதி. அபர்ணா
பாலகணேஸ்வரக் குருக்கள்
B.A. (Hons)



வேத காலக் கிரியை நெறியில் நாட்டியம்

'வித்' என்ற வினையடியிலிருந்து பிறந்தது தான் வேதம். வித் என்றால் அறிவு எனப் பொருள் படும். எனவே அறிவு சார் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால் வேதம் 'அறிவு நூல்' என வழங்கலாயிற்று. வேதம் கூறும் அறிவானது ஆத்மீக நிலைக்கு மட்டுமல்லாது அதனை அடைவதற்குரிய வழிமுறைகளையும் கூறி நிற்கிறது. இந்த வகையில் வேள்வி களிலும் வழிபாடுகளிலும் வேத மந்திரக் கிரியைகளுடன் ஆடலும் பாடலும் இடம் பெற்று வந்தமை ஆய்வாளர் கூறும் கருத்தாகும். இங்கு மனிதர்கள் மட்டுமல்லாது தெய்வங்களும் நடன விற்பன்னர் களாக இருந்து வந்துள்ளனர். எடுத்துக் காட்டாகப் பார்வதி தேவியால் லாஸ்யம் உஷைக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. சிவபெருமானால் தாண்டவம் தண்டு முனிவருக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும் இந்திரன், மருதுக்கள் முதலிய தேவர்களும் சிறந்த ஆடற் கலைஞர்களே. இவ்வாடற் கலையைக் குறிக்கும் 'நிர்து' என்ற பதம் பல முறை கிரியைகளில் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. வேத காலத்திற்குப் பிற்பட்ட கால வேதங்களாகிய சாம, அதர்வண வேதங்களில் நாட்டியம் பற்றிய குறிப்புகள் உண்டு. சில தெய்வங்கள் ஆசானாக வர்ணிக்கப் படுவதோடு நடிகனும் நடனக் கலைஞனும் சமயக் கிரியைகளில் முக்கியத்துவம் வகித்தவற்றை இவ் வேதங்கள் கூறி நிற்கின்றன. இறைவனின் நிருத்த மூர்த்தங்கள் பற்றி வேதத்தின் சாரமாகிய 'சிவ சகஸ்ர நாமக் கிரியை' விதந்துரைந்துள்ளது. இன்று ஆலயங்களில் காணப்படும் கரண சிற்பங்கள், தாண்டவ ஒவியங்கள் என்பனவும் வேத சாஸ்திரக் கிரியை நூல்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப் பட்டவை. இக் காலத்தில் மட்டுமன்றித் தொடர்ந்து வந்த சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்க, ஐரோப்பியர் காலம் போன்ற வரலாற்றுப் புகழ்மிக்க காலங்களில் கூடச் சிற்ப, ஒவிய, கட்டிட வடிவங்கள் யாவும் வேதக் கிரியைகளை அடியொற்றிய சிற்ப சாஸ்திர விதிப்படியாகவே அமைக்கப்பட்டுள்ளமை ஈண்டு கவனிக்கத்தக்கது.

சங்க காலம்

சங்கம் வைத்து மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் தமிழ் வளர்த்தனர். அந்த வகையில் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற சங்கங்களை அமைத்து அக்கால வேந்தர்கள் கலை வளர்த்தமையாலேயே அக்காலம் "சங்க காலம்" என வழங்கலாயிற்று. சங்க காலத்தில் அக்காலச் சமூக பண்பாட்டு விழுமியங்களுக்கேற்ப ஆடல் வகைகள் இருந்து வந்துள்ளன. குரவைக் கூத்து, ஆச்சியர் குரவை, துணங்கைக் கூத்து, குன்றக் குரவை போன்ற ஆடல் வகைகள் சங்க காலத்தவை. இவ் வாடல்கள் பற்றி –

"மணிப்பூ முண்டகத்து மணன் மலி காணற் பரதவர்
மகளிர் குரவையோ டொலிப்ப"

என மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது. பாலை நில மக்களால் ஆடப்பட்டுவந்த துணங்கைக் குரவை வேலன் வெறியாடல் போன்ற கூத்துக்கள் பற்றிய கருத்துக்கள் பதிற்றுப் பத்து (பக்கம் 10 – 12)இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய ஆடல்கள் யாவும் சமய விழாக்களிலேயே ஆடப்பட்டன. எனவே இந் நடனங்கள் மதம் சார் நடனங்களாக ஆக்கப்பட்டனவாகையால் இக் கலை மரபுகளின் கிளைகளே பிற்காலக் கிரியை மரபுகளின் விருட்சமாகி இருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

சங்கமருவிய பல்லவர் காலங்கள்

கி. பி 3 – 9 நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற சங்கமருவிய பல்லவர் ஆட்சிக் காலங்களில் ஆலயங் களோடு கலையும் அதன் அடிப்படையின் உணர்ச்சி பூர்வமான பக்தி இயக்கங்கள் தோற்றம் பெற்று இறைவன் கலை வடிவினன், நாட்டிய உருவினன், கிரியா தத்துவ நாயகன் என்ற கருத்துக்களை மெய்ப்பிப்பதற்காகவே இக்காலத்து திருமுறைகள் தோற்றம் பெற்றன எனில் மிகையாகாது. சான்றாக 'பாட்டுக்கும்' ஆட்டுக்கும் பண்பா போற்றி' 'ஆடிப்பாடி அண்ணாமலை தொழ, ஓடிப்போம் நமதுள்ள வினைகளே' எனத் திருநாவுக்கரசு நாயனாரும், 'ஆடலான் பாடலான்' என ஞான சம்பந்தப் பெருமானும், 'பன்னாளும் கூடியாடி' 'கூடிய இலயஞ்சதி பிழையாமைக் கொடியிடை உரிமை காண ஆடிய அழகா' என சுந்தர மூர்த்தி நாயனாரும், 'ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை' என மாணிக்க வாசக சுவாமிகளும் 'பாடோமே யெந்தை பெருமானைப் பாடி நின்றாடோமே' எனப் பெரியாழ்வாரும் போற்றிப் பாடியுள்ளமை கண்கூடு. இவற்றை இங்கு நோக்கும் போது ஆடலரசன் ஆகிய கூத்தர் பெருமானின் தோற்றப் பொலிவை, அவனுக்குப் பிரீதியூட்டும் இவ் ஆடற்கலையை, நாயன்மார்களும் ஆழ்வார்களும் முறையே தமது தேவாரங் களிலும், நாலாயிரம் திவ்யப் பிரபந்தங்களிலும் போற்றிப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு இவற்றை அலசி ஆராயும் போது, மந்திரக் கிரியைகளை அடிப்படையாகக் கொண்டே தேவாரங்கள் இயற்றப்பட்டன. எனவே தேவாரங்கள், வேதத்தின் சாரமாக விளங்குகின்றன. ஆகையால் வேத மந்திரக் கிரியைகளின் தொகுப்பான வேத சாரத்தின் ஊற்றே பரதம் என்பது தெளிவாகிறது. எனவே பல்லவர் காலத்தில் எழுச்சி பெற்ற இவ் வேத சாரத்தின் அடிப்படையிலேயே பரதம் வளர்ச்சி பெற்றது எனில் மிகையில்லை.

சோழர் காலம்

முடியுடை மூவேந்தர் காலங்களுள் முக்கியத்துவம் மிக்கதான சோழர் காலத்தில் நாட்டியமானது சமயத்தோடு, அதன் பண்பாட்டோடு, கிரியை மரபுகளோடு பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். சான்றாக, இக் காலத்தில் எழுச்சி பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் 'தாண்டவ மூர்த்தி' வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளதைக் காணலாம். இவ் ஆலயத்தில் நடைபெற்று வந்த விழாக்களிலும் கிரியைகளிலும் கிரியை முறைகளில் கூறப்பட்டவாறு நவ சந்திகளிலும் நாட்டியம் ஆடுவதற்கும் பாடுவதற்கும் பல தேவரடியார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் என ஆலயக் கல் வெட்டுகளும், ஆலய மகாத்மியங்களும் பறை சாற்றி நிற்கின்றன. இக் கால ஆடல் வகைகள் பற்றிக் குறிப்பிடுகையில் கல்வெட்டு ஒன்று, ஆடவல்லான் எனும் மரக் காலால் நெல்லு நூற்றுக் கலமாகவும்' என குறிப்பிடுகின்றது. இக்கால கட்டத்தில் எழுச்சி பெற்ற சிற்ப ஓவியங்கள் கூடச் சிற்ப சாஸ்திரக் கிரியா நெறிகளைத் தாண்டி விடவில்லை. சாஸ்திர முறைகளுக்கேற்பவே சிவனின் கரணங்கள், நாட்டிய சிற்பங்கள் என்பன செதுக்கப்பட்டுள்ளன. இத்தகைய கரணங்களைப் பற்றிய விளக்கங்கள் கரண நாட்டியங்கள் என்பன இன்றும் கிரியைகளில் பாவிக்கப்படுகிறது. சான்றாக மஹா கும்பாபிஷேக 'கலா ஹர்ஷண' கிரியையைக் குறிப்பிடலாம். இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த கிரியா நாயகனைப் பற்றிச் சமகால திருவிசைப்பா ஆசிரியர்களுள் ஒருவரான கருவூர்த் தேவர் குறிப்பிடுகையில்,

"இன்னாரும் புருவத்து இறைய மயிலனையார்
வில்லங்கல் செய் நாடகசாலை இந்நடம் பயிலும்
இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேஸ் வரத்திற்கே."

எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். சோழர் கால ஆட்சியின் போது ஆலயங்களில் 'நானாவித மண்டப நடன சாலை' என்ற சாலை இருந்தமைக்குக் கல்வெட்டு ஆதாரங்கள் உண்டு. இத்தகைய நடனசாலைகளைப் பற்றி த்வஜ ஆரோகண அவரோகண (கொடி ஏற்ற இறக்க)ங்களில் சொல்லப்படும் கிரியா பத்ததிகளில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் திருவாவடு துறையில் உள்ள திருத்தலம் ஒன்றிலே 'நானாவித நடன சாலை' ஒன்று இருந்ததாக முதலாம் குலோத்துங்கன் கால சாசனமொன்று கூறுகிறது. மேலும் இக்கால கட்டத்தில் சிற்ப சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு கிரியா தத்துவ விதிமுறைகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட நிருத்த மூர்த்திகள், விக்கிரகங்கள் என்பன கவனிக்கத்தக்கன. குறிப்பாக நடராஜப் பெருமானின் நேர்த்தியான விக்கிரகங்கள் யாவும் ஐம்பொன், கல்லு, உலோகம் முதலியவற்றால் ஆக்கப்பட்டன. இத்தகைய கூத்த நாதனின் தோற்றப் பொலிவைப் 'பெரியபுராணம்' –

'கற்பக பூந்தளிரடி போங்காமரு சாரியை செய்ய
உற்பல மென் முகிழ் விரல் வட்டணையோடும் கை பெயர
பொற்புறு மங்கையின் வழிப்பெரு கயற்கண் புடை பெயர
அற்புதம் பொற்கொடி நுடங்கி ஆடுவது போல் ஆடினார்?'

என வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும் கிரியைகளில் 'நாட்டியம் சிவ பிரானுக்குரியதே' எனக் கூறப்பட்டுள்ளவாறு காஞ்சி நகர வர்ணனையிலே,

'நாட்டியச் செயல் யாவையும் சிவனது நடனம்
பாட்டிசைத் திறன் யாவையு மன்னாதே'

எனக் குறிப்பிட்டுள்ளது. சோழர் காலத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே கோயிலமைப்பு, கோயில்களில் இடம், தெய்வீகச்

சிற்பங்கள், சிலைகள், விக்கிரகங்கள், ஆலயக் கிரியைகள் பற்றி ஆகமக் கிரியைகள் எடுத்தியம்பி விட்டன. ஆகமங்களிலும் அதன் வழிவந்த பத்ததிகளிலும் கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திய கிரியைகளில் இடம் பெற வேண்டிய பண், இராகம், தாளம், நிருத்தம், வாத்தியம் முதலியன பற்றிய விளக்கங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இம் மரபை ஒட்டிய பல்லவ, சோழ, நாயக்கர் காலங்களில் ஆலயக் கிரியை முறைகளில் இத்தகைய கலைக் கிரியைகள் இடம் பெற்று வந்தன – வருகின்றன. இக்கிரியைகளைத் திறம்பட நிகழ்த்துவதற்காகவே அக்கால அரசர்கள் ஆலயங்களில் நிரந்தரமாகத் தேவதாசிகளையும் இசைக் கலைஞர்களையும் அமர்த்தியிருந்தமை கண் கூடு. இத்தகைய கிரியா தானங்களை, நிருத்த தானங்களை வழங்கி வந்த மகளிரை 'பதியிலார், ரிஷிதளியிலார், தனிச் சேரிப் பெண்டிர், கூத்திகள்' எனப் பலவாறு அழைத்தனர். இவர்கள் சைவ ஆலயங்களில் இவ்வாறு அழைக்கப்பட்டது போல வைணவ ஆலயங்களில் 'ஸ்ரீ வைஷ்ணவ மாணிக்கம்' என அழைக்கப்பட்டு வந்தனர். இவர்களே நாட்டிய கர்த்தாவாகிய கூத்தப் பிரானிற்கு நாட்டியாஞ்சலி செய்யும் கருவிகளாக இருந்து வந்தனர். இவர்கள் மூலமாகவே ஆலயங்களில் கிரியைகளின் போது நாட்டியாஞ்சலி செய்யப்பட்டு வந்தது. எனவே ஆலயக் கிரியை முறையில் நாட்டியம் வளர்ச்சி பெற அன்றும், இன்றும், என்றும் உதவுபவர்கள், உதவப் போகின்றவர்கள் இத் தேவரடியார்களே எனில் மிகையாகாது.

கிரியா தத்துவ அடிப்படையில் வெளிவந்த சிற்ப ஓவியங்களில் நாட்டிய வளர்ச்சி

கிரியைகள், பத்ததிகள் அதாவது நவசந்தி நாட்டியம், கலா கர்ஷணம் போன்றவற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கரண வடிவங்களோடு வேறு பல கரணங்கள், தாண்டவ நிலைகள், திருவிளையாடல்கள் போன்றவை ஆலயங்களில் சிற்பமாகவும் ஓவியமாகவும் வடிக்கப் பெற்றவற்றைத் தஞ்சையில் காணலாம் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் செதுக்கப்பட்ட கரணங்களுள் முதலாவது கரணமாகிய 'தல புஸ்பபுடம்' தொடக்கம் எண்பத்து ஓராவது கரணமாகிய 'சுபிதம்' வரையுள்ள கரணங்கள் அவ் ஆலயத்தின் கற்பக் கிருகத்தின் மேல் மாடியில் செதுக்கப்பட்டு உள்ளன. துரதிர்ஸ்டவசமாக எஞ்சிய இருபத்து ஏழு கரணங்களும் செதுக்கப்படவில்லை. ஆனால் அவற்றையும் அமைக்க ஆயத்தம் செய்யப்பட்ட சான்றுகள் காணப்படுகின்றன என்று இது பற்றி நன்கு ஆராய்ந்த கலாநிதி 'பத்மா சுப்ரமணியம்' அவர்கள் குறிப்பிட்டு உள்ளார். சமயக் கிரியைகளிலே குறிக்கப்பட்டு உட்கருத்தைப் புலப்படுத்தும் நரட்டிய கரண சிற்ப ஓவியங்கள் பலவும் ஆலயச் சூழலிலே வரையப்பட்டிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த வகையிலேயே வேத சிற்ப சாஸ்திர முறையைத் தழுவியே பனைமரக் கோயில், மாமல்ல புரம் குடைவறைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஆகிய கோயில்களில் சிற்பங்கள், ஓவியங்கள் அமைக்கப்பட்டுள்ளமையைக் காண முடிகிறது. இத்தகைய ஓவியக் காட்சியையே கம்பராமாயணம்,

'கைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தாங்க
கைவழி நயனம் செல்ல கண்விழி மனமும் செல்ல
ஐய நுண்ணிடையார் ஆடும் அரங்கு கண்டார்.'

எனக் குறிப்பிடுகிறது. காளிதாசனின் 'மாளவிகாக்கினி மித்திரம்' சோம தேவரின் 'கதாசரித் சாகரம்' போன்ற நூல்களும் கலையின் சிறப்புப் பற்றி எடுத்துரைக்கத் தவறவில்லை. இவ்வாறு வேதக் கிரியை மரபிற்கமைய வரையப்பட்ட இந் நடன சிற்ப ஓவியங்களே பிற்கால அஜந்தா ஓவியம், பாக் ஓவியம், சிகிரியா ஓவியம், சித்தன்ன வாசல் ஓவியம் போன்றன வரையப்பட்டு வளர்ச்சி பெற உதவின. எனவே, கிரியைகளை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலம் சிற்ப ஓவியங்கள் மூலம் நாட்டிய வளர்ச்சிக்கு வித்திட்டவை வேதக் கிரியைகள் வழிவந்த ஆலயங்களும் கிரியா தத்துவங்களுமேயாகும்.

நாட்டிய வளர்ச்சிக்குத் தேவாரங்களின் பங்களிப்பு

ஆலயங்கள் என்று தோற்றம் பெற்றனவோ அன்று தொட்டு இன்று வரை தேவாரங்கள் கிரியைகளுள் ஒன்றாகவே கருதப்பட்டு வருகின்றன. அபரக் கிரியைகளாயினும் சரி, ஆலயக் கிரியை களாயினும் சரி தேவாரங்கள் கிரியைகளோடு பின்னிப் பிணைந்த கிரியைகளுள் ஒன்றாகவே வழங்கப்பட்டு வருகின்றன. இறைவனுக்கு வழங்கப்படும் பாமாலையாகத் தேவாரம் விளங்கு கின்றது. இதனையே 'தேவகாரம்' என குறிப்பிடுகின்றனர். தேவ + காரம் = தேவாரம். 'தேவ்' என்றால் 'இறைவன்' என்றும் 'கார' என்றால் 'மாலை' என்றும் பொருள்படும். எனவே தேவாரம் என்றால் இறைவனுக்குச் சாத்தும் 'பாமாலை' என வழங்கலாயிற்று. சைவ நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்றோர் இப் பாமாலையைப் சாற்றியே பேரின்பப் பெரு வாழ்வை எய்தினர். இந்த வகையில் திருநாவுக்கரசு நாயனார் இறைவனின் தோற்றப் பொலிவைக் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாய்... எடுத்த பொற்பாதமும்' எனவும், காரைக்கால் அம்மையார் 'அறவா நீ ஆடும் போது' என்றும், நாவுக்கரச நாயனார் கையாரக் கும்பிட்டு கூத்துமாடி என்றும் ஆராதித்துள்ளனர். தீதோடு 'ஆடிக் கொண்டார் அந்த' எனவும் 'அம்பலத்தாடும் ...' எனவும் 'நடனம் ஆடினார்' எனவும் 'இடதுபதம் ...' எனவும் பல பாடல்கள் இறைவனைப் போற்றி நிற்கின்றன. மேலும் இருக்கு வேத காலத்தில், வேள்வி ஆசிரியர் கடவுளாகவும் ரிஷிகளாகவும் வேடம் பூண்டு அமரத்துவ உலக சம்பவங்களை வேள்வி மேடையில் நடித்துக் காட்டியுள்ளனர். வேள்விக் கிரியைகளின் போது தேவாரங்களுடன் பாட்டும் பாவமும் இருந்ததாகக் குறிப்புண்டு. 'பாஸ்கர கிருஹ்ய சூத்திர மந்திரங்களிலே' முதல் மூன்று வர்ணத்தவர்களும் ஆடல் பாடல்களைத் தொழிலாகக் கொள்ளக் கூடாது என கூறப்பட்டுள்ளது. 'மகாவிரதம்' என்ற கிரியையிலே பெண்கள் 'தீயைச் சுற்றி ஆடுவதும் பாடுவதும் கிரியை மரபு. இராமாயணக் கதையில் 'அஸ்வமேதயாகக் கிரியையிலே அபிநயத்தோடு தேவாரங்கள் பாடப்படுவதாகக் குறிப்புண்டு. மேலும் 'மகாபாஸ்ய சூக்தத்திலே' ஆண்கள் பெண்களாக, பெண்கள் ஆண்களாக நடிக்கும் மரபு காணப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இவை போன்ற நாட்டிய மரபுகள் யாவும்

சமயத்தோடு சேர்ந்து சேர்ந்து தேவாரத்தோடு கலந்தே ஆடப்பட்டு வந்தன என 'வடமொழி இலக்கிய வரலாற்றிலே' சோ. நடராஜன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே இத் தேவாரங்கள் யாவும் கிரியா நாயகனாகிய தாண்டவப் பெருமானிற்கு, கிரியைகளின் தொகுப்பான வேத மந்திரங்களைத் தொகுத்து பாமாலையாகச் சாத்தியுள்ளன. இங்கு நோக்கும் போது தேவாரம் வேத மந்திரங்களின் சாரமாகவும் தொகுப்பாகவும் அமைந்திருக் கின்றன. ஆகையால், இவ் வேத சார அடிகளான தேவாரங்களைத் துணைசார் கருவிகளாகக் கொண்டு சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் போன்ற நுண் கலைகள் வளர்ச்சி பெறலாயின.

நாயக்க காலத்தில் கிரியா நாட்டியம்

நாயக்க வம்சத்தின் பரம்பலிற்கும் அதன் வளர்ச்சிக்கும் படிக்கல்லாக அமைந்தவை சோழர் வருகையே ஆகும். இவர்களது இக்காலகட்டத்தில் ஆலயங்கள் பெருமளவில் தோற்றம் பெறாவிடினும் சமயக் கிரியை மந்திரங்களில் கூறப்பட்டுள்ளவாறு நாடக மேடைகளும், சபாக்களும் பெருமளவில் தோற்றம் பெற்றன. திருக்குற்றாலத்தில் உள்ள சபையில் நடராஜப் பெருமானுக்கேயுரிய தனிமண்டபச் சுவரிலே வர்ணம் பூசப்பட்ட நேர்த்தியான நடராஜப் பெருமானது உருவம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. இறைவனை ஓவிய வடிவில் வழிபடும் மரபு இச் சபைக்கே உரியதாகும். 'திருவலஞ்சுழி' என்னும் சிவாலயத்திலே ஓவியம் ஒன்றில் சிவன் பாம்பு ஒன்றின் மீது ஏறி நின்று ஆடும் சித்திரமும் அதைச் சுற்றி பிரம்மா, இந்திரன், சரஸ்வதி போன்ற தேவர்கள் வாத்தியம் இசைக்க, உமை பார்த்து இரசிப்பதற்காகவும் வரையப்பட்டுள்ளது. இத்தகைய நடனக் காட்சிகள் முற்காலத்திலேயே கிரியை மரபினை அடியொற்றிய சமயக் கிரியைகளில் முக்கிய இடத்தை வகிக்கும் தேவாரங்களாக வெளிவந்து உள்ளன. சான்றாகத் திருநாவுக்கரசரின் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்' என்ற தேவாரத்தைக் குறிப்பிடலாம். இவைபோன்ற இன்னோரன்ன தேவாரங்களின் அடிகளே இன்று ஓவியங்களாகவும் சிற்பங்களாகவும் மிளிர்கின்றன என்பது மறக்க முடியாத உண்மையாகும்.



சிவமூர்த்தங்கள்

"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

"தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்"

எனும் திருமந்திரமொழி இறைவனின் உயர்ந்த தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். "இறைவன் ஒன்றே (பிரம்மம்) அதை அறிஞர்கள் பலவாறு கூறுகின்றனர்" எனும் வேதவாக்கு (ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி) பரம் பொருள் ஒன்றே என்ற நிலையில் எடுத்துக் காட்டுகின்றது. நாயன்மார்கள் இறைவனை தங்கள் உணர்விலும், உறவிலும் கண்டார்கள்,

"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் நீ"

எனும் அப்பரின் தேவாரமும்,

"ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனும் மணிவாசகர் வாக்கும் திருமூலரின் "ஒருவனே தேவன்" என்ற நிலையை பிரதி பலிக்கின்றது. இந்துமதத்தில் பலகடவுள் கொள்கைகள் இருந்தாலும் அவை யாவும் ஒன்று என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்று சிவஞானசித்தியார் கூறுவதில் இருந்து தெளி யலாம். பல்வேறு நதிகளும் பல்வேறுப்பட்ட மூலங்களில் இருந்து உருவாகி பல கிளைகளாகப் பரவி ஒன்றாகி இறுதியில் கடலுடன் போய்ச் சேருகின்றது. இது போன்று பல திருவுருவங்களால் வழிப்படப்படும் வழிபாடு இறுதியில் ஒரு தெய்வ வழிபாட்டையே (சிவனையே) குறிக்கின்றது. அவனே எல்லா வற்றையும் அறிபவனாக சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

"அறிதரு சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பவன்"

இறைவன் உருவம் ஒன்றின்றி எங்குமாய் எல்லாமாய் நிற்கும் சிவத்திற்கு சிவாலயங்களில் முதல் உருவாகச் சிவலிங்கத்தையும் வழியுருவங்களாகத் தாண்டவர் (நடராஜர்), தட்சணாமூர்த்தி ஆகியோரையும் சார்புருவங்களாக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் போன்ற மூர்த்திகளையும் வகுத்துக் கூறுவார்கள்.

சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் 64 ஆகும். சிவாலயங்களில் பல உருவத்திருமேனிகள் உள. அவை உட்கருத்துக்களுடையதாயும், புராணக் கதைகளை ஒட்டியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 25 வடிவங்கள் ஆகமங்கள் புராணங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இவை மகேஸ்வர மூர்த்தங்கள் எனப்படும்.



திருமுறைகளும் வாழ்வியலும்

சி. சண்முகம்,
அரச அதிபர், வவுனியா



சைவமும் தமிழும் தொன்மை வாய்ந்தவைகளாகக் கொள்ளப்படுகின்றன. அத்துடன் அவையிரண்டும் ஒன்றுக் கொன்று நெருக்கமானவை. சைவசமய வளர்ச்சிக்குத் தமிழும், தமிழ் வளர்ச்சிக்குச் சைவசமயமும் உறுதுணையாக அமைந் திருந்தன. சிவபெருமான் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருந்து தமிழ் வளர்த்ததாக ஒரு நம்பிக்கைக் கருத்தும் கூறப்படுகின்றது. தமிழ் மொழி வரலாற்றைப் பல்வேறு கால கட்டங்களாகப் பகுத்து ஆராய்ந்துள்ளனர் மொழி, இலக்கிய ஆய்வாளர்கள். இக் கால கட்டங்களைச் சங்க காலம், சங்கம் மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், தற்காலம் எனக் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் பல்லவர் காலத்திலேயே அதாவது 7ஆம் நூற்றாண்டுகளிலேயே பக்தி இலக்கியங்கள் தோன்றலாயின. முன்னைய காலங்களில் தோன்றிய அக (காதல்), புற (வீரம்) இலக்கியங்களின் பின் சமூகத்தில் காணப்பட்ட ஒழுக்கச் சீர்கேடுகள், சமயப் புரட்சிகள், நீதி நெறி பிறழ்தல்கள் போன்ற காரணங்களை வாழ்வியலோடு சம்பந்தப்படுத்தி இறைவன் மீது மக்களை ஆற்றுப்படுத்திச் சமயக் கருத்துக்களைச் சமூகத்தில் செலுத்தும் முயற்சியாகப் பக்தி இலக்கியங்கள் தோன்றின. இக்கால கட்டத்திலேயே சமணம், பௌத்தம் போன்ற பிற சமயங்களும் தோற்றம் பெற்றுச் சைவ சமயத்தினரைத் தம்பால் ஈர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகளை முறியடிக்கும் வகையில் அக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களும், சமய குரவர்களும் பக்திப் பாடல்கள் மூலம் சைவ சமயக் கருத்துக்களைச் சமூகத்தில் புகுத்திப் பிற சமயங்களின் ஆக்கிரமிப்பை அடக்கி, மக்களை லௌகீக வாழ்வில் உள்ள நிலை யாமை எடுத்துக் கூறி, ஒழுக்க நெறியூடாகவும், பக்தி மார்க்கத்தி னூடாகவும் இறைவன் பால் ஈடுபாடுகாட்டச் செய்ய முயன்றுள் ளனர். இம்முயற்சிகளின் விளைவே அக்காலத்தில் தோன்றிய அனேகமான பக்திப் பாடல்களாகும். குடும்ப உறவுமுறை, வாழ்வியல் இன்பதுன்பங்களை எடுத்துக் கூறுவதன் மூலம் அதனூடாக இறைவன் மீது பக்தி ஏற்படச் செய்தமையால் இக்காலகட்டத்தில் பக்திப் பதிகங்கள் பிரபல்யம் பெற்றன. இசைத் தமிழால் ஈசனைப் பாடி இன்பம் கண்டனர் நாயன்மார்கள்.

இப்பாடல்களைப் பிற்காலத்தில் அதாவது பதினோராம் நூற்றாண்டில் திருமுறைகள் என வகுத்துள்ளனர். முதலில் இப் பாடல்களுக்குத் "திருப்பதிகம்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கல்வெட்டுக்களில் இருந்து ஆதாரங்கள் காட்டப்படுகின்றன. இத்திருமுறைகளுள் முதலில் வெளிவந்தவை தேவாரங்களாகும். இவற்றுள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தாமூர்த்தி நாயனார் ஆகிய மூன்று நாயன்மார் களுடைய தேவாரங்கள் ஒன்றுமுதல் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டன. இதனுள் 8236 பாடல்கள் உண்டு. மாணிக்க வாசகரின் 1056 பாடல்களைக் கொண்ட திருவாசகம், திருக் கோவையார் என்பன 8ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருமாளிகைத் தேவர் முதலானோரின் 301 திருவிசைப்பாக்களை 9ஆம் திருமுறையாகவும், திருமூலரின் திருமந்திரம் பத்தாம்

திருமுறையாகவும் வகுக்கப்பட்டன. திரு மந்திரத்தில் 3047 பாடல்கள் உண்டு. மேலும் 1400 பாடல்களைக் கொண்ட நம்பியாண்டார் நம்பி, காரைக்காலம்மையார் ஆகியோரின் திருவந்தாதி, மணிமாலை போன்ற பல்வகையான பாசுரங்கள் 11ஆம் திருமுறையாகவும், திருத்தொண்டர் புராணம் எனப் போற்றப்படும் 4286 பாடல்களைக் கொண்ட பெரியபுராணம் 12ம் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டன. எனவே இத்திருமுறைகளை மொத்தமாக 27 ஆசிரியர்கள் ஆக்கியிருக்கின்றனர். 76 நூல்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் எல்லாமாக 18326 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

திருமுறைகளின் சிறப்பு

"திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென் தமிழின் தேன் பாகாகும்
திருமுறையே கைலையின் கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வகுத்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிவலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பின்றாமால்"

என்பது திருமுறைகளின் சிறப்பியல்புகளைக் கூறுகின்ற ஒரு தனிப்பாடலாகும். திருமுறைகளின் சிறப்பியல்புகளையும், அவைகளில் சுட்டிக்காட்டப்படும் வாழ்வியல் அம்சங்களையும் முழுமையாக ஆராய்வதானால் இக்கட்டுரை மிக நீண்டுவிடும் என்பது மட்டுமல்ல அதற்கான கால அவகாசமும் இல்லை. எனவே ஆங்காங்கே சில பாடல்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் அங்கு காணப்படும் வாழ்வியல் அம்சங்களை குறிப்பாகக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உறவு முறைகளூடாக இறைவனைக் காணுதல்

நாயன்மார்களும் சமயக்குரவர்களும் இப்பூவுலகில் பிறந்து மனிதச் சமூகத்தில் வாழ்ந்தவர்கள். வாழ்வியலில் நாம் தாயை முதன்மையிடத்தில் வைத்து மதிக்கின்றோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தி வணங்குவது வாழ்வியல் வழக்கு. எனவே தான் அவர்கள் மானிட உருவில் இறைவனை உருவகித்துப் பல பாடல்களில் பாடியுள்ளனர். இவற்றுள் இறைவனைத் தாயாகவும், தந்தையாகவும், தோழனாகவும், தலைவனாகவும் போற்றிப் பாடியுள்ள பாடல்களைத் திருமுறைகளில் குறிப்பாகத் தேவாரங்களில் அதிக இடங்களில் காணலாம்.

"தாயு நீயே தந்தை நீயே சங்கரனே"
"தாயவனுலகுத் தன்னொப்பிலாத் தூயவன்"
"தாயினும் நல்ல தலைவன் என்றடியார்"

என்று திருஞானசம்பந்தர் திருவலிவலம், மற்றும், திருகோணமலைத் திருத்தலங்களைப் பற்றிப் பாடிய தேவாரப் பதிகங்களில் இறைவனைத் தாயாக நினைத்துப் பாடியுள்ளார். இதே போல,

"தாயவனை எவ்வுயிர் தன்னொப்பில்லாத்
தரு தில்லை நடம்பயிலும் தலைவன்றன்னை"

என்று திருவாரூர் தேவாரத்திலும்,

"தாயுமாயெனக்கே தலைவனுமாய்ப்
பேயனேனையுமாண்ட பெருந்தகை"

என்று திருச்சிராப்பள்ளித் தேவாரத்திலும் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனாரும் தனது தேவாரம் ஒன்றில்

"பொன்னார் மேனியனே என்று ஆரம்பித்து
அன்னே உன்னை அல்லால் இனி ஆரை நினைக்கேனே"

என்று அன்புருகப் பாடுகின்றார்.
மேலும் நோக்கின்,

"அம்மை நீ அப்பன் நீ அன்புடைய மாமனும்
மாமியும் நீ" என்றும்
"அம்மையே அப்பா ஒப்பிலா மாமணியே"

என்றும் இறைவனை விழித்துக் கூறும் பாடல்களும் திருமுறைகளில் அடங்கியுள்ளன. இவையொவ்வொன்றையும் நோக்கும் போது வாழ்வியல் உறவு முறை ஊடாக இறைவனை அடையும் பக்தி மார்க்கத்தை இத்திருமுறைகள் குறிப்பிடுவதை நாம் காணலாம்.

எமது அன்றாட வாழ்க்கையில் எமக்கு யாருடனோ கோபம் வந்துவிட்டால் சில வேளைகளில் நாம் பேயா, பைத்தியக்காரா, பித்தா என்று மற்றவர்களைத் திட்டுகின்றோம். இதே போல் மானிட உருவில் வந்த இறைவனைச் சுந்தரமூர்த்தி நாயனார் "பித்தா" என்று திட்டியுள்ளார். பின்பு சுந்தரர் இறைவனை இனங்கண்டு இறைஞ்சிப்பாடும் போது "பித்தா" என்றே தன்னைப் பாடுமாறு இறைவன் அவருக்கு அடியெடுத்துக் கொடுக்கவும், சுந்தரர்

"பித்தாப் பிறை சூடிப் பெருமானே அருளாளா"

என்று இறைவனை வேண்டிப் பாடுகின்றார். இப்பாடலின் மூலம் மனிதர்கள் மற்றவர்களிடத்தில் தம் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்ற வாழ்வியல் நெறி எடுத்துக் காட்டப்படுகின்றது.

வாழ்வியல் துன்பங்களை வெறுத்தல்

வாழ்வில் பல்வேறு துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கின்றார்கள். ஒரு துன்பம் இன்று நடைபெற்றுவிட்டால் நாளை நல்லது நடக்கும் என்று விரும்பி நம்பிக்கையோடு எதிர்பார்ப்பது மனித இயல்பு. ஆனால் இவ்வாறு கழிகின்ற வாழ்க்கை வீணே கழிகின்ற வாழ்வு என்றும் இறைவன் மீது நாட்டம் கொண்டு வாழ்வதாலேயே வீடு பேற்றினை அடைய முடியும் என்றும் தேவாரப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இக்கருத்தினை எடுத்துக் கூறும் பல்வேறு பாடல்களை இங்கு குறிப்பிடலாம்–

"இன்று நன்று நாளை நன் றென்று நின்ற இச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போக விட்டுப் போதுமின்"

என்றும்,

"அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்து இராது நீர்
நல்லதோர் நெறியினை நாடுதும்"

என்றும்,

"அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவதரித்தே பிறந்து நீர்
எல்லையில் பிணக்கினிற் கிடந்திடாது எழுமினோ"

என்றும் திருஞானசம்பந்தர் திருக்கோடிக்கா என்ற திருப்பதியில் பாடிய தேவாரங்களில் குறிப்பிட்டுள்ளார்.

இங்கே, வீணே கழிகின்ற (பொன்றுகின்ற) வாழ்க்கை பற்றியும், அல்லல் மிக்க வாழ்க்கை பற்றியும் எல்லையில்லாத பிணக்குகளைக் கொண்ட வாழ்க்கை பற்றியும் குறிப்பிட்டு இவ்வாறான வாழ்க்கையை விட்டு நல்லதோர் நெறியாகிய இறை நெறியைப் பின் பற்றி வாழுமாறு தனக்கும் மற்றும் அடியார்களுக்கும் அறிவுறுத்தும் பாடலாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

இக்கருத்துக்களை மேலும் பலப்படுத்தும் வகையில் வாழ்வியல் விடயங்களோடு இணைத்து நோக்குகிறார் ஞானசம்பந்தர். அதாவது மனிதர்களில் பல பேர் பொய் பேசியே சீவியம் நடத்துவார்கள். மற்றவர் மீது பொறாமை கொள்வார்கள். வயது வந்த பின் நோய் வாய்ப்பட்டு உடல் இளைத்துக் கை கால்கள் சோர்ந்து உற்றவர்களாலும் மற்றவர்களாலும் வெறுக்கப்படும் நிலைக்கு ஆளாகிவிடுகின்றார் கள். சில வேளைகளில் பெற்ற பிள்ளைகளே வெறுத்தொதுக்கும் நிலை, கணவன் மனைவியருக்கிடையிலான வெறுப்புத் தோன்றலும் பலருக்கு ஏற்பட்டு விடுகின்றது. இவ்வாழ்வியல் அனுபவங்களை அறிந்தவராக ஞானசம்பந்தர் தன் பாடல்களில் இல்வாழ்வை வெறுத்தொதுக்குமாறும் உத்தமனாம் இறைவன் மீது பற்றும் பாசமும் கொண்டு அவரை அடைவதே சரியான நெறியென்றும் தமது திருமுறைப் பாடல்கள் மூலம் எடுத்துக் கூறுகின்றார். எடுத்துக்காட்டாக–

"பொய் மிகுந்தவாயராய் பொறாமையோடு சொல்லுனீர்
ஐ மிகுந்த கண்டராய் அடுத் திரைப்பதன் முனம்"

என்றும்–

"காலினொடு கைகளும் தளர்ந்து காம நோயதனால்
ஏலவர் சூழலினார் இகழ்ந்துரைப்பதன் முனம்"

என்றும்–

"நிலை வெறுத்த நெஞ்சமொடு நேசமில் புதல்வர்கள்
முலை வறுத்த போ் தொடங்கியே முனிவதன் முனம்"

என்றும்–

"நம்பொருள் நம்மக்கள் என்று நச்சியிச்சை செய்து நீர்
அம்பரம் அடைந்து காலை அல்லல் உய்ப்பதன் முனம்
உம்பர் நாதன் உத்தமன் னொளிமிகுந்த செஞ்சடை
நம்மன் மேவு நன்னகர் நலங்கொள் தாழி சேர்மினே"

என்றும் சீர்காழியில் வீற்றிருக்கும் சிவனிடம் சென்று தஞ்சமடையுமாறு தன் பதிகங்கள் மூலமாக அறிவுரை கூறுகின்றார். எனவே இம்மண்ணுலகில் நல்ல வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டு மாயின் இறைவன் இடத்தில் தஞ்சம் அடைவதன் மூலம் அதனைப் பெறமுடியும் என்று திருக்கழுக்குன்றம் திருப்பதிகத்தில் பின்வருமாறு கூறுகின்றார்:–

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை"

எனவே இம்மண்ணில் நாம் நல்வாழ்வு வாழ்வதற்கான வழி இறைவனிடத்தில் பற்றுக் கொண்டு மெய்ப்பொருளை அறிந்து வாழ்ந்தால் எமக்கு ஒரு குறைவும் ஏற்படாது என்பது இத்திருமுறைப் பாடல்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

பொய் உடலை வெறுத்துப் பாடியவை

வாழ்வியலில் மனித உடல் முக்கியமானது. இவ்வுலக வாழ்வில் தம் உடல் மீது அதீத பற்றுக் கொண்டு வாழ்பவர்களை நாம் காண் கின்றோம். உடல் சுகயீனம் ஏற்பட்டுவிட்டாலோ வைத்தியர்கள் மருந்துகள் என்று தேடித்திரிந்து அந்தச் சுகயீனங்களைக் குணமாக் குகின்றோம். மற்றவர் உடல் மீது கொண்ட பால் கவர்ச்சி காரணமாக உலகில் அனேக கொடிய சம்பவங்களும் நடைபெறுகின்றன. உடலைப் பேணுவதற்கும் அதை வளர்ப்பதற்குமாகப் பல்வேறு வகைகளில் நாம் முயற்சிகளை எடுக்கின்றோம். வாசனைத் திரவியங்களையிட்டு அதனைக் கவர்ச்சியுடையதாக்குகின்றோம். ஆனால் திருமுறைப் பாடல்கள் இந்த உடல் மீது பற்றுக் கொண்டு வாழும் வாழ்க்கையை வெறுக்கின்றன. உடல் நிலையற்றது. உடலை விட்டு ஆன்மா என்ற உயிர் பிரிந்து விட்டால் அது பிணம் என்றாகிவிடும். உடல் பற்றிக் குறிப்பிடும் போது திருச் சொற்றுத்துறைப் பதிகத்தில் அப்பர் சுவாமிகள் பின்வருமாறு கூறுகின்றார்–

"பொந்தையைப் பொருளா எண்ணிப்
பொருக்கெனக் காலம் போனேன்"

(பொந்தை = உடல்) என்றும்

"பொய்விரா மேனி தன்னைப்
பொருனெனக் காலம் போக்கி" என்றும்

"கொந்தார் பூங்குழலினாரைக்
கூறியே காலம் போன" என்றும்

"ஐவரால் அலைக்கப்பட்ட
ஆக்கை கொண்ட யர்ந்து போனேன்"

என்றும் கூறித் தன்னை நொந்து கொள்வதன் மூலம் பொய் உடலைப் பொருள் என்று எண்ணி அதை வளம்படுத்திக் கொள்வதனால் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்த்துகிறார். இங்கே ஐவர் என்று குறிப்பிடுவது எமது ஐம் பொறிகளையுமாகும். ஐம்பொறிகளும் உரிய கட்டுப்பாடு இல்லாத போது ஆன்மாக்களை அலைக்கும் தன்மையை இங்கே குறிப்பிடுகின்றார்.

இதனையே இன்னுமோரிடத்தில் "ஆக்கையாற் பயனென்" என்ற கேள்வியாகக் கேட்கிறார். உடல் நிலையாமை, வாழ்க்கை நிலையாமை என்பவற்றை வெகுவாக உணர்த்திப் பாடியவர்களுள் சுந்தரரும் முக்கியமானவராவர். இவர் இல்வாழ்வில் ஈடுபட்டவராக இருந்தாலும் இந்த நிலையில்லா வாழ்வு பற்றிய சிந்தனை அவரது பாடல்கள் மூலம் தெளிவாகக் காட்டப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக,

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ் போவது பிறவிக் கடல் பசி நோய் செய்த பறிதான்"

என்று கூறுவதில் பறி என்பது உடல் என்பதையும் அது எப்போதும் பசியையும், நோயையும் கொண்டது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.

இவ்வாறு மூவர்களும் உடலை வெறுத்துக் கூறுகின்ற அதேவேளை, 10ஆம் திருமுறையாகிய திருமந்திரத்தில் திருமூலர் உடலை வேறு விதமாக நோக்குகின்றார். அவர் உடலுக்குள்ளே இறைவனைக் காண்கின்றார். அதனால் உடலை நேசிக்கின்றார்.

"உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே",

என்றும்

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானாற்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்றும் திருமந்திரத்தில் மனித உடல் பற்றிய பெருமைகள் குறிப்பிடப் படுவதைக் காணலாம்.

வாழ்க்கை நெறி பிறழ்தல்

முப்பத்திரெண்டு ஆண்டுகள் வரை வாழ்ந்த திருவாதவூரர் எனப்படும் மாணிக்கவாசகர் வாழ்வில் பல அனுபவங்களைக் கண்டவர். பாண்டிய மன்னனின் முதலமைச்சராக அவர் விளங்கியமையால் பல்வேறு சுகபோகங்கள், உலக இன்பங்களையும் அவர் அனுபவித்திருக்கின்றார். இன்றைய கால கட்டத்திற்கும் அரசியல் அந்தஸ்துள்ளவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இது பொருந்தக் கூடும். மன்னனுக்குக் குதிரை வாங்கச் சென்றவருக்குக் கிடைத்த அனுக்கிரகம் காரணமாக அவர் இறைவன பால் ஈடுபாடு காட்டினார். இறையருள் அவருக்குக் கிடைத்தமையால், கடந்த கால தமது துயர அனுபவங்களை வெறுத்து அவர் தன்னை நொந்து பாடிய பாடல்கள திருவாசகங்கள் என எட்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டன. மாணிக்கவாசகர் வாழ்ந்த வாழ்க்கையினை அவரின் திருவாசகம் இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"நெறியில்லா நெறிதனை நெறியாக நினைக்க வேண்டா,
சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"

இறைவன் அவருக்கு அருளிய தன்மையை எண்ணிப் பாடுகின்றார். மேலும் இவரின் திருவாசகப் பாடல்களில் பல்வேறு இடங்களில் "காதல் மிக்கு அணியிழையார் கலவியிலே விழுவேனை" என்றும், "கொந்து சூழல் கோல் வளையார் குவிமுலை மேல் வீழ்வேனை" என்றும், "தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனை" என்றும், தான் நெறி (ஒழுக்கம்) கெட்ட வழிகளில் பெண்களை நாடிச் சென்ற வாழ்வியல் அனுபவங்களை வெளிப்படையாகவே எடுத்துக் கூறுகின்றார். இவ்வாறு அவர் கூறுவதன் மூலம் சிற்றின்பம் ஒன்றையே இலக்காகக் கொண்டு நெறியில்லா நெறியில் ஈடுபடும் மனிதர்கள் இறுதியில் தாம் வருந்த வேண்டி வரும் என்பதனைப் போதிக்கின்றார்.

இதே போலவே மாணிக்கவாசகர் அருளிய திருக்கோவையாரும் 8ஆம் திருமுறையைச் சேர்ந்ததேயாகும். இப் பாடல்களிலும் சங்க கால இலக்கிய மரபுக்குரிய அகவொழுக்கப் பண்புகளைக் கொண்ட பாடல்களே உள்ளன. இங்கே தலைவன் தலைவி காதல் கொள்ளுதல், கற்பொழுக்கம், களவொழுக்கம், இயற்கைப் புணர்ச்சி, முதற் கொண்டு இறுதியாகப் பரத்தையின் பாற் பிரிதல் வரையான 25 பகுதிகளாகத் திருக் கோவையார் தொகுக்கப் பட்டுள்ளது. இங்கேயும் வாழ்வியல் அம்சங்களே அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளன. இலக்கிய நயம் நாடுபவர்களுக்கே அப்பாடல்களின் வரிகள் இரசனை அளிக்கும் என்பதால் இங்கே எடுத்துக் காட்டப்படவில்லை.

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்

திருத்தொண்டர் புராணங்களை எடுத்துக் கூறும் சேக்கிழாரின் பெரிய புராணம் 12ஆம் திருமுறையாகத் தொகுக்கப் பட்டுள்ளது. இதில் 4286 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 63 நாயன்மார்களுடைய வரலாறுகளைப் பாடல்களாகத் தொகுத்துக் கூறும் இப்புராணத்தில் சமய, சமூகக் கருத்துக்கள், வாழ்வியல் அம்சங்கள் அடியார்கள் அந்தணப் பெருமக்களின் பண்புகள், விருந்தோம்பல் மரபுகள் திருமணச் சடங்குக் கிரியைகள், இறுதிக் கிரிகைகள், திருக்கோயில் வழிபாட்டு முறைகள், வேள்வி செய்யும் முறைகள், இல்வாழ்வு அம்சங்கள், குழந்தைப் பேறு, பெண் அடியார்களின் பெருமைகள், அறவழி நெறிமுறைகள், நீதி நெறி முறைகள், நல்லாட்சி முறைகள் எனப் பல்வேறுபட்ட அம்சங்கள் இப் பெரிய புராணப் பாடல்களில் காணமுடிகின்றன. இறையன்பில் தோய்ந்தவர்கள் உயர்வு தாழ்வற்ற நிலையில் எல்லோரையும் ஒன்றாக நோக்கும் தன்மையினர் என்ற சிறந்த சமூகப் பண்பாட்டு முறைகளைக் கூறும் இந்நூல் வாழ்வியல் நெறிக்குச் சிறந்த திருமுறை நூலெனக் கொள்ளத்தக்கதாகும்.

இத் திருத்தொண்டர் புராணத்தின் சிறப்பைக் கூறும் பெரிய புராணப் பாடல் ஒன்றை இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

"இங்கிதன் நாமம் கூறின்
இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல் நீங்கும்
திருத் தொண்டர் புராணம் என்பாம்"

எனவே பன்னிரு திருமுறைகளும் வாழும் மனிதர்களுக்கான அறிவுரைகளைக் கொண்டவையாகவே காணப்படுவதை நாம் காணலாம். ஒவ்வொருவரும் தாம் வாழ் நாளில் செய்கின்ற நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப அவர்களின் பிறப்பு இறப்புக்கள் நிர்ணயிக்கப்படுவதும் பிராப்த கன்ம நிலைமைகளுக்கேற்ப ஒவ்வொருவரினதும் வாழ்வு இன்பமாகவும் துன்பமாகவும் அமைவதும் திருமுறைப் பாடல்கள் மூலம் காட்டப்படுகின்றன. திருஞான சம்பந்தரின் பாடல்கள் குரு, லிங்க சங்கம வழிபாட்டு முறைகளைக் கூறி மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகியவற்றின் பெருமை களைக் கூறுகின்றன. மக்கள் வாழ்வில் அடையும் துன்பங்களுக்கு அவர்களின் வினைப் பயன்களே காரணம் என்பதையும் உலகில் வழங்கப் பெறும் பதினாறு வகைப் பேறுகளையும் பெறுவதற்கு இத் திருமுறைப் பாடல்கள் வழிகாட்டுபவையாக அமைகின்றன என்பதையும் இப்பாடல்களில் காணலாம்.

"ஒரு நெறிய தமிழ் வல்லவர்
தொல் வினை தீர்த்தல் எளிதாமே"

என்று திருமுறைகள் குறிப்பிடுவதன் மூலம் எமது தொல்வினை களைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரேயொரு வழி இறை நெறியே என்பதை இத்திருமுறைகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.



திருமுறைகளில் திருநீறு

முனைவர் (திருமதி) தேவயுபதி நடராஜா
கோலாலம்பூர், மலேசியா.

"வேதநெறி தாழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தமுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"[1]

எனச் சேக்கிழார் இப்பிள்ளை அடியாரின் அரிய வாழ்க்கையையும் அவர் நிகழ்த்திய அற்புதங்களையும் பாடத் தொடங்குகிறார். வேதங்களைப் புறக்கணித்து, அவற்றை ஏற்ற சைவம், வைணவம் ஆகிய சமயங்களைக் குறைகூறித் தமது அணீச்சர மதங்களைப் பரப்பிய சமணரும் பௌத்தரும் இந்த அடியாரின் அவதாரத்தால் செல்வாக்கிழந்து, செயலிழந்து நிற்கச் சைவம் தழைத்தது. சைவம் செழித்தது என்றால் பலர் சிவன்பால் அன்பு பூண்டு, அவனது சின்னமாகிய திருநீற்றை அணிந்தும், அவனைப் போற்றும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஒலித்தும் சைவ ஒழுக்கத்தைக் கடைப் பிடித்தும் வாழ்ந்தனர் என்பதாகும். உருத்திராக்கமும் சிவ சின்னமே. ஆயினும் முன்னைய இரண்டும் பிரதானம் என்பதையும் சேக்கிழார், அடியார் திருக்கூட்டத்தை வருணிக்கும் ஒரு பாடலால் உணரலாம். பூதங்களின் நாயகனும் ஆதிதேவனும் ஆகிய இறைவன் கோயில் முன்,

"அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளியா (ல்) நிறை தூய்மையால்
புரந்த ஐஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது"[2]

(அரந்தை = துன்பம்; நிரந்த = பரவப் பூசிய; புரந்த =காக்கும்)



எனப் பாடுகிறார். ஐந்தெழுத்தை ஒசையின்றி மானசீகமாகவும் ஒதலாம். ஆனால் திருநீற்றின் ஒளி வெளிப்படையாகவே தெரியும். இந்த உண்மையைச் சில நூற்றாண்டுகளுக்குப் பின் அவதரித்துப் பல சைவசித்தாந்த நூல்களை இயற்றிச் சிவம் வளர்த்த உமாபதி சிவாச்சாரியார்,

"பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி"[3]

எனத் திருநீற்றின் வெண்ணொளியும் மாண்பும் விளங்குவதற்கா கவே அம்மை அழுத குழந்தைக்குப் பால் அளித்ததாகப் பாடியுள்ளார்.

2. எது வெண்ணீறு

இறைவன் பூசுவது சுடலைப் பொடி.[4] திரிபுரங்களையும் எரித்த போது வெந்து தணிந்த வெண்சாம்பலை அவன் பூசி ஆடிய தால் அவன் பாண்டுரங்கன் என்னும் பெயரைக் கொண்டான். அவ்வாடல் பாண்டுரங்கம் எனப் பெற்றது.[5] ஆனால் அவனது அடியார்கள் அவற்றை அணிவதில்லை. "தக்க பசுவின் சரணத் தைத் தக்க வகையில் பெற்று மந்திரத்தால் கோசலம் கொண்டு பிசைந்து உலர்த்திச் சிவவேள்வியில் இட்டுப் பெற்றதே உண்மைத் திருநீறாம்" என்பர். திருமந்திரம் திருநீறு பெறப்படும் முறை மையைக் கூறுகின்றது. எனினும் அப்பாடலின் விளக்கங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தக் கழக வெளி யீட்டில் 1639 ஆவது பாடல்,

"அரசுட னாலத்தி யாகும் அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தாள்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குல மாமே"

(இயன் = வேறுபாடு, வறுமை)

இதில், அரசு, அத்தி, ஆல் ஆகிய மரச்சுள்ளிகள் கலந்து யாகத் தீயில் இடப்படும். அவையே உருமாறி வெண்ணீறாகும். அத் தீயின் காரியம் (எச்சம்) ஆகிய சாம்பல் காரம் எனப்படும். சைவ ஒழுக்கத்தின்படி நீறு பூசி அறவாழ்வு வாழ்பவரே இறைவனடி பெறுவர். அவர்களே உயர் குலத்தவர். ஔவையார் "இட்டார் பெரி யோர் இடாதார் இழிகுலத்தோர்" என்றதும் நெற்றியில் நீறிட்டவர் களைக் குறிக்கும் என்பது இதன் உரை[6]. ஆனால் இவ்விளக்கத் தில் திருநீற்றின் மூலப்பொருள் ஆகிய பசுஞ்சாணம் ஒதுக்கப் பட்டுள்ளது போலுள்ளது. தருமையாதீன வெளியீட்டில்,

"அரசுடன் ஆலத்தி ஆகும் அக் காரம்
விரவி கனலில் வியன்உரு மாறி
நிரவிய நின்மலன் தான்பெற்ற நீத
ருருவம் பிரம உயர்குல மாமே"

என உள்ளது. ஆலத்தி = மாட்டுச் சாணம் என விளக்குவதுடன், அதனை அரசு போன்ற சமித்துக்களுடன் ஏற்றப்பட்ட சிவாக்கினி யில் இட, அது வெந்து தனது முன்னைப் பரு உரு மாறித் திருநீறு ஆகிறது என்றும் அதனை உடல் முழுவதும் பூசித் தூய்மை அடைந் தவர்களது உடம்பே பிரம்ம ஞானத்தை அடையத் தகுந்த உயர்ந்த குலத்து உடம்பு ஆகும் என்றும் தெளிவுரை தெரிவிக்கிறது.

3. திருநீற்றின் பெயர்கள்

எல்லாத் திருமுறைகளும் தீருநீற்றைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. எனினும் மூவரது தேவாரங்களே அதனைப் பற்றி அதிகம் பேசுகின்றன எனலாம். நீறு என்ற தூய தமிழ்ச் சொல்லே பரக்கப் பயன்படுத்தப்பட்டாலும், பொடி,[8] பூதி[9], சாம்பல்[10] ஆகிய பதங்களும் அதனைக் குறிக்கப் பயன்பட்டன. பெரும்பாலும் இச்சொற்கள் உரிச் சொல் அல்லது சொற்களுடன் சேர்த்துப் பாடப்பட்டன. உதாரணமாக,

நீறு	நீறுடையர் (1.8.7)
	தூநீறு ஆடி (6. 42.7)
	தூநீறு மெய்க்கணிந்த சோதி (6.32.5)
	தூவண நீறு (1.136.4)
	சுண்ண நீறு (7. 2.8)
	கோலமா நீறணிந்த மேனியன் (6.31.8)
	சுண்ண வெண்ணீறு (7.29.5)
	வெந்த நீற்றினர் (1.56.10)
	வெந்த வெண்ணீற்றினர் (1.101.1)
	சுடுவெண்ணீறு (7.18.2)
	பொங்கு வெண்ணீறு (6.2.1)
	முழுநீறு பூசும் முதல்வன் (6.28.7)
	மறுவில்லாத வெண்ணீறு (7. 76.2)
	பாலன நீறு (1. 107.3)
	தவளநீறு (6. 39.9) (தவளம் = முத்து)
	திருநீற்றன் (7.82.7)
பொடி	பொடி அணிவார் (7.11.5 மேலும் 2.113.1)
	சுடலைப் பொடி (1.1.1)
	சுடுபொடி (7.83.5)
	வெண்பொடி (7.86.6; மேலும் 7. 98.6)
	வெந்த வெண்பொடி (7.70.5)
பூதி	விபூதி
	வெள்ளிகொண்ட வெண்பூதி (5.55.2)
	பொடி கொண்டபூதி (6.66.5)
சாம்பல்	வெந்த சாம்பல் (3.54.3)

இந்த அடைமொழிகள் திருநீற்றின் தூய்மை (தூ, மறுவில்) வெண்மை (பால் அன்ன, வெண்) புனிதத்தன்மை (திரு) ஒளி (வெள்ளி கொண்ட) போன்ற பண்புகளை விளக்குவன. மேலும் "சுட்டு அங்கம் கொண்டு துதையப்பூசி"[9] என்னும் அப்பர் வாக்குக்கு ஏற்பச் சுடுகாட்டில் பெறப்படும் சாம்பலையே சிவனார் பூசிக்கொண்டுள்ளார் என்பதைச் "சுடலைப் பொடி" "சுடுபொடி" ஆகிய தொடர்கள் சுட்டுகின்றன.

மேலும், இன்பம், களிப்பு எனப் பொருள்படும் ஏமம், ஹோமம் வளர்த்த தீயில் பெற்ற தூள் அல்லது சூரணம் என்பதால் ஓமப்பொடி, அணிபவர்களுக்குக் காவலாய் இருக்கும் காப்பு, (பாசங்களைத் துண்டிக்கும் விசிதம் ஆகிய பெயர்களும் திருநீற்றிற்கும் உள்ளதாக அகராதிகள் கூறுகின்றன.[10] இதனைக் கற்பம் அல்லது கல்பம் எனவும் குறிப்பதுண்டு.

4. நீறணியும் நிமலன்

திருமுறைகள் இறைவனைத் திருநீறணிந்த தேசிகனாகவே போற்றுகின்றன. அவன், "நீறு தாங்கிய திருநுதலான்", "நீறிட்ட நுதலர்"[11] என்பதால் நெற்றியில் நீறணிந்துள்ளவன் என்பது தெளிவு. "நீறுடைத் தடந்தோளுடை நிமலன்",[12] என்னும் தொடர் அவனது பருத்த தோள்களில் விபூதி அணியப்பட்டுள்ளதைக் குறிக்கும். அகன்ற மார்பில் நீறு பூசப்பட்டிருப்பதை "நீறார் அகலம் உடையார்", "வெந்த வெண்பொடி பூசு மார்பின்" "வெந்த நீறணி மார்பில்" "நீறுடைய மார்பு"[13] எனத் திருஞான சம்பந்தரும் "நீறு சேர் செழுமார்பினாய்", "நீறு கொப்பளித்த மார்பர்", "தூநீறாடித் துதைந்திலங்கு நூல் மார்பன்" "தூநீறு துதைந்நிலங்கு மார்பினார்"[14] என அப்பர் சுவாமிகளும் வருணித்துள்ளனர். எனினும் ஈசன் மேனி முழுவதிலும் வெண்ணீறு பூசியுள்ளதையே திருமுறைப் பாடல்கள் பரக்கப் போற்றிப் பரவுகின்றன.

நீறேறிய திருமேனியர் (1.17.7)
நீறார் திருமேனியர் (1. 33.6)
நீறு மெய் பூசி (1.44.6)
நீறடைந்த மேனி (1.48.2)
நீறணிந்த மேனியனாய் (1.105.7)
நீறணி மேனியன் (1.109.4)
நீறு சேர்வதொர் மேனியர் (1.135.1)
நீறார் தருமேனியன் (2.35.5) (நீறு ஆர்தரு...)

வெந்த நீறு மெய்யிற் பூசுவர் (2.120.6)
நீறு திருமேனியின் மிசைந்து ஒளி பெறத் தடவி (3.78.6)
நீறு திருமேனி மிசை ஆடி (3.79.6)
நீற்று மேனியர் (3.108.8)
நீறு மெய் பூசி (3.112.4)
நீறு மெய் பூசவல்லான் (4.4.3)
நீறு மெய் பூசினானே (4.51.3)
பொடியணி மெய்யர் போலும் (4.56.5)
வெந்த நீறு மெய் பூசு நன் மேனியர் (5.8.6)
நீற்றின் ஆர் திரு மேனியன் (5.44.7)
வெள்ளி கொண்ட வெண்பூதி மெய்யாடலும் (5.55.2)
வெந்த நீறு மெய்பூசிய வேதியன் (5.97.8)
திருமேனி வெண்ணீறாடி (6.58.3)
நீறலைத்த திருவுருவம் (6.75.3)
நீறார் மேனியனே (7.26.8)
நீற்றாடு மேனியராய் (7.30.2)
பொடி ஏறு திரு மேனிப் பெருமான் (7.30.5)
நீறு நுந்திரு மேனி நித்திலம் (7.36.5) (நித்திலம் = முத்து)
நீறணி மேனியன் (7.72.3)
வெந்த நீறு மெய் பூச வல்லானை (7.57.3)
வெண்பொடி மேனியினான் (7.98.6)

இவ்வாறு மேனி, மெய், உருவம் எனக் குறிப்பிடாமல் பொதுவாக மாசற்ற வெண்ணீறு பூசி பக்தர் மனத்தைக் கவர்ந்து கொள்வதையே அடியார்கள் பெரிதும் பாடியுள்ளனர்.

வெண்ணீற்றை நிறையப் பூசுவது அழகு தரும். "அரக்கன் ஆற்றல் அழித்த அழகன்", எனச் சிவபிரானைப் போற்றும் அப்பர் சுவாமிகளும் "சுட்டாங்கங் கொண்டு துதையப் பூசிச் சுந்தரனாய்ச் சூலங்கை ஏந்தினான்" "சுந்தரராய் வெந்த நீறாடினான்" எனப் பாடுகிறார்,[15] மேலும் வெண்ணீறு நறுமணம் தருவது. எனவே "நீறணிந்த வம்பன்"[16] (வம்பு = வாசனை)", "வெந்த சாம்பல் விரையெனப் பூசி" யவன்[17] எனப் போற்றப்படுகிறான். இறைவன் திருநீற்றையே சந்தனமாகப் பூசிக் கொள்வதாகவும் அடியார்கள் பாடியுள்ளனர்.

"சாந்தம் ஈது என்று எம்பெருமான் அணிந்த நீறு (1.52.7)
"சாந்தம் வெண்ணீறு எனப் பூசி.." (2.120.1)

என்பன ஆளுடைப் பிள்ளையார் திருவாக்கு. அப்பர் சுவாமிகளும் விலை மதிப்பற்ற சந்தனமாக நறுமணமுள்ள வெண்நீறு பூசித் திருவிளையாடல் புரியும் வேடனாகவும் மாறுபட்ட செயல்களைச் செய்ய வல்ல இறைவனாகவும் எம்பிரானைப் போற்றுகின்றார்.

"விலையிலி சாந்தமென்று வெறிநீறு பூசி
விளையாடும் வேடவிகிர்தர்" (4.8.9) (வெறி = நறுமணம்)

கருவூர்த்தேவரும் திருச்சாட்டியக் குடியில் எழுந்தருளி யிருக்கும் எம்பிரான் பெருமையைப் பாடும் பொழுது அவனுக்குப் பாம்பே அணிகலன், உண்கலன் கபாலம், யானையே எருது எனக் கூறுவதோடு "சாந்தமும் திருநீறு" என்பர்.[18]

உடல் முழுவதும் வெண்ணீறு சண்ணித்த எம்மான் விபூதி கொண்ட பை ஒன்றை வைத்திருப்பதாக அப்பர் சுவாமிகளின் திருப்பாடல்கள் கூறுகின்றன. அழகிய திருநீறு பூசிய மேனியும், விபூதிப் பையும் உடையவன் என்றும் விபூதி நிறைந்த பையை வைத்திருப்பவன் என்றும் விளம்பும் பாடல் அடிகள்:–

"கோலமார்ந்த பொடியாரு மேனியர், பூதிப் பையர்" (6.17.6)
"பொடிகொள் பூதிப் பையானை" (6.66.5)

உரையாசிரியர் "பூதிப் பை என்பது வாளா ஒரு பெயராய் அருளப்பட்டது" என விளக்கியுள்ளார்.[19] இச்செய்தி, சுந்தரர் தேவாரத்திலும் "பூதிப்பை புலித் தோலுடையானை" எனக் குறிக்கப்பெற்றுள்ளது. (7.57.10)

5. கருவூர்த் தேவரின் கற்பனை

திருஞான சம்பந்தர் "சாந்தம் வெண்ணீறெனப் பூசி வெள்ளம் சடை வைத்தார்"[20] என இரண்டாம் திருமுறையில் பாடியதன் அழகிய கற்பனையின் மலர்வாக அமைந்துள்ளன ஒன்பதாம் திரு முறையில் உள்ள இருபாடல்கள். இறைவன் சடைமுடியில் கங்கை நீர் தழும்புவதால் சிறிது கசிந்து அவனது உடலில், குறிப்பாக நெற்றியில் பூசப்பட்டிருக்கும் திருநீற்றை அழிப்பதாகவும் அக் கோலமும் அழகுக் கோலமே எனவும் பாடுகிறார் கருவூர்த் தேவர்.

"பொங்கு எழில் திருநீறு அழிபொசி வனப்பிற்
புனல் அளும்பு அவிர் சடை மெரழுப்பர்"

"..... அவிர்சடை மொழுப்பின்
அழிவழகிய திருநீற்று
மையசெங்கண்டத்து அண்ட வானவர் கோன்"[21]
(மொழுப்பு = கட்டு)

சிவபிரான் "நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தான்" எனப் போற்றப்படுவன். கசியவோ அழிக்கவோ அவனாலன்றிக் கங்கை நீரால் முடியாது என்பதை அறிந்த சிவபக்தர் கருவூர்த்தேவர். இது உபசார வழக்காக அழகுக்கு அழகு சேர்த்துக் காணும் அன்பின் வெளிப்பாடே எனலாம்.

6. உவமனில்லிக்கு உவமைகள்

இறைவனது இயல்பு அல்லது சொரூப நிலையை அப்பர் சுவாமிகள் "ஒப்புடையன் அல்லன், ஒருவன் அல்லன்; ஓரூரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி"[23] எனப் பாடுவர். எனினும் உயிர்கள் தன்னை உணர்ந்து உய்தி பெற வேண்டும் எனும் அளப்பரிய கருணையினால் அவன் அருவாய், அரு–உருவாய், உருவாய்த் தோன்றி அருளுகிறான். இவ்வாறு உருவாய்த் தோன்றும் பொழுது செற்நிறம் உடையவனாக அடியார்கள் உணர்ந்தனர். இதனை அவர்கள், "செம்மேனியர்", "செய்ய மேனியனே", "செம்பெரு மானே"[24] என்றெல்லாம் விளித்தும்,

"செந்தழல் புரை மேனி" (8.8.10; 9.22.5)
(சிவந்த நெருப்புப் போல் மேனி)
"செச்சை மாமலர் புரையும் மேனி" (8.5.29)
(செச்சை மாமலர் – வெட்சியின் அழகியபூ)
"செக்கர் போலும் திருமேனி" (8.27.8)
(செக்கர் – செவ்வானம்)
"செந்தாமரைக் காடனைய மேனி" (8.5.26)
"மாணிக்க மலை" (9.6.2)
"பவள மேனிப் பரமன்" (9.24.8)

எனக் கவிதை நயம் விளங்கப் பிற செந்நிறப் பொருட்களை உவமை கூறியும் சிவபெருமானின் சிவந்த மேனியைப் போற்றியுள்ளனர். அம்மேனியைச் சண்ணித்துப் பூசிய வெண்ணீறு மறைத்திருக்கும் நிலையைச் சுந்தரர் முத்துப் போல் திகழ்வதாகப் பாடியுள்ளார். "நீறு நுந்திருமேனி நித்திலம்" என்பது அவர் வாக்கு.[25] ஆனால் விபூதி பூசியும் அதனூடே அவனது மேனியின் ஒளியும் அழகும் தெரிவதைக் கூறும் வகையில்

இறைவனை "நீறணி பவளக் குன்றமே" (9.1.6) எனச் சேந்தனார் அழைக்கின்றார். வாலியமுதனார் தில்லைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஈசனின் விபூதிப் பூச்சை

"பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்" [26]

என வருணிக்கின்றார். செம்மேனி எம்மான் பவளத்தால் ஆகிய பெருமலை போன்றவன். மலையைப் பெருமைக்கும் உயர்வுக்கும் நிலைத் தன்மைக்கும் உவமையாகக் கூறுவது வழக்கு. அம்மலையின் நிறம் நவமணிகளில் ஒன்றான பவளம் போன்றது. அதில் பூசப்பட்டிருக்கும் நீறு அம்மலையில் பரவி மூடும் பனியைப் போன்று வெண்மையாகவும் தூய்மையாகவும் உள்ளது. மேலும் பவளத்தின் ஒளியுடன் பனியின் ஒளியும் சேர்ந்து ஒளிரும் சோதிப் பொருளாகத் தெரிவது. மேலே குறிப்பிட்டுள்ள முத்து, பவளம், மாணிக்கம் ஆகிய மும்மணிகளுடன் வைரத்தையும் சேர்த்து எல்லோருக்கும் அப்பனாய் அருளும் ஆண்டவன் தன்னையும் ஆண்டு கொண்டதைப் பாடுகிறார் மாணிக்கவாசகர்.

"முத்து மாமணி மாணிக்க வைரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியாரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே" [27]

இதில் அழகு, ஒளி, மகத்துவம் ஆகியவற்றைக் குறிக்கும் வகையில் மணி என்னும் சொல்லையும் சேர்த்து மணிவாசகர், முத்து, மாணிக்கம், வைரம், பவளம் ஆகிய நான்கினையும் சிறப்பிப்பது சிவபிரானின் செம்மை ஒளியின் தன்மையை விளக்குவதற்கே. எம் பெருமான் பூசியுள்ள திருநீற்றின் வெண்மையும் அதனுள் இருந்து ஒளிரும் அவனது செம்மேனியும் மனத்தில் படுமாறு வெள்ளிய முத்து, சிவந்த மாணிக்கம், வெள்ளொளி வீசும் வைரம் செந்நிறப் பவளம் என மாறி மாறிக் கூறுவதால் அவ்விரு நிறங்களும் கலந்து ஒளிரும் அவனது திருமேனியின் பிரபையை உணர்த்துவதாய் உள்ளது.

7. சிவனார் நீறணியக் காரணம்

"குறுவிலா மனத்தார்கள் காண்தகு வாஞ்சியத்தடிகள்
மறுவிலாத வெண்ணீறு பூசுதல் மன்னும் ஒன்றுடைத்தே" [28]

என்பர் சுந்தரர். இதனால் மனத்தில் சினம், வன்மை அற்ற அருளா ளர்கள் மட்டும் கண்டுகொள்ளக் கூடிய இறைவன் வெண்ணீறு பூசுவதற்கு ஒரு உட்கருத்து உள்ளது என விளக்குகிறார். இக்கருத்து யாது? என்பதைப் பெரிய புராணம் விளக்குகிறது. ஊழித்தீயில் வெந்து தணிந்த சாம்பலை வாசமிகு திரவியமாகப் பூசுவது தனது எல்லையற்ற சோதி அன்றிப் பிற ஒளிகளெல்லாம் அத்தீயில் வெந்து ஒழிந்தன என்பதை உணர்த்தவே.

"வெந்த சாம்பல் விரை என்பது தம (து)
அந்த மில்லொளி அல்லா ஒளியெலாம்
வந்து வெந்தற மற்றப் பொடியணி
சந்த மாக்கொண்ட வண்ணமும் சாற்றினார்" [29]

சிவபெருமானுக்குப் பாண்டுரங்கன் / பாண்டரங்கன் என்னும் பெயரும் உண்டு. தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் அசுரர்கள் தங்கள் தவ வலிமையால் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் பறக்கும் கோட்டைகள் அமைத்து அவற்றுடன் சென்று மூவரையும் தேவரையும் வருத்தினர். அவர்களும் இத் துன்பம் தாங்க மாட்டாது சிவபிரானிடம் முறையிடவே பெருமானும் அவர்களைத் தேர், வில் ஆகியவற்றின் வெவ்வேறு பகுதிகளாகக் கொண்டு அவ்வசுரர்களை அழிக்கச் சென்றான். பின்அப்புரங் களில் வாழ்ந்த அடியார்களைக் காக்கவும் துணைவந்த தேவர் களின் ஆணவத்தை அடக்கவும் ஒரு சிறு முறுவலாலேயே அந்த முப்புரங்களையும் எரித்தான். எரிந்து தணிந்த வெண்சாம்பலைத் தன்னுடலில் பூசி ஆடினான். இக்கூத்து பாண்டுரங்கம் என்றும் இதனை ஆடியவன் பாண்டுரங்கன் என்றும் வழங்கலாயிற்று.[30] இது நிறம் பற்றிய பெயர் என்பர் (பாண்டு = வெண்மை). இதனைச் சேந்தனார் "மதிலணி முப்புரம் பொடியாட" அருளியதாகப் போற்றியுள்ளார்.[31] எனினும் "முப்புரமாவது மும்மல காரியம்"[32] என்பதால் இறைவன் எரித்தது ஆணவம் கன்மம், மாயை எனப் படும் மலங்களையே. எனவே தான் அப்பர் சுவாமிகளும்,

"பற்றார் புரமெரித்தாய் என்றேன் நானே
பசுபதீ பண்டரங்க என்றேன் நானே" [33]

எனவும்,

"பாசத்தைப் பற்றறுக்க லாகு நெஞ்சே
பரஞ்சோதி பாண்டரங்கா பாவநாசா
.....
எம்பெருமான் என்றென்றே ஏத்தா நில்லே" [34]

எனவும் பாடியுள்ளார்.

இறைவன் தான் படைத்த உடல்களும் உலகங்களும் எரிந்து சாம்பலாய் மிஞ்சியிருப்பதைப் பூசுவது தானே எல்லாவற்றுற்கும் பற்றுக்கோடாக உள்ளவன்; சங்கார காலத்து எரிந்து பூத்த சாம்பலும் அவனைச் சார்ந்தே இருக்கமுடியும் என்பதனை உணர்த்துவது. மேலும் இச்செயல் தானே தொன்மைக் கெல்லாம் தொன்மையானவன், "முன்னைப் பழம் பொருள்"[35] எனக் காட்டுவது. கங்காளனாக அவன் பூசும் வெண்ணீறும் சுமக்கும் எலும்புக் கூடும் இதனையே குறிப்பன. திருமுறை பாடிய அருளாளர்களும் "நீறும் எலும்பும் அணிந்த விடையூர்தியான்"[36] என இக்கோலத்தைப் பாடியுள்ளனர்.

இவ்வாறு தான் பூசிக்கொள்வது மட்டுமன்றி, அளப்பரும் கருணையினால் எல்லா உயிர்களும் பாசநீக்கம் பெற்று வீடுபேறடையச் சிறந்த வழியாக வெண்ணீறு பூசிப் பரமன் பாதம் பணிவதைச் சிவாகமங்களில் விதியாக வகுத்தான்.

"பொடி தனைப் பூசவைத்தார்
.....
அடியினைத் தொழவும் வைத்தார்
ஐயன் ஐயாற னாரே" [37]

எனவே, "வெள்ளை நீறணியும் மேனியவர்க்கெல்லாம் உள்ளமாய (உள்ளத்தில் இருக்கும்) பிரான் ஆனார்."[38]

8. அடியார்களும் திருநீறும்

சிவனைப் பிரானாகக் கொண்டு வழிபடுவோர் சிவசின்ன மாகிய திருநீற்றை அணிவர். நித்தமும் நீராடி, இலை போடாமல் நிலத்திலேயே உணவை வைத்து உண்டு தெளிந்த மனத்துடன் மலைமேல் தவமிருக்கும் தவசிகளும் முதலில் திருநீறு பூசியே வழிபாட்டைத் தொடங்குவர் என்பதனை ஆளுடைப் பிள்ளையார் பாடுகிறார். திருக்கேதாரம்

"நீறு பூசி நிலத் துண்டு நீர் மூழ்கி நீள்வரை தன்மேல்
தேறு சிந்தையார்கள் சேறும் இடம்" [39]

என்கிறார். மார்க்கண்டேயரும் தினமும் தூய உள்ளத்துடனும் ஆச்சாரத்துடனும் வழிபட்டதை,

"நீற்றினை நிறையப் பூசி நித்தலு நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டு (ம்) அந்தணனார்"[40]

எனப்பாடுகின்றார் அப்பர் சுவாமிகள். திருமாலும் "நீற்றினை நிறையப் பூசி, நித்தல் ஆயிரம் பூக்கொண்டு[41] சிவ பூசை செய்த தால் சக்கரத்தை ஆயுதமாகப் பெற்றான்.

இறைவன் அருளைப் பெறவும் அவனது திருவடிகளை அடையவும் சைவ ஒழுக்கங்களைப் போற்றி வாழ்வது இன்றியமையாத கடனாகும். அப்படி வாழ்பவர்களே விரதம் மேற்கொள்பவர். அவர்களுக்குத் திருநீறு அணிகலனாகும். "வெந்த நீறு அணிகலன் விரதியர்க் கெல்லாம்".[42] அத்துடன், திருநீறு பூசி, ஐம்புலன்கள் வழி சென்று உலக இன்பங்களை அனுபவிக்க விழையும் அழகற்ற பொல்லாத உடலில் தன் மனம் ஒருநிலைப்பட்டு இறைவன் திருவடிகளைப் பற்றி, அவற்றின் பெருமையைப் பேசிய வண்ணம் இருக்க இயலாமல் அல்லலுறுவதாகவும் அப்பர் சுவாமிகள் வருந்துகிறார்.

"பொடிக்கொடு பூசிப் பொல்லாக் குரம்பையிற் புந்தி ஒன்றிப்
பிடித்துநின் தாள்க ளென்றும் பிதற்றிநா னிருக்க மாட்டேன்"[43]
(புந்தி = புத்தி)

இதனால் வெண்ணீறணிவதே சைவ ஒழுக்கத்தின் அடிப்படை யாக, முதற்படியாக இருப்பது விளங்கும். திருமூலரும் அதுவே சாதனையின் தொடக்கம் எனப் பொருள்பட, "பூதி அணிவது சாதனம் ஆதியில்"[44] என்றுள்ளார். மேலும் தெளிந்த வெண் ணீற்றைச் சிவன் அணிந்திருப்பதால் தன் உடலும் அதனை விரும்பு வதாகப் பாடுகிறார் கருவூர்த் தேவர்.[45]

9. திருநீறு அணிவதால் பெறத்தக்க பயன்

"மந்திர நமச்சி வாய வாக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே"[46]

என்பதால் பஞ்சாட்சரத்தை ஓதி விபூதி அணிந்தால் உயிருக்குப் பிறவி நோய் தரும் வினைகளும் உடலை வாட்டும் நோய்களும் தீயினால் கொழுத்தப்பட்ட விறகு போல் எரிந்து சாம்பலாகும் என்பது தெளிவு. மக்கள் வாழ்வில் எதிர்நோக்கும் மூப்பு, பிணி, இறப்பு ஆகியவற்றையும் திருநீறணிந்து வேதமோதும் பிரானுக் கருகில் இருந்து கொண்டால் வெல்லலாம்.

"வருகின்ற மூப்பொடு தீப்பிணிக் கூற்றம் வைகற்கு வைகல்
பொருகின்ற போர்க் கொன்றும் ஆற்றகில் லேன்பொடி
பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண் டாய்....."

என வேண்டுகிறார் சேரமான் பெருமான் நாயனார்.[47] திருமந்திரமும் விபூதிக் கவசமாய்க் காத்து, கடிந்து இறைவன் திருவடிக்கு இட்டுச் செல்லும் பெற்றி வாய்ந்தது எனக் கூறும்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே."[48]

10. திருநீறு அணியாமையின் சிறுமை

இவ்வாறு திருநீற்றின் மகிமையையும் மேன்மையையும் உணர்ந்த அருளாளர்கள் அதை அணியாமல் இருப்பதன் இழிவையும் சிறுமையையும் கூறத் தவறவில்லை. அப்பர் சுவாமிகள் வெண்ணீறணியாதவர்கள் வாழும் ஊர் அழகோ, செல்வமோ, தெய்வத்தன்மையோ அற்றது. அது பெருங்காடு என்றுள்ளார்.

"திருவெண்ணீ றணியாத திருவில்லூரும்....
.....
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"[49]

மேலும் வெண்ணீறணியாதவர்கள் மீண்டும் பிறந்து இறந்து உழல்பவர்களே; ஏனெனில் அவர்கள் இறைவன் திருவருளைப் பெறாதவர்களாவர்.

".....
அருநோய்கள் கெட வெண்ணீறணி யாராகில்
அருளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"[50]

சிவனே இறைவன் என மதித்து வெண்ணீறு அணியாத தாலேயே ஆணவம் முன்னிற்க இறைவனது அடிமுடி தேடியும் காணமுடியாத தோற்றனர் திருமாலும் பிரமனும்.

"வெந்த நீறு விளங்க அணிந்திலர்
கந்த மாமலர் இண்டை புனைந்திலர்
எந்தை ஏறு உகந்த ஏறு எரிவண்ணனை
அந்தம் காணலுறார் அங்கிருவரே"[51]
(இண்டை = தலையில் அணியும் மாலை)

திருமாளிகைத் தேவர் அடியார்களுக்குத் திருநீறு அதிமுக்கிய மானது என்பதை வேறு விதமாக விளக்குகிறார். தில்லையம்பலக் கூத்தன் மேல் காதல் கொண்டு தன் வயம் இழந்த நங்கையின் மன நிலையை உணர்ந்த செவிலி கூறுவதாக அமைந்துள்ளது ஒரு பதிகம். அதில் விபூதி சிவனுக்குகந்ததாலும் அவனும் பூசியிருப்பதாலும்,

"திருநீறிடா உருத் தீண்டேன் என்னும்
திருநீறு மெய் முண்டம் தீட்டிப்
பெருநீல கண்டன் திறங்கொண்டு இவள்
பிதற்றிப் பெருந் தெருவே திரியும்"[52]

எனத் தனைமறந்த அன்பர் நிலைமைப் பாடுகிறார். மாணிக்க வாசகரோ புற்றில் வாழும் பாம்பு, மதயானை போன்ற கொடிய உயிரினங்கள், வேல், வாள் போன்ற படைக்கலங்கள், இடி, பூகம்பம், நோய், இறப்பு, பழி ஆகியவற்றுக்கு அஞ்சாமல், "வெண்ணீறணி கிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்கிறார்.[53]

முடிவுரை

இன்னும் பற்பல பாடல்களில் திருமுறை பாடிய அருளாளர்கள் திருநீற்றின் மகிமையையும் அதனை அணிவதனால் ஏற்படும் நன்மைகளையும் குறிப்பிட்டுள்ளனர். திருஞான சம்பந்தரின் திரு நீற்றுப் பதிகம் மிகச் சிறிய, எளிய சொற்களால் அமைந்திருப்பது. எனினும் பாண்டிய மன்னனின் வெப்பு நோயைத் தீர்த்த திருநீறு பற்றியது. இதில் திருநீற்றுச் சிறப்பைக் கூறும் சொற்களும் தொடர் களும் சிவபிரானை வருணிக்கவும் போற்றவும் திருமுறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளவையே.

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே."


என்பது அப்பதிகத்தின் முதல் பாடல். இறுதி அடி திருவாலவாயில் தனது திருவருட் சக்தியுடன் எழுந்தருளியிருக்கும் எம்பிரானுடை திருநீறு எனத் தெளிவாகவே பாடப்பட்டுள்ளது. ஆனால் இறைவனே மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீரா நோய் தீர்க்க வல்லவன்.[54] விண்ணோர்க்கும் மேலானவன்[55] சுந்தரன்.[56] எல்லோராலும் துதிக்கப்படுபவன். நமது சமயத்திற்கே அடிப்படையாய் உள்ளவன். இவ்வாறு பிற பாடல்களுக்கும் பொருள் காணலாம். இதனால் எம்பெருமான் திருமேனியில் விளங்கும் திருநீறு அவனது அழகையும், பண்பையும், பதித்துவத்தையும் விளக்குவது என்பது பெறப்படும். இப்பதிகம் திருநீறாகிய சிவசின்னம் மூலம் சிவனையே குறிப்பது எனலாம்.

வையம் நீடுக, மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

(பெரியபுராணம் இறுதிப்பாடல்)

குறிப்புகள்

1. பெரியபுராணம் : திருஞானசம்பந்த நாயனார் புராணம் 1.
2. மேலது : திருக்கூடச் சிறப்பு 3.
3. உமாபதி சிவச்சாரியார்.
4. திருமுறை 1.1.1.
5. சிலப்பதிகாரம் கடலாடுகாதை. 44 எ 45 வேங்கடசாமி நாட்டார் உரை.
6. திருமந்திரம் பகுதி 2. திருநெல்லித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 1969. பாடல் 1639.
7. திருமந்திரம் பகுதி 2. (4, 5, 6 தந்திரங்கள்) தருமையாதீனம், 1984. பாடல் 1645.
8. திருமுறை. 1. 4. 11; 6.36.2; 7.22.7.
9. மேலது. 6.20. 4.
10. "ஜூபிலி" பேரகராதி. சென்னை. 1935.
11. முறையே திருமுறை. 7.61.1, 4.27. 7.
12. மேலது. 5. 53. 3.
13. மேலது. 1.70.6, 1.133.1, 2.112.8, 3.82.3.
14. மேலது. 4.20.5, 4.24.5, 6.42.7, 6.59.1.
15. மேலது. 5.30.11, 5.20.4, 6.58.8.
16. மேலது. 7.83.7.
17. மேலது. 4.8.9.
18. மேலது. 9.15.2.
19. திருநாவுக்கரசர் தேவாரம். ஆறாம் திருமுறை. தருமையாதீன வெளியீடு 1997. பக்கம் 1000.
20. திருமுறை. 2.120.1.
21. மேலது. 9.16.9, 9.17.1.
22. மேலது. 6.43.1.
23. மேலது. 6.97.10.
24. மேலது. 8.17.1, 823.11, 8.28.2.
25. மேலது. 7.36.5.
26. மேலது. 9.23.1.
27. மேலது. 8.26.7.
28. மேலது. 7.76.2.
29. மேலது. 12. திருஞானசம்பந்தர் புராணம். 828.
30. சிலப்பதிகாரம் : கடலாடுகாதை. 44–45. வேங்கடசாமி நாட்டார் உரை. சென்னை, 1942.
31. திருமுறை. 9.6.6.
32. மேலது. 10.339 (தருமை ஆதீனப் பதிப்பு)
33. மேலது. 6. 37.6.
34. மேலது. 6.31.9.
35. மேலது. 8 திருவெம்பாவை. 9.
36. மேலது. 2.117.3.
37. மேலது. 4.38.2.
38. மேலது. 5.20.9.
39. மேலது. 2.114.6
40. மேலது. 4.49.2.
41. மேலது. 4.64.8.
42. மேலது. 4.38.2.
43. மேலது. 4.62.10.
44. மேலது. 10.1640 (தருமை ஆதீனப் பதிப்பு).
45. மேலது. 9.10.4.
46. மேலது. 4.77.4.
47. மேலது. 11.6.21.
48. மேலது. 10.1643. (தருமை ஆதீனப் பதிப்பு).
49. மேலது. 6.96.5.
50. மேலது. 6.96.6.
51. மேலது. 5.95.8.
52. மேலது. 9.3.10.
53. மேலது. 8.35.5.
54. மேலது. 6.54.8.
55. மேலது. 5.8.4.
56. மேலது. 5.17.10.



வாழைமரம்

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, கா-, பழம், பூ, கனி என்பவை உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக் கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்கா- மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக்காட்டாக அமைகிறது. வாழைமரம் இலையில் பயன்படுத்தும் முறை : கும்பம் வைக்கும் போது தலை நுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும்போது தலை நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலைநுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.



ஆலய அமைப்பு முறை

ஸ்ரீ விஷ்வ நாராயண சர்மா
ஆகம ஆலோசகர், தெல்லிப்பளை

அகர முதல எழுத்தெல்லாம் – ஆதி
பகவன் முதற்றே உலகு

தமிழின் முதல் எழுத்தான "அ" எல்லா எழுத்துக்களிலும் மறைந்திருப்பது போன்று ஆண்டவனும் எங்கும் எதிலும் மறைந்திருப்பதாய் வள்ளுவர் கூறுகிறார். ஆலயம் என்பது ஆண்டவனிடம் ஆன்மா லயிக்கும் இடம் ஆகும். மேலும் ஆணவ மலம் அடங்கும் இடம் ஆலயம் என்று கூறலாம். எனவே நாம் நற்கதியை அடைய உதவுவது ஆலயம். அதனால் தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர் ஆன்றோர். நமது உடம்பே ஆண்டவன் உறையும் ஆலயம் தான் என்கிறார் திருமூலர்.

"உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே"

என்கிறது திருமந்திரம்.



கருணையே வடிவான இறைவன் உயிர்களின் மீதான இரக்கத்தினால் இந்த உடம்பை நமக்கு வழங்கினான். அவன் அளித்த உடம்பால் அவனை வழிபடல் எமது கடமையாகும். உடம்பின் பயன் ஆண்டவனை வணங்குவதாகும். அறிவின் பயன் ஆண்டவனை அறிவதாகும். கல்வியின் பயன் இறைவனை உணர்வதாகும். இவ் இறை வழிபாட்டிற்குச் சிறந்த இடம் ஆலயம் ஆகும்.

ஆலய வழிபாட்டின் பெருமையை ஆன்மாக்களுக்கு உணர்த்தி நல் வழிப்படுத்தத் திருவுளங் கொண்டு, உமாதேவியார் காஞ்சி புரத்திலும், விநாயகர் திருச் செங்காட்டார் குடியிலும், சுப்ரமணியர் வேலூரிலும் ஆலயம் அமைத்துப் பூசித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. நந்திதேவர், அகத்திய முனிவர், பிரம்மா, விஷ்ணு, நவக்கிரகங்கள் ஏனைய முனிவர், தேவர், அசுரர் முதலிய பலரும் சம்பாதி, சடாயு என்னும் பட்சிகளும், சிலந்தி, பாம்பு, யானை முதலியவைகளும் ஆலய வழிபாட்டினால் முதியடைந்தன. எனவே மானிடப் பிறவியெடுத்து நமக்கு எல்லாம் ஆலய வழிபாடு எத்துணை இன்றியமையாத்து என்பது புலனாகிறது.

வேதம், ஆகமம் ஆகியன சைவசமயத்தின் முதனூல்கள் என்று கூறப்படுகின்றன. இவை இறைவனால் உருவானவை. ஆகமங்கள் இருபத்தெட்டாகும். இவற்றுள் ஆலய அமைப்பு முறை, வழிபடுமுறைபற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆலயங்கள் யாவும் இவ்வாகமங்கள் கூறும் விதிகளுக்கு அமைய எழுந்தவையே. நாட்டின் முக்கிய அம்சமாகக் கோயில் விளங்குகின்றது. அதனால் தான்

"ஆலயம் இல்லா ஊர் அடவி" (காடு) என நாயனார் ஒருவர் கூறியுள்ளார்.

இவ்வாறு உயர் தத்துவங்களையும் சிறப்புக்களையும் உணர்த்தும் கோயில்கள் உருவான முறை தனிப்பட்டதாகும். கலைகள் பலவற்றினதும் வளர்ச்சிக்கு நிலைக்களனாக விளங்கியது கோயில்களே என்பதை ஒவ்வொரு கோயிலின் தூணும், கோபுரமும், விமானமும், சுவரும் சுட்டிக் காட்டும். கோயில் அமைப்பு கட்டிடக்கலை வளர்ச்சிக்கு பெருவாய்ப்பு அளித்தது.

இந்தியக் கோயிற் கட்டிட வகைகளை நாகரம், வேசரம், திராவிடம் என 3 பிரிவாக வகுத்துள்ளனர். அடியில் இருந்து உச்சிவரை நாற்சதுரமாக அமைவது நாகரமாகும். இது வட இந்திய கோயில்களில் காணப்படும் அமைப்பாகும். வேசரம் என்பது விமான அமைப்பிலும் கட்டட அமைப்பிலும் வட்ட வடிவமாகப் பௌத்த கோயில்கள் போன்று காணப்படும். திராவிட அமைப்பிலேயே தென்நாட்டுக் கோயில்களும் நம்நாட்டுக் கோயில்களும் அமையப் பெற்றுள்ளன. கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு ஏற்பட்டுள்ளன.

"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதி னோடெட்டு மற்றும்
கரக் கோயில் கடி பொழில் சூழ் ஞாழற் கோயில்
கருப்பறில் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்
இளங் கோயில் மணிக் கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுறும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ"

எனப் பல வகைக் கோயில்கள் தேவாரங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளதைக் காணலாம். ஆயினும் சிற்ப நூல்களில் விஜயம், ஸ்ரீ போகம், ஸ்ரீ விலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், உறஸ்திபிருஷ்டம், கேசரம் என்னும் ஏழுவகைக் கோயில்களைக் குறிப்பிடுகின்றது. இதைவிடக் கேவலாலயம், மிஸ்ராலயம், சங்கீர்ணாலயம் என 3 வகை ஆலயங்களையும் நூல்கள் கூறியுள்ளன. இறைவனுக்கு மட்டும் கோயில் அமையும் போது அது கேவலாலயம் ஆகும். இறைவனுக்கும் தேவிக்கும் அமையும் போது அது மிஸ்ராலயம் என்றும் பரிவாரங்களுடன் இறைவனுக்கும் தேவிக்கும் சேர்த்து அமையும் கோயில் சங்கீர்ணாலயம் என்றும் அழைக்கப்படும். இவ்வகையான கோயிலே தென்னாட்டிலும் இலங்கையிலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

கோயிலின் அமைப்பைக் கூர்ந்து அவதானிப்போமாகில் அங்கு பல உறுப்புக்கள் இருக்கக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் கட்டிடம் முழுவதும் விமானம் எனப்படும். விமானம் என்பது விசேஷமாக அளந்து அமைக்கப்பட்டது என்னும் கருத்தைச் சுட்டி நிற்கின்றது. எம் அறிவிற்கு எட்டியவாறு இறைவனை எல்லைக்குட்படுத்த நாம் கற்பித்துக் கொண்ட ஒருவகை அளவு என்று விளக்கலாம். இவ் விமானத்தின் மேற்கூரை சிகரம் என்றும் ஸ்தூபி என்றும் அழைக்கப்படுகிறது. கோயில் கருவறையின் அமைப்பைக் கொண்டு அதை அதிஷ்டாளம், பாதம், கபோதம், பண்டிகை, கண்டம், ஸ்தூபி என 6 பகுதிகளாகப் பிரிக்கலாம். ஸ்தூபியின் கீழுள்ள கருவறை கருப்பக் கிரகம் எனப்படும். இதன் வாயில் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும். சரீரத்தில் ஆறாதாரங்கள் அமைந்திருத்தல் போன்று ஆலயத்திலும் கருப்பக் கிரகம் முதலிய மண்டபங்கள் ஆறாதார சொரூபமாய் விளங்குகின்றன. இக்கருவறையைச் சுற்றியுள்ள வெளிப்புற மூன்று சுவர்களிலும் விக்கிரகங்கள் அமைக்கப் பட்டிருக்கும். இவை கோஷ்ட பஞ்சாரங்கள் எனப்படும். தென் புறச்சுவரில் தட்சணாமூர்த்தியும், மேற்கில் லிங்கோற்பவரும் வடக்கில் பிரமன் அல்லது துர்க்கையும் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும். வடபக்கத்தில் சுவரிலிருந்து வடக்கு நோக்கியவாறு கோமுகை இடம்பெறும். கருவறையை அடுத்துக் அதனுடன் தொடுக்கப்பட்டு முன்னே இருப்பது அர்த்த மண்டபமாகும். இதன் வாயிலின் இரு புறமும் துவார பாலகர்கள் இடம் பெறுவர். அர்த்த மண்டபத்தின் இருபக்கச் சுவர்களிலும் புறத்தே இரு கோஷ்ட பஞ்சரங்கள் இருக்கும். அர்த்த மண்டபத்தை அடுத்து காணப்படுவது மகாமண்டபமாகும். கருப்பக்கிரகத்திற்கு இடது பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு தேவியின் ஆலயம் அமையும். இதற்கும் கருவறையும் அதன் முன் அர்த்த மண்டபமும் வெளிப்புறச் சுவர்களில் கோஷ்ட பஞ்சரங்களும் காணப்படும். இறைவன் தேவி இருவரது அர்த்த மண்டபங்களின் முன்பாக இருவருக்கும் பொதுவாக மகாமண்டபம் பெரும்பாலும் அமையும். தேவிக்குத் தனி ஆலயம் அமைவதும் உண்டு.

இறைவன் ஆலயத்தில் உட்பிரகாரத்திலே அதன் எல்லையிலே உட்பிரகாரத்தை நோக்கியவாறு வலப்புறத்தே விநாயகர் ஆலயமும், இடப்புறத்தே சுப்ரமணியர் ஆலயமும் இடம்பெறும். பரிவார தெய்வங்களாக இடம்பெற்ற விநாயகர் சுப்ரமணியர் ஆலயங்கள் தற்போது இருப்பது போன்று தனித்தனி கோவில்களாக முற்காலத்தில் விளங்கி இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். திருக் கோவிலுள் நுழைந்து அதன் அமைப்பினை நோக்கும் பொழுது தான் பரிவார தெய்வங்கள் வழிபாட்டில் வகிக்கும் நிலையினை உணர முடியும். கோயிலின் வாயிலில் அடி வைத்து உள்ளே நுழைந்ததுமே நந்தி தேவரைக் காணலாம். வாயிலுக்கு அருகாமையில் இறைவன் சந்நிதியை நோக்கியவாறு பைரவர் வீற்றிருப்பார். இறைவன் சந்நிதானத்திற்கெதிரே வலப்புறம் சூரியனும் இடப்புறம் சந்திரனும் வீற்றிருப்பர். நவக்கிரகங்களும் பரிவார தெய்வங்களே. பரிவார தெய்வங்களாக விளங்கும் பிள்ளையார், சுப்பிரமண்யர், தேவி ஆகிய தெய்வங்களுக்கு தனித்தனி கோவில்களில் உயரிடம் வகித்து வழிபடுவது உண்டு. இக் கோவில்களில் பரிவார தெய்வங்கள் மிக மிக சிறு அளவிற்கே காணப்படும். சிவாலயத்தில் நந்தி விளங்கும் இடத்தில் பிள்ளையார் கோயிலில் மூஷிகமும். சுப்ரமணியர் கோயிலில் மயிலும் அம்மன் கோயிலில் சிங்கமும் காணப்படும்.

மரம், சுண்ணாம்பு, செங்கல், கல் என்னும் 4 முக்கிய பொருள்களும் கோயில் கட்டடங்களுக்கு பயன்பட்டன. கோயிற் கட்டிடம் எவற்றால் அமையினும் அது அளவைக்கு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டே ஆக்கப்பட வேண்டும். கோயில் கட்டத் தொடங்கும் பொழுது முதலிடம் பெறும் கிரியை 'இஷ்டசநியாசம்' எனப்படும். இது "அஸ்திவாரம்" ஆகும். கோயிலின் எல்லை அளவிற்கு ஏற்ப இது அமைய வேண்டும். முதன் முதலாக வைக்கப்படும் செங்கல்லின் வடிவம் பலவாறு கூறப்படுகின்றது. கோயிலின் அளவிற்கு ஏற்பக் கல்லின் அளவு வேறுபடும். இவை பற்றி காமிகாகமம் மற்றும் சிற்ப நூல்களான சில்பரத்னம், மாநசாரம், மயமதம் என்பனவும் கூறியிருக்கின்றன. அது மட்டுமன்றி ஆதார சிலை நிறுவும் முறையையும் சிற்ப நூல்கள் கூறியுள்ளன. விஷ்ணு தர்மோத்தரம் என்னும் நூல் சிலா நியாச விதி என்னும் கல் நாட்டுதல் பற்றி கூறுகின்றது.

கோயிலில் பல்வகை மண்டபங்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள் அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிறுத்தமண்டபம், வசந்தமண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்பன முக்கியமானவை யாகும். இவற்றைவிட பலவித மண்டபங்கள் கிரியை நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. விருஷதேவர், அக்கினி, மாதர்கள், கணேசர், முருகன், ஜீயேஷ்டதேவி, துர்க்கை அடியவர்கள், பைரவர், சூரியன், சந்திரன், நடராஜர், சோமஸ்கந்தர், சந்திரசேகர், நந்தி, அகோர மூர்த்தி, லஷ்மி, விஷ்ணு, குருமூர்த்தி, வடுகன், பத்ரகாளி, கௌரி முதலிய பரிவார தெய்வங்களின் உறைவிடங் களும் பாகசாலை, யாகசாலை, கோசாலை, கஜசாலை, வாஜிசாலை, வாத்யசாலை முதலிய சாலைகளும் ரத்னாலயம், தனாலயம், தான்யாலயம், சண்டேஸ்வராலயம் முதலியனவும் நவக்கிரகம், சனீஸ்வரன் சந்நிதியும் இறைவன் திருக்கோயிலில் உரியவாறு இடம்பெறும்.

மண்டபங்களின் பல்வேறு பிரிவுகளில் தூண்களும் முக்கிய இடம் பெறுகின்றன. மண்டபத்திற்குத் தக்கவாறு தூண்களின் எண்ணிக்கை வேறுபடும். தூண்கள் சிற்பி தன் கை வண்ணத்தையும், சிற்பநூற் புலமையையும் புலனாக்க வாய்ப்பளிக்கின்றன. தூண்கள் கல்லினாலும், செங்கல்லினாலும், மரத்தினாலும் அமைக்கப் படலாம். சுத்தம், மிச்ரம், சங்கீர்ணம் எனத் தூண்களின் மூவகைப் பாகுபாடு பற்றி நூல்கள் குறிப்பிடுகின்றன. தனி ஒரு பொருளைக் கொண்டு கட்டப்படும் பொழுது அது சுத்தம் என்னும் வகையினையும் இரு பொருள்களினால் அமையும் போது மிச்ரம் என்று மூன்று பொருள் கலந்து ஆக்கப்படும் போது சங்கீர்ண வகையினைச் சார்ந்தது என்று கூறப்படுகிறது. இது தூணுக்கு மட்டுமல்லாது கோவிலின் முழு கட்டிடத்திற்கும் பொருத்தமானதாகும்.

தூண்களின் அதிஷ்டானம் 16 பிரிவுகளை உடையதாகும். தூண்கள் சதுரம், எண்கோணம், ஐங்கோணம், அறுகோணம் ஆகிய எவ்வடிவாகவேனும் இருக்கலாம். இவை முறையே பிரமகாந்தம், விஷ்ணுகாந்தம், ஐங்கோணம், அறுகோணம் எனப் பெயர் பெறுகின்றன. தூணின் அடியும் முடியும் உரியவாறு ஒரே தன்மையாய் இருத்தல் வேண்டும். மண்டபங்களின் தூண்கள் பலவாகப் பெருகும் போது அவை வரிசையாக அமைதல் வேண்டும். உபஸ்தம்பங்கள் எனப்படும் சிறு தூண்களும் பெருந்தூண்களின் அளவிற்கு ஏற்றவாறு அமையும் வகையை நூல்கள் கூறுகின்றன. தூண்களின் தலை, பாதம் இரண்டும் நீங்கிய நடுக் கம்பத்தில் நான்கு பக்கங்களிலும் தெய்வங்களின் உருவங்களும் யாளி, சிங்கம் முதலியனவும் தென்னாட்டு ஆலய மரபுப்படி அமைகின்றன.

ஆலயத்தின் உள்ளிருக்கும் 5 பிரகாரங்கள் அண்மைய கோசம், ி,ாணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்னும் 5 வித கோசங்களைக் குறிக்கின்றது. வழிபடுவோர் 5 முறை பிரகாரங்களைச் சுற்ற வேண்டும் என்பது பஞ்சகோசங்களையும் கடந்து ஆண்டவன் விளங்குகிறான் என்பதை நினைப்பதற்காகவே ஆகும். கோவில்களுக்கு அழகைக் கொடுப்பனவும் பிரகாரங்களே. இப்பிரகாரங்கள் வளரும் போது கோவிலைச் சுற்றித் திட்டமிட்டு அமைக்கப்படும் நகரம் ஒன்று உருவாகின்றது. சிற்ப நூல்களும், ஆகமங்களும் கூறும் அளவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட மதுரை மாநகரம் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்நகரம் ஆலயத்தை நடுவமாகக் கொண்டதாகும். 5 அல்லது 3 அல்லது ஒரு பிரகாரத்தையாவது கொண்டு கோயில் அமையலாம். கருப்பக்கிரகம் பிரகாரத்தால் சூழப்பட்டு விரியும் முறையை காரணாகமம் விரிவாகக் கூறுகின்றது. ஒவ்வொரு பிரகாரத்திற்கும் தனித்தனிக் கோபுரம் அமைவதே முறை.

இவ்வாறு உருவான கோயிலில் அக்கினித் திக்கில் அமைவது பவனாலயம். வடகிழக்கு மூலையில் கிணறு இடம் பெறும். கிழக்கிற்கும் வடகிழக்கிற்கும் நடுவில் வாத்ய சாலையும், கிழக்கிற்கும், தென்கிழக்கிற்கும் நடுவில் பொக்கிஷ சாலையும் அமைய வேண்டும். தெற்கு, தென் மேற்குக்கு இடையில் திருக்குளம் இருத்தல் வேண்டும். தெற்கு, தெற்கிழக்கிற்கு இடையில் புஷ்ப மண்டபம் இடம்பெறும். மேற்கு வடமேற்கு இடையில் ஆயுதமண்டபம் வடக்கிற்கும், வடமேற்கிற்கும் நடுவில் பள்ளி அறையும் வடக்கு, வடகிழக்கிற்கு இடையில் யாக மண்டபமும் அமைய வேண்டும். கோவிலின் உட்பிரகாரத்தில் உள்ள உட்பக்க சுவரை மேல், கீழ், நடுப்பகுதி எனப் பிரித்து புராணங்கள் கூறும் இறைவனின் அற்புதச் செயல்களை தொடர்ச்சியாக எழுதும் மரபும் காணப்படுகிறது.

அடுத்து கோயில்களில் சிறப்பிடம் பெறுவது கோபுரமாகும். "கோபுரதரிசனம் பாப விமோசனம்" என்பார்கள். இதிலிருந்து இதன் மகத்துவத்தை உணரலாம். கோயிற் கோபுரங்கள் வானளாவி உயர்ந்து நிற்பவை. வழிபடவரும் அடியார்கள் கோபுரத்தின் கம்பீரமான தோற்றத்தினைத் தொலைவில் கண்டே தரிசித்து வணங்கும் வனப்புடையதாக இது அமையும். கிழக்கே கோபுரம் அமையப்பெற்ற கோயில்கள் பல. இவற்றிற்கும் 3,5,7,9,11 என பல எண்ணிக்கை கொண்ட மாடங்கள் உண்டு. இதன் உச்சியில் 3,5,7 அல்லது 9 கவசங்கள் நிறுவப்படும். கோயிற் கருவறையின் பிரமாணத்திற்கு ஏற்பக் கோபுரத்தின் உயரம் வேறுபடும். கருவறையின் விமானங்களில் காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள் இங்கும் இடம்பெறும். கோபுரத்தின் முன்பக்கம், பின்பக்கமும் நிலைகள் அல்லது மாடங்கள் என்று அழைக்கப்படும். திறந்த சாளரங்கள் அமைக்கப்படும். கருவறை விமானத்தைக் காட்டிலும் கோபுரம் உயர்ந்து விளங்குவதையே நாம் வழமையாகக் காண்கிறோம். ஆயினும் தஞ்சை, திரிபுவனம், கங்கை கொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் கருப்பக்கிரகத்தின் மீதுள்ள விமானம் அவற்றின் கோபுரங்களை விட உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இறைவனின் திருவிளையாடல்கள் அவன் பெருமை குறிக்கும் நிகழ்வுகள் என்பன கோபுரங்களில் இடம் பெறும். சிற்ப சாஸ்திரங்கள் 15 வகையான கோபுரங்கள் பற்றி கூறுகின்றது. அதில் ஒவ்வொரு மாடியும் அமைய வேண்டிய முறையும் அங்கே காணப்படும் அறைகள், தூண்கள், சுவர்கள் முடிகளுடன் கூடிய விமானங்கள், நிலைகள், யன்னல்கள் முதலியன பற்றியும் கூறப்படுகின்றது.

ஒவ்வொரு கோயிலுக்கும் சிறப்பாய் அமையும் அம்சங்கள் நான்கு. இவை தலம், மூர்த்தி, தீர்த்தம், விருக்ஷம் என்பனவாகும். கோயில் அமைந்திருக்கும் இடம், எழுந்தருளியிருக்கும் மூர்த்தி, கோயிலுடன் தொடர்புள்ள விருக்ஷம், புண்ணியந்தி தளம் முதலான இந் நான்கு விடயங்கள் பற்றியும் தனித்தனியே ஆராய வேண்டியவை ஆகும். ஒவ்வொரு கோயிலுக்கும் உள்ள தல புராணங்கள் இவற்றை விளக்கிக் கூறும்.

ஆலயங்களில் நிறுவப்பட்டிருக்கும் திருவுருவங்கள் பல திறத்தன. இவற்றில் சில கல்லாலும், சில மரத்தாலும், சில வெண்கலத்தினாலும் உருவாக்கப்பட்டிருக்கும். உருவம்

அமைக்கும் கலையே தனிப்பட்டது. உருவங்களின் பிரமாணங்கள் அவை சுட்டும் கருத்துக்கள் என்பனவும் முக்கியமானவையாகும். திருக்கோயில் வழிபாடு தனி ஒரு மனிதனுக்கென ஏற்படவில்லை. எல்லோரும் வழிபடுவதற்கு எளிதாய் அமைவனவே விக்கிரகம். உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் உய்ய வேண்டி கருணை மேலீட்டினால் உருக்கொள்கிறான். அவன் பல நிலைகளை மேற்கொண்டு அருள் பாலித்ததனால் உருவங்கள் பல திறந்தனவாகின்றன. இறைவனின் ஒவ்வொரு உருவத்தையும் அவதானித்தால் அவை ஐந்தொழில்களையும் உணர்த்தும் முறையில் அமைந்திருக்கக் காணலாம்.

விக்கிரக வணக்கம் பொதுவாக எல்லா மதத்தவருக்கும் இன்றியமையாதது ஆகும். உருவ அமைப்பு, அது சுட்டும் வரலாறு, உருவத்தின் திருக்கரங்களில் விளங்கும் படைக் கலங்கள், கைகள் காட்டும் முத்திரைகள், அணிந்திருக்கும் அணிகலன்கள் அவை உணர்த்தும் பொருள் என்பன திருவுருவங்களைத் தரிசிக்கும் எம் மனதில் பதிய வேண்டியவையாகும். கருணை வடிவான உருவம் கொண்ட விக்கிரங்களும், தவறிழைக்கும் தீயோரை ஒறுத்து நல்வழிப்படுத்தப் பயங்கரத் தோற்றம் கொண்ட விக்கிரகங்களும் காணப்படுகின்றன. இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் தெளிவாகவும் ஒருங்கேயும் காட்டுவது 'நடராஜர்' வடிவமாகும்.

சைவ வழிபாட்டில் இலிங்கம் முக்கிய இடம் பெறுகிறது. இது பல உயரிய தத்துவங்களை உணர்த்தி நிற்கின்றது. திருமாலும், பிரமனும் அடி முடி காணும் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைவது. இலிங்கோற்பவ மூர்த்தி உருவம் மிகவும் முக்கியமானது. எல்லாச் சிவாலயங்களிலும் கருவறையின் மேற்குப்பக்கச் சுவரில் புறத்தே அமைக்கப்பட்ட மாடத்தில் இவ் விக்கிரகம் நிறுவப்படும். விக்கிரகத்தின் மேற்பக்கமும் கீழ்ப்பக்கமும் பிறை போன்று வளைந்திருக்கும். நடுவே சிவன் உருவம் அமையும். திருவுருவத்தில் நான்கு கரங்கள் காணப்படும். நெற்றியிலிருந்து முழந்தாள் வரையுள்ள பகுதி மட்டுமே வெளியே தெரியும். முன்னர் விளங்கும் இரு கரங்களும் அபய கரமாகவும் வரத கரமாகவும் அமையும். குண்டலம், ஆரம், கேயூரம், முத்து மாலை ஆகிய அணிகலன்கள் திருவுருவத்தை அலங்கரித்தற் குரியன. விக்கிரகத்தின் வலது பக்கத்தில் மேலே பறக்கும் நிலையில் அன்னமும் இடது பக்கத்தில் கீழே நிலத்தினுள் அகழ்ந்து தோண்டும் பாவனையில் பன்றியும் சித்தரிக்கப்படும்.

இவ்வாறு கோயில்களில் காணப்படும் ஏனைய விக்கிரங்களும் அவற்றுக்குரிய இடத்தில் நிறுவப்படல் வேண்டும். உருவங்களை அமைக்கும் சிற்பி அவற்றைப் பிற மாணவர்களுக்கு அமைய உருவாக்குதல் வேண்டும். தவறு சிறிதளவு நேரிடினும் அது சிற்பியையும், கர்த்தாவையும், கிராமத்தையும், நாட்டையும், மக்களையும், அரசனையும் அவ்வத் தவறுகளுக்கு ஏற்றவாறு பாதிக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன. சிற்பங்களின் 'அளவுகள்' ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும், புராணங்களிலும் காணப்படுகிறது. விக்கிரங்களின் அளவைக் கூறும் நூல்களின் அங்குலம், தாலம் முதலிய விக்கிரக அளவைகள் கூறப்பட்டுள்ளன. விக்கிரங்களின் உயரம், சுற்றளவு ஆகிய அளக்கும் முறையும் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

உருவங்கள் நிற்கும் நிலையினைக் கொண்டு அவற்றைச் சமபங்கம், அபங்கம், அதிபங்கம் என 3 ஆக பிரித்துக் கூறப்படுகிறது. உருவம் வளையாது நேரே நிற்பது சமபங்கம். ஒருபக்கம் சரிந்து நிற்கும் நிலை அபங்கம், ஒன்றுக்கதிகமாக வளைவுகள் கொண்ட நிலை அதிபங்கம் எனவும் பெயர் பெறுகிறது. கோபாலப்பட்டர் எனும் ஆசிரியர் தம் நூலில் உருவங்களை மிருண்மயம், தாருகடிதம், லோ உறஜம், ரக்நஜம், சைவஜம், கந்தஜம், கௌசுமீ என வகுத்துள்ளார். இவை மிருண்மயம் – மண்ணால் செய்யப்பட்டது, தாருகடிதம் – மரத்தால் உருவாக்குவது, லோகஜம் – உருக்கி வார்ப்பது, சைலஜம் – கல்லால் உருவானது, கந்தஜம் – வாசனைப் பொருள்களால் ஆனது, கௌசுமீ – பூக்களால் ஆக்கப்படுவது எனப் பொருள் தரும்.

கல்லினால் விக்கிரகம் அமைக்கப்படும் முறை, அக்கல்லைத் தேர்ந்தெடுக்கும் முறை, எங்கே எடுப்பது போன்ற பல முறைகள் சிற்ப சாஸ்திரங்களில் விளக்கிச் கூறப்பட்டுள்ளன. தனிமை வாய்ந்ததும், தூய்மை ஆனதுமான பாதுகாப்பு மிகுந்த இடத்தில் நூல்கள் கூறும் பலவகையான நியமங்களை மேற்கொண்டே சிற்பி ஒருவன் சிற்பங்களைச் செதுக்குதல் வேண்டும்.

மனிதப் பிறவியில் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பக்தி முக்கியமானது. ஆண்டவன் அருளைப் பெறப் பக்தியே எளிதான மார்க்கமாகும். ஆலய வழிபாட்டின் மூலம் இந்த உண்மையை உணர்ந்து பக்தி செலுத்தவே பல ஆலயங்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆகவே ஆன்மிகத்தைக் கடைப்பிடித்து ஆலய வழிபாடு செய்து உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து முக்தியாம் பேரின்பத்தை அடைவோமாக.



திருவாதிரை விரதம்

மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுட்டிப்பது திருவாதிரை விரதம். இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. இதனையொட்டியே சிவ பெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் கூறுவர். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராசருக்குச் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகுந்த சிறப்புடையது. இவ்விரதம் சிதம்பரத்திலிருந்து அனுட்டிப்பது உத்தமோத்தமம். அங்கு ஆருத்ரா தரிசனம் செ-வதற்காக அநேகர் செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இவ்விரதத்தில் உபவாசம் இருத்தல் மேலாம்.

சங்சரசங்கிதை என்னும் வடமொழி நூலின் உபதேச காண்டத்தில் இவ்விரதமகிமை கூறப்பட்டுள்ளது. கச்சியப்பசிவாசாரியருடைய மாணாக் கராகிய கோனேரியப்ப முதலியார் தமிழில் இதனை மொழி பெயர்த்துள்ளார்.



தியானம்

ந. கார்த்திகேயன்
விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



இருபத்தியோராம் நூற்றாண்டில் நாம்.....

உலகமெங்கும் 'தியானம்' என்ற சொல் மீண்டும் மிகவும் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் ஆன்மிகவாதிகளுக்கு மட்டுமே உரித்தான பயிற்சியாகக் கருதப்பட்ட தியானம், இன்று பலதரப்பட்டவர்களும் பல்வேறு பயன்கருதி கருத்தில் கொண்டுள்ள விடயமாக மாறிவிட்டது.

இந்து சமயம் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே உலகுக்கு வழங்கிய அதியுயர்ந்த கொடைகளில் ஒன்றுதான் தியானம் ஆகும். பல மதத்தவரும் இதன் மகிமையைத் தற்போது உணரத் தொடங்கியதால், 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இதைப் பற்றி மீண்டும் பரவலாகப் பேசவும் சிந்திக்கவும் தொடங்கியுள்ளனர். நாடு, மதம் போன்ற எல்லைகள் கடந்து, பலதரப்பினரும், பல்வேறு வழியில் தம்மை மேம்படுத்தும் சாதனமாக தியானத்தை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

கடந்த பல நூற்றாண்டுகளாக, பல்வேறு காரணங்களால், பெரும்பாலான இந்துக்கள் தியானம் செய்வதை மறந்து, புறக்கணித்து வந்துள்ளனர். பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்துக்கு அடிமையானமை, பொருட்கள் மற்றும் புலனின்பங்கள் மீதான அதீத நாட்டம் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், பொருட்கள் மற்றும் புலனின்பங்கள் மீதான அதீத நாட்டத்தைத் தமது பைபிளாகக் கொண்ட மேற்கத்தையவர், அந்தப் போதையால் பெற்ற உந்துதலால் அபரிதமான செல்வத்தை ஈட்டிய போதும், அனைவரும் தமது மன அமைதியைத் தொலைத்து விட்டிருந்தனர். மன அமைதியைப் பல வழியில் தேடி, அது எங்கும் கிடைக்காதவர்களுக்கு இறுதியில் இந்தத் 'தியானம்' கைகொடுத்துள்ளது. அவர்கள் தமக்குத் தெரிந்த வகையில் தியானத்தைச் செய்து ஓரளவு மன அமைதியைப் பெற்றமையும் இன்று அதன் பிரபல்யத்திற்குக் காரணமாகிவிட்டது.

2003 ஒகஸ்ட் 4ம் திகதி 'டைம்' (TIME) சஞ்சிகையில் முதற்பக்க பிரதான செய்தியாக 'தியானம்' பற்றிய கட்டுரை ஒன்று பிரசுரமாயிருந்தது. அதில், தற்போது ஒரு கோடிக்கு மேற்பட்ட அமெரிக்கர்கள் ஏதாவதொரு வகையில் தியானப் பயிற்சி செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரச அலுவலகங்கள், சட்ட நிறுவனங்கள், சிறைச்சாலைகள், இணையக் கூடங்கள் எனப் பல்வேறு இடங்களில் 'தியான'ப் பயிற்சி அறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என அக்கட்டுரையின் ஆசிரியர் 'ஜோயல் ஸ்டெய்ன்' (Joel Stein) குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து வெறுமனே விஞ்ஞான வளர்ச்சியோ, பெருந்தொகையான பொருள் வளமோ அல்லது அதனால் கிடைக்கும் சுகபோக வாழ்க்கையோ மட்டும் மனிதனுக்கு நீடித்த ஆரோக்கியத்தையும், மன அமைதியையும், ஆனந்தத்தையும் தந்துவிடாது

என்பதை அவர்கள் அனுபவபூர்மாக உணர்ந்துள்ளதை அறிந்து கொள்ளலாம். ஆனந்தமான வாழ்க்கைக்கு ஏனையவற்றுடன் ஆன்மிகமும் அவசியம் என்பது மீண்டும் ஒருமுறை உணர்த்தப்பட்டுள்ளது.

இந்து சமயத்தைப் பொறுத்தவரையில் ஆன்மிகம் என்பது விஞ்ஞானத்துக்கும், தொழில் நுட்பத்திற்கும், பொருளாதார வளத்திற்கும் எதிரானது அல்ல. அக வளமாகிய ஆன்மிகத்துடன் புற வளங்கள் முரண்படாது கைகோர்த்துச் செல்லும்போது தான் மனிதவாழ்வு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமையும்.

எனவே இந்துக்களாகிய நாம், அந்நிய மதத்தவர்களால் கவர்ச்சிகரமாக பின்னப்பட்ட – சோம்பலுடன் கூடிய சுகபோக வாழ்க்கை என்ற – மாய வலையில் ஆழமாகச் சிக்கிக் கொள்ளாமல் மீண்டெழுந்து, எமது சமயம் காட்டும் அதியுயர் வாழ்க்கை நெறியைப் பின்பற்றுவோமானால் நாம் மீண்டும் இந்த உலகின் தலைசிறந்த இனமாக மேம்படுவது உறுதி. அவ்வகையில் எமது சமயம் எமக்கு வழங்கியுள்ள ஒரு உயர்ந்த செல்வமான தியானப் பயிற்சியை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தியானம் என்றால்....

பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னர் வாழ்ந்த எமது ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும் தமது இறையனுபூதி மூலம் கண்டுபிடித்து, அதன் பலன்களை அனுபவபூர்வமாக உணர்ந்து, பின்னர் மக்களின் மேம்பாட்டிற்கு வழங்கிய அரும்பெருஞ் செல்வங்களில் அல்லது சாதனை முறைகளில் ஒன்றே தியானம் ஆகும்.

ஏறத்தாழ 3000 ஆண்டுகளின் முன்னர் வாழ்ந்த பதஞ்சலி மாமுனிவர், மனிதனொருவன் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய உதவும் வாழ்க்கைச் சாதனை முறைகளை அட்டாங்க யோகமாகத் தொகுத்து மக்களுக்கு வழங்கினார். அதில் ஒரு நிலையே / படியே தியானம் ஆகும். அவர் குறிப்பிடுகின்ற தியானம் மிகமிக உயர்ந்தது. இன்று பலரும் 'தியானம்' என்ற பெயரில் பரவலாகச் செய்துவருவது மன ஒருமைப்பாட்டுப் (தாரணைப்) பயிற்சிகளையே. இது, அந்த உயர்ந்த தியான நிலையை அடைவதற்கான பயிற்சி நெறியில் ஓர் ஆரம்பப்படி மட்டுமே என்பதை இந்துக்களாகிய நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

பதஞ்சலி மாமுனிவரின் அட்டாங்க யோகம்

யோகப் பயிற்சி மனிதனை எட்டுப்படி நிலைகளின் ஊடாக உயர்த்த வல்லது.

1. இயமம் (அடக்கம்)
2. நியமம் (பணபடுதல்)
3. ஆசனம் (அமரும் நிலை)
4. பிராணயாமம் (மூச்சைக் கட்டுப்படுத்தல்)
5. பிரத்தியாகாரம் (புலன்களை உள்ளிழுத்தல்)
6. தாரணை (நிலைத்த கவனம்)
7. தியானம் (மனத்தை அகம் நோக்கிச் செலுத்தி, பிரபஞ்ச சக்தியுடன் இணைத்தல்)
8. சமாதி (பூரணமான ஒருமையினால் விளையும் பாவாதீத நிலை)

மன ஒருமைப்பாடும் தியானமும்

மன ஒருமைப்பாடு, தியானம் ஆகிய இரண்டு பதங்களுக்கும் இடையில் மாபெரும் வேறுபாடுகள் உண்டு. மனதைக் கட்டுப்படுத்தி, அதைக் குறித்ததொரு செயலில் இருந்து விடுவிக்கும் ஆற்றலை அல்லது அதைக் குறித்ததொரு செயலில் நிலை நிறுத்தி (ஒரு நிலைப்படுத்தி) வைக்கும் ஆற்றலை "மன ஒருமைப்பாடு" (பிரத்தியாகாரம், தாரணை) எனவும், இப்பயிற்சிகள் மூலம் மேன்மையடைந்த ஒருவர் தனது ஆற்றலைத் திரட்டி இப்பிரபஞ்சத்தை இயக்கும் சக்தியுடன் (பரம்பொருளுடன்) இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியைத் "தியானம்" எனவும் எமது வேதங்கள் கூறுகின்றன.

மன ஒருமைப்பாடுப் பயிற்சிகளும் எமது ஆற்றலைப் பெருக்கிக்கொள்ள நிச்சயமாக உதவும். ஆனால், மனிதனின் பூரண ஆற்றல் வெளிப்பட உதவுவது தியானம் ஆகும்.

மன ஒருமைப்பாடுப் பயிற்சியினால் விளையும் நன்மைகள்

மன ஒருமைப்பாட்டுப் பயிற்சிகள் மூலம் அளவற்ற நன்மைகள் விளைவதை விஞ்ஞானிகளும், வைத்தியர்களும், மனோதத்துவ நிபுணர்களும் நிரூபித்துள்ளனர். அவர்கள் கூறும் பயன்களில் ஒருசில:

- குறிப்பாக மாணவர்களின் கற்றல் திறனும் ஞாபக சக்தியும் பன்மடங்கு அதிகரிக்கின்றன.
- மாணவர்களின் விவேகம், பகுத்தறிவுத் திறன் போன்றவை விருத்தியடைகின்றது.
- உடல் ஒய்வு பெறுவதுடன், வலிமையும் உறுதியும் பெறுகின்றது.
- மன அழுத்தம் குறைவடைந்து, மனம் அமைதியடைகின்றது. இதனால் எடுத்த கருமத்தை ஈடுபாட்டுடன் முழுமையாகச் செய்து முடிக்க முடிகிறது.
- இரத்த அழுத்தம் இயல்பு நிலையை அடைவதுடன், சீரான இரத்த ஒட்டம் ஏற்படுகிறது. சுவாசம் சீராகிறது. இவற்றினால் பெரும்பாலான நோய்கள் எம்மை நெருங்காது தடுக்கப்படுகின்றன. பீடிக்கப்பட்ட நோய்களிலிருந்தும் விடுபடமுடிகிறது.

இவை தவிர, எமது ஞானிகளும், சமயப் பெரியார்களும் குறிப்பிடும் தியானத்தின் அதியுயர்ந்த பயன்கள்:

- மண்ணில் நல்லவண்ணம் (சீரும் சிறப்புடனும்) வாழத் தேவையான தன்னம்பிக்கை, துணிவு, வீரம், நேர்மை, வாய்மை போன்ற நற்பண்புகள் நிர்மாணிக்கப் படுகின்றன.
- அழிவைத் தரவல்ல கோபம், காமம் முதலிய தீய உணர்வுகள் அடங்குகின்றது.
- உறுதியான, ஆரோக்கியமான உடலும் மனமும் கட்டியெழுப்படப்படுகின்றன. விவேகத்துடன் கூடிய அறிவு விருத்தியடைகின்றது. உள்ளத்தில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுகின்றது.
- உயர்ந்த சத்துவ குணம் நிலைபெறுகின்றது. எல்லையற்ற சக்தி பிறக்கின்றது.

- அனைத்திற்கும் மேலாக வாழ்வின் அதியுயர் இலட்சியமான இறைநிலையை (நிலையான ஆனந்த நிலையை – சச்சிதானந்தத்தை) அடைய முடிகிறது.

****

தியானம் (மன ஒருமைப்பாட்டுப் பயிற்சி) செய்முறை விளக்கம்

பொதுக்குறிப்புகள்

நேரம் : உதய காலமும், சாயங் காலமும் தியானம் செய்வதற்கு மிகவும் உகந்தவை. ஆனாலும் நன்கு பயிற்சி பெற்று மனவலிமையை வளர்த்துக்கொண்டவர்கள் எந்தவொரு நேரத்திலும் தியானம் செய்யலாம். தினசரி, குறைந்தது இரண்டு தடவைகளாவது தியானம் செய்வது நல்ல பலனைத் தரும்.

சுயநிலை : காலையில் காலைக் கடன்களை முடித்து, குளித்து, தூய, இறுக்கமற்ற உடைகளை அணிந்து தயாராக வேண்டும். தியானத்தின் முன்பு உணவு அல்லது ஏனைய ஆகாரங்களைத் தவிர்ப்பது அவசியம். தியானத்தின் முன்னர் கோபப்படுவது, கவலைப்படுவது, தீயவற்றை எண்ணுவது போன்றனவற்றைத் தவிர்த்து, மனதில் நல்ல, உயர்ந்த சிந்தனைகளை நினைப்பது சிறந்தது. யோகாசனங்கள் சிலவற்றைச் செய்துவிட்டு, 5 முதல் 10 நிமிட ஓய்வின் பின்னர் தியானம் செய்வது மிகச் சிறந்த பலனைத் தரும்.

இடம் : தூய்மையான, அமைதியான, காற்றோட்டமுள்ள இடம் மிகச் சிறந்தது. அது பூசை அறையாகவோ, கோயில் மண்டபமாகவோ, வீட்டுத் திண்ணையாகவோ அல்லது இயற்கை எழில் நிறைந்த இடமாகவோ இருக்கலாம். அன்றலர்ந்த மலர்கள், விபூதி, சந்தனம் போன்றவற்றை வைத்திருப்பது இடத்தை மேலும் புனிதமாக்கும்.

அமரும் முறை : சமதரையில் பாய் விரித்து, அதன்மேல் துணி விரித்து, அதன்மேல் வச்சிராசனம் அல்லது பத்மாசனத்தில் அமர்ந்து தியானம் செய்வது மிகவும் சிறந்தது. இந்த ஆசனங்கள் தியானத்தை சுலபமாக்குகின்றன. இந்த ஆசனங்களைச் செய்ய இயலாதவர்கள் வசதியாக அமர்ந்து தியானிக்கலாம். வசதியாக அமர்வது மிகவும் முக்கியமானது. நேராக, நிமிர்ந்து அமர்வதும் அவசியமானது. உடலைத் தளர்வாகவும், முகத்தை ஆனந்தமாகவும் சாந்தமாகவும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

செய்முறை

தியானத்தை ஆரம்பித்துச் செய்வதற்குப் பல்வேறு வழிமுறைகள் உண்டு. ஏதாவதொரு முறையில் தியானப் பயிற்சியைச் செய்யத் தொடங்கி, கிரமமாகச் செய்து, ஓரளவு அனுபவம் பெற்றவர், தனது நிலைக்கு ஏற்ப தனக்குப் பொருத்தமான வழிமுறையைத் தானே வகுத்துக் கொள்ளலாம். இதைக் குருவின் உதவியுடன் செய்வது மிகவும் சிறந்தது.

அனைவருக்கும் ஏற்ற ஓர் ஆரம்பநிலைத் தியான முறை இங்கு தரப்படுகிறது:

- உரிய முறையில் அமர்ந்து, கண்களை சுருக்கங்களின்றி மூட வேண்டும். தியானம் முடியும் வரை கண்களைத் திறக்காது இருக்கப் பழகவேண்டும். "ஓம்" உச்சரிக்கும் பொழுது தவிர்ந்த ஏனைய வேளைகளில் வாயும் மூடியிருக்க வேண்டும். கைகளில் சின்முத்திரை பேணலாம் அல்லது மடியில் இடது கைமேல் வலது கையை வைத்து, நிமிர்ந்து, நேராக அமர வேண்டும். முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொள்ளவும்.
- சீராக, நீண்ட உள் மூச்செடுத்து, வெளிவிடல் வேண்டும். இதனை முடிந்தளவு மெதுவாக, மூன்று அல்லது ஐந்து தடவைகள் செய்ய வேண்டும். இதன் போது உங்கள் கவனத்தை உட்சென்று, வெளிவரும் காற்றில் செலுத்த வேண்டும்.
- மீண்டும், மூன்று அல்லது ஐந்து தடவைகள் நீண்ட மூச்செடுத்து, வெளிவிட வேண்டும். ஆனால், தற்போது மூச்சை வெளிவிடும்போது, "ஓம்" என்ற பிரபஞ்ச மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். இதையும் முடிந்தளவு மெதுவாகச் செய்யவேண்டும். இதன்போது கவனத்தை அடிவயிற்றிலிருந்து பிறக்கும் அதிர்வுகளை அவதானிப்பதில் செலுத்த வேண்டும்.
- பின்னர், உங்கள் கவனத்தை உடலில் செலுத்த வேண்டும். கால் பெருவிரலில் ஆரம்பித்து, குதிக்கால், கணுக்கால், கால்தசைகள், முழங்கால், தொடைத் தசைகள், இடுப்பு, வயிறு, நெஞ்சு, முதுகு, கைவிரல், மணிக்கட்டு, முழங்கைத் தசைகள், மேற்கைத் தசைகள், தோள்மூட்டு, கழுத்து, காதுகள், கண்கள், முகத் தசைகள், நெற்றி, தலை வரை ஒவ்வொரு உறுப்புக்களிலும் சில விநாடிகள் தனித்தனியாக மனக் கண்ணால் கவனஞ் செலுத்துவதுடன், அவற்றைத் தளர்வாகவும் ஓய்வாகவும் வைத்துக்கொள்ளவும். அத்துடன் அவை உறுதியாகவும் திடமாகவும் இருப்பதாக நினைத்துக் கொள்ளவும்.
- இதன் பின்னர், கவனத்தை பிராணனில் (சுவாசக் காற்றில்) செலுத்தவும். அவை சீராக இயங்கிக் கொண்டிருப்பதையும், சக்தியை உடலின் பல்வேறு பாகங்களுக்கு எடுத்துச் செல்வதையும் உணர முற்படவும். அவை சீராகவும் உறுதியாகவும் தொழிற்படுவதாக நினைத்துக் கொள்ளவும்.
- அடுத்ததாக, மனம் மிகவும் அமைதியாக இருப்பதை உணருங்கள். அது மேலும் மேலும் வலிமையும் ஆற்றலும் பெறுவதாக நினைத்துக் கொள்ளவும்.
- அடுத்ததாக, எமது மனதைக் கட்டுப்படுத்தவல்ல அறிவு மேலும் மேலும் விரிவடைந்து பிரகாசிப்பதாக நினைக்க வேண்டும். விவேகமும் படைப்பாற்றலும் விருத்திபெறுவதாக எண்ண வேண்டும். இவை நாம் தீயவற்றைத் தவிர்த்து எப்போதும் நன்னெறியில் நடக்க உதவுவதாக நினைக்க வேண்டும்.
- அடுத்ததாக, இத்தகைய தூய நிலையில் நாம் ஆனந்தமாகவும் அமைதியாகவும் இருப்பதை உணர வேண்டும்.
- அடுத்ததாக, சலனமற்ற நீர் நிலையில் தெளிவான விம்பங்கள் தோன்றும். அதுபோல், உங்கள் மனத்தில்

(மனக் கண்ணில்) உங்களுக்குப் பிடித்த இறைவனின் திருவுருவத்தை நினைத்துக் கொள்ளவும். மிகவும் எழில் பொங்கும் சூழலில், அவர் ஆனந்தமயமாகக் தோன்றும் காட்சியைக் காணுங்கள். பின்னணியில் குளிர்மையான, பிரகாசமான ஒளி வீசுகிறது. அவரது அருள் பொங்கும் முகத்தை உற்று நோக்குங்கள். அவரது பாதக் கமலங்களை வணங்குங்கள். சிறிது நேரம் பிரார்த்தனை செய்யுங்கள். பின்வரும் பிரார்த்தனைகளில் ஒன்றைக் கூறி, தியானத்தை நிறைவு செய்யலாம்.

(அ) வகுப்பு 11 வரையிலான மாணவர்கள் செய்யக்கூடிய பிரார்த்தனை

ஓம்... இறைவா!

- நீ எல்லையற்ற ஆற்றல், எனக்கு ஆற்றலைக் கொடு.
- நீ எல்லையற்ற வீரியம், எனக்கு வீரியத்தைக் கொடு.
- நீ எல்லையற்ற வலிமை, எனக்கு வலிமையைக் கொடு.
- நீ எல்லையற்ற ஊக்கம், எனக்கு ஊக்கத்தைக் கொடு.
- நீ எல்லையற்ற வீரம், எனக்கு வீரத்தைக் கொடு.
- நீ எல்லையற்ற உறுதி, எனக்கு உறுதியைக் கொடு.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(ஆ) வகுப்பு 11க்கு மேற்பட்ட மாணவர்களும் பெரியவர்களும் செய்யக்கூடிய பிரார்த்தனை

- எனது உடலும் இந்திரியங்களும் பரிசுத்தமாகட்டும், உறுதியாகட்டும்
- எனது மனமும் புத்தியும் தூய்மையாகட்டும், திடமாகட்டும், ஒளிபொருந்தியதாகட்டும்
- எனது உள்ளம் அமைதி, அன்பு, மற்றும் ஆனந்தத்தால் நிறையட்டும்
- எனது வாழ்க்கை சக்தியும், ஆர்வமும் நிறைந்ததாக அமையட்டும். அத்துடன் ஆளுமை விருத்தியிலும், தன்னலமற்ற மக்கட் சேவையிலும் எப்போதும் ஈடுபடுவதாக அமையட்டும்.
- இவை அனைத்தையும் அடைவதற்கு, இறையருள் என்றும் எனக்குத் துணை புரிவதாக. அவரது தெய்வீக-ஒளி என்றும் என்னை வழிநடத்தட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரார்த்தனையின் பின்னர் தியானத்தை (மன ஒருமைப்பாட்டுப் பயிற்சியை) நிறைவு செய்யலாம். பின்பு கண்களை மெதுவாகத் திறந்து, அமைதியாக எழுந்து ஏனைய கருமங்களைச் செய்யலாம்.

****

பதஞ்சலி மாமுனிவர் கூறும் யோகத் தடைகள் ஒன்பது

(1) நோய் (உடல் உபாதை)
இதனைச் சரியான உணவுக்கட்டுப்பாடு (பத்தியம்) மற்றும் மருந்துகள், சிகிச்சைகள் மூலம் வெல்லலாம்.

(2) மந்த மனநிலை (ஸத்யானம்)
இதனை விவேகம், திடசித்தம் மூலம் போக்கலாம்.

(3) ஐயப்பாடுகள் (சம்சயம்)
இதனைக் குருவின் துணை மற்றும் தன்னம்பிக்கையால் நீக்கலாம்.

(4) கவனமின்மை (பிரமாதம்)
இதனை இடையறாத விழிப்புணர்வு மூலம் வெல்லலாம்.

(5) சோம்பல் (ஆலஸ்யம்)
ஆரோக்கியமான உடற்பயிற்சி, வேலை, சுறுசுறுப்பு மூலம் வெல்லலாம்.

(6) வைராக்கியமின்மை (அவிரதி)
இதனை இந்திரிய சுகங்களின் நிலையாமை, தீய குணங்களின் விளைவுகள் பற்றிச் சிந்திப்பதன் மூலம் வெல்லலாம்.

(7) மாயக் காட்சி (பிராந்தி தரிசனம்)
நிஜ சிந்தனை, தரிசனம் மற்றும் நிகழ்காலத்தில் நிலைத்தல் மூலம் வெல்லலாம்.

(8) முயன்றும் யோகநிலை அடையாமை (அலப்த பூமிகத்வம்)
இதை விலக்குவதற்கு ஒன்பதாவது தடைக்கான விளக்கத்தைப பார்க்கவும்.

(9) நிலையில் நில்லாமை (அனவஸ்த்தி தத்வம்)
இந்த எட்டாவது, ஒன்பதாவது தடைகள் யோகசாதனையின் உயர் படிகளின் போது மிகத் தீவிரமாக ஒருவரைப் பாதிக்கக் கூடியவை. முற்பிறவியில் ஏற்பட்ட தீய அனுபவங்களின் (தீய சமஸ்காரங்களின்) பதிவுகள், இப்பிறவி ஆன்மிக முயற்சிகள் அனைத்தையும் பலனற்றவையாக மாற்றிவிட முயலும். இதனைச் சுயபரிசோதனை, பிரார்த்தனை மூலமும், குரு மற்றும் ஆன்மிகப் பெரியோர்களின் வழிகாட்டுதல்கள் மூலமும் களைந்து விடலாம்.



திருவெம்பாவை

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமாகும். மாதங்களில் நான் மார்கழி என்று கிருஷ்ண பகவான் கீதோபதேசத்தில் கூறுவதிலிருந்து இதன் மகிமையை அறியலாம். மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இறைவனை நினைத்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின்றது. திருவெம்பாவை, நடராஜப் பெருமானுக்கு உரித்தான உற்சவம்.

மேலும் மார்கழியில் நிகழும் விழா இறைவனின் ஐந்தொழில்களில் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.



முன்னவனாய் முன்னின்று வெவ்வினையை வேரறுக்கும் ஸ்ரீ கணபதி

திருமதி. மங்கையர்க்கரசி
மயில்வாகனம்



புதிதாய் ஆரம்பிக்கும் ஒவ்வொரு கருமங்களுக்கும் முன்னவனாம் கணபதியின் துணை வேண்டும். அவர் அருளுக்கு இலக்காகும் செயல் வெற்றியுடன் நிறைவேறுவதும் கண்கூடு.

"முன்னவனே ஆனை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மை சுகத்தவனே– மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடை எம் சேவகனே
தற்பரனே நின் தாள் சரண்"

முன்னவனாய் முன்னிற்பவன் கணபதியே! கணபதியை வணங்கும் மதம் காணபத்தியம் எனப்படும். முன்னவனாகிய கணபதியே, மூத்த பிள்ளையார், கணபதி, கரிமுகன், கணநாதன், ஐங்கரன், யானைமுகன், கற்பக விநாயகர், விக்கினேஸ்வரன், விநாயகன் என 1024 திருநாமங்களுக்கு உரியவனாகிறான். கணபதி என்னும் சொல்லில் 'க' என்னும் பதம் தலைவன் எனப்பொருள் கொடுக்கிறது. பரப்பிரம்ம சொரூபியாகிய கணபதியே ஞானத்திற்கும், மோட்சத்திற்கும் தலைவன் ஆகிறான். அம்மை, அப்பன் முன்னிலையில் கணபதி என்றும் பிள்ளையாகவே விளங்கினார். பால கணபதியாக விளையாடிக் கொண்டிருந்தபொழுது பெண்பூனை அவன் எதிரில் தென்பட்டது. அதைத் துரத்திப் பிடித்து விளையாடினார். இதனால் பூனையின் முகத்தில் ஊறுகள் ஏற்பட்டன. விளையாட்டு வேகத்தில் அவனுக்கு இவ்விஷயம் குற்றமாகத் தெரியவில்லை. பின் அன்னை உமையிடம் போனபொழுது உமையின் முகத்தில் ஊறுகளைக் கண்டார். "இது எப்படி வந்தது?" எனக் கேட்டார். அதற்கு அம்மை "இது என் மைந்தனாகிய கணபதி ஆக்கிய ஊறுகளே" என விடை பகர்ந்தார். தான் ஒன்றும் செய்யவில்லையே என்று திகைத்தார், குழந்தை கணபதி. பெண் உரு அனைத்தும் தன் உருவம். ஆதலால் பூனைக்குச் செய்த ஊறு தனக்கு செய்த ஊறு என்றார் அம்மை. அதைக் கேட்ட கணபதி என்றும் பிரம்மச்சாரியாகவே இருக்கத் தீர்மானித்தார். என்றும் பிள்ளையாகவே விளங்குகின்ற இவருக்குப் பெண்பாகம் இல்லை. சித்தி, புத்தி என்னும் இரு சக்திகளை அவரோடு இணைத்து வைத்துக் கூறுவது உண்மையில் அவர் மகிமையையே விளக்குவதாகும். என்றும் பிள்ளையாகவே விளங்கிக் கொண்டிருக்கிறார் கணபதி. பிள்ளையார் யார் பிள்ளை? அம்மை அப்பரின் மூத்த பிள்ளையே பிள்ளையார்.

இந்தப் பிள்ளையாரின் மூர்த்தியின் உருவத் தத்துவம், ஞான சொரூபமாகிய ஆதி அந்தம் இல்லா ஆண்டவனே என்று அறிவிக்கிறது. யானை முகத்தவனாக அவர் உருவெடுத்திருக்கிறார். உடலின் மற்றப் பகுதிகள் மானிட உருவாய் அமைந்துள்ளன. தலை ஒன்று மட்டும்

வேழத்தினுடையது. காது, தலை துதிக்கை மூன்றும் சேர்ந்து 'ஓம்' என்பது பொது இயல்பாகிறது. எனவே யானை முகத்தையுடைய கணபதி ஓங்கார மூர்த்தியாகத் திகழ்கிறார். உடல் முழுவதும் கணபதியின் உடல் ஆகிறது. அதனிடம் வலிமையும், உறுதியும். தூய்மையும், அறிவும் பொலிவடையக் காணலாம். துப்பு என்னும் சொல்லில் இத்தனை கருத்துக்கள் அடங்கியுள்ளன. பருத்த திருமேனிக்கு ஒப்ப லம்போதரம், அதாவது பேழை வயிறு படைத்தவன் ஆகிறான். அண்டசராசரங்கள் யாவும் அவனிடத்தில் அடங்கிக் கிடக்கின்றன. சர்ப்பங்கள் எல்லாம் சக்தியின் சின்னமாகும். சர்ப்பத்தைக் கொண்டு தனது தாழி வயிற்றைக் கட்டியிருப்பதன் கோட்பாடு இதுவேயாகும்.

ஐந்து கரங்கள் உடையவனாக ஆனைமுகக் கடவுள் இருக்கிறார். பொதுவாகத் தெய்வ சொரூபங்களுக்கு நான்கு கரங்கள் இருப்பதாகக் கற்பிக்கப்படுகிறது. ஆனால் தும்பிக்கை உட்படக் கணபதிக்கு ஐந்து கைகள் இருக்கின்றன. தும்பிக்கை வலப்புறம் வளைந்து சுருண்டு இருந்தால் வலம்புரி விநாயகர் என்றும் இடப்பக்கம் வளைந்திருந்தால் இடம்புரி விநாயகர் என்றும் இயம்புகின்றோம். உயர்த்திப் பிடித்திருக்கும் இரு கைகளில் அங்குசம், பாசம் என்னும் இரண்டு ஆயுதங்களை ஏந்தியுள்ளார். பாகன் அங்குசத்தால் யானையை அடக்கி, வேலையற்றபோது கயிறு அல்லது பாசத்தால் கட்டுகிறான். ஆனைமுகன் ஜீவர்களை நல்வழிப்படுத்துகின்றார். இன்னும் ஒரு கையில் தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எழுதுகோலாக வைத்திருக்கிறார். அது கல்வியின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. மற்றக் கையில் உள்ள அட்சரமாலை சிந்தனா சக்தியை வளர்ப்பது அவசியம் என்பதை ஞாபகமூட்டுகிறது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்பதைக் கணபதி காட்டிக்கொண்டிருக்கிறார். "எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டம் கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்பது வள்ளுவர் வாக்கு. அப்பனைப் போன்று நெற்றிக் கண்ணாகிய ஞானக் கண்ணையுடையவராய் இருக்கிறார், யானைக் காதுகளை அகல விரித்தவராய் இருக்கிறார் கணபதி. மனிதன் மிகைபடப் பேசி, குறைபடக் கேட்கிறான். ஆனால் கணபதியோ அன்பர் குறைகளை இரு பெரிய செவிகளால் நிறையவே கேட்பார். ஆனால் அம்மையின் மைந்தனாம் யானை முகக் கடவுள் பேசுவது குறைந்த அளவிலேயாம். கேட்பதிலேயே கண்ணும் கருத்துமாய்க் காதுகளை விரித்துக் கொண்டிருக்கிறார். நல்லறிவை வளர்க்க விரும்புவோர் விநாயகனைப் போன்று பேசுவதைக் குறைத்துக் கேட்பதை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும். உயர்ந்த காரியத்தின் பொருட்டுத் தனது அவயவங்களில் ஒன்றை இழந்து விட்டதே கழைந்த அலங்காரமாயிற்று.

விநாயகன் என்னும் சொல் நல்லாரை அறநெறியில் நடத்துபவன் என்பதாகிறது. 'வி' என்பது "அற்ற" என்றும், நாயகன் என்பது தலைவன் என்றும் அர்த்தம் அளிக்கிறது. தனக்கு வேறு ஒரு தலைவனும் இல்லாத தனிப்பொருள் என்று அது பொருள் கொடுக்கிறது.

தருண கணபதி, பக்தி விக்னேஸ்வரன், வீரவிக்னேஸ்வரன், சக்தி கணேசன், சித்தி விநாயகன், பிங்கள கணபதி நின்று கொண்டிருக்கும் மூர்த்தியாகும். அவருக்கு மேலிருக்கும் கரங்கள் அங்குசத்தையும், பாசத்தையும் பிடித்திருக்கின்றன. கீழிருக்கும் கரங்கள் வரதகரமாகவும், அபயகரமாகவும் அமைந்திருக்கின்றன. மகாகணபதி என்பவர் பூரணன். முழு முதற் பொருள் ஆகிறான். ஈஸ்வரன் மகா கணபதியுடன் ஒன்றிணைந்து விடுகிறார். பிரணவப் பொருள் அல்லது ஓங்கார மூர்த்தி எனவும் அழைக்கப்படுகிறார். பெரிய வீட்டு விநாயகனாகிய இவரை உபாசிப்பவர் இகத்தில் யோக சேபத்தையும் பரத்தில் முத்தியையும் பெறுகின்றனர்.

கணபதி வணக்கமே மிக இலகுவானது. "நம்பினார் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு." நம்பி, கல் வைத்த இடமெல்லாம் கணபதியாகவே இருந்து கருணை புரிகிறான். சந்தியோ, கோவிலோ, மடமோ, ஆலமரத்தடியோ, குளத்துக்கரையோ எங்கும் கணபதியே காட்சியளிக்கிறார். அருள் புரிகிறார். அமிர்தம் பெறுவதற்காக தேவரும், அசுரரும் திருப்பாற்கடலை கடைந்தபோது கணபதியை வணங்காததினால் ஆலகால விஷம் தோன்றிற்று. பின் கடல் நுரையை அள்ளி கணபதி உருவை ஆக்கி வழிபட்ட பின்பே அமிர்தம் தோன்றிற்று. அவ்வாறு வழிபட்ட பிள்ளையாரே சுவேத விநாயகர் என அழைக்கப்பட்டார்.

விநாயகரை வழிபட்ட பின்பே அன்னை பராசத்தி பண்டகாசுரனை வென்றார். வள்ளியை மணம்புரிய விளைந்த முருகனுக்குத் தோன்றிய இடையூறுகள் முன்னவனை முன்னிறுத்தியதால் நீங்கி வள்ளி முருகன் வசப்பட்டார். வியாசர் விநாயகரை வணங்கிப் பாரதத்தை இடையூறு இன்றி முடித்தார்.

விநாயகரை வழிபட்டுச் சௌராட்டிர மன்னன் குஸ்டம் நீங்கப் பெற்றான். இராமன் இராவணனை வென்றான். விநாயக பக்தை ஆகிய ஔவை விநாயக பூஜையை விரைவாக முடித்துக் கொண்டு தானும் சேரமான் பெருமான், சுந்தர மூர்த்தி ஆகியோருடன் திருக்கைலை செல்ல அவதிப்பட்ட நேரம் விநாயகர் "நீ ஆறுதலாய்ப் பூஜை செய்ய." எனும் ஒலி பிறந்தது. ஔவை பூஜையை முடித்தபின் விநாயகர் தனது துதிக்கையால் ஔவையைத் தூக்கி மற்றவர்கள் போகுமுன் கைலையில் சேர்த்தார். ஔவை விநாயகர் அகவலைப் பாடித் துதித்தார்.

சமணர், புத்தர் யாவருமே கணபதியை வணங்குகிறார்கள். ஜாவா, இந்தோனேசியா, ஜப்பான், பர்மா முதலிய நாடுகளிலும் திபெத்திலும் விநாயகர் சிறப்புடன் வணங்கப்படுகிறார்.

பிள்ளையார் சுழியாகிய 'உ' என்பதில் வட்டம் விந்து சக்தியையும், கீறு கோடு நாதம் சிவத்தையும் குறிக்கும் போது பிள்ளையார் சுழியில் சிவம், சக்தி இரண்டும் அடங்கியுள்ளன.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது– பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

என்று ஔவையார் பாடினார். 'சீதகளபச் செந்தாமரைப்பூ' என்ற விநாயகர் அகவலைப் பாடியளித்தார் ஔவையார். 'கணபதிராயன் அவன் இரு காலைப் பிடித்திடுவோம் குணமுயர்ந்திடவே கூடிமகிழ்ந்திடவே' என்று புதுமைப் பித்தன் பாரதி பாடியுள்ளார். அவன் அருளால், அவன் தாள் வணங்கிப் பலன் பெறுவோமாக!

ஸ்ரீ கணபதி துணை.



மட்டக்களப்பில் சைவப் பாரம்பரியம்

க. தங்கேஸ்வரி (பா.உ)
மட்டக்களப்பு

1. முன்னீடு

மட்டக்களப்பில் சைவப் பாரம்பரியம் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து திராவிட மக்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள். இவர்கள் இயக்க நாக வம்சத்தின் வழித்தோன்றல்களாவார்கள்.

ஆதித்திராவிட வணக்கமுறையில் வேல்வழிபாடு முக்கிய இடம் பெற்றது. அந்த மரபு இன்றும் தொடர்கிறது பல முருகன் கோயில்களில், மூலஸ்தானத்தில் வேல்மட்டுமே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

முருக வணக்கத்தைப் போலவே சிவவணக்கமும் மட்டக்களப்பு சைவப்பாரம்பரியத்தில் முக்கிய இடம் பெறுகிறது. மட்டக்களப்பில் உள்ள கொக்கட்டிச் சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த சிவாலயம் ஆகும். ஆதிக்குடிகளின் வேல் வணக்கம் பின்னர் முருக வணக்கமாக மாறியது போல், அவர்களின் லிங்க வணக்கம் பின்னர் சிவ வணக்கமாக மாறியது.

இங்குள்ள சிவாலயங்களில் மூலஸ்தானத்தில் வேல்மட்டுமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கது.

இலங்கையில் வேறு எப்பகுதியிலும் இல்லாதவாறு இங்கு சக்திவணக்கம் ஆதிகாலம் முதல் நிலவிவருகிறது கண்ணகியம்மன், துரோபதையம்மன், கடலாச்சியம்மன், காளியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன் எனப் பல நாமரூபங்களில் வழிபாடு நடந்தாலும் அவை அனைத்தும் சக்திவழிபாட்டையே மையமாகக் கொண்டுள்ளன என்பது வெளிப்படை. இக்கோயில்களில் பழைய காலத்துப் பத்ததி வணக்கமுறை இடம்பெறுவது, இதன் தொன்மைக்குச் சான்றாகும்.



2. முருகவணக்கத் தலங்கள்

தமிழகத்தில் பிரபலமான அறுபடை வீடுகள் என ஆறு முருகன் கோயில்கள் உள்ளன. அவை திருச் செந்தூர், திருவேரகம், திருப்பரங்குன்றம், திருத்தணி, பழநி, திருவாவினன்குடி முதலியன ஆகும். அவ்வாறே கிழக்கிலங்கையில் (மட்டக்களப்பில்) ஆறு திருப்படைக் கோயில்கள் உள்ளன. அவை வெருகல், சித்தாண்டி, கோயில் போரதீவு, மண்டூர், திருக்கோயில், உதந்தை என்பனவாகும்.

இக்கோயில்களில், மூலஸ்தானத்தில் வேல் பிரதிஷ்டை செய் யப்பட்டுள்ளது (பிற்காலத்தில் சில கோயில்களில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன). இவை தவிர வெருகல் முதல் பொத்துவில் வரை கிழக்கிலங்கையில் ஏராளமான முருகன் கோயில்கள் உள்ளன. ஒவ்வொரு கோயில் வருடாந்த உற்சவமும் மிகக் கோலாகலமாக நடைபெறும்.

மண்டூர் முருகன் கோயிலில், கதிர்காமத்தைப் போலவே திரைமூடியபடி இருக்கப் பூசை நடைபெறும்.

இந்த ஆறு திருப்படைக் கோயில்களுக்கும் கதிர்காமத்திற்கும் ஏதோ ஒரு வகையில் சம்பந்தமுண்டுதற்போது கொக்கட்டிச் சோலைக்கு அண்மையில் உள்ள தாந்தாமலையும் ஒரு முக்கிய மான முருகத்தலமாகப் பிரசித்தி பெற்றுள்ளது. இதன் தீர்த் தோற்சவம், கதிர்காமத் தீர்த்தோற்சவ காலத்தில் நடைபெறும்.

இம்முருகத் தலங்களில் கந்தசஷ்டி பூசை அதைத் தொடர்ந்து சூரன் போர் முதலிய அனுட்டானங்கள் இடம் பெறும். உற்சவ காலங்கள் பெருங் கொண்டாட்டமாக அமையும்.

3. சிவ வணக்கம்

மட்டக்களப்பில் சிவன் கோயில்கள் குறைவாகவே உள்ளன. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் ஒன்றே இங்குள்ள ஒரே ஒரு பிரபலமான சிவன் கோயிலாகும். மாமாங்கேஸ்வரர் ஆலயம் முன்பு சிவன் கோயிலாகவே இருந்தது. அது சிவாலயமாக இருந்த காரணத்தால், இராவணனை இக்கோயிலுடன் சம்பந்தப் படுத்தும் கதைகள் உருவாகின. ஆனால் பிற்காலத்தில் மூலஸ் தானத்தில் இருந்த சிவலிங்கத்துக்குப் பதிலாகப் பிள்ளையார் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து அவரை "மாமாங்கப் பிள்ளையார்" ஆக்கிவிட்டார்கள்.

இவ்வாறே திருக்கோயில் ஆலயமும் ஆதியில் சிவன் கோயிலாக இருந்து பின்னர் முருகன் கோயிலாக மாறியதென்பர். இவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என்னவென்று புரியவில்லை.

மக்களின் ஆதிவணக்கம் லிங்க வணக்கமாக இருந்தது. அதுவே பின்னர் சிவவணக்கமாக மாறியது என்பதை முன்னர் குறிப்பிட்டோம். ஆதிக்குடிகளின் வணக்கம், நடுகல் வணக்கமாக இருந்தது. ஆதியில் இவர்கள் நடுகல்லையும் வேலையும் வணங்கினர். அதுவே பின்னர், லிங்க வணக்கமாகவும், முருக வணக்கமாகவும் மாறியது என்பது வரலாறு

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வரலாறு மிகத் தொன்மையானது. அது தனியாக எழுதப்பட வேண்டியது.

4. கண்ணகி வணக்கம்

கிழக்கிலங்கையில் சக்தி வணக்கம் பல்வேறு நாமரூபங்களில் இடம்பெறுவதை முன்னர் குறிப்பிட்டோம். இதில் முக்கியமானது கண்ணகி வணக்கம் ஆகும். மட்டக்களப்பில் இது மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது. மிக நீண்டகாலமாக நிலை பெற்றுள்ளது. இன்னும் சொல்வதானால் அது மட்டக்களப்பில் வாழும் இந்துக் களின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது என்று கூடக் கூறலாம். கண்ணகி ஆலய வருடாந்த உற்சவத்தின் போது ஊர் முழுவதும் ஒன்று சேர்ந்து இந்த உற்சவம் முடியும் வரை மிகுந்த பயபக்தியுடன் அனுஷ்டானங்களை மேற்கொள்வது குறிப்பிடத் தக்கது.

கண்ணகி வழிபாடு கி. பி 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கயவாகு மன்னனால் தமிழகத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதென்பது வரலாறு. ஆனாலும் சிங்களப் பிரதேசத்தில் இவ் வழிபாடு நிலை பெறவில்லை. மாறாக, கிழக்கிலங்கையிலேயே அதுவேரூன்றியது.

'கண்ணகி' என்பது சிலப்பதிகாரக் காவியத்தில் வரும் ஒரு பாத்திரம். அப்பாத்திரம் இந்துக்களின் தெய்வமாக மாறியது எவ்வாறு? கண்ணகி மட்டுமா? ராமன், அனுமான். திரௌபதை, கிருஷ்ணன் யாவும் புராண இதிகாசப் பாத்திரங்கள் தானே. பக்தி என்பது நம்பிக்கையின் வித்திலிருந்து உருவாகிறது. "*யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தான் வருவரே*" என்ற வாசகத்திற்கமையக் கண்ணகி வழிபாடு மட்டக்களப்பு வாழ் இந்து மக்களின் சக்தி வழிபாடாக நிலை பெற்றுள்ளது.

5. புறச்சமயங்களின் தாக்கம்

மட்டக்களப்பில் சைவப் பாரம்பரியம் பற்றிச் சிந்திக்கும் போது பிறசமயங்களால் ஏற்படவிருந்த சவால்களுக்கு முகம் கொடுத்து அவற்றை முறியடித்துச் சைவசமயம் முன்னேறியது ஒரு முக்கியமான வரலாற்றுக் குறிப்பு ஆகும்.

போர்த்துக்கீசர் காலத்தில் கிறிஸ்தவமும் அதன் பின்னர் இஸ்லாமும், கிழக்கிலங்கையில் இடம் பிடித்தன கிறிஸ்தவ மத மாற்றமும், மதப் பிரசாரமும் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. சைவசமியிகள் பலர் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகக் கிறிஸ்தவராக மாறினர். ஆனாலும், உறங்கு நிலையில் உள்ள விதையைப் போல் சைவம் சிறிது காலம் இடைவெளி விட்டுப் பின்னர் முழு மூச்சாக, முழுவீச்சாக புதிய உத்வேகத்துடன் பொங்கி எழுந்தது.

சைவப் பெரியார்கள் பலர் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சைவத்தை மீட்டெடுத்தனர். அந்தச் சைவப் பாரம்பரியம் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது.

இத்தகைய ஒரு மீட்சிக்கு யார்? அல்லது எது? காரணம் என ஆராய்ந்து பார்க்கும் போது, நமது புராண இதிகாசக் கதைகளே அதற்குக் காரணமாக அமைந்தது என்பது துல்லியமாகத் தெரி கிறது. புராணங்கள் இதில் முக்கிய இடம் வகிக்கின்றன. அடுத்த தாகப் பன்னிரு திருமுறைகளும், பக்தி இலக்கியங்களும் அசைக்க முடியாதவாறு மக்களைச் சைவசமயத்துடன் பிணைத்தன

6. பத்ததி வணக்கமுறை

மட்டக்களப்பில் வேரூன்றியுள்ள பத்ததி வணக்கமுறை பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட சக்தி வழிபாடு இதில் முக்கிய இடம் பெறுகிறது.

பிராமணர்கள் கிழக்கிலங்கைக்கு வந்து ஆலயங்களில் ஆகம வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், இங்கு பத்ததி வழிபாட்டு முறையே நிலை பெற்றிருந்தது.

கண்ணகியம்மன், துரோபதையம்மன், காளியம்மன், பேச்சியம்மன், மாரியம்மன், கடலாச்சியம்மன் முதலிய ஆலயங்கள் ஆண்டுக்கொரு முறை கதவு திறந்து உற்சவங்களை நடாத்தும் ஆலயங்களாகும். இந்த உற்சவங்களின் போது பிராமணர்களின் ஆகம வழிபாட்டுக்கு இடமில்லை. பழைய ஏடுகளில் குறிப்பிட்டுள்ளபடி பூசாரிகள் பத்ததி வழிபாட்டு முறையிலேயே வழிபாட்டை மேற் கொள்வர். சமஸ்கிருதம் கிடையாது. தமிழிலேயே இம்மந்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. தகப்பன் மகன் வழியாகவும் குரு– சிஷ்ய வழியாகவும் இத்தகைய பத்ததி வழிபாட்டு முறை வளர்ந்து வந்துள்ளது. இப்பத்ததி வழிபாட்டு ஏடுகள் ரகசியமாகவே பேணப்பட்டு வந்துள்ளன.

சக்தி ஆலயங்களில், பூசைகளின் போது தெய்வங்களை உருவேற்றுவதற்கும், அம்மனைத் தோத்திரம் செய்வதற்கும் இத்

தகைய பத்ததி வழிபாட்டு முறையே பெரிதும் பயன்பட்டது. இந்த மந்திரங்கள் கும்பத்தை எழுப்புதல் போன்ற பல அற்புதங்களைக் கண் முன்னே காட்டும். ஆனால் ஆகம வழிபாட்டு சமஸ்கிருத சுலோகங்களால் அவ்வாறு செய்ய முடியாது

7. சமய அனுஷ்டானங்கள்

ஆலயங்களில், பூசைகள், விசேட தின உற்சவங்கள், வருடாந்த உற்சவங்கள் முதலியன பக்தி மார்க்கத்தில் முக்கிய அனுஷ்டானங்களாகும். பாமர மக்களை இறைவன் பால் ஈர்ப்பதற்கு இவையே பெரிதும் உதவுகின்றன. கதிர்காமத்திற்கு யாத்திரை செல்வதுபோல மண்டூர், சித்தாண்டி, கொக்கட்டிச் சோலை, காந்தாமலை ஆலய உற்சவங்களுக்குப் பக்த கோடிகள் யாத்திரையாகச் செல்வர். பூசை புனஸ்காரம் முதலியவற்றில் பங்கு கொண்டு தங்கள் சமயப் பக்குவத்தைப் பலப் படுத்திக் கொள்வர்.

இவைதவிர தனிப்பட்ட வாழ்க்கையில் ஒவ்வொரு இந்துவும் கடைப்பிடிக்க வேண்டிய சில அனுட்டானங்கள் உள்ளன. இவ்வாறு பதினாறு கர்மானுஷ்டானங்கள் உள்ளதாகச் சைவப்புலவர் சா. தில்லைநாதன் குறிப்பிடுகிறார். (மட்டக்களப்பில் இந்து சமய கலாசாரம் – பக் 68) இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியது இந்துக்களின் கடமையாகும்.

இந்து சமய வழக்காறுகளும், பண்பாட்டு விழுமியங்களும் மட்டக்களப்பின் சைவப் பாரம்பரியம் மாசுபடாமல் காத்து வருகின்றன என்றால் அது மிகையாகாது.

சைவசமயத்தைப் பொறுத்தவரை பொங்கல், பூசை, நேர்கடன், காவடி, விரத அனுஷ்டானம் முதலியன சைவப் பாரம்பரியத்தைப் பேணிக்காத்து வரும் அனுஷ்டானங்களாகும். இன்று வரை இவை பாதிக்கப்படாமல் நிலைபெற்றிருப்பதும் வளர்ச்சி பெற்று வருவதும் மனங் கொள்ளத்தக்கது.

8. ஆத்மீக வளர்ச்சி


கிழக்கிலங்கைக் கரையோரம், திருகோணமலை முதல் பொத்துவில் வரை ஆத்மீக அலைகள் நிறைந்த இடமாகக் காணப் படுகிறது. இப்பிரதேசத்தில் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், சித்தாண்டி, மாமாங்கேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தாந்தாமலை போரதீவு, மண்டூர் காரைதீவு, அக்கரைப்பற்று, உகந்தை, திருக்கோயில் முதலிய திருத்தலங்கள் கிழக்குக் கரை யோரமாக அமைந்திருப்பது கண்கூடு.

நூறு வருஷங்களுக்கு முன் கல்லடியில் நிறுவப்பட்ட ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் இன்று ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி, சமயப் பெரியார்கள் மூலம் இப்பிரதேச மக்களுக்கு, சமய சமரசம், தன்னலமற்ற வாழ்வு, தியாக உணர்வு முதலியவற்றை வழங்கியுள்ளது.

கடந்த சிலவருடங்களாக, காயத்ரி சித்தர் முருகேசு சுவாமிகள், நாவலடி கடற்கரையில் ஒரு பெரிய ஆச்சிரமத்தை நிறுவி அதில் காயத்ரி கோயிலும், சித்தர்கள் ஆலயமும் அமைத்துள்ளார்.

அவ்வாறே தம்பிலுவில்லிலும் காயத்ரி கோயிலை அமைத் துள்ளார். அண்மைக் காலமாக மட்டக்களப்பு மக்கள் ஆத்மீக நாட்டம் கொண்டு, இவ்வாலயங்களுக்குச் சென்று வருகின்றனர்.

பக்திப் பாதையிலிருந்து முன்னேறி ஆத்மீகப் பாதையில் நடை போடுகின்றனர். இந்த ஆத்மீக நாட்டம் மட்டக்களப்பு சைவப் பாரம் பரியத்தில் ஒரு முக்கிய திருப்பமாகும். இத்தகைய வழிபாட்டு முறையில் தியானமே முக்கிய இடம் வகிக்கிறது. ஜபம் முதலியனவும் இடம் பெறும் ஆனால் அப்பழுக்கில்லாத புனித வாழ்க்கையே இதன் ஜீவநாடியாகும்.



பஞ்சாங்கம் பார்க்கும் முறையும் விளக்கமும்

திதி - சந்திரனைத் தழுவி வருவது. ஆகாயத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் இடைப்பட்ட தூரமே திதியாகும். இதில் வளர்பிறை தேய்பிறை என இருவகைப்படும். சூரியனும் சந்திரனும் ஒன்று சேரும் திதியே அமாவாசையாகும்.

நட்சத்திரம் - இவை சூரியனைச் சுற்றிவருபவை ஆகும். ஒரு நட்சத்திரம் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பாதத்தையும் நட்சத்திரத்தையும் வைத்தே ஒவ்வொரு இராசியும் அமையும்.

யோகம் - ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து சூரியனும், சந்திரனும் செல்லும் நேரம். ஒவ்வொரு யோகத்திற்கும் தனித்தனித் தன்மைகள், குணங்கள் உள்ளன. சுபகாரியங்கள் செய்யும் பொழுது அதற்குரிய சுபயோகங்களைப் பார்க்க வேண்டும்.

கரணம் - திதியில் பாதியே கரணம் ஆகும். "கரணாக் காரிய சித்தி" கரணத்தை அறிந்து செய்வதால் காரியங்கள் நல்லபடியாக முடியும் என்பர்.



ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் சைவ வழிபாட்டுத் தொன்மை

பா. சி. சர்மா B.Sc

எங்கும் நிறைந்த பரம்பொருளை ஆன்ம கோடிகள் வழிபட்டு உய்வதன் பொருட்டு, விசேட சான்னித்தியம் பெற்று விளங்கும், இஷ்ட சித்திப் பிரசாத அனுக்கிரக ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதப் பெருமான், திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இம் முன்னேஸ்வர க்ஷேத்திரம், தென் இலங்கையில், வடமேல் மாகாணத்தில், சிலாப நகருக்குக் கிழக்குத் திசையில் ஒருமைல் தொலைவில் அமைந்துள்ளது. இந்நாட்டின் இறைவன் எழுந்தருளி , அருள்பாலிக்கும், பழம் பெருமைகள் மண்டிக் கிடக்கும் சிவஸ்தலங்களுள் முதன்மை வகிப்பது. இம்முன்னேஸ்வரப் பதியாகும்.

கற்பக விருட்சம் எனப்போற்றப்படும் தென்னை மரங்கள் ஏராளமாக வளரும் இப்பகுதியில், நெல் வயல்களும், தம் இரு போக விளைச்சலை உவந்தளித்து, இம்மாவட்டத்தின் செழுமையை அனைவருக்கும் பறைசாற்றுகின்றன. மழை பொழியும் காலங்களில் பாய்ந்தோடும் தண்ணீரைத் தேக்கி, தேவையான வேளைகளில் நீரை நல்கும் வண்ணம், இக்கோயிலின் முன்னால் பல மைல்கள் பரந்து கிடக்கும் குளங்கள் அமைந்துள்ளன.

இயற்கைக் காட்சிகளையும், பல்வகைப்பட்ட தாவர இனங்களையும், பல்வண்ணப் புள்ளினங்களையும், பல்வேறுபட்ட விலங்கினங்களையும் கொண்ட இப் பகுதி, பரவலான பருவ மழையையும் பெற்று வருகின்றது. அதிக மாற்றமில்லாத, ஒரே சீரான சீதோஷ்ணம், காற்றோட்டம், செழுமையான மண்வளம், அடர்த்தியான காடு போன்ற பண்புகளையும் கொண்டு விளங்குகிறது. ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரத்தை மையமாகக் கொண்டே இவ்வளவு சிறப்புகள் பெற்ற இப்பிரதேசம் அமையப்பெற்றுள்ளது.



வரலாற்றுப் பெருமைவாய்ந்த இச் சிவஸ்தலம், ஸ்ரீ சிவபுராணத்துச் சனத்குமார சம்ஹிதையில் 'அளகேஸ்வரம்' என்று சிறப்புப் பெயர் சூட்டப்பட்டு விளங்குவதோடு, அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது.[1]

புராதன இலங்கையின் முக்கியமான பிரபலம் வாய்ந்த கோயில்களை விளக்கிக் கூறும் 'கோகில சந்தேசய' (குயில்விடு தூது) என்னும் சிங்கள மொழியில் அமைந்த இலக்கிய நூல், இலங்கையின் தென்பகுதியாகிய மாத்தறையில் இருந்து, மேற்குக் கரைப் பகுதியினூடாக யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள் ஈறாக அமைந்துள்ள ஆலயங்களுள் இந்த சிவஸ்தலம் மிகவும் சிறப்புப் பெற்றதென விளம்புகிறது.[2]

இலங்கையில் உள்ள பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான முன்னேஸ்வரம், மற்றைய ஈஸ்வரங்கள் தோன்ற முன்பே, வழிபாட்டிடமாக இருந்து வந்துள்ளது.[3]

அறுபத்து நான்கு கிராமங்களைக் கொண்ட இம்முன்னேஸ்வரம் கோயிலுக்குச் சொந்தமான நிலபுலங்களின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள், கிழக்குத் திக்கில் செனானம் (Xenanam) என்ற கிராமமும், மேற்குப் புறத்தில் பிரசித்தி பெற்ற பிரம்மாண்டமான ஆலமரமும், வட திசையில் குசலை என்ற கிராமமும், தென் திசையில் சைரதலோ (Syratalo) வாவியுமாக அமைவு பெற்றிருந்தன.[4]

ஸ்ரீ பராக்கிரமபாகு என்று சிறப்பாகப் போற்றப்படும் ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் (கி.பி 1410-1462) இக்கோயிலின் நித்திய, நைமித்தியக் கிரியைகள் செவ்வனே நடைபெறுவதற்காகப் பல கிராமங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பை கி.பி 1448 ஆம் ஆண்டு, நன்கொடையாகக் கொடுத்தான்.[5]

'கலிகால சர்வக்ஞ பண்டிதன்' என்ற பட்டத்தைக் கொண்ட ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி.பி 1509-1528) என்ற மன்னன் இக்கோயிலுக்கு மானியமாகச் சில கிராமங்களை அளித்து அதனை உறுதிப்படுத்தும் வகையில் செப்புப்பட்டயத்தையும் கையளித்தான்.6 அதில் குறிப்பிட்டதற்கிணங்க இக்கோயிலுக்கு உரிய நிலப்பரப்பு வட திசையில் முன்னேஸ்வரத்துள் பாயும் நீரோட்டத்தையும், தென்புறத்தில் மாதம்பை என்னும் ஊரில் நாட்டப்பட்டுள்ள எல்லைக் கற்களையும், மேற்குத்திசையில், 'மானமான் தொட்ட' என்ற நீர்த் துறையையும் எல்லையாகக் கொண்டிருந்தது.[7]

பின்னர், இக்கோயில்அறுபத்தி ஆறு கிராமங்களையும்.[8] போர்த்துக்கேயர் காலத்தில் இக்கோயிலைச் சேர்ந்த நிலப்பரப்பு நூற்று ஆறு கிராமங்களையும் கொண்டிருந்தது.[9] ஆனால் இன்று இந்நிலப்பரப்பின் அளவு மிகக் குறைவானதாகவே உள்ளது.

இப்புனித க்ஷேத்திரம் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களுடன் தொடர்புடையதென்பதை தக்ஷிண கைலாச மகாத்மியம் காட்டுகின்றது.

இராமாயணம் என்ற இதிகாசத்தின் நாயகனான இராமபிரான் இலங்கைக்கு வந்து இராவணனைச் சம்ஹாரம் செய்தபோது, அவரைப் பிரமஹத்தி தோஷம் பிடித்தது. அவர் பாரத நாட்டுக்குத் தன் பரிவாரங்களுடன் திரும்பிச் சென்றபோது, முன்னேஸ்வர ஷேத்திரத்தைக் கடக்க நேரிட்டது. அவ்வாறு இந்தப் புனிதத் தலத்ததைக் கடந்தபோது, தம்மைப் பீடித்திருந்த பிரும்மஹத்தி தோஷம் அகன்று விட்டமையை உணர்ந்து, வியந்தார். பின்னர், இந்த ஆலயத்தின் மகிமையை அறிந்து, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சிவவழிபாடு நடாத்தினார் என்பதை தக்ஷிண கைலாச மகாத்மியம் என்னும் நூல் கூறுகின்றது.[10]

இராமபிரான் இராவணனைச் சம்ஹாரம் செய்யச் சென்றபோது இந்தச் க்ஷேத்திரத்தில் சிவ வழிபாடு செய்தார் என்பதைப் பல நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.[11,12,13]

பாரதம் எழுதிய வியாசர், ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் சிவ வழிபாடு செய்த வரலாறு பற்றி ஸ்ரீ தக்ஷிண கைலாச மகாத்மியம் விரிவாக எடுத்து இயம்புகிறது.[14]

அல்லி மகாராணி முத்துச் சலாபத்தில், முத்துக்குளிக்குங் காலங்களில், ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மனுக்கும் ஸ்ரீ முன்னேஸ்வரம் வடிவாம்பிகை அம்மனுக்கும், தனக்குமாகக் கடலில் கிடைக்கும் முத்துக்களை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொடுத்ததாகவும் வரலாறு கூறுகிறது.[15]

மனுநீதி கண்ட சோழவம்சத்துச் சூரிய குலோத்துங்க ஸ்ரீ வரராமதேவராசனின் மைந்தனான குளக்கோட்டு மன்னன், ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் பழம் பெருமைகளை இழந்து, அழிவுற்றுச் சிதைந்த நிலையில் இருந்த இத்திருக்கோயிலைச் சீர்திருத்தி, திருப்பணிகள் யாவற்றையும் குறைவறச் செய்வித்து, மகா கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றி வைத்தான்.[16] இம் மன்னனுடைய தன்னல மற்ற சேவையினால் இவ்வாலயம் மீண்டும் பெருங்கீர்த்தியுடனும் மங்காப்புகழுடனும் விளங்கலாயிற்று.

இம் மன்னன், இக்கோயிலில் பணிபுரிவதற்கென, சோழ நாட்டிலிருந்து, இறை பணிவிடை செய்ய இன்றியமையாத வல்லுனர்களைத் திறமையான நிபுணர்களின், உதவியுடனும், சிபார்சுடனும் தேர்ந்தெடுத்து, அழைப்பித்து ஸ்ரீ முன்னேஸ்வர நகரின் சுற்றுப்புறங்களில் குடியேற்றி, இக்கோயிலின் நித்திய நைமித்தியக் கிரியைகள் எவ்வித குறைகளுமின்றி, செவ்வனே இடம் பெற வழிவகைகளைச் செய்தான். இத்தெய்வீகக் கைங்கரியங்களை முறையாக நடைமுறைப்படுத்தத் தனியுண்ணாப் பூபாலன் என்ற சிரேஷ்ட ஆணையாளர் நியமிக்கப்பட்டார். இவருடைய நிர்வாகத்தின் கீழ் ஸ்ரீ முன்னேஸ்வர ஆலயத்தின் உள் மண்டபத்தில், தெய்வீகப் பணிவிடை செய்வோர் ஆயிரம் நெய் விளக்கேற்றி, தசாங்க தூப கலசங்களை வைத்து, பன்னீரில் புனுகு , கஸ்தூரி போன்ற வாசனைத் திரவியங்களைக் கலந்து தெளித்து, நவரத்தின கசித தங்கத் தாம்பாளங்களிலும், கிண்ணங்களிலும் பல்வகைப்பட்ட செஞ்சம்பாவமுது , அறுசுவையான கறிவகைகள், காயச்சிய பசும்பால், நறுமணம் கமழும் பலகார வகைகள், கற்கண்டு, வெல்லம், சர்க்கரை, கிழங்கு வகைகள், தேன், பலதரப்பட்ட பழவகைகள், புத்துருக்கு நெய், இளம் செவ்விளநீர் , தாம்பூலம் போன்றவற்றை நிவேதனமாக அர்ப்பணித்து, அர்த்த மண்டபத்தில் அலங்கார தீபாராதனை யாவற்றையும் குற்றமறச் செய்து வந்தனர்.

குளக்கோட்டு மன்னனுடைய கட்டளையினால், இம்முன்னேஸ்வர தேவாலயத்தைச் சேர்ந்த பூமி அறுபத்து நான்கு கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கிராமத்துக்கும், தனித்தனியே இடுகுறி காரணப் பெயர்கள், அவ்விடத்தில் வாழும் பணியாளர்களின் தொழில்களுக்கேற்ப இடப்பட்டன. கோயிலுக்குத் தேவையான தேர்கள், கதவுகள், வாகனங்கள், மேசைகள், பெட்டிகள், உத்தரங்கள் போன்ற மரவேலைகளைச் தச்சர் அனைவரையும் 'வங்காதெனி' என்ற கிராமத்திலும், கோயிலுக்குத் தேவையான இரும்பு வேலை செய்யும் கொல்லரை 'கரவெட்டி' என்னும் கிராமத்திலும், மற்றும் தேவாலயத்தில் பணிபுரியும் தொழிலாளர் அனைவரையும் தனித்தனிக் கிராமங்களில் எல்லா வளங்களும், வாய்ப்புக்களும் அளித்து குடியேற்றுவித்தார்.[17]

காலப்போக்கில் இக்கிராமங்களின் பெயர்களில் பல உருமாறலாயின உதாரணமாக "தீர்த்தக்கரை" என்னும்

கிராமத்தின் பெயர் "தித்தக்கட" எனவும் 'மூங்கில் வெட்டுவன்' என்ற கிராமத்தின் பெயர் "முக்குணுவட்டவன" எனவும் மாற்றம் பெற்றன. ஆயினும் சில கிராமங்களின் பெயர்கள் உருக்குலையாமல், இன்றும் தோம்புகளில் குறிக்கப்பட்டுள்ளவாறே அழைக்கப்பட்டு வருகின்றன. சுருங்கக் கூறின் குளக்கோட்டு மன்னனுடைய அயராத உழைப்பினால் இக்கோயில் புனருத்தாரணம் பெற்றுப் புதுப்பொலிவுடனும் பெருங்கீர்த்தியுடனும் விளங்கலாயிற்று.

இலங்கைத் தீவின் புகழ்பெற்ற மன்னர்களுள் ஒருவனான ஸ்ரீ சங்கபோதி மகாராஜாவின் வழித் தோன்றலிலே உதித்த, ஸ்ரீ பராக்கிரமபாகு எனப்படும் ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் (கி.பி. 1410 -1462) இம்முன்னேஸ்வரர் ஆலயத்துக்கு கி.பி. 1448 ஆம் ஆண்டு வந்து வழிபட்டான்.[18]

இம்முன்னேஸ்வர தேவாலயத்தின் இடிந்து பழுதுபட்ட பகுதிகளைத் திருத்தித் தேவையான திருப்பணிகள் யாவற்றையும் குற்றமறச் செய்வித்து இக்கோயிலின் நித்திய, நைமித்தியக் கிரியைகள் செவ்வனே உரிய முறைப்படி நடந்தேறப் பல கிராமங்களை, மானியமாக அளித்து இச் செய்தியை கல்வெட்டுச் சாசனமாகத் தெரிவித்தான். இன்றும் இக்கல்வெட்டுச் சாசனத்தை கோயிலின் கர்ப்பக்கிரகத்துக் வெளிப்பக்கச் சுவர்களில் காணலாம்.[19]

இக்கல்வெட்டுச் சாசனம் பற்றி பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.[20]

இக்கல்வெட்டுச் சாசனத்தை ஆறாம் பராக்கிரமபாகு மன்னன், இவ்வாலயத்துக்குக் கையளித்தபோது, நீல கண்ட சிவாச்சாரியார் என்பவர் இவ்வாலயத்தின் பிரதான குருவாகவும், அவருடைய சகோதரர் இவ்வாலய பரிபாலன கர்த்தாவாகவும் விளங்கினார் என்று கோயிலில் உள்ள பழைய ஏடு ஒன்று சான்று பகருகிறது.

இக்கல்வெட்டுச் சாசனம் நில மட்டத்தில் இருந்து சுமார் நான்கு அடி உயரத்தில், நான்கு வரிகளாக கிட்டத்தட்ட நாற்பது அடி நீளத்துக்குச் செதுக்கப்பட்டுள்ளது. இதன் மொழி பெயர்ப்பை பெளிலர் என்பவர் ஆங்கிலத்தில் தந்துள்ளார்.[21] கலிகால சர்வக்ஞ பண்டிதன் என்ற பட்டத்தைக் கொண்ட ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி.பி. 1509-1528) என்ற மன்னன் இவ்வாலயத்துக்கு வந்து வழிபட்டு பல கிராமங்களை கி.பி. 1517 ஆம் வருடம் சர்வமானியமாகத் தாமிரசாசனம் செய்து கொடுத்தான்.[22]

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் (கி.பி 1505-1656) இலங்கையின் கரையோரப்பகுதிகளைக் கைபற்றி அரசாட்சியைப் பலப்படுத்தியவேளை, மிகவும் உன்னதமான நிலையில் இருந்த இக்கோயிலை அடிக்கடி சின்னாபின்னப்படுத்தி, இதற்குச் சொந்தமான செல்வத்தையெல்லாம் கொள்ளையடித்தனர்.[23]

போர்த்துக்கேயரின் மிக உச்சக்கட்ட அட்டூழியத்தின் காரணமாக, கி.பி. 1578 ஆம் ஆண்டு மகோன்னத நிலையில் இருந்த இம் முன்னேஸ்வரத் தேவாலயம் தரைமட்டமாக்கப் பட்டது.[24]

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி 1747-1782) போர்த்துக்கேயரால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த இந்த சிவஸ்தலத்தின் திருப்பணிகளை நிறைவேற்ற இந்தியாவில் இருந்து சிற்பாசாரியார்களை அழைப்பித்து, தேவையான வளங்களையும், உதவிகளையும் செய்து கொடுத்தார். மீண்டும் பழைய நிலைக்குப் புணருத்தாபனம் செய்யப்பட்ட இக்கோயிலின் மகாகும்பாபிஷேகத்தினை 1753 ஆம் ஆண்டு நிறைவேற்றி வைத்தார்.[25]

இக்கோயிலின் நித்திய நைமித்தியக் கடமைகள் குறைவின்றிச் செவ்வனே இடம்பெற, ஏற்பாடுகளைச் செய்வித்து, கோயில் குருமாருக்கு (நம்பிமாருக்கு) முப்பத்திரண்டு அவண நெல்விளை நிலங்களைச சாலிவாகன சகாப்தம், ஆயிரத்து நூற்றெழுபத்தைந்து செல்லா நின்ற ஸ்ரீ முக வருஷம் ஆவணி மாதம் பதினான்காம் திகதி கி.பி 1753 ஆம் ஆண்டு செப்புப் பட்டய மானியமாக எழுதிக் கையளித்தார்.[26]

பின்னர் மலையாள நாட்டைச் சேர்ந்த மன்னர் ஒருவர் ஆறுமுகக் கடவுளின் சிலையை இக்கோயிலில் பிரதிஷ்டை செய்வித்தார்.[27]

முன்பு ஒரு தடவை கோயிலின் அருகாமையில் இருந்த குளம் ஒன்றினைச் சீர்திருத்திய பொழுது நந்தியின் தலையைக் கொண்ட ஒரு சிலையும், சுப்பிரமணியக் கடவுளின் சிலையொன்றும் கிடைத்தன.

ஸ்ரீ முன்னேஸ்வரத்தின் ஆலய பிரதான நிர்வாகி சிலாபம், புத்தளம் போன்ற மாவட்டங்களின் தலைவராகவும் விளங்கி அரச நிர்வாகத்திலும் பங்கேற்றிருந்த வேளையில், ஸ்ரீ முன்னேஸ்வரத்து இறைவனின் பெயரால் நாணயங்களைப் பொறித்துப் புழக்கத்தில் பயன்படுத்தினார். நீண்டு வளைந்த உருவத்தைக் கொண்ட இந்த நாணயத்தை "குறட்டுக் காசு" (Pincers coin - Tamil - Kuraddu Kasu) என்பர். இந்த நாணயத்தின் நீண்ட வளைந்த பகுதியின் வெளிப்புறத்தில் 'பரஸ்ராம' என்ற சோழ கிரந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன.[28]

மிகவும் உன்னதமான நிலையிலிருந்த ஸ்ரீ முன்னேஸ்வரம் கோயில் பிறநாட்டவரின் அட்டூழியங்களுக்கு இலக்காகி அழிந்தது என்பதை நிரூபிக்கும் வகையில் கொழும்பு தொல்பொருட்காட்சி சாலையில், சிதைந்த நிலையில் உள்ள கோயில் பொருட்கள் சான்று பகர்கின்றன.[29]

இன்று, முன்னேஸ்வரத்திலுள்ள, கோயிலின் பிரதான கோபுரங்கள் யாவும் பூர்த்தி செய்யப்படாத நிலையிலே காட்சியளிக்கின்றன. எனினும் இக்கோயிலின் பிரதான கர்ப்பக்கிரகமும், அதன்மீது அமைந்துள்ள ஸ்தூபியும், இலங்கையிலே எங்கும் இல்லாதவாறு பிரம்மாண்டமான வகையில் உருவாக்கப்பட்ட நிலையில் உள்ளன.

மூன்று வீதிகளைக் கொண்ட இக் கோயிலின் முன்புறமாக உள்ள திருக்குளத்தின் கரையில் அமைந்திருக்கும் வெள்ளரச மரம் இக் கோயிலின் ஸ்தல விருட்சமாகப் போற்றப்பட்டு வருகின்றது.

கோயில் கர்ப்பக் கிருகச் சுவரின் மேற்குப் புறக் கோஷ்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இலிங்கோற்பவ மூர்த்தியின் மேல் பின்புறப்பகுதி, இன்றும் உடைந்த நிலையிலேயே இருப்பதைக் காணலாம். இந்த இலிங்கோற்பவ மூர்த்தியின் முன்புறமாக உள்ள ஆறு அடி

உயரமான கற்குத்து விளக்கும் இன்று உடைந்த நிலையில் இருந்தாலும், சிவராத்திரி தினங்களின் போது நெய்யூற்றி விளக்கேற்றப்படுதைக் காணலாம்.

இக்கோயிலில் பூஜிக்கப்பட்டு வரும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், நடராஜர் போன்ற கலையழகு மிக்க விக்கிரகங்கள் இக்கோயிலின் பழைய திருந்துபோயிருந்த திருமஞ்சனக் கிணற்றை, பன்னெடுங் காலத்துக்கு முன் சுத்தம் செய்ய முற்பட்ட வேளை கண்டெடுக்கப்பட்டவை. இவ்விக்கிரகங்களை நன்கு அவதானித்தால், இவற்றின் தொன்மையையும் கலையழகையும், இவை சிற்ப சாஸ்திரத்துக்கே ஒரு எடுத்துக்காட்டாக அமைவதையும் நன்கு அறிந்து கொள்ளலாம்.[30]

இக்கோயில் கருவறையில் இலிங்கத்துடன், அம்பாளின் தாமிர விக்கிரகம், சிவலிங்கத்தின் முன்பாக இடது பக்கத்தில் அமைக்கப்பட்ட கருங்கல் பீடத்தில் நின்ற கோலமாகக் காணப்படுகின்றது. இதன் முன்பாக கீழ் மட்டத்தில் ஸ்ரீ மகா மேருயந்திரம் (ஸ்ரீ சக்கரம்) இடம் பெறுகின்ற அதே வேளை செப்புத் தகட்டிலான ஸ்ரீ சக்கரம் அம்பாள் விக்கிரகத்தின் முன்பாகவும் காணப்படுகின்றது. கல்லிலான மூலஸ்தான இலிங்கத்துடன் உலோகத்திலான வடிவழகியின் வடிவமும் சேர்ந்து உள்ள நிலை அபூர்வமானது. தொன்மை வாய்ந்த, இச் சிவாலயத்துக்குரிய ஐதீகங்களுள் இலிங்கத்துடன் அம்பாளின் வடிவமும் இணைந்து நிற்கும் இந்நிலை குறிப்பிடத்தக்க தொன்று.[31]

ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திரத்தில் பன்னெடுங்காலமாக, உஷத்காலப் பூஜை, காலைசந்திப் பூஜை, உச்சிகாலப் பூஜை, சாயரட்சைப் பூஜை, இரண்டாங்காலப்பூஜை , அர்த்தசாமப் பூஜை என்னும் ஆறு கால நித்தியப் பூஜைகள் ஆகமவிதிப்படி நடைபெற்று வருகின்றன. பல்வேறு ஆகமங்களில் கூறப்பட்டவாறு நைமித்தியக் கிரியைகள் எவ்வித குறைபாடுகளுமின்றி வருடம் பூராவும் இடம்பெற்று வருவது குறிப்பிடக் கூடிய அம்சமாகும்.

ஆண்டுக்கொருமுறை நடைபெறும் மகோற்சவம் விருஷயாகம், த்வஜாரோகணம், பிருக்கத்தானம், அங்குரம், மகாயாகம், அஸ்திரயாகம், பலிதானம், யானக்கிரமம், பரிவேஷம், விராஜனம், கௌதுகம், தீர்த்த சங்கிரகம், சூர்ணோத்சவம், தீர்த்தம், துவஜ அவரோகணம், ஸ்ரபனம், திருக்கல்யாணம், பக்தோற்சவம் என்று கிரியை நூல்களில் குறிப்பிட்டுள்ளவாறு நடைபெற்று வருவது முக்கியமானதொன்றாகும். இத்திருவிழா இருபத்தி ஏழு தினங்கள் நடைபெற்று, ஆவணிமாதம் பௌர்ணமி தினத்தை தீர்த்தோற்சவ இறுதிநாளாகக் கொண்டு அமைவுறும்.

ஆண்டுக்கொரு முறை மாசிமகத்தை இறுதியாகக் கொண்டு பத்துத தினங்கள் பிரும்மோத்சவத் திருவிழா நடைபெறுவதும் வழக்கமாகும். இதைவிட வசந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி, சிவராத்திரி, லட்சார்ச்சனை, திருக்கார்த்திகை, திருவெம்பாவை, திருவாதிரை ஆருத்ரா தரிசனம், தீபாவளி, பொங்கல் பெருவிழா போன்றவை குறிப்பிட்ட ஆகமங்கள் கூறும் கிரியை விளக்கங்களின்படி விரிவாக இடம்பெறுவதை நாம் காணலாம்.

இக்கோயிலில் விகாரி வருடம் தை மாதம் பத்தாம் நாள் முதல் (கி.பி 1900) நாளொன்றுக்குப் பதினாயிரம் தீபமாகப் பத்துத் தினங்களுக்கு இலட்ச தீபங்கள் ஏற்றி மகாருத்திர ஜபங்களும் ஸ்னபனாபிஷேகங்களும் நடைபெற்றுப் பத்தாவது தினம், சிவதீர்த்தத்தில் தீர்த்தங்கொடுத்து, பதினோராம் நாள் முன்னேஸ்வரம் திருக்கோயிலின் முன் அமைந்துள்ள குளத்தில் தீர்த்தோற்சவமும் சிறப்பாக நடைபெற்றது.

பிலவ வருடம், ஐப்பசி மாதம் ஏழாந்திகதி முதல் தைத்திங்கள் இருபத்தி மூன்றாந் திகதி வரை (23-10-1961 - 5-2-1962) நூற்றியெட்டு இலட்சார்ச்சனைகளும், நவாவரணங்களுடன் கூடிய ஸ்ரீசக்ர பூசை நூற்றியெட்டு முறைகளும், எண்ணிக்கையிலடங்காத அளவு மிருத்தியுஞ்சய நவக்கிரக யாகங்களும் நடைபெற்றன.[31]

இந்தப் புனித ஸ்தலத்தில், 1753ஆம் ஆண்டு அப்போது இலங்கையில் அரசனாக அரசாட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (கி.பி 1747 -1782) தலைமையிலும், 1875 ஆம் ஆண்டு குமாரசுவாமிக் குருக்கள் தலைமையிலும், 1919ஆம் வருடம் சோமாஸ்கந்தகுருக்கள் தலைமையிலும் 1963 ஆம் ஆண்டு பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையிலும் பின்னர் 1991 ஆம் ஆண்டிலும், 2005 ஆம் ஆண்டு இரத்தின கைலாசநாதர் குருக்கள் தலைமையிலும் கும்பாபிஷேகம் நடைபெற்றன.

முன்னேஸ்வரம் கோயிலில் உள்ள கல்வெட்டின் மொழிபெயர்ப்பு

நான் முன்னேஸ்வரம் கல்வெட்டிலுள்ளவற்றினைப் பல முறைகள் ஆராய்ந்துள்ளேன். அக்கல்வெட்டில் உள்ள எழுத்துக்களில் பல வாசித்தறிய முடியாத நிலையில் இருக்கின்றன. இக்கல்வெட்டு எழுத்துக்களைக் கொண்ட கருங்கற்கள் பழையதொரு கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்டு, பின் இப்பொழுதுள்ள கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளன. என்பது என் அபிப்பிராயம்.

கல்வரிசைகள் சேர்ந்து இணையும் இணைப்புக்களில் உள்ள எழுத்துக்கள், சுண்ணக்கலவையால் மறைக்கப் பட்டுள்ளன.இப்பொழுது உள்ள கட்டிடத்தின் கல்லில், இவ்வெழுத்துக்கள் செதுக்கப் பட்டிருக்குமானால் இவ்வாறு இருக்கமாட்டாது.

இக்கல்வெட்டு நான்கு வரிகளைக் கொண்டதாகவும் முப்பது அல்லது நாற்பது அடிகள் வரை நீண்டும் நிலமட்டத்திலிருந்து ஏறக்குறைய நான்கு அடிகள் உயரத்திலும் அமைந்துள்ளது.

கோயிலின் அருகாமையில் இருந்ததொரு குளத்தைத் தோண்டியபொழுது, இரண்டு சிற்பத் துண்டுகள் கிடைத்தன. நந்தியொன்றின் தலையும் சுப்பிரமணியக் கடவுளின் சிலையுமே அவை. இவை மிகப் பழைமை வாய்ந்தவையாக காணப்படவில்லை.

சிலாபத்து நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கொன்றில், இக் கல்வெட்டுச் சாசனம் ஒரு அத்தாட்சியாக விளங்குகிறது என நம்புகிறேன்.

மொழிபெயர்ப்பு

எங்கும் ஆனந்தம் விளங்கட்டும்! ஸ்ரீ சங்கபோதி மகாராஜாவின் வழித்தோன்றலிலே உதித்தவரும், புத்த பகவானின் பாதாரவிந்தங்களில் மலர்களைச் சமர்ப்பணம் செய்து வழிபடுபவரும், சூரிய குலத்துதித்தவரும், அரசர்க்கெல்லாம் அரசராக விளங்குபவரும், அரச பரம்பரைக்கும் வியாபாரவிருத்திக்கும் அதிபதியாக இருக்கின்றவரும், மூன்று உலகங்களுக்கும் சக்கரவர்த்தியாகத் திகழ்கின்றவருமான மாட்சிமை பொருந்திய, ஸ்ரீ பராக்கிரமபாகு மன்னர் தம்முடைய ஆட்சியின் முப்பத்தெட்டாவது ஆண்டு, ஐப்பசி மாதம், வளர்பிறையின் பத்தாம் நாள், எல்லாக் கலைகளையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து, முன்னீஸ்வரத்திலுள்ள கோயிலில் பூசை செய்கின்ற குருமார்களை (நம்பிமார்களை) ஜெயவர்த்தனா கோட்டைக்கு அழைப்பித்துக் கோயிலின் விருத்தாந்தங்களை விசாரித்தறிந்து, முன்பு கோயில் குருமாருக்கு, முன்னீஸ்வரம் பகுதியில், சொந்தமாகவும், கோயிலின் பெயரிலும் இருந்த நிலங்களையெல்லாம் முன்பிருந்தவாறே மீண்டும் கையளிக்கின்றார்.

இலுப்பதெனியா என்னும் இடத்தில் 22 அமண நெல் விளையும் வயல்களைப் பூஜைக்கு உரியதாகவும், கோட்டைப்பிட்டியா என்னும் இடத்தில் 30 அமண நெல் விளைநிலங்களையும், தித்தக்கட என்னும் இடத்தில் 8 அமண நெல் விளையும் நிலங்களையும் இத்துடன் சேர்ந்த குடியிருப்புப் பகுதிகளையும், அதனோடு சேர்ந்துள்ள காட்டுப் பாங்கான பகுதிகளையும் பிரதான குருக்களுக்குக் கையளிக்கின்றார்.

இத்துடன் முன்னாழி அரிசி, காய்கறி வகை, கீரை வகை, நறுமணம் கமழும் பொருட்கள் போன்றவற்றினை நித்தியப் பூஜைக்குப் பெறும் பொருட்டு, மாதமொன்றுக்கு முப்பது பணத்தினை, பூஜை செய்யும் குருமார்களுக்கும், பதினொரு பணத்தினை, பிரதான குருமாருக்கும் சூரிய சந்திரர் இருக்கும் வரை, இவர்களுடைய பரம்பரையின் சந்ததியினரும், அனுபவிக்கும் வகையில், சர்வமானியமாக முன்னீஸ்வரருக்கு அளித்து, இதனை ஒருவரும் திருப்பி மீட்கக் கூடாதெனக் கட்டளையிடுகிறேன். இந்நிலங்களுக்குத் தீங்கு செய்பவர்கள் பஞ்ச மகா பாதகங்கள் செய்த பாவிகளாகவும், இந்நிலத்தின் அபிவிருத்தியில் அக்கறையெடுப்பவர்கள் சுவர்க்கானந்தப் பேரின்பம் பெறுவார்கள்.

இத்துடன் ஒரு சுலோகமும் உள்ளது. அதன் மொழிபெயர்ப்பு

எல்லையில்லாத ஞானத்தையுடைய சைவ சமயத்தின் தலைவராக, கடவுளுக்கெல்லாம் கடவுளாகவும் விளங்குகின்ற, முன்னீஸ்வரருடைய அருளினால், பராக்கிரமன் இக்கல்வெட்டினை எழுதியுள்ளான்.

அடிக்குறிப்புகள்

1. (i) ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர் 1-7- 1963
   (ii) ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி கோடியர்ச்சனை விஞ்ஞாபனம் (1961) - பக்கம் 4
   (iii) சைவத் திருக்கோயிற் கிரியை நெறி கா. கைலாச நாதக்குருக்கள் பக்கம் X
2. கோகில சந்தேசய
3. The Ancient Pagoda of Munucarao - de Queyros ,Page - 427
4. The Ceylon Liltoral 1593, P.E Pieris Litt D (Cantab) 1949- Page- 4
5. Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society 1887,Volume X,No.35, page 118-119
6. The Culavamsa - II. Wilhelm Geigse (1930) page XXIV
7. செப்புப் பட்டயம் - முன்னேஸ்வரம் கோடியர்ச்சனை மலர் - பக்கம் -12
8. Ceylon Portuguese Era, Volume I, P. E. Pieris, chapter IX Page 199.
   Ceylon Portuguese Era, Volume I, P. E. Pieris, chapter IX Page 348.
9. Catholic Chilaw E.A .Fernando , Page 10
10. ஸ்ரீ தக்ஷிணகைலாச மகாத்மியம் - பதினைந்தாம் அத்தியாயம்.
11. Sketches of Ceylon History Sir P. Arunachalam Page 7
12. Report on the Census 1901- Vol -1, Sir P. Arunachalam Page 7
13. Ancient Jaffna, Mudaliyar C. Rasanayagam C.C.S (1926) Page 83 , Page 185.
14. ஸ்ரீ தக்ஷிணகைலாச மகாத்மியம் - பதினான்காம் அத்தியாயம்.
15. ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலர் 01.07.1963
16. ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் - மு. சோமாஸ்கந்தக் குருக்கள் பதிப்பு 1927- பக்கம் 10
17. கோயிலில் தோம்புகளில் விபரம் உள்ளன.
18. The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933
19. Ceylon Gazetteer - Simon Casie Chetty . Page 164
20. (i) The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933
    (ii) Journal of the Ceylon Branch of the Royal Asiatio Society ,1887,Volume X, No. 35, page 118-119
    (iii) CeylonTamil Inscription-Part I,Peradeniya, 1971,Veluppilai, Dr .A. page37-43
    (iv) S.Pathmanathan, "The Munnesvaram Tamil Inscription of ParakramabahuVI," Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, X (34).pp.54-68
    (v) சாசனமும் தமிழும்- பேராதனை - 1971, கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

(iv) ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் - பிரம்ம ஸ்ரீ மு. சோமாஸ்கந்தக் குருக்கள் .பக்35 - 36, 1927

21 Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society,1887,Volume X,No.35, page 118-119

22 The Culavamsa - II. Wilhelm Geigse (1930) page XXIV

23 The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933

24 (i) The Ceylon Liltoral 1593, P.E Pieris Litt D (Cantab) - 1949
(ii) Catholic Chilaw E. A. Fernando Page 10, 14
(iii) History of Catholic Churches - Fr. S. Gnana prakasar, Page. 255.
(iv) Ceylon Portuguese Era, Volume I, P. E. Pieris, chapter IX Page 199.
(v) Hinduism in Ceylon Rev. James Cartman 1957 Page 44.
(vi) The short History of Ceylon - H. W. Codrington (1947) Page 130.
(vii)Hinduism Culcutte Rewiew - Volume XLVII, No. 3. June 1933
(viii)Lt. of Fr. H. Gomez S.J. dated 29. 12. 1606 Ceylon Ant. II - Page 21

25 The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933

26 முன்னேஸ்வர மான்மியம் - சோமாஸ்கந்தக் குருக்கள்

27 (i) Ceylon Gazetteer - Simon Casie Chetty - page 164
(ii) The Culcutta Review - Volume XLVII. Number 3, June 1933

28. Jurnal of the Ceylon branch of the Royal Asiatic Society (1915-1916) Volume XXIV No.68 Page 186.

29 தொல்பொருட் காட்சிச் சாலையில் காணப்படும் பொருட்களுள் சில
1. வெண்கலக் குதிரை அங்கபடிகள் ஆறு குருநாகல் அல்லது முனீஸ்வரம்
X - 60 - 169 X - 63-169
X - 61- 169 X - 64- 169
X - 62 - 169 X - 65- 169
2. ஒரு வெண்கல விளக்கின் பகுதி முனீஸ்வரம்
X - 54- 169
3. ஒரு வெண்கல விளக்கின் பகுதி- முனீஸ்வரம்
13- 129 - 290
4. விளக்கின் துண்டாகிய வெண்கல அன்னம் முனீஸ்வரம்
13 - 131 - 291
5. விளக்கின் வெண்கல போன்ற வெண்கலப் பாத்திரம் முனீஸ்வரம்
13-130-291
6. கமண்டலத்தைப் போன்ற வெண்கலப் பாத்திரம் முனீஸ்வரம்
37-169-37
7. வெண்கல தாது கற்பத்தின் மேற்பகுதி முனீஸ்வரம்
ஓ-57- 169

30. ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு பா. சிவராமகிருஷ்ணசர்மா ஜூலை 1968 பக்கம் 12

31. சிவாகமங்களும் சிற்பங்களும் சித்திரிக்கும் சிவ விக்கிரகவியல். ப. கோபாலகிருஷ்ண ஐயர் கலாநிதி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குச் சமர்பிக்கப்பட்ட ஆய்வேடு 1981 - பக்கம் 758



நல்ல நேரம் பார்க்கும் பொழுது கவனிக்கத்தக்கவை

- அன்றைய தினம் கரிநாளாக இருத்தல் கூடாது.
- திதியில் அட்டமி, நவமி திதிகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- யோகம் மரண யோக வேளையாக இல்லாமல் சித்த, அமிர்த யோகமாக இருத்தல் வேண்டும்.
- இராகு காலம், எமகண்ட நேரங்களாக இருக்கக் கூடாது.
- முக்கியமாக பிறந்த நட்சத்திரக்காரருக்கு அன்றைய தினம் சந்திராஷ்டம தினமாக இருத்தல் கூடாது.
- முக்கியமாக கீழ்க்கண்ட பஞ்சகங்களில் கீழ்க்கண்ட சுபகாரியங்களைத் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

அக்கினி, சோர, ரோக, பஞ்சகங்கள்-: திருமணம், சீமந்தம், புதுமனை குடிபோதல், பங்குத் தொழில், கம்பனி போன்றவை ஆரம்பித்தல் கூடாது.

அக்கினி பஞ்சகம்-: பஞ்சு, எரிபொருட்கள், நூல் துணி வகைகள், சம்பந்தப்பட்ட தொழில்கள் தொடங்கக் கூடாது.

இராஜ பஞ்சகம்-: அரசு, வங்கி, மற்றும் பொது நிதி நிறுவனங்கள், கடன் வாங்கி நடத்தும் தொழில் என்பன தொடங்கக் கூடாது.

நிஷ் பஞ்சகங்கள்-: மிக்க சுபம் தரும்.



வரலாற்றுப் பெருமை வாய்ந்த கதிர்காமம்

குல. சபாநாதன்

முருக வழிபாட்டுக்குரிய திருப்பதிகளுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனு மும்மையானும் புகழ்பெற்றுத் திகழ்வது ஈழநாட்டின், தென்பாலுள்ள திருக் கதிர்காமம். இத்தலத்தின் பெயர்க்காரண வாராய்ச்சி இன்னும் முடிந்தபாடில்லை. கதிரகாம் என்னுஞ் சொல் 'கார்த்திகேய கிராம' என்பதன் மரூஉவெனவும், யானைவாழ் கிராமமெனப் பொருள்படும் கஜரகம என்பதன் சிதைவெனவும், கதிரு (நச்சு) மரம் நிறைந்த கிராமம் (கதிருகொட என்பதுபோல) எனப் பொருள்படும் கதிருகிராம என்பதன் சிதைவெனவுங் கொள்வர் சிலர். இன்னுஞ் சிலர் இதனைத் தமிழ்ச் சொல்லெனவே கொண்டு கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் (கதிர்–ஒளி; காமம்–அன்பு) கலந்து விளங்குமிடம் எனவும், ஆறு கதிர்ப் பொறிகளாற் பிறந்த ஆறுமுகன் வள்ளிநாச்சியார்மேற் காதல்கொண்டு மணம்புரிந்த இடமாதலிற் கதிர்காமம் ஆயிற்று எனவுங் கூறுவர். இன்னுஞ் சிலர் 'கதிரங் கருங்காலி' யெனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தை எடுத்துக் காட்டிக் கதிரமரம் (கருங்காலி மரம்) நிறைந்த கிராமமாதலால், இப்பெயர் ஏற்பட்ட தென்பர். கதிரகாமம் என்பது சிங்களமொழிச் சொல்லின் மருஉவாய்த் தமிழ் மொழியின்கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்தில் வழக்கில் வந்ததென்பதே எமது கொள்கை. அக் கொள்கைக்கேற்ப கதிரு மரங்களையுடைய ஊர் எனப் பெயர்க்காரணம் கூறுதலே பொருத்தமாகத் தோற்றுகின்றது.

ஏமகூடம், பூலோக கந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்திவாசம், வில்வகானனம், சகல சித்திரகரம், அகத்தீயப்பிரியம், பிரமசித்தி அவ்வியர்த்தமூர்த்தம், சித்தகேத்திரம், கதிரை, ஜோதிஷ்காமம் என்பன கதிர்காமத்துக்குப் பல நூல்களிலும் வழங்கப்பட்டுள்ள பெயர்கள்.

கதிர்காமகுவாமி, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்ககுவாமி, கந்தக்கடவுள், ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதிப் பெருமான், சிதாகாயநாதன் அவ்வியர்த்த மூர்த்தி என்ற திருநாமங்கள் கதிர்காமக் கடவுளுக்கு வழங்கப்படுவன.



புராண வரலாறு

முருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கோடு எழுந்தருளியபொழுது கதிர்காமத்தையடைந்து மாணிக்க கங்கையருகிற் பாசறை வகுத்து வீற்றிருந்தார் என்றும், அவ்விடம் ஏமகூடம் எனப்பட்டது என்றும் பின்னர் சூரபன்மனை வென்று வாகைசூடி மீண்டபொழுது கதிர்காமக் கிரியில் நவகங்கா தீர்த்த முண்டாக்கிச் சிந்தாமணியாலயத்தில் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தார் என்றும் புராணம் கூறுகின்றது. வள்ளி நாயகியாரைக் கண்டு காதலித்து மண முடித்த இடம் கதிர்காம மென்பது ஐதீகம். முருகப்பெருமான் முதலில் தெய்வயானை அம்மையாரை மண முடித்துப் பின் திருத்தணிமலைக்கருகிலுள்ள வள்ளி மலையில் வள்ளிநாயகியாரை மணம்புரிந்து அதன்பின்னர் இருவரையும் நோக்கித் தாம் விரும்பும் தலம்

கதிர்காமம் எனக் கூறி அவர்களுடன் கதிர்காமக் கிரியை அடைந்து சிந்தாமணி யாலயத்தில் எந்நாளும் அன்பர்கள் வழிபட்டுய்யுமாறு வீற்றிருக்கிறார் எனத் தக்ஷிண கைலாச புராணம் கூறும். "பிள்ளையார் மலை, வீரவாகுமலை, தெய்வயானையம்மை மலை, வள்ளியம்மை மலை ஆகிய மலைகளின் நடுவே சோமன் சூரியன் அக்கினியென்னும் முச்சுடர்களின் சோதிபெற்று உலகுக் கெல்லாம் பேரொளியால் விளங்குவது கதிரைமலை" என்றும், "அம்மலைச்சிகரநடுவில் அநேக கோடி சூரியப் பிரகாசம் பொருந்தி விளங்கும் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்னமயமான சிங்காதனத்தில் வள்ளிநாயகி தெய்வயானையம்மை சமேதராய்க் கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கிறார்" என்றும் இப்புராணம் கூறும். மேலும், கதிர்காம நகரச் சிறப்பினையும் இப்புராணம் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றது: "கதிர் காம நகரம் முக்கோண வடிவமான வீதியையுடையது. அந் நகரத்தின் நடுவிலே பவளத் தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த திவ்வியமாகிய சோதிமண்டபம் (சுவாமி சந்நிதி) ஒன்றிருக் கின்றது. அம்மண்டபத்தின் நடுவில் இந்திர நீலமணியினாற் செய்து பிரகாசமும் அழகும் பொருந்திய சிங்காசனத்தின் மேலே தெய்வயானையம்மையார் வள்ளிமையார் என்னும் இரு சக்திகளோடு ஞானசக்தி வடிவாகிய வேற்படையைத் தாங்கிக் கிருபா சமுத்திரமாகிய கதிர்காமநாதர் விளங்குகிறார். அச் சோதிமண்டபத்தின் எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மை பொருந்திய சமாதி யோக மண்டபம் ஒன்றிருக்கின்றது. விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரிய வேறு மண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரருக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன... கதிர்காம நகரத்தருகிற் புண்ணிய நதியாகிய மாணிக்க கங்கை பாய்ந்து கொண்டிருக்கும்."

சரித்திரம்

புராணங்களிற் பலவாறாகக் கூறப்பட்டபோதிலும் கதிர்காமக்ஷேத்திரத்தின் புராதனமும் பெருமையும் சரித்திரங்களிற் காணப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவ மாலையினும் மகாவம்சம் என்ற சிங்கள சரித்திரத்திலும் கதிர்காமத்தைப் பற்றிய உண்மைக் குறிப்புக்கள் காணப் படுகின்றன.

சீதாபிராட்டியாரைத் தேடி இலங்கைக்கு வந்த அநுமான் கதிர்காமப் பெருமானை வணங்கச் சென்றானென்பது சில சரித்திராசிரியர் கொள்கை. கி.மு. 500ஆம் ஆண்டளவில் விஜயன் இலங்கைத்தீவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயில் அமைத்தான் என **யாழ்ப்பாண வைபவமாலை** கூறும். சிங்களவரின் சரித்திர நூலாகிய மகாவம்சத்தில், *தேவானாம்பிய தீசன் ஆட்சிக்காலத்தில், அசோக மன்னனது அருந்தவப் புதல்வி சங்கமித்தை வெள்ளரசுடன் அநுரதபுரியையடைந்தபொழுது, இலங்கை அரசனுக்கு அடுத்தபடியாகக் கஜரகாமத்துப் பிரபு குறிப்பிடப்படுகின்றார். இவ்வரசின் கிளையொன்று இப் பிரபுவால் கதிர்காமத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நாட்டப் பட்டதாகவும் அந்நூல் கூறும். இப்பொழுது கதிர்காமக் கோயில் வீதியிற் காணப்படும் வெள்ளரசு இதனடியிற்றோன்றியதெனக் கருதுவர். கி.மு. 300ஆம் ஆண்டளவில் மகாநாதன் என்னும் அரசனாற் கட்டப்பெற்ற கிரிவிகாரை என்னும் பௌத்த விகாரம் ஒன்று கதிர்காமக் கோயிலுக்குச் சிறிது தூரத்திலிருக்கின்றது. இதனைச் சாதாரண மக்கள் சூரன்கோட்டை என்று வழங்குவர்.

துட்டகெமுனு எனும் சிங்களவரசன் எல்லாளன் எனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லுதற்குரிய ஆற்றலைத் தமக்களிக்க வேண்டுமெனவும், அளிப்பிற் கதிரையாண்டவர் ஆலயத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம் பூண்டு அக்கடவுள் அருள் பெற்றுத் தன் பகைவனைவென்றதால் தான் கூறியபடியே கி.மு. 101ஆம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாகவும் கந்தஉபாத எனுஞ் சிங்கள நூல் கூறுகின்றதெனச் சேர்.பொன். அருணாசலம் துரையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.[1]

இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டபொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இங்ஙனம் சிறைப்பட்ட அரசனின் வழித்தோன்றலாய மானவர்மன் எனுஞ்சிறந்த கல்வியாளன் முருகப்பெருமானின் அருள் பெற வேண்டிப் பல்லாண்டுகளாகத் தவஞ்செய்து தனது கண்மலரையே அர்ச்சித்து ஈற்றில் அவன் அருளைப் பெற்றுத் தனது சாதியினரை வருத்திய சோழரை இவ்வூரினின்றும் இந்த மானவர்மனின் சந்ததியார் துரத்த முடிந்ததென மகாவம்சம்[2] விரிவாகக் கூறுகின்றது. இவன் சிறந்த முருக பக்தன் என்பதையும் இந்நூல் கூறாமற் கூறிவிட்டது.

இப்பொழுது காணப்படும் கதிர்காம ஆலயம் கி.பி. 1581ஆம் ஆண்டளவில் அரசுபுரியத் தொடங்கிய முதலாம் இராசசிங்கனாற் கட்டப்பெற்றதென்பது திரு. வ. குமாரசுவாமியவர்கள் கருத்து.[3] இவன் பௌத்த சமயத்தை அலட்சியஞ் செய்து, சைவசமயத்தைக் கடைப்பிடித்தொழுகி 'பைரவ ஆண்டி' கோயிலைக் கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகின்றது.[4] ஆனால் இப்பொழுது காணப்படும் ஆலயம் கி.பி. 1634ஆம் ஆண்டளவில் அரசாண்ட இரண்டாம் இராசசிங்கனாற் கட்டப்பட்டதென்பதே சரித்திர ஆசிரியர் துணிவு.[5]

கதிர்காம க்ஷேத்திரம்

ஈழநாட்டின் தென்பாகத்தில் ஊவா மாகாணத்துப் புத்தல் பிரிவிலுள்ள தீயனகம எனும் காட்டில் மாணிக்க கங்கை அல்லது பரப்ப ஓயாவின் இடது கரையில் கதிர்காமக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார். இக் கோயில் புத்தலிலிருந்து 26 மைல் தூரத்திலும், அம்பாந்தோட்டையிலிருந்து 59 மைல் தூரத்திலும், திசமஹாராமாவிலிருந்து 10 1/2 மைல் தூரத்திலும் உள்ளது. கதிர்காம க்ஷேத்திரத்தில் அநேக கோயில்கள் இருக்கின்றன. கதிர்காமநாதன் சந்நிதி தெற்கு நோக்கியும் வள்ளியம்மன் சந்நிதி வடக்கு நோக்கியும் இருக்கின்றன. தனது புதிய மனைவியை எப்பொழுதும் பார்த்தவண்ணம் இருக்க வேண்டுமென்று விரும்பியதனாற் கதிர்காமநாதர் இக்கோயில் களை இங்ஙனம் அமைத்துக் கொண்டார் போலும்! இச் செயலைக் கண்ட தெய்வயானையம்மையார் தமது கோயிலைக் கிழக்கு நோக்கியமைத்துக் கொண்டார். வள்ளியம்மையாருக்கு அடிமை

---

* Mahavamsa : ch. XIX
1. The Worship of Muruka by Sir. P. Arunachalam
2. Maha-vamsa ch-57
3. கதிரைமலைப்பள்ளு: திரு. வ. குமாரசுவாமி அவர்கள் பதிப்பு: ஆராய்ச்சிக்குறிப்புகள் பக், 38
4. Mahavamsa ch.94
5. Vide Worship of Muruka by sir. P. Arunachalam and 'Katragama' by Mudaliyar C- Rasanayagam.

பூண்ட முத்துலிங்கசுவாமி மாணிக்க கங்கையைக் கடந்துவரும் அடியார்களை அன்புடன் உபசரித்து முருகனிடம் ஆற்றுப்படுத்தும் கருத்துடன் மேற்குத் திசையை நோக்கித் தமது கோயிற் சந்நிதியை அமைத்துக்கொண்டார். கதிர்காம ஷேத்திரத்திலுள்ள கோயில்களை நான்கு வகுப்பாக வகைப்படுத்தலாம்: முதலாவது வகுப்பில், (1) உருகுணை மகா கதிர்காம ஆலயம் அல்லது சுவாமி சந்நிதி. (2) வள்ளியம்மன் கோயில். (3) பத்தினி கோயில்–கண்ணகியம்மன் கோயில்–இவை மூன்றும் அடங்கும். இம்மூன்று கோயில்களும் பௌத்தமத ஆலய பரிபாலனச் சட்டத்தின்படி பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது வகுப்பில் (1) மாணிக்கப் பிள்ளையார் கோயில். (2) தெய்வயானை அம்மன் கோயில். (3) வயிரவர் கோயில். (4) முத்துலிங்க சுவாமி கோயில் (5) செல்லக் கதிர்காமம் அல்லது பழைய கதிர்காமம். அது சுவாமி சந்நிதியிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது; இதன்கண் இப்பொழுது ஒரு பிள்ளையார் கோயிலுண்டு. (6) கதிரைமலை–இவை ஆறும் அடங்கும். இவை பெரும்பாலும் பாபாக்களின்* அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. மூன்றாவது வகுப்பில் (1) கிரி விகாரையும். (2) பெருமாள் கோயிலும் அடங்கும். இவை பௌத்த குருமாரின் பரிபாலனத்தில் இருக்கின்றன. நான்காவது வகுப்பிற் சோனகருடைய பள்ளிவாசல் அடங்கும். இவற்றை விட வேறு சில சிறு கோயில்களும் காலத்துக்குக் காலம் கட்டப்பெற்றுள்ளன.

கதிர்காமநாதன் தேவாலயத்திற் பெரிய கோபுரத்தையாவது விமானத்தையாவது யாம் காணமுடியாது. கர்ப்பக்கிரகமும் சிறு மண்டபமும் கொண்டதே கோயில் எனப்படும். கர்ப்பக் கிரகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. வெளி மண்டபத்தில் நின்றே மக்கள் வழிபட வேண்டும்.

கதிர்காம வேலருக்குப் பூசை செய்பவர்களைக் கப்புராளைமார் என்றழைப்பது வழக்கம். கப்புராளைமார் இக்கோயிலிற் பூசை நடத்தும் முறையும் இக்காலச் சைவமுறைக்கு வேறுபட்டதாகும். வள்ளி மணாளனுக்குப் பூசை நிகழும் பொழுது அவனை வரவேற்பதற்கு ஆலாத்திப் பெண்கள் நாடோறும் வந்து ஆலாத்தியெடுப்பார்கள். கோயிலுக்கு வெவ்வேறு தொழில் புரியும் மேளகாரர், ஜோதிடர் முதலிய பலருளர். இவர்களுக்கெல்லாம் மானியம் விடப்பட்டிருக்கிறது.

கப்புராளைமார் தம் வாயை மஞ்சள் துணியினாற் கட்டி அமுதினை உள்ளே காவிச் சென்று வைத்த பின்னர் வெளியே வந்து திரைச்சீலை முன்பாக நின்று ஓங்காரவடிவாகக் கைகளிரண்டையும் கூப்பி வழிபாடியற்றுகின்றனர். "ஒருவன்தான் வேறு எதைத்தான் செய்ய முடியாதிருந்தாலும், தன் இரு கைகளையும் சிரசின்மேற் குவித்து வழிபடுவதால், அவனுடைய உருவம் வேலின் உருவத்தை ஒக்கும்; அப்பொழுது அவன் வேலாகி, வீரன் கை வேலாகிவிடுவான்" என்று, கதிர்காம தலத்தை விய வருடப்பிறப்பன்று தரிசித்த திருப்புகழ்மணி டி.வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் கூறியதும் இவ்விடத்தில் நினைக்கத்தக்கது.

திருவிழாக் காலங்களிற் சந்நிதிதானத்துள் இருந்து ஏதோ ஒரு வஸ்துவைக் கப்புராளைமார் பெரிய வஸ்திரத்தால் மூடி ஒருவருக்கும் அது இன்னதெனத் தெரியாவண்ணம் கொணர்ந்து மானை மீதுள்ள பெட்டியினுள் வைத்து இறுகக் கட்டி விடுகின்றனர். கப்புராளைமார் தமக்குள் ஒருவரைத் தெரிவு செய்து அவரைச் சுவாமிக் கப்புராளை யென்றழைப்பது வழக்கம். இந்தச் சுவாமி கப்புராளையே யானைமீதுள்ள பெட்டியை மிகக் கவனமாகப் பிடித்துக் கொள்வார். இந்த மறைபொருளைக் கற்புராளைமாரும் பயபக்தியுடனே தான் ஏற்றி இறக்குகின்றனர். இப்பொருளே சுவாமி சந்நிதியிலிருந்து வள்ளியம்மன் சந்நிதிக்கு யானைமீதமர்ந்து உலாப்போவது. அடியார்கள் தம் தலைமேல் அல்லது கைமேற்கொண்டு செல்லும் விபூதிச் சட்டியில் ஏற்றிய கர்ப்பூர வெளிச்சம் கதிர்காமத்தில் இரவினைப் பகலாக்க, ஊதுபத்திகளின் நறுமணம் பரவ, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அரோஹரா' என்று கதறிக் கண்ணீர் சொரியக் கதிர்காமக் கடவுள் உலாப்போகுங் காட்சி கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். முத்துலிங்கசுவாமி அவர்கள் அமைத்த இயந்திரம் அடங்கிய பெட்டியே விழாக்காலத்திற் பவனி வரும்போது யானைமேல் ஏற்றிச் செல்லப்படுகின்றதெனக் கொள்வாருமுளர். இதனை முத்துலிங்கசாமியவர்கள் சரித்திரத்தைக் கூறுமிடத்து விளக்குவாம்.

ஒரு பற்றுமற்று, அருவாய்த் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளை வழிபடும் முறையே, அஃதாவது, கந்தழி வழிபாடே கதிர்காமத்தில் உண்டென்பது ஆராய்ச்சியாளர் சிலர் துணிபு. கந்தழி வழிபாடெனிற் கோயிலமைத்தல் அவசியமின்றாகிவிடும். மேலும் வேட்டுவர் கந்தழி வழிபாடாற்றும் நுண்மதியுடையரோ வென்பதும் இங்கு ஆராயத்தக்கது. அனற் பிழம்பு வடிவமே இங்குக் கர்ப்பூர தீபமாக இன்றும் நிலைத்து நிற்கின்றதெனக் கொள்ளற்கிட முண்டெனினும், துணிந்துகூற முடியாது.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் போக்கினை நோக்குமிடத்து, மாணிக்கத்தாற் செய்த விலைமதித்தற்கரிய திருவுருவம் ஒன்று இருந்திருத்தல் கூடும் எனக் கருத இடமுண்டு. அன்றியும் கதிர்காமத்தைச் சென்று தரிசித்த டொக்டர் டேவி அவர்கள், பெருங்கலகம் நிகழ்ந்த காலத்திற் கதிர்காமத்திலுள்ள திருவுருவம் மறைக்கப்பட்டு இன்னும் காட்டிற் கிடக்கின்றதெனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனாலும் மூலஸ்தானத்தில் விக்கிரகம் ஒன்றிருந்ததென்பதும், அது மிகவும் விலையுயர்ந்ததென்பதும் பெறப்படும். திருக்கோயிலினுள்ளே தங்கத்தாற் செய்த ஆறுமுகவேலவர் திருவுரும் ஒன்று மாசுபடிந்து வஸ்திரத்தால் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றதெனச் சிலர் கருதுகின்றனர். இஃதுண்மையாயின் சிங்களவர் இக்கோயிலின் ஆட்சியைக் கைப்பற்ற முன்னர், தமிழரே சைவ முறைப்படி திருவுருவம் அமைந்து வழிபாடாற்றி வந்தனர் என்பதும், அத்திருவத்திற்கு வழிபாடாற்றும் முறை சிங்களவருக்குத் தெரியாமற் போகவே, இக்கோயிலின் வாயிலை மறைத்துத் திரைச்சீலையிட்டனர் என்பதும் வலியுறும். ஆறுமுகவேலவர் வள்ளி தெய்வ யானையுடன் அடியார்க் கருள்புரியும் காட்சியே திரைச்சீலையில் ஓவியமாகத் தீட்டப்பெற்றுள்ளது. இத்திரைச்சீலை எக்காரணத்தை முன்னிட்டும் ஒரு பொழுதும் அகற்றப் படுவதில்லை.

கோயில் திருவிழாக்கள்

கதிர்காமக் கோயிலில் வருடந்தோறும் நான்கு திரு விழாக்கள் நடைபெறும். முதற்றிருவிழா சித்திரை வருடப்பிறப்புத் தினத்தன்று நடைபெறும். இரண்டாவதாக ஆனி அல்லது ஆடியில் பந்தற்கால் நடும் திருவிழா நடைபெறும். அஃதாவது ஆடி அல்லது ஆவணியில் நடைபெறவிருக்கும் திருவிழாவுக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே கந்தசுவாமியார் வள்ளிநாய்ச்சியாரை மணமுடித்தற்கு

* ஒரு வட இந்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

வேண்டிய பந்தல் அமைப்பதற்குக் கன்னிக்கால் நடும் திருவிழா நடைபெறும். மூன்றாவது ஆடி அல்லது ஆவணியில் 15 அல்லது 16 நாட்களுக்குத் திருவிழாவும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். நான்காவதாக, கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகை விளக்கீட்டுத் திருவிழா நடைபெறும்.

கதிரை யாத்திரை

முற்காலத்தில் சைவர்கள் தாம் நினைத்தபொழுதெல்லாம் கதிர்காம யாத்திரை செய்யவில்லை. கதிரையாண்டவன் (கனவிற் றோன்றி) வருமாறு விடை கொடுத்தாலன்றிப் பக்தர்கள் கதிர்காம யாத்திரை செய்யத் துணியார்கள். அங்ஙனம் உத்தரவின்றிச் சென்றாற் பல இன்னல்களை அநுபவிக்க நேரிடும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. அன்றியும் பழங்காலத்திற் பிரயாண வசதிகளும் மிகக் குறைவு. கதிர்காம யாத்திரை செய்வது இக்காலத்தில் அவ்வளவு துன்பமான தொன்றன்று. கதிர்காம ஷேத்திரம் வரை மோட்டார் வண்டியிற் செல்லக் கூடியதாகப் பாதை இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. அன்றியும் திரு விழாக் காலங்களில் அன்பர்கள் ஆங்காங்கு மடங்கள் அமைத்து யாத்திரை செய்பவர்கட்கு வேண்டிய வசதிகளை அளிக்கின்றார்கள். கொழும்பு மருதானையில் ஒரு மடமும், காலியிற் சிவன்கோயிலுக்கருகில் ஒரு மடமும், யாத்திரிகருக்கு வேண்டிய வசதியளிக்கின்றன. கொழும்பிலிருந்து மாத்தறைவரை புகையிரதத்திற் பிரயாணஞ் செய்யலாம்; பின்னர் மாத்தறை மடத்தில் தங்கி அங்கிருந்து பஸ்வண்டி மூலம், திசமஹாராமவரை செல்லலாம்; திசமஹாராமவிலிருந்து கதிர்காமத்துக்கு ஏறக்குறைய பத்துப்பதினொரு மைல் தூரம் இருக்கும். இதற்கும் பஸ் வண்டியிற் செல்லலாம்; ஆனாற் பெரும்பாலோர் திசமஹாராவிலிருந்து கால்நடையாகவே கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து ஆடிப்பாடிக் கொண்டு செல்வர். எல்லோரும் கடவுளின் குழந்தைகள் என்ற எண்ணமே தாண்டவமாடுகின்றது. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக ஒவ்வொருவனும் பாவிக்க ஆரம்பித்துவிடுகிறான். எங்கே பார்த்தாலும் அரோஹரா எனும் சத்தமே வானத்தையும் பிளந்து கொண்டு செல்லும். எந்தப் பொருளையும் அரோஹரா மயமாகப் பாவிப்பார்கள், பக்தர்கள். அரோஹரா எனும் வார்த்தையைச் சொல்லியறியாதவர்களும், நடந்து செல்லச் செல்ல, 'அரோஹரா' எனும் நாமத்தை அடிக்கடி உச்சரிக்கத் தொடங்கி, தம் மனத்தில் எழும் அச்சங் கலந்த பக்தியை வெளிக் காட்டுவார்கள்.

கதிர்காமஷேத்திரத்தை அடைவதற்கு முன்னர் மாணிக்க கங்கையெனும் ஆற்றைக் கடத்தல் வேண்டும். யாத்திரை செய்து களைத்துவந்த அடியார்கள் தங்கள் தாகந்தீர இக்கங்கையில் அள்ளி அள்ளிக் குடிக்கலாம். மாணிக்க கங்கையில் மூழ்கித் தம்மைச் சுத்தஞ்செய்த பின்னரே கதிர்காமஷேத்திரத்தினுள் யாத்திரிகர் கால்வைக்க வேண்டுமென்ற முறையிற்போலும் இக் கங்கை அமைந்துள்ளது.

மாணிக்க கங்கையின் சிறப்பு யாதெனின், மாசு படிந்த உள்ளத்தைக் கழுவி மாணிக்கமயமாக்கி இறைவன் திருவடி படிதற்குரிய தூய்மையுடையதாக்கி விடுகின்றது. எனவே இதற்கு மாணிக்க கங்கையெனும் பெயர் மிகப் பொருத்தமானதே. மேலும் இக் கங்கையினை ஒரு பிறவிக்கடலாகவும் வேறொருவகையிற் கொள்ளலாம். இதனை நீக்கிச் சென்றார் இறைவன் திருவடியைச் சேர்ந்தாராகக் கருதப்படுவர். கதிர்காமத்தில் மாணிக்க கங்கை இல்லாதிருக்குமானால் அங்கே செல்லும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் நிலைமை என்னாகும் என நினைக்கும்பொழுது, கதிர்காமப் பெருமானின் திருவருட்டிறனை நினைந்து நினைந்து உருக நேரிடும். இந்நதியைக் கடந்தால், எல்லாரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த பிள்ளைகள் என்ற எண்ணமும் 'உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்.' என்ற ஞானமும் உதயமாகின்றது. கடவுட் கொள்கையில் நம்பிக்கையில்லாத கசடனுக்கும் 'தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி' அவன் கண்ணீர் விடத் தொடங்கிவிடுகிறான். தன்னையறியாமலே "முருகா முருகா" திருமால் மருகா" என்று புலம்பத் தொடங்கிவிடுகிறான்.

மாணிக்க கங்கையைக் கடந்து கதிர்காமநாதன் சந்நிதியடைந்த அடியார்கள் சாதி, குலம், பதவி எனும் தடுமாற்றங் கடந்தவர்களாய், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்னும் பேருண்மையைக் கடைப் பிடித்தவர்களாய் ஒருங்குநின்று கதிர்காமக் கடவுளை வழிபடுகிறார்கள். அரசனும், ஆண்டியும்; நீதிபதியும், வேலைக்காரனும்; உயர்ந்த சாதியிற் பிறந்தவனும், தாழ்ந்த சாதியிற் பிறந்தவனும்; எவ்வித வெறுப்பேனும், வேறுபாடேனும் காட்டாது சகோதர மனப்பான்மையுடன் வழிபடுவதை இன்றுங் காணலாம்.

'ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே'

எனத் தாயுமான அடிகள் உணர்த்திய உண்மையினைனத் திருக்கதிர்காமத்திற் கூடும் அடியார்களிடத்துக் காணலாம். இந்தியாவில் மகாத்மா காந்தியடிகளின் முயற்சியாலும் திருவாங்கூர் மகாராசாவின் கட்டளையாலும் சைவக் கோயில் களினுள்ளே தீண்டாச்சாதியார் சென்று வழிபட இப்பொழுதுதான் ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது. ஆனால், எவ்விதமான கட்டுப்பாடு மின்றி இறைவனை வழிபடலாம் எனும் வழக்கம் திருக்கதிர்காமத்தில் நெடுங்காலமாக இருந்து வருவதை நோக்கு மிடத்து இத்திருக்கோயிலின் சிறப்புப் புலனாகின்றதல்லவா?

செல்லக் கதிர்காமம்

குகனடியார், திரைமறைவிலிருக்கும் கதிர்காம நாதனை வழிபட்ட பின்னர், அத்தலத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலிருக்கும் செல்லக் கதிர்காமத்திற்குச் செல்வர். இவ்விடத்திலும் மாணிக்க கங்கையானவள் தன் இருகரங் களினாலும் மணிகளையும் தரளங்களையும் வீசிக்கொண்டே செல்கின்றாள். செல்லக் கதிர்காமத்தைப் பழைய கதிர்காமம் எனக் கூறுவாருமுளர். மாணிக்கக் கங்கையில் தீர்த்தமாடி, கரையில் இருக்கும் மாணிக்கப்பிள்ளையாரை வணங்கி அவரிடம் விடை பெற்ற பின்னரே, சுவாமிமலையெனப்படும் திருமலையேறி வழிபாடு செய்வதற்கு அடியார்கள் ஆரம்பிப்பார்கள். செல்லக்கதிர்காமத்திலுள்ள மாணிக்கப்பிள்ளையாருக்குப் பாபாக்களே பூசை செய்து வருகிறார்கள்.

கதிரைமலை

கதிர்காம மலைநாத னாமெந்தை தனையேத்து
கடவுளர்கண் முனிவர் சித்தர்
கந்தருவர் கின்னரர்கள் கருடர்கிம் புருடரோடு
சுகனர்வரு முரகர் முதலாம்

பதினெண் கணத்தடிய வர்க்கெலாந் திருவருள்ப
ரிந்துபா லித்து நாளும்
பரிவினிற் கதிரைமலை தவிராது வைகினான்
பரமசுக முலகு பயில
முதிர்விநா யகர்தமலை வீரவா கமருமலை
மொழிதேவ சேனா மலை
முதுவள்ளி மலையஞ்சு காமமலை செந்தமிழின்
முனிமலைக ளயலின் முடுகுஞ்
சதிரிலுன் றிருவடி யடைந்திடத் தகுவதோ
சாந்தநா யகி சமேத
சந்த்ரமௌ லீசனே யெந்தொழில் விலாசனே
சந்த்ரபு தலவா சனே.

(சந்திர மௌலீசர் சதகமென்னும் ஈழமண்டல சதகம்)

அருணகிரிநாதரும் தாம் பாடிய திருப்புகழில்,

'கதிரகாம வெற்பி லுறைவோனே
கனகமேரு வொத்த புயவீரா'

'ஈழத்தினிற் கதிர்கா மக்கிரிப் பெருமானே'

என்றும் கதிர்வேலன் விரும்பி யுறையுமிடம் கதிரைமலையெனக் குறிப்பிட்டுள்ளார்.

குன்றுதோறும் ஆடும் குமரவேளை அவன் விரும்பி வீற்றிருக்கும் கதிரைக்குன்றின்மேற் கண்டு மகிழ்தற்குச் செல்லும் அடியார்கள் சிறிது கஷ்டப்பட்டே மலையேற வேண்டும். பழனி, திருத்தணி முதலிய இடங்களிற்போல இம் மலையினுச்சியை யடைவதற்குப் படிகள் கட்டப்படவில்லை. முதலில் பிள்ளையார்மலை வரை பாதை அவ்வளவு கஷ்டமாக இல்லை. பிள்ளையார் மலைக்கேறி, அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு கதிரைமலைக்கேற வேண்டும். பிள்ளையார் மலையிலிருந்து பாதை சிறிது செங்குத்தாகவே இருக்கின்றது. ஆகையால் அடியார்கள் முருகன் நாமத்தை உச்சரித்துக் கொண்டு பயபக்தியுடன் ஏறினால், கஷ்டம் தெரியாது. மலையுச்சிக்கேறிவிட்டால் இயற்கையெழில் மூலம் முருகன் அழகைக் கண்டு மகிழலாம். இவ்விளமை யெழிலினை முருகன் அருள்கொண்டறியார் அறியுந்தரமோ?

திருமலைக்கேறுதற்கும் முருகனுடைய உத்தரவு வேண்டுமெனச் சொல்வதுண்டு. சிலவருடங்களுக்கு முன்புகூடச் சிலர் இம்மலைக்குச் செல்லமுடியாமல் அலைந்து திரிந்து மறுபடியும் மாணிக்க கங்கைக்கருகே வந்து சேர்ந்ததை யானறிவேன்.

இருபதாம் நூற்றாண்டிலும் கண்கண்ட தெய்வமாகவே கலியுகவரதன் விளங்குகின்றான் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உண்டு. கதிர்காமத்தில் சுவாமி சந்நிதியில் நடைபெறும் அற்புதங்கள் அளப்பில, பக்தியும் நம்பிக்கையு முடையவர்களுடன் கொண்டாடி விளையாடுவதே அந்தக் கள்வனின் செயல்.

'பள்ளம் படுநீர் எனவே பரிவின்
வெள்ளம் படுநல் வழிவே லவனே'

என அருணகிரிநாதரும் போற்றுகின்றார்.

முருகன் செஞ்சொல் அடியார்கள் எளிமைக்காரன்; அவர்கள் வாரக்காரன்; அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரன்; ஏழு பிறவிக் கடலை ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்; எங்கள் மனத்திலுள்ள திரைமறைவை நீக்கிக்கொள்ளத் தெரிந்தால் என்றும் இளையோனாகிய முருகனை என்றுங் கண்டுமகிழலாம். அவனுடன் உரையாடலாம்; ஆடலாம்; என்றும் இன்புற்றிருக்கலாம்.

எந்தா யுமெனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

கோயிலைத் தரிசித்தோர்

பண்டைக்காலந் தொட்டுப் பல புலவர்களும் அறிஞர்களும் துறவிகளும் இத்தலத்தைத் தரிசித்திருத்தல்வேண்டும். யாப்பருங்கலவிருத்தி மேற்கோட் செய்யுளைப் பாடிய புலவரும் இதனைத் தரிசித்திருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. இத்தலத்தைப் பற்றிய பழஞ் செய்யுளொன்று பிரசங்கமாலையின் கணுள்ளது.

எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி
யிரசக்க னூர்கோட் டையூர்
ஏழா யிரம்பண்ணை சந்தையூ ரூற்றுமலை
யெழுமலை மருங்கை நல்லூர்
இலகுமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி
யிலக்கைய னூர்முல் லையூ
ரிடையகோட் டைப்பதி நிலைக்கோட்டை தேவாரம்
ராமகிரி கன்னி வாடி
தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு
தோகைமலை யழகா புரி
சுரண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத்
தூர்விருப் பாச்சி படமாத்
தூர்கடம் பூர்பெத்த ணன் னூற்று நகர்குளத்
தூர்காம னூர் சாப்பிடூர்
தும்பிச்சி நாய்க்கனூர் நத்தமூர்க் காடுசேற்
றூர்வெள்ளி குன்ற மலைய
பட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல
பட்டிசக் கந்தி கோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப்
பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி
பட்டிகுரு விகுள மதுவார்
பட்டிகரி சற்பட்டி நடுவுக் குறிச்சிகோம்
பைகவண் டன்டை யூர்
கட்டபொம் மன்னூர்க்கு மரவாடி கவினிளசை
கடுவூர்நல் லுதயப்ப னூர்
கனகொலங் கொண்டானோ டெழுபத்தி ரண்டுடன்
கருதுமெண் ணேழ்தேச முங்
கவியருமை யறிபவர்க ளுண்டதினு நின்போற்
கவித்திறமி யாவ ரறிவார்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு
கதிர்கா வடிவேல னே.

–(செந்தமிழில் வெளிவந்த செய்யுள்).

பதின்மூன்றாம் நூற்றாண்டிற் புகழேந்திப் புலவர் யாழ்ப்பாண அரசனின் உதவியோடு இக் கோயிலைத் தரிசித்துள்ளார். இவர் கதிர்காமத்து வேலர் முன் பாம்பை மயில்விடப் பாடியதாக ஒரு செய்யுள் தமிழ் நாவலர் சரிதையிலுண்டு :

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ – தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெரு மாளே!"

14ஆம் நூற்றாண்டின் மத்தியிலே வாழ்ந்தவரெனக் கருதப்படும் அருணகிரிநாதரும் இத்தலத்தைத் தரிசித்து இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ் மாலைகள் சாற்றியுள்ளார். கதிர்காமம் எனுந் தலத்திற்குக் கதிருகாம, கதிர்காம, கதிரகாம, கதிரை எனும் பல மருஉப்பெயர்கள் வழங்கின என்பது அருணகிரிநாதர் திருவாக்கால் அறியக் கிடக்கின்றது. இன்னும் மாணிக்க கங்கைக்கு 'வடவை ஆறு' எனும் பெயர் உண்டென்பது,

"கலகவாரி போல்மோதி வடவைஆறு சூழ்சீத
கதிரகாம மூதூரில் இளையோனே"

எனும் திருப்புகழடியால் அறியலாம். மாணிக்க கங்கையெனும் கன்னிகை இளமுருகன் எழிலைக் கண்டதும் தன் கையிற் கொணர்ந்த மணியையும் முத்தையும் இருமருங்கும் அள்ளிவீசத் தொடங்கினாள் என்கின்றார் அருணகிரிநாதர் :

"மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்

மேலும் கதிர்காமத்தில் உறைபவனது வடிவம் கனகமாணிக்கம் என்று அருணகிரிநாதர் கூறுகின்றார் :

"கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே"

அருணகிரிநாதர் கதிர்காம தலத்தைப் பற்றிக் கூறியிருக்கும் சரித்திர உண்மைகளை நோக்கினால் அவர் கதிர்காமத்தைத் தரிசித்திருத்தல் கூடும் என்ற கொள்கை வலியுறுவதைக் காணலாம்.

"வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே"

"கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத்தமிழ்நாடா"

கதிர்காமநாதனைப் பக்தியுடன் சென்று தரிசித்த அடியார் கூட்டத்தை விட, வேறொரு கூட்டத்தினரும் அங்கே செல்ல எத்தனித்தனர். 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர், கதிரை மலையிலுள்ள கோயிலிற் பணமிருக்குமெனக் கருதி, அதனைச் சூறையாடும் கருத்துடன் சென்ற செய்தி, 1640ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்து சிலகாலமிருந்த ரிபேயிரோ எனும் போர்த்துக்கேயன் எழுதிய இலங்கைச் சரித்திரத்திற் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதனையும் மொழி பெயர்த்து இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

"பழைய யாலா அரசிருந்த விடத்திற்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில் உள்நாட்டிற், புறச்சமயிகளாற் போற்றப்படும் கோயிலொன்றுள்ளது, பலவாண்டுகளாகக் கொடுக்கப்பட்ட காணிக்கைகளாகிய தங்கம், ஆபரணம், விலையுயர்ந்த கற்கள் முதலியனவற்றைப் பாதுகாக்க, இங்கே ஆயுதம் பூண்ட ஐந்நூறுபேர் கொண்ட படையொன்று காவல் புரிந்து வந்தது. இவற்றைக் கைப்பற்ற வேண்டுமென்னும் பேராசையால் உந்தப்பட்டுப் பலமுறை இவற்றைப் பற்றி விசாரித்தோம். 1642ம் ஆண்டின் தொடக்கத்தில், எங்கள் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டவரும் அவ்வூராரின் மொழி வழக்கம் முதலியவற்றை நன்குணர்ந்தவருமாகிய காஸ்பார் பிகூராடி கேப் என்பவரின் தலைமையின் கீழ்ப் பெரும்பாலும் கிறிஸ்தவர்களாயுள்ள 2000 காலாட் படையும் 150 போர்த்துக்கேயருமாகக் கோயிலை நாடிச் சென்றோம். குறித்த ஆலயம் இருக்குமிடத்திற்கு அண்மையில் வந்து அங்குள்ளானொருவனை விசாரித்த பொழுது, ஆலயம் இருக்குமிடம் தனக்குத் தெரியுமெனவும், மிக அண்மையிலுண்டெனவுங் கூறினான். அவனே எங்கட்கு வழிகாட்டியாகிய அப்பகுதியிற் காணப்பட்ட தனிக்காடடர்ந்த மலைவழியாகக் கூட்டிச் சென்றபொழுது சுற்றியலைந்து முன்சென்ற வழியையே பலமுறை திரும்பிக் கடக்க நேரிட்டது. ஆலயம் மலையிலுச்சியில் உள்ளதென்பது உண்மையாயினும், அதன்கண் எத்தகைய மந்திரசக்தி இருக்கின்றதோ அறிகிலேன். எங்கட்கு வழிகாட்டிய ஐவருள் முதன் மூவர் பைத்தியம் பிடித்தவர்போல் நடித்தமையால், எங்களை ஏமாற்றுகிறாரெனக் கருதி அவர்களைக் கொல்ல நேர்ந்தது. மற்றிருவரும் அவ்வண்ணமே செய்தமையால் 'கதிரகோ' என்றழைக்கப்படும் அவ்வாலயத்தைக் காணாமலும், எண்ணிய செயலை நிறைவேற்ற முடியாமலும் வந்தவழியே திரும்பவேண்டி நேரிட்டது."

முத்துலிங்க - கலியாண மடம்

கி.பி. 1600ஆம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வந்த அடியார்கள் பலரைக் கண்டியரசனுக்கு உதவி புரிய வந்த படையென ஐயுற்ற போர்த்துக்கேயர், யாழ்ப்பாணத்திலிருந்த அரசனாகிய எதிர்மன்னசிங்க பரராசசேகரன் மூலம், முந்நூறு பேர்களைக் கதிர்காமத்துக்குச் செல்லவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர். அந்நாட்களில் ஒரு சிலரே கதிர்காம யாத்திரை செய்யத் துணிந்தனர். அங்ஙனம் துணிந்தவர்களுள் காஷ்மீரத்திலிருந்து வந்த கலியாணகிரி அல்லது கலியாணநாதர் என்னும் அந்தணருமொருவர். இவர் வந்ததற்கு ஒரு காரணமுண்டு. கதிர்காமத்துக்கு வந்த கந்தசுவாமியார் தினைப்புனத்தில் வள்ளியை மணஞ் செய்ததும், அவளுடன் திரும்பித் தமது சொந்த ஊருக்கு வராமல் மனைவியினுடைய வீட்டிலேயே தங்கிவிட்டார். இதனால், 'அடியார்களாகிய எங்கட்கு இது பெருங்குறைவு. அன்றியும் தெய்வானையம்மையாரை இந்தியாவில் விட்டு இவர் இங்கே உறைகின்றாரே என்று மனம் பதைபதைத்துக் கந்தசுவாமியாரை மட்டும் தமது ஊருக்குக் கூட்டிச் செல்ல வேண்டு'மென்ற ஆவலுடன் விரைந்து சென்றார். சென்று கந்தசுவாமியாரைத் தரிசிக்கும் கருத்துடன் பன்னீராண்டு கடுந்தவம் செய்தபொழுது ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் இவ்வடியாருக்குத் தொண்டாற்றி வந்தார்கள். தவத்தாற் களைத்து

ஞானியார் ஒருநாள் கண் அயர்ந்துவிட, வேட்டுவச் சிறுவன் இவரைத் தட்டி விழிக்கச் செய்தான். பல வருடங்கட்குப் பின்பு வந்துற்ற நித்திரைக்குப் பங்கம் விளைந்ததால் ஞானியார் சீற்றங் கொண்டு சிறுவனை ஏச, அவனும் ஏதோ சாட்டுச் சொல்லி முணுமுணுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். சிறுமியும் பின் தொடர்ந்தாள். கலியாணகிரியும் அவர்களைப் பிடிக்கும் நோக்குடன் விரைந்து பின்தொடர, அச் சிறுவர் இருவரும் மாணிக்க கங்கையின் ஆற்றிடைக் குறையில் மறைந்து கந்தசுவாமியும் வள்ளிநாயகியுமாகக் காட்சியளித்தனர். இக்காட்சியைக் கண்ட அடியார் உரோமஞ் சிலிர்ப்ப உரைதடுமாறி அடியற்ற மரம்போல எட்டுறுப்புந் தோய நிலத்தில் வீழ்ந்து தொழுதார். தொழுத அடியார்க்கு ஆறுதலையளிக்க விரும்பிய ஆறுமுகவேலவர், "உன் குறை யாது?" என வினவ, அடியாரும் தமது கருத்தை வெளியிட்டார். இதனைக் கேள்வியுற்ற வள்ளிநாயகியார் தமது மணாளனைப் பிரித்துக் கூட்டிச் செல்லல் தகுதியன்றெனக் கூறி மாங்கலியப் பிச்சையளிக்குமாறு பரிவுடன் கேட்டார். ஞானியாரும் அதற்கு இயைந்து அங்கு தானே தமது வாணாளை இறைவன் பணியிற் கழிக்கத் தீர்மானித்தார். கந்தசுவாமியாரைக் கூட்டிச் செல்ல வந்த ஞானியார் கதிர்காமநாதனுக்கே அடிமையாகி, அவரை விட்டுப் பிரிய மனமின்றி, கதிர்காமத்திலேயே இருக்கலானார். அன்றியும், கோயிலில் அமைத்து அடியார்கள் வணங்கும் பொருட்டுப் பொன் தகட்டில் எந்திரமொன்று வரைந்து முருகவேளுக்குரிய மந்திரவெழுத்துக்களை அதன்கண் அமைத்து உருவேற்றிப் பெட்டியொன்றில் வைத்தார். இப்பெட்டியே விழாக் காலங்களில் யானைமேலேற்றி உலாப்போவது. இங்ஙனம் முருகன் அருள் பெற்ற அடியாரே அக் காலத்திலிருந்தே அரசனின் உதவியுடன் கோயிலைத் திருத்தியமைத்தார். இவர் ஒடுக்கமடைந்தபொழுது இவரது திருமேனி முத்துமயமான இலிங்கவடிவாயிற்றாதலின் முத்துலிங்கசுவாமியென இப்பொழுது சனங்கள் வணங்கு கின்றனர். இவருடைய சமாதி வள்ளியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் மாணிக்க கங்கைக்கருகில் உள்ளது. இவர் இருந்த இடம் கலியாண மடம் என வழங்கப்படுகின்றது. இது தெய்வயானையம்மன் கோயிலுக்கு நேரேயுள்ள மண்டபத்திலுள்ளது.

முதலியார் இராசநாயகம் அவர்கள் இச் சரித்திரத்தைச் சிறிது மாறுபடக் கூறுகின்றாரெனினும், அம் மாறுபாடு மிகப் பொருத்தமுடையதாகக் காணப்படுகின்றதாதலின் அதனையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

"கலியாணநாதர் கந்தசுவாமியைப் பன்னிரண்டு வருடம் பூசித்தும் காணமுடியாமையாற் பொற்றகடொன்றில் எந்திரம் கீறி உருவேற்றிப் பெட்டியில் அடைத்து முருகனை இந்தியாவுக்குக் கொண்டு செல்ல ஆயத்தஞ் செய்தார். அவர் வெளியே சென்ற சமயம் பார்த்து, அவருக்குப் பணி செய்துகொண்டிருந்த வேட்டுவச் சிறுமி, அப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு கோயிலுக்கு நேராக ஓடி உள்ளே நுழைந்து மறைந்தனள். கலியாணநாதர் அவளைத் தொடர்ந்து கோயிலுக்குச் சென்றதும், வள்ளிநாய்ச்சியாரும், மணாளனும் காட்சியளித்தனர்" இதற்குப் பின்னர் நிகழ்ந்தனவாக சேர் பொன். அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டனவும், முதலியார் குறிப்பிட்டனவும் ஒத்திருக்கின்றன.

17ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருபதாண்டு வரை சிறைப்பட்டிருந்த ரொபேட் நொக்ஸ் எனும் ஆங்கிலேயன் 1681ஆல் எழுதிய 'இலங்கைச் சரித்திரத் தொடர்பு' எனும் நூலிற் கதிர்காமத்தைப் பற்றிய குறிப்புக்கள் சிலவுள :

"நான் கேள்விப்பட்டவரையில் இலங்கையின் கிழக்குக்கரை நிலப்பாகம் மலைகளாலும் கப்பல் செல்ல வசதி குறைவாக கடலாலும் சூழப்பட்டிருக்கின்றது. சுகமுடைய இடமும் அன்று. இதற்குக் காரணம் அயலிலே இருக்கிற பட்டினத்திற் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் 'கொட்டரகன்' எனும் தெய்வத்தின் ஆற்றல் என்பர். உப்பு அள்ளச் செல்லும் யாவரும் இத் தெய்வத்திற்குக் காணிக்கை இட்டே செல்லவேண்டுமாம். போர்த்துக்கேயருக்கோ அல்லது ஒல்லாந்தருக்கோ, தங்கள் நாட்டு மன்னவனுக்கு எதிராகத் துணை செய்த இராசத் துரோகிகளாகிய சிங்களர்க்கும் இத் தெய்வத்தின் பெயரும் வல்லமையும் பெருந் திகிலை உண்டாக்கிவிட்டன. அவ்வழியாற் படையெடுத்துப்போக அவர்கள் துணை தானும் செய்ய மாட்டார்கள்."

நொக்ஸினுடைய காலத்திற் கண்டிப் பெரஹராவிற் புத்தர் தந்தம் சேர்க்கப்படவில்லையெனவும் அவ்விழாவில் அலுத்நுவரை தெய்யோவும் (விஷ்ணு) கொட்டரகன் தெய்யோவும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவும் (கண்ணகி) திருவுலாப் போந்தன எனவும் அவ்வறிஞர் குறிப்பிட்டிருத்தல் இங்கு கவனிக்கத்தக்கது. பத்தினி வழிபாடு, 'கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தன்' எனச் சிலப்பதிகாரத்திற் குறிக்கப்படும் முதலாம் கயவாகு மன்னன் காலத்தில், அஃதாவது கி.பி. 145ஆம் ஆண்டளவில், இலங்கையிற் பரவத் தொடங்கியது.

ஜயசிங்ககிரி சுவாமி

கண்டியரசன் சிறைப்பட்ட பின்பு, 1815ஆல் கூட்டிய கண்டிச் சமாதான சங்கத்தில் அளித்த வாக்கின்படி, அதிகாரமும் உரிமையுமிழந்து வருந்திய அதிகாரிகளைத் துணையாகக் கொண்டு 1817ஆம் ஆண்டு கண்டி மாகாணங்களிற் பெருங் கலகமொன்று ஆரம்பமாயிற்று. இக் கலகம் மிகுந்த வன்கண்மையாகவே அடக்கப்பட்டது. ஊவாமாகாணம் இத்தகைய நிலைமையினின்றும் மீள நெடுங்காலஞ் செல்வதாயிற்று. இக் கலகம் ஒழிந்த காலத்திற்றான் தேசாதிபதி பிரௌன்றிக் அவர்கள், வைத்தியத் தலைவர் டாக்டர் டேவி அவர்களுடன் கதிர்காமத்தைத் தரிசித்தார்கள். அப்பொழுது அவர்களை அங்கே வரவேற்றவர் ஜயசிங்ககிரி சுவாமிகளாகும். இவ்வடியாரைக் குறித்தும் 1816 முதல் 1820 வரை படைத் தலைவராயும், வைத்தியராயும் இருந்த டாக்டர் டேவி அவர்கள் 'இலங்கை வரலாறுகள்' எனும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அப்பகுதியை மொழிபெயர்த்து இங்கே தருகின்றோம் :

"பலராலும் மிகவும் மதிக்கப்படுகின்ற கலியாண மடம் இன்றும் கதிர்காமத்தில் ஒரு புதுமைப் பொருளாகக் காணப்படும். அது, காலற்ற சாய்வுநாற்காலி போல, உயர்ந்த பக்கங்களையும் பின்புறத்தையுமுடையதாய் ஒரு மேடை மீது களிமண்ணாலான பீடமாகும். அது புலித்தோல்களால் மூடப்பட்டுள்ளது. ஆலய வழிபாட்டிற்குரிய கருவிகள் அதன்கண் இருக்கின்றன. அதனருகில் தீ எரிந்து கொண்டிருந்தது. இஃது ஒரு மண்டபத்தின் நடுவில் அமைந்துள்ளது. இம்மண்டபம் இங்குள்ள அந்தணரின் இருப்பிடம், கலியாணமடமானது முதற்குருவாகிய கலியாண நாதருக்கே உரியதென்றும், அக் கலியாணநாதர் பக்தி மேலீட்டினால் சாதற்றுயரை யனுபவியாது முத்தியடைந்தபொழுது, அப்பீடத்தைத் தமக்குப் பின் தொண்டாற்ற வரும் குரு

பரம்பரைக்குத் தூய்மையான ஆட்சியாகவிட்டுச் சென்றன ரென்றும், அவருடைய ஆசாரிய பரம்பரையில் வந்தோர் இப் பீடத்தின் மீது கிடந்தே இவ்வுலக வாழ்வை நீக்கவேண்டுமென்றும் அப் பிராமணர் (ஜயசிங்ககிரி சுவாமி) கூறினார். இங்ஙனம் கூறியவர் தாமும் அவர்களைப் போலவே அதன்மீதிருந்த உயிர் துறக்கும் பெரும் பேற்றினை மிக அண்மையிற் பெறும் ஆவலுடன் நம்பியிருக்கிறார். இதனை வைராக்கியத்துடனும், பயபக்தியுடனும் அவர் கூறியது, அவருடைய மொழி வெற்றுரையன்றெனக் காட்டியது.

உருவும் உறுதிமொழியும் உள்ளத்தில் சூழ்ந்து பதியும் தன்மையவாயிருந்தன. ஓவியம் வரைவான் ஒருவன் தன் தொழிலுக்குச் சிறந்தவரென ஆயிரத்திலொருவராகத் தேர்ந்தெடுக்கும்படியான உயர்ந்த மெல்லிய உருவுடையராகக் காணப்பட்டார். அவருடைய தாடி நீண்டு வெண்மையாயிருந்தது. ஆனால், அவருடைய மெலிந்த உடம்பில் முகத்திற்கு உயிர்ப்பளிக்கும் அக்கண்கள் இன்னும் ஒளிநிறைந்திருந்தன. அவர் வயோதிக தசையின் மெலிவு தோன்றாது, நிமிர்ந்து நின்றார்.

ஜயசிங்ககிரி சுவாமிக்குப் பின் மடாதிபதியாகவிருந்தவர் மங்களகரி சுவாமியார்கள். இவ்வடியாரும் 1873இல் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவருக்குப்பின் மடாதிபதியாகவிருந்தவர் பால்குடிபாபா. இவருடைய வரலாற்றை இனி நோக்குவோம்.

கெசபுரி சுவாமி அல்லது பால்குடி பாபா

ஸ்ரீ. கெசபுரி சுவாமியவர்கள் ஏறக்குறைய 145 ஆண்டுகட்கு முன் (1820 – 1838) வட இந்தியாவிற் பிரயாகையிலுள்ள மடத்திலிருந்து இளமைப்பருவத்திற் கதிர்காமத்தையடைந்தார். முற்கூறிய மடத்திற் சிறிதுகாலம் தங்கியிருந்தார். பின்பு காட்டுக்குச் சென்று பல வருடங்களாகத் தவம்புரிந்து கொண்டிருந்தார். இங்ஙனம் இருக்கும் நாளில், சுரராஜபுரி சுவாமி என்றழைக்கப்படும், ஓர் இளந்துறவி கதிர்காமத்தை அடைந்தார். இவர் திருவுங் கல்வியும் கடவுட் பக்தியும் சிறந்த உருவும் உடையவர். இவர் முதலிற் காஷ்மீர் மகாராசாவின் குதிரைப்படைத் தலைவராயிருந்தவர். செல்வ நிலையாமையினை உணர்ந்து துறவறத்தை நாடும் உள்ளமுடையராதலின் இவருடைய சுற்றத்தினர் இல்லறம் நடாத்த வேண்டுமென்று இவரை நெருக்க, இவர் இயையாமை கண்டு விட்டுச் செல்ல நேரிட்டது. மகாராசா அவர்கட்கும் இதனை அறிவித்து அவர் வாயிலாக இல்லற வாழ்விற் புகும்படி நெருக்கியபொழுது, பெரும்பிறவிப் பௌவத் தடந்திரையால் பற்றொன்றி எற்றுண்பானொருவன், கனியைநேர் துவர்வாயார் எனுங் காலாற் கலக்குண்டு. காமவான் சுறவின் வாய்ப்பட்டு, உய்யு மாறறியாது மயங்குதலை யானும் பெறுவேன் எனக் கருதி, வீட்டினின்றும் புறப்பட்டு, இரந்துண்டு இராமேஸ்வரத்தையடைந்தார். இத்தலத்தில் தங்கியிருக்கும்போது ஸ்ரீபாதத்துக்குச் செல்லும்படி கடவுள் ஆணை கிடைத்தது. உடனே அவர் புறப்பட்டு இலங்கைக்கு வந்து சமனொளிமலையினை அடைந்தார். அவ்விடத்தில் சிலநாள் தங்கியதும், கதிர்காமத்திற்குப் போகும்படியும், அங்கே மலைச்சாரலிற் கடுந்தவம் புரியும் அடியார் ஒருவரைக் காண்பாரென்றும் திருவருள் ஆணையுண்டாயிற்று. சுரராஜபுரி சுவாமிகள் அங்ஙனமே செய்து மலையிலிருந்த தவத்தினரைக் கோயிலுக்குக் கொணர்ந்தார். சிலகாலம் முருகப்பெருமானின் கட்டளைப்படி அவர் சோறுண்டனரேனும், தமது உடல் நிலைக்கு ஒவ்வாமை கண்டு, பால்மாத்திரமே உணவாக உட்கொண்டார். இதனால் அவரை மடத்திலுள்ளாரும் பிறரும் 'பால்குடி பாபா' எனவழைத்தனர். இவரொடு சுரராஜபுரி சுவாமியும் மடத்தில் தங்கினார். இங்ஙனமிருந்த பால்குடிபாபா 1898ஆம் ஆண்டு ஆடிமாதம் கொழும்புநகரத்தில் உயிர் நீத்தார் இவருடைய சீடர்கள் உடம்பினைக் கதிர்காமத்திற்கெடுத்துச் சென்று சமாதிசெய்து ஒரு கோயிலுங் கட்டியுள்ளார்கள். சுரராஜபுரி சுவாமிகளும் அவ்வாண்டிற்றானே கார்த்திகை மாதம் இறைவன் திருவடி நிழலையடைந்தார்

பாலசுந்தரி

கண்டியில் அரசாண்ட கடைசியரசனாகிய ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் காலத்தில் இந்தியாவின் வட பாகத்திலிருந்த அரசன் ஒருவன் மக்கட்பேறின்மையால் இத்தலத்தைத் தரிசித்துத் தனக்குப் பிள்ளைப் பேறுண்டாகுமாயின், மூத்தபிள்ளையைக் கதிர்காம வேலருக்குத் தொண்டாற்ற விடுவேனென்ற விரதம் பூண்டு சென்றான். குழந்தை பிறந்ததும் அதன் அழகு காரணமாகப் பாலசுந்தரி எனப் பெயரிட்டுத் தான் முன்பு செய்த விரதத்தை மறந்திருந்தான். அதனை நினைவூட்டற்குரிய உற்பாதங்கள் பல நிகழ்ந்தன. உடனே தனது குமாரத்தியைக் கொணர்ந்து பல தோழியருடன் கதிர்காமத்தில் விட்டுச் சென்றாள். அரசிளங்குமாரியும் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுத் தனது காலத்தை இறைவன் பணியிற் போக்கி வந்தாள். இத்தலத்திற்கு வழிபட வந்த கண்டியரசன் இவனைக் கண்டு காமுற்று அரண்மனைக்கு மீண்டதும் மணஞ்செய்யும் கருத்துடன் பல பரிசில்கள் கொடுத்தனுப்பினான். அவற்றையெல்லாம் இவள் பொருட்படுத்தாது திருப்பி யனுப்பினள். இவளை எங்ஙனமாயினும் இசையச் செய்தல் வேண்டுமெனக் கருதிய அரசன் அரண்மனைக்கு இவளை அழைத்துவரும்படி தனது படைவீரரை அனுப்பின்றான். என் செய்வாள் பாவம்! திக்கற்றவர்க்குத் தெய்வமன்றோ துணை! அடியாரிடத்து அஞ்சுமுகந் தோன்றினால் ஆறுமுகந் தோன்றாதிருக்குமா? இங்ஙனம் கட்டளையிட்ட அரசனையே இவளுடைய பழி சூழ்ந்தமையால் ஆங்கில வரசினர் அவனைச் சிறைப்படுத்தினர். முருகன் திருவருளால் தப்பிய அரசகுமாரி கிழப்பருவம் வரையுமிருந்து தொண்டாற்றி கி.பி. 1876ஆம் ஆண்டளவில் இறைவன் திருவடி நீழலையடையந்தனள். இவ்வரலாற்றை இரண்டாம் இராசசிங்கன் மேலேற்றிக் கூறுவாருமுளர். இவ்வம்மையாருடைய சமாதி கலியாண மடத்துக்கருகிலுள்ள தோட்டத்தில் பால்குடி பாபாவினுடைய சமாதிக்கருகில் உள்ளது.

ஷேத்திர மகிமை

எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான இறைவனை வழிபடுவதற்குப் பல சமயங்களும் பல படிகளாயமைந்திருப்பதைப் போல, பல சமயத்தவர்களும் வழிபடும் தெய்வத்தன்மை வாய்ந்து விளங்கும் திருத்தலம் திருக்கதிர்காமமாகும்.

இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்து பௌத்தர்களும் இந்துக்களும் முஸ்லிம்களும் இத் தலத்தைத் தரிசிக்கின்றனர். கதிர்காமக் கந்தனை வழிபடும் சைவர்கள் காட்டும் அன்பும் ஊக்கமும் அளவிடற்கரியன. புத்தர்பகவான் யோகத்தமர்ந்த திருத்தலங்கள் பதினாறனுட் கதிர்காமமும் ஒன்றாகக் கி.மு. 309க்கு முன்பே கருதப்பட்டு வந்தது. சிங்களவரசருட் பெரும் பாலர்

கதிர்காமத் தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவையும் (கண்ணகியம்மன்) வணங்கி வந்தனர் என்பது சரித்திர நூல்களால் நன்கு பெறப்படும். சிங்களவரின் தலைநகராயிருந்த கண்டி நகரிலும் இத் தெய்வங்கட்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். கண்டியில் வருடந்தோறும் நடைபெறும் 'பெரஹரா' எனும் விழாவிற் கதிர்காமக் கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டு வந்தது.

இனி, ஹிலுர் அலைஹி என்னும் முகம்மதிய அடியார் கதிர்காமதலத்தை அடைந்து ஞானம் பெற்றுய்ந்தாரென்பதும் சிலகாலம் அங்கே தொண்டாற்றும் நோக்குடன் தங்கினார் என்பதும் ஐதீகம். இவ்வடியார் சமந்த கூடத்திலும் சிறிதுகாலம் வசித்தார் என்றும் சொல்லப்படுகிறது. கதிர்காமத்தில் முஸ்லிம் பெரியார் ஒருவர் அடங்கிய இடமொன்று வள்ளியம்மன் கோயிலுக்கருகில் இன்றும் காணப்படுகிறது. பண்டைக்காலந் தொட்டுக் கதிர்காமத்தில் நடக்குந் திருவிழாக்களில் முகமதியர் விளக்குப் பந்தம் பிடிக்கும் வழக்கமொன்றுண்டெனச் சைமன் காசிச் செட்டியவர்கள் 'சிலோன்கசெற்றீயர்' எனும் நூலிற் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது இவ்வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. முருகனுக்குரிய சிறந்த திருத்தலங்களில் முகமதியரின் தொடர்பிருத்தல் ஊன்றி நோக்கத்தக்கது.

திருக்கதிர்காமத்தில் முருகப்பெருமான் சிறியதொரு கோயிலில் திரைமறைவிற்றான் வீற்றிருக்கின்றார். திரைமறைவில் வீற்றிருந்தும் திசையனைத்தும் ஆள்கின்றார் எனப் போற்றத் தொடங்கினார் முருகதாசர் ஒருவர். கதிர்காமத்திற்குச் செல்வோர் கோபுரத்தின் அழகைக் கண்டு களித்தற்கேனும், வீதியின் அமைப்பைக் கண்டு வியத்தற்கேனும், கர்ப்பூர தீபத்தின் ஒளியைக் கண்டு மயங்குதற்கேனும், அங்குள்ள கடை வரிசையைக் கண்டு களித்தற்கேனும் போவதில்லை. அங்ஙனமாயின் வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செல்வதற்குரிய காரணந்தான் என்ன? கலியுக வரதனாகிய கதிர்காமப்பெருமான் வள்ளி நாய்ச்சியாருடன் வீற்றிருந்து கண்கண்ட கடவுளாக அடியார்கட்குத் திருவருள் பொழிதலினால் என்க. எத்தனையாயிரம் ஆண்டுகள் சென்றபோதிலும், இத்தலத்திலுள்ள திருவருட் சக்தியானது காந்த சக்தி இரும்பை இழுப்பதை யொப்ப, அடியார்களைத் தன்னகத்தே இழுத்து உருக்கிவிடுகின்றது. இத்தலத்தின் சக்திப் பிரவாகத்தை உணர்தல் கூடுமன்றி, சொற்களால் விரித்தல் எம்போன்றார்க்கு எளிதன்று. அன்பர்களே! நீங்கள் ஒருமுறை போய்ப் பாருங்கள். மாணிக்கக் கங்கையிற் படிந்தாடுங்கள். பக்தி வெள்ளத்திற் பரவசமுற்று ஆனந்தக் கூத்தாடி 'அரோ ஹரா' எனும் நாமத்தைச் சொல்லிப் பாருங்கள்.

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே.



கேதார கௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தே-பிறை சதுர்த்தசியில் (14ம் நாள்) முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவ பெருமானை நோக்கி சிவபூசை செ-து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இதனை அனுஷ்டிப்பர்.

மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிப்பதுண்டு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்த நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

மகாளயம்

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும். அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செ-யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செ-ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செ-வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செ-த பலனைக் கொடுப்பதாகும். மகா + ளயம் - பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.

புரட்டாதி பூர்வ பக்க சதுர்த்தசி (புரட்டாசி மாதம் வளர்பிறை 14ம் நாள்)

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடை பெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.



ஈழத்தில் சைவ ஆலயங்களும், அறப் போதனைகளும்

செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்



ஈழத்திருநாட்டில் சைவசமய ஆலயங்களில் அறச்சிந்தனைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதில் ஆர்வம் காட்டாத சூழ்நிலை இன்று வளர்ந்து கொண்டிருக்கிறது. எல்லா மத ஸ்தலங்களிலும் பூசை வழிபாட்டில் நல்ல சிந்தனைகளைப் போதனை செய்வது முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் எமது சைவ ஆலயங்களில் கிரியைகளும், வழிபாடுகளும் பெறும் முக்கியத்துவம் ஆன்ம ஞான உபதேசங்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது மிகவும் பிரச்சினைகளுக்குரிய விடயங்களாகப் பல அறிஞர்களும் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். வெறும் சடங்குகளோடு சமய விழாக்கள் முடிவடைந்து விடுமேயானால் சமய உண்மைகளும், சமய தத்துவங்களும் மக்களிடையே வளர்த்தெடுக்க முடியாமல் போய்விடும். இந்நிலை மாறவேண்டும். எமது நாட்டிலும், இந்தியாவிலும் ஆலயங்களில் சமயப் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தன்மை அருகிக் கொண்டு போகின்றது. இந்நிலையும் மாற வேண்டும்.

ஈழத்திருநாட்டில் ஆலயங்கள் அறப்போதனைக்கு முதன்மை கொடுத்த வரலாறு உண்டு. குறிப்பாக ஆலயங்களில் நடாத்தப்பட்ட புராணப் படிப்புப் பாரம்பரியம் வழிபாட்டிற்காக வரும் மக்களிடையே வாழ்வாங்கு வாழ்வதற்கான சிந்தனைகளை புராணப்படிப்பினூடாக எடுத்துரைக்கப்பட்டது. புராணப்படிப்புப் பாரம்பரியம் ஆலயங்களில், மடங்களில், சத்திரங்களில், பெரிய மரவிருட்சங்களின் அடியில், வீட்டுத் திண்ணைகளில் வளர்த்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அந்நியர்கள் ஈழத்திருநாட்டைக் கைப்பற்றி சைவத் திருக்கோயில்கள் அனைத்தையும் அழித்தொழித்த போதிலும் சைவசமய வழிபாட்டு நெறிமுறை மறைமுகமாகப் பின்பற்றப் பட்டது. சைவ சமயப் போதனைகள் வீட்டுத் திண்ணைகளிலும் நிலாமுற்றத்துப் போதனைகளிலும் காப்பாற்றப்பட்டுள்ளன. ஆனால் இன்று ஆலயங்கள் பிரமாண்டமாகக் கட்டி எழுப்பப்பட்டு பல்வேறு வசதிகளோடு ஆலயச் சூழல் அமைக்கப்பட்டுள்ள போதிலும் நித்திய, நைமித்திய வழிபாடுகளில் ஞான உபதேசங்களுக்கான முக்கியத்துவம் சீராக்கம் பெறவில்லை. நல்லைநகர் நாவலர் பெருமான் ஈழத்துச் சைவசமய வரலாற்றில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய வரலாற்றாளர் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆலயங்களில் வழிபாட்டோடு நல்ல சிந்தனைகள் போதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்துப் பிரசங்க மரபினை அறிமுகம் செய்து வைத்தார்.

ஆலயங்களில் பிரசங்க மரபு

நல்லைநகர் நாவலர் பெருமான் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் சமயப் பிரசங்க மரபினைத் தோற்றுவித்தார். அவர் ஆற்றிய பிரசங்கம் மக்களை ஆற்றுப்படுத்தியதுடன் சமய உண்மைகளை மக்கள் அறியும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. நாவலர் பெருமான் குடாநாட்டில் உள்ள பல சைவ ஆலயங்களில் தனது பிரசங்கத்தினூடாக மக்களைக் கவர்ந்தார். நல்ல

ஒழுக்கவியற் கருத்துக்களை பிரசங்கத்தினூடாக எடுத்துரைத்து மக்களைப் புனிதவழிக்குத் திசைதிருப்பினார். ஆலயங்களில் நடைபெற்ற கேளிக்கைகளை நிறுத்துவதற்கும் பலியிடல் போன்ற வேள்வி முறைகளைத் தடுப்பதற்கும் நாவலர் பெருமானது பிரசங்கம் பெரிதும் பயன்பட்டது. இவை மட்டுமன்றி மத மாற்றங்களுக்கு உட்பட்டவர்களை மீளச் சைவசமயத்திற்கு ஈர்ப்பதற்கும் மதம் மாறலைத் தடுப்பதற்கும் பிரசங்கத்தைப் பெரிதும் பயன்படுத்தியவர் நாவலர் பெருமான். அவர் ஏற்படுத்திய பிரசங்கத்தின் தொடரினால் அவரைத் தொடர்ந்து பலர் ஆலயங்களில் சமயப் பிரசங்கங்களை ஆற்றி மக்களை நெறிப்படுத்தியதோடு கோயில்களையும் புனித பிரதேசமாகப் பேணுவதற்கும் உதவினார். நாவலர் வழியில் பிரசங்க மரபைப் பேணியவர்கள் செய்த தொண்டு ஈழத்தின் சைவ மறுமலர்ச்சிக்கு பெரிதும் துணை செய்தது. காலத்திற்குக் காலம் பல பிரசங்கத்திற்குப் பெருமதிப்புக் கொடுத்தன.

கதாப்பிரசங்க மரபு

ஆலயங்களில் சமய வரலாறுகளையும் புராண இதிகாசத் தத்துவங்களையும் இசையோடு கூடி எடுத்துரைக்கின்ற மரபே கதாப்பிரசங்க மரபாகும். ஈழத்தில் கதாப்பிரசங்க விற்பன்னர்கள் ஆலய விழாக்களில் தமது இசை ஞானத் திறமையாலும் சொல் வன்மையாலும் மக்களை நெறிப்படுத்தினர். காலத்திற்குக் காலம் அற்புதமான கதாப் பிரசங்கர்கள் தோன்றிப் பணியாற்றியுள்ளனர்.

வில்லிசை

கதாப்பிரசங்க மரபு தழுவிய இசையோடு கூடிய ஒரு நிகழ்ச்சியாக இக்கலை வடிவம் 20ஆம் நூற்றாண்டில் சைவ சமய வழிபாட்டில் இடம்பெற்றுள்ளது. ஆலயங்களில் சமயச் செய்திகளை இக் கலைவடிவத்தினூடாக மக்களிடையே எடுத்துரைக்கின்ற பண்பாடு சிறப்புப் பெற்று விளங்கியுள்ளது. 1950கள் முதல் 20ஆம் நூற்றாண்டின் நிறைவு வரை இத்துறையில் சமயச் செய்திகளைச் சொல்லுகின்ற கலைஞர்கள் சிறந்த பணியாற்றியுள்ளனர். திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் கணபதிப்பிள்ளை (சின்னமணி), லடீஸ் வீரமணி, மாஸ்ரர் சிவலிங்கம், சதா. சதாசிவம் போன்ற கலைஞர்கள் வில்லிசைக் கலைமூலமாக ஆலயங்களில் சமயக் கருத்துக்களை நீண்டகாலமாக எடுத்துரைத்து வந்துள்ளனர். இக்கலை வடிவமும் இன்று அருகி வருகிறது. திருக்கோயில்களில் வில்லிசை மூலம் சமயச் செய்திகளைச் சொல்லுகின்ற வழக்கம் மிகவும் குறைந்துவிட்டது.

நடன நாடக கூத்துக் கலைகள்

மேற்குறித்த கலை வடிவங்களினூடாகச் சமய காப்பியச் செய்திகள் ஆலயங்களில் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இக்கலை வடிவங்களினூடாக மக்களுக்கு நல்ல செய்தி சொல்லுகின்ற தன்மை இன்று அருகிப் போய்விட்டது.

புராண படல மரபு

ஆலயங்களில் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், விநாயகபுராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவற்றை ஒருவர் படிக்க மற்றவர் விளக்க உரை சொல்ல மக்கள் ஆர்வமாகக் கேட்கின்ற மரபு ஈழத்துச் சமய மரபில் மிகவும் முதன்மை பெற்றது. யாழ்ப்பாணம் கந்தபுராணக் கலாசாரம் பேணுகின்ற பூமி எனப் பாரத நாட்டவர்கள் சிறப்பித்துக் கூறும் அளவிற்கு புராண பாரம்பரியம் இங்கு மதிப்புப் பெற்றது. புராணப்படிப்புப் பாரம்பரியத்தைக் கோயில் பூசகர்கள், அறங்காவலர்கள், பக்தர்கள் இணைந்து நடாத்தி வந்தனர். அன்றைய சூழலில் மணித்தியாலக் கணக்காக மக்கள் புராணப்படிப்பை ஏற்றனர். அன்று பெரும்பாலான மக்கள் விவசாயிகளாக விளங்கிய காரணத்தினால், அவர்களுக்குப் போதியளவு நேரம், புராணப்படிப்பைக் கேட்கக் கூடியதான வாழ்வியல் சூழல் அமைந்தது. இன்று புராணப்படிப்பு நடைபெறுகின்றபோது ஒரு சிலரே பங்கு பற்றுகின்றனர். இன்று புராணப்படிப்புப் பாரம்பரியமும் அருகிக் கொண்டிருக்கின்றது.

ஆலயங்களில் பூசை வழிபாட்டுடன் நற்சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

ஆலய வழிபாட்டில் நற்சிந்தனை, கூட்டுப் பிரார்த்தனை மிகவும் முக்கியம் பெற வேண்டும் என்ற கருத்தினை ஈழத்துச் சமய வரலாற்றில் நாவலருக்குப்பின் நெறிப்படுத்தியவராக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் விளங்குகிறார். 1950களுக்குப் பின் சமயச் சொற்பொழிவுகளினூடாக மக்களை ஆற்றுப்படுத்தி வருகின்ற இவர் பலரை நெறிப்படுத்தியுள்ளார். குறிப்பாகத் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் பூசை வழிபாட்டோடு நற்சிந்தனைக்கும் கூட்டுப் பிரார்த்தனைக்கும் நேரம் ஒதுக்கி இன்றுவரை அம்மரபு சிதைந்து விடாமல் காப்பாற்றி வருகிறார். இவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றிச் சில ஆலயங்களில் நித்திய நைமித்திய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் சமய சொற்பொழிவுகள், நற்சிந்தனைகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டது. பல ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் சமயச்சொற்பொழிவைக் கேட்கின்ற வாய்ப்பு வளர்ச்சி பெற்று வந்தது. எனினும் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நற்சிந்தனை நடைபெற்று வந்த ஒழுங்கு, ஏனைய ஆலயங்களில் பேண முடியாமல் போய் விட்டது.

இன்று சைவ ஆலயங்கள் அறப்போதனைகளை வளர்ப்பதற்குச் செய்ய வேண்டிய அடிப்படைக் கடமைகள்

சைவ ஆலயங்களை வழிநடத்துகின்ற அறங்காவலர்கள் ஆலய வழிபாட்டு நிகழ்ச்சிகளில் வாரத்தில் ஒருநாளாவது மக்களை நல்வழிப்படுத்துகின்ற நற்சிந்தனைகளை வளர்ப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். பிரசங்கத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை அழைத்துத்தான் நற்சிந்தனை சொல்லுகின்ற முறையை ஏற்பாடு செய்யத் தேவையில்லை. ஆலயத்தில் பூசை செய்கின்ற குருவோ அல்லது அறங்காவலரோ அல்லது அடியவரோ, யாரோ ஒருவர் அறங்கூறுகின்ற நூல்களைக் கொண்டு வந்து வழிபாட்டிற்கு வரும் மக்களுக்கு வாசித்துக்காட்டி மக்களுடைய மனதில் நல்லறிவைப் போதிக்க வேண்டும். அறப்போதனை என்பது அருமருந்தாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஓர் இருநேரமாக மக்கள் கேட்பதற்கு வழி செய்ய வேண்டும். ஆலய அறங்காவலர்கள் ஆலயப் பூசகர்கள் இவ்விடயத்தில் அக்கறைகாட்டாது இருப்பார் களானால் எமது சமய உண்மைகளை எதிர்காலச் சந்ததி சீராக அறிய வாய்ப்பில்லாது போய்விடும். அறச்சிந்தனைகள் சொல்வதற்குப் பணச் செலவு இல்லை. இன்று எல்லோரும் எழுத்தறிவு உடையவர்கள், எம்முன்னோர்கள் சொல்லி வைத்த நல்ல செய்திகளை மீள வாசித்துவிட்டால் பலரது எண்ணங்களில் நல்ல கருத்துக்கள் பதிய வாய்ப்பிருக்கும். இன்று சைவர்களாகிய நாம் இவ்விடயத்தில் அக்கறைகாட்டாது விடுவோமானால் நாம்

அடுத்த தலைமுறைக்கு ஒரு பெரிய துரோகம் செய்தவர்களாவோம். ஆலயங்களில் நற்சிந்தனை ஊடாக அறம் போதிக்கப்படுவதோடு அன்பு, ஜீவகாருண்யம், இரக்கம். பிறருக்கு உதவும் மனப்பாங்கு, நன்றிமறவாமை போன்ற நல்லன மக்களிடையே எடுத்துரைக்க முடியும். வெறும் கிரியைகளாலும் சடங்குகளாலும் மக்களை முழுமையாக ஆற்றுப்படுத்த முடியாது. இன்று கோயில்களில் பெருமாட மண்டபங்கள் கட்டப்படுகின்றன. ஆனால் அம் மண்டபங்களை அறப்போதனைக்காக ஞான உபதேசங் களுக்காகப் பயன்படுத்துவதில்லை. இறைவனின் பெயரால் நாம் செய்யும் திருப்பணிகள் எல்லாம் இறையடியவர்களுக்கு பயன்படும் என்ற உண்மையைப் பலரும் இன்று அறிந்து கொள்வதில்லை.

ஆலய அறங்காவலர்கள் பூசகர்கள் போன் றோர்களுக்காக ஆன்மீகப் பயிற்சிகள்

இன்று ஆலயங்களை வழிநடத்துகின்றவர்கள் ஆலய மரபுகளைச் சமய தத்துவங்களை வரலாற்று மேன்மைகளைக் கற்றுக் கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. இதுவும் எமது சமயத்திற்கு உகந்தது அல்ல. அரசர்களது ஆட்சிக் காலங்களில் அரசர்கள் கோயில்களைக் கட்டிய போதும் சமய மேன்மைகளைக் கற்பதற்காகக் காலம் ஒதுக்கிக் கற்றுக் கொண்டனர். அரசன் போர்ப்பயிற்சி பெற்றதோடு நின்றுவிடாது ஆத்ம விசாரணை களைத் தொடுத்து இத்துறை சார்ந்த ஆத்ம ஞானிகளிடத்தும் அறிவை வளப்படுத்திக் கொண்டனர். இவ்வரலாற்று உண்மையை நாம் அனைவரும் உணரவேண்டும். இராஜராஜ சோழன் முதல் ஈழத்து ஆட்சிப் பீடத்தை அலங்கரித்த பரராஜசேகரன் வரை ஆத்மீகத்தை, அற இலக்கியங்களை, வைத்தியத்தை எத்தனை தூரம் கற்றனர் என்பதை வரலாற்று நூல்கள் சான்று பகிர்கின்றன. இன்று கோயில்களை வழிநடத்துகின்ற அறங்காவலர்களில் பெரும்பாலானவர்கள் சமய உண்மைகளைக் கற்றுக் கொள்வதுமில்லை! அறிவதும் இல்லை. விதிவிலக்காகச் சிலர் சமய மேன்மைகளைக் கற்று ஆலயங்களைப் பேணி வருகின்றனர். எனினும் எதிர்காலத்தில் ஈழத்திருநாட்டில் ஆலய அறங்காவலர்களுக்குப் பயிற்சி வழங்கல் இடம்பெறுவது அவசியமாகும். ஆலய நிர்வாகக் கட்டமைப்பைச் சீராக கட்டமைப்பதற்குக் கொடுக்க வேண்டிய பயிற்சியோடு ஆலயங்களில் அறங்காவலர்கள் அறப்போதனை செய்வதற்குத் திட்டமிட்ட பயிற்சி வழங்குவது அவசியமாகும் என்பது எனது தாழ்மையான கருத்து ஆகும்.

ஆலயச் சிவாச்சாரியார்களுக்கான ஆன்மீகப் பயிற்சி

ஆலயப் பூசகர்களுக்கான கிரியைப் பயிற்சிகள் அவர்கள் தத்தம் குருவை நாடிப் பெற்றுக் கொள்வர். அவர்களுக்கான கிரியை நிறுவனங்களிலும் பயிற்சி பெறுவர். எனினும் ஆலயக் குருமார்கள் அறப்போதனை செய்யக்கூடிய ஆற்றலுடையவர்களாக எதிர் காலத்தில் விளங்குவதற்கு அவர்களுக்கான பயில் அரங்குகள் எதிர்காலத்தில் ஏற்பாடு செய்யப்படவேண்டும். சில ஆலயங்களில் சிவாச்சாரியார்கள் அறப்போதனை செய்யக் கூடியவர்களாக விளங்குகின்றனர். எனினும் பெரும்பாலான ஆலயங்களை வழிநடத்துகின்ற சிவாச்சாரியார்கள் அறப்போதனைகளில் ஆர்வம் காட்டாதவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலை மாற வேண்டும். அவர்கள் செய்யும் கிரியைகளின் விளக்கங்கள் அவற்றினால் ஏற்படும் பலாபலன்களை மக்களுக்கு எடுத்துரைக்காவிடின் மக்கள் பெறுகின்ற வாய்ப்பு இல்லை. ஆலய விழாக்கள் தொடர்பான விளக்கங்களை அறியாத மக்கள் இன்று பலர் உள்ளனர். அன்று எழுத்தறிவு இல்லாத மக்கள் பெற்ற ஆன்மீக அனுபவங்களை இன்று எழுத்தறிவுள்ள சமுதாயம் பெறவில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். பிறமதத்துச் சமய குருமார்கள் தமது வழிபாடுகளில் அறப்போதனைக்குக் கொடுக்கும் முக்கியதீதுவத்தை எமது சமய குருமார்களும் கருத்தில் கொள்ள வேண்டும். சமயத்தை, சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நாம் தலைவணங்கும் குருமார்களுக்கும் உரியதே.

ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகள்

இலங்கையிலுள்ள ஏனைய மதத்தவர்கள் தமது சிறார்களுக்கு வாரத்தில் இருநாள் சமய அறப்போதனைக்கான வகுப்புக்களை நீண்ட காலமாக நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 1977க்குப்பின் இலங்கை அரசாங்கம் இந்து சமயதுறை சார்ந்த ஓர் அமைச்சினை நிறுவி அவர்களுக்கான கடமைகளையும் வகுத்துக் கொடுத்தது. இந்து கலாசார அமைச்சு தமது திட்டங்களில் ஒன்றாக அறநெறிப் பாடசாலைத் திட்டத்தை அறிமுகம் செய்தது. கொழும்பு இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு சைவ முன்னேற்ற சங்கம் போன்ற நிறுவனங்கள் அறநெறிப் பாடசாலையை முதலில் ஆரம்பித்தன. பின்பு மலையகத்திலும் கிழக்கிலங்கையிலும் அறநெறிப் பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. ஈழத்தின் வடபால் அறநெறிப்பாடசாலை பற்றிய ஆர்வம் இருக்கவில்லை. எனினும் கடந்த 10 ஆண்டுகளாக அறநெறிப் பாடசாலை தொடர்பான ஆர்வம் வளர்ச்சி பெற்றுள்ளது. வன்னிப் பெருநிலப்பரப்பிலும், மன்னாரிலும், திருகோணமலையிலும் பல அறநெறிப் பாடசாலைகள் தோற்றம் பெற்றுள்ளன. எனினும் பாடசாலைக்கு பிள்ளையை அனுப்புவதில் பெற்றோருக்கு அதிகம் ஆர்வம் இன்மை காணப்படுகிறது. குறிப்பாக ஏனைய மதத்தவர்களோடு ஒப்பிடுகையில் சிறுவர்களை ஆத்மீக வகுப்புக்களுக்கு அனுப்பும் வழக்கம் எம்மவர்களிடையே போதாமை இருக்கின்றது. இது எமது சந்ததி செய்த தவறோ தெரியவில்லை. இந்நிலை மாற வேண்டும். குறிப்பாக மிகவும் வசதிகளுடைய ஆலயங்கள் அறநெறிப் பாடசாலையை உருவாக்குவதில் அக்கறை இல்லாது இருக்கின்றன. அறநெறிப் பாடசாலை வளர்ச்சிக்கு ஈழத்து ஆலயங்கள் கொண்டுள்ள அக்கறை மிகக் குறைவு. ஆலய வருவாயில் அறநெறிப் பாடசாலையை அமைக்கப் பல ஆலயங்கள் பின் நிற்கின்றன. "அறம் போதிப்பது ஆலயம்" என்பதை அறங்காவலர்கள் உணர வேண்டும். அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வேதனம் சீருடை உபகரண உதவி என சில திட்டங்களை திணைக்களங்கள் கண்துடைப்புக்காக அறிமுகம் செய்வதும் வழக்கமாகி விட்டது. இந்நிலையில் இருந்து முழுமையாக அறநெறிப் பாடசாலைகளை ஒவ்வொரு ஆலயங் களும் சீரானதிட்டமிடலுடன் வழிநடத்த வேண்டும். இவர் களுக்குரிய பாடத்திட்டங்கள் இவர்களது வயதிற்குரியவைகளாக அமைதல் வேண்டும். அன்பு, இரக்கம், கருணை, தயவு போன்றவற்றை அறநெறிப் பாடசாலைகள் முழுமையாகப் போதிப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

சைவ ஆலயங்கள் இன்று அவசியமாகச் செய்ய வேண்டிய உன்னத பணிகளில் அறப்போதனைகளின் அவசியம் பற்றியும், அவற்றை ஓரளவேனும் பேணவேண்டிய வழிமுறைகளையும் அறிவுக்கு எட்டியவாறு தந்துள்ளேன். இவ் அறிவைக் கருவாகக் கொண்டு ஆலயங்கள் செயற்பட வேண்டும் எனக் கூறி நிறைவு செய்கிறேன்.



கோயில் வளர்த்த வாழ்வியல் கலைகள்

சிவஞானவாரிதி,
சைவ சித்தாந்தக் காவலர்,
தீரு. கு. குருசாமி

கலைகள் அறுபத்து நான்கு என்று பைந்தமிழ் மரபிலே வரையறுக்கப் பெற்றுள்ளது. "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை" என்று சரஸ்வதி தோத்திரத்திலும் எண்ணொடு எண் கலைகள் என்ற சிலப்பதிகாரத்திலும், குறிப்பிடப்பட்டுள்ளதனாலே கலைகள் அறுபத்து நான்கு என நாம் அறிகின்றோம். இவற்றுடன், கோயில் வளர்த்த வாழ்வியற் கலைகள் பற்றி இன்று ஆராய்வது பொருத்தமானது.

கோயில் வளர்த்த கலைகள் அனைத்தும் வாழ்வியற் கலைகளே. கலைஞர்கள் தமது வாழ்க்கைத் தொழிலாக மேற்கொண்ட கலைகள் சிற்பம், ஓவியம், இசை, தையல், அலங்காரம், சமையல் முதலானவை கோயில் வளர்த்த வாழ்வியல் கலைகளாகத் திகழ்கின்றன.

தமிழ் மக்கள் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கோயில் வழிபாட்டில் ஈடுபட்ட பெருமைக் குரியவர்கள் என்பதைச் சிந்துவெளி நாகரிகப் புதைபொருள் ஆய்வுகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஆரியர் இந்தியாவிற்குள் பிரவேசிப்பதற்கு முன்னே சிந்துவெளியில் வாழ்ந்த மக்களது தாய்மொழி தமிழ் என்பதைத் தென்திராவிட மொழி ஒப்பிட்டு ஆய்வு நூலில் கோல்ட்வெல் பாதிரியார் வெளியிட்டுள்ளார். கோயில்கள் ஆகம முறைப்படி அமைக்கப் பெற்றன என்பதும், ஆகமங்கள் தமிழ் மொழியிலே முதன் முதலில் எழுதப்பெற்றன என்பதும் கலாநிதி வி. பொன்னையா அவர்களது ஆய்வு நூலில் வெளியிடப்பட்ட கருத்துகளாகும்.

இன்று கோயில் அமைப்பினை உற்று நோக்குமிடத்து கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தபன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், இராஜ கோபுரம் முதலான ஏழு பிரதான அம்சங்களுடன் விளங்குவதை அனைவரும் நன்கு அறிவர். கோயில் அமைப்பிற்குச் சிற்பம், ஓவியம், இசை, அலங்காரம், சமையல் ஆகிய கலைகள் முக்கியமானவையாக விளங்குகின்றன. கோயில்கள் கட்டப் பெற்ற காலத்திலிருந்தே சிற்பக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், அலங்காரக் கலைஞர்கள், சமையற்கலை விற்பன்னர்கள் இக் கலையைத் தமது வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட காரணத்தால் கோயில்களே வாழ்வியற் கலைகளை வளர்க்கும் நிலையங்களாக விளங்கின.

சிற்பக் கலையும் ஆலய அமைப்பும் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்களுக்குத் தெரிந்திருந்தது. சிந்துவெளி நாகரிக காலத்திலே, சிறப்புற்றிருந்தது. ஆரியர் வருகையுடன் சிந்து நாகரிகம் மந்த கதியை அடைந்தது என்பது புதைபொருள் ஆய்வுகள் மூலந் தெளிவாகிறது.

கண்ணகிக்குக் கற்கோயில் எழுப்பிய சேரன் செங்குட்டுவன் காலத்தில் சிற்பக் கலை மறுமலர்ச்சி அடைந்தது. கி. பி. 2 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன் எமது நாட்டில் கண்ணகி சிலையினைக் கொண்டு வந்து கண்ணகி வழிபாட்டினை அறிமுகம் செய்து வைத்தான் என வரலாறு குறிப்பிடுகின்றது.

இராமாயணக் காலத்தில், இராவணேஸ்வரன் காலத்தில் கோணேஸ்வரம், கேதீஸ்வரம், முன்னேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் எமது நாட்டில் புகழ்மிக்க வழிபாட்டுத் தலங்களாகத் திகழ்ந்தன.

மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தில் பல சிவாலயங்கள் தென்னகத்தில் சிறப்புற்றிருந்ததைத் திருவாசகப் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

6ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஆட்சிக் காலத்தும், தொடர்ந்து 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளிலும் தேவார முதலிகளாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரது காலத்திலும் சிவாலயங்கள் சிறப்புற்றிருந்தன.

கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குப் பின் இராஜராஜ சோழ மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் தஞ்சைப் பெரியகோயில் கட்டப்பெற்றதும், சிற்பக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நடனக் கலைஞர்கள், ஓதுவார்கள் ஆகியோருக்கு மானியங்கள் வழங்கிய செய்தி சிவாசனத்திலும் செப்பேடுகளிலும் வரையப்பெற்றிருக்கின்றன.

பல்லவர் ஆட்சிக் காலத்துப் புத்துயிரூட்டப் பெற்ற வாழ்வியல் கலைகள் சோழர் ஆட்சிக் காலத்தில் மகோன்னத நிலையில் மிளிர்ந்தமைக்கு அரசர்களது ஊக்குவிப்பு முக்கிய காரணமாயிருந்தன. இசைக்கலையில், மங்கள வாத்தியமாகிய நாதஸ்வரம், தவில் ஆகியன சிறப்புற்றிருக்கின்றன.

கும்பாபிஷேகச் செலவு விபரங்களிலே பிரதம சிவாசாரியார், சிற்பாசாரியார், மங்கள வாத்தியக் கலைஞர்கள், ஓதுவார் முதலியோருக்குக் கும்பாபிஷேகச் செலவுக் கணக்கில் ஒரு பகுதி ஒதுக்கப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த முறைமையை நன்கு அவதானிக்கும்போது, கோயில் கிரியைகளில் வாழ்வியல் கலைகள் முக்கிய பங்கு வகிப்பதனையும், வாழ்வியல் கலைஞர்கள் தகுந்த ஆதரவு, பெற்றிருந்தனர் என்பதனையும் அறிகின்றோம்.

மகோற்சவம் நடைபெறும் கோயில்களில் கொடிச் சீலை வரைந்து கொடுப்பவர்களுக்கும், தேர் இழுப்பதற்கு உதவும் தேர்வினைக் கம்மியருக்கும் படி வழங்கும் சம்பிரதாயம் உண்டு. தேர்த்திருவிழாவிலே தேர்க் கொட்டகையிலிருந்து வீதி உலாவுக்குத் தேர் புறப்பட்டு இருப்பிடம் சேரும் வரை முண்டி போட்டுத் தேரை நெறிப்படுத்தி வழிப்படுத்துவது ஒரு தனிக்கலை.

இதேபோன்று கோயிலில் சுவாமி அலங்காரத்திற்குரிய குச்சாரம், கண்ணி, இண்டை, தொடை, தொங்கல், கண்ணி முதலான மாலைகள் தொடுப்பதும் தனிக் கலையாகும். மாலை தொடுக்கும் கலையில் வல்லுநரும் கோயில் மூலம் தமது வாழ்க்கையைச் சீராக நடத்துவோராவர்.

மூர்த்தி அலங்காரம் பற்றி அச்சுவேலி, சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அருமையான நூல் எழுதியுள்ளார். சுவாமி அலங்காரக் கலை வல்லுநரும் கோயிலைச் சார்ந்து வாழ்பவரே.

ஏனைய கதாப்பிரசங்கக் கலை, புராணபடனக் கலை, குரலிசை, வாத்திய இசை ஆகியன ஆதரிப்பார் குறைவினால் அருகிக் கொண்டு வருவதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

பண்ணிசைக்கலை, சோழர் ஆட்சிக்குப் பின்னர் நலிவுற்றது. பாரம்பரிய முறையாகத் தேவாரத் திருமுறைகளைக் கோயில் களிலே ஓதுவதற்கு ஓதுவார்கள் குறைந்து வருகின்றனர். வாழ்க்கைக்கு உதவும் வகையில் கோயில்கள் ஓதுவார்களுக்கு எவ்வித ஆதரவும் அளிப்பதில்லை என்பதும் தற்போது நிலவிவரும் பெருங்குறை என்பதை நாம் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். சனரஞ்சகமாகப் பண்முறையை மாற்றிப் பாடும் வழக்கமும் தோன்றியிருப்பதை அவதானிக்கலாம்.

நடனக்கலை இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும் கோயில்களில் மட்டுமே வளர்க்கப்பட்ட வரலாற்றுப் பெருமை மிக்க கலையாகும். கோயில்களில் நடனமாடுவது 12ஆம் நூற்றாண்டு வரை சோழ மன்னர் ஆட்சிக்காலம் வரை மிகச் சிறப்புற்றிருந்தது. காலப்போக்கில் தாசியர் நடனம் என்று தரக்குறைவாகக் கணித்து, சமுதாயத்தில் மதிப்புக் குறைந்ததால் கோயில்களில் நடனமாடும் வழக்கம் அருகிவிட்டது. தற்போது நடனம் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்கு ஒரு பாடமாகத் தரமுயர்த்தப்பட்ட பின், கோயில்களில் வாழ்வியல் கலையாகத் திகழ்ந்த நிலை மாறிவிட்டது.

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கீதம், வாத்தியம், நிருத்தம் போன்ற நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பெறுவதை இன்றும் காணலாம். மகோற்சவம் நிகழும் கோயில்களிலே, நவசக்திகளிலும் நவசக்திப் பண்ணிசைக்கப்படுகிறது. ஆனால், இன்றைய சூழ்நிலையில், கவசந்திப்பண் பாடுவதற்குப் பண்ணிசையில் தேர்ச்சி பெற்ற ஓதுவார்கள் இல்லாத குறை பொதுவாக நிலவிவருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

இன்று கோயில்களில் சிறப்புற்றிருக்கும் வாழ்வியல் கலைகளாகச் சிற்பக்கலை, நாதஸ்வர, தவில் வாத்தியக்கலை, அலங்காரக்கலை, சமையற்கலை ஆகியன மட்டுமே சிறப்புற்றிருக்கின்றன. பக்திச் சுவை வளர்க்கும் கதாப்பிரசங்கக் கலை, புராணபடனக்கலை, பண்ணிசைக்கலை ஆகியன நடைமுறை வழக்கில் மறைந்து கொண்டு போகும் நிலைக்கு வந்துவிட்டன. ஆலய அறங்காவலர்கள் இவைக்குப் புத்துயிரூட்ட முன்வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

பக்திநெறியை வளர்ப்பதற்குக் கோயில்களிலே கதாப்பிரசங்கக் கலையும், புராணபடனக் கலையும், பண்ணிசைக் கலையும் பெரிதும் துணை செய்வன என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஓதுவார்கள், பிரசங்கம் செய்பவர்கள் கோயில்களில் இலவசமாகத் தம் பணியைச் செய்ய வேண்டும் என்று கோயில் நிர்வாகிகள் கருதுவதனாலேயே, ஓதுவார்களும், கதாப்பிரசங்கம் செய்பவர்களும், புராணபடனம் செய்பவர்களும் வாழ்க்கைத் தொழிலாக வேறு கடமை பார்க்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

கலைஞர்கள் வாழ வேண்டும்; அவர்களது வாழ்க்கைச் செலவுக்கு உதவ வேண்டும் என்னும் மனோபாவம் உருவாக வேண்டும் என்பது ஆலய அறங்காவலர்கள் நன்கு அறிந்த உண்மையாகும்.

வேறு கடமை பார்ப்பவர்கள், கோயில் பூசை நடைபெறும் போது, தேவாரம் பாடுவதற்கு ஆயத்தமாகும் சூழ்நிலையே இன்று ஆலயங்களில் நடைமுறையில் உள்ள வழக்கமாகும். இதனால், பன்முறைப்படி பயின்றவர்கள் ஓதுவார்களாகத் தமது கடமையைச் செய்ய முடியாமைக்கு ஆலய அறங்காவலர்களது அலட்சிய பாவமே முக்கிய காரணமாகும்.

கோயில் வளர்த்த வாழ்வியல் கலைகளாகச் சிற்பம், ஓவியம், மங்கள வாத்தியம், அலங்காரம், சமையற் கலைகள் மட்டுமே இன்றுவரை சிறப்புற்றிருக்கின்றன என்பதை அறிந்தோம். கோயில் வளர்த்த கலைகளாக இசைக்கலையின் ஏனைய பகுதிகளான குரலிசை, கதாப்பிரசங்கக் கலை, பண்ணிசைக் கலை, நடனக்கலை ஆகியன 6ஆம், 7ஆம், 8ஆம் நூற்றாண்டிலும் 12ஆம், 13ஆம், 14ஆம் நூற்றாண்டிலும் கோயில்களின் ஆதரவைப் பெற்றிருந்தபோதும் இன்று கோயில்களால் அவை கைவிடப்பட்ட நிலையில் இன்று அருகிக் கொண்டு போகும் நிலைமாற வேண்டும். வாழ்வியற் கலைகள் அனைத்தையும் வளர்க்க ஆலய அறங்காவலர்கள் முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் அனைவரது கவனத்திற்கும் கொண்டு வருவதில் பெருமகிழ்வடைகிறேன்.

19ஆம் நூற்றாண்டில் இலங்கையிலும், இந்தியாவிலும் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி

கூ. துஷ்யந்
B.A. (Hons), Dip. in. Edu
மட்/மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலயம்

இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் சைவ சமய வளர்ச்சியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆறுமுக நாவலரின் காலமும் சூழ்நிலையும்

ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சியின் பின், 17ம் நூற்றாண்டு ஐரோப்பியரின் வருகை சைவசமயத்தில் ஓர் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தியது. இவர்கள் அவர்களது பண்பாட்டையும், மொழியையும் சுதேசி மக்களிடம் திணிப்பதற்காகப் பல விதமான அடக்கு முறைகளைக் கையாண்டனர். மிஷனரிமார்கள் ஈழ நாட்டிற்கு வந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதிலும், ஆங்கில மொழி மூலம் கல்வியை வளர்ப்பதிலும், சுதேசிய சமயத்துக்கு எதிரான பிராச்சாரங்களில் ஈடுபடுவதிலும் செயற்பட்டனர். ஆலயங்களும், பிறசமய நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. இவர்கள் ஆட்சியின் போதே பெருமளவு சுதேசிகள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே கந்தப்பருக்கும் சிவகாமிப்பிள்ளைக்கும் 1882.12.18 இல் ஆறுமுகநாவலர் பிறந்தார். இவருடைய பணிகளினால் சைவ சமயம் புத்துயிர் பெற்றது. சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற இலட்சியத்தில், ஈழத்தில் சைவ சமயம், கலாச்சாரம் புத்துயிர் பெறக் காரணமாக இருந்தார்.

ஆறுமுக நாவலர் மேற்கொண்ட பணிகள்

அ. சைவசமய மறுமலர்ச்சி

ஐரோப்பியர்களான மேலை நாட்டுக் கிறிஸ்தவர்களின் பண்பாடுகள் ஈழத்து சைவப் பண்பாடுகளுள் நுழைந்ததோடு. ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சியும், மிஷனரிமார்களின் கண்டனங் களாலும் சைவ சமயத்தைப் பின்பற்றியவர்கள் சிலர் கிறிஸ்தவத் திற்கு மதம் மாற்றப்பட்டனர். இவ்வேளையில் சைவ சமயத்தவர்கள் பெரும் சவாலை எதிர் நோக்கினர். நாவலர் இளமையில் கிறிஸ்தவ மிஷனில் கல்வி கற்று ஆங்கில மொழியையும் அறிந்து கொண்டார். பின்பு சைவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதைக் கண்டனம் செய்தார். கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக வக்கிர தண்டம், சுப்பிர பேதம், சைவ தூஷண பரிகாரம், ஞானக்கும்மி போன்ற கண்டன நூல்களைத் தொடுத்தார். அத்தோடு கோயிலதிகாரம், பிராமணீயம், வீரவணக்கம் முதலிய சக்திகளின் எதிர்ப்பினையும் சளையாது நின்று எதிர்த்துச் சைவத்தை எழுச்சி பெறச் செய்தார்.

தமிழ்க் கல்வி, மிக உயர்ந்த பேச்சாற்றல், சுயசிந்தனை யாற்றல், மனஉறுதி என்பனவற்றினால் சைவ நெறிக்கு ஏற்பட்ட இடர்களைக் களைந்து சைவத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.



1847 ஆம் ஆண்டு வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் சைவப் பிரசங்கங்களை நிகழ்த்தினார். சிவபக்தி, வேதாகமங்கள், சிவதீட்சை, தருமம், விழுமியங்கள் போன்ற பொருள்களில் அமைந்த பிரசங்கங்களாலே சைவசமயம் எழுச்சி பெறக் காரணமாக அமைந்தன. இவரின் பிரசங்கத்தின் சிறப்பு நோக்கி அவருக்கு நாவலர் எனும் பட்டத்தை திருவாவடு துறை ஆதினம் வழங்கியது.

சைவசமயக் கல்வியின் வளர்ச்சியினைக் குறித்து 1848இல் யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் சைவப் பிரகாச வித்தியா சாலையை அமைத்தார். தொடர்ந்து புலோலி, கோப்பாய் முதலான இடங்களிலும் சமயப் பாடசாலைகளை நிறுவினார். 1864இல் தமிழகத்திலுள்ள சிதம்பரத்திலும் ஒரு பாடசாலை இவரால் நிறுவப் பட்டது.

புலோலிநகர் பசுபதீஸ்வரர், கதிர்காமக் கந்தன் மீதும் பக்திப் பிரபந்தங்களைப் பாடியுள்ளதோடு. சைவசமய பால பாடப் புத்தகங்கள், சைவ வினாவிடை, சிவாலய தரிசன விதி போன்ற சைவ சமய நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டார். இதனால் சைவசமயம் எழுச்சி நிலை பெற்றது.

ஆ. கல்வி அபிவிருத்தி

இலங்கையில் சைவ சமயக் கல்வியின் வளர்ச்சியினைக் குறித்து யாழ்ப்பாணம், புலோலி, கோப்பாய், சிதம்பரம் போன்ற இடங்களில் சமயப் பாடசாலைகளை நிறுவினார். வண்ணார் பண்ணை, சிதம்பர வித்தியா சாலைகளில் 1ஆம், 2ஆம், 4ஆம் பாலர் பாடப் புத்தகங்கள், இலக்கணச் சுருக்கம், இலங்கைப் பூமிசாத்திரம், நியாயம், தர்க்கம், புவியியல், வரலாறு என்பனவும் போதிக்கப்பட்டன.

இவ்வாறான பாடசாலைக்குத் தேவையான நூல்களை ஆக்கி வெளியிடும் வகையில் இலங்கை வாழ் இந்துக்களுக்கென 1849இல் நல்லூரிலே வித்தியாநுபாலன இயந்திர சாலை என்ற பெயரில் ஓர் அச்சுயந்திரசாலையை நிறுவினார். இச்சாலையில் திருமுறையில் அடங்கிய அருட் பாடல்களும் வெளியிடப்பட்டன. பெரியபுராணம், மகாபாரதம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி போன்ற நீதி நூல்களுக்கான உரை நூல்களும், திருக்கோவையார், கந்தபுராணம், மறைசையந்தாதி, கோயிற் புராணம் போன்ற நூல்களைப் பிழையறப் பதிப்பித்தும் வெளியிட்டார்.

கல்வி – இம்மை, மறுமைப் பயன்களுக்குரியது என எடுத்துரைத்தார். இவருடைய கல்விப் பணியைப் பிற்காலத்தில் சைவ பரிபாலன சபையும் இவருடைய சீடர்களும் விரிவு படுத்தினார்கள்.

இ. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி

வித்தியாநுபாலனயந்திரசாலை எனும் அச்சகத்தை நிறுவித் தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். மகாபாரதம், ஔவையாரின் நீதி நூல்களுக்கும் உரை எழுதிப் பதிப்பித்தார். இவரால் மொழிக் கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. நவீன வசன நடையை இலக்கிய மரபில் உருவாக்கினார். இதனால் 'வசனநடை கைவந்த வல்லாளர்", "இக்கால உரை நடையின் தந்தை" எனப் போற்றப்படுகின்றார்.

பெரிய புராண வசனம், கந்த புராண வசனம், திருவிளை யாடற் புராண வசனம் போன்ற வெளியீடுகளும், திருச்செந்தினி ரோட்ட கய மகவந்தாதி, திருமுருகாற்றுப்படை, சைவசமயநெறி, கோயிற்புராணம், மருதூரந்தாதி எனும் சமயம் சம்பந்தமான செய்யுள் நூல்களுக்கு உரை கண்டவர். இவரது உரை நடை இலக்கியத்தில் தனித்துவமானது.

நன்னூல் விருத்தியுரை, சௌந்தரியலகரி உரை, திருக்கோவையார் உரை, மறைசையந்தாதி, குளத்தூர் அழுதாம்பிகை பிள்ளைத் தமிழ் போன்ற நூல்களைப் பிழையறப் பதிப்பித்தவர். சூடாமணி, நிகண்டு போன்ற நூல்களை பரிசோதித்தும் வெளியிட்டார். இதனால் "அக்காலப் பதிப்பாளர் மன்னன்" எனப் போற்றப்பட்டார். இவ்வாறு பழந்தமிழ் பதிப்பாசிரியர் என்னும் வகையில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.

ஈ. சமுதாயப் பணிகள்

1876, 1877 ஆம் ஆண்டுகளில் ஈழ நாட்டின் வடபகுதி உட்பட பல இடங்களில் ஏற்பட்ட கொடிய பஞ்சம் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இக்காலத்தில்தான் நாவலர் கஞ்சித் தொட்டிகளை அமைத்துத் தருமம் செய்தார். மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் வேளாண்மைச் சங்கம் நிறுவியமை, வழி வகை இல்லாத மாணவர்களுக்கு உணவும் உடையும் வழங்கியமை. அவரது சமூகப் பணிகளாகும்.

ஆறுமுகநாவலரின் பணிகள் சைவ சமய நிலைப் பேற்றுக்கும். சைவசமயக் கல்வி வளர்ச்சிக்கும், சைவ சித்தாந்தக் கோட்பாட்டு விருத்திக்கும் வழி வகுத்தன. எனவேதான் இலங்கைத் தமிழனின் சமய சமுதாய வரலாற்றிலே இவர் போற்றத்தக்கவராக விளங்குகின்றார். சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் நாவலரின் பணிகளை மேல்வருமாறு பாராட்டிப் பாடியுள்ளார்.

"நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே – அல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே பிரசங்கம் எங்கே
ஆத்தனறி வெங்கே அறை"

சுவாமி விபுலானந்த அடிகள்

விபுலானந்த அடிகளார் இலங்கையில் பல பாகங்களிலும், இந்தியத் தேசியத் துணைக் கண்டத்தின் பல பிரதேசங்களிலும், நற்பணி புரிந்த பெரியார் ஆவார். அவர் தமிழ்மொழி சைவசமயம், இந்துக்கல்வி விருத்தி ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கியவர். கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தின் தெற்கேயுள்ள காரைதீவில் 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் பிறந்தார். இவரின் பெற்றோர் சாமித்தம்பியும் கண்ணம்மையும் ஆவார்கள். இவரின் இளமைப் பெயர் மயில் வாகனம்.

இவர் இளமையில் வைத்தியலிங்க தேசிகர். குஞ்சித் தம்பி ஆகியோரிடம் கல்வி பயின்றார். விபுலானந்தர் சமயத்துறையில் ஈடுபட்டுச் சாதனைகள் பல நிலைநாட்ட இவர்களே அடித்தளம் அமைத்தனர் எனலாம். இவர் இளமையில் பெற்ற தமிழ்க் கல்விப் பயிற்சியை விருத்தி செய்து, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டித பரீட்சையில் சித்தியெய்திய முதல் இலங்கையர் என்ற பெயரை நிலை நாட்டினார். பின்பு ஆசிரியராக, அதிபராக விளங்கி

பல கல்விப் பணிகளைப் புரிந்தார். பிரபோதசைதன்னியர் என்னும் பிரமச்சரியம் பெற்று விளங்கிய இவர் 1924இல் துறவு நியமங்களில் பயிற்சி பெற்றபின் விபுலானந்தர் என்னும் பெயரினைப் பெற்றார்.

இவருடைய சமயப் பணிகள் அறிவூட்டல் பணிகளாகவே அமைந்தன. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடத்தல், பக்திப் பாசுரங்களை பாராயணம் செய்தல், வார இறுதியில் சைவ சமய வகுப்பு நடத்தல், பண்ணிசைப் பயிற்சி நடத்தல் முதலான சமயக்கல்வி முயற்சிகளில் ஈடுபட்டார். தெய்வங்களின் மீது பல பக்திப் பாடல்களைப் பாடினார். அவை தொடர்பாக இயற்றப்பட்ட பிரபந்தங்கள் வருமாறு, கணேச தோத்திரப் பஞ்சகம், கதிரை வம்சம்பதி காணிக்கப் பிள்ளையார் இரட்டைமணிமாலை, சுப்பிரமணிய சுவாமி மணிமாலை, குமரவேல் நவமணிமாலை, மகாலெட்சுமி தோத்திரம். மேலும் சமயப் பிரசங்கம் புரிதல், ஈழசேகரி, விவேகானந்தன், கலை மகள் இராமக்கிருஷ்ண விஜயம் போன்ற சஞ்சிகைகளில் சமயக் கட்டுரைகள் எழுதுதல் ஆகிய பணிகளையும் புரிந்தார். இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கிக் கருத்துரை வழங்கிப் பணி புரிந்துள்ளார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், கல்வி அபிவிருத்திக்கும் அடிகளார் புரிந்த பணிகள் போற்றத் தகுந்தவை. இளமையிலேயே பாரதம், நன்னூல், நிகண்டு, சூடாமணி, திருக்குறள் ஆகியவற்றை கற்றுப் பல செய்யுள்களை யாத்தார். அதனூடாகச் தமிழ் மொழியை வளப்படுத்தினார். தமது பன்னிரண்டாவது வயதில் குழந்தைப் புலவர் எனப்பெரும் பாராட்டுப் பெற்றார். கங்கையில் விடுத்த ஓலை, ஈசன் உவக்கும் இன்மலர்கள் என்பனவும் அடிகளாரின் உயரிய சிந்தனையின் விளைவாக உருவாகிய இலக்கியங்கள் ஆகும்.

மொழி பெயர்ப்பு பணிகள் மூலமும் தமிழ் மொழியைப் சிறப்படையச் செய்துள்ளார். கருமயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தரின் சம்பாசணை என்பன அடிகளார் மொழிபெயர்த்த நூல்களாகும். இவை தவிர ஆங்கிலப் புலவர்களின் படைப்புக்களும் தமிழ்மொழியில் பெயர்க்கப்பட்டது. நவ நீத கிருஷ்ண பாரதி பாடிய தனிச் செய்யுள்களின் தொகுப்பாகிய உலகியல் விளக்கம் என்னும் நூலின் பதிப்பாசிரியராகவும் பணிபுரிந்தார். இராமக் கிருஷ்ண சங்கத்தின் ஆங்கில மொழி இதழ்களான வேதாந்த கேசரி, பிரபந்த பாரதம் என்பவற்றின் ஆசிரியராகவும் பணி புரிந்து தமிழ் மொழி பற்றியும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவர் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்படுகின்றார். இவரால் எழுதப்பட்ட நூல்களுள் யாழ் நூல் மிகவும் பிரபல்யமானது. தமிழ் இசைக் கலை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக இந்நூல் விளக்கிக் கூறுகின்றது. அத்துடன் இலங்கைக் கல்வித் திணைக் களத்தின் பாடநூற்சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பவற்றின் உறுப்பினராக இருந்து ஆக்கபூர்வமான பணிகள் புரிந்துள்ளார். இந்திய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராகவும் கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மகாகவி பாரதியின் புகழைத் தமிழக மெங்கும் பரப்பினார்.

1925இற்குப் பின்னர் தென்னிந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய விபுலானந்தர் இராமகிருஷ்ண மிஷனின் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளை அமைத்தார். அவற்றுள் தனது குருநாதர் சிவானந்தர் பெயர் தாங்கிய மட்டக்களப்புச் சிவானந்த வித்தியாலயம், காரைதீவு சாரதா வித்தியாலயம், திருகோணமலை இந்துக்கல்லூரி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறு தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றிய அடிகளார் 1947இல் இம் மண்ணுலக வாழ்வைத் துறந்து புகழ் உடம்பு எய்தினார்.

"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டில் இந்துமத வளர்ச்சி

இந்தியாவில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட இந்துசமய வளர்ச்சிக்கு அக்காலத்தில் தோன்றிய சீர்திருத்த நிறுவனங்களின் எழுச்சியும் அதன் பணிகளும்தான் காரணம். தென் இந்திய வரலாற்றிலே ஐரோப்பியர்களுடைய வருகை இந்துசமயத்திலும், சமூகத்திலும் குறிப்பிடத்தக்க வகையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அந்நியரான இவர்கள் ஆட்சி, கிறிஸ்தவ மத ஆதிக்கம், ஆங்கிலக் கல்வி விருத்தி போன்ற செல்வாக்குகளாலும், இந்து சமூகத்திலும், சமயத்திலும் காணப்பட்ட குறைபாடுகளாலும் இந்துசமயம் வீழ்ச்சிநிலை கண்டது.

இவ்வாறான நிலைமைகளைத் தடுத்து நிறுத்தி சமூகக் குறைபாடுகளை இனம் கண்டு அவற்றை நீக்குவதன் மூலம் இந்து சமூகத்தை மேம்படுத்தவும், இந்து சமூகத்தில் உள்ள மூடப்பழக்க வழக்கங்கள், அறியாமை என்பவற்றை நீக்கி அறிவை வளர்த்து ஆன்மீக வளர்ச்சிக்குரிய வழிகளை அறியச் செய்யவும், சமத்துவம் பேணல், சமூக மேம்பாடு, சமயப் பொதுமை, ஆன்மீகப் பொதுமை, சமய சமரச நெறி, இந்துக் கல்வி விருத்தி போன்றவற்றை ஏற்படுத்தவும் பின்வரும் நவீன சீர்திருத்த வாதிகளும் அவர்களின் நிறுவனங்களும் தோற்றம் பெற்றன–

1.	ராஜாராம் மோகன் ராய்	–	பிரமசமாஜம்
2.	தயானந்த சரசுவதி	–	ஆரியசமாஜம்
3.	சுவாமி விவேகானந்தர்	–	இராமக்கிருஷ்ண மிஷன்
4.	மகாத்மா காந்தி		

1. ராஜாராம் மோகன் ராய் – பிரமசமாஜம்

நவீன சீர்திருத்த வாதிகளில் முதன்மையானவர். ஏனையவர் களுக்கு முன்னோடியானவர். இவர் 1774இல் இராமகான், தாரணி தேவி என்போருக்கு மகனாக வங்காளத்தில் பிறந்தார். இவர் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். சமஸ்கிருதம், அரபு, பாரசீகம், வங்காளம், லத்தீன், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற பிற சமயங்களின் மூலநூல்களைக் கற்றவர். இந்து சமயத்தின்

உபநிடதங்களை நன்கு கற்றறிந்தவர். 1811இல் இவரது மைத்துனியின் கணவன் இறந்த வேளை பலவந்தமாக உடன் கட்டை ஏறியதைக் கண்ட இவர் இந்துக்களின் சீர்திருத்தப் பாதைக்கு வழி கோலினார்.

ராஜாராம் மோகன்ராயின் சிந்தனைகளாலும், அயராத முயற்சியாலும் உருவாக்கப்பட்டதே பிரமசமாஜம் ஆகும். விக்கிரக வழிபாட்டை மறுத்து பிரமம் ஒன்றே உண்மை என்ற ஞான வெளிப்பாடாக கல்கத்தாவில் 1828இல் இந் நிறுவனத்தை ஸ்தாபித்தார். இந் நிறுவனத்தின் நோக்கம் ராஜாராம் மோகன்ராயின் முன்னோடிச் சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுப்பதாகவே அமைந்துள்ளது. உபநிடதங்களே மூலாதார மானவை அவற்றின் அடிப்படையிலேயே சமயசார சிந்தனை அமைய வேண்டும் என்பதே ராயின் சிந்தனை ஆகும். அச்சமய சிந்தனைகள் அறிவியல் நோக்கில் அமைய வேண்டும் என வலியுறுத்தினார்.

பிரம சமாஜத்தின் பணிகளை படிமுறையாக நோக்கலாம்

1. *உடன் கட்டை ஏறல் நிகழ்ச்சியைத் தடுத்தமை*

உடன் கட்டை ஏறுவதற்கு எதிராக 1818இல் பிரச்சாரத்தை ஆரம்பித்த இவர், 1829இல் வில்லியம் பென்ரிக் பிரபுவின் உதவியுடன், சதி எனும் தடைச் சட்டத்தின் மூலம் இச் சம்பிரதாயத்தைத் தடுத்தார்.

2. *திருமண முறைகளைச் சீர் திருத்தம் செய்தமை*

பலதாரத் திருமணம், பாலியல் விவாகம், விதவைகள் மறுமணம் செய்யாமை ஆகிய மூடக் கொள்கைகளுக்கு எதிராகப் பல சீர்திருத்தங்களை இந் நிறுவனத்தின் மூலம் முன் வைத்தார். பால்ய விவாகத்தை மறுத்துப் பெண் உரிமையையும், பெண் கல்வி கற்பதற்கான வாய்ப்பினையும் ஏற்படுத்தினார். ஆண்களின் பலதார திருமணத்தை, விதவைகள் மறுமணம் செய்யும் முறையை ஆதரித்தார். இதற்காக மனு, நாரதர், வியாசர், ஞாஞ்ஞியவல்கியர் ஆகிய மகான்களின் நூல்களில் இருந்து ஆதாரம் காட்டியிருந்தார்.

3. *சாதிப்பாகுப்பாட்டை வெறுத்தமை*

ராய் பிறப்பில் பிராமணராக இருந்தாலும் வர்ண தர்மங்களையும், ஆச்சிரம தர்மங்களையும் வெறுத் தொதுக்கினார். சாதிக் கட்டுப்பாட்டை வெறுத்து, வர்ண அமைப்பின் தீமைகளை எடுத்துக் காட்டி அவற்றை நீக்குவதற்கு வழி செய்தார்.

4. *விக்கிரக வழிபாட்டை மறுத்தமை*

கண்டதெல்லாம் தெய்வம் என்ற உடன்பாட்டை நீக்கி உபநிடதங்களில் கூறப்பட்ட நாமரூபமற்ற பிரம தத்துவத்தையே முழுமுதற் கடவுள் எனக் கருதினார். அதுவே உண்மை என்ற சிந்தனையைப் பிரமசமாஜத்தில் வலுப்படுத்தினார். மனித ஒழுக்கத்திற்கு வேண்டப்படாத வைதீகக் கொள்கைகளையும், பொருத்தமற்ற சடங்கு, கிரியை, விக்கிரக வழிபாடு என்பன விலக்கப்படல் வேண்டும் என்ற கருத்தினையும், செயல் நிலையையும் கொண்டிருந்தார்.

5. *இந்துக் கல்வி முறையை விருத்தி செய்தமை*

மேலை நாட்டு கல்வி முறையை இந்துக்களிடையே கொண்டு வரப் பாடுபட்டார். ஆங்கிலக் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவி அதனூடாக ஆங்கிலக் கல்வியை மக்களிடையே பரப்பினார். கலை, விஞ்ஞானம், கணிதம் போன்ற கல்வி முறைகளும் ஊட்டப்பட்டன. பெண்கல்விக்கும் பகுத்தறிவுச் சிந்தனைக்கும் முக்கியத்துவம் கொடுத்தார்.

6. *பலி கொடுக்கும் மரபினைத் தடுத்தமை*

ஆலய வழிபாட்டிலும், சமய நம்பிக்கைகளிலும், உயிர்களைப் பலியிடும் பழக்கத்தை மூடப்பழக்கம் எனக் கூறித் தடை செய்தார்.

7. *சமய சமரச சமத்துவ நிலையை ஏற்படுத்தியமை*

நித்திய கர்ம விதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து சமயம் இறைவனோடு கொள்ளும் தொடர்பை வேதம், உபநிடதம், கீதை எனும் நூல்களின் மூலம் விளக்கிக் காட்டினார். இந்து, கிறிஸ்தவம், பாரசீகம் போன்ற சமயங்களுக்கிடையில் கூட்டு வழிபாட்டை ஏற்படுத்தி சமய சமரசத்தை ஏற்படுத்தினார்.

ராஜாராம் மோகன் ராயின் சிந்தனைகளாலும் பிரம சமாஜத்தின் பணிகளின் செயற்பாட்டாலும் கேஷப் சென், சிவனாத் சாஸ்திரி, ஆனந்த மோகன் போஸ் போன்ற புதிய சிந்தனையாளர்கள் இவ் வியக்கத்துடன் இணைந்து கொண்டனர். பின்பு இந்திய பிரம்ம சமாஜம், தத்துவதோதினி சபை எனும் நிறுவனங்கள் கருத்து மோதல்களால் பிரிந்து இயங்கின.

2. தயானந்த சரஸ்வதி – ஆரியசமாஜம்

ஆரிய சமாஜத்தின் ஸ்தாபகரான தயானந்தர் மேற்கிந்தியாவிலே மோர்வி என்னும் கிராமத்தில் பிறந்தவர். அவருக்குப் பெற்றோர் மூலசங்கர் என்று பெயரிட்டனர். இளமைக் காலத்தில் தேசாபிமானமும், சமயாபிமானமும் மிகுந்தளவில் ஏற்பட்டன. சுவாமி விவேகானந்தரிடம் ஞானோப தேசம் பெற்றுத் துறவியாகி சீடரானார். தயானந்தர் 1875ஆம் ஆண்டு பம்பாயில் ஆரிய சமாஜத்தை நிறுவினார். 1977 இவ் இயக்கத்தின் இலட்சியங்களை வரையறை செய்தார். சத்தியார்த்த பிரகாசிகை எனும் நூலில் அவ் இலட்சியங்களைப் பத்துக் கட்டளைகளாக அமைத்து ஆரிய சமாஜத்தின் பணிகளைச் செயல்படுத்தினார். பத்துக் கட்டளைகளும் பின்வருமாறு–

1. கடவுள் ஞானத்தின் மூல காரணர், கடவுளின் பெயராலே எல்லாவற்றைப் பற்றியும் அறியப்படும்.
2. கடவுளே உண்மைப் பொருள். அது ஞானமயமானது. அழிவற்றது. எங்கும் நீக்கமற நிறைந்தது.
3. திருமறைகளைக் கற்பது, கேட்பது, போதிப்பது அவற்றிலடங்கிய கருத்துக்களைப் பரப்புவது ஆரியர்களின் கடமையாகும்.
4. உண்மையே பேச வேண்டும், பொய் மொழிகளைத் தவிர்க்க வேண்டும்.
5. செயல்கள் யாவும் தர்மம் சார்ந்தனவாக அமைதல் வேண்டும்.
6. மனித குலத்தின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், ஆன்மிக ஈடேற்றத்திற்கு வேண்டிய நற் கருமங்களைப் புரிதல் வேண்டும்.
7. உறவுகளில் அன்பு, நீதி ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.
8. அஞ்ஞானத்தை ஒழிக்க வேண்டும்

9. வாழ்க்கையில் சுயநலத்தை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.
10. சமுதாய நலன் பொருட்டு வேற்றுமைகளை அகற்ற வேண்டும்.

தயானந்தர் வைதிக சமயத்திலும், வேதங்களிலும் அளப்பரிய பற்றுக் கொண்டார். இந்துமத கோட்பாடுகள், நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள் அனைத்தும் வேதப்பாடல்களிலே உள்ளன எனக் கூறினார். திருமறையான வேதங்கள் பிரதிபலிக்கும் வாழ்க்கை முறையே உன்னதமானது என்றும் அதனை மீண்டும் சமுதாயத்திலே தோற்றுவிக்க வேண்டுமென்றும் தயானந்தர் கருதினார். நவீனகாலத்தில் பௌதீக ஞானத்துக்கு அடிப்படையான கோட்பாடுகள் வேதங்களில் உள்ளன என்பது தயானந்தரின் உறுதியான நம்பிக்கையாகும்.

தயானந்தர் உருவாக்கிய ஆரிய சமாஜம் ஒரு சமய சீர் திருத்த இயக்கம் என்ற வகையிலும், சமூக சீர்திருத்த இயக்கம் என்ற வகையிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. இந்து சமயத்தைப் பற்றிய தயானந்தரின் நோக்கு வேத சாரத்தைக் அடிப்படையாகக் கொண்டது. இளமையிலே சிவலிங்கத்தின் மீது எலி அசுத்தப்படுத்திய காட்சியை கண்ணுற்ற தயானந்தர் விக்கிரக வழிபாட்டை மறுத்தார். வேதங்கள் நாம ரூபஇலக்கணங்கள் இல்லாத கடவுளைப் பற்றிக் கூறுகின்றன. ஞான வடிவமான பரம்பொருளை உருவப்படுத்தி வழிபடுவது வேத வழி பாட்டுக்கு மாறுபட்டது எனக்கூறி உருவ வழிபாட்டை ஏற்க மறுத்தார். இவருடைய இச் சிந்தனைகள் ராஜாராம் மோகன்ராய் கூறியவற்றை ஒத்தவை யாகும்.

நவகால விஞ்ஞானத்திற்கும், அபிமானத்திற்கும், சமய சீர்திருத்தத்திற்கும் வேதம் சிறந்த மூலம் அதே போல் உபநிடதங்களும் மூலம் எனக் கருதினார். இதை அஞ்ஞானத்தின் காரணமாகவே இந்துக்கள் இதை அறியாது சீரழிகின்றனர் என்று கூறினார். இந்து தர்மத்தை புனருத்தாரணம் செய்ய வேண்டிய அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். சமகால தேவைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும் ஏற்ப தர்மம் பற்றி விளக்கம் அளித்தமை தயானந்தரின் சிறப்பான சாதனையாகும்.

விதவைகள் மறுமணம் புரியாமை, தீண்டாமை, பால்ய விவாகம், பிறசமயத்தவரை மதம் மாற்றி ஞானஸ் ஞானம் செய்தல், சதி எனப்படும் உடன் கட்டை ஏறுதல் போன்ற தீய பழக்கங்களையும், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் கொடுமைகளையும் தயானந்தர் மிக வன்மையாகக் கண்டித்தார்.

கல்வி விருத்தி பெறுவதன் மூலம் சமுதாயத்தில் அறிவு பெருகும் அதன் பயனாக சமூகம் உயர்ச்சி பெறும் என்பது தயானந்தரின் உறுதியான நம்பிக்கையாகும். இதன் பயனாக ஆரிய சமாஜம் கல்வித் துறையில் ஈட்டிய சாதனைகள் மகத்தானவை. வட இந்தியாவில் பாடசாலைகளும், கல்லூரிகளும் நூற்றுக் கணக்கில் உருவாக்கப்பட்டன. சமஸ்கிருதப் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டன. இந்திய மொழியை போதனா மொழியாகக் கொண்ட முதலாவது பல்கலைக்கழகம் ஆரிய சமாஜத்தால் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஹரிதுவாருக்குப் பட்டப்படிப்புக்கள் ஹிந்தி மொழியிலும் நடைபெற்றது.

ஆரிய சமாஜம் மேற் கொண்டுள்ள சமூக சேவைகளும் மிக முக்கியத்துவம் கொண்டவை. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஆதரவற்ற விதவைகள், சிறுவர்கள் அனைவரையும் அரவணைத்து, இல்லங்களை நடாத்தி வருகின்றன.

இந்தியாவின் பிரதான நகரங்களில் தனது இயக்கத்தின் பத்துக் கட்டளைகளைப் பிரகடனப்படுத்தி அதைப் பின்பற்றுவதற்கு சத்தியப்பிரகடனம் செய்தார். அவரது இயக்கம் இந்தியாவின் வடக்கு, மேற்குப் பகுதிகளில் பெரும் செல்வாக்குப் பெற்றது. பிற்காலத்தில் அதன் செல்வாக்குத் தென்பகுதியை நோக்கி நகர்ந்தது.

ஒரு சமய, சமூக சீர்திருத்தவாதி என்னும் முறையிலும் ராஜாராம் மோகன் ராய்யின் பணிகளை முன்னெடுத்துச் சென்றவர் தயானந்தர். இவர் உருவாக்கிய நிறுவனம் ஒரு சமய சமூக சீர்திருத்த இயக்கம் என்ற வகையிலே முன்னணி இயக்கமாக வளர்ச்சியுற்றது. இவருடைய கருத்துக்கள் சுவாமி விவேகானந்தருடைய சிந்தனைகளுக்கும் உடன்பாடாக அமைந்தன.

3. சுவாமி விவேகானந்தர் – இராமகிருஷ்ணமிஷன் / மடம்

பிறப்பும் சூழலும்

இந்துசமய வரலாற்றில் சுவாமி விவேகானந்தருக்கு முக்கியமானதொரு இடமுண்டு. இந்தியாவில் உள்ள கல்கத்தாவில் விஸ்வநாதத்தருக்கும் புவனேஸ்வரிக்கும் 1863. 01. 12ஆம் திகதி மகனாகப் பிறந்தார். இவரின் இளமைப் பெயர் நரேந்திரநாதன். இளமையிலே கடவுள் மீது பக்தி கொண்டவராக வளர்ந்தார். கடவுள் பற்றிய சிந்தனைகளை மனதிலே வளர்த்து அக்கடவுளைக் காண ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் சென்று அவருக்குச் சீடராகி அவரிடம் ஞான உபதேசம் பெற்று இளமையிலே துறவு நிலையை மேற்கொண்டு சுவாமி விவேகானந்தர் என்ற பெயரைப் பெற்றார். பின்பு இராமகிருஷ்ண மடம் எனும் நிறுவனத்தை ஸ்தாபித்துச் செயலாற்றினார்.

இந்துசமய மறுமலர்ச்சிக்குப் புரிந்த பணிகள்

இந்து சமயத்தின் நோக்கம், சமூக வாழ்வை ஒதுக்குவதாக அமையக் கூடாது. சமயமானது சமயத் தொண்டாகி மலர வேண்டும் என்ற கருத்தை வலிறுத்திப் பணியாற்றிய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும். ஸ்ரீ இராம கிருஷ்ணரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்த இவர், குருவின் ஆத்மீக செய்திகளைப் பரப்பி இந்துசமயத்தை மறுமலர்ச்சியடையச் செய்தார்.

மேல்நாட்டு மோகத்தில் சிக்கியிருந்த இந்தியர்களுக்கு அவர்களது ஆன்மிக பாரம்பரியச் சிறப்பினை உணர வைக்க வேண்டும் என உறுதி பூண்டார். 1893 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் அகில உலக சமயங்களின் மகாநாடு அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடந்தது. சிகாகோ பேருரையில் சுவாமிகளின் "அமெரிக்க சகோதர, சகோதரிகள்"என்ற விழிப்பு அனைவரது வரவேற்பையும் பெற்றது. இதனூடாக உலகில் இந்துமத சகோதரத்துவத்தினை நிலை நாட்டினார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தங்கியிருந்து தனது சொற்பொழிவுகள் மூலம் இந்துமத அறிவினை மேற் உலகிலும் பரவச் செய்தார். இதனூடாக இந்துமதத்தின்

உலகளாவிய போக்கினை வலியுறுத்தி இந்துக்களிடையேயும் சமயங்களுக்கிடையேயும் சமரச சன்மார்க்க நெறியினை வளர்த்தார்.

இராமகிருஷ்ண போதனைகளை இந்து சமுதாயத்தில் பரப்ப சுவாமி அவர்கள் இராமகிருஷ்ண மிஷனை உருவாக்கிப்ள பல சமுதாய, கல்விப் பணிகளை மேற்கொண்டார். இப் பணிகள் இந்து சமய மறுமலர்ச்சிக்கு உரமூட்டியன. பஞ்சம், வெள்ளம், பூமியதிர்ச்சி, நிலச்சரிவு, தொற்றுநோய், தீ முதலிய துன்பகரமான நிகழ்வுகள் ஏற்பட்ட போது அவற்றால் மக்கள் படும் துன்பங்களைத் தவிர்க்க இவ் இயக்கம் முன்னின்று உழைத்தது. வைத்தியசாலைகளையும், மருந்தகங்களையும் நிறுவி இலவசமாக மருத்துவ உதவிகளை செய்தது. அனாதரவற்றவர்களை ஆதரிக்கும், அவர்களின் வாழ்வில் அக்கறை செலுத்தும் அன்பு இல்லங்களாகவும் விளங்கி வருகின்றது. இவ்வாறு மனிதாபிமான சேவைகளைப் புரிந்து வருகின்றது. கல்வி வளர்ச்சியில் இந் நிறுவனம் அக்கறை கொண்டு பல இந்துப் பாடசாலைகளை நிறுவிக் கல்வியூட்டல் வழங்கியதோடு சமய, தியான வகுப்புக்கள். துறவுப் பயிற்சிகள் என்பவற்றையும் அரசியல் சார்பில்லாத வகையில் மேற்கொண்டு சுவாமிகள் இந்து சமயத்தினை சர்வதேச மட்டத்தில் பேசச் செய்தார்.

இந்தியாவில் மடம், ஆசிரமம், இல்லம், திருமறைச்சங்கம் முதலிய அமைப்புக்களைக் குருவின் பெயரில் உருவாக்கி அங்கு ஞானதீட்சை, வித்தியாரம்பம் முதலிய பாரம்பரியமுடைய துறவிகளான சந்நியாசிகளின் மரபுகளை இந்து சமுதாயத்தில் ஏற்படுத்தி அதனூடாகத் துறவின் உன்னத நிலையை உலகறியச் செய்தார்.

சுவாமியின் வேதநெறி விளக்கம்

வேதம், உபநிடதம், கீதை போன்ற தத்துவ சாஸ்திரங்களைத் துறைபோகக் கற்றார். அவற்றின் சாராம்சங்களை அருள் உரைகளினால் விளக்கினார். ஆங்கிலம், வங்காளம், சமஸ்கிருதம் ஆகிய பன்மொழியறிவு கொண்டவராகவும், உபநியாயசத் திறமை உள்ளவராகவும் விளங்கினார். இளமையிலே துறவு வாழ்க்கையைக் கடைப்பிடித்த இளமைத் துறவி எனப் போற்றப்படுகின்றார். இவ்வாறான வாழ்வு நெறியினூடாகத் துறவியர் சந்நியாச மார்க்கங்களைப் பரப்பியவர். பிரமச்சரியத்தினைத் தம் வாழ்வில் திறம்படக் கடைப்பிடித்தவர்.

வேத, உபநிடத, கீதை கூறும் ஒரு கடவுள் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டவர். ஆயினும் விக்கிரக வழிபாட்டைக் கண்டனம் செய்யவில்லை. வழிபாட்டில் அது ஏற்புடையது என ஏற்றுக் கொண்டார். அமெரிக்காவில் சிகாகோப் பேருரையில் நடந்தவை அனைத்தும் வேத நெறியின் சாரமே ஆகும். வேத சிந்தனைகளை மேலைத் தேயங்களில் பரப்பியவர். அவற்றை ஆங்கில மொழிமூலம் பல நூல்களிலும் வெளியிட்டவர். இதனால் வேதாந்த சிங்கம், நவயுக சங்கரர், நவீன வேதாந்தி எனப் போற்றப்பட்டார்.

இந்துமதம் வேத சிந்தனைகளால் கட்டப்பட்டது. இந்துக்களின் வாழ்க்கை, சமயம், கல்வி, ஒழுக்கம், தத்துவம் போன்றவற்றில் வேத சிந்தனைகளே அடங்கியுள்ளன. இந்துமதம் சனாதனதர்மம் என்பதைத் தமது வாழ்வினில் நின்று வெளிப் படுத்தியவர்.

சமய நிறுவனங்கள் - இராமக்கிருஷ்ண மிஷன்

இராமகிருஷ்ணரின் சிந்தனைகளையும், போதனைகளையும் இந்து சமுதாயத்தில் பரப்ப அவருடைய சீடராகிய சுவாமி விவேகானந்தரால் செயல் வடிவம் கொடுக்கப்பட்டு ஸ்தாபிக்கப் பட்ட நிறுவனமே இராமகிருஷ்ண திருமறைச்சங்கம் எனப்படும். இதற்கான விதையை இவர் சிகாகோ பேருரையில் இட்டார் எனக் கூறுவது பொருந்தும். இந்தியாவில் பேலூர் மடத்தை கேந்திர தலைமைப் பீடமாகக் கொண்டு இந்தியாவின் பல பாகங்களிலும் அதன் கிளை நிறுவனங்கள் செயற்பட்டன. இவ்வாறான நிறுவனத்தினூடாக இந்துக்களின் சம சிந்தனைகளுக்குக் கவர்ச்சிகரமான நவீன விளக்கத்தை அளித்ததோடு, தமது கொள்கைகளையும், சிந்தனைகளையும் சாதனைப்படுத்தும் வண்ணம் இராமகிருஷ்ண மிஷனைத் தேசிய மட்டத்திலும் உருவாக்கினார்.


இந் நிறுவனம் உருவ வழிபாடு, பக்தி, இறை ஆராதனைகள், ஆன்மீகப் பயிற்சிகள் போன்றவற்றிற்கு முதன்மை வழங்கியது. ஆன்மீகப் பயிற்சிகளாக பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகள், தியானம் முதலியவற்றை நடாத்தியது. குறிப்பாக இளமைத் துறவிப் பயிற்சிக்கு முதன்மை வழங்கியது. துறவியர் சம்பிரதாயம் பேணிப் பாதுகாக்கப்பட்டது. அரசியல் சார்பற்ற ஆன்மீகச் சிந்தனைகளை வளர்க்கும் நிறுவனமாகச் சேவையாற்றி வருகின்றது.

வேத, உபநிடத, கீதையின் பக்தி யோகம், கரும யோகம், ஞான யோகச் சிந்தனைகள் போதனைகளாகவும் இடம் பெற்றன. புதிய வேதாந்தக் கருத்துக்களாகவும் கூறப்பட்டன.

பிரமவாதின், பிரபுத்த பாரதா, உத்போதன் முதலான பத்திரிகைகள் நூல்கள் என்பன வெளியீடு செய்யப்பட்டன. சமூக சேவைகளினூடாகச் சமயப் பணிகளும் மேற் கொள்ளப்பட்டன. இந்துப் பாடசாலைகள் நிருவகிக்கப்பட்டன. மருந்தகங்கள் நிறுவப்பட்டன. அனாதை புகல் இடங்கள் நிருவகிக்கப்பட்டன. இந்துக் கல்வியூட்டல், உயர் கல்வியூட்டல், சமய அறிவை மேம்படுத்தல், ஆதரவற்றவர்களுக்கு உதவுதல், கலைகளுக்கும் தொழிலுக்கும் வழிகாட்டல் போன்ற சமய, சமரச நோக்கின் அடிப்படையில் சமுதாய சேவைகள் புரிகின்றது இத் தொண்டு நிறுவனம்.

மக்கள் ஒவ்வொருவரும் சுதந்திர உணர்ச்சியுடனும், துணிவுடனும் இருக்க வேண்டும் என இந்திய சமூகத்தை விழிப்புணர்ச்சி பெறச் செய்வதில் விவேகானந்தரின் வீர உரைகளும் இந் நிறுவனத்தில் இணைந்தே செயற்படுகின்றது. "எழுமின் விழிமின் குறிசாரும் வரை ஓயாது உழைமின்"

தற்காலத்தில் உலகின் பல பாகங்களிலும் இந் நிறுவனத்தின் செல்வாக்குண்டு. இலங்கையிலும் அவற்றின் செல்வாக்குப் பரந்துள்ளது. கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் நிறுவப்பட்டு சமூகத் தேவையை யொட்டிப் பல பணிகள் புரிந்து வருகின்றது.



உலகில் இந்து மக்களின் பரம்பல்

ஒரு குடிப்புள்ளியியல் நோக்கு

பேராசிரியர். கா. குகபாலன்
தலைவர், புவியியற்துறை
யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

இந்துமதம் வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமயமாகும். அதற்கு வைதீகம் எனவும் பொருள் கொள்வர். இம்மதம் காலத்தால் முற்பட்டது. ஆதியானது உலக சமயங்களுக்கெல்லாம் முதற்சமய மாகவும் தாய்ச் சமயமாகவும் விளங்குகின்றது. ஆதிமனிதன் கடவுள் என்ற ஒரு பரம்பொருள் உண்டு என எப்போது உணர்ந் தானோ, அப்போதே சைவம் என்னும் நெறியும் உருவாகியது என்பர். இந்துசமயவாதிகள், இதனால் இம்மதம் 25000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது எனக்கொள்வர்.

இந்து என்ற பதம் சிந்து என்பதிலிருந்து பிறந்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும், 'சிந்து' என்ற நதி வடி நிலப்பகுதியை முதலில் சுட்டிக் காட்டியிருந்த போதிலும், காலப்போக்கில் இந்தியப் பிரதேசத்தையே சுட்டுமளவிற்கு விரிவு பெறலாயிற்று.[1] அதாவது இந்து என்ற சொல் காலப்போக்கில் பாரதநாடு முழுவதற்குமுரிய சமய பண் பாட்டு நெறிகளைக் குறிக்கும் பொதுச்சொல்லாக வழங்கப் பெற லாயிற்று. உலகில் உள்ள ஏனைய சமயங்கள் எக்காலத்தில் யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதை வரலாற்று மற்றும் அவ்வச் சமய நூல்கள் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால் இந்து சமயம் தோன்றிய காலத்தையோ அல்லது தோற்றுவித்தவரையோ கணிப் பிட்டுக் கூறவியலாத நிலையினாலேயே இம்மதம் ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் என்கின்றனர். வட இந்தியாவுக்கு ஆரியர் உள்வருகை கி. மு. 1500 ஆண்டுக் காலமாகவிருக்கலாம் எனவும் சிந்துவெளி நாகரிகம் அதற்கு முன்னரேயே காணப்பட்டி ருக்கின்றது என ஆய்வாளர்களிடையே எந்தவித கருத்து வேறு பாடும் இல்லை. எனவேதான் கி. மு. 2400 ஆண்டுகளுக்கு முற்பட்டி ருக்கலாம் என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. கி. மு. 1500 – கி. மு. 500ஆம் ஆண்டுக் காலப்பகுதியை வேத காலம் என்றும் அதற்கு முற்பட்ட காலத்தைச் சிந்துவெளி நாகரிக காலம் என்றும் வரலாற்றறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இந்நாகரிக காலத்துக்கான கிடைக்கப்பெற்ற தடயங்கள் ஹரப்பா மொகஞ்சதாரோ போன்ற இடங்களில் பெறப்பட்டுள்ளதையும் நினைவு கூரல் சிறப்புடைத்து.[2]

உலகில் எல்லாச் சமயங்களில் உள்ள சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்துசமயம் அதன் உபகூறுகளான அறுவகைச் சமயங்களையும் அவற்றின் உட்பிரிவுகளையும் தன்னகத்தே கொண்டு விரிவுபெற்றுள்ளது. இந்துநதி வடிநிலத்தில் வாழ்ந்த மக்களின் சமயமான இந்து, பரந்த இந்தியா முழுவதும் பரந்து மக்கள் மயப்படுத்தப்பட்டதுடன் காலப்போக்கில் தென்கிழக் காசிய நாடுகளிலும், மேற்காசியா, மற்றும் மேலை நாடுகளிலும் கிளை பரப்பி உலகச் சமயமாக மிளிர்ந்து வருகின்றது. இந்துசமயத்தின் தாயகம் தென்னாசியப் பிரதேசமேயெனினும் உலகின் பல பாகங்களிலும் கிடைக் கப்பெற்றுள்ள புதைபொருள், ஆய்வின், பிரகாரம் உலகில் பெரும் பாலான பிரதேசங்களில் சிவவழிபாடு காணப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஐக்கிய

அமெரிக்காவில் கொலராடோ ஆற்றைச் சார்ந்த குன்று ஒன்றில் 10000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஈஸ்வரன் கோயில் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தாலியில் 5000 ஆண்டு பழைமை வாய்ந்த சிவலிங்கமும் அலெக்சாந்திரியாவில் 120 அடி உயரமான சிவலிங்கமும் காணப்படுவதாகத் தெரியவருகின்றது.[3] இவை தவிர சீனா, மெக்சிக்கோவிலும் சிவவழிபாடு சிறப்புற்றிருந்ததாக புதைபொருள் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகில் மதப்பரம்பல்

மதம் ஒருவனை நல்வழிப்படுத்தும் சாதனம். இதற்கமைய உலகில் வாழும் மக்களில் பெரும்பாலானோர், தமது பாரம்பரிய, மற்றும் விருப்புக்கேற்ப மதங்களைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இந்த வகையில் உலகில் வாழும் மக்கள் எவ்வவ் மதங்களைச் சார்ந்தவர்கள் என்பதை, அட்டவணை 1 விளக்குகின்றது. உலகில் இந்து மதம் ஆதியும் அந்தமும் இல்லாத மதமான போதிலும் தற்போது மக்கள் நேசிக்கும் நிலையில் நான்காவது பெரிய மதமாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 1

உலகில் மத அடிப்படையிலான குடித்தொகை 1996 (மில்லியன்)

மதங்கள்		எண்ணிக்கை	சதவீதம்
1.	கிறிஸ்தவம்	1783.8	33.1
2.	இஸ்லாம்	950.7	17.7
3.	சமயசார்பற்றவர்	884.5	16.4
4.	இந்து	719.3	13.4
5.	பௌத்தம்	309.1	5.2
6.	நாத்திகர்	236.8	4.4
7.	சீனப்பழங்குடிச் சமூகம்	183.6	3.4
8.	புதிய சமயத்தவர்	140.8	2.6
9.	பழங்குடிச் சமயத்தவர்	94.0	1.7
10.	சீக்கியர்	18.5	0.3
11.	மானிஸ்ட், கன்பூசியஸ் பஹாய், ஜைனர் மற்றும் சிறுமதத்தினர்	44.0	1.0
	மொத்தம்	5385.3	100.0

ஆதாரம் : Manorama Year Book 1998

இந்துமதத்தவர்களின் பரம்பல் கோலங்கள்

நீண்ட பல காலமாக மக்களை நல்வழிப்படுத்திய இந்து சமயத்தை சார்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் உலகளாவிய பரம்பற் கோலத்தை ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்குதல் சிறப்பானதாகும். (பின்னிணைப்பு – 1 இனைப் பார்க்கவும்)

- வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்து சமயம் தழைத் தோங்கிய நாடுகளில் இந்துமக்களின் பரம்பல் (இந்தியத் துணைக் கண்டம்).
- தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்து மக்களின் பரம்பல்.
- குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல். I
- குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல். II
- சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல்.

என்பனவே அவையாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து இந்து சமயம் தழைத் தோங்கிய நாடுகளில் இந்து மக்களின் பரம்பல் (இந்தியத் துணைக் கண்டம்)

ஆதியும் அந்தமும் இல்லாத இந்து சமயமானது காலத்துக்குக் காலம் செழிப்புடனும் சோர்வுடனும் காணப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கும் ஆய்வாளர்கள், கஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும், இடையில் வாழ்ந்து வந்த வெள்ளைத் தோலுடைய ஒரு சமூகத்தினர் அங்கு இயற்கை மாறுபாட்டினால் பொருளாதார நிலையில் நலிவுறுவே, ஒரு சாரார் ஐரோப்பா நோக்கிச் செல்ல, மறுசாரார் பாரசீகத்திற்குச் சென்றும் அதனைத் தொடர்ந்து, ஹைபர் கணவாயூடாக இந்தியாவின் வடமேற்குப் பிரதேசங்களைச் சென்றடைந்தனர் என அறியத்தருகின்றனர். இவர்களே ஆரியர் என அழைக்கப்பட்டனர்.[4] இவர்களின் வருகைக் காலத்தில் இந்தியாவில் நாகரிகம் படைத்த மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் எனவும் ஆய்வு செய்வோர் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றனர். இதற்குச் சான்றாக மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களும் ஆரியரின் பழைய பாடங்களான வேதங்களும் சான்றுகளாக உள்ளன. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் கி. மு. 3000 – 2000 வரையிலானது. எனவே ஆரியரின் வருகைக்கு முன்பிருந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், தெய்வங்கள், கிரியை முறைகள் என்பன ஆரியரினால் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதைக் காணமுடிகின்றது. அக் காலத்தில் வாழ்ந்த தமிழர்களால் பின்பற்றப்பட்டு வந்த தத்துவ ஞானங்களையும் அவர்கள் சிறிது சிறிதாக அறியத் தொடங்கினர்.[5] ஆரியர் சமூகம் யாகம் புரிவதிலிருந்தும் தத்துவஞானக் கொள்கை யுடையதாக மாறிக் கொண்டும் சைவ சித்தாந்தத்தை நெருங்கியும் வரலாயிற்று. இதனை உறுதிப்படுத்துவதற்குச் சங்கரர், இராமானுஜர், மாதவர், நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரது உரைகள் சான்றாகவுள்ளன.[6]

ஹரப்பா, மொகங்சதாரோ தொல்பொருள் ஆய்வின்போது இந்து சமயத்தின் விக்கிரகங்கள், கட்டிடங்கள், கோயில்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். சேர் ஜோன் மார்சலும் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் சிந்துவெளியில் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழைமையேயாகும் என்கின்றார். சிவபெருமான் தென் முகக் கடவுளாகவிருந்து சனகாதி நான்மறைகளை அருளிச் செய்தார் என்னும் ஐதீகம் இந்துசமயத்தவர்களிடையே தொன்று தொட்டு நம்பப்பட்டு வருகின்றது. இவ்வைதீகத்திற்கும் சிந்து வெளியில் காணப்பட்ட முத்திரைகளின் வடிவத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. எனவேதான் நான்மறைகளும் ஆகமங்களும் ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னரேயே இருந்துள்ளன என அனுமானிக்கின்றனர். சமய ஆய்வாளர்கள், இத்தகைய நீண்ட பராம்பரியத்தைக் கொண்ட சிவனை அக்கால மக்கள் ஆலமர், செல்வன், முக்கண்ணன், பெருந்தேவன் எனப்பல பெயர்

கொண்டு வழிபட்டனர். எனவே சிவனே முதலிடம் பெற்று விளங்கினார் என்பதைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தெரிவிக்கின்றன.[7]

இந்தியத் துணைக்கண்டத்தில் வரலாற்றுக் காலங்களில் வாழ்ந்தவர்கள் மற்றும் வெளிப்பிரதேசங்களில் இருந்து உள்வந் தோர்களின் வணக்கத்திற்குரிய சமயமாகவிருந்த இந்துசமயம் சோதனைக்குள்ளானது. இந்துமக்களிடையே பௌத்த சித்தாந்தம் முன்வைக்கப்படவே அதில் விசுவாசம் கொண்டு பலர் பௌத்தத் தைத் தழுவினர். இதற்கு அக்கால அரசுகளும் ஆர்வமூட்டும் வகையில் நடந்துகொண்டன. ஆரியர்கள் கி. மு. 322இல் மௌரியப் பேரரசை உருவாக்கினர்.[8] பிரபல்யம் வாய்ந்த மௌரிய அரசனான அசோகன் (கி. மு. 269 – 232) அரச மதமாக பௌத்தத்தை அங்கீ கரித்தார். இம்மதம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டுவரை சிறப்பிடம் பெற் றிருந்ததாக அறியமுடிகின்றது. இம்மன்னன் காலத்திலேயே இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை உட்பட அயல்நாடுகளிலும் செல்வாக்கினைப் பெற்றிருந்தது. ஆனால் குப்தர் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 320 – 550) மன்னர்கள் இந்துக்களாகவும் மக்களில் கணிசமானோர் பௌத்தர்களாகவும் இருந்தனர். காலப் போக்கில் அரசர்கள், வள்ளல்கள், ஆதரவு பௌத்தத்திற்குக் குறைந்தபோது பௌத்தம் நிலைகுலையத் தொடங்கவே மீண்டும் இந்துசமயம் தன்னிடத்தைப் பெற்றுக் கொண்டது.[9]

இஃது இவ்வாறிருக்க கி. பி 711ஆம் ஆண்டு இந்தியாவுக்குள் தற்போது பாகிஸ்தான் நாடாகவுள்ள பிரதேசத்தினை அராபியர் படையெடுத்துக் கைப்பற்றினர். 1325 வரை வட இந்தியாவில் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தி மக்களில் ஒரு பகுதியினரைத் தம்மதம் சாரவைத்தனர். ஆனால் முகம்மது பின் துக்ளக் (கி. பி. 1325 – 1351) தற்போதைய கேரள மாநிலம் உட்பட தென்னிந்தியப் பகுதி களைக் கைப்பற்றினான். எனினும் அதன் பின்னர் இஸ்லாமியப் பேரரசு பலமிழக்கத் தொடங்கியது. இஸ்லாமியர் இந்தியத் துணைக் கண்டத்தைக் கைப்பற்றிய காலத்திலிருந்து இந்துக்களை விவாகத்தின் வாயிலாகவும் மதமாற்றம் காரணமாகவும் தம்மதம் சாரச்செய்தனர். எவ்வாறெனினும் இந்து சமயத்தை மக்கள் மனங் களிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. எனினும் இஸ்லாமியர் ஆட்சியின் போது ஆப்கானிஸ்தான், பேர்சியா, மத்திய ஆசியப் பகுதியிலிருந்து கலாசாரம், இலக்கியம், கட்டிடக் கலை, இராணுவ நடவடிக்கைகளை இந்தியத் துணைக் கண்டத்தில் புகுத்தினர். அதன்பின் மேலைநாட்டினர் இந்துசமயம் தோன்றிய பகுதிகளில் தம்மதங்களைத் திணித்தனர். இருப்பினும் இந்தியப் பெருநிலப் பரப்பில் கிறிஸ்தவம் உள்ளிட்ட மதங்கள் பெருமளவிற்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றே கூறல் வேண்டும்.[10]

தென்னாசிய நாடுகளில் இந்துசமயம்

தென்னாசிய நாடுகளில் இந்தியா, நேபாளம், வங்காளதேசம், இலங்கை, பூட்டான், பாகிஸ்தான் ஆகியவற்றில் இந்துசமயம் நிலைபெற்றுள்ள போதிலும் பாகிஸ்தான் வங்காளதேசம் ஆகிய வற்றில் இஸ்லாம் மதமும் பூட்டானிலும் இலங்கையிலும் பௌத்த மும் பெரும்பாலான மக்களால் போற்றப்படும் மதங்களாகவுள்ளன. இருப்பினும் இந்துமதம் சார்பு ரீதியாக விருத்திபெற்றுள்ளது.[11]

உலகிலேயே இந்துமதத்தை அரசமதமாக ஏற்றுப் போற்றிவரும் ஒரே நாடு நேபாளமாகும். உலகில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டாவது நிலையில் உள்ளது. இந்நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 91.0 சதவீதத்தினர் இந்துக்களாவர். ஏனையோர் பௌத்தர்களும், இஸ்லாமியர்களுமாவர். பௌத்தர் நாட்டின் வடபகுதியிலும் இஸ்லாமியர் தென்பகுதியிலும் தொட்டம் தொட்டமாக வாழ்ந்து வருகின்றனர்.[12]

உலகில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் நாடு இந்தியா வாகும். இங்கு 1991ஆம் ஆண்டில் 806.4 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். மொத்தக் குடித்தொகையில் 82.4 சதவீத மானவர்கள் இந்துக்களே, இந்நாட்டில் பல்லின, பல மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருவதனால் மதச்சார்பற்ற கொள்கை யினை அரசு கடைப்பிடித்து வருகின்றது.

அட்டவணை 11

இந்தியாவின் மதப்பரம்பல் 1991 (சதவீதத்தில்)

மதம்	சதவீதம்
இந்துக்கள்	82.4
இஸ்லாமியர்	11.7
கிறிஸ்தவர்கள்	2.3
சீக்கியர்	2.0
பௌத்தர்	0.8
ஜயின்	0.4
ஏனையோர்	0.4
மொத்தம்	100.0

Source : Census of Inndia 1991

இந்தியாவில் நாடு முழுவதும் இந்துக்கள் பரவலாக வாழ்ந்து வருகின்ற போதிலும் வட கிழக்குப் பிரதேசங்களிலும் வடக்கே ஜம்முகாஸ்மீர் மாநிலத்திலும் குறைவான பரம்பலைக் கொண்டி ருக்கின்றது. ஒரிசா, மத்திய பிரதேசங்களிலும் இமாலயப் பிரதேசத்திலும் இந்துக்கள் செறிவாகவுள்ளனர். இந்தியாவின் குடித்தொகையில் 10.0 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்புக் கருதி அப்போதைய பிரித்தானிய நாடுகளுக்கும் 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் விருத்திபெற்ற நாடுகளுக் கும் இடம்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். ஆரம்பகாலங்களில் இலங்கை, மலேசியா, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் பின்னர் அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.[13]

உலக நாடுகளில் இந்துக்கள் அதிகமாக வாழும் நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்தை வங்காளதேசம் பெற்றுள்ளது. இங்கு 14.44 மில்லியன் இந்து சமயிகள் வாழ்கின்றனர். நாட்டின் மொத்தக் குடித்தொகையில் முஸ்லீம்கள் 86.6 சதவீதத்தினரா கவும், இந்துக்கள் 12.1 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். 1947இல் இந்தியா சுதந்திரத்திற்கு முன்னர் வங்காளதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாகவிருந்துள்ளது. பாகிஸ்தானின் ஒரு அலகாக உருவாக்கப்பட்ட பின்னரும் கூட பெருமளவில் இந்துக்கள் இந்தியாவுக்குள் இடம்பெயரவில்லை. தற்போது அந்நாட்டில் சிறுபான்மையினராக வாழ்ந்துவருகின்றனர்.[14]

இந்தியத் துணைக்கண்டத்தில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் நான்காவது நாடு இலங்கையாகும். 2001ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் 2.8 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் மொத்தக் குடித் தொகையில் 13.2 சதவீதத்தினராகவுள்ளனர். குடிக்கணிப்புக்குட் படாத மாவட்டங்களில், மாவட்டச் செயலகங்களில் கணிப்பிடப்பட்டி ருந்த இந்துக்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு மதிப்பிடப்பட்டது. இலங்கையில் இந்துக்களின் பரம்பல் இந்தியப் பெருநிலத்தின் இந்துக்களின் பரம்பலோடு மிகவும் தொடர்புடையது. அசோக மன்னன் இலங்கையில் பௌத்தத்தை அறிமுகம் செய்த காலத்தில் இந்துக்களே வாழ்ந்திருக்க வாய்ப்புண்டு. காலப்போக்கில் அவர்களில் ஒருசாரார் பௌத்தத்தைத் தழுவிக் கொண்டனர். பின்னரும் கூட இந்தியாவின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கு இலங்கையின் இந்துக்களின் பரம்பலைத் தீர்மானித்திருக்கின்றன என்பதில் சந்தேகமேயில்லை. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட இந்தியத் தமிழர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாகவிருந்துள்ளனர்.[15] 2001ஆம் ஆண்டுக் குடித்தொகை கணிப்பீட்டின் படி நுவரெலியா மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 52.0 சதவீதமானவர்கள் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.[16] இலங்கையில் இந்துக்கள் அதிகமாக வாழும் மாவட்டம் யாழ்ப்பாணமாகும். இதற்கடுத்து மட்டக்களப்பு, நுவரெலியா, கொழும்பு மாவட்டங்களாகத் தொடர்கின்றன.

அட்டவணை 111

இலங்கையில் மதப்பரம்பல் 2001 (சதவீதத்தில்)

மதம்	சதவீதம்
பௌத்தம்	71.2
இந்து	13.2
இஸ்லாம்	7.7
கிறிஸ்தவம்	7.6
ஏனைய மதங்கள்	0.3
மொத்தம்	100.0

ஆதாரம் : 1) இலங்கைக் குடிக்கணிப்பு அறிக்கை 2001
2) வடக்கு கிழக்கு மாகாண இந்துக் குடித்தொகை மதிப்பிடப்பட்டவை

இந்தியத் துணைக்கண்டத்தில் பாகிஸ்தானில் 1.6 மில்லியன் இந்துக்களே வாழ்ந்துவருகின்றனர். இது அந்நாட்டின் குடித்தொகையில் 1.1 சதவீதமாகும். இந்நாடு இஸ்லாமியர் படை யெடுப்பின் பின்னர் முழுமையாக இஸ்லாமிய மயப்படுத்தப்பட்ட பிரதேசமாகவிருந்தது ஒருபுறமிருக்க 1947ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தானிய பிரிவின் போது கணிசமான இந்துக்கள் இந்தியாவுக்குள் இடப்பெயர்வினை மேற்கொண்டதால் இந்நாட்டில் இந்துக்களின் பங்கு குறைவாகவேயுள்ளது.[17]

பூட்டானில் பௌத்த சமயத்தினரே அதிகமாக வாழ்ந்து வரினும் நாட்டின் குடித்தொகையில் 23.0 சதவீதத்தினர் இந்துக் களாவர். இந்தியத் துணைக் கண்டத்திற்கு அண்மையில் உள்ள ஆப்கானிஸ்தானில் இரண்டரை இலட்சம் இந்துக்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றுக் காலங்களில் இப் பிரதேசங் களில் இந்துக்கள் வாழ்ந்துள்ளனர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[18] தலிபான் ஆட்சியில் பௌத்த சின்னங்களை அழித்துள்ளனர். இஸ்லாமியர் இப்பிரதேசங்களைச் சென்றடைந்த காலங்களில் பௌத்தம் செழுமையாகவிருந்துள்ளது எனவும் முன்னர் வாழ்ந்த இந்துக்களே பௌத்தர்களாகி இருக்கலாம் எனவும் வரலாற்றாய்வாளர்கள் கருத்தாகவுள்ளது.

தென்கிழக்காசியப் பிரதேசங்களில் இந்துக் களின் பரம்பல்

இந்துசமயத்தின் தோற்றுவாய் இந்தியப் பெருநிலமாகவிருக்கின்ற அதேவேளை இம்மதத்தைத் தம்மதமாக ஏற்று அதன் வழி ஒழுகிய மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் சிறப்பாக இந்தோனேசியத் தீவுகள் உள்ளிட்ட தென்கிழக்காசியப் பிரதேசம் என்பது வெள்ளிடை மலை. பரந்துபட்ட பூமியில் காலத்துக்குக் காலம் நிலப்பிரதேசங்களை கடல் கொண்டதாகப் புவியியல் மற்றும் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆசியாவோடு இணைந்த இந்தோனேசியாவை உள்ளிட்ட பெருநிலப்பரப்பு நாளடைவில் கடல் கொண்டுவிட்டதால் மிகுதிப்பகுதி இன்றைய நிலப்பரப்பாகக் காணப்படுகின்றது. எனவே இப்பிரதேசங்களில் வரலாற்றுக் காலங்களிலிருந்து இந்துக்கள் வாழ்ந்திருக்கலாம் எனவும் அவர்கள் தம் பரம்பரையினரே இந்தோனேசியா உள்ளிட்ட பிரதேசங்களில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற இந்துக்கள் எனக்கொள்பவர்களுள் உளர்.[19] எனினும் தொல்லியலாளர்கள் உட்பட ஆய்வுத்துறையினர் இந்துமதம் இந்தியாவிலேயே தோற்றுவிக்கப்பட்டது என உறுதிபடத் தெரிவிக்கின்றனர். இதற்கு ஆதாரமாக கி. மு. 1500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹைபர் கணவாயூடாக இந்தியாவுக்கு வந்த ஆரியர்களுக்கு அக் காலத்தில் காணப்பட்ட திராவிட நாகரிகம், கட்டடக்கலை, சிற்பக் கலை போன்ற பலவற்றைக் கண்டு அதிசயிக்க வைத்தது எனக் கூறப்படுகின்றது. எனவே இந்தியப் பெருநிலத்தில் இந்துசமயம் வளர்ச்சியும், விருத்தியும் பெற்றதன் பின்னரே ஏனைய பிரதேசங் களுக்கு விரிவு பெற்றது எனக் கொள்வதே பொருத்தமானதாக விருக்கும்.[20]

கி. பி. 3–5ஆம் நூற்றாண்டுப் பகுதியில் இந்திய வரலாற்றில் மௌரிய குப்த ஆட்சிகள் வட இந்தியாவில் செழிப்புற்ற காலப் பகுதிகளிலும் தென்னிந்தியாவில் சோழர், பாண்டியர் ஆட்சிகள் செழிப்புற்ற காலப்பகுதிகளிலும் கம்போடியா, வியட்னாம் மற்றும் ஜாவா, சுமாத்திரா, போர்னியோ, சரவாக் உட்பட இந்தோனேசியா வுக்கும் இந்துக்கள் சென்று குடியேறியுள்ளனர் எனவும் ஒரு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.[21]

இந்தோனேசியத் தீவுகளில் இஸ்லாமியர் வருகைக்கு முன்னரே இந்துக்களும் பௌத்தர்களும் வாழ்ந்து வந்ததற்கு போதிய சான்றுகள் உள்ளன. ஏறத்தாழ கி. பி முதலாம் நூற்றாண்டளவில் பண்பாட்டில் மேலோங்கியிருந்த இந்தியாவோடும், சீனாவோடும் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த நாடு இந்தோனேசியாவாகும். இந்நாட்டு மன்னர்கள் இந்தியச் செல்வாக்கைத் தம் அரண்மனைக்குள் இறுகிப்பற்றினர். கி. பி. முதலாம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து இந்தோனேசியாவுக்கு வந்த

இந்து வர்த்தகர்கள் இந்து மதத்தை இந்தோனேசியாவில் பரப்பினார்கள் எனவும் கூறப்படுகின்றது. இந்திய வர்த்தகர்கள் புடைவை வகைகளைக் கொண்டுவந்து பண்டமாற்றாக ஜாவா போன்ற தீவுகளில் விளைந்த நெல்லினை எடுத்துச் சென்றனர் எனவும் யாவா என்ற பெயரைக்கூட இந்தியர்களே சூட்டினர் எனவும் அறியக்கிடக்கின்றது.[22]

மிக நீண்ட காலமாக இந்துக்கள் வாழ்ந்து வருவதற்கான வரலாற்றுச் சான்றுகள் இந்நாட்டில் அதிகமுள்ளன. சுமத்திரா தீவில் தமிழ் நாட்டின் செல்வாக்கு அதிகமாக இருந்துள்ளது. சேர, சோழ, பாண்டிய, கலிங்க மற்றும் மலையாள செல்வாக்கு குறிப்பாக இடப்பெயர்கள் கூட இன்றும் வழக்கிலுள்ளன. அத்துடன் Dieng Plateau என்ற இடத்தில் கி. பி. 675இல் சிவன்கோயில் கட்டப்பட்டது என்றும் இதுவே மிகப்பழமையான கோயில் எனவும் கூறப்படுகின்றது. சரவாக்கில் ஐந்து பஞ்சபாண்டவர் கோயில்கள் உள்ளன. அவை திராவிட சிற்பக்கலையை ஒத்ததாக இருக்கின்றது. மேற்கு போர்னியாவில் Sungei Tekatik ஆற்றுக்கரை யிலுள்ள சுவர்களில் உள்ள கல்வெட்டுக்கள் இந்துசமயத்தின் சிறப்பை எடுத்துக்கூறியுள்ளது. 9ஆம் நூற்றாண்டு இறுதிவரை தென்னிந்தியாவில் கட்டப்பட்ட கோயில்களின் சுவர்களில் சுட்ட மண்ணும் சுண்ணாம்பும் கலந்த கலவைத் தன்மையை இங்கும் காணமுடிகின்றது. எனினும் 10ஆம் நூற்றாண்டின் பின்னர் இந்து சமயத்தோடு இணைந்த இந்தியத் தொடர்பு குறைவடைய லாயிற்று.[23]

இஸ்லாமியரின் ஆதிக்கம் நிலைபெறவே பௌத்த, இந்து சமயங்கள் தமது நிலையிலிருந்து தளரத் தொடங்கின. இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத பௌத்தர்களும் இந்துக்களும் பாலித்தீவிற்குச் சென்று, இங்கு வாழ்ந்துவந்த இந்துக்களோடும் பௌத்தர்களோடும் இணைந்து கொண்டனர். இவர்கள் இன்றுவரை இந்து தர்மத்தையும் சித்தாந்தத்தையும் பின்பற்றி வருகின்றனர். இத்தீவிலுள்ள பெரியகோயில் திரிமூர்த்தி கோயிலாகும். இங்கு வாழும் மக்கள் இயற்கைப் பொருட்களை கடவுளாக எண்ணி வழிபடும் பண்பையும் காணமுடிகின்றது. இங்குள்ள கோயில்களில் இறைவனின் சிலையோ அன்றில் இறைவியின் சிலையோ இல்லை. உருவ வழிபாட்டினைக் காணமுடியாது. கோபுரங்களோ கற்கூரையால் வேய்ந்த மண்டபங்களையோ காணமுடியாது. மக்கள் ஈஸ்வரன், விஷ்ணு, பிரமா ஆகிய தெய்வங்களை வணங்குகின்றனர். மகேஸ்வரன் தான் அவர்கள் போற்றித் துதிக்கும் முழு முதற் கடவுளாகும். கோயிலின் உட்பிரவாகத்தில் கர்ப்பக்கிரகம் உள்ளது. இதனுள் சிவலிங்கம் மட்டுமே உள்ளது. இக்கர்ப்பக்கிரகம் எப்போதும் பூட்டியிருக்கும். விழாக் காலங்களில் மட்டும் உருவ வழிபாடு நடைபெறுகின்றது. பாலித்தீவில் இந்து மதத்தினை மக்கள விசுவாசத்துடன் நேசிக்கின்றனர்.[24]

உலகில் நான்காவது பெரிய இந்துக்கள் வாழும் நாடு இந்தோனேசியாவாகும். பாலித்தீவில் இந்துக்கள் பற்றி எழுதும் ஆர்வலர்கள் அங்கு10.0 – 15.0 மில்லியன் இந்துக்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர். எனினும் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்படும் அறிக்கையில் 2000ஆம் ஆண்டில் 5.2 மில்லியன் இந்துக்களே இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நாட்டின் மொத்தக் குடித் தொகையில் இந்துக்கள் 2.2 வீதமாகும். இதன் உண்மை நிலையை அறிதல் அவசியமாகின்றது.[25] பாலித்தீவில் மட்டும் பெரியதும் சிறியதுமாக 4661 கோயில்கள் இருப்பதாக J. S. Swellengrebel என்னும் அறிஞர் கணிப்பிட்டுள்ளார்.[26]

தென்கிழக்காசிய நாடுகளில் இந்தோனேசியாவுக்கு அடுத்து அதிக இந்துக்களைக் கொண்ட நாடுகள் பர்மாவும், தாய்லாந்து மாகும். சிறிய எண்ணிக்கையினர் வரலாற்றுக் காலங்களிலிருந்து வாழ்ந்துவரினும் கடந்த நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதிகளில் இந்தியாவிலிருந்து தொழில் தேடிச்சென்றவர்களின் பரம்பரை யினரே அதிகம் உளர். பர்மாவில் 7,0ம,000 இந்துக்களும் தாய் லாந்தில் 1,40,000 இந்துக்களும் வாழ்ந்துவருகின்றனர். இவர் களைத் தவிர வியட்னாம், கம்பூச்சியா, பிலிப்பைன்ஸ், புரூணை போன்ற நாடுகளில் எண்ணிக்கையில் குறைவாகவே வாழ்ந்து வருகின்றனர்.[27]

குடியேற்றவாத ஆட்சியும் இந்துமதமும்

இந்துமதத்தவர்கள் செறிவாக வாழ்ந்து வந்த இந்தியப் பெரு நிலப்பரப்பில் காலத்துக்குக்காலம் சோதனைகளும் வேதனைகளும் ஏற்பட்டன. குறிப்பாக முஸ்லீம்களின் உள்வரவினால் இந்துக்கள் மதமாற்றப்பட்டமையைத் தொடர்ந்து மேலைத் தேசத்தவர்களின் உள்வரவினால் கிறிஸ்தவ சமயங்களை மக்கள் மத்தியில் பரப்பு வதற்கு பெருமுயற்சியெடுத்தனர். இதன் விளைவாக தென்னாசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, இலங்கை நாடுகளில் இந்து, பௌத்தர்களில் கணிசமானோரைத் தம்மதத்துடன் இணைத்தனர். உதாரணமாக 1620ஆம் ஆண்டு யாழ்ப்பாணக்குடா நாட்டில் 52,000 மக்களைக் கத்தோலிக்க மதத்தைத் தழுவச் செய்தனர் என வரலாறு கூறுகின்றது.[28]

குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் - 1

15ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதிகளிலிருந்து மேலைத்தேசவர்களின் நாடு காண்படலம் ஆரம்பமாகின்றது. இக் காலத்தில் கிழக்காசியப் பிராந்தியத்தில் முஸ்லீம்களின் ஏகபோக வர்த்தகத்தைத் தம்வசப்படுத்தியது மட்டுமல்லாது புதிய நிலப் பகுதிகளையும் சேர்த்துக் கொண்டனர். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் பிரான்சியர் எனப்பல மேலை நாட்டினர் ஆசியா, ஆபிரிக்கா, வடதென் அமெரிக்கப் பகுதிகளில் புதிய நிலத் தேட்டங்களைதைத் தேடிக்கொண்டனர். இவர்களின் மூலாதாரக் கொள்கையானது கிடைக்கப்பெறும் பொருளாதார வளங்களைப் பெற்றுக்கொள்வதுடன் தாம் சார்ந்த மதங்களைக் கைப்பற்றிய பிரதேச மக்களிடம் புகுத்துவதுமாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட மதங்களில் பிரதானமானவை இந்துவும், பௌத்தமுமாகும்.[29]

இவ்வாறான நிலையில் குடியேற்றவாதம் மேலோங்கிக் காணப்பட்ட காலப்பகுதியில் ஆபிரிக்காவிலிருந்து கறுப்பினத் தவர்களை அடிமைகளாக அமெரிக்கர் தமது குடியேற்றங்களுக்குக் கொண்டு சென்றனர். 1834ஆம் ஆண்டு அடிமை வர்த்தகம் சட்ட ரீதியாக தடைசெய்யப்பட்டதன் விளைவாக ஐரோப்பியர் குறிப்பாக பிரித்தானியக் குடியேற்றவாட்சி நாடுகள் பலவற்றில் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை, கனிப்பொருள் அகழல், பொது வேலைப் பகுதியை விருத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுத்தும் நோக்கில் குறைந்த சம்பளத்தில் வேலை செய்யக்கூடிய இந்தியர்களைக்

கொண்டு சென்றனர். குயானா, சூரினாம், ரினிடாட், டொபொகோ, பிஜி, மொரிசியஸ், தென்னாபிரிக்கா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளே அவைகளில் சிலவாகும். இவர்களில் கணிசமானோர் காலத்துக்குக்காலம் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்ட போதிலும் எஞ்சியோர் அவ்வவ் நாடுகளையே தமது தாய்நாடாகக் கொண்டனர். இவ்வாறு அழைத்துச் சென்றவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாவர். சென்றவிடங்களில் தமது பண்பாட்டினைக் கடைப்பிடித்து வந்துள்ளனர். இதன் விளைவாக இந்து மதம் புதிய நாடுகளைச் சென்றடைந்தது எனலாம். குயானா நாட்டுக்கு 1838ஆம் ஆண்டிலும் டினிராட் டொபோக்கோவுக்கு 1845இலும் சூரினாம், ஜமேக்காவுக்கு 1873இலும் பிரித்தானியர் இந்துக்களை அழைத்துச் சென்றனர். தற்போது குயானா நாட்டின் குடித் தொகையில் 28 சதவீதத்தினராகவும் டினிராட்டில் 25 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். இவர்கள் காளி, மாரியம்மன் முதலிய கடவுளர்களை வணங்குகின்றனர். குயானாவில் காளியம்மனை வழிபட்டால் அம்மை, கொலரா நோய்கள் தம்மைத் தீண்டாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றனர்.[30]

அவுஸ்திரேலியாவுக்கு மிகச் சமீபமாகவுள்ள பிஜித்தீவில் கரும்புத் தோட்டத்தில் தொழில் புரியச் சென்றவர்கள் அந்நாட்டின் அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றனர். 1990இல் மகேந்திரசௌத்ரி என்ற இந்தியர் பதவியேற்றதும் அதனைத் தொடர்ந்து சுதேசிய மக்களால் புரட்சிச்சதி மேற்கொள்ளப்பட்டுப் பதவியிறக்கப்பட்டதும் அரசியல் வரலாற்று நிகழ்வாகும். 1874இல் பிஜித்தீவைக் கைப்பற்றி 1877இல் கரும்புத் தோட்டங்களை அமைக்கத் தொடங்கவே 1879இல் இருந்து இந்தியர்களை அழைத்துச் சென்றனர். இங்கு 3,80,000 இந்துக்கள் வாழ்ந்து வருகின்றனர்.[31] இதே போலவே மொரிசியஸ் நாட்டிற்கு இந்துக்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களைப் போலவே இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிற்கும் இந்துக்கள் அழைத்துச் செல்லப் பட்ட போதிலும் அவ்வவ் நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக ஒரு பகுதியினர் மீண்டும் தாய்நாடு திரும்பிவிட்டனர். இலங்கையில் 1821ஆம் ஆண்டு 12.0 சதவீதமாகவிருந்த இந்துக் களின் பங்கு 1901ஆம் ஆண்டு 23.2 சதவீதமாக அதிகரித்தி ருந்தது. இதற்கு இந்தியத் தமிழர்கள் உள்வந்ததே காரணமாகும்.[32]

குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் - II

குடியேற்றவாத ஆட்சியில் இரண்டாம் கட்ட இந்துக்களின் இடப்பெயர்வானது பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டின் முதலரைப் பகுதிகளில் நிகழ்ந்துள்ளது. இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து ஆபிரிக்கா நாடுகளுக்கும் ஏற்கனவே பிரித்தானியரால் அழைத்துச் செல்லப்பட்ட இந்தியர்கள் வாழும் நாடுகளுக்கும் சிறிய வர்த்தகர்களாகவும் கடைச் சிப்பந்திகளாகவும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் மேற்பார்வையாளர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் கட்டுமானப்பணியினை மேற்கொள்பவர்களாகவும் கென்யா உகண்டா, தன்சானியா போன்ற கிழக்காசிய நாடுகளுக்கும் சயர், மாலாவி, சம்பியா போன்ற மத்திய ஆபிரிக்க நாடுகளுக்கும் கானா, நைஜீரியா, சியராலியோன் போன்ற மேற்காபிரிக்க நாடுகளுக்கும் செல்லும் பண்பினை இக்காலத்தில் காணக்கூடியதாயிருந்தது. இவர்களில் பெரும்பாலானோர் குஜராத் மாநிலத்தின் கரையோரப் பிரதேசம் சார்ந்தவர்களே முன்னணியில் இருந்தனர். இவர்கள் காலப் போக்கில் பொருளாதார வலுவுடையவர்களாகினர். இதனால் அவ்வவ் நாடுகளில் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததுடன் தாம் சென்றடைகின்ற பிரதேசங்களில் இந்துக் கோயில்களையும் கட்டினர். உதாரணமாகக் கென்யாவின் பொருளாதாரத்தில் 20.0 சதவீதத்திற்கு அதிபதிகளாகினர். இவர்கள் நைரோபியில் பிரமாண்டமான சிவன் கோயிலையும் 1927இல் இந்து சங்கம் ஒன்றையும் அமைத்து சமயப்பணியினை மேற்கொண்டு வாழுகின்றனர். கென்யாவின் துறைமுக நகரில் 1904இல் சிவன் கோயில்களையும் அமைத்துள்ளனர்.[33] இக்காலப்பகுதியில் இடைத்தரத் தொழில்களுக்கு இந்துக்கள் சென்றடைந்த நாடுகளில் சிறப்புறப் பொருளாதாரத் தேட்டத் தினைப் பெற்றுக்கொண்டதன் விளைவாகப் பல நாடுகளின் அரசுகளும் சுதேச மக்களும் வெறுப்படைந்தனர். பல நாடுகள் அவர்களை வெளியேற்றுவதற்குச் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளமை ஒருபுறமிருக்க வன்முறைகளின் மூலமும் பொருளாதாரத்தை நலிவடையச் செய்யவும் முயற்சிகளும் தொடர்கின்றன. உதாரணமாக உகண்டா, இலங்கை போன்ற நாடுகளில் இவர்களை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குறிப்பிடலாம். இதனால் ஒரு பகுதியினர் தாயகம் திரும்ப மற்றொரு கல்வியுடன் கூடிய பொருளாதார வசதி படைத்தோர் மேற்கு ஐரோப்பிய நாடு களுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். உதாரணமாக பிஜித்தீவில் 1988இல் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் 55.0 சதவீதமாகவிருந்த இந்துக்கள் உட்பட இந்தியர்கள் 1990இல் 45.0 சதவீதமாகக் குறைவடைந்ததற்குச் சுதேச மக்களின் கடும் எதிர்ப்பே காரணம் எனலாம்.

சமகால இந்துக்களின் பரம்பலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

ஐரோப்பியர் தமது குடியேற்றவாத நாடுகளைப் படிப்படியாக இழந்து அந்நாடுகளுக்கு அரசியற் சுதந்திரத்தினை வழங்கிய காலப்பகுதி சென்ற நூற்றாண்டின் பின்னரைப் பகுதியாகும். பின் தங்கிய பொருளாதார வர்த்தகம், கல்வி, தொழிற்தேட்டம் கருதியும் அரசியல் அடக்குமுறைகளுக்குப் பயந்தும் விருத்திபெற்ற மேலை நாடுகளுக்கான இடப்பெயர்வினை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விடப்பெயர்வு தற்காலிக நிரந்தர, நிரந்தர இடப்பெயர்வாகவும் பலதரப்பட்ட தன்மைகளைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளுக்கு முறையே 1.8 மில்லியன், 1.2 மில்லியன் இந்துக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.[34] இவர்களில் கணிசமானோர் பொறியியலாளர், வர்த்தகர்கள், மருத்துவர்கள், தொழில்நுட்பவிய லாளர்கள், விஞ்ஞானிகள், கணனிப் பொறியியலாளர்கள் போன்ற பலதரப்பட்டவர்களாகவுள்ளனர். இதேபோலவே ஏனைய விருத்திபெற்ற நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

உயர்கல்வி, உயர்தொழிலாற்றல் பெற்றவர்கள் உட்பட இடைத்தர மற்றும் ஆரம்பக்கல்வியுடன் கூடியவர்களில் தற்காலிக இடப் பெயர்வு மத்திய கிழக்கு நாடுகளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்தியா, இலங்கை போன்ற

நாடுகளிலிருந்து முறையே 25,00,000, 200,000 இந்துக்கள் இந்நாடுகளில் தொழில் செய்து வருகின்றனர். இவர்களது ஒப்பந்தகாலம் முடிவடைய மீண்டும் தமது நாடுகளுக்குத் திரும்பிவிடுகின்றனர். இவ்விடப்பெயர்வு தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் செயற்பாடாகவுள்ளது.

1960களைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகள் குடியேற்றவாட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றவேளை அவ்வவ் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி, பண்பாட்டு விருத்தியைக் கருத்திற் கொண்டு இந்தியா, இலங்கை, மலேசியா, நேபாளம் போன்ற நாடுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொழில்வாய்ப்பைப்பெற அங்கு சென்றனர். அவர்களில் பலர் காலப்போக்கில் தமது பொருளாதாரத் தேட்டத்துடன் மேற்கு ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு நிரந்தர குடியிருப்பாளர்களாகச் சென்றுவிட்டனர்.

உள்நாட்டு அரசியற் பிரச்சினைகள் தாம் வாழ்ந்த நாடுகளில் இருந்து சர்வதேச நாடுகளுக்கு இடம்பெயர வைத்துள்ளது. பிஜி, இலங்கை, கிழக்காபிரிக்க நாடுகள் போன்றவற்றிலிருந்து விருத்தி பெற்ற நாடுகளுக்கு அரசியற் தஞ்சம் – அதனைச் சாட்டாகக் கொண்டு தொழில்வாய்ப்புப் பெறவெனச் சென்றுள்ளனர். பிஜியில் பூர்வீகக்குடிகளில் நெருக்கல் காரணமாக அந்நாட்டில் வாழ்ந்துவந்த இந்துக்களில் வசதி படைத்தோர் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு இடப்பெயர்வை மேற்கொண்டுள்ளனர்.

1970களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் இடம் பெற்றுவரும் இன விடுதலைக்கான ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் விளைவாக இந்தியாவுக்கு 160,000 மக்களும் விருத்திபெற்ற நாடுகளுக்கு 600,000 மக்களும் இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் தவிர தொழில் வாய்ப்புக்கருதி ஏறத்தாழ 200,000 பேர் மத்தியகிழக்கு உட்படப் பல நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களே ஆவர். இவர்கள் கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, சுவிற்சலாந்து, நோர்வே, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளைத் தெரிவுசெய்து அந்நாடுகளில் தற்காலிக மற்றும் நிரந்தரப் பிரஜைகளாக வாழ்ந்துவருகின்றனர். இலங்கையிலிருந்து அண்மையில் சென்றவர்கள் தாம் சென்றடைந்த நாடுகளில் தொடர்ச்சியாக இந்து மதத்தினைப் பின்பற்றுவதுடன் கோயில் கட்டி திருவிழாக்களைச் செய்து வருகின்றனர். பிரித்தானியாவில் ரூட்டிங்கில் முத்துமாரி அம்மன், விம்பிள்டனில் பிள்ளையார், ஈஸ்ட்காமில் முருகன், மகாலட்சுமி, ஈலிங்கில் துர்க்கையம்மன், லூசியத்தில் சிவன், வோல்தமஸ்டோவில் கற்பகவிநாயகர், பத்திரகாளியம்மன், ஆர்ச்வேயில் முருகன், அல்பேட்டனில் ஈழபதீஸ்வரர், ஸ்ரோர்ன்லியில் இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயில்களையும் கனடாவில் முருகன், பிள்ளையார், சிவன், துர்க்கையம்மன், ஐயப்பன் கோயில்களையும் கட்டி வழிபடுகின்றனர்.[35] அத்துடன் நின்றுவிடாது ஈழத்தில் எவ்வெப் பிரதேசங்களிலிருந்து சென்றார்களோ அவ்வப் பிரதேசங்களிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களின் பெயர்களை வைத்து வணங்குகின்றனர். ஐக்கிய அமெரிக்காவில் இந்தியர்களும், இலங்கையர்களும் தனித்தும் இணைந்தும் கோயில்கள் கட்டி வழிபாடு செய்கின்றனர். இதே போலவே அவுஸ்திரேலியாவில், சுவிற்சலாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் ஈழத்தவர்களும் இந்தியர்களும் கோயில்கட்டிப் பெருவிழாக் கொண்டாடுகின்றனர். குறிப்பாக சீசெல்ஸ் என்ற இந்து சமுத்திரத்திலுள்ள சிறியதீவில் வாழ்ந்துவரும் 300 இந்துக்கள் ஒன்றுகூடி அருள்மிகு நவசக்தி விநாயகர் கோயிலமைத்துக் கும்பாபிஷேகத்தினை அண்மையில் நடாத்தி மலர் ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[36]

முக்கியமான நாடுகளில் இந்துக்கள் பரம்பல் 2000

நாடுகள்	இந்துக்கள்	நாட்டின் மொத்தக் குடித்தொகையில் இந்துக்களின் பரம்பல் (வீதம்)
வரலாறுக்கு முற்பட்டகாலங்களிலிருந்து சமயம் தழைத்தோங்கிய நாடுகளில் மக்களின் பரம்பல்		
இந்தியா	806366000	76.0
நேபாளம்	21115600	91.0
வங்களாதேசம்	14435000	10.0
இலங்கை	2817000	13.2
பூட்டான்	493000	23.0
பாகிஸ்தான்	1616000	1.1
ஆப்கானிஸ்தான்	243800	0.6
தென்கிழக்காசியப் பிரதேசத்தில் இந்து மக்களின் பரம்பல்		
இந்தோனேசியா	5225000	2.2
பர்மா	700000	1.0
வியட்னாம்	4000	–
கம்போடியா	3000	–
தாய்லாந்து	140000	0.2

பிலிப்பைன்ஸ்	2000	–
புறூனை	2000	–
மலேசியா	1500000	7.0
சிங்கப்பூர்	200000	6.0
குடியேற்றவாத இடப்பெயர்வுடன்கூடிய இந்துக்களின் பரம்பல் – I		
மொரிசியஸ்	900000	46.0
பிஜி	380000	42.0
தென் ஆபிரிக்கா	990000	2.0
குயானா	400000	37.0
சூரினாம்	200000	28.0
ரினிபிட் மற்றும் ரபோசா	350000	25.0
ஜமேக்கா	8000	25.0
குடியேற்றவாத இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல் – II		
கென்யா	70000	–
உகண்டா	17000	–
தன்சானியா	20000	–
மடகஸ்கார்	1000	–
எதியோப்பியா	2000	–
நைஜீரியா	20000	–
பொடஸ்சுவானா	5000	–
சிம்பாவே	4000	–
மாலாவி	2000	–
சம்பியா	10000	–
கானா	5000	–
சமகால இடப்பெயர்வுடன் கூடிய இந்துக்களின் பரம்பல்		
ஐக்கிய அமெரிக்கா	1800000	–
கனடா	600000	–
ஐக்கிய இராச்சியம்	1200000	–
ஜேர்மனி	40000	–
பிரான்ஸ்	50000	–
சுவிற்சலாந்து	60000	–
அவுஸ்திரேலியா	80000	–
நோர்வே	12000	–
நியூசிலாந்து	40000	–
நெதர்லாந்து	9000	–
பெல்ஜியம்	5000	–
ஸ்பெயின்	15000	–
டென்மார்க்	5000	–
போர்த்துக்கல்	15000	–
ரஷ்யா	10000	–
ஹொங்கொங்	60000	–
யப்பான்	5000	–
இஸ்லாமிய நாடுகளில் இந்துக்களின் பரம்பல்		
சவுதி அரேபியா	5000	–
குவைத்	10000	–
பஃரெயின்	15000	–
கட்டார்	5000	–
ஐ. ஏ. ஈ	16000	–

Source :

1. World Comparative National Statistics
2. Vishwa Mangal Hetavl
3. Encyclopedia Britanica, I.nc p. 778.

அடிக்குறிப்புக்கள்

1. கந்தையாபிள்ளை. க. சி; (1960) இந்துசமய வரலாறு, புரோகிரசிவ் அச்சகம், சென்னை. பக 2–6
2. இராசமாணிக்கனார். மா; (1955) சைவசமயம், செல்வி பதிப்பகம், காரைக்குடி. பக். 1–5
3. குலேந்திரன். பொன்; (2001) சிவயோகம், அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் வெளியீடு; பக்.189 –193
4. வேலுப்பிள்ளை. ஆ; (1985) தமிழர் சமய வரலாறு – பாரி புத்தகப்பண்ணை, சென்னை. ப. 7
5. மே. கு. நூ; ப. 18
6. Sreenivasa Iyangar P. T; (1958) History of Tamils, Madras. P. 11
7. செல்வராசன். பு; (1955) சங்கநூற்செய்திகள், லோட்டஸ் பப்பிளிஷர்ஸ், சென்னை. பக் 32–34
8. Ashok. K. Dutt & Margaret Geib; (1998) Atlas of South Asia, Oxford and IBH Publishing Co. Pvt. Ltd, Calcutta. pp30-31
9. Ibid; p.32.
10. வாழ்வியற் களஞ்சியம்; பகுதி III, (1983) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பக் 673–674
11. Chandna. R.C; (2000) Geography of Population, Kalyani Publishers, New Delhi, P.81-99
12. Ipid ; p 87
13. Shankar Rao Tatwawadi; (2000) "Hindus Abroad" Vishwa Mangal Hetave, Uttan, Bharat. Pp 115-119
14. Ashok. K. Dutt & Margaret Geib; (1998). P .33
15. Kodikara. S. U; (1965) Indo-Ceylon Relations since Independence, The Ceylon Institute of world Affairs, Colombo. P. 68
16. Census of Population; (2001) Department of Census and Statistics, Colombo. P.7
17. Chandna. R. C; (2000) p. 87, D Capital
18. Bhabain Sen Gupta; (1999) Towards a grass-root participatory policy, Himalaya publishing House. P. 76
19. குருபாதம். க; (1973) தென்கிழக்காசியாவில் இந்துசமய வளர்ச்சி, கோலாம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா. பக்.71–78
20. Ashok. K. Dutt & Margaret Geib; (1998) p. 35-36
21. நித்தியானந்தன். வா; (1973) "இந்தோனோசியாவில் இந்துக்கோவில்கள்" கோலாம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா. பக். 161–162
22. விசுவநாதன். ஈ. ச; (1973) "பாலித்தீவும் இந்துசமயமும்" கோலாம்பூர் ஸ்ரீ மகாமாரியம்மன் கோவில் தேவஸ்தான குடமுழுக்கு விழா சிறப்புமலர், மலேசியா. பக். 146–151
23. நித்தியானந்தன். வா; (1973) ப. 163
24. விசுவநாதன். ஈ. ச; (1973) பக். 147 – 148
25. World Comparative National Statistics
26. விசுவநாதன். ஈ. ச; (1973) ப. 147
27. World Comparative National Statistics
28. Rasanayagam. C; (1933) Ancient Jaffna, Madras. P. 48
29. Shankar Rav Tatwawadi; (2000) p.117
30. Shri Vasu Vaj; (2000) "Hinduism in America" Vishwa Mangal Hetave, pp. 134-137
31. Shri Ravi Iyer; (2000) "Hinduism in Australia Zone" Vishwa Mangal Hetave, pp. 128-131
32. Census of Population; 1901, Department of Census and Statistics, Colombo.
33. Purushottam Rao. A. E; "Contribution of Hinduism in Kenya", Vishwa Mangal Hetave, pp. 120-123
34. Shankar Raj Tatwawadi; (2000) p. 117
35. குலேந்திரன். பொன். ஈ; (2001) ப. 193
36. Sivasubramaniam. V; (2002) Decade of Growth, Seychelles Arul Mihu Navasakthi Vinayagar Temple 1992-2002, P. o. Box. 644, Seychelles, pp.6-10.



இந்து சமயமும் அதன் சிறப்பியல்புகளும்

தொண்டர்மாமணி
அ. பாலையம் பி.ஜ.எஸ் (மலேசியா)

இறைவனை அடைவதற்கான வழியினைக் காட்டவல்ல மார்க்கமே மதம் அல்லது சமயமாகும். ஒரு பிறவியின் வழி கட்டுண்ட ஆன்மா மீண்டும் இறைவனை அடைய வேண்டும். குறிப்பாக மனிதப் பிறவியின் நோக்கமே அதுதான்.

மனிதன் எப்போதும் வெறும் மிருக வாழ்வு வாழ்வதில் மனநிறைவு கொள்ளமாட்டான். எத்தனையோ நாஸ்திகர்கள் நாளாவட்டத்தில் ஆஸ்திகர்களாக மாறியுள்ளதை நாம் காண்கிறோம். மனித இயல்பு அமைதியையும் ஆதரவையும், ஆற்றலையும் நாடக்கூடியது. மனிதனிடத்தே ஆழமாகப் பதிந்துள்ள அகவுணர்வினை சமயம் நிறைவேற்றி வைக்கின்றது. மனிதன் உணவால் மட்டும் வாழ்ந்து விடமுடியாது. மாய உலகின் உண்மை நிலையினை மனிதன் ஒருநாள் உணர்ந்தே ஆக வேண்டும். அது இறைவனின் நியதி. வாழ்க்கையில் ஏற்படும் பலவகைத் துன்பங்களும், சோதனைகளும் உலகம் மாயை என்பதை நமக்கு உணர்த்திவிடும். அப்போது நாம் இறைவனைத்தான் சரணடைய வேண்டும். சமயத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மீகத்தைப் பற்றித்தான் ஆக வேண்டும். அப்போது சமய உணர்வு, சமயப் பற்று, சமய நம்பிக்கை நம்மை ஆட்கொண்டு விடும்.

இந்து மதம்

தோன்றி நிலைபெற்றுள்ள மதங்கள் யாவற்றிலும் இந்து மதம் மிகப் பழமையானது. எந்தவொரு தீர்க்கதரிசியாலும் இது ஏற்படுத்தப்பட்டதல்ல. பிற சமயங்களின் உருவாக்கத்திற்குத் தீர்க்கதரிசிகள் உண்டு. அவற்றின் காலங்களும் கணிப்பிற்கு உட்பட்டவை. இந்து சமயத்திற்குக் காலக் கணிப்புமில்லை. தோற்றத்தைக் கண்டவருமில்லை.

சனாதன தர்மம்

இந்து சமயத்தை 'சனாதன தர்மம்' என்றும் , 'வைதீக சமயம்' என்றும் அழைப்பதுண்டு. சனாதன தர்மம் என்றால், வேத நெறிமுறைக்குட்பட்ட சமயம் எனப் பொருள்படும். பாரந்த சகிப்புத் தன்மை, ஆழ்ந்த மனிதத்தன்மை, உயரிய ஆன்மீக நோக்கம் இம்மூன்றினாலும் சித்தரிக்கப்பட்டது.

வைதீக மதம்

வைதீக மதமென்றால் வேதங்களின் சாயல் எனப் பொருள்படும். வேதங்கள் இந்து சமயத்தின் அடித்தளத்திற்கான தர்ம சாஸ்திரங்களாகும். பாரத நாட்டின் முற்கால ரிஷிகளின் உள்ளுணர்வால் தோன்றிய அனுபவங்களை அதில் நிறையவே காணலாம். இறைவனின் சின்முத்திரைக் குறிப்பால் ஆன்மீக உள்ளுணர்வு பெற்ற சப்த ரிஷிகளால் வெளிப்படுத்தப்பட்ட நெறிமுறைத் திரட்டு. அது

ஆண்டவனின் கட்டளையாக, சத்திய வாக்காக, அருள் மொழியாக மதிக்கப்படுகிறது.

இந்து மதம் சுதந்திரத்துடன் கூடியதோர் உன்னத மதம்

இந்து மதம் பிறமதக் கோட்பாடுகளின் துணையின்றி, எந்தவொரு முடிவுக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது. எல்லா மதங்களும் இறுதியில் ஒரு முடிவுக்குத்தான் இட்டுச் செல்கின்றன என்பதனை ஐயந்திரிபற ஏற்றுக்கொள்கிறது.

இந்து மதம் பகுத்தறியும் மனிதனுக்குப் பூரண விடுதலை அளிக்கின்றது. பகுத்தறிவு எனும் விவேக உரிமை, உணர்ச்சி, மனிதனின் இச்சை போன்றவற்றின் மீது பொருத்தமற்ற கட்டுப்பாடு எதனையும் சுமத்துவது கிடையாது. நம்பிக்கை, கடவுள் வழிபாடு ஆகிய விஷயங்களில் அது பரந்த அளவில் உரிமையளித்துள்ளது. கடவுளின் இயல்பு, ஆன்மா, படைப்பு, வழிபடும் முறை, வாழ்வின் குறிக்கோள் ஆகியவற்றின் விவாதங்களை யொட்டிய வகையில், இந்து மதம் பகுத்தறிவுக்கும், சிந்தனைக்கும் முழு உரிமையளித்துள்ளது. எனவே, எல்லாவித மத நம்பிக்கைகளும், பல்வேறு வழிபாட்டு முறைகளும், சாதனா முறைகளும், வெவ்வேறான சடங்கு முறைகளும், பழக்க வழக்கங்களும் இந்து மதத்தில் கண்ணியமான முறையில் அணியணியாக வகுக்கப்பட்டு ஒன்றோடொன்று முரண்பாடற்ற, இதமான உறவில் மேம்பாடடைந்துள்ளன.

அரவணைப்பைத் தவிர ஆர்ப்பரிப்பறியாத அன்னை மதம்

இவ்வுலகைப் படைத்து, சகல ஜீவராசிகளையும் படைத்து அருளாட்சி செய்யும் ஆண்டவனை இல்லையென்று வாதிப்பவர் களை இந்து மதம் வெறுப்பதில்லை, அழியா ஆத்மா ஒன்றுளது என்ற உண்மைக்குச் சவால் விடுப்பவர்களையும், முக்தி நிலையெல்லாம் கட்டுக்கதை என்று சாதிப்பவர்களையும் ஒதுக்குவதில்லை. சமுதாயத்தில் அவர்களுக்கும் சமமான மதிப்பை வழங்குவதில் வேறுபாடு காட்டுவதில்லை இந்து மதம் பெருமளவில் சமரசப் பாங்குடையது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'எம்மதமும் சம்மதம்' என்ற பரந்த மனப்பான்மையுடன் எல்லா மதங்களையும் அது மதிக்கின்றது. சகிப்புத் தன்மை, புரிந்துணர்வு, இணக்கம் காட்டுதல் ஆகிய பண்புகள்தான் ஒரு 'தாய் மதம்' என்பதற்குச் சான்று பகர்கின்றது.

வேதத்தின் சாரம் உபநிடதம்

இந்து மதத்தின் மணி மகுடம் வேதம். வேதத்தின் அணிகலன் உபநிடதம். உபநிடதங்களின் விளக்கங்கள் விஞ்ஞானத்திற்கும், மெய்ஞ்ஞானத்திற்கும் உவமை காட்டுபவை. தத்துவ ஞானத் துறையில் இந்து மத மகரிஷிகள் உச்சிவரை சென்றுள்ளனரென மேல் நாட்டினரும் பிற மதத்தினரும் வியப்பில் ஆழ்கின்றனர். 'ஸ்கூபென்ஹாயர்' என்பவர் ஒவ்வொரு இரவிலும் நித்திரைக்குச் செல்லுமுன் உபநிடதங்களைப் படித்த பின், வேதங்களின் கருத்துக்கள் மனதில் பதியும் வண்ணம் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருப்பாராம். அவர் உள்ளத்தினின்றும் வெளிப்பட்ட சொற்கள் இவைதாம்: "என் வாழ்விற்கு மனவமைதி யையும், ஆறுதலையும் அளிப்பது உபநிடதங்களே, என் மரணத்திற்குப் பின்னும் எனக்கு அமைதி யளிப்பவை அவ்வுபநிடதங்களே"

இராஜயோகமும் ஈர்ப்புச் சக்தியும்

இந்து மதத்தின் இராஜயோக முறை தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தது. அனைத்து மக்களின் நடைமுறைக்கேற்றவை. எந்தவொரு உடற்பயிற்சி முறையும் ஹடயோகத்துடன் போட்டி போட முடியாது. குண்டலினி யோகம் அற்புதம் நிறைந்தது. எனவே, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வரும் ஆன்மீகவாதிகள் இந்திய நாட்டின் யோகிகளையும் தவசிரேஷ்டர்களையும் இமயமலைச் சாரலிலே நாடித் தேடி அலைகின்றனர். இராஜ யோகத்தையும், வேதாந்தத்தையும் பயின்று வருகின்றனர்.

இந்து சமயத்தின் ஒரு பிரிவு சைவம். சைவ அடியார்கள் சிவபெருமானைப் புகழ்ந்து போற்றிப் பாடியுள்ள அருட்பாடல்களே திருமுறைகள். இவை தோத்திரங்கள் எனப்படும்.

சைவர்களுக்குத் தோத்திர நூல்களான திருமுறைகள் 12 பாடியவர் இருபத்தெழுவர். பாடல்கள் 18360

திருமுறைகள் மூலம் அறியக்கூடியன:

1. சிவபெருமானின் திருமேனிச் சிறப்பு
2. அவர் பரம்பொருளாயுள்ள தன்மை
3. அடியார்கள் வழிபட்ட முறை
4. புராணச் செய்திகள்
5. இதிகாசச் செய்திகள்
6. திருத்தலச் சிறப்புக்கள்
7. அடியார் பெருமைகள்
8. வேண்டுதல்கள்
9. இறைவன் அடியார்களுக்கு அருள் புரிந்தமை

திருமுறைகளின் சிறப்பு

1. தமிழில் உள்ளமை
2. வேதமந்திரங்கள் போன்ற ஆற்றல் உள்ளமை
3. வேதசாரமாயுள்ளமை
4. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உள்ளமை
5. தெய்வத்தன்மை வாய்ந்த சொற்கள் உள்ளமை
6. அற்புதங்கள் நிகழ்த்தியமை
7. இறையருளால் பாடப் பெற்றமை
8. இறைவனை மகிழ்ச்சிப்படுத்தியமை

திருமுறை விளக்கம்

திரு – தெய்வத்தன்மையுள்ள
முறை – பாடல்
} தெய்வத்தன்மை வாய்ந்த பாடல்கள்

திருமுறைகளும் பண்ணும்

ஏழு திருமுறைகளுக்கும் பண் உள்ளது. "பண்" அக்காலச் சொல். இன்று அதனை "இராகம்" என்கின்றனர். இந்தப் பண்களைப் பகற்பண், இராப்பண், பொதுப்பண் எனப் பிரித்துள்ளனர். மொத்தப் பண்கள். 27, பகற்பண் 12, இராப்பண் 12, பொதுப்பண் 3. பண்ணை மாற்றிப் பாடக் கூடாது.

திருமுறை பாடியவர்கள் விவரம்

திருமுறை எண்	பாடியோர்	பதிகம்	பாடல்கள்
1,2,3	திருஞானசம்பந்தர்	384	4169
4,5,6	திருநாவுக்கரசர்	311	3067
7	சுந்தரமூர்த்தி	100	1026
8	மாணிக்கவாசகர்	51	658
			400
9	1. திருமாளிகைத் தேவர்		301
	2. சேந்தனார்		
	3. கருவூர்த் தேவர்		
	4. பூந்துருத்திநம்பி காடநம்பி		
	5. கண்டராதித்தர்		
	6. வேணாட்டடிகள்		
	7. திருவாலியமுதனார்		
	8. புருஷோத்தம நம்பி		
	9. சேதிராயர்		
10	திருமூலர்		3047
11	1. திரு ஆலவாயுடையார்		1406
	2. காரைக்காலம்மையார்		
	3. ஐயடிகள் காடவர்கோன்		
	4. சேரமான் பெருமான் நாயனார்		
	5. நக்கீர தேவ நாயனார்		
	6. கல்லாடதேவ நாயனார்		
	7. கபிலதேவ நாயனார்		
	8. பரணதேவ நாயனார்		
	9. இளம்பெருமான் அடிகள்		
	10. அதிராவடிகள்		
	11. பட்டினத்துப் பிள்ளையார்		
	12. நம்பியாண்டார் நம்பி		
12.	சேக்கிழார்		4286

திருமுறைப் பெயர்கள்

1,2,3,4,5,6,7	திருமுறைகள்	தேவாரம்
8	ஆம் திருமுறை	திருவாசகம் / திருக்கோவையார்
9	ஆம் திருமுறை	திருவிசைப்பா / திருப்பல்லாண்டு
10	ஆம் திருமுறை	திருமந்திரம்
11	ஆம் திருமுறை	திருப்பிரபந்தம் – 40 நூல்கள்
12	ஆம் திருமுறை	திருப்புராணம் / பெரியபுராணம்

திருமுறைப் பெருமை சாற்றும் பாடல்கள்

1. தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர் – (அவ்வையார்)

2. ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் – சீசீ!
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்? – (சிவபோகசரம்)

3. சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் என் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் – முற்கோலி
வந்திலரேல் நீ றெங்கே? மாமறைநூல் தான்எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்து எங்கே?

4. பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீத்தத்
துறவியெனும் தொஃறோணி கண்டீர் – நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்
– (நம்பியாண்டார் நம்பி)

திருமுறைகளின் பயன்

திருமுறைகளை ஓதுவதால் நமக்குத் தேவையான எல்லாப் பயன்களையும் பெறலாம்.

திருமுறைப் பதிகங்கள் சில சிவஞானத்தையளிப்பன. சில வேண்டிய போகத்தைத் தருவன. சில சித்திகளைத் தருவன. சில முத்திகளையருள்வன. சில வினைகளைத் தீர்ப்பன. இன்னும் பற்பல – திருஞான சம்பந்தர் அருளியுள்ள பதினோரம் பாடலான திருக்கடைக்காப்பை ஓதினால் இந்த விபரம் தெரிய வரும்.

- "தொல்வினை தீர்தல் எளிதாமே"
- "சிவ கதியைப் பெறுவாரே"
- "வானவர் கோனொடுங் கூடுவரே"
- "சாரகிலா வினை தானே
- "வான சம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே"
- "வியன்ஞா லம்எல்லாம் விளங்கும் புகழே"
- "அரசாள்வர் ஆணை நமதே"
- "மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே"

திருச்சிற்றம்பலம்



சங்காபிஷேகத் தத்துவம்

சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் சங்காபிஷேகமாகும். மண் குடத்தை விட செப்பினால் செய்யப்பட்ட குடம் 1000 மடங்கு விஷேமானது. அதனிலும் வெள்ளியினால் செய்யப்பட்ட குடம் 10.000 மடங்கு விஷேசமானது. பொன்னால் செய்யப்பட்ட குடம் 200,000 மடங்கு விஷேசமானது. இரத்தினத தினால் செய்யப்பட்ட காண்டாமிருகக்கொம்பு அதைக்காட்டிலும் இருமடங்கு விசேடம். அதைக்காட்டிலும் கடலில் தேங்கிய சங்கு கோடி மடங்கு விசேடம் என ஆகமங்கள் கூறுகின்றன.

சங்கின் அதிதேவதைகள் - சூரிய, சந்திரர்கள்
மத்தியில் - வருணன்
நுனியில் - கங்கா,ஸரஸ்வதி
அடியில் - பிரமன்
நடுவில் - புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருக்கின்றன.

சங்காபிஷேகம் அஷ்டோத்திர சதம்-108, அஷ்டோத்திர சகஸ்ரம் - 1008, எனும் இருவகையில் நடைபெறும். வலம்புரி, இடம்புரி எனும் இருவகைச் சங்குகள் உண்டு. பாபங்களை நீக்கும் தன்மை சங்கிற்கு உண்டு.

இந்தியா சென்று சைவசமயச் சான்றோர் அவையில் புகழ் நிறுவிய ஈழத்தமிழர்

செஞ்சொற்செல்வர்
ஆறு. திருமுருகன்

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கோடிக்கணக்கான இந்துக்கள் வாழும் நாடு இந்தியா. இந்தியாவுக்கும் ஈழத்திருநாட்டிற்கும் மிகநீண்ட வரலாற்றுத் தொடர்பு உண்டு. 30 கி. மீ நீரிணையினால் பிரிந்து நிற்கின்றது. இந்தியாவிற்கு உள்ள பழம்பெரும் வரலாறு போல் ஈழத்திருநாட்டிற்கும் மிகத் தொன்மையான வரலாறு உண்டு. சிறிய நாடாகிய ஈழத்திலிருந்து பல ஆத்மீகப் பெரியவர்கள் இந்தியாவிற்குச் சென்று குறிப்பாகத் தென்னிந்தியாவில் தமது ஆற்றலை வெளிப்படுத்திய வரலாறுகள் தொன்மை தொட்டுப் பேசப்படுகின்றது.

ஈழத்திருநாட்டிற்கும் இந்தியாவிற்கும் பண்டமாற்றுப் பொருளாதாரத் தொடர்பு முதல் பாரம்பரியச் சமய, பண்பாட்டு, கலை சார்ந்த தொடர்புகள் வரை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிலவியதற்கான பல்வேறு சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன. சங்க இலக்கிய நூல்களில் இலங்கை பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் வாழ்ந்த பழங்குடி மக்களாகிய நாகருக்கும் தென்னாட்டில் வாழ்ந்த தமிழருக்கும் உள்ள தொடர்புக்குச் சிறுபாணாற்றுப்படை பாடல் அடி ஆதாரமாக உள்ளது. கடைச்சங்கப் புலவருள் ஒருவராய் இருந்த ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் ஈழத்தவரே என்று மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார். இப்புலவர் ஈழத்தில் தோன்றி இந்தியாவில் அறிஞர் அவையில் புகழ்க்கொடி நிறுவியவரெனப் பல அறிஞர்கள் தமது ஆய்வுகளில் கூறியுள்ளனர். சங்கநூல்களில் ஏழு பாடல்கள் இவர் இயற்றியவையாகும். அவற்றுள் நற்றிணையில் ஒரு பாடலும், குறுந்தொகையில் மூன்று பாடல்களும் அகநானூற்றில் மூன்று பாடல்களும் உள்ளன. இவர் இயற்றிய ஏனைய பாடல்கள் சிதைந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. சங்ககாலம் முதல் ஈழத்து அறிஞர்கள் இந்தியா சென்று அறிஞர் அவையில் சாதனை நாட்டிய வரலாற்றைப் பலர் ஆராய்ந்து கட்டுரைகளாக வரைந்துள்ளனர். இவ்வரிசையில் 1951ஆம் ஆண்டு பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் பெரும் தமிழ்விழா நடைபெற்றபோது வெளியிடப்பட்ட தமிழ்விழா மலரில் வித்துவான் திரு.க.கி. நடராஜன் பி.ஓ.எல் எழுதிய "இந்தியா சென்று புகழ்நிறுவிய ஈழத்தமிழர்" என்ற கட்டுரை பல பெரியவர்களது சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளது. சைவபரிபாலன சபையினால் வெளியிடப்பட்டுவரும் நூற்றாண்டு கண்ட இந்து சாதனம் பத்திரிகை காலத்திற்குக் காலம் இந்தியாவில் சமயப்பணியாற்றிய ஈழத்தமிழர்களை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஈழத்திலிருந்து இந்தியா சென்று கலைத்துறையில் புகழ் நாட்டியவர்கள் பலர். வாணிபத்தில் புகழீட்டியவர்கள் பலர். இவர்கள் பற்றிய ஆய்வுகள் எதிர்காலத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

கிறிஸ்துவுக்குப் பின் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டுக் காலப்பகுதிவரை இந்தியாவில் அறிஞர் அவையில் இந்து சமயம் சார் கருத்துக்களை முன்வைத்து புகழ்பெற்றவர்களைக் குறிப்பாக எம் ஆய்வுக்கு எட்டியவர்களை இக்கட்டுரையில் வெளிப்படுத்தலாமென எண்ணுகின்றேன்.



திருநெல்வேலி ஞானப்பிரகாசர்

இற்றைக்கு நானூறு வருடங்களுக்கு முன்னர் எம்மண்ணில் வசித்தவர் இவர். யாழ்ப்பாணம் திருநெல்வேலிக் கிராமத்தைச் சேர்ந்த சுவாமிகள், பரங்கியர் ஆட்சி நிலவியபோது பசுவதையை எதிர்த்துப் பாரதம் சென்றவர் என வரலாறு கூறுகின்றது. சிதம்பரத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் கௌட தேசம் சென்று ஒரு பிராமண சந்நியாசியிடம் தருக்கம், வியாகரணம் முதலியவற்றை முதலில் கற்றுப் பின் திருவண்ணாமலை ஆதீனத்தில் வடமொழியிலும் வல்லவராக விளங்கிய இவர் பல வடமொழி நூல்களுக்கு வியாக்கியானம் எழுதியுள்ளார். சிதம்பரத்திலும் திருவண்ணாமலையிலும் பலருக்கும் சமய தத்து வங்களை எடுத்துரைப்பதில் பேரறிவாளராக விளங்கியுள்ளார்.

தமிழில் சிவஞான சித்தி சுபக்கத்திற்கு ஒரு உரை இயற்றினார். வடமொழியிலுள்ள பௌட்கராகமத்திற்கு இவர் எழுதிய உரை மிகவும் பிரசித்தமானது. சிதம்பரத்தில் இவர் கட்டிய "ஞானப்பிரகாசம்" திருக்குளம், அதன் அருகே அமைந்துள்ள ஆலயம் என்பன இவர் பெருமைக்குச் சான்று பகர்கின்றன.

நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஞானப்பிரகாச சுவாமிகள் மரபில் உதித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஈழத்திலும் இந்தியாவிலும் தமது ஆற்றலை வெளிப்படுத்திய மகான் எனலாம். திவாவடுதுறை ஆதீனம் இவரது நாவன்மையின் மேன்மையை அறிந்து "நாவலர்" என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கியமையை யாவரும் அறிவர். தென்னாட்டில் நாவலர் காலம் முதல் இன்றுவரை சைவத்தை, தமிழை ஆராய்கின்ற அறிஞர்கள் நாவலரது மேன்மையை எடுத்துரைக்கத் தவறுவதில்லை. உரைநடை இலக்கியத்தின் தந்தையென இலக்கிய ஆய்வாளர்களினால் சிறப்பிக்கப்படும் நாவலர் பெருமான் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டதோடு பல செய்யுள்களுக்கு வசனவடிவில் வாழ்வளித்தார். சமயப் பிரசங்க மரபை ஈழத்திலும் இந்தியாவிலும் நிறுவிய வரலாற்று நாயகன். இவர் 1822ஆம் ஆண்டு தொடக்கம் 1879ஆம் ஆண்டு வரை வாழ்ந்த நாவலர் பெருமான் இலகுவான நடையில் சமயச் சொற் பொழிவுகளை ஆற்றியதோடு சமய நூல்களையும், இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். இவரது வசனநடை அற்புதமானது. இவரைப் பின்பற்றியே சி. வை தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், திரு. வி. கே. சூரியநாராயணயசாஸ்திரி போன்றோர் அரிய நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டனர். நாவலரது வசன நூல்களை வெளியிடுவதில் உழைத்தவராகிய சூரியநாராயணசாஸ்திரிகள் வசனநடை கைவந்த வல்லாளர் என விழிப்பது குறிப்பிடத்தக்கது. நாவலர் எழுதிய பெரியபுராண சூசனம் மிகப் பாராட்டுப் பெற்ற நூலாகும். இந்தியாவில் நாவலர் நாட்டிய புகழ்கொடிக்கு ஈடாக இன்றுவரை பிறர் இல்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்.

உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்

நாவலர் பெருமான் காலத்தில் வாழ்ந்த இவர் மிக இளம் பிராயத்திலேயே இந்தியாவில் தன் பெருமையை நிலைநாட்டியவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் மீது நான்மணிமாலை பாடிப் பெரும் பாராட்டுப் பெற்றவர். அறுபது பிரபந்தங்களுக்கு மேல் பாடிய இவர் கந்தபுராணம் பற்றி எடுத்துரைப்பதில் மிகவும் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கினார். கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப் படலத்துக்கு உரையெழுதி இந்தியாவில் அரங்கேற்றிய பெருமை இவரைச் சாரும். இராமநாதபுரம் இரவிகுல விஜயரகுநாத பாஸ்கரசேதுபதி மீது பல பாடல்களைப் பாடி அவர் முன்னிலையிலேயே தன் திறமையை வெளிப்படுத்திப் பட்டமும் பரிசிலும் பெற்றவர். கவிவல்லமையும் நாவல்லமையும் மிக்க புலவர் பற்றிய சிறப்புக்கள் தமிழக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சபாபதி நாவலர்

யாழ்ப்பாணம் கோப்பாய்க் கிராமத்தில் பிறந்து ஈழத்திலும் இந்தியாவிலும் சிறந்த கல்விமானாகத் திகழ்ந்தவர். உயர்ந்த தமிழ்நடையில் சொற்பொழிவாற்றும் திறமை மிக்கவராக ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப் பெற்றவர். நாவலரதும், வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையினதும் மாணவராக விளங்கிய இவர் திருவாவடுதுறை ஆதீனத்தால் கௌரவிக்கப்பட்டு நாவலர் என்ற சிறப்புப்பட்டத்தைப் பெற்றவர். வடமொழியிலும் தென்மொழியிலும் பாண்டித்தியம் மிக்க இவர் சிதம்பரத்திலுள்ள நாவலர் வித்தியாசாலைக்குத் தலைமை ஆசிரியராக விளங்கித் தென்னாட்டில் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றித் தனிப்பெருமை பெற்றவர். சைவ சித்தாந்தத்துறையில் சிறப்புப்புலமையும் தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவுமுள்ள இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய "திராவிடப் பிரகாசிகை" என்னும் நூல் மிகவும் பிரசித்தமானது.

சி. வை தாமோதரம்பிள்ளை

இவர் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் மிகுந்த புலமையுடையவர். தமிழ் நூல்களைப் பதிப்பித்தலில் இவர் செய்த அரும்பணி இன்றும் நன்றியோடு நினைவுகூரத்தக்கது. வீரசோழியம், தொல்காப்பியம், கலித்தொகை, சூளாமணி, இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம் போன்ற நூல்களைப் பதிப்பித்துத் தென்னகத்துச் சான்றோர் அவையில் பெரும் பாராட்டைப் பெற்றவர். இவர் இலக்கிய இலக்கணம் சார்ந்த உரைகளை ஆற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

கனகசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த தமிழறிஞர். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக விளங்கித் தனது நாவன்மையாலும் எழுத்தாற்றலாலும் பெருமதிப்புப் பெற்றவர். தமிழ் நாவலர் சரிதை என்ற நூலை வெளியிட்ட இவர் இல்லாண்மை என்னும் உரைநடை நூலை இயற்றிப் புகழ் பெற்றவர். சிறந்த சொல்வன்மையாளராகிய இவர் ஈழத்திலும் இந்தியாவிலும் பாராட்டுப் பெற்றவர்.

சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப்புலவர்

சுன்னாகத்தில் பிறந்து ஈழத்திலும் இந்தியாவிலும் பேரறிஞராக மதிக்கப்பட்டவர் இவர். மதுரைத் தமிழ்சங்கம் இவரது பேராற்றலைக் கேள்வியுற்றுச் சிறப்பு அங்கத்தவராக்கிக் கௌரவித்தது. வடமொழி, தென்மொழி இரண்டிலும் பாண்டித்தியமுடைய இவர் பல பெறுமதியான நூல்களை எழுதி வெளியிட்டவர். தென்னாட்டில் பல சமஸ்தானங்களினாலும், திருவாவடுதுறை ஆதீனம் போன்ற மஹாசந்நிதானங்களிலும் பெரிதும் கௌரவிக்கப்பட்டவர் புலவர் அவர்கள். நானூறு புலவர்களின் சரித்திரங்கள் அடங்கியுள்ள தமிழ்ப் புலவர் சரிதம் என்ற நூலை வெளியிட்ட

பெருமை இவருக்குரியது. கவிவல்லமைமிக்க புலவர் பெருந்தமிழ்த்தொண்டு செய்தவர். தமிழ் இலக்கியச் சொல்லகராதியைத் தொகுத்து வெளியிட்டவர். இவரது பேராற்றல் இன்றும் தமிழகத்தில் பேசப்படுகின்றது.

கொக்குவில் சபாரத்தின முதலியார்

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறந்த சைவ சித்தாந்த அறிஞர் சபாரத்தின முதலியார் அவர்கள். இவர் வடமொழியிலும், தென்மொழியிலும், ஆங்கிலத்திலும் மிகுந்த புலமையுள்ளவர். சிறந்த சொற்பொழிவாளர். தென்னிந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த மஹா சமாஜத்திற்கு தலைமை தாங்கும் பேறுபெற்றவர். இவர் இந்து மதத்தின் பிரதான அம்சங்கள் (The Essential of Hinduism in the light of Saiva Siddhananta) என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு இந்தியாவில் அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றவர். சித்தாந்த தீபிகை என்ற ஆங்கில சஞ்சிகைக்கு பல கட்டுரை எழுதியுள்ளார். சைவசித்தாந்தம் பற்றிய இவரது சொற்பொழிவுகள் ஈழத்திலும் இந்தியாவிலும் சிறப்புப்பெற்றன.

புலோலி திரு நா. கதிரவேற்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள புலோலியைச் சேர்ந்தவர். இவரது தமிழ்மொழி ஆற்றலைக் கண்டு இந்தியாவிலுள்ள அறிஞர்கள் வியந்தனர். இவரது பேச்சாற்றலை திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளார். இவர் இந்தியா சென்று சென்னை ராயப்பேட்டையில் "பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை" என்ற சபையையும், வேறுபல சபைகளையும் நிறுவிப் பணிபுரிந்தார். இவரது பேச்சாற்றல் வசீகரமானது. இவர் தொகுத்த தமிழ்ப் பேரகராதி சைவபூஷண சந்திரிகை, சுப்பிரமணிய பராக்கிரமம் முதலிய நூல்கள் இவரது திறமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவர் ஆரணி நகர சமஸ்தான வித்துவானாக விளங்கிச் "சைவசித்தாந்த சரபம்" என்னும் சிறப்புப் பெயரையும் பெற்றவர். சமய சொற்பொழிவுத்துறையில் இந்தியாவில் புகழ்கொடி நாட்டியவர்.

மட்டுவில் ம. க. வேற்பிள்ளை

யாழ்ப்பாணம் மட்டுவிலைச் சேர்ந்த திரு ம. க. வேற்பிள்ளை சிறந்த தமிழறிஞர், செய்யுள் இயற்றுவதில் பெரும்புலமை படைத்தவர் புராணப்பிரசங்கங்கள் செய்வதில் ஈழத்திலும் இந்தியாவிலும் மிகச்சிறந்த பாராட்டுக்களைப் பெற்றவர். சிதரம்பரம் நாவலர் வித்தியாசாலையில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்து தமிழ் அறிஞர்களை உருவாக்கியவர். ஆறுமுகநாவலரின் மாணவராகிய இவர் பல நூல்களை எழுதியுள்ளார் திருவாதவூரர் புராணத்திற்கு இவர் எழுதிய உரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாம். இவர் இயற்றிய செய்யுள் நூல்களுள் "ஈழமண்டலச் சதகம்" சிறப்பு வாய்ந்தது.

புலோலி திரு வ. கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் புலோலியைச் சேர்ந்த திரு. வ. கணபதிப்பிள்ளை தமிழிலும் வடமொழியிலும் மிகுந்த புலமை உள்ளவர். நெடுங்காலம் காஞ்சிபுரத்திலே பச்சயப்ப வித்தியாசாலையில் தமிழ்ப் பண்டிதராகப் பணி செய்தவர். பல நூல்களை எழுதி வெளியிட்ட இவர் சொற்பொழிவுகளை ஆற்றுவதிலும் கவிபாடுவதிலும் திறமையுடையவர். இவர் எழுதிய "ரகுவம்ச சருக்கம்" மிகவும் பிரசித்தமானது.

ஆறுமுகத்தம்பிரான்

யாழ்ப்பாணத்தில் பிறந்து, திருவண்ணாமலை ஆதீனத்தில் வசித்த சைவ சித்தாந்த அறிஞர் இவர். பெரியபுராண நூலிற்குச் சிறந்த உரையை எழுதிய பெருமை இவரைச் சாரும்.

யாழ்ப்பாணம் குப்பிளான் செந்திநாத ஐயர்

யாழ்ப்பாணம், ஏழாலை, குப்பிளான் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் பெரும் புலமையாளர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றையும் சிறப்பாகக் கற்றுப் பெருமை பெற்றவர். இவர் காசியில் சிலகாலம் வசித்தவராதலின் காசிவாசி செந்திநாத ஐயர் என அறியப்பட்டார். நூல்களை இயற்றுவதிலும் சமயச்சொற் பொழிவுகளை ஆற்றுவதிலும் மிகவும் புலமையுடையவராகப் போற்றப்பட்டார். திருப்பரங்குன்றத்தில் நெடுங்காலம் வசித்து, இந்தியாவின் பல பாகங்களிலும் தன் புலமையை வெளிப்படுத்தினார். இவரது "நீலகண்ட பாஷயம்" மொழி பெயர்ப்பு நூல் பிரசித்தமானது. சிவஞானபோத வசனாலங்கார தீபம், தேவாரம், வேதாசாரம் போன்ற இவரால் இயற்றபட்ட நூல்கள், பலராலும் பாராட்டுப் பெற்றவை.

வடகோவை வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும், வடமொழியிலும் மிகுந்த புலமை உடையவராக விளங்கியுள்ளார். திண்ணைப்பள்ளி அமைத்துப் பல தமிழ் அறிஞர்களை உருவாக்கிய இவர் சைவ சித்தாந்தம், புராண இதிகாசங்களில் சொற்பொழி வாற்றுவதில் வல்லவராக விளங்கியுள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தில் சிலகாலம் வாழ்ந்து சைவசித்தாந்த ஆசிரியராகவும் சமயப் பிரசாரகராகவும் விளங்கியுள்ளார். சைவப் பிரகாசிகை, முப்பாநூல் சருக்கம் போன்ற இவரால் இயற்றப்பட்ட நூல்கள் இந்தியாவில் மிகுந்த பாராட்டுப் பெற்றன. திருக்குறளுக்குச் சிறந்த உரை எழுதிய பெரியவர்களுள் இவரும் ஒருவராவார்.

சுவாமிநாத பண்டிதர்

யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வித்துவசிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளையின் மாணாக்கராவார். சமயச் சொற்பொழிவாற்றுவதில் மிகுந்த திறமையுடைய இவர் ஈழத்திலும் சிறந்த பாராட்டுப் பெற்றவர். இவர் இந்தியாவில் திருச்செந்தூரில் ஒரு வித்தியாசாலையை ஸ்தாபித்து வழிநடத்தினார். திருவாவடுதுறை ஆதீனத்தால் பாராட்டப்பெற்ற இவர் பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

முத்துக்குமார சுவாமித் தம்பிரான்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலக்கண சுவாமி என்ற பெயரினால் பெரிதும் அறியப்பட்டவர். மிக இளம் பராயத்திலேயே தென்னிந்தியா சென்று தன் திறமையை வெளிப்படுத்தியவர். சந்நியாச வாழ்வு வாழ்ந்த இவர் சிவஞானமாபாடியத்தை ஆராய்ந்து முதன் முதலாக முழுநூலாக வெளியிட்டார். சமயத் தத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைப்பதில் பெரும் வல்லவராக விளங்கினார்.

அம்பலவாண நாவலர்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நாவலர் மாணாக்கர் பரம்பரையைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ மிஷனரிக்கு எதிராகச் சைவசமயத்தைக் காப்பாற்றுவதில் பெரிதும் உழைத்தவர். வட்டுக்கோட்டையில்

மிஷனரிப் பாடசாலைக்கு எதிராக வட்டு இந்துக்கல்லூரியை ஸ்தாபித்தவர். இவர் இந்தியாவில் சைவ உண்மைகளை எடுத்துரைப்பதில் பெரிதும் உழைத்தவர். சைவ சித்தாந்த நூல்களைப் பதிப்பிப்பதில் முன்னின்று உழைத்தவர்.

கனகசபைப்பிள்ளை (1855)

இவர் யாழ்ப்பாணம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணத்திலிருந்து மிக இளம் வயதில் B. A பட்டம் பெற்றவர் சுதுமலையைச் சேர்ந்த கரல் விஸ்வநாதபிள்ளை. அவருக்குப்பின் B. A பட்டம் பெற்றவர் இவர். "பட்டதாரிப் பையன்" (Boy Graduate) என்ற சிறப்பு அடைமொழியால் அன்று அழைக்கப்பட்டார். சேர். பொன் இராமநாதனுடன் சட்டப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். இந்தியாவில் பல ஆராய்ச்சி உரைகளை ஆற்றிய இவர் உ.வே. சாமிநாதஐயர் அவர்களுடன் சேர்ந்து பல பணிகளை ஆற்றினார். "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முந்திய தமிழர்" (The Tamil Eighteen hundred years ago)என்ற இவரது ஆங்கில நூல் இந்தியாவில் பெரிதும் பாராட்டப்பட்டது.

திரு த. பொன்னம்பலப்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து தென்னிந்தியாவிலுள்ள திருவனந்தபுரத்தில் உயர் உத்தியோகம் பார்த்தவர். பல வரலாற்று ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் பெருமை பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். இவர் எழுதிய "வாஞ்சி மாநகர்" என்னும் வரலாற்றுநூல் இந்தியாவில் பிரபலம் பெற்றது. இவர் எழுதிய பல கட்டுரைகள் "தமிழரின் பழைமை" (Tamils Antiquary) என்னும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய சைவ சித்தாந்த மன்றத்தில் பலதடவை சொற்பொழிவாற்றிய இவர் சமாஜ மகாநாட்டில் தலைமை தாங்கிப் பெருமை பெற்றவர். தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டவர்.

இணுவில் புராணவித்தகர் அம்பிகைபாகர்

இந்திய கலைச்சொல் அகராதிகளில் "அ" வரிசையில் முதலில் எடுத்துரைக்கப்படும் ஈழத்து அறிஞர் அம்பிகைபாகர். தமிழ் வடமொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சிறந்த வித்துவத்திறமை உடையவராக விளங்கியவர். நாவலர் மரபில் சைவப்பிரகாச பாடசாலையை இணுவிலில் வழிநடத்திச் சமயவிரிவுரைகளை ஈழத்திலும் இந்தியாவிலும் ஆற்றிய பெரும்புலவர். திருவாவடுதுறை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்புடைய இவர் ஆதீன விருதுகளைப் பெற்றவர். திருத்தணிகைப் புராணத்திற்கு உரை எழுதித் தென்னாட்டில் பெருமை பெற்றவர்.

திரு. T. செல்லப்பாபிள்ளை

யாழ்ப்பாணத்தில் பிறந்து திருவனந்தபுரத்தில் நீதிபதி(The Chief Justice Travancore) கடமையாற்றினார். யாழ்பாணம் சைவ பரிபாலன சபையை நிறுவியவர்கள்களில் ஒருவராகிய இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆற்றலி மிக்கவராக விளங்கினார். ஆங்கில இந்து சாதனம் (Hindu Organ) பத்திரிகையின் முதல் ஆசிரியராக இருந்தார்.

சிதம்பர சுவாமிகள்

ஈழத்தில் பிறந்து சிதம்பரத்தில் ஆன்மீகப் பணியாற்றியப் பலரது பாராட்டைப் பெற்றவர். சிவப்பிரகாச நூலிற்குச் சிறந்த உரையெழுதிப் பலரது பாராட்டைப் பெற்றவர். "தொல்காப்பிய சண்முக விருத்தி" என்ற நூலை இயற்றியவர். சிறந்த சமயப் பிரசாரகராகத் தென்னாட்டில் புகழ் பெற்றவர்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன்

ஈழத்தின் தலைசிறந்த கல்விமானாகிய இவர் இந்தியாவிலுள்ள சைவ சமய நிறுவனங்களில் உரையாற்றிப் பெருமை பெற்றவர். அரசியல், சட்டம், இலக்கியம் எனப் பல துறைகளிலும் புலமை மிக்க இவர் சமஸ்தானங்களிலும் இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் உரையாற்றிப் பெருமை பெற்றவர். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இந்துத் தத்துவங்களை எடுத்துரைத்துள்ளார்.

சுவாமி விபுலானந்தர்

இவர் மட்டக்களப்பு காரைதீவில் பிறந்து தமிழிற்குப் பெருமை சேர்த்தவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி போன்றவற்றில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். ஈழத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற சிறப்பு இவரையே சாரும். இந்திய இராமகிருஸ்ண சபையுடன் இணைந்து துறவியாக வாழ்ந்த இவர் தமிழிற்கும் சமயத்திற்கும் அளப்பரிய தொண்டு செய்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் பல்வேறு ஆன்மீக உரைகளையும், ஆராய்ச்சிகளையும் இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி

உலகப் பேரறிஞராகிய கலாயோகி ஆனந்தக் குமாரசாமி ஈழத்தில் பிறந்து உலகறியப் பெரும் மேதாவியாகத் திகழ்ந்தவர். ஈழத்தின் கலை கலாசாரப் பண்பாட்டையும், இந்தியாவின் கலை கலாசாரப் பண்பாட்டையும் உலக அரங்கிற்குக் கொண்டு சென்ற பெருமை இவரையே சாரும். பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதிலும், மொழிபெயர்ப்பு நூல்களை எழுதுவதிலும், உரைஎழுதும் முறையினை வளர்ப்பதிலும், பேச்சுக்கலையை மேம்படுத்துவதிலும், கலைப்பொக்கிசங்களைக் காப்பாற்றுவதிலும் இவர் ஆற்றிய பணி மகத்தானது. இவரது நடராஜநடனம்(The Dance of Siva) என்ற நூல் உலக அரங்கில் இந்துக்களுக்குப் பெருமை சேர்த்தது எனலாம். சிறந்த வரலாற்றுச் சொற்பொழிவுகளை இந்தியாவில் ஆற்றி ஈழத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

ஸ்ரீ சங்கர சுப்பையர்

ஈழத்து அறிஞரான இவர் சமய, இதிகாச, காப்பிய, புராணங்கள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவதில் மிகவும் வல்லவர். இந்தியாவில் சில திருத்தலங்களில் விழாக்களில் கந்தபுராண விரிவுரைகளை ஆற்றி மிகவும் பாராட்டப் பெற்றவர்.

வழக்கறிஞர் நாலிங்கம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவர் சைவபரிபாலன சபையினூடாகச் சமயப்பணியாற்றியவர். நாவன்மை மிக்க இவர் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றும் திறமையுள்ளவர். சைவபரிபாலன சபையின் சார்பில் இந்தியாவில் சிலவிழாக்களில் உரையாற்றிப் பலரது பாராட்டைப் பெற்றவர்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

ஈழத்தில் சைவசமய ஆதீனத்தை முதன்முதலில் தோற்றுவித்த பெருமைக்குரியவர் இவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம், இசை, நடனம், ஓவியம் போன்ற துறைகளில் மிகுந்த பாண்டித்தியம் உடையவர். புராண இதிகாசங்களைக் கதாப்பிரசங்கமாக எடுத்துரைப்பதில் மிகவும் புகழ் பெற்றவர். ஈழத்திலும், இந்தியாவிலும் சைவத் திருக்கோயில்களில் தொடர் விரிவுரைகளாற்றிப் பெரும் பாராட்டுப் பெற்றவர். மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் இவரது ஆற்றலைப் பாராட்டியதோடு ஈழத்தில் ஆதீனம் ஆரம்பிப்பதற்குப் பேராதரவு வழங்கியது. திருச்செந்தூர் முருகன் சந்நிதானத்தில் கந்தசஷ்டி உற்சவ காலத்தில் இவர் ஆற்றும் உரையைக் கேட்பதற்குப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயவீதியில் காத்திருப்பர். இவர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குப் பலதடவை சென்று உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தோன்றிய ஒப்பற்ற சமய இலக்கியப் பேச்சாளர் இவர். 1950 முதல் இன்றுவரை ஈழத்திலும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் தன் சொல் வன்மையால் பெரும் புகழீட்டியவர். இந்தியாவில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாஜ மகாநாடுகளில் சிறப்புரையாற்றியதோடு ஆரணியத்தில் நடைபெற்ற சைவசித்தாந்த மகளிர் மகாநாட்டிற்கு ஈழத்திலிருந்து சென்று தலைமை தாங்கிப் பெரும் புகழ் பெற்றவர். திருமுறைகள், புராணஇதிகாசங்கள், சைவசித்தாந்த தத்துவங்கள் பற்றிய தெளிந்த ஞான அறிவுடைய இவர் இந்தியாவிலுள்ள ஆதீனங்களாலும் கௌரவிக்கப்பட்டவர். இந்திய சைவசித்தாந்த சமாஜத்தின் பவளவிழாவைத் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடாத்திப் பெருமை பெற்றவர்.

திரு. ச. அம்பிகைபாகன்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரியில் அதிபராக விளங்கிய இவர் சைவத்தமிழறிஞராக மதிக்கப்பட்டவர். இவர் சைவபரிபாலன சபையின் சார்பாக இந்தியாவில் சைவசித்தாந்தம் பற்றி உரையாற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

ஆத்மஜோதி நா. முத்தையா

யாழ்ப்பாணம் ஏழாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் மலையகத்தில் ஆசிரியப்பணியாற்றி ஆத்மஜோதி என்ற ஆன்மீக மலரைப் பதிப்பித்து வெளியிட்டார். சமயச் சொற் பொழிவுகளாற்றும் திறன்கொண்ட இவர் இந்தியா சென்று சில ஆன்மீக நிறுவனங்களில் உரையாற்றிப் பாராட்டுப்பெற்றவர்.

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

1980களின் பின் ஈழத்திலும் இந்தியாவிலும் நன்கு அறியப்பட்ட ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவாளராக விளங்குகின்றார். யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மிகவும் இளவயதில் சொற்பொழிவுத் துறையினூடாகப் பிரபல்யம் பெற்றுள்ளார். அகில இலங்கை கம்பன் கழகம் என்ற இலக்கிய ஸ்தாபனத்தை ஸ்தாபித்து நல்லூரிலும் கொழும்பிலும் கம்பன் கோட்டங்களை நிறுவி, இளைய தலைமுறையிடையே பேச்சாற்றலை வளர்த்து வருபவர். இவர் இந்தியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சேக்கிழார் விழாவில் கலந்துகொண்டு திருமுறைகள் பற்றியும், புராண இதிகாசங்கள் பற்றியும் சிறப்புரைகள் ஆற்றிவருபவர். இந்தியாவில் நடைபெறுகின்ற கம்பன் விழாக்களில் இலங்கை ஜெயராஜ் என்ற சிறப்புப் பெயரில் இவர் ஆற்றிய உரைகள் இந்திய ஊடகங்களில் முதன்மை கொடுத்துச் சிறப்பிக்கப்படுகின்றது. இலண்டன், கனடா, அவுஸ்திரேலியா, மலேஷியா, சுவிற்சலாந்து, சீசெல்சு போன்ற நாடுகளுக்குச் சென்று ஆன்மீக இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

சமீபகாலத்தில் ஈழத்திலிருந்து இந்தியா சென்று ஆன்மீகச் சொற்பொழிவாற்றிவருபவர்களில் தமிழருவி த. சிவகுமாரன், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கலாநிதி. ந. சுப்பிரமணியஐயர், திரு.வ. ஸ்ரீபிரசாந்தன் (கம்பன் கழகம்), ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இந்தியாவில் நடைபெற்ற சேக்கிழார் விழாக்களில் திரு. ஸ்ரீபிரசாந்தன் ஆண்டுதோறும் பங்குபற்றிப் பாராட்டுப் பெற்றுவருகின்றார். தமிழருவி. த. சிவகுமாரன் சேக்கிழார் விழாக்களில் பங்குபற்றி ஆற்றிய உரைகள் பலரையும் கவர்ந்தன. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சேலம் மார்கழிப் பெருவிழாவில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டுச் சமயச் சொற்பொழிவாற்றியுள்ளார். திருப்பூர் ஆன்மீக விழாவிலும், சுவாமிகளின் விழாவிலும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் சிறப்புரைகள் இடம்பெற்றுள்ளன.

முடிவுரை

மேற்குறித்த கட்டுரையில் சமயரீதியான அரங்குகளைச் சிறப்பித்த ஈழத்து அறிஞர்கள் பற்றிய விபரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இலக்கிய ரீதியாக ஈழத்திலிருந்து பல பேராசிரியர்கள் காலத்திற்குக் காலம் இந்தியா சென்று மாநாடுகளில், ஆய்வரங்குகளில், தம் ஆற்றலை வெளிப்படுத்தி உள்ளனர். அத்தகைய பெரியார்கள் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் ஆராய்வதே பொருத்தமானதெனக்கருதி அவர்கள்பற்றி இக்கட்டுரையில் குறிப்பிடப்படவில்லை. சைவசமய உரையரங்குகளில் இந்தியாவில் புகழை நிலைநாட்டிய அறிஞர் சிலரது விபரங்களை இக்கட்டுரையில் விபரித்துள்ளேன். இக்கட்டுரையில் யாராவது பெரியவர்களை யான் தவறவிட்டிருப்பின் அவர்கள் பற்றிய விபரங்களைச் சிறியோனுக்குத் தெரியப்படுத்துவார்களாயின் திருத்திய பூரணமான பிறிதொரு கட்டுரையை வெளியிடலாமெனக் கருதுகின்றேன். எனவே இக்கட்டுரை பூரணமானதெனக் குறிப்பிடவில்லை.

உசாத்துணை நூல்கள்

- இலங்கைத்தமிழர் விழாமலர் 1951
- இந்து சாதனம் பத்திரிகை (வெளியீடு சைவபரிபாலன சபை)
- சைவ சித்தாந்த சமாஜ வெளியீட்டு மலர்
- சிவத்தமிழ் செல்வி மணிவிழா வெளியீட்டு மலர்
- மஹாவித்துவான் கணேசயர் நினைவு மலர்



நந்தி கொடி

பேராசிரியர்
டாக்டர் சோ. ந. கந்தசாமி
தஞ்சாவூர்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவனை இறைவனுக்கு ஒப்பாக மதித்தல் தமிழ் மரபு. நீதி நெறி வழுவாத அரசனுக்குரிய மலை, ஆறு, நாடு, ஊர், முரசு, குதிரை, யானை, மாலை, பெயர், கொடி என்ற பத்தினையும் புகழ்ந்துபாடும் பிரபந்தம் தசாங்கம் எனப்பெயர் பெற்றது. எல்லா அண்டங்களுக்கும் அதிபதியாக விளங்கும் ஈசனுக்கு மணிவாசகப்பெருமான் திருத்தசாங்கம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் கிளியை விளித்து வினவுவதாகவும் அந்தக் கிளி விடை சொல்வதாகவும் பத்து அங்கங்களையும் மணிவாசகர் பாடியுள்ளார். கீர்த்தித் திருவகவலிலும் (104–124) சிவபிரானுக்குரிய இப்பத்து அங்கங்களும் இடம்பெற்றுள்ளன. கூறும் வரிசையில் மட்டும் சிறுமாற்றம் உண்டு. திருத்தசாங்கத்தில்,

"சோலைப் பசுங்கிளியே ! தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிபகராய் ! – சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி"

என்று சிவபிரானுக்குரிய நந்திகொடியின் சிறப்பு சொல்லப் பெற்றது. இப்பாடலை ரெவரெண்ட் G.U. போப் பாதிரியார் பின்வருமாறு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.



"Green parrot of the grove ! declare what Banner glorious waves
Above the king of Perunthurai's waters pure?" - "aloft
The stainless banner of the bull resplendent gleams
In beauty mainfest, while foes flee far"

பகைவர்கள் எல்லாம் அஞ்சி ஒடும்படி ஒளிவீசும் ஏற்றுக்கொடி (– நந்திகொடி) திருப்பெருந்துறையில் கோயில் கொண்டுள்ள ஈசனின் கோலக்கொடி என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்தாகும். திருப்பள்ளி எழுச்சிப் பதிகத்திலும்,

"ஏற்றுயர் கொடியாய் ! எமை உடையாய்!" என்று மணிவாசகர் இடபக்கொடியுடைய ஈசனைப் போற்றினார்.

திருஞானசம்பந்தர் "இடபக் கொடி உடையான்" (1.12.10), "ஏறு கொண்ட கொடி எம் இறை" (1.26.4) என்று ஏத்தினார். திருநாவுக்கரசர், "விடைதரு கொடி" (4.38.3) என்று போற்றினார்.

நான்கு வேதங்களுமே நந்தியாக உருக்கொண்டு சிவ பிரானுக்கு வாகனமாக அமைதலை, "வேதமால் விடை ஏறவல்லானை" (7.57.3) என்று சுந்தரர் சுட்டியுள்ளார். பிரணவ மந்திரமாகிய ஓங்கார வடிவமாக உள்ள எருதினை ஈசன் ஊர்தியாக உடையவர் எனச் சுந்தரர் பாடியுள்ளார். "ஓவணம் மேல் எருதென்று ஏறும் ஓணகாந்தன் தளி உளீரே" (7.5.10) திருமாலே நந்தி உருவம் கொண்டு ஈசனின் வாகனமாக உள்ளார் என்ற இன்னொரு கருத்தினையும், "வெள்ளை மால்விடை" (7.42.5) "செங்கண்மால் விடையாய்" (7.70.1) எனவரும் பாடல் பகுதிகளில் சுந்தரர் குறித்துள்ளார்.

பிரணவ மந்திரத்தின் விளக்கமாக வேதம் இருப்பதாலும், வேதத்தினை வெளிப்படுத்திய பிரமன் திருமாலின் மகனாதலாலும் பிரணவம், வேதம், திருமால், நந்தி உருவமாக அமைந்து சிவபிரானின் ஊர்தியாகவும், கொடியாகவும் விளங்குதல் கூர்ந்து நோக்குவார்க்கு நன்குப் புலனாகும். சங்க இலக்கியங்களிலும் சிவனுக்குரிய நந்தி கொடி குறிக்கப் பட்டுள்ளது. (காண்க. புறநானூறு 1.3–4 ; 56. 1–2; கலித்தொகை 25.5)

எனவே, தூய வெள்ளை நிறம் கொண்ட எருது (= நந்தி) தருமத்தின் உருவமாகவும் ஞானத்தின் வடிவமாகவும் உருவகம் செய்யப்பட்டிருத்தல் காணலாம். அப்பர் அடிகளால் சமண சமயத்தினின்றும் சைவத்திற்கு மாறிய முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னனும் அவன் வழித்தோன்றல்களும் இடபக் கொடியை இலச்சினையாகக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தான குரவருள் ஒருவராகிய உமாபதிசிவம் (கி. பி. 14 நூ) தில்லை நடராசர் கோயிலின் உற்சவ நாளில் மற்றவரால் ஏற்ற முடியாமலிருந்த நந்திகொடியைக் கம்பத்தில் ஏற்றிப் பறக்கவிடும் பொருட்டுக் கொடிக்கவி பாடிய வரலாறும் இங்குச் சுட்டத்தக்கது. இச்சாத்திர நூலின் முதற்பாடலில்,

"திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே" (1)

என்று சித்தாந்தப் பொருள் விளங்கும்படி கொடிக்கவியைப் பாடியிருத்தல் அறியத்தக்கது. ஆணவம், கன்மம், மாயை என்னும் திரிமலங்களில் மூழ்கிக் கிடக்கும் உயிர், அந்தப் பாசப் பிணிப்பினின்றும் விடுபட்டுத் திருவருளைக் கூடும் பொருட்டும் அதன் பயனாகப் பேரின்பத்தில் திளைக்கும் பொருட்டும் நந்தி கொடியைக் கட்டியதாக உமாபதிசிவம் கூறுதல் எண்ணத்தக்கது.

எனவே, அறத்தின் வடிவமாகவும் ஞானத்தின் சொரூபமாகவும் விளங்கும் சிவபிரானின் நந்தி கொடியைச் சைவநன் மக்கள் விழாக்காலங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் உரிய இடங்களில் கம்பத்தில் உயர்த்தியும் மன்றத்தில் இருத்தியும் மனங்கனிந்து போற்றித் திருவருளைப் பெற்று உய்வார்களாக!



திரு நீறு (விபூதி)

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவ சின்னங்களில் ஒன்றாய திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு.

தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தலினால் விபூதி எனவும், ஒளியைக் கொடுப்பதினால் பசிதம் எனவும், பாவங்களை எரித்து நீறாக்குவதனால் பசுமம் எனவும், தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால் – காப்பதனால் இரட்சை எனவும் உயிர்களது மலத்தை நீக்குதலால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெள்ளை நிறத் திருநீறு அணியத்தக்கதாகும். ஏனைய நிறத் திருநீறு அணியத்தகாதது. வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளம். வெள்ளை நிறத் திருநீற்றை அணிவதனால் எமது அகமும் புறமுந்தூய்மை அடைகின்றன.

இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும், எரிதல் திருவருள் பதிதலையும், எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர் பெரியோர்.

திருநீறு இருவகையாகத் தரிக்கப்படும். ஒன்று உத்தூளனம் பரவிப் பூசுதலையே இப்பெயர்கொண்டழைப்பர். இரண்டாவது வகை திரிபுண்டரம் எனப்படும். திருநீற்றை நீரிற் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர். சமயதீட்சை பெற்றோர் மாத்திரமே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையவர்கள். இவ்வாறு தரிக்கும் போது கீழ்வரும் விதிகள் கவனிக்கப்பட வேண்டியனவாகும். குறிகள் வளையாதும், இடையறாதும், ஒன்றையொன்று தீண்டாதும், அகலாதும், ஒவ்வோர் அங்குல இடைவெளியிருத்தல் போன்றவையே அந்நியதி விதிகளாகும். திரிபுண்டரமாக அணிதற்குரிய உறுப்புக்கள் உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிகட்டுக்கள் இரண்டு, விலாப்புறங்கள், முதுகு, கழுத்து எனும் பதினாறுமாம்.

திருநீறு அணியும்பொழுது உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும். அதனைத்தரிக்கும்போது சிவபெருமானைத் தியானித்துப் பரமாணுவள வாயினும் நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து, "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டு, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். தரையிலே சிந்தப்பெற்றால், சிந்திய நீற்றை எடுத்துவிட்டு அவ்விடத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.



சைவ சமயத்தின் தோற்றப்பாடுகளுக்கும் அவை தொடர்பான நூல்களுக்குமான விளக்கம்

நீதியரசர்
க. வி. விக்னேஸ்வரன்

குழந்தைகளுக்குப் பரீட்சயமான, ஏன் நாங்கள் ஒவ்வொருவரும் குழந்தைகளாகக் கேட்டு இரசித்த ஒரு சிறுகதையுடன் தொடங்குகிறேன். ஏழு கண்பார்வையற்றவர்கள். அவர்களை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்றார்கள் அவர்களின் நண்பர்கள். பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் ஓசைகளை மட்டும் இரசித்து வந்த அவர்கள் யானை இருக்கும் இடத்திற்கு வந்ததும் "இதுதான் யானை" என்றார்கள் நண்பர்கள். "யானை என்றால் என்ன?" என்று ஒரு கண்பார்வையற்றவர் கேட்டார். "நிலத்தில் வாழ் மிருகங்களுக்குள் மிகப் பெரியது அது தான்" என்றார்கள் நண்பர்கள். "அப்படியா! அதை நாங்கள் தொட்டுப் பார்க்க வேண்டும்" என்று எல்லாக் கண்பார்வையற்றவர்களுங் கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொருவரையும் ஒரு நண்பர் அழைத்துச் சென்று யானையின் ஒவ்வொரு அவயவங்களையுந் தொட்டு உணர வைத்தார். மிருகக் காட்சிசாலை விஜயம் முடிந்தது! தத்தமது வீடு திரும்பினார்கள் பார்வையற்றவர்கள். முதலாமவரிடம் அவர் வீட்டார் கேட்டனர் "யானையைத் தொட்டுப் பார்த்தீர்களாமே? எப்படி இருந்தது?" என்று. "அடடா! அது ஒரு பெரிய மரக்கட்டை போல் இருந்தது" என்றார் முதலாமவர். யானைக்காலை மட்டும் ஸ்பரிசித்தவர் அவர். இரண்டாமவரிடம் அவர் வீட்டார் கேட்டதற்கு "யானை ஒரு பெரிய முறம் போன்ற வடிவுடையது" என்றார். யானையின் காதைத் தொட்டுணர்ந்தவர் அவர். மூன்றாமவர் "ஆடி நெளியும் வாழைத்தண்டு போன்றது" என்றார். தும்பிக்கை அவர் தொட்டுப் பார்த்த அவயவம். நான்காமவர் "சவுக்கின் நுனி போல்" என்றார். யானை வாலைத்தான் அவர் தொட்டுப் பார்த்திருந்தார். ஐந்தாமவர் "விசாலமான கற்பாறை போன்றது" என்றார். அவர் யானைக்குக் கீழிருந்து அதன் வயிற்றைத் தொட்டுப் பார்த்தவர். ஆறாமவர் "தலைகீழாகத் தொங்கிய நாதஸ்வர வாத்தியம் போல் மிகக் கெட்டியாக நீண்டு இருந்தது யானை" என்றார். அவருக்கு யானைத் தந்தமானது நாதஸ்வர வாத்தியத்தை நினைவுபடுத்தியது. ஏழாமவர் "ஒரு குன்றின் மேல் அமர்வது போல் பெரிய ஒரு கற் குன்றில் அமர்ந்திருந்தேன். குன்று போன்றது யானை"



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் கொழும்பு விவேகானந்த சபை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசையையொட்டி 16.11.2006இல் நடத்திய "நாவலர் காட்டிய வழியில் வாழ்வோமாக" எனும் தொனிப்பொருளிலான ஆன்மீகக் கருத்தரங்கில் திரு. க. வி. விக்னேஸ்வரன் அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரை கட்டுரையாக வெளியிடப்படுகிறது.

என்றார். அவர் மட்டும் யானையின் மேல் வீற்றிருக்க வாய்ப்புப் பெற்றிருந்தார். ஒவ்வொருவருந் தாம் உணர்ந்ததை உரைத்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருஞ் சொன்னது ஓரளவு உண்மையே. ஆனால் முழு உண்மையானது அவர்கள் ஒவ்வொருவரின் கூற்றிற்கு அப்பாற்பட்டது என்பது யானையை முழுமையாகப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

அண்மையில் சமாதியடைந்த சுவாமி சாந்தானந்த சரஸ்வதி அவர்கள் கூறுவார்- உண்மையை முழுமையாக அறிந்தவன் ப்ரம்மன் ஒருவனே என்று. சோதிடர்கள் நூற்றுக்கு ஐம்பது சத விகிதம் நடக்கப் போவதைக் கணித்துக் கூறுவார்கள். ஞானிகள் 75 சதவிகிதம் ஞானப் பார்வையால் கூறுவார்கள். ஆனால் ப்ரம்மன் ஒருவனுக்கே முக்காலமும் முற்றாகத் தெரியும் என்று அவர் கூறுவார். உண்மை என்பதின் ஒரு பகுதியையே நாங்கள் ஒவ்வொருவரும் காண்கிறோம். அதுதான் உண்மை. இறைவன் பற்றி ஒவ்வொரு மதமும், அத்துடன் எங்கள் மதத்தின் உட் பிரிவுகள் ஒவ்வொன்றும் கூறுவது யாவும் உண்மையே. ஒவ்வொரு சமயக் குரவர்களும் ஆதிமுனிவர்களும் தாம் கண்டதைத் தமக்குத் தெரிந்த விதத்தில் விளக்கியுள்ளார்கள். அவர்கள் வழிநின்று பார்த்தால் அவர்கள் கூறுவது சரியாகத்தான் தெரியும். ஆனால் முற்றான உண்மை எது? என்று அறிய அல்லது உணர நாங்கள் மற்றவர்களின் தயவை நாடமுடியாது. அதை நாங்களே உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

அறிவுக்கு அப்பாற்பட்டவன் இறைவன். அவனை உணரத்தான் முடியும். அறிந்து கொள்ள முடியாது. காரணம் அறிவு என்பது தெரிந்ததில் இருந்து தான் தெரியாததை எடைபோடுகிறது. கண்பார்வையற்றோருக்குத் தாம் தெரிந்து வைத்திருந்த மரக்கட்டை, முறம், வாழைத்தண்டு, சவுக்கு நுனி, பாறை, நாதஸ்வரம், கற்குன்று போன்றவற்றின் உதவியுடன் தான் யானையை விளக்கத் தெரிந்தது. தாங்கள் முறையே தொட்டுப் பார்த்த யானையின் கால், காது, துதிக்கை, வால், உடலின் கீழ்ப்புறம், தந்தம், உடலின் மேற்புறம் போன்றவற்றைத் தமக்குத் தெரிந்த வேறு பொருட்களுடன் ஒப்பிட்டே விளக்கினார்கள். அது தான் அறிவு. அறிவு என்பது பழைமையில் இருந்துதான் உருவாக்கப்பட்ட தொன்று. அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றினை அறிவு கண்டால் அதற்குத் தெரிந்த ஏதாவது ஒரு பொருளுடன் ஒப்பிட்டுத்தான் அது தெரியாததை விளக்கும். ஆகவே அறிவு என்பது பழைமையில் இருந்து, இறந்தகாலத்தில் இருந்து உருவாக்கப்படும் ஒன்று. அது காலத்துடன் சம்பந்தப்பட்டது. உண்மை என்பது நிலையாக நீண்டு இருப்பது. அது காலத்துக்கு அப்பாற்பட்டது. அதை அறிவு கொண்டு காண முடியாது. அறிவினால் முழுமையாக விளக்க முடியாது. விளக்க எத்தனிக்கையில் நாங்கள் காலத்திற்குக் கட்டுப்படுகிறோம். இறைமை காலத்திற்கு அப்பாற்பட்டது. ஆகவே அதை உணரத்தான் முடியும். உணர்வில் காலத்தின் தாக்கம் இருக்காது.

உணர்வுகள் என்பன வித்தியாசமானவை. ஒவ்வொருவருக்கு ஒரு உணர்வு. ஒரு பெண்ணைக் கண்டதும் என் உள்ளத்தில் எழும் உணர்வுகள் உங்கள் உள்ளத்தில் எழத் தேவையில்லை. உங்களுட் சிலர் தாயின் வடிவமாகப் பார்ப்பீர்கள். நானோ ஒரு மகளாகப் பார்ப்பேன். இன்னொருவர் காம இச்சையுடன் பார்ப்பார். உணர்வுகள் வேறுபட்டவை. உண்மையை ஆராயப் புகுந்தவர்கள் எதை எவர் எவர் உணர்ந்தார்களோ அதனை அவர் அவர் அறிவுக்கு ஏற்ற வகையில் ஞானிகளும் முனிசிரேஷ்டர்களுஞ் சொல்லிவிட்டுப் போய் இருக்கின்றார்கள். அவர்கள் சொன்னவற்றில் பல ஒற்றுமைகளும் இருந்தன. வேற்றுமைகளும் இருந்தன. ஒற்றுமைகள் அனைத்தையுஞ் சேர்த்து இந்து சமயம் என்று இன்று நாமஞ் சூட்டியிருக்கிறோம். வேற்றுமைகளில் ஒன்று சைவசமயம். அதற்கும் மற்றைய இந்து சமயக் கோட்பாடுகளுக்கும் இடையில் சில வேற்றுமைகள் உள்ளன. அதே நேரத்தில் சைவசமயத்தின் சில அடிப்படைத் தத்துவங்கள் இந்து சமயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இந்து சமயம் என்று கூறும்போது அது பல தரிசனங்களை உள்ளடக்கி நிற்கின்றது. அந்தத் தரிசனங்களில் ஒன்று தான் சைவசமயம்.

சைவசமயத்தைப் பற்றி ஆராயமுன்னர் முதலில் தத்துவஞானம் பற்றிப் பொதுவாக ஆராய்வோம்.

தத்துவ ஞானந்தான் இந்துக்களின் பரம்பரைச் சொத்து. தத்துவம் என்றால் உண்மை என்று அர்த்தம். மேல் நாட்டில் ஒரே பெயரைப் பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பத்தினர் பாவித்து வருவார்கள். நாங்கள் அப்படியில்லை. எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு பெயர். எங்கள் தனித்துவத்தை மதித்தே நாம் வாழ்ந்து வந்துள்ளோம். சமயத்தைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொருவரும் உண்மையைத் தாம் கண்டறிந்த விதத்தில் கூறிச் சென்றுள்ளார்கள். அவர்கள் பெயர்கள் கூடச் சரியாகப் பதியப்படவில்லை. பதிய வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. காரணம் பார்வை அல்லது தரிசனம் மட்டுமே உண்மை; என்றும் உள்ளதே உண்மை; அதை உணர்வதே உண்மை; பார்ப்பவன் அல்லது தரிசிப்பவன் அதில் புகுந்து குட்டையைக் கிளப்பினால் தரிசனத்தின் தன்மை வலு இழந்துவிடும். உண்மைக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே தத்துவ ஞானத்தைப் பாரம்பரியமாக நாங்கள் பாதுகாத்து வந்துள்ளோம். ஆனால் தரிசித்தவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. பலரின் தரிசனங்களை ஒன்றிணைத்து, சேர்த்துக் கூட்டிக் கழித்து காலாதிகாலமாகச் சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே பேணிப் போற்றிக் கொண்டுவந்துள்ளோம்.

மேலை நாட்டினர் புறவுலக ஆராய்ச்சியில் கவனம் செலுத்தினர் என்றால் நாங்கள் அக உலக ஆராய்ச்சியிலேயே நூற்றாண்டுகள் காலமாக ஈடுபட்டு வந்துள்ளோம். இராமாயணத்தை எழுதிய வான்மீகி முனிவர் அன்றே கூறியிருந்தார் - "மனமே கருமங்களுக்கு ஆணிவேர். இந்திரியங்கள் மனதில் உதித்து, அதிலிருந்து வெளிச் சென்று அவை ஆற்றும் காரியங்களே நற்கருமங்கள், தீய கருமங்கள்

என்ற நாமங்களைப் பெறுகின்றன. ஆகவே மனதைக் கட்டுப்படுத்து. உன் வெளியுலகக் கருமங்கள் தாமாகவே கட்டுப்படுத்தப்படுவன" என்று. இந்த சூட்சுமத்தைச் சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே அறிந்து வைத்திருந்தனர் இந்துக்கள். ஆகவே அகம் சார் ஆராய்ச்சியே அவர்களுக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. புறத்தின் மீது அவர்களுக்குப் பற்று இருக்கவில்லை. அன்று புறத்தை நாடிய மேலை நாட்டினர் இன்று அகம் சார் ஆராய்ச்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். கீழைத்தேய மக்கள் புறஞ்சார் ஆராய்ச்சியில் இப்பொழுது கரிசனை காட்டிவருகின்றனர்.

வாழ்க்கையின் விந்தை இது. மனித ஆசைகளின் பிரதிபலிப்பு. இக்கரைக்கு அக்கரை பச்சை.

மக்கள் தம் வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்களைக் கண்டு, அதன் காரணத்தை அறிந்து, அத்துன்பத்தைப் போக்க வழிகாணும் நோக்கத்துடன்தான் இந்திய உப கண்டத்தில் அகம்சார் ஆராய்ச்சி நடைபெற்றது. கொள்கையளவில் நிற்காது வாழ்க்கையோடு ஒன்றாகக் கலந்து நிற்பதே இந்திய தத்துவ ஞானத்தின் சிறப்பியல்பு.

உண்மை என்பது என்றும் உள்ளதொன்றென்றால் அதனை அறிய அந்த உண்மையறிவிற்குச் சாதகமாக அமைந்துள்ளவற்றை இந்துக்கள் பிரமாணங்கள் அல்லது ஆதாரங்கள் என்று குறிப்பிட்டனர். உண்மையை அறிய நம் கண், காது, மூக்கு, நாக்கு, உடல் உணர்வு ஆகியன எவ்வளவு தூரம் பயன்படும், நம் அறிவு எவ்வளவு தூரம் பயன்படும், நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற நூல்கள் எவ்வளவு தூரம் பயன்படும், என்பவற்றை ஆராய்ந்தபோது அவ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட பொறிகள் அல்லது இந்திரியங்கள், நூல்கள் ஆகியன பிரமாணங்கள் என்று குறிப்பிடப்பட்டன. பிரமாணங்கள் ஆராயப்பட்டு அவற்றின் முடிவுகளே இன்றைய சமயங்களின் சாராம்சமாகத் திகழ்கின்றன. இந்திய தத்துவ ஞான முடிவுகள் வேதம், உபநிடதம், ஆகமம் எனப்பட்ட மிகப் பழைய வடமொழி நூல்களிலேயே இடம் பெற்றுள்ளன. இவையே இந்திய தத்துவ ஞானத்துக்கு ஆதார இலக்கியங்களாக அமைகின்றன. வேதங்கள் இறைவனால் அருளப் பெற்றவை என்பது ஐதீகம்.

வேதத்தை ஒப்புக் கொள்வோர் வைதீகர் என்றும் ஒப்புக் கொள்ளாதவரை அவைதீகர் என்றும் அழைத்தார்கள். இந்தியாவில் இந்து சமயம் இன்று உலகாயதர், சமணர், பௌத்தர் ஆகிய அவைதீகர்களையும் உள்ளடக்கி இருக்கிறது. வைதீகர் என்று அழைக்கப்பட்டவர்கள் சாங்கியர், யோக மதத்தினர், நையாயிகர், மீமாம்சகர், வேதாந்திகள், சித்தாந்திகள் எனப்பட்ட உட்பிரிவுகளுக்குள் அடங்குவர். வேதத்தை ஏற்பதோ ஏற்காததோ ஒருபுறம் இருக்க, வேதத்தை அடிப்படையாக வைத்து அதற்குச் சார்பாகவோ முரணாகவோ தர்க்கித்து வந்தபடியால் வேதங்களை இந்து மதத்தின் மூல இலக்கியம் என்று கூறினர். ஆனால் பைபிளை அல்லது குர்ஆனை நம்பினால் முறையே கிறிஸ்தவன் அல்லது இஸ்லாமியன், அவ்வாறு நம்பாவிட்டால் அவன் அநாகரிகச் சமயச் சார்பற்றவன் என்ற விதத்தில் வேதங்களை ஒரு நம்பிக்கைப் பொருளாக்கவில்லை ஆதி இந்தியத் தத்துவஞானிகள். தமது அறிவையும் அனுபவத்தையும் வேதங்கள் என்ற உரைகல்லில் உராவிய பிறகு வேத வாக்குகள் ஒப்புக் கொள்ளத்தக்கன என்று கண்ட பின்பே அவற்றைத் தமது சமயங்களின் அடிப்படை நூலாக ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு ஒப்புக் கொள்ளாதவர்களும் வேதங்களையே தமது சமயங்களுக்கான உரைகல் ஆக்கினர். ஞானிகள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் பார்வைக்கு ஏற்ப உண்மை உணர்த்தப்பட்டது. வேதம் ஒன்று. பார்வைகள் பல. ஆகவே தான் வெவ்வேறு ஞானிகளின் காட்சிக்குப் புலப்பட்ட பேருண்மைகளைத் தரிசனங்கள் என்று கூறி ஷட் தரிசனங்கள் அல்லது ஆறு பார்வைகள் என்று குறிப்பிட்டனர். நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம் என்பவையே இந்த ஆறு பார்வைகளுமாவன. இங்கு சைவசித்தாந்தம் அடங்கவில்லை என்பதை அவதானித்திருப்பீர்கள். சைவ சித்தாந்தம் வேதத்தை விட ஆகமங்களையே சிறப்பாகக் கைக்கொண்டு வந்துள்ளது.

ஆகவே உண்மையை உணர்த்த வந்த வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் ஆகியன இந்து மதத்தின் அடிப்படை நூல்கள் எனலாம். இவற்றிற்கு முரண்பட்டவிதத்தில் எழுந்த அவைதீக மதங்கள் உலகாயதம் (Materialism), சமணம் (Jainism), பௌத்தம் (Buddhism) என்பன. சார்பான விதத்தில் எழுந்த வைதீக மதங்கள் சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், மீமாம்சை, வேதாந்தம் என்பன. ஆகமங்களைச் சிறப்பாகப் பின்பற்றி எழுந்தது சைவ சித்தாந்தம். வேதாந்தத்திலும் மூன்று பார்வைகள் உண்டு. வேத உபநிடதங்களின் சாரத்தை உணர்த்த வெளிவந்த நூல் வேதாந்த சூத்திரம். அதற்கு மூன்று பேர் வேறுவேறாக விளக்கங்கள் அளித்தனர். அவர்கள் சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகியோர். அவர்களின் விளக்கங்கள் முறையே அத்வைத வேதாந்தம், இராமானுஜ வேதாந்தம், மத்வவேதாந்தம் என்ற உட் பிரிவுகளை உண்டாக்கின.

ஒரு முக்கியமான தகவலை இந்த இடத்தில் நான் உங்களுக்குத் தந்துதவ வேண்டும். சங்கராச்சாரியாரின் குருவின் குருவான கௌதபாதர் ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்லிச் சென்றுள்ளார். அதாவது "உண்மை என்பது ஆயிரம் முரண்பட்ட கருத்துக்களைத் தன்னுள் அடக்கி அதற்கு அப்பாலுந் தனித்து ஒளிரக் கூடியது" என்றார். இங்குதான் பார்வைகளின் வேறுபாடுகள் புரிகின்றன. ஒரு யானையை வெவ்வேறு பேர் தாம் உணர்ந்த விதத்தில் வியாக்கியானம் செய்து இப்படித்தான் யானை இருக்கும் என்றனர். அவர்கள் சொன்னவை ஒவ்வொன்றும் உண்மையே. ஆனால் அதற்கு அப்பாலும் யானை என்ற முழுமையான உண்மை தானாக நின்று கொண்டிருந்தது என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. எமது பார்வைகளில், உணர்வுகளில், எங்கள் பழைமையும் நாங்கள் வாழ்ந்து வந்த விதமும், அறிந்து வைத்திருந்த அறிவும் தகவல்களும், அனுபவித்த உணர்வுகளும் இருந்து கொண்டே இருப்பன. அவற்றின்

உதவி கொண்டே அறிவுக்கு அப்பாற்பட்ட, உணர்விற்கு அப்பாற்பட்ட, காலத்திற்கு அப்பாற்பட்ட, ஏதோ ஒன்றினை உணரவும் அது பற்றிப் பேசவும் விழைகிறோம். எங்கள் சூழல்களின் வரையறைகள், அறிவின், ஆற்றலின், உணர்வின் வரையறைகள் ஆகியவற்றை வைத்துத்தான் எங்கள் தரிசனங்கள், ஆன்மீகப் பார்வைகள் அமைந்துள்ளன. அங்கு வேறுபாடுகள் எழுவது சகஜம் என்றே கொள்ள வேண்டும். சமயங்கள் உண்மையை உணர்த்துவனவே அன்றி உண்மையானது சமயங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை நாங்கள் மனதில் வைத்திருக்கவேண்டும். சமயத் தர்க்கங்களும் பார்வைகள் பற்றியதே. யார் ஒருவன் தர்க்கத்தில் சிறந்தவரோ, யார் ஒருவருக்கு இறைபலம் அப்பொழுது கிடைத்ததோ அவரின் தரிசனம் காலத்திற்குக் காலம் கூடிய மக்களின் பேராதரவைக் கொண்டு இயங்கியது.

இந்த முரண்பாடுகளை மும்முரப்படுத்தி, தர்க்கித்து அதன் பெறுபேறாக ஒரு தரிசனம் மற்றவற்றிலும் சிறந்தது என்று மக்கள் ஏற்றுக்கொள்வது அம் மக்கள் மனதில் நிகழும் ஒரு சம்பவம் என்பதை நாங்கள் மறக்கக்கூடாது. ஆனால் உண்மை அதற்கப்பால் தனித்தியங்கிக் கொண்டிருக்கிறது. நான் சிறுவனாக இருந்தபோது ஒரு படத்தைப் பார்த்தேன். அதில் ஒரு இறையடியார் ஒரு சபதம் எடுக்கிறார். இறைவன் அவருக்கு உண்மையை உணர்த்தியதும் அவர் தான் சபதம் எடுத்தற்கான காரணம் பிழை என்று உணர்கிறார். என்றாலுஞ் சபதம் எடுத்தது எடுத்தது தான் என்று கூறுகிறார். அப்பொழுது இறைவன் கூறும் விடயந்தான் இங்கு குறிப்பிடற்பாலது. "உன்னுடைய சபதம் உனக்குரியது. உண்மை எனக்குரியது. உன் சபதம் என்னைப் பாதிக்காது" என்கிறார். அதே போலத்தான் பார்வைகள், தரிசனங்கள் உண்மையைப் பாதிக்கா. இறைவனைப் பாதிக்கா. அவற்றின் முரண்பாடுகள் எங்களைத்தான் பாதிப்பன. எங்களுக்குள் அடிபிடி நடப்பது இறைவனுக்காக அல்ல. எங்கள் ஆணவத்தின் நிமித்தமே. "நான் சொல்வதுதான் உண்மை. என் மதமான சைவசித்தாந்தம் சொல்வதுதான் உண்மை, மற்றவை பொய்" என்று கூறும்போது இறைவனைப் பற்றியதாகத் தர்க்கிக்கப்படுங் கருப்பொருள் அமைந்தாலும் அங்கு தாண்டவமாடுவது ஆணவம், சுயநலம், அகங்காரம் ஆகியவையே.

இதை உணர்ந்தே வேதங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளன- "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்று. அதாவது "உண்மை ஒன்று பார்வைகள் பல" என்று. இங்கு அதிகமாகப் பிரசன்னமாய் இருப்பவர்கள் சமயம் போதிக்கும் ஆசிரியர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளேன். ஆகவே அடுத்து வேதம் பற்றியும் ஒவ்வொரு பார்வை அல்லது தரிசனம் பற்றியும் ஒரு சில அறிமுக வார்த்தைகளைக் கூறிவிட்டுக் கடந்து செல்வேன்.

"வித்" என்ற சொல்லில் இருந்தே வேதம் என்ற சொல் வந்தது. அறிதல் என்பது அதன் பொருள். அறிதலைத் தரும் நூல்கள் வேதங்கள் ஆகின. அறிவு இருவகைப்படும். உலகப்பொருட்களைப் பற்றிய அறிவு ஒன்று. உலகம் பற்றிய அறிவு அடுத்தது. ஏன் இந்த உலகம் உருவாகியது? எதிலிருந்து உருவாகியது? எப்படி உருவாகியது? என்று ஆராயப் புகுந்தபோதுதான் வேதங்கள் உருவாகின. அவை பற்றிய ஆதி ஞானிகளின் கருத்துக்கள் பின் வந்த இந்திய தத்துவ ஞானத்திற்கு அஸ்திவாரமாக அமைந்தன. என்னுடைய தமிழ் ஆசான் கி. இலக்ஷ்மண ஐயர் அவர்கள், இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பரிசு பெற்ற "இந்திய தத்துவஞானம்" என்ற தமது நூலில் "சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்திய தத்துவ ஞானத் துறையிலே ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான விருத்தியனைத்தும் வேதங்களிலே காணப்படும் சில வாக்கியங்களுக்கு விளக்கமும், அந்த விளக்கத்திற்கு விளக்கமுமாக எழுந்தவையே" எனக் கூறுகிறார். சைவசித்தாந்த நூலாகிய சிவஞான போதத்தின் சிறப்பைக் கூறவந்த ஆசிரியர் "நெய்க்கு எங்ஙனம் பசு பிறப்பிடம் ஆகியதோ அதே போல் சிவஞானபோதத்திற்கு மூலம் வேதமே" என்று கூறியுள்ளார். பௌத்தக் கருத்துக்களுக்குப் பாளி மொழி போல், புத்தருக்கு முன்னைய காலத்தில் இருந்தே சமய தத்துவக் கருத்துக்களை வெளியிட வடமொழி பாவிக்கப்பட்டு வந்ததால் தமிழ் மக்களும் வடமொழியில் எழுதப்பட்ட வேதங்களைக் கற்றறிந்து தமது சொந்தத் தத்துவ நூல்களை, அவற்றை ஒட்டித் தமிழில் ஆக்கினர் என்று சிலர் கூறுவதில் தவறு காணமுடியாது. அப்படி இல்லை. வடமொழிக்கு முன் தமிழிலேயே முதலில் தத்துவக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன என்று கூறுவாரும் உளர். ஆனால் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அக்கூற்றினை இதுவரையில் ஏற்பதாக இல்லை.

ஆதி காலத்தில் மக்களின் மொழி வேறாகவும் மேதைகளின் மொழி வேறாகவும் இருந்ததை நாம் அவதானிக்கலாம். ஆனால் இன்று வடமொழி வேதங்களின் நெறிவேறு, பழந்தமிழ் நெறி வேறு என்று கூறித் தேவார திருவாசகங்கள் கூறுங் கருத்துக்கள் வடமொழி வேதங்கள் அல்ல என்றும் கூறுவதைக் காண்கிறோம். முதலில் நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய விடயம் இறைவன் மொழிக்கு அப்பாற்பட்டவன். எல்லா மொழிகளும் அவனிடத்தில் இருந்துதான் வந்துள்ளன. ஆகவே எந்த மொழியிலும் இறைமை எங்களை வந்தடையலாம். சென்ற நூற்றாண்டில் மேரி மாதா சில குழந்தைகளுக்குப் பிரசன்னமாகி அவர்களின் போர்த்துக்கேய மொழியில் பேசியதாகக் கூறப்படுகிறது. எங்களை வந்தடைந்த மொழி தமிழ் என்றதால் நாங்கள் தமிழ் நெறி வேறு என்று கூறக்கூடும். இரண்டாவதாக உண்மை என்பது என்றென்றும் எந்த மொழியில் கூறியிருப்பினும் அது உண்மையே. வடமொழிக்கு வேறு உண்மை, தமிழ் மொழிக்கு வேறு உண்மை என்று கூறிவிடமுடியாது. இதை வடமொழி, தமிழ்மொழி நூல்களின் அடிப்படையில் எடுத்து விளக்கலாம். இருக்கு வேதத்தில் சிவன் என்ற சொல்லும் அவன் நீலகண்டன் என்ற வர்ணனையும் காணப்படுகின்றன. புறநானூற்றிலும் "நீலமணி மிடற்று ஒருவன்." என்ற சொற்றொடர் வருகிறது. சிவன் என்ற சொல்

காணப்படவில்லை. ஆனால் நீலகண்டனின் வர்ணனையை இரு மொழிகளிலும் காண்கிறோம். மேலும் "தேவாரம் வேதசாரம்" என்றொரு நூலைக் காசிவாசி செந்தில் நாதையர் எழுதினார். அதில் தேவாரங்களில் உள்ள அதே கருத்துக்கள் வேதங்களிலும் உள்ளன என்பதை நிரூபிக்க வேத சுலோகங்களையும் அவற்றின் தமிழ் விளக்கங்களையும் எழுதி அவற்றிற்குப் பக்கத்திலே அதே கருத்துடைய தேவாரங்களையும் எழுதி வெளியிட்டார். தேவாரங்கள் வேத சாரம் எனில் திருவாசகம் உபநிடத சாரம் என்பர். உபநிடத வாக்கியங்களிலுள்ள அதேகருத்துக்களைத் திருவாசகத்தில் காண முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. சிவஞான போதத்திற்கும் வேதமே பிறப்பிடம் என்பதைக் கண்டோம். ஆகவே இந்திய உபகண்டத்தில் பண்டிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களே வேதக் கருத்துக்கள். அவை வடமொழியிலும் வெளிவந்தன. தமிழிலும் வெளிவந்தன. உண்மையை மொழிக்கு அப்பால் நாங்கள் கண்டு கொள்வதுதான் உகந்தது என்று நான் கருதுகிறேன். வெவ்வேறு மொழிகளின் அடிப்படையில் எங்கள் முன்னோர்கள் விட்டுச் சென்ற மறைகளை நாங்கள் மறக்காது இருக்க வேண்டும்.

வேதங்கள் நான்கு. அவை இருக்கு, யஜூர், சாமம், அதர்வணம் ஆவன. இவை ஒவ்வொன்றிற்கும் மந்திரப் பகுதி, பிராமணப் பகுதி, உபநிடதப் பகுதி என்று மூன்று பகுதிகள் உண்டு. மந்திரங்கள் என்பன இறைவனைத் துதிபாடும் பாடல்கள். அந்த மந்திரங்களை முறையாக உச்சரித்தால் உச்சரிப்பவரும் அவரின் சூழலும் பாதுகாக்கப்படுவன. இன்று க்ரிலியன் ஒளிப்படம் Kirlian Photography என்று ஒன்றுண்டு. மந்திரங்கள் உச்சரிக்கப்படும் போது சூழலில் ஏற்படும் நன் மாற்றங்களை இந்த ஒளிப்படம் ஊடாகப் படம் எடுத்துள்ளார்கள். அழகான உருவங்கள் ஒவ்வொரு விதமான மந்திர உச்சாடணம் முறையாகச் செய்யும்போது சூழலில் படிவதைக் கண்டுள்ளார்கள். மந்திரங்கள் என்றால் காப்பாற்றுஞ் சொல் என்று அர்த்தம். அண்மையில் பல மகான்கள் வேதத்தில் இருந்து எமக்குத் தந்துதவியுள்ள, இந்தக் காலகட்டத்தில் பாதுகாக்கக் கூடிய, மந்திரந்தான் மகாமிருத்துஞ்ய மந்திரம். ஒரு அம்மையார் சில வருடங்களுக்கு முன் சாகக் கிடந்தார். அங்கு அவரைப் பார்க்கச் சென்றபோது சுவாமி ஆத்மகணாநந்தா அவர்களும் சுவாமி இராஜேஸ்வராநந்தா அவர்களும் அங்கு வந்திருந்தனர். சுவாமிஜி கேட்டுக் கொண்டதால் நாங்கள் மூவரும் மகாமிருத்துஞ்ய மந்திரத்தை 108 தடவைகள் உச்சரித்தோம். அதன் பின்னர் சுமார் இரண்டு வருடங்கள் வாழ்ந்து, அண்மையில் தான் கண்மூடினார் அந்த அம்மையார். யமனை வெல்ல வல்லது அந்த மந்திரம்.

"த்ரயம் பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவ பந்தனான்
மிருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்"

என்ற இந்த வேத மந்திரம் இன்றைய காலப் பாதுகாப்பிற்காகப் பல ஞானிகளால் சிபார்சு பண்ணப்பட்டுள்ளது.

மந்திரங்களை வாய் உச்சரிக்கும்போது அனுஷ்டிக்க வேண்டிய கிரியைகள், சமயச் சடங்குகள் ஆகிய செயல்களை விவரிப்பவையே ப்ராமணங்கள். கர்ம அனுஷ்டானங்களை விதந்து பேசும் பகுதியே அவை.

அடுத்து மந்திரங்கள், ப்ராமாணங்கள் ஆகியவற்றின் தத்துவங்களை ஆராய்பவைதான் உபநிடதங்கள். முன்னையவை பக்தியையும் கன்மத்தையும் வலியுறுத்தின வென்றால் உபநிடதங்கள் ஞானத்தைப் போதிக்கின்றன. பேராசிரியர் இராதாகிருஷ்ணன் அவர்கள் முதலில் மந்திரங்கள் ஆக்கப்பட்டு, பின்னர் அவற்றை உச்சரித்த புரோகிதர்களால் மந்திரங்களுக்குரிய ப்ராமணங்கள் வகுக்கப்பட்டு, கடைசியில் அவைபற்றிய தத்துவங்களை விவரிக்கும் உபநிடதங்கள் காலக்கிரமத்தில் எழுந்திருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

இயற்கையின் பகுதிகளாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றைத் தெய்வங்களாக்கி அவற்றுக்குச் செலுத்தும் வழிபாடுகளாகவே வேத மந்திரங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. அக்னியிடம் பொருட்களைக் கொடுத்தால் அது உரியவரிடஞ் சேர்க்கும் என்ற முறையில் யாகங்கள் அமைந்தன. ஆனால் வேதங்கள் வெறுமனே இயற்கையை வழிபட வைத்தவை அல்ல. இயற்கையில் காணும் ஒவ்வொன்றுக்கும் மூலப்பொருள் ஒன்று இருக்க வேண்டும் என்பதை எம் முன்னோர்கள் உணர்ந்திருந்தார்கள். கிணற்றினுள் ஏதோ ஒரு விலையுயர்ந்த பொருளொன்று விழுந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். ஒரு ஏணியையோ கயிற்றையோ கிணற்றினுள் செலுத்தி அதன் வழியாகக் கீழே சென்று விழுந்த பொருளை எடுத்து வெளிவருகிறோம் அல்லவா? அப்படித்தான் இயற்கை வழிபாடு இந்து மதத்தில் அமைந்தது. நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பவை மனிதனால் படைக்கப்படாதவை. யாரோ ஒருவரால் அல்லது ஏதோ ஒன்றினால் படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏன் என்றால் காரணம் இல்லாமல் காரியம் நிகழ்வதில்லை. மூலகாரணனை நாம் காணும் இயற்கைக் காரியங்களின் அடியில் காணலாம் என்ற அடிப்படையில்த்தான் இயற்கையின் செயல்கள் ஒவ்வொன்றிற்குந் தெய்வங்களை முன்னிறுத்தி, மழைக்குக் காரணன் வருணன் என்றும், மின்னலுக்கும் முழக்கத்திற்கும் காரணன் இந்திரன் என்றும் நெருப்புக்கு அக்னிதேவன் என்றும் கூறி அவர்கள் யாவருக்கும் மூலகாரணன் பரப்பிரம்மமே என்ற இறுதி நிலைக்கு வந்தார்கள். ஒரு பரம்பொருளின் ஆக்ஞையை நிறுவுவதே இந்தப் பல்வேறு தெய்வங்களின் கடமை என்ற அடிப்படையில், இயற்கையில் ஒழுங்கு முறை ஒன்றினைக் கடைப்பிடிப்பதற்கு இத்தெய்வங்களை ஒரு ஒழுங்கமைப்பில் வைத்துக் கொள்பவன் பரம்பொருளே என்ற முடிவுக்கு வந்தார்கள்.

பொலிஸ் மா அதிபர் இருக்கிறார். அவரின் கீழ் பிரதிப் பொலிஸ் அதிபர்கள், அத்தியட்சகர்கள், பிரதி

அத்தியட்சகர்கள், கண்காணிப்பாளர்கள், பிரதிக் கண்காணிப்பளர்கள், காவலர்கள் என்று பலர் இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட பணிகள் இருக்கின்றன. அவ்வவர்களை அண்டினால் அந்தந்தக் காரியங்களைச் செய்விக்கலாம். ஆனால் அவர்கள் யாவரும் பொலிஸ் மா அதிபருக்குக் கட்டுப்பட்டவர்கள். சிறு வேலைகளுக்குக் கீழ் மட்ட அலுவலர்கள், பெரிய வேலைகளுக்கு மேல்மட்ட அலுவலர்கள், அனைத்துக்கும் பொலிஸ் மா அதிபர் என்ற ஒழுங்கில் சேவை நடைபெறுகிறது. அது போலத்தான் இந்து மதத்தில் பல்தெய்வ வழிபாடும், ஏக தெய்வ வழிபாடும் பக்கம் பக்கமாக இடம் பெற்று வருகின்றன. இவற்றின் ஆரம்பம் வேதங்களில் காணப்படுகின்றன. அதாவது Polytheism என்ற பல்தெய்வ வாதம் படிப்படியாக Monotheism என்ற ஒரு தெய்வமாக மாறி பின்னர் Monism எனப்படும் ஏக பொருள் வாதமாக மாறிய கருத்து வளர்ச்சியை வேதங்களில் காண்கிறோம்.

உபநிடதங்கள் பற்றியும் ஓரிரு வார்த்தைகள் கூறிவிட்டு வெவ்வேறு தரிசனங்களை ஆராய்வோம். வேதங்களின் ஒரு பகுதியே உபநிடதங்கள். வேதங்களை மந்திரப் பகுதி, ப்ராமணப்பகுதி, உபநிடதப் பகுதி என்று முன்னர் பிரித்துக் குறிப்பிட்டோம். உபநிடதங்கள் வேதத்தின் சாரங்கள் ஆவன. அவை வேதங்களின் முடிவை அல்லது உட்கிடையைக் கூறுகின்றன. ஆனால் அவை கிரியைகளுக்குஞ் சடங்குகளுக்கும் எதிர் என்று கொள்ளக்கூடாது. ஞானம், பக்தி, கர்மம் ஆகிய மூன்றுமே தேவை என்ற விதத்தில் ஈசாவாசிய உபநிடதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "ஞானமின்றிக் கிரியைகளையுஞ் சடங்குகளையும் கைக்கொள்கின்றவர்கள் காரிருளில் கிடக்கின்றார்கள். ஆனால் செய்ய வேண்டிய கருமங்களைப் புறக்கணித்து விட்டு வேதாந்த ஆராய்ச்சிகளிலே மட்டும் மகிழ்ச்சியடைந்து திருப்தி அடைபவர்கள் அதைவிடப் பெரிய அந்தகாரத்தில் மூழ்குவார்கள்" என்று.

இதைத்தான் பின்னர் வந்த சங்கராச்சாரியாரும் "பஜகோவிந்தம் பஜ கோவிந்தம் கோவிந்தம் பஜ மூடமதே; சம்ப்ராப்த காலே சன்னிஹித காலே நகி நகி இரக்ஷதி துக்ரின் கரனே" என்றார். அதாவது "கோவிந்தனின் நாமத்தை எந்நேரமும் உச்சரிப்பாயாக. உயிர்போகுந் தறுவாயில் இலக்கண விதிகள் உனக்குத் துணையாக வரமாட்டா" என்றார். வேதாந்த ஆராய்ச்சிகள் தேவை. ஆனால் அவற்றினுள் அமிழ்ந்திருந்தால் இறைமையை உணர்வது கடினம்.

உபநிடதம் என்றால் அருகில் இருத்தல் என்று பொருள். குருவின் அருகில் இருத்தலையே குறிக்கின்றது. மிக அண்மித்திருந்து அரிய விடயங்களைக் குருவிடம் இருந்து அறிந்து கொண்டதால் அவ்வாறு அறிந்தவற்றை உபநிடதங்கள் என்றார்கள். கேள்வி பதில்களாகப் பல உபநிடதங்கள் அமைந்திருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

இந்து சமயத்திற்கு அடிப்படை நூல்கள் மூன்று. அவை வேதத்தின் சாரமான உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகியனவாகும். வேதங்களின் முடிவுகளை குறுகிய செய்யுட்களில் அடக்கி இனிதாக அம்முடிவுகள் விளங்கத் திட்பம், நுட்பம் சிறந்து வருவதே பிரம்ம சூத்திரம்.
அடுத்து பகவத்கீதை. துக்கத்திற்குக் காரணம் பற்று; பற்றை நீக்குவதே துக்கத்தைப் போக்கும் வழி; எவ்வாறு பற்றை நீக்குவது என்று பகவான் புகல்வது பகவத் கீதையில். "கடமையைச் செய் அதன் பலனில் பற்று வைக்காதே" அதுவே பகவான் கீதையில் அருளிய உபதேசத்தின் சாராம்சம்.

உலோகாயதம், சமணம், பௌத்தம் ஆகிய அவைதிக தத்துவங்களை விட்டு விட்டு அடுத்து வைதிகத் தத்துவங்களுக்கு வருவோம்.

வேத உபநிடதங்களை அடிப்படை ஆதார வாக்குகளாக ஏற்குந் தரிசனங்கள் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம், சித்தாந்தம் என்பன.

மதங்கள் யாவும் ஈடுபடுவது இப் பிரபஞ்சத்தின் தோற்றம், விரிவு, ஒடுக்கம் ஆகியவற்றை ஆராயும் பணியிலேயே. அதே தருணத்தில் இப்பிரபஞ்சத்தின் ஒரு அங்கமாக இருக்கும் மனிதனையும் உள்ளும் புறமும் ஆராய்வன மதங்கள்.

எங்கள் எல்லோருக்கும் இரண்டு வித அனுபவங்கள் உண்டு. "நான்" என்ற ஒன்று நிலையாக எம்முள் இருப்பதான அனுபவம் ஒன்று. நாமும் எமது புறமும் சதா மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது என்பது மற்றோர் அனுபவம். இவற்றுள் எது உண்மை என்ற கேள்வி எழுகிறது. வேதாந்தம் கூறுகிறது "நான்" என்ற நிலைபேறு தான் உண்மை என்று. "நானே எல்லாமாக இருக்கிறேன். மாற்றம் வெறும் பொய்" என்கின்றது. பௌத்தம் அதற்கு முழு வித்தியாசமாகக் கூறுகிறது. "மாற்றந்தான் உண்மை. சதாமாறிக் கொண்டிருப்பது தான் உலக நியதி. நான் என்ற நிலைபேறு பொய்" என்கின்றது. இந்த இரு எல்லைகளுக்கும் இடையில்தான் மற்றைய பிரிவுகள் அடங்குகின்றன.

சாங்கியம் என்றால் பூரண அறிவு என்பது பொருள். சாங்கியத் தத்துவ வாதப்படி மாற்றமும் உண்மை, நிலைபேறும் உண்மை. ஆனால் மாற்றமடையும் அசேதனப் பொருளான பிரகிருதி அறிவுள்ள பொருள் ஆகாது. அதே நேரம் அறிவே சொரூபமானபொருள் எதுவோ அது மாற்றம் அடையாது. அதுதான் புருஷன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆத்மாவைத் தான் புருஷன் என்கிறார்கள். பிரகிருதியில் இருந்து உலகம் தோன்றி அதனுள் மறையும். புருஷன் நிலையாக மாற்றம் அடையாது எஞ்ஞான்றும் இருக்கும். இருப்பினும் புருஷன் எப்படியோ தன் தூய நிலையில் இருந்து வழுவிப் பிரகிருதியின் வலையிலே சிக்கிக் கொண்டுள்ளான். அதில் இருந்து மீண்டு உண்மை அறிவு நிலையை அடைவதே சாங்கியத்தின் நோக்கு. ஆனால் சாங்கியர் கடவுள் உள்ளார் என்பதை ஏற்கமாட்டார். வேதத்தை ஏற்றும் கடவுளை ஏற்கமாட்டார்கள் சாங்கியர். அவர்கள்

கருத்துப்படி பிரகிருதி தானாக, முக்குணங்கள் ஊடாக அதாவது சத்வம், இரஜசம், தாமசம் ஆகியவற்றின் ஊடாக இயங்கிக் கொண்டே இருக்கும். உலகில் உள்ள சகலதும் உலகுக்குக் காரணமான பிரகிருதியிலே சூக்குமமாக அடங்கியுள்ளது. இந்த உலகம் காரணம், காரியம் ஆகியவற்றால் நடைபெறுகிறது. ஆனால் காரணப் பொருளில் உள்ளவைதான் காரியப்பொருளிலும் இருக்கும் என்ற சத்காரிய வாதமே சாங்கியர்கள் கோட்பாடு. காரணம் எள் என்றால், காரியம் எண்ணெய். ஆனால் எள்ளில் எண்ணெய் முன்னமே இருந்தால்தான் அது காரியமாக உருவெடுக்கிறது. உள்ளதுதான் வரும், இல்லாதது வராது என்பது சாங்கியர் கொள்கை. சாங்கியத் திருஷ்டியை முதலில் முறைப்படுத்தி வெளியிட்டவர் பெயர் கபிலர் என்பார்கள்.

அடுத்து யோகம் என்பதும் சாங்கியத்துடன் தொடர்புபட்டது. சாங்கியயோகம் என்று இரண்டையுஞ் சேர்த்து அறிஞர்கள் குறிப்பிடுவர். உயிர் புருஷன் உடல் பிரகிருதி. உயிரானது பிரகிருதியுடன் சேரும்போது அது பிரகிருதியால் பாதிக்கப்படுகிறது. பாதிப்பில் இருந்து நீங்கித் தூய நிலை அடைவதை யோகம் போதிக்கின்றது. யோகம் பொதுவாகச் சேர்தல் என்ற பொருளில் பாவிக்கப்படும். இறைவனுடன் தன்னைச் சேர்த்தலே யோகம் என்று நாம் குறிப்பிடுவோம். ஆனால் தரிசனங்களில் ஒன்றான யோகம் பிரகிருதியில் இருந்து புருஷன் பிரிதலையே யோகம் என்கிறது. யோக சூத்திரம் எழுதியவர் பதஞ்சலி முனிவர். யோகம் என்பது கூடிய நடைமுறைச் சாத்தியமான ஒரு திருஷ்டி. சாங்கியம் கொள்கைகளை விபரிக்க, யோகம் நடைமுறை வழிவகைகளைத் தந்துள்ளது. இதனால் சாங்கியம் வீடு பேற்றுக்கு ஞான மார்க்கத்தையும் யோகம் தியானத்தையும் வற்புறுத்துகின்றன. சித்த சுத்தி ஏற்பட்டு "நான்" என்ற நினைவு அறவே ஒழிதலே யோகமாகும். சித்தசுத்தி பொருட்டு யமம், நியமம் என்ற இருவிதிகளை முன்வைத்தது யோகம். இப்படியான நடத்தை தகாது என்றது யமம். இப்படியான நடத்தையே தகும் என்றது நியமம். சித்தசுத்தியில் ஈடுபட்ட பின் ஆசனம், பிராணாயாமம் செய்ய வேண்டும். முறையாக யோகத்திற்கு உட்காருவது ஆசனம். மூச்சைப் பரிபாலிக்கும் முறையைக் கூறுவது பிராணாயாமம். இவற்றின் உதவியால் புலன்கள் வெளிப்பொருட்களின் மீது செல்லாது தடுக்கப்படுகின்றன. அவ்வாறு தடுப்பது பிரத்தியாகாரம் எனப்படும். அப்போது மனம் ஒரு நிலைப்படும். அதுவே தாரணம். இந்த நிலைக்கு வந்தால்தான் தியானம் கைகூடும். தியானத்தின் பயனாக விளைவதே கடைசி நிலையான சமாதி. புருஷன் பிரகிருத்தித்தளையில் இருந்து விடுபட்டுத் தனது பூரணப்பொலிவுடன் விளங்கும் நிலையே சமாதி. அந்நிலையில் ஆசையும் துன்பமும் ஒருவனை அணுகமாட்டா.

யோகம் சாங்கியத்தில் இருந்து வேறுபடுவது கடவுள் உண்டு என்ற கோட்பாட்டில். பிரகிருதி உலகைச் சிருட்டிக்க இறைவனும் ஒரு காரணன் என்கின்றது யோகம்.

கடவுளை ஒப்புக் கொள்ளாத மதங்கள் யாவும் ஞான மார்க்கத்தையே வற்புறுத்துவன. சாங்கியத்தில் பக்திக்கு இடமில்லை. பௌத்தத்துக்குப் பக்திக்கு இடமில்லை. ஆனால் யோகம் அதை ஏற்கிறது. பக்திக்கு அதில் இடமுண்டு.

யோக மதத்தினரின் கடவுள் எல்லாம் அறிபவன், என்றும் உள்ளவன். ஆனால் எல்லாவற்றையும் தன்னுள் அடக்குபவன் அல்ல. அவன் படைக்க மாட்டான். படைப்புக்குத் துணைபுரிவான்.

அடுத்து வைசேடிகத்திற்கு வருவோம். வைசேடிகள் வேறொரு கோணத்தில் இருந்து பார்த்தனர். எங்கள் மனமா அல்லது வெளி உலகா உண்மை? என்று கேட்டு இரண்டும் உண்மையே என்று பதில் அளித்த மெய்மைவாதமே வைசேடிகம். வைசேடிகத்தை விளக்கும் நூல்களுக்குள்ளே மிகப் பழையது கணாத முனிவரால் இயற்றப்பட்ட வைசேடிக சூத்திரம். இந்த உலகம் மாயை என்று வேறுசிலர் கூற வைசேடிகர், "இல்லை, உலகும் உண்மை; அதில் உள்ள பொருள்களும் உண்மை" என்று வாதித்தனர். அழியாத பரமாணுக்களின் சேர்க்கையே இவ்வுலகம் என்பது அவர்கள் வாதம். கடுகும் மலையும் அணுக்களின் சேர்க்கையே. இந்த அணுக்களின் சேர்க்கை என்ற வாதத்தைச் சமணரும் ஏற்பர். பௌத்தர்களின் ஒரு சாராரும் ஏற்பர். ஆகவே வைசேடிகள் ஆன்மாவும் உண்மை; புறத்தேயிருக்கும் பொருட்களும் உண்மை என்று தமது கொள்கைகளை வெளியிட்டனர். உலகத் தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணம் ஐம்பூதங்களின் அணுக்கள், காலம், இடம், ஆத்மா, மனம் என்று கூறுவார்கள்.

அடுத்து நியாயம். நையாயிகர்களும் மெய்ம்மைவாதிகளே. இவர்கள் நியாயத்திற்கு முதலிடம் அளித்தார்கள். எமக்கு வெளியில் காண்பவையாவும் உண்மையே என்று கூறுவர் அவர்கள். நையாயிகர் பிரத்தியட்சத்தை லௌகீகப் பிரத்தியட்சம், அலௌகீகப் பிரத்தியட்சம் என்று இரண்டாகப் பிரித்தனர். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐவகைப் புலன்கள் லௌகிகப் பிரத்தியட்சம் ஆவன. வெளியில் உள்ளதை அடையாளம் காணல் அலௌகிகப் பிரத்தியட்சம். இவர்கள் பிரத்தியட்சம், அநுமானம், ஆபத் வாக்கியம், உபமானம் ஆகிய நான்கு பிரமாணங்களை ஒப்புக் கொண்டனர்.

இதுவரையில் வைதீகர்கள் என்று குறிப்பிட்ட சாங்கியர், யோக மதத்தினர், வைசேடிகள், நையாயிகர் ஆகியோர் வேதத்தை ஏற்பனர் என்றாலும் வேதத்தில் கூறப்பட்டவை நமது அறிவைக் கொண்டு நிலைநாட்டவேண்டும் என்றும் எதிர்பார்த்தார்கள். அதனால் அவர்களின் நிலை நாட்டல் நடைமுறை வித்தியாசமாக ஒவ்வொரு மதத்திலும் மேற்கொள்ளப்பட்டன.

ஐந்தாவது தத்துவப் பார்வை மீமாம்சை எனப்படும். வேத வாக்கை ஒப்பற்ற முழுமுதற் பிரமாணமாக, வேறு எந்த ஆதாரத்தையும் வேண்டாது ஏற்றுக் கொள்வதுதான் மீமாம்சை. ஆனாலும் மீமாம்சை என்ற பதத்தின் பொருள் "ஆராய்தல்" என்பதாகும். முழுமனே ஆராய்ச்சியின்றி

வேதத்தை ஏற்கும் மீமாம்சைக்கு ஆராய்தல் என்ற இந்தப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது விசித்திரமே.

சாங்கியமும் யோகமும் நெருங்கிய தொடர்புடையன என்றும் அதேபோல வைசேடிகமும் நியாயமும் நெருங்கிய தொடர்புடையன என்றும் கண்டோம். அடுத்து மீமாம்சையும் வேதாந்தமும் நெருங்கிய தொடர்புடையவை. மந்திரம், பிராமணம், உபநிடதம் ஆகியவற்றை உள்ளடக்கியதே வேதம். பிராமணங்களை ஆதாரமாகக்கொண்டு எழுந்ததே மீமாம்சை. அதேபோல் உபநிடதங்களை ஆதாரமாகக் கொண்டு எழுந்ததே வேதாந்தம். மீமாம்சையைப் பூர்வ மீமாம்சை எனவும் வேதாந்தத்தை உத்தர மீமாம்சை எனவும் குறிப்பிடுவது வழக்கம். தற்போது மீமாம்சை என்றால் பூர்வ மீமாம்சையையே குறிக்கும். வேதாந்தத்தை உத்தர மீமாம்சை என்று குறிப்பிடும் வழக்கம் இப்பொழுது அருகிவிட்டது.

மீமாம்சை கிரியைகளுக்கு முதலிடம் அளித்துள்ளது. இன்ன இன்ன பலன்களைப் பெறுவதற்கு இன்ன இன்ன கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று வேதத்தின் பிராமணப் பகுதியை ஆதாரமாகக் கொண்டு இம்மதம் வழங்கி வருகிறது. சைமினி என்பவரால் இயற்றப்பட்ட கி.மு. 300 அல்லது 400ஆம் ஆண்டில் வெளிவந்த மீமாம்ச சூத்திரமே இம் மதத்தின் முக்கிய நூல்.

மீமாம்சையும் உலகம் உண்மையானது என்ற கொள்கை உடையது. ஆனால் பொருள்களால் ஆனது என்று கூறும் நியாய வைசேடிகள், பொருள் வேறு, அதன் குணம் வேறு, பொருளையும் குணத்தையும் இணைக்குஞ் சம்பந்தம் வேறு என்று ஒரு பொருளிலே மூன்று பொருள் இருப்பதாகக் கருதுவர். மீமாம்சகரோ "பொருளும் குணமும் ஒன்றும் அல்ல, வேறும் அல்ல, ஒன்றும் வேறுமே" என்று கொள்வார்கள். ஆன்மாக்கள் என்றும் உள்ளவை என்று மீமாம்சகர் நியாய வைசேடிகர்கள் போல் ஏற்றுக் கொள்வர். ஆனால் கடவுளை ஏற்பதாகத் தெரியவில்லை. அதாவது அவர்கள் இலக்கியத்தில் கடவுள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் வேதத்தை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். வேதத்தை இறைவன் அருளினான் என்பதை அவர்கள் ஏற்கமாட்டார்கள். புருஷன் அற்ற அதாவது ஆக்குவோன் அற்ற அபௌர்ஷேயமே வேதம் என்பார்கள். அதாவது வேதத்திற்கு ஆக்கியோன் கிடையாது என்பது அவர்கள் கொள்கை. முழுமுதற்கடவுளை ஏற்காத மீமாம்சகர் தெய்வங்களை ஏற்பர். யாகங்களை முறைப்படி செய்தால் தெய்வங்கள் வேண்டுவதைக் கொடுக்க வேண்டியது அவர்கள் கடமை என்றவாறே தெய்வங்கள் சம்பந்தமாக மீமாம்சகர் கருத்துத் தெரிவித்தனர்.

அடுத்து வேதாந்தத்திற்கு வருவோம்.

இலங்கையில் இன்று இந்துமக்களிடையேயான கருத்து வேறுபாடுகளே இந்த வேதாந்திகளுக்கும் சித்தாந்திகளுக்கும் இடையிற்றான். இராமகிருஷ்ணமிஷன், சின்மய மிஷன் போன்ற நிறுவனங்கள் வேதாந்தத்தைப் பின்பற்றுவதாகவும், உள்ளூர் இந்து மக்களின் பாரம்பரிய மதம் சித்தாந்தமே என்று கூறி இலங்கைத் தமிழர்களின் மதம் சைவ சித்தாந்தமே. அவர்கள் வேதாந்தத்தைப் பின்பற்றலாமா என்றெல்லாம் கேள்வி எழுந்துள்ளது. இந்த வேதாந்த சித்தாந்தச் சொற்போர்களும் தர்க்கங்களும் இன்று நேற்றுத் தொடங்கியவை அல்ல. பல நூற்றாண்டு காலமாகத் தர்க்கிக்கப்பட்டு வருபவை.

இந்திய தத்துவ சாஸ்திரத்தில் கூறப்படும் சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம் ஆகிய மதங்களுக்கும் வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய மதங்களுக்கும் இடையில் ஒரு பெரும் வேற்றுமை உண்டு. முன்னவை பெரும்பாலும் நூல்களில் மட்டுமே காணப்படுவன. அவை வழக்கில் உள்ளன அல்ல. அம்மதங்களைப் பின்பற்றுவோரை இன்று காண்பது அரிது. ஆனால் வேதாந்தமும் சித்தாந்தமும் வழக்கில் உள்ள மதங்கள்.

உங்களுள் பலர் இந்து மதம் போதிக்கும் ஆசிரியர்கள் என்பதனாலேயே வழக்கில் இல்லா மதங்கள் பற்றி இதுவரை சில நிமிடங்கள் செலவழித்தேன்.

இந்து மதத்தினுள் வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இரண்டுமே அதிக பின்பற்றாளர்களைக் கொண்டிருக்கின்றன. வேதத்தின் அந்தமே வேதாந்தம் என்பர். மந்திரம், பிராமணம், உபநிடதம் ஆகிய மூன்றும் காலத்தால் ஒன்றன்பின் ஒன்றாய் எழுந்து பிற்காலத்தில் அவை மூன்றையுஞ் சேர்த்து வேதங்கள் என்று குறிப்பிட்டார்கள் என்று ஏற்கனவே கூறினேன். வேதங்களைப் படிப்போரும் அதே வரிசைக் கிரமத்தில்தான் வேதமந்திரங்களை முதலில் பயின்று பின்னர் பிராமணங்களைப் பயின்று கடைசியாக உபநிடதங்களைக் கற்பார்கள். வேத வரிசையிலே கடைசியாய் அமைவது உபநிடதம். வேதாந்தம் என்ற சொல்லும் உபநிடதங்களையே குறிக்கும். ஆகவே, வேதாந்தம் உபநிடதங்களின் சாரம் என்று பொருள்படும். வேதத்தின் அந்தமான உபநிடத சாராம்சமே வேதாந்தம் என்று கொள்ளலாம்.

சாங்கியர் மூலப் பொருட்கள் இரண்டு என்றனர். வேதாந்திகள் மூலப்பொருள் ஒன்றே என்றனர். வேதாந்த சூத்திரம் அல்லது பிரம்ம சூத்திரம் பாதராயணரால் ஆக்கப்பட்டது. பாதராயணரே முதன்முதலில் வேதாந்தம் என்ற சொற்றொடரைப் பாவித்துள்ளார். மூலப்பொருள் ஒன்று என்றும் வீடுபேறு அடைய ஞானமே வழி என்றும் அவர் தமது நூலில் கூறினார்.

பாதராயணரின் வேதாந்த சூத்திரம் மிகச் சுருக்கமாகவே சூத்திரங்களாகத் தரப்பட்டுள்ளன. இதனால் அவர் கூறியவற்றின் உண்மைத் தாற்பரியத்தை அறிவது மிகக் கடினமாக இருந்தது. ஆகவே அறிஞர்கள் பலர் அதனை வாசித்துத் தத்தமது கருத்துக்களை வெளியிட்டுவைத்தனர். அவர்களுள் தலைசிறந்தவர் தான் சங்கரர். ஆதிசங்கரரின் வேதாந்த சூத்திர பாஷ்யமே இன்றைய வேதாந்தத்திற்கு பிராமணநூல் எனலாம். 32 வருடமே வாழ்ந்த சங்கரர் இயற்றிய நூல்கள் பல. சாதித்த சாதனைகள் நிகரற்றவை. அவரால் அறிமுகப்படுத்தப்பட்டதே அத்வைத வேதாந்தம். சங்கரரின் குரு கோவிந்தர். அவர் குரு நான் முன்னர் குறிப்பிட்ட கௌதபாதர். கௌதபாதர் எழுதிய மாண்டூக்கிய

காரிகை என்ற மாண்டூக்ய உபநிடத விளக்கம் சங்கரரின் ஆத்வைத வேதாந்தக் கருத்துக்கள் முழுமை பெறப் பெரிதும் உதவின.

பொதுவாகக் கூறுவதாகில் "உலகம் பொய். நம் அறியாமையால் இல்லாத ஒன்றை இருப்பதாகக் கருதுகிறோம்" என்பதே வேதாந்திகளின் கொள்கை எனப்படும். உலகத்தைப் பொய் என்று கூறும் போது அதன் அர்த்தம் என்ன என்று விபரிக்கப் புகுந்த சங்கரர் விவர்த்த வாதம் என்ற வாதத்தினை அறிமுகஞ் செய்தார். அதாவது சிருஷ்டி நிகழ்வதாகத் தோன்றுகின்றதே யொழிய உண்மையில் சிருஷ்டி எதுவும் நிகழவில்லை. பிரம்மம் உலகாக மாறுவதாகக் காணப்படுகின்றதே யொழிய உண்மையில் பிரம்மத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுவதில்லை எனக் கண்டார் சங்கரர். ஒருபொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாகக் காணப்படுவதற்கே விவர்த்தனம் என்று பெயர். தெருவில் போகும்போது கயிறு பாம்பாகத் தென்படுவது உதாரணமாகக் கூறப்படும். இதன்படி காரணமாகிய கயிறு அதாவது பிரம்மன் உண்மை. அதிலிருந்து தோன்றிய காரியமாகிய பாம்பு அதாவது உலகம் உண்மையல்ல. பௌத்தத்துடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் காரணமும் உண்மை அல்ல; காரியமும் உண்மையல்ல; பிரம்மமும் இல்லை; உலகமும் இல்லை. உண்மையில் உள்ளது ஒன்றும் இல்லை என்ற கருத்துப்படும்படி சூனியவாதம் ஒன்றையே பௌத்தம் முன்வைத்துள்ளது. இன்னுமொரு வாதம் இருக்கிறது. அதன் பெயர் பரிணாம வாதம். அதன்படி பிரம்மம் மாறுவதாகத் தோன்றுவது மட்டும் அல்ல, அது உண்மையாகவே மாறி உலக சிருஷ்டி நிகழ்கின்றது. இந்த மாற்றந்தான் பரிணாமம் எனப்படுகிறது. பால் மாறித் தயிராவது இதற்கு உதாரணமாகக் காட்டப்படுகிறது. பாலும் உண்மை. தயிரும் உண்மை. அதாவது காரணமாகிய பிரம்மமும் உண்மை. அதிலிருந்து தோன்றும் காரியமாகிய இவ்வுலகமும் உண்மை. பிரம்மம் உண்மையாக மாற அது உலகமாகியது. சைவசித்தாந்தம் இந்தப் பரிணாம வாதத்திற்கு அண்மைத்தையது. வேதாந்தத்தின்படி மெய்யுணர்வு பெற்று உண்மையை அறியும்வரை உலகம் உலகமாகவே தோன்றும். கயிறு என்ற மெய்யுணர்வு வரும்வரை அது பாம்பாகவே தோன்றும். உலகம் ஒரு தோற்றமே என்பதுதான் உபநிடதங்களின் உட்கருத்து. அதை விளக்க விவர்த்தவாதம் சங்கரருக்குப் பயன்பட்டது. எது எக்காலத்திலும் உள்ளதோ அதுவே உண்மைப் பொருள். இந்த நியதிப்படி பார்த்தால் உலகம் உண்மையல்ல. இந்த உண்மை, பொய்களை விளக்க கௌதபாதர் கனவுலகையும் நனவுலகையும் உதாரணங்காட்டி இருந்தார்.

வேதாந்தத்திலே ஞானமே முக்கியம் என்பதால் பக்திக்கோ நியம நிஷ்டைகளுக்கோ இடமில்லை என்று கூறிவிடமுடியாது. மெய்ஞானத்தை எய்த நல்லொழுக்கம், நியம நிஷ்டை, இறைவழிபாடு ஆகியன துணையாய் இருப்பன என்பதே வேதாந்தக் கொள்கை. சங்கரரே விஷ்ணு பேரிலும் சிவன் பேரிலும் அற்புதமான தோத்திரங்கள் பாடியுள்ளார். அவரின் பஜகோவிந்தம் பற்றி ஏற்கனவே இப் பேச்சில் குறிப்பிட்டுள்ளேன்.

இராமானுஜரும் சங்கரரைப் போன்ற ஒரு மாபெரும் தமிழகத் தத்துவஞானி. அவரும் சங்கரர்போல் பிரம்மசூத்திரத்திற்கும் பகவத்கீதைக்கும் விரிவுரைகள் எழுதினார். சங்கரருக்குப் பிற்பட்ட காலத்தவர் இராமானுஜர். இராமனுஜர் கொள்கைகளைக் கூறும் வேதாந்தம் விசிஷ்ட்டாத்வைதம் என்று அழைக்கப்பட்டது. அவர் கருத்துப்படி இந்த உலகம் ஒரு தோற்றமல்ல. அது உண்மையாகவே உள்ளது. காரணமாகிய பிரம்மமும் உண்மை. அக் காரணத்திலிருந்து உற்பத்தியாகும் காரியமாகிய உலகமும் உண்மை என்ற பரிணாமவாதமே இராமானுஜர் கருத்து. அவர் கருத்துப்படி இறைவன் அனைத்துள்ளும் வியாபித்து நின்று அவற்றை இயக்குகின்றான். நமது உடலை உயிர் இயக்குகிறது. உயிரை இறைவன் இயக்குகின்றான். எனவே உயிர்கள் அனைத்தும், உலகமும் இறைவனது சரீரமே என்றார் அவர். ஆகவே இறைவனை விட மற்றவை பொய் என்று சங்கரர் கூறியதை அவர் மறுத்தார். அவர் கருத்துப்படி உலகம், உயிர், இறைவன் ஆகிய மூன்றும் உண்மைப் பொருட்கள். ஆனால் இறைவன் உயிர்களுள்ளும் உலகினுள்ளும் நின்று அந்தர்யாமியாய் இயங்குகின்றான். அதுவும் அத்வைதந்தான். "உள்ளவை பல அல்ல, உள்ளது ஒன்றுதான்" என்ற உபநிடதக் கருத்தை மேற்கூறியாறு விளக்கினார் இராமானுஜர். இராமானுஜருக்கும் சைவசித்தாந்தத்திற்குமிடையில் பல ஒற்றுமைகள் உண்டு. சைவசித்தாந்திகள் போல் இராமானுஜரும் ஒரு மெய்மைவாதி. அத்துடன் புராணங்கள், ஆகமங்கள் ஆகியவற்றையும் அவர் பிரமாணமாய் ஏற்றுக் கொண்டிருந்தார். நாயன்மார்களுடைய பாசுரங்கள் மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மகிமையடைந்தது போலவே விசிஷ்ட்டாத்வைத தத்துவங்கள் ஆழ்வார்களுடைய திவ்விய பிரபந்தங்களால் மகிமையடைந்தன. இராமானுஜர் கருத்துப்படி பரம்பொருள் திருமால். சைவ சித்தாந்தத்தின்படி சிவனே பரம்பொருள்.

வேதாந்தத்தின் மூன்றாம் பார்வை மத்வாச்சியாருடையது. அவர் பார்வையை துவைதம், துவைதாத்வைதம் என்று அழைப்பர். உபநிடதக் கருத்துக்களில் பல முரண்பாடுகள் இருந்த காரணத்தினால் ஆதி காலந் தொடக்கம் பல ஞானிகள் முரண்பாடுகளை நீக்கி ஒருமைப்பாட்டைக் காண முயன்றுள்ளார்கள். ஆனால் அவர்கள் பிரயத்தனங்கள் ஈற்றில் முரண்பாடுகளிலேயே முடிவுற்றன. அதனால்தான் வேதாந்திகளுள்ளேயே சங்கரரது கேவலாத்வைதம், இராமானுஜரின் விசிஷ்ட்டாத்வைதம் மத்துவாச்சாரியாரின் துவைதம், துவைதாத்வைதம் ஆகிய உட்பிரிவுகள் எழுந்தன."

மத்வரும் தென்இந்தியரே. உடுப்பியில் 1199ஆம் ஆண்டு பிறந்தவர். இவரும் பிரம்ம சூத்திரம், கீதை போன்ற நூல்களுக்குப் பாஷ்யங்கள் எழுதியுள்ளார். இவர் அத்வைதம்? என்ற இரண்டு அல்லா நிலையைவிட்டு, துவைதம் என்ற

ஆன்மா, இறைவன் ஆகிய இரண்டுமே வேறு வேறு என்ற கருத்தைத் தெரிவித்தார். ஆன்மாவும் இறைவனும் ஒன்றெனும் நிலையை ஒருபோதும் அடைவதில்லை என்பதே இவரின் கருத்து.

இறைவனும் ஆன்மாவும் இரண்டல்ல என்று கூறியதால் சங்கரர் கொள்கை அத்துவைதம்ஸ்ரீஅத்வைதம் எனப்பட்டது. அவையிரண்டும் இரண்டுதான் என்பதால் மத்வரின் வாதம் துவைதம் என்று அழைக்கப்பட்டது. மத்வர் புராணங்களையும் ஆகமங்களையுஞ் சிறப்பாக ஆதாரமாக்கிக் கொண்டார்.

கடைசியில் இன்றைய முக்கிய விடயத்திற்கு வருவோம். அதாவது சைவசித்தாந்தம் பற்றி ஆராய்வோம். இதுவரை எப்போப்பட்ட தடாகத்தில் சைவசமயம் மலர்ந்துள்ளது என்பதை ஆராய்ந்துள்ளோம். இனி மலர் பற்றி ஆராய்வோம். வைதீக மதங்கள் வேத உபநிடதங்களில் கூறுவனவற்றையே தங்கள் தங்கள் கோணங்களில் இருந்து தெளிவுபடுத்தின. அவர்கள் புதிதாக எதையும் சிருஷ்டித்துவிடவில்லை. ஆனால் மூலம் ஒன்றாயினும் அதனை விளக்கும்போது அறிஞர்கள் தங்கள் யுக்தியையும் அனுபவத்தையும் பயன்படுத்தியபடியால் அவர்கள் ஒவ்வொருவரது விளக்கங்களும் வேறுபட்டன. அதுதான் முரண்பாடுகளுக்கு அடிகோலியது.

சைவசித்தாந்தம் பெரும்பாலும் தமிழ்பேசும் மக்களிடையே மட்டுமே வழங்கிவந்துள்ளது. அதனால் இதனை ஆதிகாலந்தொட்டு தமிழருக்கே உரிய தத்துவக் கோட்பாடு என்று கொள்ளலாம். ஆனால் மூல முதனூல்கள் வடமொழியிலேயே இருக்கின்றன என்பதை நாம் அவதானிக்க வேண்டும். லெமூரிய எனுங் குமரிக்கண்டம் கடல் கொள்ளமுன் சைவசித்தாந்தம் இன்றைய இந்திய சமுத்திரப் பகுதியில் வியாப்பித்திருந்ததால் அக்காலகட்டத்தில் சைவம் பற்றிய படைப்புக்கள் இருந்திருக்கக் கூடும். இன்றைய இந்து சமுத்திரக் கடல் ஆய்வு அப்போப்பட்ட படைப்புக்களை வெளியெடுத்துத் தரும்வரையில் சைவ சித்தாந்தத்தின் முதனூல்கள் வடமொழியில் வெளிவந்த வேதங்கள், ஆகமங்கள் ஆவனவே என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். வேதாகமங்கள் யாவும் வடமொழியிலேயே தற்பொழுது காணப்படுகிறது. ஆனால் இங்கிருக்கும் நாங்கள் எல்லோரும் தமிழர்கள் என்பதால் இதுபற்றிய வேறுசில கருத்துக்களையும் கூறி வைக்கிறேன். மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை ஆகியோர் ஆதியில் தமிழில் நான்கு வேதங்களும் இருந்தனவென்றும் அவற்றுள் சாமவேதம் இராவணனாலே பாடப்பட்டது என்றும் காலப்போக்கில் தமிழ் வேதாகமங்கள் அழிந்துவிட்டன என்றும், வடமொழியில் இருந்தவை அழியாததால் அவற்றை மேற்கோள் காட்டவேண்டி வந்தது என்றுங் கருத்துத் தெரிவித்துள்ளனர். வேறு சிலர் முதன் முதலில் தமிழில் மட்டுமே வேதங்கள் ஆகமங்கள் இருந்தன என்றும் அவற்றைப் பின்னைய வடமொழியார் அவற்றின் அருமை தெரிந்து மொழி பெயர்த்துக்கொண்டனர் என்றும், மூலத் தமிழ் நூல்கள் அழிந்ததால் மொழி பெயர்ப்பு வடமொழி நூல்கள் அவற்றின் இடத்தைக் கைப்பற்றின என்றுங் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சைவசித்தாந்தத்திற்கு முக்கிய ஆதாரம் ஆகமங்கள். அதன் பொதுப் பிரமாண நூல்கள் வேதங்கள். ஆகமங்கள் "ஒன்றிலிருந்து வந்தது" என்று பொருள்படும். அந்த ஒன்றுதான் சிவன். இதைவிட "ஆ" என்றால் பாசம், "க" என்றால் பசு, "ம" என்றால் பதி என்று கூறி முப்பொருளையும் விளக்கப்படுத்துவதே ஆகமம் என்று கூறுவாரும் உளர். சைவாகமங்கள் மொத்தம் 28. இவற்றுள் பத்து இறைவனால் நேரே அருளப்பட்டன என்றும் ஏனையவை இறைவழி நின்ற ஞானிகளால் ஆக்கப்பட்டவை என்றும் கொள்வது மரபு. ஒவ்வொரு ஆகமமும் ஞானகாண்டம், யோககாண்டம், கிரியா காண்டம், சரியா காண்டம் என நான்கு பகுதிகளைக் கொண்டவை. இவற்றுள் ஞான காண்டமே தத்துவக் கருத்துக்களை மிகுதியாகக் கொண்டது. ஆகமங்கள் கி.மு. 1500ஆம் ஆண்டளவில் நூல்வடிவம் பெற்றன என்று கூறப்படுகின்றது. இதில் இருந்து சைவசித்தாந்த மதத்தின் தொன்மையை நாங்கள் ஊகிக்கலாம்.

ஆகமங்களில் இருந்த முரண்பாடுகளை நீக்கி ஆகமக் கருத்துக்களை ஒழுங்குபடுத்தித் தமிழ் மொழியில் பன்னிரண்டு சூத்திரங்களாய் வெளியிட்டவர் மெய்கண்ட தேவர். அதையே சிவஞானபோதம் என்று அழைக்கிறோம். இது கி.பி. 13ஆம் நூற்றாண்டிலேதான் ஆக்கப்பட்டது. சிவஞானபோதத்திற்கு முன்னமே தமிழில் சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கொண்ட நூல்களைக் காணக் கூடியதாய் இருக்கிறது. இவை சாஸ்திர நூல்கள் என்றும் தோத்திர நூல்கள் என்றும் அழைக்கப்படுவன. சாஸ்திர நூல்கள் பதினான்கு. அவற்றுள் சிவஞானபோதமும் திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் அடங்குவன. மற்றைய 11 சித்தாந்த நூல்களும் சிவஞான போதத்தை ஒட்டி அதன் பின்பு வெளிவந்தவை.

தோத்திர நூல்கள் என்றால் 12 திருமுறைகளை அது குறிக்கும். மூவரின் தேவாரங்கள் தொடங்கிச் சேக்கிழாரின் பெரியபுராணம் வரையில் உள்ள திருமுறைகளைத் தோத்திர நூல்கள் என்றழைப்பர். இவை சைவ சித்தாந்த உண்மைகளை அனுபூதிமான்களுடைய அனுபவ வாயிலாகக் கூறுவன. பத்தாம் திருமுறையே திருமந்திரம். திருமூலர் தமது நூலில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றிற்கு விளக்கம் அளித்துள்ளார்.

சிவன் என்ற சொல்லில் இருந்தே சைவம் என்பது பிறந்தது. சித்தாந்தம் என்று குறிப்பிடாது சைவசித்தாந்தம் என்று குறிப்பிடுவதில் இருந்து சிவனுக்குச் சித்தாந்தம் அளிக்கும் முக்கியத்துவம் புரிகிறது. ஆனால் சிவன் என்ற சொல் புறநானூறு, தொல்காப்பியம் போன்ற நூல்களில் காணப்படவில்லை. கடவுள் என்ற சொல்லும், சிவனைக் குறிக்கும் நீலமணி மிடற்றொருவன், கறை மிடற்றண்ணல் போன்ற சொற்களும் அந்நூல்களில் காணப்படுகின்றன. கடவுள் என்பது தமிழ்ச் சொல். அதன் அர்த்தத்தை உலகை இயக்குபவர், உள்ளத்தைக் கடந்தவர், உலகைக் கடந்தவர்

என்று மூன்று விதமாகக் கற்பித்துள்ளனர். கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரம் வேதாகமங்களே என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. ஆனால் அனுமானத்தையும் அவர்கள் பயன்படுத்தாமல் விடவில்லை. பானையைக் கொண்டு அதை வனைந்த குயவன் உளன் என்பதை அறிகிறோம். அது போல் உலகத்தைக் கொண்டு அதனைப் படைத்தவன் ஒருவன் உளன் என்று அனுமானிக்கலாம் என்கிறது சைவசித்தாந்தம். அதுமட்டுமல்ல. கர்ம வினையானது பௌத்தர், சமணர் ஆகியோராலும் ஒத்துக் கொள்ளப்படுவது. ஆன்மாக்கள் பிறக்கவும், இன்ப துன்பங்களை அனுபவிக்கவும் கர்மமே காரணம் என்றால் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதன் கர்மப் பலனைப் புசிப்பதற்கு ஏற்ற உடலைக் கொடுக்கவும், அதன் மூலம் அந்த ஆத்மா தனது கர்ம பலன்களைப் புசிக்கச் செய்யவும் ஓர் இறைவன் வேண்டும். அவன் முற்றுணர்வுடையவனாகவுந் தான் கர்மத்தால் பாதிக்கப்படாதவனாகவும் இருக்க வேண்டும் என்று கூறி கடவுள் உண்டு என்பதை இதன் மூலம் அனுமானிக்கிறார்கள் சைவசித்தாந்திகள். பௌத்தர்களுடன் தர்க்கம் செய்கையில் இந்த அனுமானத் தர்க்க முறை கையாளப்படுவதுண்டு.

சைவசித்தாந்தக் கருத்துப்படி ஆன்மாக்கள் அநேகம். அவை நித்தியமானவை. அதாவது என்றும் நிலைத்தவை. ஆன்மாவைப் பசு என்று குறிப்பிடுவர் சைவசித்தாந்திகள். பசு என்றால் கட்டுண்டது என்று பொருள். எதனால் கட்டுண்டது? ஆணவத்தால் கட்டுண்டது என்று அர்த்தம். ஆணவம் என்ற மலம் அநாதி தொட்டே ஆன்மாவைப் பற்றி நிற்கின்றது. ஆன்மா ஒருபோதும் தானாகவே தனித்து நிற்பதில்லை. ஒன்றில் ஆணவத்தைச் சார்ந்திருக்கும் அல்லது இறைவனைச் சார்ந்திருக்கும். இறைவனைச் சாரும் போது இறைவனது இயல்புகளைப் பெற்று நிற்கும். ஆணவ மலத்துடன் சார்ந்திருக்கும்போது அதன் தொடர்ச்சியாகக் கர்மம், மாயை ஆகிய ஏனைய மலங்களும் அதனை வந்தடைகின்றன. அதில் இருந்து விடுபட்டுச் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் நிற்கும் பரம்பொருளைச் சாருவதே ஆன்மாவின் இலட்சியமாகும்.

ஜீ.யூ.போப் என்ற மேனாட்டவர் இந்தியாவின் சகல இந்து சமய தரிசனங்களையும் ஊன்றி அவதானித்துவிட்டுப் பின்வருமாறு கூறினார் - "இந்தியாவிலுள்ள மதங்கள் அனைத்திலும் சைவசித்தாந்தமே மிக மேம்பட்டது என்பதில் ஐயமில்லை." என்று. இன்னுமொரு அறிஞராகிய கௌடி என்பவர் "சைவசித்தாந்தம் இந்திய சிந்தனைகளதும் உணர்வினதுஞ் சிகரம்" என்றார்.

பதி, பசு, பாசம் என்பனவே சைவசித்தாந்திகள் பேசும் மூன்று முக்கிய பொருட்கள். பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களைக் குறிக்கும். ஆன்மாக்கள் அடையும் துன்பங்களுக்கு மும் மலங்கள் தான் காரணம் என்கிறது சைவசித்தாந்தம். இந்தப் பாசத்தில் இருந்து விடுபட்டு முக்தி அடைய வழிவகுப்பதே சைவசித்தாந்தம்.

எனவே உலகைப் பற்றி, மனிதரைப் பற்றி வேத உபநிடதங்களில் கூறப்படுவனவற்றையே மேற்கண்ட மதங்கள் யாவும் கூறுகின்றன. ஆனால் விளக்கங்களில் வேற்றுமைகள், வித்தியாசங்கள், முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் சைவசித்தாந்தம் தனியிடம் பெற்றுள்ளது, அதன் வழியில் நின்றால் நாவலர் காட்டிய வழியில் நடக்கலாம்.



சக்தி வழிபாடு

உலக நாயகியான சக்தி பல திருவுருவங்களாக காட்சி தருகிறாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராஜப் பெருமானின் திருநடனம் எம் பெருமான் அம்பிகையின் பக்கம் நோக்கி ஆடுகிறார்.

"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்"
எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். "தாயினும் சிறந்ததொரு கோயிலும் இல்லை" "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றுக்கும் மேலாக எண்ணிப் போற்றினார். சக்தியை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம்.

போகசக்தி	-	பராசக்தி
வீரசக்தி	-	துர்க்கை
கோரசக்தி	-	காளி
அதிகாரசக்தி	-	நாராயணி
அருட்சக்தி	-	மனோன்மணி



இந்து மதங்களும் இயற்கை அனர்த்தங்களும்

சி. மு. தம்பிராசா
முதுதத்துவமானி – தத்துவம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்து மதங்களின் எண்ணக் கருக்களும், அடிப்படை மூலங்களின் சிந்தனைகளும், வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றிற் தோற்றம் பெற்று, வளர்ச்சியுற்று விளங்கியமை அறியமுடிகின்றது. இருந்தபோதிலும் 7ஆம் – 8ஆம் நூற்றாண்டுக் காலத்தவரான ஸ்ரீ சங்கராச்சாரியார் என்பவரே இந்து மதங்களைச் சைவம், சாக்தம், காணாபத்தியம், வைணவம், கௌமாரம், சௌரம் என வகுத்துச் சண்மதங்கள் எனத் தந்துள்ளமையால் இந்துமத வழிபாட்டு நெறிகளை ஒழுங்குபடுத்திய பிரதித்தாபகர் ஸ்ரீ சங்கராச்சாரியார் எனக் கொள்ளப்படுகின்றது.

இந்துமதங்களின் வழிபாட்டிற்குரிய கடவுளர்களின் திருநாமங்கள் வேறுபட்டிருப்பினும் அவை முறையே 'ஓம் சிவாய நம' ஓம் சிவாயை நம' 'ஓம் கணபதியே நம' 'ஓம் நாராயணாய நம' 'ஓம் சரவணபவாய நம' 'ஓம் ஆதித்தாய நம' என அவர்களுக்குரிய மந்திரங்களின் முன் நிற்பது 'ஓம்' என்னும் மொழியே. சண்மதங்கள் அல்லது இந்துமதங்கள் 'ஓம்' என்பதனை ஏற்று, அதனை முன்னிலைப்படுத்தி நிற்றலின் இந்துமதங்கள் யாவும் அடிப்படைத் தத்துவங்களில் ஒருமைப்பாடான சிந்தனைகளைக் கொண்டுள்ளன என்பது தெட்டத் தெளிவு.

'ஓம்' என்னும் சொல் அ + உ + ம் என்னும் மூன்று எழுத்துக் களின் வடிவமாகும். இவ்வெழுத்துக்கள் முப்பொருள்களான பதி, பசு, பாசம் என்பனவற்றைச் சுட்டி நின்று; மேலும் அவற்றின் விரிவான பதி, பசு, ஆணவம், கன்மம், மாயை என்னும் ஐந்து பொருள்களையும் விரித்துரை செய்கின்றது. 'ஓம்' என்பது ஒங்காரம், பிரணவம் எனப்படும்.

திருமூலநாயனார்

'ஓங்காரத் துள்ளே யுதித்தஐம் பூதங்கள்...' என்றும்,

(திருமந்திரம். 2676')



சிவவாக்கியர்

'ஆனவஞ் செழுத்துளே யண்டமும் மகண்டமும்...'

(சிவாக்கியம். 03)

என்றும் எடுத்தாளும் வகையில் ஒங்காரத்துள்ளே ஐம்பூதங்களும் அதாவது அண்டமும் – உலகமும்; எல்லாமும் அடக்கம். எனவே ஐம்பூதங்களே எல்லாவற்றிற்கும் அடிப்படை மூலகங்கள். விஞ்ஞானமும் இதற்கு உடன்பாடு. 'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு. பிண்டத்தில் உள்ளது அண்டத்தில் உண்டு' என்பதும் இங்கு சிந்திக்கத்தக்கது. எனவே ஐந்தெழுத்து ஐம்பூதங் களைச் சுட்டி நிற்பது வெளிப்படையான உண்மை.

இந்த உலகம் ஐம்பூதங்களாலான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பனவற்றால் ஆக்கமும், அழிவும்; இயற்கையாகவும் செயற்கையாகவும் அடைகின்றது. பூகம்பம், எரிமலை, நிலவெடிப்பு, மண்சரிவு என்பன நிலத்தாலும்; கடல் கோள் – ஆழிப் பேரலை, மழை, ஆற்றுப்பெருக்கு என்பன நீரினாலும்; காட்டுத்தீ போன்றன தீயினாலும்; மண்மாரி, சூறாவளி போன்றன காற்றினாலும்; இடி, மின்னல், ஆகாயத்தாலும் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களாகும். சிந்துவெளிப் பஞ்சாப் பிரதேசத்தில் உள்ள ஹரப்பாவிலும்; சிந்துப் பிரதேச மொஹரஞ்சதரோவிலும் காணப் படும் மண் மேடுகளும், இலங்கையின் திருக்கேதீஸ்வரத்திற் காணப்படும் மண்மேடுகளும் காற்றினாலும், மண்மாரியினாலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களே. முதற் தமிழ்ச் சங்கம் இருந்த தென்மதுரையும், இடைத்தமிழ்ச்சங்கம் இருந்த கபாடபுரமும் கடல் கோள்களினால் அள்ளிச் செல்லப்பட்டமையும் இயற்கை அனர்த்தமே. இதன் பின்னரே கடைத் தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைக்கப்பட்டது. இது தமிழ் இலக்கிய வரலாற்றுச் செய்தி.

கிழக்கே இன்றைய அவுஸ்திரேலியா முதல் மேற்கே ஆபிரிக்கா முடிய நீளப்பரந்து கிடந்த தமிழ் நாட்டின் தெற்கில் குமரி ஆறு, பஃறுளியாறு, குமரிமலை என்பனவற்றோடு விளங்கிய குமரிக் கண்டம் என்னும் தமிழ்நாடு பெருங்கடல் கோளுக்கு உட்பட்டுப் பேரழிவினைத் தழுவிக்கொண்டு கடலுள் மறைந்துவிட்டது. இந்நிகழ்வு சங்கம் மருவிய கால இலக்கியமான சிலப்பதிகாரத்தில்

'...யூழிதோ றூழிதோ றுலகங் காக்க
வடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுழி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள...'

(சிலம்பு. 11, 16 – 20)

என இளங்கோவடிகள் பதிவு செய்திருப்பது ஈண்டு ஆழ்ந்து சிந்திக்கத்தகும். மேற்படி செய்யுளடிகளின் உட்பொருள் பெருநிலம் ஆளும் பேராசையும், அநீதியான அரசாட்சியுமே கடல்கோள் களுக்குக் காரணம் என்பது புலனாகும்.

சங்க காலத்திலும் அரசர்களுக்கிடையில் அநீதியான போர்களும், விசாரணையற்ற தண்டங்களும், அசுவ மேத யாகமும், நரபலியும், மிருக பலியும் இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தில் விசாரணையற்ற கோவலன் கொலைத் தண்டனை யாம் அறிந்ததே.

'... வரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉ
முரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலு
மூழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதுஉஞ்...'

(சிலம்பு பதிகம் 55 – 57)

என்பன சிலம்பு புகட்டும் அறிவுரைகள்.

'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று'

(திருக்குறள் 259)

எனத் திருக்குறளும் அசுவமேத யாகத்தைக் கண்டித்துரை செய்கிறது. சங்கமருவிய காலத்தில் சிலப்பதிகாரம், திருக்குறள் என்பனவற்றில் இயற்கை அனர்த்தங்களுக்குக் காரணமான அநீதிகளை எடுத்துக் காட்டி இலக்கியங்கள் செய்தவர்களான இளங்கோவடிகளும் திருவள்ளுவரும் நன்றிக்குரியவர்கள்.

திருநாவுக்கரசு நாயனார் சமண சமயத்தில் இருந்து விலகிச் சைவசமயம் சார்ந்ததனைத் தண்டிக்கும் பொருட்டுப் பல்லவராசன் அவரைக் கல்லுடன் கட்டிக் கடலிற் போட்டான். கல் தெப்பமாக மாறி நாயனாரைக் கரை சேர்த்தது. இந்நிகழ்வானது விஞ்ஞான விளக்கமான 'ஆக்கமிடிஸ் பிறின்சிப்பிள்' என்னும் விதிக்கு முழுநேர் மாறானது என்பதும் உண்மைதான்! ஆனால் சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணத்தில்,

'இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத் தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?'

(பெ. பு. 21 – 129)

என்னும் செய்யுளில் மலங்கள் உள்ள மாந்தரைக் கல்லுடன் கட்டிக் கடலுட் போட்டால் விஞ்ஞான விதியான 'ஆக்மிடிஸ்' தத்துவப்படி கல்லு அவரைக் கடலுள் கொண்டு செல்லும்; மலபந்தமில்லாத ஐந்தெழுத்துப் பயிற்சியுடைய திருநாவுக்கரசு நாயனாரைக் கல்லு அதற்கு நேர்மாறான செயலாகத் தெப்பமாக மிதந்து கரை சேர்ப்பதும் உண்மையே என்று மிக நுட்பமாக ஒப்பிட்டு விளக்குவது சிந்திக்கத்தகும். ஐம்பூதங்களின் குறியீடான ஐந்தெழுத்து மந்திரத்தின் ஆற்றல் – வலு இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. அனர்த்தங்களின்போது நற்றுணையாவது ஐந்தெழுத்தே.

திருவாதவூரரிடம் இருந்து நாற்பத்தொன்பது கோடி பொன்னையும் அறவிடும் பொருட்டு அவரை வெயிலில் நிறுத்தி நெற்றியிற் கல் வைத்து வருத்தியபோது வைகை, கங்கை என்னும் இரு ஆறுகளும் பெருக்கெடுத்தன. ஆற்றின் இருமருங்கிலும் உள்ள குடிகளை அள்ளிச் செல்லும் அளவிற்குத் திரைகள் உயர்ந்து வந்தன. அரிமர்த்தன பாண்டியனும் மந்திரிமார்களும் வைகைக் கரையை அடைந்து பொன்னும், மணியும், பட்டும், சாந்தும், பூவும் இட்டு வணங்கி மன்னிப்புக் கோரி நின்றனர். ஆற்றுப் பெருக்கு மேலும் உயர்ந்து வந்தது. பாண்டிய மன்னன் அருகில் நின்ற மந்திரியை நோக்கிக் காரணம் வினவ, அவன் இது சிவனடியார்க்கு இழைத்த அநீதி என்றதும் மன்னன் திருவாதவூரரை அழைத்துத் தான் செய்த தவறிற்கு மன்னிப்புக் கோரியதும் ஆற்றுப் பெருக்கு அற்றுவிட்டது. பாண்டியன் ஆற்றுப் பெருக்கால் அனர்த்தம் நேராது இருக்க அடைப்பியும் என்றான். திருவாதவூரர் ஆற்றின் இரு மருங்கும் அணை கட்டப்பட ஆவன செய்தார். திருவாதவூரடிகள் புராணம். பி. ம. சு. 14

சித்த மரபினர் பலர் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து சகாக்கலை அறிந்தவர்கள்; அட்டமா சித்திகளையும் கண்டறிந்த வர்கள்; ஐந்தெழுத்து மந்திரத்தினை மூச்சாகக் கொண்டவர்கள். பாம்பாட்டிச் சித்தர்

'எட்டு மலைகளைப் பந்தாயெடுத்தெறிகுவோம்
ஏழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்...'

(பாம்பாட்டிச் சித்தர் – 28)

'மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கி வருவோ
முந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்...'

(பாம்பாட்டிச் சித்தர் – 30)

என முழக்கம் செய்வதும் எண்ணத்தகும். சித்த மரபினர் அட்டாங்க யோகப் பயிற்சியினை அறிமுகம் செய்து 'அட்டமா சித்திகளான அணிமா, லகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் சித்திகள் மூலமும் பேரனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கவும் வழிகாட்டியமைக்கு, மனிதகுலம் என்றும் சித்த மரபினருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தாயுமான சுவாமிகள் என்னும் சித்தர்–

'... சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகி யென்...'

(திருப்பாடற்றிரட்டு – 118)

எனச் சித்து கைவரப் பெற்றால் நீரின்மேல் நடக்கவும்; நெருப்பின் மேல் இருக்கவும் முடியும் என்றால் இவையும் பேரனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் வழிவகைகள் எனக் கருத்திற் கொள்ளப்படத் தக்கது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரது ஞானகுரு யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் ஆவர். இவர் 1925 – 1930ம் ஆண்டுக் காலப் பகுதிகளில் ஒருமுறை யாழ்ப்பாணம் பொலிகண்டி அருள்மிகு கந்தசுவாமி கோயில் கடற் தீர்த்தோற்சவத்தன்று யாவரும் காண கடல்நீர் மேல் நின்று காட்சி கொடுத்தமையும் ஈண்டு எண்ணிப் பார்க்கத்தக்கது. – பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள் – பக் 18.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது பாரிய அணுகுண்டு வீச்சால் ஜேர்மனியில் அணுகுண்டு வீசப்பட்ட இடம் சாம்பற் காடானதும் நாம் அறிந்ததே. இவை திட்டமிட்ட செயற்கை அனர்த்தங்களாகும். இவற்றில் இருந்து பாதுகாப்பு அளிக்கப் பதுங்குகுழிகள் அறிமுகப்படுத்தப்பட்டு இன்றும் நடைமுறைப் படுத்துவதுங் காணமுடிகின்றது. கட்டுரையின் விரிவஞ்சிச் சுருக்கி வரையவும் வேண்டியுள்ளது.

இன்று 'ரிச்சாட்' கருவியின் அறிவுறுத்தல் அறிந்து ஓடிச் செல்லலாமே தவிர நிலையான பாதுகாப்புத் தேடலாம் என்பது கடினமான காரியம். இவ்விடயத்தில் சமய மெய்ஞ்ஞானிகள் வழியமைத்துத் தந்துள்ள அறிவுறுத்தல்களில் சிலவற்றை என்றாலும் சுருக்கமாக மீண்டும் பார்ப்பது பயனுடையதாம். அனைத்திற்கும் மூலப்பொருள்கள் பஞ்ச பூதங்களே. இவற்றினைப் பிரீதி செய்து வழிபடல் மிக இன்றியமையாதது. ஐந்து பூதங்களும் ஒரு பொருளில் அடக்கமான கருங்கல்லில் வடிவமைத்த சிவலிங்க வழிபாடும், ஐம்பூதங்களைச் சுட்டி நிற்கும் ஐந்தெழுத்து மந்திரத்தின் உச்சாடனமும் மிகப் பொருத்தமுற அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆற்றங்கரை, கடற்கரை தீர்த்தமாடும் புனித இடங்களாகக் கொண்டமை ஆறு, கடல் வணக்கத்திற்கும் வழியமைத்துள்ளது. உயர்ந்த பெரிய மராமரங்கள், பேரலைகள், காற்று, சூறாவளி என்பனவற்றில் இருந்து பாதுகாக்கவல்லன. ஆதலின் மரவணக்கத்தை அறிமுகம் செய்ததும் சரியாகக் காணப்படுகின்றது. இவற்றிற்கு மேலாக எமது நேரத்தை மீதப் படுத்தி அட்டாங்க யோகப் பயிற்சி மூலம் அட்டமா சித்திகளை அடைய ஆவன செய்திருப்பதும் மிகவும் ஏற்புடையதே. ஆற்றங் கரை, கடற்கரைகளில் அணை கட்டுவதும் உயர் பாதுகாப்பாக அமையும்.

பஞ்சபூதங்களைச் சுட்டி நிற்கும் 'ஓம்' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை முன் நிறுத்தி ஆக்கத்திற்கும், அழிவிற்கும் ஏதுவான பஞ்சபூத வழிபாட்டின் முக்கியத்துவத்தினை முன்வைத்துள்ள இந்துமதங்களின் சிந்தனைகள் உயர் தனிச் சிறப்பையும் தத்துவ உச்ச வளர்ச்சியினையும் காட்டுகின்றன.



முருக வழிபாடு

"முருகு" என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும். சங்ககால மக்கள் மலையும் மலை சார்ந்த பகுதிக்குறிய கடவுளாக முருகனை வழிபட்ட னர். குமரக்கடவுளை வழிபடப்படும் சமயம் கௌமாரம் எனப்படும்.

முருகனின் பெயர்களும் பொருள்களும்

முருகன்	- அழகுடையவன்
குமரன்	- இறைவனாய் எழுந்தருளியிருப்பவன்
குகன்	- அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளியிருப்பவன்
காங்கேயன்	- கங்கையால் தாங்கப்பட்டவன்
சரவணபவன்	- சரவணப் பொய்கையில் உதித்தவன்
சேனாபதி	- சேனைகளின் தலைவன்
சுவாமிநாதன்	- தந்தைக்கு உபதேசித்தவன்
வேலன்	- வேலினை ஏந்தியவன்
கந்தன்	- ஒன்று சேர்க்கப்பட்டவன்
கார்த்திகேயன்	- கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்
சண்முகன்	- ஆறுமுகங்களையுடையவன்
தண்டாயுதபாணி	- தண்டாயிதத்தைக் கரத்தில் ஏந்தியவன்
வடிவேலன்	- அழகுடைய வேலை ஏந்தியவன்
குருநாதன்	- தந்தைக்கு குருவாக இருந்து உபதேசித்தவன்
சுப்பிரமணியன்	- மேலான பிரம்மத்தின் பொருளாக இருப்பவன்.



சர்வதேச ரீதியில் நந்திக்கொடி ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள்

சிவநெறிச் செல்வர்
சின்னத்துரை தனபாலா J.P
(மாமன்றத் துணைத் தலைவர்,
மாமன்ற சமூக நலன் குழுத் தலைவர்)



இலங்கைத் திருநாட்டில் நந்திக் கொடியின் பாவனையில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும் இக் காலகட்டத்தில் இக் கொடியின் பாவனையும் சர்வதேச நாடுகளில் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சைவ மக்களிடையே அது ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களும் கவனத்தை ஈர்க்கின்றன.

தமிழர்களின் தாயகமாகவும் இந்துக்களின் உறைவிடமாகவும் திகழும் எமது தாய் நாடாம் இந்தியாவிலும் அதன் வழித் தோன்றலாம் ஈழத் திருநாட்டிலும் பண்டைக் காலங்களில் இடபக் கொடியின் பாவனை இருந்து வந்ததற்கு சரித்திர சான்றுகள் பல இருக்கின்றன. ஆயினும் காலப்போக்கில் இந்துமதம் மனித வளங்களில் ஏற்படுத்திய மாறுதலினாலோ என்னவோ இடபக் கொடியின் பாவனை குன்றிக் கொண்டே வந்ததைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அண்மைக் காலங்களில் இந்து சைவ மதக் கொடியாம் நந்திக்கொடியினைக் காண்பதும் அரிதாகவே தென்பட்டது. ஒரு தேசத்துக்கு அதன் தேசியக்கொடி எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியத்துவம் ஒரு சமயக் கொடிக்குமுண்டு. அந்தத் தேசம் தனது தேசியக் கொடியை அதன் இன சமய கலாசாரத்துக்கேற்ப பாரம்பரியங்களைக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. இக் கொடியினை அந் நாட்டு தேசிய விழாக்களின் போதும் மற்றும் நாடளாவிய பிற நிகழ்வுகளிலும் முக்கியத்துவம் கொடுத்து முதலிடத்தைக் கொடுப்பதை காண்கின்றோம். அதற்கும் மேலாக நிகழ்வுகள் தொடங்கும் முன்னதாக தேசியக் கொடியினை ஏற்றும் வைபவம் நடைபெறும். அப்போது அந்நாட்டின் தேசிய கீதமும் இசைக்கப்படுவது அநேகமான நாடுகளின் பாரம்பரியமும் சம்பிரதாயமுமாகும். இதே அணுகு முறையை எமது சமயக் கொடியாம் இடபக் கொடியின் விடயத்திலும் இடம் பெறுவதைக் கவனிக்கப்படல் வேண்டும். அந்தவகையில் சைவ சமய விழாக்கள், நிகழ்வுகள் தொடங்கும் முன்னதாக இறைவணக்கமாக இடபக் கொடி ஏற்றி தேவார பாராயணம் ஒதுதல் எமது பாரம்பரியமாக்குதல் வேண்டும்.

சைவ சமயத்தில் நந்தியின் முக்கியத்துவம் எமது சைவ சித்தாந்த நூல்களில் வெகு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. எமது சமயத்தின் முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் தனது வாகனமாக இடபத்தை கொண்டிருப்பது வரலாறு. எமது இந்து சமய வரலாறு களில் நந்தி பெருமான் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றார். சிவபெருமான் சில சில சந்தர்ப்பத்துக்கேற்ப பாரிய திருவிளை யாடல்கள் புரியும்போது பலவிதமான இடபங்களை தனது வாகனமாகப் பாவித்ததற்கு சான்றுகள் வரலாற்றில் உண்டு. இந்திரன் நந்தி வடிவமெடுத்து சிவபெருமானை தாங்கியபோது அது வேத நந்தியாகவும், இறைவன் முப்புரங்களை எரிக்கச் சென்றபோது திருமால் இடபவடிவமெடுத்து சிவனை தாங்கிக் கொண்டு சென்றார் என்பது புராண வரலாறாகும். உலகம் சங்கார காலத்தில் ஒடுங்கும் போது தர்ம தேவதை நந்தி வடிவம் எடுத்து சிவனைத்தாங்கிச் சென்றார். அதனால் இதை தர்ம நந்தி என்றும் அழைக்கப்பெற்றது. இன்னும் இடபம் பல வடிவங்களில் பல பெயர்களில் அழைக்கப்பட்டதை சமய வரலாறுகள் வெளிப் படுத்தியுள்ளன.

இடபத்தின் பல முக்கியத்துவங்கள் விளக்கப் பட்டிருக்கின்றன. நந்தி இறைவனுக்கு வாகனமாகவும், கொடியாகவும், வாயிற் காப்பாளனாகவும் இருக்கும் பேறுபெற்ற தால் மிகவும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. இதன் சிறப்பை திருமூலர் சிறப்பாக பல இடங்களில் பாடியிருக்கின்றார்.

"நந்தியருளாலே மூவனை நாடிப்பின்
நந்தியருளாலே சதா சிவன் ஆயினேன்
நந்தியருளாலே மெய் ஞானத்தை நாணினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே"

-திருமூலர்-

பண்டைக் காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த சேர, சோழ பாண்டிய மன்னர்களும், அதன் பின்பு கோலோச்சிய பல்லவ மன்னர்களும் மிகவும் சிறந்த சிவ பக்தர்கள். இந்தக் காலகட்டத்திலேயே சைவத்தை வளர்த்த நாயன்மார்கள் தோன்றி இன்றும் எம்மால் ஓதப்படும் தேவார பாராயணங்களை அருளிச் செய்ததுடன் பல அற்புதங்களையும் செய்தார்கள். பல்லவ காலத்திலேயே பல முக்கிய தமிழ் இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும், சிற்பம், இயல், இசை, ஓவியம் போன்ற கலைகளும் சிறப்புற்று விளங்கின. இக் காலகட்டத்தில் செங்கோலாட்சிய மன்னர்களில் மிகவும் போற்றப்பட்டவன் எம் நந்திவர்ம மன்னனாவான். இவன் மிகுந்த சைவப் பற்றும் தமிழ்பற்றும் கொண்டவன். தமிழையும், சைவத்தையும் தனது இரு கண்களைக் காப்பது போல் காப்பாற்றி, போற்றி வந்தான் என்பதை வரலாறு கூறுகின்றது. இவனது அரசக் கொடியாக இடபக்கொடி விளங்கியது. "நந்திக் கலம்பகம்" இவன் சிறப்பினையும் நந்தியின் மகத்துவத்தையும் விளக்கிச் சொல்லும் நூலாகும்.

"ஏற்றுயர் கொடியுடையாய் எமையுடையாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருள்வாயே"

-மாணிக்கவாசக சுவாமிகள்-

இவ்வாறு பண்டைக் காலங்களில் இடபக் கொடியின் பாவனை மிகவும் சிறப்பாக இருந்து வந்தாலும் 20ம் நூற்றாண்டளவில் இதன் பாவனையும் முக்கியத்துவமும் வீழ்ச்சி கண்டிருந்தது என்னவோ உண்மையே. அடியேன் நந்திக் கொடியின் பாவனையை நம்மவரிடையே அதிகரிக்கச் செய்வதற்கு முன்னோடியான ஒரு சந்தர்ப்பத்தை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். ஏழு, எட்டு வருடங்களுக்கு முன்னதாக கொழும்புக்குப் புறத்தே இரத்தினபுரி மாவட்டத்தில் ஓர் சர்வமத அறிவாலயம் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் பெரியோர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வேளையில் அடியேனும் அப்பணியில் ஈடுபட்டிருந்தேன். அந்த வைபவத்துக்கு சர்வ மத கொடிகளையும் ஏற்றி விழாவினை ஆரம்பிப்பதாக ஏற்பாடாகியிருந்தது. பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லீம் மதங்களுக்கான கொடிகள் ஏற்பாடாகி இருந்தும் எமது சைவ சமயக் கொடிக்கான ஏற்பாடு செய்வதில் பெரும் சிரமமும் தாமதமும் ஏற்பட்டது. பல சைவப் பெரியார்களையும் கோவில் தர்மகர்த்தாக்களையும் சிவாச்சாரியார்களையும் நாடியும் சைவ கொடியொன்றினை பெற முடியவில்லை. இது எனக்கு மிகுந்த மன வேதனையைத் தந்தது. அன்றைய தினம் ஒரு காவிக் கொடியினை ஏற்பாடு செய்து அதனை எமது சைவ கொடியாகப் பாவித்து விழாவினை நடத்தி முடித்தோம். எனினும் எனது மனதில் பாரிய குறை ஒன்று உறுத்திக் கொண்டே இருந்தது. தமிழ் நாட்டில் கூட உடனடியாக எமது சமயக் கொடியாம் நந்திக் கொடியினை பெறுவதில் பெரும் சிரமங்கள் இருந்தன. காரணம் நந்திக் கொடி பாவனையில் மிகவும் குறைவாக இருந்ததே. அன்று தொட்டு கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் மூலமாக நந்திக் கொடியின் பாவனையை நம்மவரிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டோம். இலங்கையில் உள்நாட்டில் பல பாகங்களிலும் எமது அயராத முயற்சிகளால் நந்திக் கொடியை இலவசமாக விநியோகித்து கோவில் திருவிழா காலங்களிலும் பாரம்பரிய சைவ நிகழ்வுகளிலும் படிப்படியாக நந்திக்கொடியின் பாவனையை அதிகரிக்கச் செய்தோம். இந்தக் காலகட்டத்தில் இந்து சமய கலாச்சார அமைச்சராகவிருந்த கௌரவ தி. மகேஸ்வரன் அவர்களும் நந்திக் கொடி பாவனைக்கு தனது முழு ஒத்துழைப்பினையும் தந்ததுடன் இந்து கலாச்சார திணைக்களமும் தொடர்ந்து தனது ஆதரவைத் தந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய கால கட்டத்தில் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் பங்களிப்பையும் சிறப்பாகக் குறிப்பிடலாம். அவருடைய அறிவுறுத்தலின் பேரில் இலவச இடபக் கொடி விநியோகம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதனால் கொடியின் பாவனை எமது மக்களிடையே ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. தற்சமயம் இலங்கையில் நந்திக் கொடியின் பாவனை சிறப்பாக வளர்ந்து வருகின்றது என்று கூறினால் அது மிகையாகாது.

"சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை"

சிவனுடைய நாமத்தை எந்த நேரமும் மனதில் இருத்தி வழிபடுவோருக்கு அச்சம் தேவையில்லை; இடர் அவர்களை அணுகாது என்பது பொருள்.

சிவனே நந்தி, நந்திப்பெருமானே சிவபெருமான். இடபத்தை தனது வாகனமாக ஏற்றுக்கொண்ட சிவன் அதனையே தனது கொடியாகவுமாக்கிக் கொண்டார். சிவனை வழிபடச் செல்பவர் முதலில் நந்திப் பெருமானை வணங்கி உத்தரவு பெற்றே அந்த ஆதி சக்தியை நெருங்க முடியும் என்பது பலரால் உணரப்பட்ட உண்மை. ஆகவே நந்திக்கொடியை எமது சமய, கலாச்சார வைபவங்களில் ஏற்றி அதற்கு முதலுரிமை கொடுப்பதன் மூலம் எமது மனதில் வரும் அச்சங்களைப் போக்கி மன உறுதியுடன் இருக்க உதவி செய்கின்றது என்பது உணரப்படும்.

இலங்கையில் இந்து நிறுவனங்களின் உச்ச ஸ்தாபனமாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் நந்திக் கொடியின் பாவனையை மக்களிடையே கொண்டு செல்வதற்கு மகத்தான பங்களிப்பினைச் செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை இந்து மாமன்றம் தனது தினசரிக் கடமைகளிலும், மாமன்ற கூட்டங்களிலும், விழாக்களிலும் இன்னும் பல்வேறுபட்ட நிகழ்வுகளிலும் நந்திக் கொடியினை ஏற்றி எமது சைவக் கொடி பட்டொளி வீசிப் பறக்க துணை நின்று வருகின்றது. எங்கெல்லாம் வாய்ப்புகள் கிட்டுகின்றனவோ அங்கெல்லாம் குறிப்பாக பிற மாவட்டங்களில் இடபக் கொடியின் தத்துவங்களை விளக்கி அதன் பாவனையை மக்கள் மத்தியில் நிலை நிற்க பல முனைப்பாடுகள் எடுத்து வருகின்றது. அதே போல் கடந்த காலங்களிலும் அரச பணியில் இந்து சமய கலாசார

அலுவல்கள் திணைக்களமும் நந்திக் கொடியின் பாவனையை ஊக்குவித்து தனது பங்களிப்பை செய்து வருவது பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும் மாமன்றத்தின் காலாண்டிதழான "இந்து ஒளி" மூலமாகவும் நந்திக்கொடியின் சிறப்புக்களை எடுத்துச்செல்லும் பல கட்டுரைகள் வரையப்பட்டு வருகின்றது. இதுவும் சைவமக்களிடையே இதன் பாவனையை மேலும் வலுப்படுத்தி வருகின்றது என்று சொல்லலாம்.

மேலும் உலக சைவப் பேரவையின் மாநாடுகள், இலங்கையிலும் மற்றும் அகில உலகரீதியாக நடைபெறும் மாநாடுகளிலும் இடபக் கொடியினை ஏற்றி இறைவணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட பேரவையின் மாநாடுகளில் குறிப்பாக கனடா, மலேசியா, மொரீசீயஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மேடைகளிலும் மாநாட்டு மண்டபங்களிலும் நந்திக் கொடியினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவை அந்நாட்டு மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்தி வருகின்றது. இப்பொழுது இந்த நந்திக்கொடிகளின் பாவனையை உலகளாவிய ரீதியில் நிலை நிறுத்துவது அவசியமாகின்றது. எமது வேண்டுகோளுக் கிணங்க மேற்கத்தைய நாடுகளில் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் சைவத் தமிழ் மக்களின் மத்தியில் இந்த நந்திக்கொடியின் பாவனை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பிரான்ஸ் நாட்டில் பரிஸ் நகரிலே வீற்றிருக்கும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலும், அங்கு நடைபெறும் தேர்த் திருவிழாக்களிலும் நந்திக்கொடிகள் மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருப்பதை எனது கண்ணூடாகக் கண்டு இன்புற்றேன். இந்தியாவில் கோயம்புத்தூரில் அண்மையில் பேரூர் ஆதீன தவத்திரு சாந்தலிங்க அடிகளாரின் முத்து விழா நடைபெற்ற வளாகத்திலும் நந்திக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு விழா கோலாகலமாக நடைபெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு மகத்தான வரவேற்பு இருப்பது கண்டு மனம் பூரிப்படைகின்றது. சைவத் திருக்கோவில்கள் இருக்கும் மேற்கு நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், டென்மார்க், சுவிஸ்லாந்து, ஐக்கியராச்சியம், நோர்வே, ஜேர்மனி, கொலண்ட், அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளில் நந்திக்கொடியின் பாவனை ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது. பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கத்திலும் நெடுங்காலமாக நந்திக் கொடி பறக்கவிடப்பட்டிருப்பதுடன் லண்டன் முருகன் ஆலயத்திலும் லண்டன் லூசியத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்திலும் இடபக் கொடி கம்பீரமாகப் பறக்கவிடப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். லண்டன் மாநகரில் பிரித்தானிய சைவத்திருக்கோவில்களின் ஒன்றியத்தால் கடந்த 2005ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம், 21ம் திகதிகளில் நடைபெற்ற சைவமகாநாட்டில் அடியேன் பங்குபற்றி உரையாற்றும் சந்தர்ப்பமும் பாக்கியமும் கிடைத்தது. இதே மாநாட்டு அமர்வுகளில் கொடியின் முக்கியத்துவம் வெகு சிறப்பாக உணர்த்தப்பட்டிருந்தது கண்டு ஆனந்தமடைந்தேன். இந்த மேற்கத்தைய கலாச்சாரத்தில் நம்மவர்கள் வாழ்ந்து வந்தாலும் தங்களுடைய பாரம்பரியங்களைப் பேணி வருகின்றார்கள். நந்திக் கொடியின் பாவனை எமது சைவச் சிறார்கள் மனதில் ஆழப்பதியப்பட்டு வருகின்றது. பல சிறுவர் சிறுமியர் இக் கொடியின் நோக்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றிய உண்மைகளை அறிவதில் ஆர்வம் காட்டி வருவதைக் காணக்கூடியதாக இருப்பது கண்டு பரவசமடைகிறேன். எங்கே எமது மக்கள் மேற்கத்தைய மோகத்தில் விழுந்து எமது பாரம்பரியங்களை மறந்து விடுவார்களோ என்று நினைக்கத் தோன்றிய எமக்கு இது ஓர் இனிப்பான செய்தியாகும். புலம் பெயர்ந்த நம்மவரிடையே நந்திக் கொடி நல்லதோர் தாக்கத்தையும் விழிப்புணர்வையும் கொண்டு வந்திருக்கின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. இந்த மாநாட்டிற்கு தாய் நாடாகிய இந்தியாவி லிருந்தும் ஈழத்திருநாட்டிலிருந்தும் வருகை தந்த பல ஆதீன பீடாதிபதிகளும் அறிஞர்களும் பெரியோர்களும் நந்திக்கொடி பற்றிய அபிப்பிராயங்களை வெளியிட்டு அதன் பாவனைகளை அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துவதில் ஒருமுகப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இவை யெல்லாம் இடபக் கொடியின் பாவனை சர்வதேச ரீதியில் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் நம்மவரிடையே நல்ல தாக்கங்களை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. நாளடைவில் இவை நல்ல பல ஆத்மீகச் சிந்தனைகளுக்கு அவர்களிடையே வழி வகுக்கும். அதற்கு எல்லாம் வல்ல சிவபெருமான் எமக்குத் துணை புரிய வேண்டும் என்று வேண்டுகின்றேன். புலம்பெயர்ந்த மக்களிடையே பல அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு எமது சைவக்கொடியாம் நந்திக்கொடியின் முக்கியத்துவம் அச் சிறார்களிடையே உணர்த்தப்படல் வேண்டும். மேற்றுலகப் பழக்க வழக்கங்களின் பண்பாடுகளின் மத்தியில் வாழ்கின்ற எமது பிள்ளைகள் தங்கள் தாய்மொழியாம் தமிழை மறவாது கற்பதுடன் எமது சைவ விதிமுறைகளையும் திருநீற்றின் மகிமைகளையும் அவர்களுக்குப் போதிப்பது சாலச் சிறந்தது. பிள்ளைகளின் பெற்றோர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனமும், அக்கறையும் காட்டுதல் அவசியம். இது அங்கு வாழ்கின்ற ஒவ்வொரு சைவ சமய பெரியார்களினதும் தலையாய கடமையுமாகும். இவ் அறநெறிப்பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்னதாக பிள்ளைகளுக்குத் திருநீறு அணிவித்து நந்திக் கொடியினை பாடசாலையில் ஏற்றி தேவார பாராயணத்துடன் தங்கள் வகுப்புக் களை ஆரம்பிக்க கட்டாயப்படுத்தப்படல் வேண்டும். இவற்றை அங்கு கல்விபுகட்டும் ஆசிரியர்களும் தொண்டர்களும் மனதில் கொண்டு செயற்படுவது அவசியமாகின்றது.

"புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன் அடி
என் மனத்தே வழுவாது இருக்க வரம் தரவேண்டும்"

இவ் வாசகங்கள் பிள்ளைகள் மனதில் நன்றாக வேரூன்ற வேண்டும். அவுஸ்திரேலியா நாட்டிலுள்ள சில ஆலயங்களுக்கும் நந்திக் கொடிகள் அனுப்பியிருந்தோம். ஏனைய மேற்கத்தைய நாடுகளில் நடைபெறுவதுபோல இங்கேயும் இடபக் கொடியின் மகத்துவமும், பாவனையும் வெளிக் கொண்டு வரவேண்டும். இங்கே புலம் பெயர்ந்த சைவ தமிழ் மக்கள் சிவனே நந்தி, நந்தியே சிவன் என்று கருத்தில் கொண்டு இடபக்கொடியின் மகத்துவம் காத்தருள வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

அகில உலக ரீதியில் நந்திக் கொடியின் பாவனையை சர்வதேசப்படுத்த முயலும் ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் சைவர்களாகிய நாம் தலை வணங்கி எமது ஆதங்கத்தினை வெளிப்படுத்தி நன்றிகள் சொல்லக் கடமைப்பட்டவர் களாகின்றோம்.

ஓம் சிவாயநம

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

புத்த மதத்தில் இந்து தத்துவங்கள்

பன்மொழிப்புலவர்
த. கனகரத்தினம் B.A. (இலண்டன்)

புத்தர் பகவான் கண்டமுடிபுகள் பௌத்த மத தத்துவங் களாகின்றன. புத்த மதத்தின் ஆரம்பம் இன்றைக்கு 2550 வருடங்களெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், புத்த மதத்தில் இன்று 18 பிரிவுகள் பேசப்படுகின்றன. புத்தரும் தொடக்கத்தில் ஓர் இந்துவாகத்தான் இருந்தவர் என்பது வரலாற்று உண்மை. "அவர் தம் ஞானதிருட்டியினால் அடைந்த முடிபுகள் இந்து மதத்திற்கு முற்றிலும், மாறானவையல்ல. அடிப்படையில் எல்லாம் ஒன்றுதான்" என்று ஒற்றுமைகளைப் பெருக்கிக் காட்டுவோர் கூறாநிற்பர். இவர்களுள் முன்னணியில் நிற்பவர் உலகப்புகழ் பெற்ற பேரறிஞர் ராதாகிருஷ்ணன் அவர்கள்.

புத்த மதத்துக்கும் இந்து மதங்களுக்கும் ஒற்றுமை காட்ட முற்பட்ட அறிஞர் வேதாந்தத்தையே சிறந்த பிரதி நிதியாக எடுத்துக் கொள்கிறார்கள். பௌராணிகர் கௌதம புத்தரை விஷ்ணுவின் அவதார மென்பர். அத்வைதிகளல்லாத வேதாந்திகள் அத்வைதிகளைப் பிரச்சன்ன – மறைந்த பௌத்தர் என்பர். சைவ சித்தாந்திகள் புத்தமதத்தைப் புறப்புறச் சமயங்களுள் ஒன்றாகவே கருதுகின்றனர்.

புத்தமதம் அவைதிக மதம்; அது வேதவாக்கை ஏற்றுக் கொள்வதில்லை. இந்து தரிசனங்கள் பெரும்பான்மையும் (1) பிரத்தியட்சம் (2) அநுமானம் (3) ஆப்தவாக்கியம் ஆகிய மூன்றையுமே தமக்குப் பிரமாணமாகக் கொள்வன. ஆனால், புத்தம் இவற்றுள் பிரத்தியட்சம், அநுமானம் ஆகிய இரண்டை மட்டுமே ஏற்றுக் கொள்கிறது. மூன்றவதாகிய ஆப்த வாக்கியம் எனும் வேதவாக்கை ஏற்றுக் கொள்வதில்லை.

புத்தமதத்தில் 18 உட்பிரிவுகள் உள எனக் கண்டோம். இவை ஒன்றுக்கொன்று வேறான கொள்கைகளைக் கொண்டவை. எனினும், மிக முக்கியமான பிரிவுகள் நான்காகும். (1) வைபாடிகம் (2) சௌத்திராந்திகம் (3) விஞ்ஞான வாதம் (4) மாத்தியமிகம் என்பனவே அந்நான்கு பிரிவுகளுமாகும். வைபாடிகம் சௌந்திராந்திகம் ஆகிய இரண்டும் ஹீனயான பௌத்தம் என வழங்கும். விஞ்ஞானவாதம், மாத்தியமிகம் ஆகிய இரண்டும் மகாயான பௌத்தம் என வழங்கும் ஹீனயான பிரிவைச் சேர்ந்தவர்களே இலங்கையிலுள்ள பௌத்தர்கள். ஹீனயானம் தேரவாதம் என்ற பெயரிலும் குறிப்பிடப்படும். இது காலத்தாலும் முற்பட்டது. ஹீனயானம் என்பது சிறிய வழி அல்லது தாழ்ந்த வழியெனப் பொருள்படும். மகாயானம் என்பது பெரிய அல்லது உயர்ந்த வழி எனப்பொருள்படும்.

மகாயான பௌத்தம் திபெத், மொங்கோலியா, சீனா, கொரியா, யப்பான் ஆகிய இடங்களில் வழங்குகிறது. மகாயான பௌத்தம் புத்தரைக் கடவுளாகக் கொள்கின்றது.

நிர்வாணம் பற்றிய - மோட்சம் பற்றிய தத்துவங்கள்

நிர்வாணம் பற்றிய கொள்கையில் மகாயான பௌத்தமும் ஹீனயான பௌத்தமும் வேறுபாடான கொள்கையுடையன. விளக்கையணைத்துவிட்டால் ஏற்படுவது போன்ற சூனியமான நிலை என்பர் ஹீனயானப் பிரிவினர். மகாயானப் பிரிவினரோ நிர்வாணம் சூனியமன்று. அது

நிலையற்ற இப்பிரபஞ்சம் அனைத்துக்கும் மூல நிலைக்களனாகிய ஒரு மேலானநிலை என்பர். பௌத்தர்கள் கூறும் நிர்வாணம் என்னும் சொல்லின் பொருள் அணைதல் அல்லது தூர்தல் அல்லது குளிர்தல் என்பதாகும். புத்தர் கருத்துப்படி நிர்வாணம் என்பது ஒரு பேரின்ப நிலை. உபநிடதம் கூறுவதும் இதுவே. இந்துக்கள் நிர்வாணத்தை உடன்பாட்டு முறையாகப் பேரின்பநிலை என்கின்றனர். இத்தத்துவத்தையே பௌத்தர் எதிர்மறை முறையில் துன்பம் இல்லாத நிலை என்கின்றனர். பௌத்தர் கருத்துப்படி நிர்வாண நிலையை அடைய இப்பூதவுடல் அழிய வேண்டும் என்ற நியதியில்லை. பூதவுடல் இருக்கும் போதே நிர்வாண நிலையை அடையலாம். கௌதமர் தமது முப்பத் தைந்தாவது வயதிலே நிர்வாணம் அடைந்தார். அதன் பின்பும் நாற்பத்தைந்து வருடங்கள் வாழ்ந்தார். இந்நிலையில் செய்யும் செயல்கள் வறுத்த, வித்துப் போன்றவை. இது பற்றுக்கள் அற்ற தோர் நிலை. இது இந்துக்கள் பேசும் சீவன் முத்தி நிலையை ஒத்ததாகும்.

பௌத்த மதக் கொள்கையையும் குறிக்கோளையும் சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலை எனும் காப்பியம் பின் வருமாறு கூறுகிறது–

'துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்' 186 – 187

மணி ங்O கஅசா – கஆஎ

என இரண்டே வரியுள் அடக்கியுள்ளார். இதனை இன்னோரிடத்திலும்,

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது என்கின்றனர்.

புத்தர் பெருமான் கண்ட நான்கு தேருண்மைகள் இவற்றில் அடங்கும். அவையாவன.

1. துக்கம்
2. துக்க நீக்கம்
3. துக்கத்தின் காரணம்
4. துக்கத்தை நீக்கும்வழி

சைவ சித்தாந்த தத்துவத்தில் முத்தி நிலையில் நான்கு நிலைகள் (பதமுத்தி, அபரமுத்தி, பரமுத்தி, சீவன்முத்தி) பேசப்படுகின்றன. இவற்றுள் பதமுத்தி நிலையிலிருந்து உலகில் தோன்றிய அருளாளர்களின் நிலை சீவன் முத்தி நிலை. இவர்கள் இறையருளால் பிறவி எடுத்தவர்கள். இவர்கள் தன் செயலின்றிச் சிவன் செயல்களின் கடமையிலீடுபடுபவர்கள். உடம்போடு ஒட்டாதிருப்பது இவர்கள் நிலை. இந்த நிலை தான் பௌத்தத்தில் காணப்படும் நிர்வாண நிலை எனலாம்.

கடவுட் கொள்கை

கடவுள் பற்றிய கொள்கையில் – 'கடவுள் உண்டு' என்று புத்தர் கூறவில்லை. 'கடவுள் இல்லை' என்றும் கூறவில்லை. ஆனால் பௌத்த மதத்தினருள் பெரும்பாலோர் புத்தரையே கடவுளாக வழிபடுகின்றனர். ஹீனயானப் பிரிவினர் கொள்கையளவில் கடவுள் இல்லை என்பர். ஆனால் நடைமுறையில் புத்தரைக் கடவுளாகக் கொண்டு வழிபடுவர். மகாயானிகள் கொள்கை நடைமுறை இரண்டிலும் கடவுளை ஏற்றுக் கொண்டனர். எனவே, இந்துமதம் போன்று பௌத்தமும் கடவுட் கொள்கையை ஏற்றுக் கொள்கின்றது. இந்து மதங்களுக்கு மூலம் வேதவாக்கு. ஆனால், புத்த மதத்துக்கு மூலம் புத்தி அல்லது அறிவு. எனினும், புத்தரின் மறைவுக்குப் பின் இந்துமதம் வேதவாக்கியங்களுக்குக் கொடுக்கும் இடத்தைப் புத்தமதம் புத்தரது வாக்கியங்களுக்குக் கொடுக்கிறது. இந்துமதத்தினர் வழிபடுவது இறைவனைக் குறிக்கும் திருவுருவங்களை. ஆனால் புத்தமதத்தினர் வழிபடுவது பெரும்பாலும் புத்தரினதும் அவரது சீடர்களினதும் பூத உடற்கூறுகளை.

மறுபிறப்புப்பற்றிய கொள்கை; ஆன்மா, கன்மம் பற்றிய கருத்துக்கள்

பௌத்தர்கள், பிறப்புப் பல என்னும் கொள்கையர். இந்துக்கள் போன்றும் சைவர்கள் போன்றும் மறுபிறப்பிலும் நம்பிக்கை யுள்ளவர்கள். ஒரு பிறப்பிற் செய்த கன்ம பலனுக்கு ஏற்பவே மறுபிறப்பு அமைகின்றது என்றும் கொள்ளுகின்றனர். ஆனால், வினையை வினைக்குரியவனோடு சேர்க்க ஓர் இறைவன் வேண்டாம், வினைதானாகவே தனக்குரியானை அடையவல்லது; கன்மத்திற்கே சர்வ வல்லமையும் உண்டு எனப் பௌத்தர் கூறுவர். கன்மம் பற்றிய புத்தர் கருத்து உபநிடதக் கருத்துமாகும். புத்தரது கன்மம் பற்றிய கொள்கையை விளக்கப் பொதுவான உதாரணம் ஒன்று உண்டு. ஒரு பசுக்கன்று பல பசுக்களின் கூட்டத்தில் தானாகச் சென்று தன் தாய்ப் பசுவை இனங்கண்டு பால் அருந்தும். இது போலவே வினையும் பல உயிர்களிடையே தானாகவே சென்று அதனைச் செய்த உயிரைச் சென்று பயனுக்கு வரும்.

"பௌத்தத்தில் ஆன்மா உண்டு; ஆன்மா இல்லை" என்ற இரு கூற்றும் விவாதத்திற்குரியன. இரு கூற்றும் புத்தர் பகவானாலேயே வெவ்வேறு சாராருக்கு அவரவர் பக்குவம் நோக்கிக் கூறப்பட்டன என்கிறார் நாகார்ச்சுனன். எனினும் ஆத்மா இல்லை என்பதே பௌத்தரது அடிப்படைக் கொள்கை.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

"தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

"நன்றும் தீதும் பிறர் தர வாரா"

என்ற கூற்றுக்கள் கன்மக் கொள்கையை விளக்குகின்றன.

பஞ்சசீலம் - பஞ்சமா பாதகங்கள் - ஞானம் (பஞ்ஞா)

புத்தரது 4 வாய்மைகளிலே துக்க உற்பத்தியை ஒன்றுக் கொன்று காரணமான பன்னிரண்டு இணைப்புக்கள் கொண்ட ஒரு சக்கரமாக உருவகித்துக் காட்டுவது பௌத்த மதவழக்கம். வட மொழியில் இதனைப் பவச்சக்கரம் என்பர். தமிழில் இதனை ஊழ் வட்டம் என்பர். மணிமேகலையில் இது ஏது நிகழ்ச்சி எனக் குறிப்பிடப்படுகிறது. இத்துன்ப வட்டத்தில் ஏதாவது ஒரு இணைப்பை அறுத்துவிட்டாலும் வட்டம் அழிந்துவிடும் செபமாலையை உருட்டுவதுபோலப் பௌத்த மதத்தினர் சிலர் சக்கரத்தை உருட்டுவது வழக்கம்.

துன்ப நீக்கத்துக்குப் பௌத்தம் எட்டு வழிகளைக் கூறுகிறது. இவை "அஷ்டாங்க மார்க்கம்" என வழங்கும்.

அவையாவன: (1) நற்காட்சி (2) நற்கருத்து (3) நல்வாய்மை (4) நற்செய்கை (5) நல் வாழ்க்கை (6) நன் முயற்சி (7) நற்கொள்கை (8) நல்லமைதி. இந்த அட்டாங்க மார்க்கத்தில் பஞ்ச சீலமும் அடங்கும். காமம், கொலை, கள், பொய் களவு எனும் ஐவகைச் சீலமுமே பஞ்சசீலம் எனப்படும். மேலும் அட்டாங்க மார்க்கத்தில் வரும் சீலத்தில் இந்த ஐந்து சீலங்களும் (ஒழுக்கங்களும்) சீலம், தசசீலம் என்பனவும் அடங்கும் உலகப்பற்றுக்களை நீக்கித் துறவறத்தை மேற்கொண்டவரே பிக்கு ஆவர். அவர் சமாதி (தியானம்) நிலை மூலம் மனச்சாந்தி நிலையை அடைவர். அதன்பின் பஞ்ஞா என்னும் ஞானநிலையில் ஒழுக வேண்டும். இந்த ஞானநிலையை அடைந்தவர் உலகத்தின் உண்மையான நிலையைக் காண்கின்றனர். இதனை மணிமேகலையும்–

அநித்தம் துக்கம் அநான்மா அசுசி எனத்
தனித்துப் பார்த்துப் பற்றறுத் திடுதல் மணி

மணி ங்o 254 – 255

அநித்தம் – உலக நிலையாமை; துக்கம் – துன்பம்; அநான்மா – அநாதியானது; அசுசி – அசுத்தம்

பௌத்த மத தத்துவம் பன்னிரண்டு நிதானங்களை (காரணங்களை) உடையது.

'பேதமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நர கறிகுவரே'

(மணிமேகலை உச ஆம்காதை 105 – 110)

இந்தப் பன்னிரண்டு நிதானங்களைத் தமிழில் பன்னிரு சார்பு என்பர். சார்புகளினால் பிறப்பு இறப்பு உண்டாகின்றன. சார்புகளை அறுத்தால் பிறப்பு இறப்பு நீங்கும். வீடு பேறு கிடைக்கும். இதனையே 'நிர்வாண மோஷம்' என்பர். நிதானங்களில் கூறப்படும் பேதமை என்பது அறியாமையாகும். சித்தாந்த தத்துவத்தில் இப்பேதமைக்குக் காரணம் "ஆணவம்" எனக் குறிப்பிடப் படுகிறது.

சார்புகளை பற்றித் திருவள்ளுவரும்,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மாற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்" (குறள் 369)

எனக் குறிப்பிடுவதையும் காணலாம்.

உலகப் பற்றுக்களை நீக்கித் துறவறத்தை மேற்கொண்டவரே பிக்கு ஆவர். இந்து மதத்திலும்,

'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்றே கூறப்படுகிறது. சிவ யோகர் சுவாமி அவர்கள்,

ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்"

என்று கூறும் தத்துவமும் ஈண்டு நோக்கற்பாலது. தெய்வத் திருவள்ளுவரும்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (குறள் 350)

என விளக்கமாகக் கூறுகின்றார்.

சித்தாந்த தத்துவத்தில் ஆன்ம தத்துவம் 24இல் அந்தக் கரணமாக மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கும் குறிப்பிடப்படுகின்றன. புத்த மதத்திலும் மனத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. 'தம்மபதம்' என்னும் 'அறவழி' நூலில் மனம் பற்றி விரிவான பாசுரங்கள் உள.

(Manopubbaṅgamā dhammā
manoseṭṭhā manomaya
Manasāce paduṭṭhena
bhāsati vā karotivā
Tato naṁdukkhamanveti
cakkaṁva vahato padaṁ

(பாளி மொழி – தம்மபதம் – 1)

"மனமே எல்லாவற்றுக்கும் மேலாக நிற்கிறது.
தீய எண்ணத்தோடு ஒருவன் பேசினா லென்ன
செயல் புரிந்தாலென்ன வண்டிச் சக்கரம்
மாட்டின் அடியைத் தொடர்ந்து செல்வது போல
துன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்"

என்பது தம்மபதத்திலுள்ள ஒரு பாசுரம்.

மனத்தைப் பற்றிக் கூறும் திருவள்ளுவரும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" (குறள் 44)

எனக் கூறியுள்ளமை ஒப்பிட்டு நோக்கற்பாலதாகும்.

புத்த மதத்தில் சமாதி (தியானம்) பஞ்ஞா (ஞானம்) என்ற அட்ட சீலப் பகுதியில் துறவியின் புலனடக்கம் பற்றியும் இந்து தத்துவக் கருத்துக்கள் பல உள. தம்ம பதத்தில் அறவோர் இயலில், சமணனுக்குரிய புலனடக்கம் பின் வருமாறு கூறப்படுகின்றது. சமணன் 'ஸமம்' உடையவன். ஸமம் என்பது புலனடக்கம்.

தலையை துண்டித்து விட்டு புலனடக்கமின்றி, பொய் பேசித்திரிபவனை இச்சை, லோபம் என்ற குணங்களால் நிறைந்தவனை எவ்வாறு சமணன் என்று கூறுவது?" இப்பாசுரத்தில் அடங்கிய கருத்தைத் திருவள்ளுவரும்–


"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்" (குறள் 290)

என அழகாகக் கூறியிருப்பதையும் கருத்திற் கொள்வோமாக.

கீதையிலும் ஆன்மா, உலகம், இறைவன் ஆகிய தத்துவ தரிசனங்கள் ஆராயப்பட்டுள்ளன. கீதையில் கன்மம் சிறப்பாகப் பேசப்படுகின்றது; ஞானத்தின் மேன்மையும் கீதையில் கூறப்படுகின்றது. வேதாந்தத்தில் முதன்மை பெறுவது ஞானமே. கன்மம், ஞானம், பக்தி மூன்றுக்குமே சிறப்பிடம் அளிப்பது சைவ சித்தாந்தம். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டே புத்தமதத்தில் இந்து தத்துவங்கள் ஆராயப் பெற்றுள்ளன.

தொண்டர் தம் பெருமை

அருள்மொழியரசி வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்



சைவ சமய இலக்கியங்களின் மணிமுடியாக விளங்குவது பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம். சிவபெருமான் விளைவித்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற் புராணம். வேலவனின் வேலின் வெற்றியைச் சொல்வது கந்தபுராணம். ஏன் பதினெட்டு புராணங்களுக்குக் கூட மரும்மபுராணம், பத்மபுராணம், இலிங்கபுராணம், விஷ்ணுபுராணம் என்றே பெயர்கள் இருக்கின்றன. ஆண்டவனின் பெருமையைக் கூறும் புராணங்களுக்குக் கூட இல்லாத சிறப்பு அடியவர்களின் மேன்மையைக் கூறும் திருத்தொண்டர் புராணத்திற்கு மட்டும்தான் "பெரியபுராணம்" என்ற பெயர் அமைந்துள்ளது. உண்மையாகவே தெய்வத்தை விட தெய்வத்தை வழிபடும் பக்தன்தான் பெருமை படைத்தவன். கதிரவனின் வெப்பத்தை சிலமணிநேரம் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் பகலவனின் வெப்பத்தை உள்வாங்கும் பருமணலில் ஒரு சில விநாடிகள் கூட நிற்க முடியாது.

"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்பதரிதாமே– தேசுவளர்
செங்கதிர் முன் நின்றாலும் செங்கதிர வன்கிரணத்
தங்குமண லிற்கரிதே தான்"



பெரியபுராணம் என்று வழங்கப்படும் "திருத்தொண்டர் புராணக் கதை" பாடிய அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சென்னையை அடுத்த குன்றத்தூரில் பிறந்தவர். இக்குன்றத் தூரில் சேக்கிழாருக்குக் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே சேக்கிழாரின் இளவலான பாலறாவாயர்க்கு அவரது பெயரில் பாலறாவாயர் குளம் என்றும் ஒன்று உள்ளது. அருண்மொழித்தேவர் இரண்டாம் குலோத்துங்கனான அநபாயனின் தலைமை "உத்தம சோழபல்லவராயன்" என்ற பட்டம் சூட்டப் பெற்றுப் பெருஞ் சிறப்புடன் இருந்தார். இவரது காலம் 12ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

நம்பியாரூரனின் திருத்தொண்டர் தொகைக்கு விளக்கம் தந்து வகைப்படுத்தியவர் நம்பியாண்டார் நம்பிகள். அதனை விரிவாக்கம் செய்தவர் சேக்கிழார் சுவாமிகள். எல்லையற்ற செல்வம் மக்களை நிலைகுலைத்துவிடும். சோழநாடு பெற்ற பெருவெற்றி மன்னனையும் மக்களையும் இன்பத்துறையில் எளியராக்கின. திருத்தக்க தேவர் இயற்றிய "சீவக சிந்தாமணி" என்னும் இன்பக் காப்பியத்தில் அநபாயனின் ஆர்வம் சென்றது. இத்தகைய நிலையில் மக்களைக் குறிக்கோளுடன் வாழவைக்க சைவசமயப்பற்றும் உறுதியும் தியாகமும் மிக்க சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுதான் ஏற்றது என்ற எண்ணத்தின் கருவே திருத்தொண்டர் புராணம் என்னும்

பெரியபுராணமாக உருக்கொண்டது. நம்பியாண்டாரின் பாடல்களைப் பக்க பலமாகக் கொண்டு தாமே பல ஊர்களுக்கும் சென்று, நாயன்மார்களின் தேவாரங்களைத் துணைக் கொண்டு, அந்த ஊரின் அமைப்பு, இயற்கை நலம், ஆலயங்கள் அவற்றின் வரலாறுகள் என்பவற்றைச் சேகரித்து வரிசையாக்கி நூலை அமைத்தார். 4286 பாடல்களையும் இரண்டு காண்டங்களையும் திருமலைச் சருக்கம், தில்லைவாழ் அந்தணர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறாவிரிவண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம், கறைக் கண்டன் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னிய சீர்திருத்தம், வெள்ளானைச் சருக்கம் என பதின்மூன்று சருக்கங்களையும், 63 தனியடியார்கள் பற்றியும், 9 தொகை யடியார்கள் பற்றியும் கூறும் தனித்துவம் மிக்கது. 12ஆம் திருமுறையாக ஆதித்தர்கள் பன்னிருவர் போல அருள்ஞான ஒளிவீசுகின்றது.

உலகில் தோன்றிய சமயங்களுள்ளே தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்ததுமான சைவசமயத்தின் தனித்துவத் தன்மைகளிலே ஒன்று சிவனடியார்களை சிவனாகவே காணும் மனப்பக்குவம். அன்புநெறி நின்று அருள்புரக்கும் தொண்டர்களுக்கு ஆண்டவனே தொண்டனாக மாறிவிடுகிறான். சுந்தரருக்காக இரவு முழுவதும் பரவையாரிடம் தூது செல்கிறான். சுந்தரரின் பசியை ஆற்ற திருக்கச்சூரில் வீடுதோறும் இரந்து சோறிடுகின்றார். அப்பரின் முதுபசியைத் தீர்க்க திருப்பைஞ்ஞீலியில் பொதிசோறு சுமக்கின்றார். மேலும் அடியார்களின் பெருமையை இறைவனே தனது திருவாக்கால் கூறுகின்றார்.

"பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்; அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்; இவரை நீ அடைவாய் என்று"

இராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களுக்கு காப்பியத் தலைவர் உண்டு. ஆனால் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய இக்காப்பியத்துக்குத் "தொண்டுதான்" காப்பிய நாயகம். தொண்டுள்ளம் படைத்துத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழும் ஒடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்,

"மண் பாதலம் புக்கு மால்கடல் மூடிமற்று ஏழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே
அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவது மில்லை"

என்ற அஞ்சா நெஞ்சம் படைத்த "செஞ்சாந்தெறியினும் செத்தினும் போழினும் நெஞ்சோர்ந் தோடாநிலை" நின்ற வைராக்கிய வீரர்கள் கதாநாயகர்கள்.

ஓங்காரத்தின் உட்பொருளும், ஐந்தொழில் வல்ல அகில நாயகனுமாகிய ஆடற்பெருமானின் தில்லைத் தலத்திலே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்கப் பெற்று அத்தலத்திலேயே சித்திரைத் திருவாதிரைத் திருநாளில் பெரியபுராண அரங்கேற்றமும் மிகச் சிறப்பாக அநபாய மன்னனால் எடுக்கப் பெற்றது. "திருச்சிற்றம்பலம்" என்னும் அருமறை மந்திரம் அகக்காவலும் புறக்காவலுமாக முதலும் முடிவுமாக அமைந்து ஓதுபவரைக் காக்கிறது. ஐம்பெரும் பூதங்களில் நிலம் தோற்றம் ஆகாயம் முடிவு. பிருதிவித்தலமாகிய திருவாரூரில் பெரியபுராணத்துக்குக் கால்கோளாக சுந்தரர் பெருமானுக்குத் திருத்தொண்டர் தொகைக்கு "தில்லை வாழந்தணர்" என்று ஆகாயத்தலமாம் தில்லையை நினைப்பித்து அத்தொகையின் மூலமாக விரிந்த பெரிய புராணத்திற்கு "உலகெலாம்" என சேக்கிழாருக்கு ஆகாயத்தலமாகிய தில்லையில் உலகின் ஆதாரமான பிருதுவியை (ஆரூர்) நினைப்பித்தது திருவருட் பொருத்தமே.

இப்புராணத்தில் இடம்பெறும் அடியார்கள் யாவரும் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்களே. இவர்களில் மூன்றிலொரு பங்கினர் இல்லறமாகிய நல்லறத்தில் இருந்து கொண்டே மனைவிமார் துணையுடன்அரிய பெரிய செய்கைகள் செய்து வீடு பேறடைந்தவர்கள். சாதியோ குலமோ நாயன்மார்களின் சாதனைக்குக் குறுக்காக நிற்கவில்லை. அத்துணை பேரின் தகுதிகள் தொண்டு என்னும் தராசிலே நிறுக்கப்பட்டன. அந்தணர்கள் 12 பேர், அரசர்கள்11, வேளாளர்13, வணிகர்5, ஆதிசைவர்4, இடையர்2, நுளையர் 1, வேடர்1, செக்கார் 1, மாமாத்திரர் 1, ஏகாலியர் 1, குயவர் 1, புலையர்1, பாணர்1, சாலியர்1, சான்றார் 1, குலத்தெரியாதோர் 6. இவர்கள் அனைவருமே சிவதொண்டர்கள். இதில் படித்தோர், படிக்காதவர், ஆண் பெண் என்ற பாகுபாடும் கிடையாது. வயது வேறுபாடும் இல்லை.

"பண்புடையார் பட்டுண்டு லகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" என்பது குறளமுதம்.

அகப்பொருள் நிலையினை சுந்தரர் வாழ்க்கை மூலமாகவும், பொருளியல்பினை இடங்கழியார் மூலமாகவும், போர் அறத்தினை புகழ்ச் சோழர் வரலாற்றிலும், நீதிவழுவா நெறிமுறையினை மனுநீதிச் சோழன் மூலமாகவும், சிவவேடத்தில் காட்டும் மதிப்பை மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றிலும் காண்கிறோம். பக்தி நெறிக்கும், ஒழுக்க நெறிக்கும் உறுதி சேர்ப்பதில் ஆண்களுக்குப் பெண்கள் இளைத்தவர்கள் இல்லை என்பதை குன்றை நகர்த் தோன்றலார் தமது நூலில் நிலையாட்டியுள்ளது இன்று பெண்ணிலை வாதம் என்ற பொருளற்ற வறட்டு வாதத்தில் பொழுதை வீணே கழிப்பவர்க்குத் தக்க பாடமாகும்.

குன்றைக் கொண்டல் பொழிந்த பாமழையுள் அமரகவியின் வாழ்க்கையே ஊன்றுகோலாகக் கொண்டு பெண்ணிலக் கணத்தைத் தேடினால் கண்ணன் எப்படி எப்படி எல்லாம் தன்னைப் பணிகொண்டான் என்பதை பெண்ணில் சாற்றிப் பார்க்கலாம்.

"நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்த் தன்னைப் பெண்மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக் கொண்டால்த் தான் இல்வாழ்க்கைப் படகு சுழன்றடிக்கும். சூறாவளிகளுக்கும் பெருமழைக்கும் ஈடுகொடுத்து முன்னேற முடியும். பெண்ணிற்கு ஏற்றம் தருவது பதிபக்தியே. இல்லம் என்னும் கோயிலைத் தூய்மையாக்கி, கொண்டவனை அதில் குடியேற்றி அவனைத்

தெய்வமாக்குகின்றாள். மனைக்கு விளக்கமே மடவார்தானே. ஆடவர் உயர்வுபெறப் பெண்ணே காரணமாகிறாள். அவனைக் கணவனாக மட்டும் கருதாது பாரதி சொல்லிய பல கோணங்களில் அவனை அணுகி உயர்த்துகின்றாள். இதற்குப் பெரியபுராணப் பெண்மை விளக்கம் தருகின்றது.

எதிர்பாராதவகையில் பரத்தையர்பால் சென்று திரும்பிய தனது கணவனைத் "தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்று நாளும் கணவன் வழிபடும் திருநீலகண்டத்தின் மீது ஆணைவைத்து அற்புறு புணர்ச்சியின்மை அயலறியா வகை வாழ்ந்து, முகம் நக நட்பாடாது, இடித்துரைக்கும் கேண்மை கொண்டு பண்பையும் பதியையும் காத்த உத்தமி நட்பிற்கு இலக்கணம்.

"மந்திரிக்கழகு வரும் பொருள் உரைத்தல்". அரசனுக்கு உற்ற இடத்து உதவியும் அறிவுரை கூறியும் அற்றம் காப்பவனே அமைச்சன். அதுபோன்று நல்லமைச்சனாக அமைந்து நாயகனின் உறுதுயர் களைந்தவள் இளையான்குடி மாறனாரின் மனைவி. மாரிகால இரவொன்றில் பசிமிகுந்த சிவனடியார்க்கு உணவளிப்பது எப்படி என்று வறுமையால் வாடிய மாறனாரின் மனவாட்டத்தை தீர்க்கப் "பகலில் விதைத்த செந்நெல்லை வாரிக் கொண்டு வந்தால் வல்லவாறு அமுதாக்கலாம்" என்று ஆலோசனை கூறியதோடு அமையாது செயலிலும் நிறுவி சிவனருள் பெற வழிசமைத்தவள் மந்திரியாய் அமைந்த மாண்பினள்.

கல்விக் கண்ணைத் திறப்பவன் மட்டுமல்ல ஆசிரியன், குற்றங்கண்ட இடத்திலெல்லாம் அதனைக் களைபவனே நல்லாசிரியன். "நிலம், மலை, நிறைகோல், மலர் நிகர் மாட்சி" ஆசிரியனின் இலக்கணமாக வரையறுக்கிறார் நன்னூலார்.

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாச் சோழர் குலப் பாவை மங்கையர்க்கரசியார், நன்றறியா அமண் சமயம் நாதன் குறுகினான் என்று பரசமயக் கோளரியாம் புகலிவேந்தனைக் கொண்டு பாண்டி வேந்தனை உய்வித்த உத்தமி. குற்றம் கண்ட இடத்துச் சற்றும் தயங்காது அதனை நீக்க ஊனம் வந்தடையில் உயிர் துறப்போம் என்ற உறுதி பூண்ட உயர் ஆசான் வளவர் குலக் கொழுந்து.

"ஈசன் அருள் எனக்கேட்கும்" – அது தெளியாத பொருள் வணிகன் பரமதத்தன். அவனுக்கு அருள் நிலையத்தைத் தெளிவிக்க தன் வாழ்வையே துறந்து, பெண்மையை தெய்வமாக்கி, ஈசனுக்கும் அன்னையாய் உயர்ந்த தெய்வம் காரைக்கால் தந்த காரிகை.

சிவனடியார்களுக்கு முன் தம்மை "சிறுதொண்டர்" எனக் கருதிக் கொண்டு அடியார்களுக்கு உணவிடுவதில் அயராது நின்றவர் சிறுத்தொண்டர். அவரது இல்லத் துணைவியார் மனையறத்தின் வேராகிய திருவெண்காட்டு நங்கை. பணித்தவனின் பணிகேட்டு நடக்கும் பண்பே பணியாளனுக்கு உரியது. அதுவன்றி மறுத்தோ – அல்லது தனது விருப்பு வெறுப்பைப் பற்றியோ உரைப்பது அவரது தகுதிக்கு அழகல்ல.

ஓர் நாள்..., சோதனை மிகுந்த நாள். சிறுத்தொண்டரது இல்லத்திற்கு வந்த சிவனடியார் பிராயம் ஐந்துள்ளவனாய்– குடிக்கொரு புதல்வனாய் உள்ளவனை தாய் பிடிக்கத் தந்தை அரிந்து சமைக்கும் கறியமுதே தாம் உவப்பது என்று கூறியதைக் கேட்ட தொண்டர் மனைவியின் பூரண ஒத்துழைப்புடன் தான் பெற்ற பிள்ளையைக் கறியாக்கினார். உண்மைப் பணியாளனுக்கு தனது உடையவனின் பணியே நோக்கு. அதற்காக எத்துணை அரிய காரியத்தையும் செய்யப் பின்னிற்க மாட்டான். திருவெண்காட்டு நங்கையும் அதே துறையில் நின்று "கணவனார் அருமை உயிரை எனக்களித்தான் இவன்" என்று மகிழ்ந்து பணிவினால் பணியாளனாக மாறியவள் வெண்காட்டுப் பாவை.

தம்பியார் உளராக வேண்டும் என்பதனால் அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி, நாவுக்கரசரை நமக்கீந்தவள் பெண்களில் திலகமான திலகவதியார்.

கருஉயிர்ப்பின் கூரிய வேதனையையும் தாங்கிக் கொண்டு உரிய வேளையில் மகவைப் பயந்து அவனை அரசக்கரசனாக்கி அந்த மகிழ்வில் இரணத்தைத் தழுவிக் கொண்டவள் சோழன் கோச்செங்கணானின் தாய் கமலவதி.

திருஅயவந்தி ஆலயப் பெருமான் மீது சுதைசிலம்பி ஊர அதனை ஊதிப் போக்க முற்பட்ட மனைவியை எச்சிற்பட அனுசிதம் செய்தாய் என்று கோபித்து அவளையே துறந்தார் திருநீலநக்கர். ஆனால் அவரது எண்ணம் தவறானது எனக்கூறி அவளது வாய் எச்சில்படாத இடத்தில் எழுந்த கொப்புளங்களைத் தன் திருமேனியிற் காட்டினார் சிவபெருமான். மனைவியின் தலையாய அன்பை உணர்ந்து கொண்டார் திருநீலநக்கர்.

பரவையார், சங்கிலியார் போன்ற பெண்கள் இறைவனது பேரன்பிற்குப் பாத்திரமானவர்கள். பெரியபுராண அடியவர்கள் ஒவ்வொருவரது சிவப்பேற்றிற்கும் தக்க காரணமாய், மறைந்து நின்று உதவியவர் பெண்களே என்பதில் ஐயமில்லை.

பெரியபுராணத்தைப் பொதுவாக நோக்கினால் ஒரு கருத்து தெற்றென விளங்கும். அறத்தினின்று நீங்கியவரை தண்டிப்பது நீதியேயாகும் என்பதுதான் அது.

சிவகாமியாண்டார் பதைபதைக்க அவரது பூக்குடலையை இறைவனது பூசைக்காகக் கொண்டு வந்த மலர்களைத் தனது துதிக்கையால் பற்றி இழுத்துச் சிதைத்தது ஐந்தறிவுள்ள யானையே என்றாலும், அதனது துதிக்கையைத் தனது மழுவினால் வெட்டி அதற்குத் தண்டனை அளித்தார் எறிபத்தர்.

இதற்கு மறுதலையாக ஐந்தறிவுள்ள ஒரு பசுவின் கன்றின் உயிரைப் போக்கித் தாய்ப்பசுவிற்குத் துன்பந் தந்தது தனது மகன் என்றறிந்தும் மகனைத் தேர்க்காலில் கிடத்தி அவன் மீது தேரைச் செலுத்தி நீதியினைக் காத்தான் மநுநீதி மன்னன்.

இறைவனுக்கென்று சேமித்து வைத்துள்ள நெல்லைப் பஞ்சம் வந்த காலத்தில் பயன்படுத்திக் கொண்டார்கள் என்ற காரணத்தில் அனைவரையும் வாளால் வெட்டி வீழ்த்தினான் கோட்புலி. கடைசியில் ஓர் ஆண்குழந்தை மட்டுமே எஞ்சியது. அக்குழந்தையையும் கொல்ல மன்னன் வாளை ஓங்கிய பொழுது அருகிலுள்ள அமைச்சர் "அரசே இந்தக் குழந்தை அந்த நெல்லை உண்ணவில்லையே. ஒரு குடிக்கு ஒரு குழந்தை, இக் குழவியை விட்டுவிடுங்கள்" என்று கூறியபொழுது "இக்குழந்தை அந்த அரிசியை உண்ணவில்லை. உண்மை தான்– ஆனால் அந்த அரிசியை உண்டவளின் முலைப்பாலை உண்டது" என்று கூறி குழந்தையை இருதுண்டாக வெட்டினான் மன்னன் கோட்புலி.

பிறருக்கு தண்டனை தருவதில் மட்டுமல்ல கடமையை– அறத்தைக் காக்கத் தவறிய நேரத்தில் தனக்குத் தானே தண்டனை

விதித்துக் கொண்டவர்கள் பலபேர் உண்டு பெரிய புராணத்தில். இறைவனுக்குச் சாத்த சந்தனக் கல்லில் வைத்து இழைத்த மூர்த்தியார்; தன் கண்ணை இடந்து அப்பிய கண்ணப்பன்; இறைவனுக்குப் படைக்கும் செந்நெல்லும், கீரையும், மாவடுவும் பூமியின் களரியில் சிந்திய காரணத்தால் தனது கழுத்தையே அறுத்துக் கொண்ட அரிவாட்டாயர்; சிவன் அடியாரின் துணியைத் தோய்த்து உலர்த்திய வேளையில், பெருமழை பெய்து, குறித்த நேரத்தில் தனது தொண்டைச் செய்யத் தவறிய காரணத்தால் தனது தலையைத் துணி துவைக்கும் கல்லிலேயே மோதிக் கொண்ட திருக்குறிப்புத் தொண்டர்; சிவனடியார் விரும்பிய காரணத்தால் தனது மனைவியையே அவருக்கு அளித்து, அதனை தடுத்த சுற்றத்தார்களைக் கொன்று குவித்து உலக இயற்கைக்குப் புறம்பான இயற்பகையார்; அபிஷேகப் பாலை இடறிய காரணத்தினால் தந்தை என்றும் பாராது அவரது காலை வெட்டி விசாரசர்மராக இருந்து சண்டீசப்பதம் பெற்று உயர்ந்த சண்டீசர்; சிவசந்நிதியில் விளக்கெரிக்கக் கணம்புல் கிடைக்காத காரணத்தால், தனது தலைமயிரையே திரியாக்கி எரித்த கணம் புல்லர்; மாதேவனுக்குச் சாத்தும் மலரை முகர்ந்து விட்டாள் என்றதனால் பட்டத்தரசி என்றும் பாராது அவளது மூக்கை அரிந்த செருத்துணையார், முகர்ந்து பார்க்க மலரை எடுத்தது கையே என்று, தனது மனைவியின் கரத்தை துணித்த காடவர்கோன் கழற்சிங்கன் போன்ற பலர் உண்டு.

வன்தொண்டால் மட்டுமல்ல மென்தொண்டாலும் முக்தி நிலையெய்திய பெரியோர்களையும் பெரியபுராணம் நமக்குக் காட்டும்.

திருவைந்தெழுத்தை குழலிலே அமைத்து ஓதியே முத்தி பெற்ற ஆனாயர், பல்வகை மலர்களைப் பறித்து வந்து, அதனைக் கோவைமாலை, இண்டை மாலை, பக்தி மாலை, கொண்டை மாலை, சரசமாலை, தொங்கல் மாலைகள் அவ்வக் காலங்களில் வர்த்தமானே சுவருக்குச் சாத்தி சிவபதம் அடைந்த முருகநாயனார், சிவபெருமானுக்குரிய உருத்திர மந்திரத்தை செபித்தே வீடுபெற்ற உருத்திர பசுபதியார், குலச் சிறையார், நரசிங்க முனையரையர், சுந்தரரை ஈன்றதாலேயே சிறப்புப் பெற்ற சடையனார் இசைஞானியார் போன்றோர்களும் உள்ள வீறுடைய தொண்டர் திலகங்களே யாவர்.

அறுபான் மும்மை நாயன்மார்களைத் தவிர தொகையடியார் களாகிய தில்லைவாழந்தணர், பொய்யடிமையில்லாத புலவர், பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன் பால் வைத்தார், திருவாரூர் பிறந்தார், முழுநீறு பூசிய முனிவர், முப்போதும் திருமேனி தீண்டுவார், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்ற ஒன்பதின்மரும் மெய்யடியார்களே.

சேக்கிழார் பெருமான் கனவிலும், நனவிலும் நினைந்து நைந்துருகுவது சிவனடியார்களின் செம்மை நிறைந்த தொண்டுகளையே. சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூலமாகத்தான் அந்தச் செழும் புதையல் கிடைத்தது என்பதைச் சேக்கிழார் மறக்கவில்லை. இந்நன்னிப் பெருக்கின் ஆழத்தை சருக்கங்கள் தோறும் நிறைவிலே சுந்தரருக்கு பாடல் அமைத்த பண்பால் அறியமுடிகின்றது. நான்காவது சருக்கமாகிய "மும்மையால் உலகாண்ட" சருக்கத்தின் இறுதியில்

"நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்ய திருத் தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாசமலர் மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்"

சைவ அடியார்களைப் போற்றும் திறத்தினை எடுத்துக் கூறிய சுந்தரரைத் "திருவாளன்" என்று போற்றியதோடு அவரைப் போற்றியதால் தனது பிறப்பே பயன்பெற்றது என்று உள்ள நெகிழ்வுடன் பாடியது ஒன்றே "தொண்டர்தம் பெருமைக்குக்" குன்றிலிட்ட விளக்கான விளக்கமாகும்.

திருத்தொண்டர் புராணம், ஊர், நாடு, சமயம், சாதி இவைகளைக் கடந்த விரிந்த பார்வை கொண்டது. திருநீறும் திருவைந்தெழுத்தும் உருத்திராக்கமுமே உறுதிப் பொருள்கள் என்ற அழுத்தமான நம்பிக்கையை ஊட்டும் சால்பு மிக்கது. சுருங்கக் கூறின் மனிதன் மனிதனாக மட்டுமல்லாமல் தெய்வமாக உயரும் முறையை சுட்டவல்ல வாழ்க்கை நெறி.



மகோற்சவம்

ஆலயங்களில் தினமும் நடைபெறும் கிரியைகள் நித்தியக் கிரியைகள் என்றும் விஷேடமாகச் செய்யப்படும் கிரியை நைமித்தியக் கிரியை எனவும் அழைக்கப்படும்.

இக்கிரியை வாரம், மாதம், வருடம் எனும் காலங்களில் வரும் விசேட தினங்களைச் சிறப்பாகக்கொண்டு நடைபெறும். நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளை நீக்கும் பொருட்டு நைமித்திய பூசை நடைபெறும். வருடம் ஒரு முறை நடைபெறுவது மகோற்சவம் ஆகும். மகா என்பது பெரிய என்றும், உற்சவம் என்பது விழா எனவும் பொருள்படும். ஆன்மாக்களின் மலத்தை நீக்கி வீடுபேற்றை கொடுக்கும் பெரியவிழா என்று பொருள்படும். நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் சிறப்பானதொரு கிரியை ஆகும். இது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகிறது. கொடிமரம் உள்ள ஆலயங்களில் கொடியேற்றம், தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்களும், கொடிமரமில்லா ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்களும் இடம்பெறும்.

ஆலயத்தில் மகோற்சவம் தொடங்கிவிட்டால் மக்கள் வாழ்க்கையிலும் ஓர் உயிர்த்துடிப்பு ஏற்படுகிறது. இயந்திரமயமான வாழ்க்கை வாழுகின்ற மக்களது மனத்தின் சலிப்பை அகற்றி, உற்சாகத்தையூட்டி, மனப்பூரிப்பை ஏற்படுத்தி, வாழ்க்கையிற் பிடிப்பு ஏற்பட இது வழிவகுக்கின்றது.

மக்கள் ஒன்று சேர்ந்து கோயிலையும் வீதிகளையும் சுத்தம் செய்து, குலை வாழைகள் நாட்டி, தோரணங்கள் தொங்கவிட்டு, அலங்கரிப்பர். வீடுகளை சுத்தம் செய்வதுடன் விரதமும் மேற்கொள்வர்.



இந்து கலாசாரப் பண்பாடு

அமரர் திருமதி.
மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
முன்னாள் அதிபர்,
இராமநாதன் கல்லூரி சுன்னாகம்



ஓர் இனம் புகழ் பெற்று விளங்கவும் எல்லோராலும் போற்றப்படவும் அதன் வாழ்க்கை விழுமியங்கள், கலாசாரப் பண்புகள், நாகரிகம் என்பன உயர்ந்தவையாக ஆழமாக வேருன்றி இருப்பதவசியம். உலகில் சிந்து நதிக்கரையிலே, நைல் நதிக்கரையிலே, யூபிரற்றிஸ் நதிக்கரையிலே நாகரிகம் நின்று நிலவியது என்பதற்குப் புதைபொருள் ஆய்வு சான்றாக உளது. நாகரிகம் எனும்போது புறத்திலே காணப்படும் வாழ்க்கை வசதிகள், வழிபாட்டு முறைகள், சமூக நிகழ்ச்சிகள் ஆகியன நடந்த முறைகள் என்பதைக் குறிக்கும். பண்பாடு எனும் போது, உள்ளத்தில் ஏற்படுகின்ற உணர்வுகளால் தூண்டப்படும் கருமங்கள் ஆகும். தற்பொழுது பண்பாடும் கலாசாரமும் பெரும்பாலும் ஒரே அர்த்தமுள்ளவையாகக் கருதப்படுகின்றன.

இந்துக்களின் இல்லங்கள் தூய்மையாகவும் புனிதமாகவும் இருந்தால் மகாலக்ஷ்மி தானாக வந்து எழுந்தருளியிருப்பாள் என்பது ஒரு நம்பிக்கையாகும். வீட்டு முற்றம் சாணி தெளிக்கப்பட்டிருக்க வேண்டும். சாணி துர்நாற்றத்தைப் போக்கி, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும். வீட்டில் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மஞ்சள் நீர் தெளிக்கப்பட்டு சாம்பிராணிப் புகை இடவேண்டும். விசேட தினங்களில் வாசலிலே, பூசையறை வாசலிலே மாவிலை தொங்கவிடுவதால் அசுத்தக் காற்று உள்ளே நுழையமாட்டாது. வீட்டைச் சுற்றிப் பூசைக்குரிய பூமரங்கள் நடப்பட்டு நன்கு பராமரிக்க வேண்டும். துளசி வீட்டு முற்றத்தில் இருக்க வேண்டியதொன்று. விஷப்பிராணிகள் துளசியுள்ள இடங்களை அணுகமாட்டா. நறுமணம் மிக்க துளசி மாடத்துக்கு மாலையில் விளக்கேற்றி வழிபாடு செய்வது இந்துக்களின் மரபென்றால் மிகையில்லை. இந்துக்கள் பசுமாட்டை அன்புடன் வளர்த்து அளவாகப் பயன்படுத்தி, பட்டிப்பொங்கல் நடத்திப் பசுவை கோமாதா என் வழிபடுவார்கள்.

இந்துக்களின் முக்கிய பண்புகளில் மிகவும் இன்றியமையாத விருந்தோம்பல் பற்றி மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. வீட்டுக்கு வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று அறுசுவை உணவு அளிப்பது இந்துக்களின் தலையாய கடமை. இளையான் குடிமாற நாயனார், குங்கிலியக் கலைய நாயனார் ஆகியோர் விருந்தோம்பிய முறை எமக்கு முன்மாதிரியாக அமைகிறது. ஏழைகளையும், ஆதரவற்றவர் களையும், அனாதைகளையும், துறவிகளையும் அரவணைத்து இயன்றளவு உதவி செய்ய இந்துக்கள் முன்வர வேண்டும். பல வருடங்களுக்கு முன்பு கூட்டுக் குடும்ப முறை இருந்த பொழுது மேற்கூறிய பண்புகள் கைக்கொள்ளப்பட்டன என்பதற்குச் சமய தமிழ் இலக்கியங்களில் போதிய சான்றுகள் உள்ளன. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை எனவும், யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை எனவும், அன்னதானமே மேலான அறம் எனவும், வரையாது வழங்க வேண்டும் எனவும் இன் சொல் பேச வேண்டும் எனவும் உயர்ந்த கொள்கைகளைக்


கடைப்பிடித்து வாழ்வதவசியம். சீரியநெறியில் வாழ்பவர்களுக்கு மகாலக்ஷ்மி அருள் சுலபமாகக் கிடைக்கும் என்பது திண்ணம். கொல்லாமை எனும் கோட்பாடு இந்து மக்களுக்குரிய உன்னத நெறியாக விளங்குகிறது. மிருகங்கள் பறவைகள் எமக்குப் பல உதவிகளை நல்குகின்றன. மேலும் அவைகள் சிறப்பியல்புகள் பல உள்ளவையாக மனிதனுக்கு அவற்றைக் கடைப்பிடித்து வாழ வழி காட்டுகின்றன. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கிளியைப் பார்த்து "சிறையாரும் மடக்கிளியே" என்று ஆரம்பித்து, உனக்குத் தேனும் பாலும் தருவேனே தோணிபுரத்து ஈசன் நாமத்தை ஒரு முறை சொல்லமாட்டாயா? என்பது கிளி சொன்னதைச் சொல்லும் தன்மையுடையது என்பதைப் புலப்படுத்தும். மாணிக்கவாசகப் பெருமான் குருமூர்த்தியாகத் தன்னை ஆட்கொண்ட இறைவனைத் தேடித் தேடிக் கண்ணீர் சொரிந்து இனிமையாகக் கூவும் தன்மை வாய்ந்த குயிலைப் பார்த்து 'கீதமினிய குயிலே!' என விழித்துப் பாடுகிறார். இப்பாடல்கள் எம்மைச் சூழவுள்ள பறவைகள் மீது நாயன்மார்கள் கொண்ட ஈடுபாட்டைக் காட்டுகின்றன.

எமது சுற்றாடலிலே ஆலயங்கள், கலாசார மண்டபங்கள், நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் எனப் பல நிறுவனங்கள் உள. அவை அமைக்கப்படும் பொழுது எமது கலாசாரத்தையும் நாகரிகத்தையும் பிரதிபலிக்கும் கலையம்சங்கள் உள. எமது கலைப் பண்புகள் உலகிலேயே உயர்ந்தது எனப் போற்றப்படுகிறது. வானளாவிய கோபுரங்களையும், கருங்கல்லிலே செதுக்கப்பெற்ற சிற்பங்களையும், பிரமாண்டமான வீதிகளைக் கொண்ட ஆலயங்களையும் பார்த்து வியந்து அன்னிய தேசத்தவர்கள் போற்றுவது எமக்குப் பெருமை தருகிறது. குகைகளிலே காணப்படும் உயிரோவியங்கள் அக்கால ஓவியர்களுடைய கைவண்ணத்தையும் காட்டுகிறது. காலத்தால் மங்காத ஓவியங்களும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஆலயங்களும் இந்துக்களுடைய விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவு எத்தகையது என்பதை விளக்குகிறது. தற்கால விஞ்ஞானிகளையும், தொழில்நுட்ப வல்லுனர்களையும், ஆராய்ந்து விளக்கம் கூறமுடியாது. திகைக்கச் செய்யும் கருங்கற் சிற்பங்கள் இந்துக்களின் பாரம்பரியச் சொத்தாகும். ஆலயங்களிலே காணப்படம் இறைவனுடைய திருவுருவங்கள் கண்ணைக் கவரும் விதத்தில் மிக நுட்பமாக ஆகம விதிகளுக்கு ஏற்ப அளவுப் பிரமாணத்துக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளன. இறைவனுடைய திருவுருவங்களும் ஆலயங்களும் அழகாகக் காட்சியளிப்பதுடன் தத்துவரீதியான கொள்ளைகளுக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளன.

ஆலயங்களில் பூசைக்குப் பயன்படுத்தப்படும் பத்திரங்கள், மலர்கள் எல்லாம் பல வர்ணங்கள் உடையவையாக நறுமணம் மிக்கவையாக, அழகானவையாக விளங்குவதோடு மருத்துவக் குணம் மிக்கவையாகவும் விளங்குகின்றன. இலைகளுக்கு நறுமணம் இல்லை. ஆனால் துளசியும், மருதும் நறுமணம் உள்ளவைகள். இந்து நாகரிகத்தில் தாமரைக்கு முதன்மையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இறைவன் எழுந்தருளும் பீடம், தூண்களின் கீழ்ப்பாகமும், அடிப்பாகமும் மற்றும் தளங்களின் மேற்பகுதி எல்லாம் தாமரை வடிவத்தில் காணப்படுகின்றன. "பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை" என்று அப்பர் சுவாமிகள் கூறுவதற்கிணங்க எல்லா மலர்களிலும் பார்க்க அழகானதாக விளங்குகிறது. கலைமகள் வெண்டாமரையிலும், மகாலக்ஷ்மி செந்தாமரையிலும் விரும்பி எழுந்தருளியுள்ளார்கள். தாமரை போன்ற சிறப்பியல்புகள் பொருந்திய உள்ளமே இறைவனுக்கு உகந்ததாகும். "உள்ளக்கமலமெடி உத்தமனார் வேண்டுவது" எனச் சுவாமி விபுலானந்தர் கூறுவது ஈண்டுநோக்கற்பாலதாகும். பூசைக்குப் பயன்படுத்தப்படும் செம்பு, குடம் தட்டம், தாம்பாளம் என்பன பித்தளையாலும், தாமிரத்தாலும் செய்யப்பட்டவை. அவற்றின் பயன்பாடு உடல் நலத்தைப் பேணுவது என்பது அனுபவ ரீதியாக அறிந்ததொன்று. பித்தளையினாலும் செப்பினாலும் செய்யப் பெற்ற விக்கிரகங்களும் அருள் வீச்சுடையவையாக விளங்குகின்றன. விஞ்ஞான வளர்ச்சி ஏற்படாத முற்காலத்தில் இவற்றை எவ்வாறு இந்து சமயத்தவர்கள் கண்டுபிடித்துப் பயன்படுத்தினர் என்பது, விந்தையிலும் விந்தையாக உளது. வேறு எந்தச் சமயத்திலும் இப்படியான கொள்கைகள் கடைப் பிடிக்கப்படவில்லை.

இந்து சமயத்தவர்கள் புதுவருடப் பிறப்பு , தீபாவளி, தைப்பொங்கல் பிறந்த தினம், திருமணம் ஆகியவற்றை இந்து கலாசார, பண்பாட்டு மரபுக்கேற்பக் கொண்டாடுகிறார்கள். மங்களகரமான நிகழ்ச்சிகளுக்கு வாழை கட்டுதல், மாவிலைத் தோரணம் தூக்குதல், மாக்கோலம் போடுதல், நிறைகுடம் சந்தனம், பன்னீர் வைப்பது எமது பாரம்பரிய மரபாகும். மேலும் திருநீறு, குங்குமம் வெற்றிலை பாக்கு, பழம் என்பனவும் வைப்பது முறையாகும். பிறந்ததின விழா பிறந்த நட்சத்திரத்தன்று கொண்டாடப்பட்டது. அதாவது அன்று ஆலயத்துக்குச் சென்று அர்ச்சனை செய்து வழிபடுவது ஆன்றோர் அனுசரித்த முறை. ஆனால் இன்று பிறந்த திகதியில் அதிகமானோர் கொண்டாடுவது மேலை நாட்டு நாகரிகத்தின் தாக்கம் எனலாம்.

இந்து கலாசார முறைப்படி அணியும் ஆடைகள் பெருமதிப்புக்குரியவையாக விளங்குகின்றன. இன்று நம்மவர்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்வதாலும் அங்கு நிலவும் சீதோஸ்ண நிலை காரணமாகவும் மேற்கு நாகரிகப் பாணியில் ஆடைகளை அணிகின்றனர். அங்கு சென்றவர்கள் தாம் வாழும் இடங்களில் ஆலயங்களை அமைத்து விழாக்களைச் செய்து எமது நாகரிகத்தை வளர்ப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். எமது சமயத்தாலும், பண்பாடு, கலாசாரத்தினாலும் கவரப்பட்ட அமரர் சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் அமெரிக்காவிலே ஆலயம் அமைத்து, எமது கலாசாரப் பண்பாட்டை வளர்த்தவர். இன்று அது தொடர்ந்து வளர்கிறது.



பேராற்றல்மிக்க பரம்பொருள்

திருமதி பத்மா சோமகாந்தன்
எழுத்தாளர்,
கல்லூரி அதிபர் (ஓய்வு)



"அரிது அரிது மானுடராய்ப் பிறத்தலரிது"

என்றார் ஔவை மூதாட்டி.

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்; இப்பிறவி
தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ; ஏது வருமோ அறிகிலேன்"

என்று மானுடப்பிறவியின் அருமையை, உணர்வை எடுத்துரைத் துள்ளார் தாயுமான சுவாமிகள்.

நாம் இம்மானிடப் பிறவியெடுத்ததன் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்றார் நல்லைநகர் தந்த சொல்வல்லாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்.

இவையெல்லாம் நமக்கு மானுடப் பிறவியின் பெருமையை உணர்த்தி நிற்கின்றன. இப்பிறவியெடுத்தலென்பது இலகுவில் கைகூடுவ தொன்றல்ல என்பதை மனதை உருக்கும் தன் திருவாசகத்தில்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருகு மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
சொல்லா நின்றவித் தாவர சங்கமத்து
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம் பெருமான்"

என உருகி நிற்கிறார் மணிவாசகப் பெருமான். சஞ்சிதம், பிராரப்தம் போன்ற கர்மவினைகள் சேர்ந்திருந்தாலும் இந்தக் கிடைத்தற்கரிய பெரும் பேறான மானுடப்பிறவியைப் பெற்றுக் கொண்ட நாம் எப்படி எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதே எமக்கு முன் உள்ள சவாலாகும்.

ஐம்புலன்களையும் ஈர்க்கக்கூடிய பல்வேறு வகையான கவர்ச்சிப் பொருட்கள் கண்சிமிட்டி நம்மை 'வா வா'வென அழைக்கின்றன. குழந்தைப் பருவமுதல் நாம் சமயத்தைத் தழுவாது விட்டால் சமய வாழ்வைப் புரிந்து கொள்ளாது விட்டால் சமயத்தின் ஆழ்ந்து விரிந்த உண்மைகள் உணர்ந்து கொள்ளாது விடின் நாம் தோற்றத்தில் மனிதனாக இருந்தாலும் எம்மிடம் மனிதப்பண்பு வளர்ந்துள்ளதா? என்பது சந்தேகமே!

மனிதரிலும் பறவையுண்டு விலங்குமுண்டு
கல்லுமுண்டு மரமுமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு"

என ஒரு கவிஞன் கூறியதுபோல மனிதத் தன்மைகள் செறியாமல் வெறுமனே விலங்காக, பறவையாக ஆறறிவற்ற உயிரினங் களாகக் கருதப்படுவோமென்பதில் ஐயமில்லை.

மனிதன் மனிதனாக வாழ்வதென்றால், சமய வாழ்வில் ஈடுபடுவதென்றால் அதற்கான அடிப்படைப் பண்புகள் பற்றி நாம் சிந்திக்கவேண்டியதவசியம். அநேகமாக எல்லாச் சமயங்களுமே இறைவனைத் தேடி அவன் அடைதலே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அதாவது உண்மையை நோக்கிப் பயணித்தலே சமயவாழ்வு எனக்கொள்ளலாம். இதனாலேயே மிக எளிமையாகப் பிற உயிர்களிடத்தில் அன்பு பாராட்டுதல் கருணை இரக்கம் கொளல், ஒழுக்கம் பேணுதல், உண்மை வழி நிற்றல், நன்றி பாராட்டுதல் ஆகியவை மனதை மூடியிருக்கும் ஆணவம், கன்மம், மாயையென்ற மலங்களிலிருந்து நாம் விலகி மனதை ஒருமைப் படுத்தி இறைவன்மீது பக்தி செலுத்தத் தூண்டுவனவாக அமையும். இதனாலன்றோ உலகில் தோன்றிய சமயங்கள் யாவுமே 'அன்பென்று கொட்டு முரசே அதில் ஆக்கமுண்டாமென்று கொட்டு' எனப் பாரதி பகர்ந்ததைப் போல அன்பையே அடிப்படைப் பண்பாகப் பேசுகின்றன. கர்மம், ஞானம், பக்தி என்பன இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள் எனச் சாத்திரங்கள் செப்புகின்றன.

இந்து சமயமென்பது இயற்கையோடியைந்த வாழ்வு நெறி. நாகரீகம் வளராத பழைய கற்காலத்தில் மனிதன் காடுகளும் மலைகளும், குகைகளுமே தன் வசிப்பிடமாக்கிக் கொண்டிருந்த நாட்களிலே திடீரென ஏற்படும் காட்டுத்தீயை, வெடித்து முழங்கும் இடியோசையைச் சீறிப்பாயும் புயல்காற்றை கொட்டிப் பெருகும் மழை வெள்ளத்தையெல்லாம் கண்டு பயந்து நடுங்கிப் பதற்றம் கொண்டான். பயங்கரமான இயற்கையின் சீற்றத்திற்கு அதீத சக்திக்குப் பணிந்தான். இயற்கையோடு முரண்பட்ட நீண்டகால அணுபவம், அறிவுக்கும் அப்பாற்பட்ட இப்பிரபஞ்சத்தின் வெளிப்பாடு, அநுபூதியின் பயனாகக் கிடைத்த கடவுள் நம்பிக்கை, விக்கிரக வழிபாடுகள் இவற்றொடு தொடர்புடைய பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும் பாவம், புண்ணியம், ஊழ்வினை, பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம் போன்ற கொள்கை களிலும் நம்பிக்கை கொண்டொழுகினான். கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம், துவிதம், சுத்தாத்துவிதம் எனப் பல்வேறு வகையான தத்துவங்களையும் கொள்கைகளையும் கொண்ட சமணம், பௌத்தம், சார்வாகம், வைஷ்ணவம், சைவம் என்பவற்றையெல்லாம் இணைத்துக் கொண்ட இந்துமதம் ஒரு பெருநெறியாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

"விறகில் தீயினன் பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்..."

என்ற அப்பர் சுவாமிகளின் அடிகளால் இனங்காணப்படும் இறைவனைத் திருமூலர்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமா வதறிந்த பின்
அன்பே சிவாமா யமர்ந் திருப்பாரே"

என அன்பே சிவம் என்பதைத் தெளிவுபெற அழுத்தினார்.

இந்து மதத்தை வறுமையுளும் வறுமை சூழ்ந்த எந்த ஏழையும் கடும்பிணியினால் வருத்தமுறும் கொடும்பிணியாளனும் உடலில் இயக்கமற்ற கடும் பெலவீனனும் மனம் சோர்ந்து துன்பத்தினால் கட்டுண்டவனும் எந்தக் கீழ்மட்ட படிப்பறிவற்ற பாமர நிலையிலுள்ள வனும் கூட தழுவி, கடைப்பிடித்து உணர்ந்து வாழமுடியும். இத்தகைய எளிமையையும் உண்மையையும் நிலைத்த அர்த்தத் தையும் நீண்ட பெருவாழ்வையும் கொண்ட இந்து மதத்தின் சிறப்பைப்பற்றி வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், காப்பியங்கள் மட்டுமன்றி வேதவித்துக்கள் நாயன்மார்கள், சாஸ்திரிகள் அநுபூதிமான்கள் அருளாளர்கள் இறையருள் பெற்ற மகான்கள் எனப் பக்திகொண்ட பலரும் விரிவாக விளக்கியுள்ளனர். தாம் பெற்ற அனுபவங்களையும் தாம் கண்ட அருட் காட்சிகளையும் தமக்குக் கிடைத்த பேறுகளையும் தமது சிஷ்யர்களோடு அடியவர்களோடும் பகிர்ந்துள்ளனர். இந்து சமயத்தைத் தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர்கள் மட்டுமன்றி இந்து சமயத்தைத் தழுவாத ஏனைய ஆய்வாளர்கள், கல்விமான்கள் அறிவியல் அறிஞர்கள் எனப்பலரும் இந்துசமயத்தின் பெருமையை நுட்பமான சிறப்புகளை வியந்து போற்றியும் பாராட்டியுமுள்ளனர்.

சேர் மோனியர் வில்லியம்ஸ் (Sir Manier Williams) என்ற அறிஞர், "இந்துமதம் எல்லாச் சமயங்களிலுமுள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல் எல்லாவற்றையும் ஏற்று உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன் கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த நோக்கினால் தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக் கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக இந்துமதம் விலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்கும் பொருந்திய நலன்களை விளைவிக்கும் திறனை இந்துமதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும், மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்துமதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் காரணம் எனலாம். தத்துவஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சிமிகுந்தோர் செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்க வல்லதாக இந்துமதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது" எனக் குறிப்பிடுகின்றார்.

நீண்ட காலம் சென்னையில் தங்கி வாழ்ந்து பலவகையான சமூக சேவைகளிலும் தன்னைக் கரைத்துக்கொண்ட டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையார் இந்து மதத்தைப்பற்றிப் பின்வருமாறு சொல்கிறார்:

"After a Study of 40 years and more of great religions of the world I find none so perfect, none so sacrifice, none so philosophical and none so spiritual as the great religion known by the name of Hinduism. The more you know it, the more you will love it, the more you try to understand it the more deeply you will value it"

"கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்தபின் இந்துமதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும் அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்கள் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக் கூடியதும் ஆகிய சிறந்தமதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் நன்றாக உணருகின்றேன். இந்துமதத்தின் எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்றோமோ அத்தனை அளவுக்கு அதனை நாம் மதித்துப் போற்றி மகிழ்வோம்."

மேலும், "இருள் செறிந்த இந்த அணுயுகத்தில் உள்ளத்துக் குள்ளே மறைந்து கிடக்கின்ற ஒருவகை அச்சத்துடன், மனிதன் தனக்கு வழிகாட்டும் ஒரு வான் பொருளைப்பெற முயன்று கொண்டிருக்கின்றான், உணர்ந்தோ அல்லது உணராமலோ அவன் மீண்டும் கடவுளைத்தேடி அலைந்து கொண்டிருக்கின்றான். மக்கள் அதனைக் கடவுள் என்றோ அல்லது பேய் என்றோ எவ்வகையிலாயினும் அழைத்துக் கொள்ளட்டும்! அது ஒரு மேலான தப்புயர்வற்றபேராற்றல் என்பதனை மட்டும் அவர்கள் நன்கினிது உணர்தல் வேண்டும். அங்ஙனம் உணர்ந்து கொண்டு விடுவார்களாயின் அவர்கள் அதற்கு வழங்கும் பெயர்களைப் பற்றியான் பொருட்படுத்தவில்லை.

கடவுள் என்பது, நம் வாழ்க்கையை ஊடுருவி நின்று இயக்கி வருகின்ற ஒரு பேராற்றலைத்தவிர வேறு பிறிதன்று. ஒவ்வொரு நாளும் நீங்கள் கடவுளை அனுபவித்து உணரமுடியும். இது வரையில் யான் என் வாழ்க்கை அனுபவங்களிலும் நூல்களிலும் இருந்து கற்றுக் கொண்டிருப்பன அனைத்தும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதில் அசையாத ஒரு பெரும் நம்பிக்கையே" என உலகப்புகழ் பெற்ற அறிவியல் அறிஞரும் உளவியல் நூல் பேராசிரியருமான கார்ல் கஸ்டாவ் ஜங் (Prof. Carl Gustau Jung) என்பவர் கூறியுள்ளார்.

அமெரிக்க நாட்டுப் பேரறிஞர்கள் மிகச் சிறந்த சிந்தனை யாளருமாகிய ரால்ஃப் வால்டோ எமர்சன் (Ralph Waldo Emerson) என்பவருடைய கூற்றுக்கள் ஆகிய இவை,

"கடவுள் ஒருவர் உண்டு என்பது நம்மைச் சுற்றி நாடோறும் நடைபெறுகின்ற செயல்களை, ஒரு சிறிது உன்னித்துப் பார்த்தாலே நமக்குப் புலனாகும். நமக்கு மேற்பட்ட இயற்கைச் சட்டமொன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதுதான் உலக நிகழ்ச்சிகளை உருவாக்கி ஒழுங்குபடுத்தி வருகின்றது. ஏதோ நம்மால் எல்லாம் நடப்பது போலக் கருதிக்கொண்டு நாம் மேற்கொள்ளுகின்ற முனைப்பு மிக்க செயல்கள் ஒருவகையில் தேவையில்லாதனவும் முழுவதும் பயனற்றனவுமேயாகும். எளிய இயல்பான ஆடம்பரமற்ற செயல்நிலையில்தான், நாம் வன்மையுடையவர்களாக ஆகின்றோம். செருக்கற்ற பணிவுடைமை யினால்தான் நமக்குத் தெய்வீக நிலை கிடைக்கின்றது. நம்பிக்கையும் அன்புமே நம்முடைய ஏராளமான கவலைச் சுமைகளினின்று நம்மை விடுவித்து நமக்கு நலம் விளை விக்கின்றன.

இயற்கைப் பொருள்களினுள்ளும் ஒவ்வொரு மனிதனின் கண்ணும் கடவுள் என்ற உயிர்ப்பொருள் உலவி நிலவி வருகின்றது. அதுவே நம்மையெல்லாம் இயக்கி வருகின்றது; உலக அமைப்பினை நாம் ஏதும் பிறழச் செய்து விடாதபடி அதுதான் கவனித்துக் கொள்கின்றது. எத்தனை ஆழ்ந்த சிந்தனையும் உண்மையான அனுபவத்தையும் உயர்ந்த தத்துவங்களையும் இவை எமது உள்ளத்தில் பதிய வைக்கின்றன.

இத்தகைய ஆழ்ந்த அகன்ற விரிந்த தத்துவங்களையெல்லாம் நாம் நன்கு உணரும்போது எத்தகைய மகோன்னதமான மதத்தின் உரிமையாளர் நாமென்றெண்ணும் போது நாம் அடையும் பெருமைக் கொரு எல்லையில்லை. இப்பெருமையை மட்டும் நாம் அட்டகாசமாக உரத்த குரலில் ஒலித்துக் கொண்டிராமல், மனிதரிலும் மனிதராக வாழும் முறைமையை

"அன்பினால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை"

என்ற வள்ளுவனின் குறள் வழி ஏனைய உயிர்கள் மீது அன்பு பூண்டொழுகி ஐம்புலன்கள் வாயிலாக அடக்கத்தையும், சாந்தத்தையும், இரக்கத்தையும் நம் வாழ்வின் அணிகலன் களாகக் கொண்டொழுகினால் நாமடையும் பயன் அளப்பிலவாகும்.

இவற்றையெல்லாம் அறிந்துணர்ந்த அருளாளரான திருமூலர் தம் கருத்தாக,

"பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன!
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு வைந்தும் பாலாய்ச் சொரியுமே"

என எமது ஐந்து புலன்களையும் பற்றி நாம் நன்கு விளங்கி உணர்ந்து தெளிந்து பயன்படுத்தினால் இறையருள் எமக்கும் பாலாய்ச் சொரியும் என இலகு தமிழில் எளிமையாகப் புகட்டி யுள்ளார். எனவே நாமும் இனிமையான மிக எளிமையான வெகு அத்தியாவசியமான மானுட வாழ்வின் மேன்மையை விளங்கி இனிமையான அன்பான எமது உணர்வுகளை வெளிப்படுத்திப் பலரையும் அதனுள் சங்கமிக்க உழைப்போம்.



சிவயோக சுவாமிகள் அருளிய மகா வாக்கியங்கள்

வேத மெய்நூலிலே நான்கு வாக்கியங்கள் மகா வாக்கியங்கள் எனக் கொண்டாடப்படுகின்றன. அவை–

1. அகம்பிரமாஸ்மி
2. தத்துவமஸி
3. பிரக்ஞானம் பிரமம்
4. அயம் ஆத்மா பிரமம்

என்பனவாகும். இவை 'பரபோகம் துய்ப்பிக்கும்' ஆற்றல்வாய்ந்த பெரு மொழிகளாதல் பற்றிய மகா வாக்கியங்கள் எனப்பட்டன. வேத இருடியர் தம்மிடம் வேதம் பயின்று பக்குவரான சீடர்க்குப் பரஞானம் உணர்த்துதற் பொருட்டு இம்மகாவாக்கியங்களைத் 'தீக்கை மந்திரங்'களாக உபதேசித்தனர். ஆதிசங்கரர் ஆதிய தத்துவஞானியர், தாம் இயற்றிய பாடியங்களில் இவற்றுக்குச் சிறப்பிடங் கொடுத்து விளக்கவுரை எழுதினர். சிவஞானமுனிவர் தம் மாபாடியத்தில் இவற்றைப் பெரும்பெயர் எனும் செந்தமிழ் மொழியால் வழங்கினர். அருணகிரிநாத சுவாமிகள் பெருத்த வசனம் (பெருத்த வசன வகுப்பு) என வழங்கியிருப்பது மகாவாக்கியம் என்பதற்கு இணையானதேயாம். அருணகிரிநாத சுவாமிகள் குறிப்பிடும் பெருத்த வசனம் முருகப்பெருமான் அருளியதாகும். இதனை ஊமை எழுத்து, அஞ்சும் மூன்றும் என்னும் பரிபாசைகள் எனச் சிலர் கூறுவர். இன்னும் சிலர் சடட்சரம் என்பர். 'கம்மாஇரு' என்பதெனவும் சிலர் கூறுவர். இவை வேத மெய்நூலிற் கூறப்பட்ட நான்கு மகாவாக்கியங் களுக்கு அப்பாலும் அநுபூதி ஞானத்தில் மாட்டிவைக்கும் மகா வாக்கியங்கள் உள என்பதற்கான சான்றுகளாகும்.

நல்லூர் தேரடியில் வீற்றிருந்த செல்லப்பதேசிகர் நான்கு மகாவாக்கியங்களை அருளினர். அவை –

தவத்திரு சிவயோக சுவாமிகளின் சீடராகச் சமயப்பணியில் இணைந்து கொண்டவர் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள். ஆரம்பத்தில் பாடசாலை அதிபராகவிருந்து கல்விப் பணியையும், பின்னர் யாழ், சிவதொண்டன் நிலையத்தின் தலைவராகவிருந்து அரும்பெரும் சமயப் பணியையும் ஆற்றி வந்தவர். பல சமய நூல்களையும், "சிவதொண்டன்" முதலான பல சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் சமய தத்துவக் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். இவர் கடந்த வருடம் [2006] ஏப்ரல் மாதத்தில் இறைவனடி சேர்ந்தார்.

தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் எழுதியிருக்கும் "யோக சுவாமிகள் – வாழ்க்கையும் வழிகாட்டுதலும்" என்ற நூலிலுள்ள கட்டுரையொன்றை இங்கு தருகிறோம்.

தவத்திரு
செல்லத்துரை சுவாமிகள்



1. பொல்லாப்புமில்லை.
2. முழுதுமுண்மை.
3. எப்பவோ முடிந்த காரியம்.
4. நாமறியோம்.

என்பன. இவற்றை அவர் ஓயாது சொல்லிக் கொண்டிருந்தார். ஓராண்டு முழுதும் ஒரு மகாவாக்கியத்தைச் சொல்வதென்ற ஒழுங்கில் ஒவ்வோராண்டும் ஒவ்வோர் மகாவாக்கியத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாரென்பர். அவர் இறுதியாகச் சொல்லிக் கொண்டிருந்தது "நாமறியோம்" என்பதெனச் சிவயோக சுவாமிகள் கூறியிருக்கின்றார். யோக சுவாமிகள் அருளிய நற்சிந்தனையிலே இம்மகாவாக்கியங்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இம்மகாவாக்கியங்களின் மாபாடியமே நற்சிந்தனை என ஒருவர் கருதுவாராயின் அதனை மறுப்பதற்கில்லை. சிவதொண்டன் நிலையமும் இம் மகாவாக்கியங்களை அரிய மந்திரங்களாகப் போற்றி வருகின்றது. நிலையத்தில் இவை சுலோகங்களாகச் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. யோகசுவாமியின் நிழற்படத்தைச்சுற்றி நான்கு பக்கமும் நான்கு மகாவாக்கியங்களைப் பொறித்து அழகு பார்ப்பதும் சுவாமிபத்தரின் இயல்பாக உளது. சித்தை தெளிதற்கான சித்தைச் சுருதிகள் ஆனமையாலேதான் செல்லப்பராலும், சிவயோகராலும், வழியடியார்களாலும் இவ்வாறு கொண்டாடப்படுகின்றன.

இப்பெரும்பெயர்கள் பயிலும் தமிழில் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். பாமரருக்குப் பழக்கமான மொழியில் பரஞானம் வடித்துவைக்கப் பெற்றிருப்பது வியக்கத்தக்கதொன்றே. தத்துவஞானியார் ஆப்பும் சுத்தியலும் எடுத்துப் பாடுபடுதற்கான காரியத்தைச் செல்லப்பர் பனங்கிழங்கைக் கிழித்தெடுப்பது போன்று சாதித்திருக்கிறார். செல்லப்பர் இம்மகாவாக்கியங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தியதானது தத்துவஞான உலகில் ஒரு மைல்கல் எனக் கொண்டாடத்தக்கதாகும்.

பயிலும் மொழியிலமைந்த இம்மகாவாக்கியங்களை மழலையின் கையிற் பொற்கிண்ணம் போலப் பலரும் சாமானியமாகக் கருதுகின்றனர். ஆனால் 'மோனந்திகழும் முனிவரரும் இவற்றின் பொருளை முற்றும் உணரார். முழுவது முண்மையெனும் மந்திரத்தை முதன்முதற் கண்டறிந்து கூறிய செல்லப்ப தேசிகருடன் பலநாட்பழகிக் குருசீடமுறைமையில் தெரிந்து கொண்ட சிவயோகம் சுவாமிகளும்,

'முழுதுமுண்மையென முனிசொன்மொழி
எழுதிக் காட்டிட என்னாலிசையுமோ'

எனவும்,

செப்பமுடியாதடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்

எனவும் கூறியிருக்கிறார். இம்மகாவாக்கியங்கள் எழுது விப்பதற்கும் வாயாரப் பேசிப்பிதற்றுதற்குமுரிய மொழிகளல்ல. இவை உணர்ந்துணர்ந்து உணர்வொடுங்கி நிற்றற்குரிய உணர்வுறுமந்திரங்கள் ஆதல் பற்றியே செல்லப்பர் இம் மந்திரங்களை வெறுமனே சொல்லிக் கொண்டிருந்தார். சிவயோகசுவாமிகளும்,

"ஒரு பொல்லாப்புமில்லை என்பான்
உண்மை முழுது மென்பான்
ஒருவருக்கும் தெரியாதென்பான் – சின்னத்தங்கம்
ஓவியம் போலிருந்தாண்டி"

என்ற வண்ணம் இவற்றை அடுத்தடுத்து சொல்வதன்றி விரித்துரைத்தவில்லை.

ஈண்டு இம்மகாவாக்கியங்கள் நற்சிந்தனை, அருள்மொழிகள் எனும் சுவாமிகளின் திருநூல்கள் கொண்டும், இத்திருநூல்களிலே இவற்றுடன் அரிதாக ஒட்டியிருக்கும் முன்னொட்டுப் பின்னொட்டு மொழிகளைக் கொண்டும், இவற்றின் சார்பு மொழிகளின் துணை கொண்டும் ஒருவாறு எழுதும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. இவ்வாறு எழுதுவது பாடியக்காரர்களுக்கு ஓர் திறவாய் இருத்தற் பொருட்டன்று. சாதனைசெய்யும் சத்துக்கள் சிந்தித்துச் சிந்தித்து சீவலாபம் பெறும் பொருட்டேயாம்.

ஒரு பொல்லாப்பும் இல்லை

நான்கு மகாவாக்கியங்களையும் ஒரு பொல்லாப்புமில்லை என்பதை முன்னிட்டு வழங்குவதே மரபு. இவ்வாறு ஒரு பொல்லாப்புமில்லை என்பதை முதலில் வழங்குதற்குக் காரணம், அது செல்லப்பர் அளித்த தீக்கைமந்திரமாக அமைந்தமை பற்றியே எனத் தெரிகிறது.

ஒரு பொல்லாப்பும் இல்லை ஓசையோடுவந்து நோக்கித்
திருவருள் தீக்கை செய்த செல்வன் சீரடிகள் காப்பு"

"ஒருநாள் என்றெனை உற்று நோக்கி ஓர் பொல்லாப்புமில்லை என்று...
சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான்..."

என்னும் நற்சிந்தனைப் பாடற்பகுதிகள் இதற்கான சான்றுகளாகும். ஒரு பொல்லாப்புமில்லை என்பதன் சார்பு மொழி ஒரு குறையும் இல்லை என்பது.

பாமரத்தனமாகப் பொருள்கோள்

பொல்லாங்கு என்பதற்குப் பங்சம், படை, வெள்ளம், புயல் இகழ்ச்சி, நட்டம், தோல்வி, பிணி, மூப்பு, சாக்காடு என்ற வண்ணமே பொதுவாகப் பொருள் கொள்ளப்படுகிறது. ஆதலால் இவை இல்லாதிருப்பதையே பொல்லாங்கு இல்லாதிருத்தல் எனப் பலரும் பொருள் கொள்வர். நாம் இகழ்ச்சியில்லாத புகழ்ச்சி, தோல்வியில்லாத வெற்றி, நட்டமில்லாத இலாபம், நோயில்லாத சுகம் என்பவற்றையே நாடுகிறோம். ஆனால் இன்ப முண்டேல் துன்பமுண்டு; தோற்றமுண்டேல் மரணமுண்டு. இவை இரட்டைகள். துன்பமில்லாத இன்பம் உலகியலில் இல்லை. இது இயற்கை நியதி. இவ்வியற்கை நியதிக்கு முரணான தன்று. ஒரு பொல்லாப்புமில்லை எனும் பெரும் பெயர். ஆதலால் உலகியலான துன்பங்கள் நேராதிருத்தலை ஒரு பொல்லாப்புமில்லை என எண்ணுவது பாமரத்தனமான கருத்தாகும்.

பொல்லாப்புப் பற்றிய விசாரமே ஒரு பொல்லாப்புமில்லை என்பதற்கான அடிப்படை

ஊன்றி நோக்குவோர்க்கு ஒரு பொல்லாப்புமில்லை என்பதனுள்ளேயே பொல்லாப்பு உள்ளமையை நயத்தல் இயலும், ஒரு பேச்சுக்குத்தானும் பொல்லாப்பு இல்லையெனில் பொல்லாப்பு எனும் சொல் இடம்பெறுவானேன்? இஃதோர் எதிர்மறை வாக்கியம். நல்நலம் என்பதே இதன் உடன்பாட்டு வடிவம். ஒரு பொல்லாப்பும் இல்லை என மறுத்துரைக்க வேண்டியது ஏன்? பொல்லாப்பு என்பது தோற்றம் மாத்திரத்திலாதல் உள்ளமை யாலேயே அதனை மறுத்துரைக்க வேண்டியிருக்கிறது. உண்மையில் உலகோரை வாட்டும் கோடிகோடியான 'பொல்லாங்குகள்' உள்ளன.

"வாடி உன்மனம் ஒடினாலும்
வருத்தங்கள் கோடி கோடியாய்க் கூடினாலும்
குறைகள் வந்து தேடியே உனை மூடினாலும்"
சஞ்சலம் மிகவும் மிஞ்சுதே சற்குருநாதா

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்

என்ற வண்ணம் சுவாமி பாடும் இடங்கள் பல உள்ளன. (வீடுவாசல் நாடு நகரமெல்லாம் வெந்தழிந்துள்ளமையையும், படைகள் விளைத்த மற்றும் பல பல நாசங்களையும், ஒரு வேளைக் கஞ்சிக்காகப்படும் பாட்டையும் நாம் கண்முன்னே கண்டு கொண்டிருக்கிறோம்) இத்தகைய பொல்லாப்புகளின் அடியாக எழுந்த விசாரத்தின் விடையே ஒரு பொல்லாப்பும் இல்லை என்பது (பிணி, மூப்பு, சாக்காடு என்னும் விசாரமே புத்த தத்துவத்துக்கு அடிப்படை எனும் கதையும் உளதல்லவா?)

சிவயோக சுவாமிகள் ஒரு பொல்லாப்பும் இல்லை எனும் மந்திரத்தைத் தேறித்தெளிந்து கொண்ட முறை

தெளிந்த தூவெளியான அருள் ஒளியும்
திணிந்த தோரிருளான உலகப்பொல்லாங்கும்

உலக இருளில் மயங்கித்தியங்கிக் கிடக்கும் வரை ஒருபொல்லாப்பு மில்லை பற்றிய அறிவார்ந்த விசாரத்திற்கு இடமில்லை. "அருள் ஒளிக்குள்ளே இருக்கும் ஆன்மா நான்." என்ற அறிவு நிலை தோன்றிய பின்பே இவ்விசாரம் தொடங்கும், "ஆன்மாவாகிய அகண்ட நான் அருளொளிக்குள் ஆனந்தமாயிருக்கின்றேன். ஆனால் ஆக்கை நான் என என்னை ஓர் புல்லனாக எண்ணும் எண்ணம் எவ்வாறு வந்தது? அருள் ஒளிக்குள் எங்கும் நலமாகவே உளது. ஆனால் உலகியற்கையில் இயற்கை அனர்த்தங்களும், சமூகக் கலகங்களும், குடும்பச் சீர்கேடுகளும் உள்ளனவே. இவையெல்லாம் அருளொளியைச் சூழ்ந்த திணிந்த தோரிருளாக உள்ளனவே. இதன் பொருள் யாது?" என்ற வண்ணமாக விசாரம் எழுவதே ஒரு பொல்லாப்புமில்லை என்பதை அறிவதற்கான ஆரம்பமாகும். இதனைச் சுவாமி மேல்வருமாறு கூறுகிறார்.

"ஆரடா நீ என்றே அதட்டினான்
அன்றே யான் பெற்றேன் அருள்
அருளொளிக்குள் புகுந்து சென்றேன் ஆங்கே
இருள் சூழ்ந்திருப்பதைக் கண்டேன் – பொருளறியேன்"

ஒரு பொல்லாப்பும் இல்லை என்ற குரு மொழி

அருளொளியைச் சூழ்ந்து இருள் இருப்பதேன்? நல்லதோடு பலபல பொல்லாங்குகள் உள்ளதன் பொருள் யாது? என்ற விசாரத்தில் ஈடுபட்டிருந்த சுவாமிக்குச் செல்லப்பதேசிகர் உபதேசித்த மொழி அருளொளியைச் சூழ்ந்திருக்கும் இருளால் ஒரு பொல்லாப்புமில்லை என்பது. இதனைச் சுவாமிகள் மேல்வருமாறு பாடிவைத்திருக்கின்றார்கள்.

..... பொருளறியேன்
ஒரு பொல்லாப்பும் இல்லை என ஓதினான்

தீக்கைமொழி

ஒரு பொல்லாப்பில்லை எனச் செல்லப்பர் ஓதிய மொழியை வெறும் செவிமேற்லாகக் கேட்டிருக்க முடிந்ததேயன்றி தேறித்தெளிய முடியவில்லை. இம்மொழியைச் சுவாமி ஆண்டுக் கணக்காகக் கேட்டிருக்கின்றார். இப்பொழும் அது வெறும் கேள்விச் செல்வமாக உள்ளதேயன்றி அனுபவ சித்தாந்தமாக வில்லை. ஆதலால் அது மலைப்பைத் தரும் மருமமாகவே இருந்தது. இதனைச் சொல்வதற்குச் சுவாமி கூசவில்லை.

..... கேட்டுநின்றேன்
மருமம் தேராது மலைத்து

மலைத்து நின்ற சுவாமி மனமகிழும்படி உவகைபூத்த முகத்தினராய்ச் செல்லப்பர் உற்று நோக்கினார்; அவர்தம் செந்நா ஒரு பொல்லாப்பும் இல்லை என்றோ, அல்லது ஒரு பொல்லாப்புமில்லை எனும் பொருள் நிலையைத் தொட்டு நிற்கவல்ல ஓர் ஓசையினையோ ஓதியது. உலகில் தோன்றும் உருவங்கள், உருநிலை பெறுவதற்கு முந்திய அருவம், இவற்றுக்கு அப்பாலான திருவருள், அருளுக்கும் அப்பாலான சோதிசொரூபம் என்பவற்றையெல்லாம் அற்புதமான ஒரு கைகாட்டுக் குறியால் காட்டி வைத்தார். (திருவடிதீக்கை) அப்போது காண்பதெல்லாம் வீண்பாவனை எனச் சுவாமி கண்டார். தன்னை மறந்தார், திருவடியைத் தலைப்பட்டார். பொல்லாங்கு என்று எண்ணியதெல்லாம், திணிந்ததோரிருள் என்று எண்ணியவெல்லாம் கனவாய்க் கலைந்து போயின. பரமாதிசயத்தைக் கண்டுபெருவியப் பெய்தி நின்றார்! இதனைச் சுவாமி மேல்வருமாறு பொறித்து வைத்திருக்கிறார்–

"மலைத்து நின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்து நின்ற மாயை அகலத் – தலைத்தலத்தில்
கை காட்டிச் சொல்லலுற்றான் கந்தன் திருமுன்றில்
மெய்ம்மறந்து நின்றேன் வியந்து"

ஒரு பொல்லாப்புமில்லை எனும் மந்திரத்தை முதன் முதற் கண்டறிந்த செல்லப்ப தேசிகருடன் பல்லாண்டு பயின்று, அருளொளிக்குள் புகுந்து செல்லும் பேறுபெற்ற சிவயோகச் செல்வரும் திருவடித் தீக்கை பெறும்வரை அப்பெருமந்திரத்தின் மருமந்தேர முடியவில்லையெனின் மற்றையோர்கள் அம்மகாவாக்கியத்தைச் சாமானியமாக நினைத்தல் முறையாகுமோ?

ஒரு பொல்லாப்புமில்லை என்பதன் மெய்ப்பொருள்

"ஒரு பொல்லாப்புமில்லை உணர்வீரே." "ஒரு பொல்லாப்புமில்லை என்று தேறு" என்ற படி தேறித்தெளிந்து உணர்ந்துணர்ந்து இன்பத்தில் தேக்க முடிந்தாலே தான் ஒரு பொல்லாப்புமில்லை. இது இந்த உலகத்தை இந்திரசாலம் கனவெனக் கண்டு தெளிந்தாலேயே இயலும். உலகைக் கனவெனக்காணுதல் திருவடிஞானத்தால் விழிப்புற்ற போதே வாய்க்கும், திருவடிஞானம் வாய்த்து, இந்த உலகம் கனவென்று தெளிந்து, சும்மா இருக்கும் சுகத்தில் சுகித்திருந்தால் மட்டுமே ஒரு பொல்லாப்புமில்லை. இத்தகைய சுகத்தில் உலகமும் சிவன் வடிவாகமும், சிவன் செயலாகவும் தோன்றும். தோன்றாகவே பொல்லாங்கு நிறைந்த உலகமாகத் தோன்றியதும் ஒரு பொல்லாப்புமில்லாத சிவப் பொலிவாகவே அமையும்.

"எல்லாம் சிவன்செயல் எல்லாம் சிவன்வடிவு
எல்லாம் அவனன்றோ அன்னே என்னும்
எல்லாம் அவன் வடிவு எங்கும் அவனென்றால்
பொல்லாப்பிங்கேதடி அன்னே என்னும்"

என்பது ஒரு பொல்லாப்புமில்லை என்பதற்கான ஒரு பொருள் விளக்கப்பாடல்

ஒரு பொல்லாப்புமில்லை தரும் பெருநிலை

குறைவில்லை என்று குதூகலமாக வாழச்செய்யும்

"ஒரு பொல்லாப்புமில்லை என்று சொல்வான் – செல்வன்
உல்லாசமாகவே நல்லூரில் செல்வான்.

என்றாங்கு உலகிலே உல்லாசமாக உலவச் செய்வது இப்பெருமந்திரம்

சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவைக்கும்

"ஒரு பொல்லாப்புமில்லை என்பான்....
ஓவியம் போலிருந்தான்டி

எனவும்,

ஒரு பொல்லாப்புமில்லை என ஓரவும் மாட்டேன்.

எனவும் சொல்லிய வண்ணம் தன்னையும் மறந்து ஓவியம் போலிருக்கச் செய்யும் பெருநிலை அருளவல்லது இப்பெரும்பெயர்.

உண்மை முழுதும்

செல்லப்பா சுவாமிகளின் உண்மை முழுதும் என ஓயாதுரைப்பார். இதனை ஓயாதுரைத்துக் கொண்டிருக்கும் பொழுது இதுவே முழுதுமுண்மை என்றும் ஆகும். சருவம் பிரமமயம் என்பதும் இதுவே. சருவம் பிரமமயமென்பதிலும் சருவம் முழுதுமெனவும் பிரமமயம் உண்மையெனவும் பொருள்படும். 'எல்லாம் சிவரூபம் எல்லாம் சிவன்செயல் என்பன உண்மை முழுதும் என்பதன் சார்பு மொழிகள்.

முழுதும் உண்மை; அனுபவ சித்தாந்தம்

பார் முதற் பூதமாகிய பலபல கோலமெல்லாம் பரம்பொருளே எனும் பிரமஞானம், முழுதுமுண்மை என்னும் பழகுதமிழில் எளிமையாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இதன் வி – வரணமொழிகள் பல நற்சிந்தனையிலும், அருண்மொழியிலுள்ள அவற்றுக்கு எடுத்துக் காட்டான இரு உரைப்பகுதிகள் மேல்வருவன–

"நான், நீ, ஐயா, அம்மா, அண்ணன்மார், அக்காமார், அத்தை, அப்பாச்சி, பெரியையா, சீனியையா, சின்னையா, கந்தசாமி, கணபதி, வைரவர், வீரபத்திரர், காளி, கூளி கிருஷ்ணன், கிறிஸ்து, புத்தன், முகமது, இராசரத்தினமாமா, சோமாமாமா, செல்லத்துரை மாமா, இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம், ஊர்வன, பறப்பன, கிடப்பன, நடப்பன, மலை, கடல், வாவி, குளம், கொடி, செடி என்று அளவிடக் கூடாமல் விரிந்து நிற்கிற ஒன்றுதான் கடவுள்....

"உலகில் பெரிய நூதனம் கடவுள்; சண்டையும் சமாதானமும் கூடுதலும் பிரிதலும், இன்பமும், துன்பமும், ஆணும், பெண்ணும், அன்பும், வன்பும் அதுவே."

இவ்விரு உரைப்பகுதிகளிலும் முன்னது ஒரு நீள்வசனம். சுவாமி சிறிய சிறிய வசனங்கள் கூறுவதே வழக்கம். அளவிடக்கூடாமல் விரிந்து நிற்கும் முழுவதுமான கோலங்களை விளக்குமிடத்தில் இவ்வாறான நீள்வசனத்தைக் கூறியுள்ளனர். முழுதுமாய் நிற்பவன் முதல்வன் ஒருவனே என்பதை விவரிக்கும் ஆற்றல் வாய்ந்த வாசகம் இது. இவ்வாசகத்தை அரண்செய்யும் ஓர் நற்சிந்தனைப்பாடலை ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமானது.

"ஊனாய் உணர்வாய். உயிருக்கு உயிராய்
நானாய், நீயாய், நன்மையாய்த் தீமையாய்
வானாய், மதியாய், வாயுவாய்த் தேயுவாய்
தானாய் நின்றான் சச்சிதா னந்தனே
ஒதுக அதுநாம் ஒத்தத் சத் ஓம்"

கூறும் நா முதலான நமது ஊனுடல், இவ்வுடலின் உணர்வு, உணர்வுக்கிடமான உயிர், உயிருக்கு உயிர், இப்படி நானான தன்மை எனத் தன்மையில் தொடங்கி, நீ என முன்னிலைச் சுட்டில் தாவி, நன்மை தீமை, குற்றம் குணம் எல்லாவற்றையும் அடக்கி நிலம், நீர் ஆகிய பார்பதம் அண்டம் அனைத்துமாய்ப் பரந்து தானே தானாய் நிற்கும் தன்மையில் நிலைக்கும் முழு உண்மையை நேரிதாய்ச் சித்திரிக்கும் அற்புதப்பாடல் இந்த ஒம்தத்சத்ஓம் பாடல்.

இங்கு குறிப்பிட்ட இரண்டாவது உரைப்பகுதியில் சண்டை, துன்பம், வன்பு ஆகியனவும் கடவுள் மயமே எனும் அமிசம் சிந்தனைக்குரியதாகும். இமயச்சாரிலுள்ள மானசரோவர் வாவியின் மோகனத்தில் இலயித்து, மனம் நிறைந்த பாக்கியமான இறைவனைக் கண்டு இன்புறுதல் இயல்பு. கைலைச் சிகரத்தைக் கண்ணுற்றுக் கடவுளைக் கண்டு களிப்பதும் அடியார்களுக்கு இயல்பே. உதய சூரியனின் பொற்கிரணங்கள் தழுவுமிடத்து சிவலிங்க ரூபமான கைகலைச்சிகரம் சிவபெருமானின் அற்புதப் பொன்வண்ணமாகவே தோன்றுவதைப் பக்தர் பாடி மகிழ்ந்திருக்கின்றனர். இவ்வண்ணமே தீச்சுவாலையைக் கக்கும் எரிமலையின் தீவண்ணத்திலும் சிவ பெருமானின் செக்கர் போலும் திருமேனி திகழ்வதைக் கண்டு சிலிர்சிலிர்த்துப் பொன்வண்ணத்தந்தாதி பாடுதல் இயலுமோ? மாதா, பிதா, குரு என்போரைத் தெய்வமாக மதித்தல் நம்மனோர் பண்பாடு, இவ்வாறே கள்வன், கடியன், கலதி என்போரையும் கடவுளாகக் கண்டு வந்தனைசெய்யும் வழக்காறு உளதோ? சிவயோக சுவாமிகள் பின்னமற்று எல்லாம் பிரமம் என்றே கூறுவார். ஈண்டு சுவாமியின் இன்னோர் பாடலையும் நினைவுபடுத்திப் பார்த்தல் பொருத்தமானதாகும்.

"நீயும் நானும் அவனும் அவளும்
காயும் தீயும் காலும் வானும்
பேயும் பூதமும் பிரானும் பிறவும்
ஆயும் பொழுது அவனாய் விளங்குமே"

இந்தியானமாலைப் பாடலிலே பிரானைப் போலவே, பேய் பூதங்களாகியவற்றையும் இறைவிளக்கமாகவே சுவாமி காண்பது தெளிவு. இவ்வாறெல்லாம் சுவாமி கூறுவது வெறும் வாய்ச்சால வார்த்தை களன்று; இவை சுவாமியினது சுவானுபவ மொழிகளாகும்.

"ஆராரென்ன அறைந்த போதினும்
நீராய் உள்ளுருகி நினையும் அடியேம்
பாராதியெல்லாம் பரனேயென்ன
நேராய் உணர்ந்து நிற்குதும் நாமே
ஒதுக அதுநாம் ஒம்தத் சத்ஓம்"

என்பதனால் பாராதியெல்லாம் பரனே என்பதனைச் சுவாமி நேர்நேராக உணர்ந்திருப்பது தெளிவு. அன்றியும் பக்குவம் வரவர அனைவரும் இவ்வுண்மையை அநுபவபூர்வமாக உணரலாம் என்பதையும்–

"முதிர முதிர முகமுகமாகக் காணலாம்"

எனக் கூறியிருக்கிறார். ஆகவே முழுதுமுண்மை என்பது அனுபவ சித்தாந்தம் என்பது தெளிவு.

முழுதும் உண்மை அளந்தறிய ஒண்ணாதது

ஆனால் முழுதும் உண்மை எனும் ஞானத்தைச் சுட்டி அறியும் அறிவால் அளந்தறிதல் இயலாது. முழுதுமான கோலங்கள்

ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று ஒவ்வாது மாறுபடும் இயல்பால் மயக்கம் செய்கின்றன. இம்மாறுபடும் கோலங்களெல்லாம் மாயாவாதிகள் சொல்வது போல் சுத்தப்பொய்களுமல்ல. ஒன்றேயான உண்மையைப் போலவே முழுவதுமான கோலங்களும் உண்மையே. ஒன்றாயிருப்பது உண்மையின் சுபாவம். முழுதுமாய்த் தோன்றுவது அதன் சிறப்பியல்வு. இதனைச் சுவாமி உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்கள் எனக் கூறுவர். ஒரு நாணயத்தின் இருபக்கம் போல் ஏகமான உண்மையும் அநேகமான கோலங்களுமுள.

"முற்றாக உணர்ந்த ஞானிக்கும் இவ்வுலகம் ஒரு திரைப்படம் போல இருக்கும். உலகம் யாவும் ஒன்றென அநுபூதியில் அறிந்தாலும் இயற்கைத் தோற்றம் இருந்து கொண்டே இருக்கும்"

எனச் சுவாமி கூறுவார். ஊழிக்காலத்திலும் உலகம் ஒடுங்கியிருக்கும் மேயன்றி இல்லாமற் போகாது. இத்தகைய உள்பொருளான உலகம் ஒன்றோடொன்று ஒவ்வாத மாறுபடும் பல பல கோலங்களாக உளது. உண்மையோ எவ்வித மாறுபாடு மில்லாத ஏகவஸ்துவாக உளது. இப்படியிருக்கையில் எவ்வாறு முழுதுமான கோலங்களை ஏக உண்மையெனக் கொள்வது? உண்மையோ என்றும் இருந்தபடியே இருக்கிறது. முழுதுமான கோலங்களோ கணந்தோறும் மாற்றமுற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறிருக்கையில் முழுதுமாயுள்ளவற்றை எவ்வாறு உண்மையென்றே கொள்வது? முழுதுமான கோலங்களெல்லாம் தோற்றக்கேடுகளை உடையனவாயுள்ளன? சத்தியவஸ்துவோ என்றும் நித்தியமானது. இவ்வாறிருக்கையில் இரண்டையும் ஒன்றெனக் கொள்ளலாகுமோ? உண்மை அறிவு சொரூப மானதாயும், ஆனந்தமயமாயுள்ளது ஆயின் முழுதுமான இயற்கையோ அறிவு, அறியாமை, இன்பம், துன்பம் ஆகிய இரட்டைகளுடையதாயிருக்கிறது. இவ்வாறிருக்கையில் எவ்வாறு உண்மைச் சுபாவத்தையும், இயற்கைச் சிறப்பியல்பையும் ஒன்றெனத் தேறுவது? உண்மை தன்னைப் பலபல கோலங்களாகி விளையாடுவது மாமாயையேயாம். அம்மாமாயையாலே தன்னையும் ஒரு தனிப்பிரகிருதி என நம்பும் சிற்றுயிர் தன் சுட்டறிவால் உண்மைச் சுபாவத்தை அளந்தறிதல் இயலாது. இதனையும் சுவாமி அன்பு கூர்ந்து சொல்கின்றார்.

"அன்னை பிதா குரு ஆகி
ஐயனெனை ஆண்டுகொண்டான்
என்னை அறிந்தேனடி – கிளியே
இச்சையெல்லாம் போச்சுதடி
இளங்குயிலே நடந்துவாடி
எல்லாம் சிவ ரூபமெடி
அளந்தறிய முடியாதடி
தளர்ந்திடாமல் தொடர்ந்துவாடி"

தன்னை அறியிற் பின்னம் இறக்கும்

பார்ப்பதெல்லாம் நீ என்றோர் தெவிட்டாத வாசகம் 'நற்சிந்தனை'யிலுள்ளது. நாம் நம்மைச் சுட்டாக மதிக்கும் வரை முன்னிலைப் படர்க்கைச் சுட்டுகளும் தோன்றும், நான் எனும் முனைப்புள்ளவரை நீ, அவன், அவள், அது என்ற மலைமலையான காட்சிகள் தோன்றும். இச்சையுள்ள வரை விருப்பு வெறுப்பிருக்கும். அது விருப்பானவர்கள் வெறுப்பானவர்கள் என வேறுவேறான காட்சிகளைக் காட்டும்.

"பொன்னாசை பெண்ணாசை
மண்ணாசையால் மனிதரெல்லாம்
சின்னா பின்னமானாரெடி..."

எனச் சுவாமிபாடுவதால் மனிதர்கள் மூவாசையாலே சின்னாபின்னப்பட்டுக்கிடக்கின்றனர் என்பது தெரிகிறது. சுட்டிறந்து நிற்பின் இச்சைகள் இரா. முன்னிலை படர்க்கைச் சுட்டுகள் முளையா. தன்னையறிந்து தானே தானாயிருக்கும் நிலைவாய்க்கும். தன்னை அறிந்தவர் தலைவனையறிவார். தலைவனையன்றி மற்றொன்றும் அறியார். எல்லாம் சிவரூபமாகவே தோன்றும். மேற்குறிப்பிட்ட பாடலொன்றிலே எல்லாம் சிவரூபம் எனும் உண்மையைக் கூறுதற்குரிய தெளிவு தன்னையறிந்து திறத்தாலும், இச்சையெல்லாம் போன நிராசையாலும் விளைந்தது என்பதைச் சுவாமி,

என்னையறிந்தேனடி – கிளியே
இச்சையெல்லாம் போச்சுதடி
எல்லாம் சிவரூபமெடி"

எனப்பாடுவதால் தெளிந்து கொள்ளலாம், தன்னையறிந்தவன் சிவரூபனாகின்றான். சிவரூபனான அவன் எல்லாவற்றையும் சிவமொன்றாகவே காண்கிறான். அவன் நான் எனும் ஆணவம் நீக்கிக் கொள்கிறான். அதனால் நீ, அவன் என்பவற்றைக் காண்பதில்லை.

குருவருளால் கூடும் ஞானம்

குருபரன் 'சுட்டிறந்து நில்' என உபதேசித்து நான் எனும் முனைப்பைத் தேய்த்தழிக்கின்றார். 'ஆதியந்தமில்லை அதுவேநீ, சோதிமயம்' எனக் கூறித் தன்னை அறியச் செய்கிறார். பலபலவான கோலங்களைக் காட்டும் 'மூடியமாயவிருளை' ஓட்டி அருள்கிறார். பலபலவாகக் கண்ட காட்சிகளெல்லாம் வீண்பாவனையெனக் கண்டு விட்டிருக்கச் செய்கின்றார். பதார்த்தங்கள் பாராது பரமொன்றையே பார்த்திருக்கும் கங்குல்பகலற்ற காட்சியைக் காட்டியருள்கிறார். இவ்வண்ணம் அவர் காட்டிவைக்காவிட்டால் முழுவதும் உண்மையென முகமுகமாகக் காணவல்லர் யார்?

இப்பெரும் பெயர்ச் சாதனையின் பெரும் பேறு

பிறப்பிறப்பு என்னும் பிராந்தியைப் போக்குகிறது, இது,

'உண்மை முழுதுமென்றால் ஒகெடுவாய் நெஞ்சமே
பின்னைப் பிறப்புண்டோ பேசு'

எனும் நற்சிந்தனையால் தெளிவாகும்.

ஒன்றாகக் காணும் காட்சியைத் தருகிறது

உண்மை முழுதும் என ஓதும் ஒரு மொழியால்
என்னை மறந்தேன் இடரகன்றேன் – பின்னையிங்கு
ஆச்சரியமுண்டோ அண்டபிண்டமெல்லாம்
போச்சுதென்றாகப்புகல்

என்பதால் தெளிவாகும்.

மோனநிலையில் நிறுத்துகிறது, இது.

'முழுது முண்மையாச்சுதெடி
மூச்சுப் பேச்சுப் போச்சுதெடி'

என்பதனால் தெளியலாகும்.

ஆகவே முழுதுமுண்மை எனும் மகாவாக்கியத்தின் முடிந்தநிலை நன்மோனநிறைவின் பொருந்தவைப்பதேயாம்.

எப்பவோ முடிந்த காரியம்

எப்பவோ முடிந்த காரியம் என்பதன் சார்பு வாக்கியங்கள் ஒரு நூதனமுமில்லை, முடிந்தமுடிபு, அப்படியே உள்ளது என்பன.

இப்பெரும் பெயரிலுள்ள காரியம் என்னும் சொல் ஏகமாகியும் சுத்தமான அருளொளியுமுள்ள உண்மைப் பொருள் எவ்வித மாற்றமுமின்றி இந்தபடியே இருந்துகொண்டு, எல்லாமான கோலங்களாயும், இன்பதுன்ப மாயையான இருட்கவிவாயும் தோன்றும் உலககாரியத்தைக் குறிக்கிறது. முடிந்த எனும் பதம் உண்மைப் பொருள் உலக காரியமாகத் தோற்றுவது கதிரவனும் கதிரும் போன்றதொரு மாற்றொணா நியதி என்பதை அழுத்திக் கூறுகிறது. எப்பவோ எனும் சொல் உண்மைப்பொருள் உலககாரியமாகத் தோற்றும் அநாதித்தன்மையைக் குறிக்கிறது. ஆகவே எப்பவோ முடிந்த காரியம் எனும் பெரும் பெயரானது உண்மைப் பொருளான இறைவன் இருந்தபடியே இருக்க, அவரின் திருமுன்னிலையில் உலக மாயை விரிந்து தோன்றுவது அப்படியே உள்ள காரியம் என்பதை உணர்த்துகிறது. இஃது அப்படியே உள்ளது எனும் சார்பு வாக்கியம் செல்லப்பரால் உரைக்கப்பட்ட சந்தர்ப்பத்தைக் கொண்டு தெளியப்பட்டதாகும். செல்லப்ப தேசிகர் அருளொளியை இருள் சூழ்ந்திருப்பதால் ஒரு பொல்லாப்பும் இல்லை என்று அருளிய போது அதன் மருமந்தேராது மலைந்து நின்ற யோகசுவாமிகளை நோக்கி "அப்படியே உள்ளதுதான் ஆரறிவார்" என்று அருளிளார். ஆகவே எப்பவோ முடிந்தகாரியம் எனும் பயிலும் தமிழில் அமைந்த பெரும்பெயர் இறைவன், அவரின் சன்னிதானத்தில் நிகழும் அருளாடல் எனும் இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையுமாகிய அத்துவித ஞானத்தை மறைபொருளாகக் கொண்ட திருமந்திரம் என்பது தெளிவு. இதனை நற்சிந்தனையின் ஓரிடத்திலே யோகசுவாமிகள்.

"அப்படியே உள்ளதென அத்துவித உண்மையினைச்
செப்பினான் செல்லப்பன் தேர்"

என உணர்த்தியுள்ளார்.

எப்பவோ முடிந்த காரியம் எனும் இப்பேருண்மைக்குள் அடங்குவதே ஒரு சிற்றுயிர் வாழ்க்கையும். ஒரு சிற்றுயிரின் பிறப்பு, வாழ்வு, இறப்பு, இறப்பிற்குப் பிந்திய கருமாதிகள் யாவும் எப்பவோ முடிந்த ஓர் ஒழுங்கின் படியே நிகழ்கின்றன. இந்த ஒழுங்கு அல்லது தெய்வசித்தம் மறைவானது. ஆயினும் மகான்களுக்கு அது அவ்வப்போது தெளிவாகும். யோகசுவாமிகள் காசியிலிருந்து எழுதிய திருமுகமொன்றில் "இருந்த, இருக்கிற, இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிகளெல்லாம் செய்து முடிந்து விட்டன" என அருளினார்.

மறைவாயிருக்கும் தெய்வசித்தத்தைத் தெளிந்தே அவர் அவ்வாறு கூறினார். கருமாதிகள் மட்டும் இன்றிக் கண்ணிமைத்தல் கூட எப்பவோ முடிந்திருக்கின்றன.

"இன்னவினை இன்னதலத் தின்னபொழு தின்னபடி
இன்னதனால்ல எய்தும் என அறிந்தே – அன்னவினை
அன்னதலத் தன்னபொழு தன்னபடி அன்னதனால்
பின்னமறக் கூட்டும் பிரான்"

என்பது சிவபோகசாரம்; ஆகவே நூதனமான காரியமெதுவும் பூதலமீதினில் இல்லை. இதனை ஒரு புதினமில்லை எனும் வழக்கு மொழியால் யோகசுவாமிகள் உணர்த்திவந்தனர். யாழ்ப்பாணத்திலே ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது "என்ன புதினம்?" என விசாரிப்பது வழக்கம். சுவாமிகள் இவ்வழக்கப்படி தம் அடியவர்களிடம் என்ன புதினம் என விசாரிப்பார். அவர்கள் "ஒரு புதினமுமில்லை. சுவாமி" என்றவாறாகப் பதில் கூறும் பொழுது "ஓம் ஒரு புதினமுமில்லை. எல்லாம் எப்பவோ முடிந்திருக்கின்றன." எனும் ஞானப் பொருளை அவர்களுக்கு உணர்த்துவார்.

செல்லப்ப தேசிகர் எப்பவோ முடிந்த காரியம் எனச் செப்பிய வாசகம் சித்தசுத்தியைத் தருவதாகும். என்னால் காரியங்களை ஆக்கவும் அழிக்கவும் முடியும். எனும் முனைப்பே மணத்திற்கு விசையூட்டுகிறது. இதனால் பம்பரம் போன்ற சுழற்சி நிகழ்கிறது. ஓயாத சுழற்சியே சித்தவிகாரக் கலக்கமாகவும் அமைகிறது. எனக்கெனச் செயலில்லை. எனத் தெளிந்தவிடத்து மனம் ஆடி ஒய்ந்த பம்பரம் போல் அடங்குகிறது. ஒடுங்கிய மனத்திலே உண்மை புலப்படும். இதனை–

"எப்பவோ முடிவானதென் றெங்கட்குச்
செப்புவா ரவர் சிந்தை தெளிந்திட"

என நற்சிந்தனை கூறும். எப்பவோ முடிந்த காரியம் என்பதன் முடிந்த எனும் அம்சத்தினின்றும் முளைகொண்டது. "முடிந்த முடிவு" எனும் மெய்மொழி. இம் மொழியினை இடி போன்ற குரலிலே செல்லப்பர் கூறுவார். இந்தச் சிம்ம கர்ச்சனையின் முன் சித்தம் எனும் மத்தகசம் மண்டியிட்டுக் கிடக்கும். இவ்வாற்றால் ஐம்முகச்சிவனிடத்திலிருந்து வெளிப்பட்ட தீப்பொறியை நிகர்ப்பது எப்பவோ முடிந்த காரியம் எனும் பெரும் பெயரிலிருந்து முளைகொண்ட முடிந்த முடிவு எனும் திருமந்திரம். சிந்தை என்னும் சூர் அடக்க இத்துணை வேதமந்திரம் வேண்டும் போலும்.

"முடிந்த முடிவென்று முன்னின்று சொல்லப்
படிந்த தென்னுள்ளம் பதியில்"

எனும் வாக்கு இத்தகைய விளக்கத்துக்கு இடந்தந்து நிற்பதாகும்.

எனவே எப்பவோ முடிந்த காரியம் எனும் பெரும் பெயர் வேகங்கெடுத்தாளுந் திருமொழி எனக் கூறவது பொருந்துவதாகும். அது பிணம் எழுந்து நடந்தாலும் ஒரு புதினமுமில்லை எனத் தெளிந்து சும்மாயிருக்கச் செய்யவல்ல அருள்மொழியாகும். அண்மைக் காலத்திலே அண்ணாமலையில் சலனமற்ற அருட்சோதியின் விளக்கமாய்த் திகழ்ந்த இரமணமகரிஷிகள், அவரை அழைத்துச் செல்லும் நோக்கோடு வந்து அழுதுகரைந்திருந்த தமது அன்னையாரின் பொருட்டு எழுதிக்காட்டிய வாசகத்தில் இந்த எப்பவோ முடிந்த காரியத்தின் ஓரம்சம் அழுத்தமாய்த் தெரின்றது. அது மேல் வருமாறு–

"அவரவர் பிரார்த்தப் பிரகாரம் அதற்கானவ னாங்
காங்கிருந்து ஆட்டுவிப்பான் என்றும் நடவாது
என் முயற்சிக்கினும் நடவாது நடப்பதென்றடை
செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம்
ஆதலில் மௌனமாயிருக்கை நன்று"

எப்பவோ முடிந்த காரியம் எனும் பெரும் பெயரின் இருந்தபடியே இருக்கும் மறைஞானத்தினின்றும் மலர்ந்த மலர்ச்சுடர் அப்படியேயுள்ளது எனும் மணிமொழி. இம்மணிமொழி அருளொளியை இருள் சூழ்ந்திருப்பது அப்படியேயுள்ள காரியம் எனும் ஒரு பொருளுடன். அருளொளியானது இருள் சூழ்ந்திருப்பதனால் எவ்வித திரிபும் அடையாமல் இருந்தபடியே இருக்கிறது என்னும் ஓர் உயர் ஞானப் பொருளும் தருவது அது.

"கூடுதலருடன் பிரிதலற்று நிர்த் தொந்தமற்று
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று"

என்றவாறாக உள்ள தாயுமானவரின் திருவாக்குகொப்ப பரிபூரணசுகப் பொருளாய் நிலையாய் இருப்பது. இந்த நிலையில் நிலைகொண்ட இயல்பினரான செல்லப்பர் அப்படியே உள்ளதென அந்தரங்கமாகச் செப்பிக் கொண்டிருந்தனர். யோகசுவாமிகளும் இருந்தபடியே இருக்கும் பொருள் எனப் பலவிடத்தும் பாடினார். இத்திருமந்திரம் இருந்தபடியே இருப்பாய் இருக்கச் செய்யும் மௌன மந்திரமெனவே தெளியத்தக்கது. இத்திருமொழியைச் செல்லப்ப தேசிகர் அன்பாக மொழிவார்.

"அப்படியே உள்ளதென அன்பாகச் சொல்லியே
அப்பன் செல்லப்பன் அருள் தந்தான்"

என்பது நற்சிந்தனை. முடிந்த முடிபென்னும் மொழி தீப்பொறியை நிகர்க்குமென முன் கூறப்பட்டது. அப்படியே உள்ளது எனும் மொழியோ சரவணப் பொய்கையில் குளிர்ந்து தவழ்ந்த குழந்தையை ஒப்பது. அது தண்ணென்ற சாந்தபத இயற்கையில் பூண்டு கிடக்கச் செய்யும் மோனமணிப் பூடணமாகும்.

ஆகவே எப்பவோமுடிந்தகாரியம் எனும் மகாவாக்கியம் உலக காரியங்களால் தாக்குறாது பரபரப்பற்று வாழவும் நன்மோன நிலையிற் பொருந்தி உபசாந்தமுறவும் அருளும் திருமந்திரமாகும்.

நாமறியோம்

நாமறியோம் எனும் நலந்திகழ் மந்திரத்தின் சார்பு – வாக்கியம் ஆரறிவார் என்பது.

அண்ட சராசரத் ததிசயந்தன்னை ஒருவருமறியார்

உண்மை ஒன்றே உள்ளது, இந்த ஒரே உண்மை எண்ணிறந்த கோலங்களாகத் தோன்றுவதேன்? சுத்த சுகம் ஒன்றே உள்ளது. இதில் பொல்லாப்பான தோற்றங்கள் தோன்றுவதெப்படி? எல்லாம் நன்மோன நிறைவே, ஆனால் அலகிலா ஆடலும் நிகழ்வதேன்? இவைபோன்ற வினாக்கள் மெய்ப்பொருளறிவின் மூலமுடிச்சினைத் தொட்டு நிற்கும் வினாக்கள். இவ்வினாக்களுக்கு விடைகாண முயன்ற மெய்யியலறிஞர் ஒன்றோடொன்றொவ்வாத விடைகளைக் கூறிச் சென்றனர். இவ்வொவ்வாமை ஒன்றே அவர்கள் முழு உண்மையறியாத யானை பார்த்த குருடராயினர் என்பதற்குச் சான்றாகும். செல்லப்ப தேசிகரோவெனின் யாமறியோம் என்று சொல்லக் கூசார். 'அவர் அது அப்படியே உள்ளது காண் ஆரறிவார்' என்று சொல்வார். மாயைவல்லானான இறைவன் தன் மாசாலத்தின் பொருட்டு மறைத்து வைத்திருக்கும் அந்த இரகசியத்தை யாரே அறியவல்லார்.!

"ஒருவரு மறியா ரென்றான் எங்கள் குருநாதன்
ஓங்கார வழியென்றான் எங்கள் குருநாதன்'

என்பது சுவாமிகளினது திருவாய் மொழி.

ஓங்காரத்துட்பொருளை அறியும் நெறியை ஒருவரும் அறியார்

உலகிலுள்ள சமயங்களெல்லாம் உண்டமையுணரும் நெறிகள் பற்றிப் பலபடக் கூறுகின்றன. இந்து சமயத் தந்திர சாத்திரங்களில் உண்மையை உணரும் நெறிமுறைகள் விரிவாகவும், நுட்பமாகவும் கூறப்பெற்றிருக்கின்றன. இந்நெறி முறைகளின் இயலாமை பற்றிய சுவையான குறிப்பொன்று திருவாசகத் திருவண்டப்பகுதியில் உள்ளது.

"இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்"

என்பது அக்குறிப்பாகும். இதனை யோகசுவாமிகள் வசன வடிவில் அவ்வாறே வழிமொழிந்திருக்கிறார்.

"எத் தந்திரத்தில் தேடிப் போனாலும்
அது அத்தந்திரத்தில் மறைந்து நிற்கும்"

அதுதேடித் தேடோணாத தேட்டமெனவே தோன்றுகிறது. செங்கண்ணனும், பிரமனுமாகிய இருவரும் நிலங்கீண்டும், உயரப் பறந்தம் காணமுடியாது போயினர் என்னும் கதை மெய்யடியார்களாலும் மெஞ்ஞானியராலும் ஒரு சேரப் போற்றப் பெற்றிருக்கிறது. இரமணமகரிஷிகள் அன்னமாய் விசும்புபறந்து அயன் அறியாமற்போன கதையின் நுட்பம், புத்தியால் இறைவனை அறியொணாது என்பது என எடுத்துக்காட்டியிருக்கின்றார். நெறியிலாத இறைவன் (Pathless God) கோசத்தைப் பெரிதாய் முழங்கிய ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அறிவாயுதத்தால் இறைவனைக் கைப்பற்றிக் கொள்ளத் துடித்துத் திரிந்த ஆய்வறிஞர் சிலரிடம் "அறியவேண்டுமென்ற ஆசையைத் துறந்து விட்டீர்களோ?" எனக் கேட்டமையும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. தாயுமானாரும்

"கூர்த்த அறிவத்தனையும் கொள்ளை கொடுத்துன்னருளைப்
பார்த்தவன் நான் என்னை முகம் பாராய் பராபரமே"

என்றே பாடியுள்ளார். யோகசுவாமிகள் மேற்கு நாட்டுப் பல்கலைக் கழகத்திலே தத்துவத்துறையிற் பட்டம் பெற்று உண்மையறியும் தாகத்தினராய் இந்தியா, திபேத் என்றவாறாக அலைந்து திரிந்து தம்மிடம் வந்த அடியவரொருவரிடம்–

"நேரடியாகப் போர் செய்தால் அது வராது. அறிய வேண்டும் என்ற எண்ணமும் ஒப்படைக்கப்பட வேண்டும்"

என அருளினார். தாயுமான சுவாமிகளின் மற்றொரு பாடலைக் கூறுவது இவ்விடத்திற்கு மிகப் பொருத்தமாகும்

"நாமே கருதின் வரநாடார் சும்மாயிருப்பின்
தாமே வருவார் அவர் தன்மை என்னே பைங்கிளியே"

ஓங்காரத்துட் பொருளை ஒருவரும் அறியார்

ஓங்கார வழியையும், ஓங்காரத்துட்பொருளைச் சென்றடையும் நெறியையும் ஒருவரும் அறியார் என்பது போலவே ஓங்காரத்துப் பொருளையும் ஒருவரும் அறியார். உலகிலுள்ள சமய கோடிகளெள்ளலாம் உண்மைப் பொருளை அன்னை என்றும் ஐயன் என்றும், இவ்வண்ணமே இன்னும் பலவாறாயும் கூறமுயல்கின்றன. ஈற்றிலே அவையெல்லாம் இன்ன தன்மையனென்று எடுத்துச் சொல்லவொண்ணாத இறை என ஓலமிட்டு நிற்கின்றன. சமயாதீதப்பழம்பொருள் சமயத்துக்கு அகப்படுமோ? உண்மை பெரிய பரம்பொருளே, இறைவன் அண்டமானது. அணுவெனச் சிறிதாம் வண்ணம் தான் அண்டமாய் ஓங்கி நிற்பவன் என ஒரு பெரியார் பாடினார். நாம் 'யுகம்' எனக் கூறும் அளவில்லாத காலப்பொழுது அன்னைக்கு ஓர் இமைப்பொழுது என மற்றொரு பக்தர் பாடியுள்ளார்.

தேச காலம் என்பவற்றால் அந்தமும் ஆதியுமகன்ற மெய்ப்பொருளை அண்டப் பகுதியின் ஓர் மூலையில் வாழும் சினனாட் பல்பிணிச் சிற்றறிவுயிர் அறிய முயலுதல் விண்ணின்று இழியும் சிறுநீர்த் திவலை பரந்த சமுத்திரத்தை அளந்தறிய முயலுதலைப் போன்றதேயாம். அன்றியும் இறைவனது

பெருமைகளுள் ஒன்றாகத் தோன்றாப் பெருமை சொல்லப்படுகிறது. வேதம் அவனது எண்ணிறந்த நாமங்களுள் ஒன்றாகக் கள்வர்த்தலைவன் எனும் நாமத்தைக் கூறுகிறது. ஆகவே அந்த மறையோனை நாமறியோம். யோகசுவாமிகள் ஒரு சந்தர்ப்பத்தில்–

"மாபெரும் சங்கராச்சாரியார் கூட
உண்மையைச் சரியாகக் கூறவில்லை"

எனக் கூறியிருக்கிறார். இன்னோரிடத்தில்–

"காலத்துக்கு காலம் தோன்றிய ஞானியரும் ஏனைய பெரியோரும் ஏதோ சிலவெல்லாம் கூறிச் சென்றனர். ஆனால் அது அதாக என்றும் அறிய முடியாததாகப் புதிதாகப் புதிராக இருக்கிறது"

எனவும் கூறினார். இவையெல்லாம் நாமறியோம் எனும் நல்லொளி ஊட்டும் சில ஒளிக்கதிர்களாம். அகிலமாயைக்கப்பால் உயர் ஞான பூதரத்துச்சியில் ஒளிரும் ஓர் தினகரனே நாமறியோம் எனும் நலம் திகழ் மந்திரமாகும்.

நாமறியோம் எனும் நல்லறிவு

நாம் அறியோம் எனும் நலம் திகழ்மந்திரத்தின் உயர்ஞானப் பொருள் அதுவாக உள்ள நாம் நமக்கு அயலாக எதனையும் அறியோம் என்பதாகும். அதுவே நாமான பந்தமறும் பளிங்கனைய சித்தாக உள்ளோம். இந்தப் பளிங்கனைய சித்தான நமக்கு,

சிந்தையில்லை நானெனும் பான்மையில்லை
தேசமில்லை காலமில்லை திக்குமில்லை
சொந்தமில்லை நீக்கமில்லை பிரிவுமில்லை
சொல்லுமில்லை இராப்பகலாம் தோற்றமில்லை
அந்தமில்லை ஆதியில்லை நடுவுமில்லை
அகமுமில்லை புறமுமில்லை அனைத்துமில்லை

இந்த அனைத்துமில்லை என்னும் நிலையையே யோகசுவாமிகள் அறிவதற்கு ஒன்றுமில்லை என மிக எளிமையாகக் கூறினார். இந்த ஒன்றுமில்லாத இடத்தில் ஏதுமொன்று நிற்கும் நிலை இயல்பாக வாய்க்கும். யாதொன்று மற்ற இடத்திலே அறிவதற்கு எதுவுமில்லை என்று இருத்தல் அறிவேது மற்ற நிலையன்று, நாம் 'அறிவு' என எண்ணியிருந்த அறியாமையாகிய ஞானத்தை இழந்த நிற்கும் நிலையே அது. காண்பான் (ஞாதுரு) ஆகிய நானும், காட்சிப் பொருள் (ஞேயம்) ஆகிய பொருள்கள் அனைத்தும், காட்சி (ஞானம்) ஆகிய சித்த விகாரக் கலக்கம் என்கின்ற அறியாமைத்திரையும் அகன்ற நிலையே அது. அறியாமைத்திரை அகன்ற அந்நிலையே அறிவு சொரூபமான மெய்ஞானம் விளங்கும் நிலையுமாகும். இதுவே நாமறியோம் எனும் நல்லறிவு. யோகசுவாமிகள் மெஞ்ஞானமான மோன பண்பில் நிலைத்து அயலறியாதிருந்த நிலையை ஆங்காங்கே உணர்த்தியிருக்கிறார். உலக வியப்பெல்லாம் சொப்பனமாகக் கழிந்த மருமந்தெரிந்த நிலையில் ஒன்றையுங்காணாமல் ஏங்கி நான் நின்றேன் என்றவாறும், ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன் ஒன்றையுங் காணேனடி என்றவாறும் அவர் பாடியிருக்கின்றார். ஞானப் பெருவெளியின் ஏக சக்கராதிபதியான தனது இராச்சியத்தில் இராப்பகலில்லை நன்மை தீமையில்லை. பெரிது சிறிது இல்லை என்றவாறாகக் குறிப்புணர்த்தியிருக்கிறார். மோனப் பெருக்கில் திளைக்கும் நிலையை வண்டுகள் பூவைக் கிண்டித் தேனையுண்டு ஒன்றுமறியாது கிடப்பது போல் பக்தனும் சித்தமாகிய பூவைச் சிவத்தியானத்தினால் கிண்டி அங்கு வரும் ஆனந்தத் தேனையுண்டு ஒன்று இரண்டு நன்று தீதென்றறியாமற் தேங்கிக் கிடக்கின்றான் என்றவாறாகத் தெளிவு படுத்தியிருக்கின்றார். இவ்வாறாக அயலறியாத சுவானுபூதியே நாமறியோம் எனும் நல்லறிவு என்பதை யோகசுவாமிகள் தெளிவுபடுத்தினார். ஆகவே நாமறியோம் என்பது நன்மோன நிறைவில் மூழ்கிக் கிடக்கச் செய்யும் முடிந்த ஞானமணிப்பூடணம் ஆகும்.

நான்கு மகாவாக்கியங்களும் நன்மோனநிறைவையே தொட்டு நிற்பன. ஒரு பொல்லாப்புமில்லை என்பது அனுபவமாகுமிடத்துச் சும்மா இருக்கும் சூட்சுமத்தில் பூண்டகிடத்தல் வாய்க்கும். முழுதுமுண்மை என்பதன் முடிவிடம் மூச்சுப்பேச்சற்று மோனத்திருக்கும் இடமேயாம். காரியங்களெல்லாம் எப்பவோ முடிந்துவிட்டன எனும் திடம் பொருந்துமானால் எமக்கெனச் செயலேது? நாமறியோம் என்பது நன்று, தீது, சிறிது, பெரிது ஆகிய ஏதுமறியாது அறிவு சொரூபமாய்க் குன்றுபோல் நிற்கும் நன்மோனமே. மெய்ந்நூல்களிற் பரந்துபடச் சொல்லப்பட்டன வெல்லாம் இம்மகா வாக்கியங்களில் மருந்து போல் வடித்துவைக்கப் பெற்றிருக்கின்றன. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நன்மருந்தான இப்பெரும் பெயர்கள் என்றும் எம்நெஞ்சில் நிலைப்பதாகுக.



முக்கிய விரதங்கள்

எமக்கு எல்லா நலன்களையும் எப்பொழுதும் தந்துகொண்டிருக்கின்ற இறைவனை மறவாது, நினைந்து, வாழ்த்தியும், வணங்கியும் இருத்தலே எமது கடமையாகும். பகுத்தறிவற்ற பிற உயிரினத்திற்கு அது இயலாதாயினும், பகுத்தறிவு படைத்த மனித இனத்திற்கு அஃது இன்றியமையாதது. எனினும் உலகியல் சூழல்களால் அக் கடமையை இயற்ற இயலாத நிலையில் இருப்பதால், குறிப்பிட்ட சில நாட்களிலேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந்நாட்களே விரத நாட்களாகும். விரதம் - தவம் - நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள்.

"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத் தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்." - நாவலர் பெருமான்

இஃது ஆன்ம ஈடேற்றங்கருதிச் செ-யுஞ் சாதனை ஆகும். விரதம் "நோன்பு" என்றுங் கூறப்படும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழினுள் ஒன்று தவம் விரதம் அனுட்டித்தல். விரதம் அனுட்டிப்பதனால் மனம் புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம் - நல்லறிவு கைகூடும்.

சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை



கா. சிவபாலன்

யாழ்ப்பாணத்திலே தென்மராட்சிப் பகுதியின் மட்டுவிலிலே தர்மர் என்று அழைக்கப்படும் சின்னத்தம்பிக்கும் தனங்கிளப்பு வள்ளியம்மைக்கும் மகவாக 27.06.1896இல் பண்டிதமணி பிறந்தார். இவருக்குக் கணபதிப்பிள்ளை எனப் பெயரிட்டாலும் 'சட்டநாதர்' என்ற பெயர் மரபுவழிப் பெயரும் இருந்திருக்கிறது. மட்டுவிலிலே உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையால் ஸ்தாபிக்கப்பட்ட சந்திரமௌலீச வித்தியாசாலையில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். இப்பாடசாலை ஒரு காலத்தில் அமெரிக்கன்மிஷன் பாடசாலையாக இருந்தது. இவருடைய ஆசிரியர்களான சாவகச்சேரி பொன்னையா உபாத்தியார், பொன்னம்பல புலவர், பொன்னப்பாபிள்ளை ஆகியோராவர்.

பண்டிதமணி தமது 19ஆம் வயதில் வண்ணார்பண்ணை நாவலர் காவியப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அதற்கு முன்னர் நாவலரைப் பற்றி எதுவுமே தெரியாது. நாவலர் இப்போதும் இருக்கிறாரா? என கேட்டவர்தான் பண்டிதமணி. பண்டிதமணியை நாவலர் பாடசாலையில் சேர்ப்பதற்குப் பெரு முயற்சி எடுத்தவர் ம.க.வே. யின் புதல்வரான விஞ்ஞானப் பட்டதாரி நடராஜா உபாத்தியாராவார். இக் காலத்தில் இந்து சாதனம் பத்திரிகையில் வெளிவந்த நாவலர் பாடசாலையில் மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பச் செய்தியுடன் வந்த, நடராஜா உபாத்தியாரின் முயற்சியே பண்டிதமணிக்கு என்றும் பெரும் புகழைத் தேடியது. அக்காலத்தில் நாவலர் காவிய பாடசாலையில் பேரறிஞராக இருந்தவர் கன்னாகம் அ. குமாரசாமி புலவர். அப்பொழுது நாவலர் காவிய பாடசாலையின் மனேச்சராக இருந்தவர் ஸ்ரீமதி த. கைலாசபிள்ளை.

1929ஆம் ஆண்டு தொடக்கம் 1959ஆம் ஆண்டு வரையுள்ள 30 ஆண்டு காலப்பகுதியில் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகத் தமிழ்த் தொண்டாற்றினார்.

இக்காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஆசிரிய மாணவர்களுக்குத் தமிழிலக்கியத்தையும், தமிழ் மொழியையும் சிறப்பாகக் கற்றுக் கொடுத்தார். திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாற்றிய காலம் நாவலருக்கு எவ்வாறு நாவலர் பரம்பரை உண்டோ அதே போன்று பண்டிதமணிக்கும் ஒரு மாணவர் பரம்பரையை உலகுக்கு தந்தது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மயிலிட்டி சி. சுவாமிநாதனுடைய தொடர்பு, அதிபர் தவமுனிவரான தத்துவஞானி மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி, உப அதிபர் ஆகியோரின் தொடர்பு பெருஞ்சிறப்பைத் தந்தது. சைவாசிரிய கலாசாலையைத் தலைமைப் பாடசாலையாகக் கொண்டு ஊர்கள் தோறும் தோன்றிய சைவப் பாடசாலைகள், அநாதை இல்லங்கள் என்பவற்றை நிறுவிய சைவப் பெரியார் க. இராஜரட்ணமுடைய தொடர்பும் பண்டிதமணிக்கு ஏற்பட்டது.



பண்டிதர் கணபதிப்பிள்ளை என்று பெயர் 1951ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியில் இடம்பெற்ற தமிழ் விழாவின் பின்னர் பண்டிதமணி ஆகினார். தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பேரறிஞர் மத்தியில் தமிழ் பற்றிப் பேசிய பேச்சே மிகவும் உச்சமாக அமைந்தது. அவருடைய பேச்சுக்களை எல்லாம் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் வெளிவந்த பத்திரிகைகள் அனைத்தும் பாராட்டியும் புகழ்ந்தும் எழுதியுள்ளன. பேச்சின் சாரத்தைத் 'தினகரன்' பத்திரிகையில் அதன் ஆசிரியர் வி.கே.பி. நாதன் அவர்கள், 'தமிழ்சாறு' என்ற தலைப்பில் பொருள் பொதிந்த ஆசிரிய தலையங்கம் இட்டு வெளியிட்டார். அக் காலத்தில் முதன் முதலில் 'பண்டிதமணி' என்ற பெயரைச் சூட்டிய பெருமை தினகரன் பத்திரிகைக்கும் அன்றைய பத்திரிகை ஆசிரியருக்கும் உரித்தாகும். இதனை பின் தொடர்ந்தே தமிழ் நாட்டில் கல்கி ஆசிரியர் பண்டிதமணி எனக் குறிப்பிட்டுக் கட்டுரை எழுதினார்.

பண்டிதமணி சமயம், சமூகம், தமிழ் மொழி பற்றியும் ஆற்றிய சொற்பொழிவுகள் நாட்டின் நாலாபுறமும் ஒலித்திருக்கின்றது.

1927ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பணி, நூல் உரை, செய்த பணிபோன்றவற்றை கௌரவித்து 'இலக்கிய கலாநிதிப்பட்டம்' வழங்க வேண்டுமென்று முதன் முதலில் அரசைத் தூண்டி நின்றவருள் ஒருவர் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் வே. குமாரசாமி. ஆயினும் அவர்களின் கனவு நனவாகவில்லை. மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களும் பெரு முயற்சி எடுத்தார்கள். இதற்கமைய இலங்கைப் பல்கலைக்கழகம் 31.05.1978ஆம் ஆண்டு பண்டிதமணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பட்டம் வழங்கி கௌரவித்தது.

இவ்விழாவிற்குப் பண்டிதமணி சமூகமளிக்காத நிலையிலும் இப்பட்டம் வழங்கப்பட்டது.

பண்டிதமணி பற்றிய அறிமுகப் பேச்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் சு. வித்தியானந்தன் வழங்கியிருந்தார். பண்டிதமணி, பொ. கைலாசபதி, க. வச்சிரவேலு முதலியார், கி.வா. ஜெகந்நாதன், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், புலவர்மணி ஏ. பெரியதம்பிபிள்ளை, தமிழறிஞர் ச. அம்பிகைபாகன், வித்துவான் எப். எக்ஸ் சி. நடராஜா போன்ற அறிஞர் பெருமக்களால் கவரப் பெற்றவர்.

பேராசிரியர் ச. தனஞ்சயராசசிங்கம், அதே போன்று இன்றும் நாவலர் பெருமானையும் பண்டிதமணியையும் இணைத்துப் பெருமை பேசி வருபவர் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம். பண்டிதமணி காலத்திலும் பின்னரும் அவருடைய ஆக்கங்களைப் பயின்று பண்டிதமணியுடைய மொழிநடைச் சிறப்பையும் உரைநடை ஈடுபாட்டையும் போற்றி வருபவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. மேலும் பண்டிதமணி அவர்கள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர் அ. சண்முகதாஸ், யுகபுருஷர் பண்டித மாமணி என்ற கட்டுரையை எழுதியுள்ளார். இவ்வாறாக மேலும் கலாநிதி பேராசிரியர் சி. சிவலிங்கராசா போன்ற பல பேராசிரியர்கள் இருக்கின்றார்கள்.

பண்டிதமணியின் வரலாறு பற்றி 'வாழையடி வாழை' என்ற பெயரில் எஸ். ஜெயரத்தினமும், மூன்றாவது கண் என்ற பெயரில் இரசிகமணி கனக செந்திநாதனும், மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க. எனும் பெயரில் பேராசிரியர் சு. சுகிந்திரராஜா அவர்களும் வரலாறுகளை எழுதி உள்ளனர். அண்மையில் காலமாகிய சொக்கன் 1978ஆம் ஆண்டு வெளிவந்த கலைமகளில் எழுதிய கட்டுரை மிகுந்த சிறப்பு வாய்ந்தது. மேலும் பண்டிதமணி பற்றி வெளிந்த மணிவிழா மலர், பாராட்டு மலர், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரத்தின் முயற்சியால் வெளிவந்த நினைவு மலர், நூற்றாண்டு மலர் என்பவற்றில் பண்டிதமணியின் வரலாறும் பணிகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பல்கலைப் புலவர் குலரத்தினம் பண்டிதமணி பற்றி முரசொலி பத்திரிகையில் எழுதியுள்ளார்.

பண்டிதமணி இலக்கியம் பற்றி வெளிவந்த நூல்களில் இலக்கிய வழி நூல் வரதர் வெளியீடாக வெளிவந்தது. மேலும் பாரத நவமணிகள், அன்பின் ஐந்திணை கம்பராமாயண காட்சிகள் இருவர், யாத்திரிகர்கள் போன்றவை உள்ளன. அதேபோன்று சமயம் பற்றி எழுதியவை சமயக் கட்டுரைகள், சைவ நற்சிந்தனை, கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, கோயில் அத்வைத்த சிந்தனைகள் போன்றவை சமய தத்துவங்களை எல்லாம் விளக்கி நிற்கின்றன.

இவற்றிலே கந்தபுராண தட்ஷ காண்டத்திற்குச் செய்த உரை பண்டிதமணிக்குப் பெரும் புகழைத் தந்தது. கந்தபுராண தட் காண்ட உரைநூல் பேராதனைப் பல்கலைக்கழகத்து இந்து மாணவர்களால் 1967ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 'கதிர்காமவேலன் பவனி வருகிறான்' என்ற நூல் மட்டுவில் மெய்கண்டான் நிலைய அதிபர் ஆ. கந்தையாவால் வெளியிடப்பட்டது. மட்டுவில் கண்ணகை அம்மை தோத்திரம் ஆ. நடராஜாவால் தமது தந்தையார் ஆறுமுகம் நினைவாக மட்டுவிலில் 1966ஆம் ஆண்டு வெளிவந்தது.

நாவலர் பெருமானை மதித்து வாழ்ந்து வந்த பண்டிதமணி, நாவலர் பெருமான் பற்றி நாவலர், நாவலரும் கோயிலும், ஆறுமுகநாவலர் என்னும் பெயர்களில் நாவலர் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்து உலகுக்குத் தந்துள்ளார். இவ்வாறாக பண்டிதமணி பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் ஆயிரக்கணக்கானவை. நூல்களுக்குப் பண்டிதமணி எழுதிய அணிந்துரைகள் ஏராளம். தமிழ் கூறும் நல்லுலகில் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும்பணி ஆற்றிய பெருமை பண்டிதமணிக்கு உண்டு. நாவலர் பரம்பரையின் இறுதிச் சின்னமான பண்டிதமணி தமது 87ஆம் வயதில் சிவபதம் எய்தினார். மாசி மாதத்துப் பூர்வபட்ச ரேவதி நட்சத்திர தினமே இவரது குருபூசைத் தினமாகும்.



'இந்துபோட்' இராசரத்தினமும் கல்விக் கூடங்களும்

அ. தற்பரானந்தன்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்

கல்வியும் செல்வமும் சீரும் பொலிகின்ற யாழ்ப்பாணக் குடா நாட்டின் கண்ணே சிவநெறியாளர் வாழ்கின்ற மயிலிட்டி என்னும் பூர்வீகப்பதி மிளிர்கின்றது. இப்பதியில் தொல்மரபில் உயர்ந்த வரான கதிரேசு வள்ளல் வாழ்ந்து வந்தார். இவர் கோப்பாயைச் சேர்ந்த அரசகுலகுமார சூரியர் மரபில் உதித்த நாகமுத்து அம்மையாரைத் திருமணஞ் செய்தார். இத்தம்பதியரின் மூத்த மகன் சுப்ரமணியம், வைமன் கதிரவேற்பிள்ளை அவர்களின் சகோதரியின் மகளான மீனாட்சிப்பிள்ளையை மணம் முடித்தார். இவர்கள் இரகுநாதர், கதிரேசு (சட்டமேதையும் சட்டக்கல்லூரி விரிவுரையாளரும்), பரம நாயகம் (பெண்), இராசரத்தினம் ஆகிய நால்வரைப் புதல்வர்களாகப் பெற்றெடுத்தனர்.

கனிஷ்ட புத்திரன் இராசரத்தினம் 1884ஆம் ஆண்டு யூலை மாதம் 4ஆம் திகதி பிறந்தார். இளம்வயதில் தனது தந்தையை இழந்த இராசரத்தினம் சொந்த மாமனார் வைமன் கதிரவேற் பிள்ளையின் அரவணைப்பில் வளர்ந்தார். அக்காலத்தில் ஊர்காவற்றுறையில் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தில் பணிபுரிந்த மைத்துனரும் செந்தமிழ் ஆசானுமாகிய சின்னத்தம்பி அவர்களுடன் இருந்து ஆரம்பக்கல்வி கற்றார். பின்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்று முடித்தபின் இந்தியா சென்று கொல்கத்தா (கல்கத்தா)வில் சட்டக்கல்வி பயின்று நியாயவாதியாக (அத்துவக்காத்து) இலங்கை திரும்பினார். இலங்கை சட்டக் கல்லூரியிலும் பயின்று சட்டத்தரணியாக விளங்கினார்.

சைவப் பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி கற்கவேண்டும் என விரும்பிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை கி. பி 1848 ஆம் ஆண்டில் நிறுவினார். அவருடைய வேண்டுகோளை ஏற்ற சைவப்பெரியார் பலரும் தாம் வாழ்ந்த கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

கோப்பாய், கொழும்புத்துறை, கீரிமலை, புலோலி, கந்த ரோடை, இணுவில் போன்ற இடங்களில் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. சேர். பொன். இராமநாதன் அவர்கள் மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரியைப் பெண்களுக்கும், திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியை ஆண்களுக்குமாக நிறுவினார்.

சேர். பொன். இராமநாதன் அவர்களே தலைவராக இருந்து 1923 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் நாள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை (The Hindu Board of Education) ஆரம்பித்துச் சைவப் பாடசாலைகளை அமைக்கவும் பரிபாலிக்கவும் வழி வகுத்தார். இராமநாத வள்ளலால் ஆரம்பிக்கப்பெற்ற இச்சங்கத்தின் மூலம் பாடசாலைகளை நிறுவிப் பரிபாலனஞ் செய்த பெருமை நியாயவாதி (அத்துவக் காத்து) சுப்ரமணியம் இராசரத்தினம் அவர்களையே சாரும். இவர் நீதிவானாக வரவேண்டியவர். சிறந்த வழக்கறிஞர். அவற்றையெல்லாம் கைவிட்டு நாவலர்



பெருமான், சேர். பொன். இராமநாதன் அவர்களின் வழியில் தனது இறுதி மூச்சுவரை பணி புரிந்தார் என்றால் மிகையாகாது.

எந்தக் கிராமத்தில் சைவப் பாடசாலையின்றிப் பிள்ளைகள் கிறிஸ்தவமதப் பாடசாலைகளுக்குச் சென்று மதம் மாற்றப் படுகின்றனர் என்பதை ஐயா அவர்கள் அறிந்தாரென்றால் உடனடி யாகவே அவ்விடத்தில் ஒரு சைவப் பாடசாலையை ஸ்தாபித்து விடுவார். அதன் மூலம் சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் கற்க வேண்டுமென்ற நாவலர் பெருமானின் கனவை நனவாக்கி வந்தார்.

சைவனாக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறி அருட்தந்தை யாக வந்த ஒருவர் தான் மீளவும் சைவனாகவே வாழ விரும்புவதாக இராசரத்தினம் ஐயாவிடம் விண்ணப்பித்தார். அவரை திருநெல் வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை உப அதிபரும் சைவப் பேரறிஞருமான பொ. கைலாசபதி அவர்களுடனும் மேற்படி கலாசாலையின் சைவத் தமிழ்த்துறை விரிவுரையாளருமான இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர் களுடனும் நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் ஆகியவற்றின் புனித தீர்த்தமான கீரிமலைக்கு அழைத்துச் சென்று ஸ்நானஞ் செய்வித்தார். இன்றுடன் புனித தீர்த்தமாடியதால் சகல பாவங் களும் நீங்கிப் புனிதரானீர். மீளவும் சைவ சமயி ஆகியபடி நாவலர் பெருமான் காட்டிய வழியில் வாழ்வீராக என வாழ்த்தினார் என்று அவர் காலத்தில் வாழ்ந்தோர் கூறியுள்ளனர்.

பல வருடங்களுக்கு முன் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமரர் சு. இராசரத்தினம் அவர்களை விழா நாயகராகக் கொண்டு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். பல அறிஞர்களும், பிரமுகர்களும் சைவவித்தியா விருத்திச் சங்கச் செயலாளரும், இலங்கைச் சட்டசபை உறுப்பினருமாகிய திரு. சு. இராசரத்தினம் அவர்களைப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தனர்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா எழுந்தார்கள். பேசத் தொடங்கினார்கள். இந்த இலங்கையிலே சைவத்தையும், தமிழையும் பாதுகாத்தவர்கள் தமிழில் வரும் மூன்று எழுத்துக்களையும் முதலாவதாக உடையவர்கள். ஒருவர் 'அ' னா. மற்றவர் 'ஆ' வன்னா. மூன்றாமவர் 'இ' என்ற பெரும் பீடிகையோடு கூறினார். 'அ' என்றால் அருணாசலம்துரை, 'ஆ' என்றால் ஆறுமுகநாவலர், 'இ' என்றால் இராசரத்தினம் என்று விளக்கி அவர்களின் கல்வி, சமயத்தொண்டுகளை விமர்சித்தார்.

இலங்கையில் சைவத்தையும் தமிழையும் சைவச் சூழலில் கற்க 187 பாடசாலைகளை ஸ்தாபித்தார். அவை முட்டின்றி நடை பெறச் சட்டசபையில் சில சட்டங்களை வாதாடி இயற்றினார். நாவலர் பெருமானின் கனவுகளை நனவாக்கிக் கொண்டு வந்தார். அன்னார் நல்லூர் வைமன் வீதியில் வாழ்ந்துவந்த சைவப் பெரியார் இராசரத்தினமே ஆவார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் கொள்கைகளைச் சரியாக அமுல் நடத்துவதில் திரு. சு. இராசரத்தினம் அவர்களுக்கு நிகர் அவரேதான்.

சைவ விருத்தியா விருத்திச் சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், காலஞ்சென்ற A. கதிரவேலு J.P., U.M அவர்கள், 'இச்சங்கம் தாழ்த்தப்பட்டவர்கள் என அழைக்கப் படும் வகுப்பினரின் பிள்ளைகளையும் அதன் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அவர்களுக்கு இயன்றவரை ஊக்கம் அளித்தல் வேண்டும்' என ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தார். இப்பிரேரணை சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டுக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது. மேற்படி மாணவர்களுக்கு ஆசனம், போசனம் இன்னோரன்ன எத்துறையிலும் வேறுபாடு காட்டக்கூடாது என ஒருமனதாக இச்சபை தீர்மானஞ்செய்தது. இவ்வேளை மயிலிட்டியிலிருந்த றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் தாழ்த்தப்பட்டவர் என அழைக்கப்பட்ட மாணவருக்குச் சம ஆசனம் மறுக்கப்பட்டது. இதனை சேர். பொன். இராமநாதன் அவர்களும் சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயலாளரும் வித்தியாதிபதியின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தனர். இனவேறுபாடு பாராட்டும் எப் பாடசாலையும் அரசாங்க உதவிப் பணம் பெறத் தகுதி அற்றதெனக் கருதப்படும் என்றதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு அனைவரையும் சமனாக மதித்துச் சங்கத் தீர்மானங்களை அமுல்நடத்துவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து அரும்பணியாற்றியவர் சைவப் பெரியார் இராசரத்தினம் அவர்கள்.

சமத்துவமாகச் சகலரையும் மதிக்கும் தீர்மானத்தால் பொது மக்கள் சிலரது எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியிருந்தது. இதனால் சங்கத்தின் ஏழு பாடசாலைகள் எரியூட்டப்பட்டன. உயர்சாதி எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் சிலர் தம் பிள்ளை களை வேறு பாடசாலைகளுக்கும் மாற்றினார்கள். இதனால் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்தது. இவை எவற்றுக்கும் அஞ்சாது முகங்கொடுத்துப் பாடசாலைகளில் சமாசனம் வழங்கிய துடன் விடுதிச்சாலைகளில் சமபந்தி போசனம் பண்ணச்செய்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் பெரியார் இராசரத்தினம் அவர்கள் என்றால் மிகையாகாது.

ஐயாவின் திட்டங்கள் அமுலாக்கியபோது ஆசிரியர், அதிபர்கள் சிலவேளைகளில் பாதிக்கப்பட்டனர். ஒரு முறை அதிபர் ஒருவரின் வீடு கூடத் தீக்கிரையாக்கப்பட்டது. அவருக்கு ஆறுதல் கூறியதுடன் வேண்டிய உதவி புரிந்து உற்சாகத்துடன் கடமை புரியத் தூண்டியவர். இவ்வாறு சமத்துவத்திற்காகப் பாடுபட்டு வசதி குறைந்தோரை கல்வி கேள்விகளில் உயரச் செய்தவர்.

1958 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் பாதிப்படைந்த அறுநூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பரந்தன் – முல்லைத்தீவு வீதியில் 8 ஆவது கட்டைக்கும் 9 ஆவது கட்டைக்கும் இடையில் வந்து குடியேறினர். இவர்களில் அறுநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி கற்க வசதியின்றி இருந்தனர். இதை அறிந்த இராசரத்தினம் ஐயா சைவ வித்தியா விருத்திச்சங்க மூலம் ஒரு வான் (Van) கொள்வனவு செய்து அண்மையிலுள்ள முரசுமோட்டைப் பாடசாலைக்குத் தினமும் கூட்டிச் சென்று அவர்களைக் கற்க வைத்தார். மழை காலத்தில் 5 அடி உயரத்திற்கு வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுமுண்டு. இதனை ஆராய்ந்து அரச அதிபருடன் பேசித் தருமபுரத்தில் 600இற்கு மேற்பட்ட பிள்ளைகளுடனும் 16 ஆசிரியர்களுடனும் ஒரு பாடசாலையை நிறுவி அப்பிள்ளைகளின் கல்விக்கு வித்திட்டார். இத் தருமபுரம் வித்தியாலயம் 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை மாணவருக்கு உடை முதலியன வழங்கியும் ஆசிரியர்களுக்கு வேதனத்துடன் மதியவேளை உணவும் வழங்கச் செய்தார். இவ்வாறு ஏழைகளின் வாழ்வில் ஒளியூட்டியவர் இராசரத்தினம் ஐயா அவர்கள்.

தமிழ்ப் பாடசாலைகளையும், தமிழ் – ஆங்கிலம் கற்பிக்கும் இரு மொழிப் பாடசாலைகளையும் யாழ்ப்பாணக் குடாநாடு, தீவகம், வவுனியா, முல்லைத்தீவு முதலிய வன்னிப் பிரதேசத்திலும், பதுளை – நாவலப்பிட்டி போன்ற மலையகப் பிரதேசங்களிலும் சைவப் பாரம்பரியங்களைப் பேணும் வகையில் அமைத்தார்.

1958 ஆம் ஆண்டில் திரு. சு. இராசரத்தினம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் சங்கம் 187 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கொண்டிருந்தது. இதன்மூலம் மாணவர் கல்வியில் இவருக்கிருந்த அக்கறையையும் பற்றினையும் நாம் அறிய முடிகிறது.

திரு. இராசரத்தினம் அவர்கள் கிறிஸ்தவ சூழலிலே அநாதரவாகக் காணப்பட்ட சைவப்பிள்ளைகளின் கல்வியிலும் போதிய கவனஞ் செலுத்தினார் என்றால் மிகையாகாது. சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்றாலும் அவர்கள் விபூதி தரித்துத் தமது பண்பாட்டிற்கு அமைவாகப் போகலாம் என்பதைச் சட்ட சபையில் தனது தனியாள் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

காரைநகரில் வாழ்ந்த அருணாசல உபாத்தியாயர் தெல்லிப் பளையில் இருந்த கிறிஸ்தவ மிஷனரிமாரின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றார். பயிற்சி முடிந்த பின் சான்றிதழ் பெற ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தது. இறுதிநாள் இரவு அசல் சைவனான அருணாசல உபாத்தியாருக்குத் துன்பமாக இருந்தது. நித்திரையே வரவில்லையாம். இரவோடு இரவாகக் கலாசாலையின் சுற்றுமதிலால் ஏறி வெளியே வந்தார். நேரில் இந்துபோட் இராசரத்தினம் ஐயாவின் வீட்டிற்கு ஓடிச் சென்றார். "நீங்கள் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றை ஸ்தாபித்துச் சைவாசிரியர்களை உருவாக்குங்கள். கிறிஸ்தவ ஆசிரியர் கலாசாலைகளில் மதமாற்றம் நடைபெறுகிறது என்பதையும் அதற்கு அஞ்சியே மதிலேறி இங்கு வந்தேன்" என அழுது முறையிட்டார்.

இது இராசரத்தினம் ஐயாவின் மனதை வாட்டியது. உடனேயே விடையும் கண்டார். சைவ அநாதை இல்லக் கட்டடங்களில் ஒன்றில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தார். ஒரு சில வருடங்களில் மலேசியா வாழ் இலங்கைத் தமிழர்களின் உதவி மூலம் பாரிய கட்டடம் நிறுவி அங்கேயே சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை நடைபெறச் செய்தார்.

இப்பயிற்சிக் கலாசாலையில் நூறு மாணவர் பயிலும் வசதியிருந்தது. இக்கலாசாலை அமைந்தமையாலேயே திருநெல்வேலியில் கலாசாலை வீதியென அவ்வீதிக்குப் பெயர் சூட்டப் பட்டது. 15.01.1963 இல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அரசின், சில சுயநல நோக்கம் கொண்ட கல்வி அதிகாரிகளின் சிபார்சினால் மூடப் பெற்றது. ஆயினும் அவ்வீதி இன்றும் கலாசாலை வீதியென்றே அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

சைவக் கல்விப் பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவமக்களின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட திரு. சு. இராசரத் தினம் அவர்கள் அநாதரவான பிள்ளைகளும், சமூகத்தில் பின்தங்கிய பிள்ளைகளும் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்களையும் வழிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். திருநெல்வேலியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமான இரு சைவச்சிறுவர் இல்லங்களை உருவாக்கினார். அவை இன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றன. அக்காலத்தில் பின்தங்கிய சமூகத்தவர் எனச் சிலரால் கூறப்பட்ட மக்களின் பிள்ளைகளையெல்லாம் மேல்நிலை வகுப்பார் எனத் தம்மைத் தாமே அழைப்போரின் கடும் எதிர்ப்புக் களுக்கு மத்தியில் மிகுந்த துணிவுடன் சேர்த்துக் கொண்டார்.

சிறுவர் இல்ல விடுதியில் சமபந்தி போசனம் செய்யப்பட்டது. இதன் மூலம் இந்துபோட் இராசரத்தினம் ஐயாவின் துணிச்சலும், கல்வியில் எந்தவித பாகுபாடும் காட்டக்கூடாது என்ற தத்துவமும், கல்வியே கருந்தனம் என்ற எண்ணமும் உடைய அவரை எம் கண் முன் நிறுத்துகிறது.

நல்லைநகர் நாவலர் அவர்கள் போல இந்துபோட் இராசரத் தினம் அவர்களும் சைவத் திருமுறைகள் பேணப்பட வேண்டு மென்பதிலும் அவற்றினைப் பண்ணோடு பாடவேண்டு மென்பதிலும் கண்ணுங் கருத்துமாக இருந்தார் என்றால் மிகையாகாது.

நாவலர் அவர்களும் இந்தியாவிலிருந்து தேவாரப்பண் ஓதுவார்களை வரவழைத்து இங்குள்ளோர்க்குத் திருமுறைகளை ஓதப்பழக்கினார்.

ஆசிரியர் கலாசாலையில் ஒரு பண்ணிசையாசிரியரை நியமித்து (சிவபூஷணம்)த் திருமுறைகளைப் பண்ணுடன் ஓதப் பயிற்றுவித்தார். இவ்வாறு ஆசிரியர்களுக்குப் பழக்குவதனால் ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர் பண்ணுடன் திருமுறை களை ஓதுவர் என்பதை அறிந்திருந்தார். இதன்மூலம் பாடசாலை களில் பண்ணுடன் திருமுறை படிக்கவேண்டுமென்ற ஆறுமுக நாவலரின் கனவை நனவாக்கினார் என்றால் மிகையாகாது.

பலாலியில் சைவவித்தியா விருத்திச்சங்கம் 20 ஏக்கர் நிலத்தைக் கொள்முதல் செய்திருந்தது. அதில் 450 அடி x 36 அடி அளவான பிரதான மண்டபம். இது 1000 மாணவிகளுக்குப் போதுமான வகுப்பறைகளைக் கொண்டது. 125 அடி x 30 அடி அளவுடைய 10 கட்டடங்களும் உள்ளன. இவை ஒன்று 500 மாணவியருக்குப் போதுமானவையாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவப் பெண்கள் பாடசாலை களில் 1500 சைவப்பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றும் கிறிஸ்தவரின் தொகையிலும் பன்மடங்கு கூடிய சைவ மாணவர்கள் இருந்தும் 9 கிறிஸ்தவ பெண்கள் பாடசாலைகளும் சைவர்களுக்கு 3 பெண்கள் பாடசாலைகளுமே உள்ளன எனவும் புதிய பாடசாலை திறக்க அனுமதிக்கும்படியும் வித்தியாதிபதிக்குத் திரு. இராசரத்தினம் மனுப்பண்ணியிருந்தார். ஆனால் அரசு அம் மனுவை நிராகரித்திருந்தது. பலாலி இந்து மகளிர் கல்லூரியை அதனால் அமைக்க முடியவில்லை.

இராணுவம் பயன்படுத்திய மேற்படி 11 கட்டடங்களையும் இருபது ஏக்கர் காணியுடன் வாங்கியும் புதிய கல்லூரி திறக்க அனுமதி வழங்காதமையினாலேயே கல்லூரி திறக்காமல் மீளவும் அரசு பெற்றுக்கொண்டது துரதிர்ஷ்டமேயாகும். இவ்வாறு இந்தப் பெண் கல்விக்கும் பல இடர்கள் ஏற்பட்டதை அறியமுடிகிறது.

தொழிற்கல்வியிலும் பயிற்சி அளிக்கக்கூடியதாக நெசவு நிலையங்கள், பன்ன வேலைநிலையங்கள் திரு. சு. இராசரத்தினம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுப் பயிற்சியும் வழங்கப்பட்டது. இதனால் நெசவுத் தொழிலின் மூலமும், பன்ன வேலை மூலமும் அன்று பலர் பயன்பெற்றனர்.

குடிசைக் கைத்தொழிலாக வீட்டில் நெசவு செய்தனர். வெங்காயக் கூடை, பாய், பெட்டி, கடகம், கதிர்ப்பாய்

போன்றவையைக் குடிசைக் கைத்தொழில்களாகச் செய்து வருமானத்தையும் பெற்றனர்.

மேற்படி சபையின் தலைவராக இருந்த டாக்டர் சி. சுப்பிர மணியம் (P.S) அவர்கள் உதவியுடன் மனைவி தங்கம்மா பெயரில் ஒரு மண்டபம் (160 அடி x 30 அடி) போடுவித்து விடுதியினை விசாலமாக்கிய இராசரத்தினம் ஐயாவின் சேவையை எவ்வாறு புகழ்வது. இதே போல திரு K.C. நடராஜா அவர்கள் மூலமும் விடுதிக்கென ஒரு கூடம் அமைப்பித்தார். இவ்வாறு கொடை வள்ளல்களைச் சைவச் சிறுவர் இல்லங்களுக்கு வாரிவழங்கச் செய்து சைவச் சிறார்களின் கல்வியை மேம்படுத்தியவர் இந்துபோட் இராசரத்தினம் அவர்களே.


சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டு செய்த இராசரத்தினம் ஐயா கிரிக்கெட் விளையாட்டிலும் சிறந்த வீரன். யாழ். மத்திய கல்லூரியிலும், யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்திலும் சிறந்த விளையாட்டு வீரனாகவும் திகழ்ந்ததன் மூலம் அவரது திறமை வெளியானது. சட்ட வல்லுனரான ஐயா யாழ். முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் கற்று வந்ததை எடுத்துக்காட்டி ஓர் எழுதுநரையும் நியமிக்க வைத்தார். இலங்கையில் எந்த ஒரு தமிழ்ப் பாடசாலையும் பெறமுடியாத இந்த அனுமதியை இவரே அரசிடம் பெற்றுக் கொடுத்தார் என்றால் மிகையாகாது.

1963.01.15 ஆம் திகதி சைவாசிரியர் கலாசாலையை மூடுவ தாகக் கல்வி மந்திரி காரியாலயம் அறிவித்திருந்தது. வட மாகாண கல்வி அதிகாரி 15.01.1963 ஆம் திகதி காலை கட்டடத்தைப் பொறுப்பேற்க விரைந்தார். நடந்தது என்ன? 15.01.1963 ஆம் திகதி நடுநிசி 12 மணி 01 நிமிடத்திற்கு மனேஜர் இராஜரத்தினம் ஐயா அவர்கள் திருநெல்வேலி கிராம சேவையாளர் சகிதம் முட்கம்பி வேலி அடைக்க வந்து கலாசாலைக் காணிக்கு முட்கம்பி வேலி கட்டி, படலையும் போட்டுப் பூட்டி விட்டுச் சென்றுவிட்டார்.

நியாயவாதியான இவரிடம் அரசின் திட்டம் பலிக்கவில்லை. பாடசாலைகள், பயிற்சிக் கலாசாலைகள் அரசுடைமையாக்கும் சட்டப்படி எந்த நோக்கத்திற்காகச் சுவீகரிக்கப்பட்டனவோ அவற்றிற்குப் பயன்படுத்தாது கல்வி அலுவலகத்திற்குப் பயன் படுத்த முனைந்த வித்தியாதிகாரி தோல்வி அடைந்தார். காணியும் கட்டடமும் சங்கத்திற்குச் சேர்ந்தன. இது அத்துவக்காத்து ஐயாவின் சட்ட மூளையின் திறமையாகும். பல வருடங்களின் பின் முத்துத்தம்பி வித்தியாலயத்தை மகா வித்தியாலயமாக்கினால் பயிற்சிக் கலாசாலைக் கட்டடம் காணி ஆகியவற்றில் ஒரு பகுதி தருவதாகக் கூறி அதில் வெற்றியும் கண்டார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கும் ஆரம்பகாலம் தொடக்கம் 1963ஆம் ஆண்டுவரை கணக்காளராக இருந்து கடமை ஆற்றியவர் திரு. சி. மு. அப்புத்துரை அவர்களேயாவார். இவரே இராசரத்தினம் ஐயாவிற்கு வலதுகரம் போல விளங்கிச் சங்கத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல உதவியவர் என்றால் மிகையாகாது.

முத்துத்தம்பி வித்தியாலயம், முத்துத்தம்பி மகா வித்தியாலய மானது. இவ்வாறு சட்டவாதத் திறமையினாலும் கல்விக்குந் தொண்டாற்றியவர் இந்துபோட் இராசரத்தினம் அவர்கள். ஆங்கிலப் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, நெசவுப் பயிற்சிப் பாடசாலைகள், பன்ன வேலைப் பாடசாலைகள் ஆகியவற்றையும் ஆண் பெண்களுக்கான சைவச் சிறுவர் இல்லங்களையும் நிறுவிக் கண்ணை இமைகாப்பது போல் பாதுகாத்து வந்த இராசரத்தினம் ஐயா அவர்கள் 1970 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆம் நாள் அமரரானார்.



மகா சிவராத்திரி

இராத்திரி என்பது இருட்காலம் என்பதை யாவரும் அறிந்தது. எனினும் உண்மையான இருட்காலம், இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை "சர்வசங்கார காலம்", "பிரளயகாலம்", "ஊழிமுடிவு" என்று பலவாறாகக் கூறுவர். இரவில் ஒளியின்றி உயிர்களின் நடமாட்டமில்லாது எங்கும் அமைதி நிலவுவது போல், இந்த ஊழி ஒடுக்ககாலத்தில் பஞ்ச பூதங்களும், தநு, கரண, புவன, போகங்களும் ஒன்றுமேயில்லாது உயிர்கள் செயலற்றுக் கிடப்பனவாம். ஆகவே அப்பொழுது அமைதியே நிலவும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவனேயாம். நாம் நாள்தோறும் காண்கின்ற இரவு அனைத்துயிர்க்கும் உரிய சாதாரண இராக்காலம். ஆயின் உலக ஒடுக்க நிலை யாகிய இரவு சிவனுக்கே உரிய சாதாரண இராக்காலமாகும். இதனாற்றான் இவ் விரவு "சிவராத்திரி" எனப்பெயர் பெற்றுள்ளது.

ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவித்தற்காக இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று "இலளிதாதேவி" என்னும் பெயரோடு சத்தி யைத் தோற்றுவிக்க, அத்தேவி இலிங்கப்பிரானை வணங்க, அவர் இலிங் கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா முதலியோரைப் படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். இதனையே மாசிமாதத்துச் சதுர்த்தசித் திதியில் வரும் இரவும், அன்று இரவு மூன்றாம் சாமம் நடைபெறும் இலிங்கோற்பவ பூசையும் எடுத்துக்காட்டுகின்றன. சிவனிடத்தில் அன்பு பூண்டொழுகுவோர்க்கு அன்றைய நாள் சிறந்த நோன்பு நாளாகும்.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அடையாளங் காணப்படும் அண்மைக்கால கல்விப் பிரச்சினைகள் சில...

Dr. Thirunavukarasu Kamalanathan
President Emeritus,
Jaffna National College of Education.

இலங்கையில் கடந்த இரண்டரை தசாப்த காலமாக உக்கிரமடைந்துள்ள உள்நாட்டு யுத்தமானது மக்களின் வாழ்வில் பல்வேறு சமூக, பொருளாதார, கல்விப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. இத்துடன் 2004ம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் அனர்த்தச் செயற்பாடான சுனாமியும் இப்பிரச்சினைகளை மேலும் உரம் பெற வைத்து விட்டது. இந்த யுத்தமும் சுனாமியும் அவை தொடர்பான செயற்பாடுகளும் போக்கும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்குக் கிழக்குப்பகுதிகளில் விபரிக்க முடியாத பல பின்னடைவுகளை விதைத்துள்ளன. அவற்றில் கல்வி தொடர்பான பின்னடைவுகளையும் தாக்கங்களையும் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அது பற்றிச் சிந்திப்பதற்கு முன்பாக வடக்குக் கிழக்கு மாகாணம் பற்றிச் சிறிது அறிந்து கொள்ளல் பயனுடையது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் தோற்றம்

வடக்குக் கிழக்கு மாகாணம் என்ற இரு மாகாணங்களின் ஒன்றிணைப்பு 1987இல் ஏற்பாடாகிய இந்திய இலங்கை ஒப்பந்தத்தினால் ஏற்பாடாயிற்று. இந்த இணைப்பு தற்காலிகமானது என்றும் மக்கள் ஆணையைப் (Referendum) பெறுவதன் மூலமே அது உறுதி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. கடந்த 20 வருடங்களான இந்த இணைப்பு நடைமுறையிலிருந்து வருகின்றது.


இந்த இணைப்பு அண்மையில் நீதிமன்றத் தீர்ப்பின்படி பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விரு மாகாணங்களும் தனித்தனி அலகாக நிருவகிக்கப்படவும், திருகோணமலை மாவட்டம் தனி அலகாக நிருவகிக்கப்படவும் ஏற்பாடாகியுள்ளது. கட்டுரை, பிரிப்புக்கு முன்னர் ஆக்கம் பெற்றதால் இணைந்த மாகாணங்களாகக் கொள்ளப்பட்டே நோக்கப்படுகின்றது.



வடக்குக் கிழக்கு மாகாணத்தின் புவியியல் நிலை

அமைவிடம் :
தரையமைப்பு :
காலநிலை :
குடித்தொகை :
பொருளாதார முயற்சிகள் :

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ளது. வட அகலாங்கு 6.5° தொடக்கம் 10° வரை; கிழக்கு நெட்டாங்கு 78° தொடக்கம் 80° வரை பரந்துள்ளது. மிக நீண்ட கடற்கரையோரத்தைக் கொண்ட மாகாணமாக இது உள்ளது. ஏறத்தாழ 1155 கி.மீ நீளங்கொண்ட கரையோரம் இங்குண்டு. இது இலங்கையின் மொத்தக் கரையோர நீளத்தின் 60% மாகும். பல தீவுக்கூட்டங்களும் இம் மாகாணத்துக்குள்ளேயே அடங்குகின்றன. வடக்குக்கிழக்கு மாகாணத்தின் பெரும்பகுதி 30 மீற்றர் உயரத்துக்குட்பட்ட பரந்த சமவெளியாகவுள்ளது. கரையோரச்சமவெளிக்குள்ளும், அண்சமவெளிக்குள்ளும் இம் மாகாணம் உள்ளடக்கப்படுகிறது. மத்திய கோட்டுக் காலநிலை அம்சங்களின் தாக்கம் இங்கு அதிகம். வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினாலே மழை பெறும் பிரதேசமாக இம் மாகாணம் அமைகின்றது. மேற்காவுகை முறையிலும் இங்கு மழைவீழ்ச்சி கிடைப்பதுண்டு. சராசரி வெப்பநிலை 27.5°C.



விவசாயமும், மீன்பிடியும் இப்பிரதேசத்தின் முக்கிய தொழில்கள் ஆகும். வட மாகாண விவசாயிகள் பெருமளவு பருவமழையை நம்பியே நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்கு கிணற்று நீர் சிறுபயிர்ச் செய்கையிலும், காய்கறிச் செய்கையிலும் பயன்படுத்தப்படுகிறது. கிழக்குமாகாண விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியுண்டு. குளத்து நீர் இங்கு பயன்படுத்தப்படுகிறது. நெற்செய்கை இங்கு முக்கியம் பெறுகின்றது.

வடக்குக்கிழக்கு மாகாணத்தின் குடித்தொகை 1995ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் பிரகாரம் 2.68 மில்லியன் ஆகும். வடக்குக்கிழக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் நிலப்பரப்பின் அளவு 18880 சதுர கிலோமீற்றராகும். இதில் வடமாகாணத்தில் 8884 சதுர கிலோமீற்றரும். கிழக்கு மாகாணத்தில் 9996 சதுரகிலோமீற்றரும் அடங்குகின்றது. இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பின் 29% மாகும்.

சனத்தொகை அடர்த்தி - வடக்குக் கிழக்கு மாகாணம் - 1995

	மாவட்டம்	சனத்தொகை (1 ச.கி.மீற்றருக்கு)
1.	யாழ்ப்பாணம்	974
2.	கிளிநொச்சி	93
3.	முல்லைத்தீவு	41
4.	மன்னார்	75
5.	வவுனியா	65
6.	திருகோணமலை	131
7.	மட்டக்களப்பு	173
8.	அம்பாறை	124
	நன்றி → Base Line Study - GTZ - 2000	

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் சனத்தொகை வீதம் 1921 - 1981

	வடக்கு மாகாணம்				கிழக்கு மாகாணம்			
	1921	1946	1963	1981	1921	1946	1963	1981
தமிழர்	95	94	93	92	54	49	45	42
சிங்களவர்	01	02	03	03	05	10	20	25
முஸ்லீம்கள்	04	04	04	05	39	39	34	32
ஏனையோர்	–	–	–	–	02	02	01	01
	நன்றி → Base Line Study - GTZ - 2000							

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் குடித்தொகைக் கணக்கெடுப்பு வடக்குக்கிழக்கில் மேற்கொள்ளப்படவில்லை. இதன் பிற்பட்ட காலங்களிலேயே வடக்குக் கிழக்கு பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியேற்பட்டது. இதன் காரணமாக இவ்விபரங்களிலும் கணக்கிடமுடியாத மாற்றங்கள் தோன்றியிருக்கும்.

வடக்குக்கிழக்கில் வாழ்கின்ற மக்களில் பெரும்பான்மையினர் இந்துக்கள். வட மாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாகவுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் முஸ்லிம்கள் தமிழ் மக்களுக்கடுத்த தொகையினராக வாழ்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் தமிழர் 36.4% சிங்களவர் 33.6% முஸ்லிம்கள் 29.0% வாழ்கின்றனர். அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 41.5% சிங்களவர் 37.7% தமிழர் 20.5% வாழ்கின்றனர்.

வடக்குக் கிழக்கின் நிர்வாக மாவட்டங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகள்

கிழக்கு மாகாணம் மூன்று மாவட்டங்களையும், வடக்கு மாகாணம் ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கியுள்ளன. அவற்றின் பிரதேச செயலர் பிரிவுகள் அதனுள் அடங்கும் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை என்பன பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றன.

வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் மாவட்டங்கள், பிரதேச செயலர் பிரிவுகள், கிராம சேவையாளர் எண்ணிக்கை

வடக்கு மாகாணம்			கிழக்கு மாகாணம்		
மாவட்டங்கள்	பிரதேச செயலர் பிரிவுகள்	கி.சே எண்ணிக்கை	மாவட்டங்கள்	பிரதேச செயலர் பிரிவுகள்	கி.சே எண்ணிக்கை
யாழ்ப்பாணம்	யாழ்ப்பாணம்	40	திருகோணமலை	கோமரங்கடவெல	10
	நல்லூர்	40		கந்தளாய்	23
	சாவகச்சேரி	60		கிண்ணியா	31
	கரவெட்டி	35		குச்சவெளி	24
	பருத்தித்துறை	35		மொரவேவ	10
	மருதங்கேணி	16		மூதூர்	42
	சங்கானை (வலி மேற்கு)	25		பாடவிசிறிபுர	10
	கோப்பாய்	31		சேருவில	17
	சண்டிலிப்பாய்	28		தம்பலகாமம்	12
	உடுவில்	30		ஈச்சிலம்பற்று	09
	தெல்லிப்பளை	45		திருகோணமலைப் பிரதேசம்	42
	வேலணை	30			
	நெடுந்தீவு	06	மட்டக்களப்பு	ஏறாவூர் பற்று (செங்கலடி)	39
	காரைநகர்	09		ஏறாவூர் பற்று பட்டினம்	17
	ஊர்காவற்றுறை	15		காத்தான்குடி	18
				கோறளைப்பற்று (வாழைச்சேனை)	12
கிளிநொச்சி	கண்டாவளை	16		கோறளைப்பற்று (மத்தி)	09
	கரச்சி	42		கோறளைப்பற்று வடக்கு (வாகரை)	16
	பச்சிலப்பள்ளி	18		கோறளைப்பற்று தெற்கு (கிரான்)	18
	பூநகரி	19		கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி)	08
				மண்முனை வடக்கு (மட்டக்களப்பு)	48
முல்லைத்தீவு	மாந்தை கிழக்கு	15		மண்முனைப்பற்று (ஆரைப்பத்து)	27
	மாரியன் பத்து	46		களுவாஞ்சிக்குடி	45
	ஒட்டு சுட்டான்	27		மண்முனை பட்டிப்பாலை	24
	புதுக்குடியிருப்பு	19		மண்முனை மேற்கு (வவுண தீவு)	24
	துணுக்காய்	20		பராத்திவேப்பத்து (வெல்லா வெளி)	43
மன்னார்	மடு	17	அம்பாறை	அட்டாளைச்சேனை	32
	மாந்தை மேற்கு	36		அக்கரைப்பற்று	28
	மன்னார் நகரம்	49		ஆலையடிவேம்பு	28
	முசலி	20		அம்பாறை	22
	நானாட்டான்	31		தமன	33
				தெகியத்த கண்டி	14
வவுனியா	வவுனியா வடக்கு	20		இறக்காமம்	12
	வவுனியா தெற்கு	20		கல்முனை (முஸ்லிம்)	28
	வவுனியா	42		கல்முனை (தமிழ்)	29
	வெங்கலச் செட்டி குளம்	20		காரைதீவு	17
				மகா ஓயா	17
				லகுகலை	12
				நாவிதன் வெளி	20
				நித்தாவூர்	25
				படியத்தலாவை	20
				பொத்துவில்	27
				சாய்ந்தமருது	17
				சம்மாந்துறை	51
				திருக்கோவில்	22
				உகனை	59

Thanks : Gama Naguma - community Empowerment Initiative Department of National Planning - 2006

கல்வியில் ஏற்பட்ட தாக்கங்கள்

நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கின்ற யுத்தத்தினால் மேற்கூறிய பிரதேசங்களின் கல்வித்துறை பலத்த தாக்கத்துக் குள்ளாகியுள்ளது. கடந்தகாலப் பரீட்சைப் பெறுபேறுகள், பெற்றுக்கொள்ள முடிந்த புள்ளிவிபரங்கள் மற்றும் செய்திகள், தகவல்கள் ஆகியன கல்வித்துறையின் வீழ்ச்சியைத் தெளிவாக்குகின்றன.

இந்த யுத்தமும் அதன் தாக்கமும் எமது கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு முன்னரும் பல்வேறு விதமான புறக்காரணிகளும் தாக்கத்தினை ஏற்படுத்தியமையையும் இங்கு கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

1974இல் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல்.
1978இல் நடைமுறைக்குவந்த மாவட்டக் கோட்டா ஏற்பாடு.
1983 ஆம் ஆண்டின் இனக்கலவரம்.

ஆகியவற்றை எமது கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்திய மேலும் சில காரணிகளாகக் கொள்ள முடியும். இவையும் யுத்தத்துக்கும் பிரச்சினைகளுக்கும் ஒருவகையில் அடிப்படையானவை.

இனி வடக்கு கிழக்கின் கல்வி நிலை பற்றியும் அதன் அண்மைக்காலப் போக்குப் பற்றியும் ஆழமாகச் சிந்திக்கின்ற போது பின்வரும் நிலைகளைப் பிரதானமாக முன்னிலைப்படுத்திக் கொள்ளலாமெனக் கருதுகின்றேன்.

1. உயர் நிலையிலிருந்த வடக்குக்கிழக்குக் கல்வியின், அடித்தள ஆதாரங்களுக்குரிய உட்கட்டமைப்புச் (Infrastructure) செயற்பாடுகள் சிதறிச் சின்னாபின்னமாகியுள்ளன. இங்கு பாடசாலைக்கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றையும் அடக்கிக் கொள்ளலாம்.
2. கல்வியுலகின் முக்கிய பங்காளர்களான (Clientele) மாணவர்களிடத்து ஏற்பட்டுள்ள பரந்ததும் ஆழமானதுமான உடல், உளப் பாதிப்புக்கள். இங்கு மாணவர்களது இடப்பெயர்வு, நலன்புரி நிலையங்களிலான வாழ்க்கை, அநாதை நிலைப்பட்ட தன்மை, உள அதிர்ச்சி, உள அமைதியின்மை, உள அழுக்கம், உள அழுத்தம் ஆகியவற்றையும் சிந்திக்க வேண்டும்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளால் தோன்றிய யுத்தத்தின் தாக்கம் வடக்குக் கிழக்கு மக்கள் வாழ்வினைப் பாரியளவில் தாக்கிப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் அவர்களை வீடற்றவர்களாக்கி முக்கியமாக வடக்கு மக்களின் பெரும் சொத்தாகவிருந்த கல்வியில் பெரும் அழிவை ஏற்படுத்தி விட்டது. வடக்குக்கிழக்கில் விடுவிக்கப்படாத பகுதிகளின் கல்வி நிலை மிகவும் பாரதூரமாகியுள்ளது. யுத்தமும் அதனுடன் தொடர்புடைய தாக்கங்களும் தொடர்ந்து வந்த சுனாமியும் மக்களை இடம் பெயரவைத்து ஏதிலிகளாக்கி அல்லற்படுத்தி எமது எதிர்கால சமூகத்தின் கல்வியைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களும் அகதிமுகாங்களும் - 1996

மாவட்டம்	நலன்புரி நிலையங்களில் வாழ்வோர்	நலன்புரி நிலையங்களுக்கு வெளியே வாழ்வோர்	மொத்தம்	சதவீதம்
அம்பாறை	3587	3258	6845	01
மட்டக்களப்பு	1791	27678	29469	04
திருகோணமலை	4231	24717	28948	04
முல்லைத்தீவு	25386	73636	99022	13
கிளிநொச்சி	34942	160060	195002	26
வவுனியா	6424	38342	44766	06
மன்னார்	22890	52204	75094	10
யாழ்ப்பாணம்	37480	228851	266331	36
	நன்றி : Planning Secretariat NEPC - 1998			

2004 இன் சுனாமியும், 2006 ஆகஸ்ட் இல் தோன்றிய அசாதாரண நிலையும் இதில் மேலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்

இடம்பெயர்ந்தோர் மட்டக்களப்பு மாவட்டம் - 2007

	பிரதேசம்	நலன்புரி நிலையம்	திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்தோர்				மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்தோர்				மொத்தக் குடும்பம்	மொத்த நபர்கள்
			நலன்புரி நிலையத்தில் உள்ளோர்		நண்பர் உறவினர் வீட்டில் உள்ளோர்		நலன்புரி நிலையத்தில் உள்ளோர்		நண்பர் உறவினர் வீட்டில் உள்ளோர்			
			குடும்பம்	தனிநபர்	குடும்பம்	தனிநபர்	குடும்பம்	தனிநபர்	குடும்பம்	தனிநபர்		
1.	கோரளைப்பற்று வடக்கு	4	92	262	1	3	1156	3989	10	30	1259	4284
2.	கோரளைப்பற்று	4	346	1270	365	1242	823	2967	1753	6113	3287	11592
3.	மண்முனை வடக்கு	22	2186	7728	517	1795	844	3457	684	2206	4231	15186
4.	கோரளைப்பற்று தெற்கு	3	835	2963	07	23	345	1084	1952	7818	3139	11888
5.	ஏறாவூர் பற்று	10	1977	7189	169	575	1507	5722	3353	13265	7006	26751
6.	காத்தான் குடி	–	–	–	06	26	–	–	–	–	06	26
7.	போரதீவு	–	–	–	05	23	–	–	2	8	07	31
8.	மண்முனை தெற்கு / ஏறாவூர்பற்று	2	178	614	518	1728	56	200	29	94	781	2636
9.	மண்முனைப்பற்று	4	370	1284	111	351	123	422	13	51	617	2108
10.	கோரளைப்பற்று மேல்	–	–	–	04	07	–	–	–	–	04	07
11.	மண்முனை தென்மேற்கு	–	–	–	14	46	–	–	88	340	102	386
12.	கோரளைப்பற்று மத்தி	–	–	–	12	45	–	–	69	262	81	307
பல்கலை இசைக்கழகம் பணிவுடன் வேண்டியாங்கு
பேராசிரியராய்ப் பெரும்பணி செய்யுங்கால்
நல்லோர் நயக்கும்நன் சன்மார்க்க சைவமும்
நயமாய் நடக்கும் தேர்வும்சேர
நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி
பல்லியம் பங்கயத் தவனினிது
நல்கியதெய் வஞ்சான்ற தீஞ்சுவை நல்வாழ்வு
நல்லிசையாக்க நாட்டமும் கொண்டீரே

வித்துவான் ஒளவை துரைச்சாமி விளங்கவைக்க
நாச்சியார் நான்மணிமா லைஅரங்கேற
வித்துவான் வெள்ளைவாரணர் வியந்துரை விளம்பிமகிழ
பூசணம்சிவா நந்தன்பொன் இசைபொழிய
பிள்ளையாம் மீனாட்சி சாம்பமூர்த்தி முருகப்பா
அறிஞர்ஆ னோர் அரங்கேற் றியகாலை
களங்கமிலா தமிழ்க்கரந்தை கருமமார் கந்தசுவாமி
நன்றிநவின் றார்நாடு நயந்திடவே

வாழ்த்து

இரும்புநிகர் மனத்தினை ஈர்த்துஈர்த்து என்புருக்கி
கரும்புதரு சுவையெனக்கு காட்டி
வந்துவதை விருந்தாக்கி வருவிருந்து காத்திருந்து
விருந்தாக விண்ணோர்க்கு விளங்கிய நீர் விளங்கியாங்கே
உருத்திரனார் வேண்டும் உள்ளக்கம லமும்கூப்பிய
காந்தளும் நாட்டவிழி நெய்தலும்
நரேந்திரரும் நாயனாரும் நான்முகனும் வேண்டியது
இன்னதென காட்டியவா வாழியவே.

கிழக்கிலங்கைக் கொருமணியாம் என்றுலக மெல்லாம்
கீர்த்திபெற கிளர்செஞ் சாலி
செழித்துவளர் காரைநகர் தனியிரவி யெனவுதித்த
துறவியாம் செம்மல் செய்த
உளப்படுநல் இயல்இசை நாடகமெனமுத்தமிழும்
ஓங்கவைத்த வித்தகவிபு லாநந்தரை
தொழவாங்கு ஓதவைத்த உயர்ந்தோர் பெரியோர்
எண்பலவாய் வாழ வாழியவே.

எந்தமத மானாலும் இந்துமதம் தந்த மதம்
சிந்தனையில் வந்தணைந்து சிவநெறியைக் கூட்டுவிக்கும்
கந்தன் நீலகண்டன் கயிலாயத் துச்சியான்
தந்ததொரு தண்ணளியைத் தலைவணங்கி வாழ்த்துவமே.

அயராது பணியாற்றும் மாமன்றம் வாழ்க



திருமதி அ. பேபி சரோஜா
பண்ணிசை ஆசிரியை,
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்,
மன்னார்.



எழும் அலை சூழ் ஈழமணித் திருநாட்டின் தலைநகரம்
கொழும்பதனை தளமாகக் கொண்டின்று அகவை
ஐம்பது ஆனபின்பும் அயராது பணியாற்றும்
எங்கள் மா மன்றமே நீ என்றும் வாழி நீடு

வன்செயலால் பாதிப்புற்ற மன்னார் ஏழை இந்து மக்கள்
வரும் காலம் இருள் சூழ்ந்து வஞ்சகரால் மதம் மாறும்போது
மன்னார் மாவட்ட இந்து ஆலய ஒன்றியத்தால்
வந்த செய்தி கேட்டு வழிவகைகள் செய்த எங்கள்
இந்து மாமன்றம் வாழி வாழி என்றும்

உடனவர்க்கு வாழவழி காட்டி உண்மையினை விளக்கி
சிவத் தொண்டரணியினை சிறப்பாக உருவாக்கி
சமயப்பணி சிவதொண்டு விழிப்புணர்வு பயிற்சி வகுப்பெடுத்து
மக்கள் மனதில் மாசில்லா இந்து ஒளி மலர்ந்திடச் செய்த
எங்கள் இந்துமா மன்றம் வாழி வாழி என்றும்

இன்னும் என்ன தேவை என எங்கள் இந்து ஆலயத்தின் ஒன்றியத்தைக் கேட்க
ஆரும் அற்ற சிறுவர்களின் அவலநிலை எடுத்தியம்ப
நிதி உதவி செய்வதற்கு வழி பலவும் உண்டு உடனே
அச் சிறுவர்களை சேர்த்தங்கு இல்லம் ஒன்று அமை என்ற
இந்து மாமன்றம் வாழி வாழி என்றும்

அதன் படியே இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
மன்னாரில் அன்னாரின் அரும் தொண்டால் அமைந்தின்று சிறப்பாக
அதிகாலை தியானமுடன் யோகாசனம் என்றும்
அச்சிறார்கள் அகமகிழ்வாய் வாழ வழி வகுத்த எங்கள்
இந்து மா மன்றம் வாழி வாழி என்றும்

செயற்கரிய சேவை செய்யும் அகில இலங்கை இந்து மாமன்றம்
படித்த இளம் இந்து ஏழை வேலையற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும்
தையலுடன் கலைபலவும் கற்று வையத்தில் வாழ வழி காட்டி
தம் காலில் தாம் வாழ வைத்த எங்கள் இந்து மாமன்றம் வாழி வாழி என்றும்

வன்செயலால் பாதிப்புற்ற பேசாலை ஏழை இந்து மக்கள் இருள் சூழ்ந்து
தொழிலின்றி பிறமதத்தவரால் பாடு அற்று பரிதவித்து பட்டினிச்சா எதிர்நோக்கும் போது
காணி ஒன்று பெற்று பாடு அமைத்து வாழ வழி அமைத்த எங்கள்
அகில இலங்கை இந்து மாமன்றம் பெருமை கூற
எந்நாவில் வார்த்தை இல்லை எங்கள் மாமன்றப் புகழ் பாட
பல்லாண்டு பல்லாண்டு பல கோடி நூறாண்டு வாழி வாழியவே

விவேகானந்தர் வாழ்க



நயினை நா.க. சண்முகநாத பிள்ளை.



1. பாரதத்தின் முன்னோர்கள் செய்த பேற்றின்
பக்குவத்தில் வேர்விட்டு (ப்) பண்பாடென்னும்
சாரத்தை ஊட்டமகாய்(த்) தானாயேற்று(ச்)
சார்இந்துத் தத்துவத்தைத் தகவாய்க்கொண்டு
சீரொக்கும் கிளை ஒச்சி (ழ்)லாய் ஆக்கி(ச்)
செம்மையெனும் பூமலர்த்தி(ச்) சமரசத்தின்
பேரொக்கும் நறுமணத்தை(ப்) பெருக்கிநின்று
பீடுபெறு பெட்டகமே விவேகானந்தர்

2. பல்வளமும் செழித்தநகர் கல்கத்தாவின்
பழங்குடியில் நரேந்திரராம் நாமங்கொண்டு
தொல்புகழை வெளிக்கொணரத் தோன்றிவந்து
தூயவழி துணைவலியாய்(த்) துலக்கிநன்கு
கல்விவழி தனையுயர்த்தி நின்றபோதும்
கனன்றிட்ட மெய்ப்பொருளை(க்) காண நின்று
சொல்லவலார் யாரோ? வென் றெங்கு மேகி(த்)
தூயகுரு இராமகிருஷ் ணரிடமேயாணார்

3. சாத்திரத்தின் பயிற்சியொரு ஞானமற்றும்
சார்ந்துவரு மானுடத்தின் தொண்டுக்கான
ஏத்திவரு பணிகளுக்காய்(த்) தம்மை ஆக்கி
ஏற்றமிகு மெய்ப் பொருளைத் தேடிநின்றார்
சீர்த்தி பெற அப்பொருளைக் காணும் போதில்
திருப்திபெறா தலைந்துகலந்து தேறாநின்றார்
கீர்த்திபெறு குருராம கிருஷ்ணரின்தாள்
கிட்டியதும் கேள்வியெல்லாம் அடங்கப் பெற்றார்

4. காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரோ!
கனன்றிட்ட ஞானஒளி காட்டக்கண்டு
கேட்டவழி மெய்ப்பொருளிற் தானும் ஒன்றும்
கேண்மையென யோகமதைக் கிட்டிவென்றார்
ஊட்டவரு பிறப்பதுவும் உலகமுய்ய
உருவெடுத்த உருவென்றே உணரப்பெற்றார்
கூட்டுவித்த குரு அவரும் முழுதும்தந்து
குவலயத்தைக் காத்திடெனக் கூறிச் சென்றார்

5. சீடர்களின் முதல்வரெனத் திகழ்ந்துராம(த்)
திருவுடைய கிருஷ்ணரின் பெயராலெங்கும்
நாடறியப் பெருமடங்கள் நிறுவி ஞான
நற்கருமம் புரிந்துண்மை நாட்டிவந்தார்
நாடறியக் குமரி முதல் இமயம் ஈறாய்(ப்)
பயன்பெருக இறைபயணம் செய்து எங்கும்
தேடரிய இறை உயர்வை மக்களெல்லாம்
தெவிட்டாது மாந்திடவே சேவைசெய்தார்

6. அனைத்துமத மாநாட்டில் சிக்காக்கோ
அதிர்ந்திடவே ஞானஒளிக் கொடியை ஏற்றி,
அனைத்துலகை சாந்தியிலே ஈர்த்து இன்பம்
எய்திடவே பணிமுடித்து இயற்கையானார்
தனித்துவக்கச் சத்தியத்தின் வெற்றிக்காக
இடர்வரினும் எதிர்நின்று கருமம் ஆற்றும்
தனித்துவத்தை மக்களெல்லாம் தகவாய் ஏற்கத்(த்)
தந்தவிவே கானந்தர் தாழ்கள் வாழ்க!

சீவகாருண்யமும் சிவன் கருணையும்

தமிழ்ப்பேரறிஞர் அமரர் கி. வா. ஜகந்நாதன்





1. உடம்புடையார் அதுவரை உணவுதேடி
ஊட்டுகின்றார்; அதுபோல, உள்ளம் ஓங்கித்
திடம்பெறவே அறிவென்னும் உணவை ஊட்டிச்
சிறப்புறுதல் நலமாகும்; உடலும் நம்பால்
இடமுடைய உள்ளமதும் உயர்தல் போல
எம் உயிரும் வளர்வதற்கோர் உணவு வேண்டும்
மடமகல வாழ்ந்தவர்கள், இறைவன் தந்த
வளவருளே உயிருக்கோர் உணவாம் என்றார்.

2. உயிர்வளர இறைவனருள் வேண்டும் என்றால்
உயர்ந்த அந்த அருள் பெறுதற் கெதுஆ றாகும்?
பயிர் வளர்ந்தால் விளைவெடுத்து நெல்லைச் சேர்த்துப்
பாங்குபெற உணவு சமைத் துண்ணு கின்றோம்
செயிரகலும் அருளுணவுக் கமைந்த மூலம்
சீவரிடத் தன்பு கொள்ளும் செயலே ஆகும்
மயலகலச் சிவனிடத்தில் அன்பு கொண்டால்
மாப்புவியி லுயிர்க்கன்பு செய்தல் கூடும்.

3. ஆதலினால் இறைவனிடத் தன்பு செய்தே
அவனெல்லா உயிர்களுக்கும் தந்தை யென்று
வேதமுரை தருமுண்மை தேர்ந்து, நந்தம்
வியன் தகப்ப னார்மைந்தர் உயிர்க ளென்ற
போதமடைந் தாலிஅக்கால் உலகத் தாரும்
பொருந்தியசோ தரரென்ற நிலையைக் கொள்வோம்
மீதுபுகழ் அதனாலே இறைவன் செய்யும்
விளங்கருணைப் பெற்றுயிரில் இன்பம் கொள்வோம்.

4. சீவகா ருணியத்தை வளர்ப்ப வர்க்குச்
சிவன் கருணை உரிமையென அடைதல் கூடும்;
பூவிலொரு காணியிலே தினைவி ளைத்தால்
போதுமறு வடைநாளில் தினை அறுப்போம்
ஆவலோடுஞ் சீவர்பால் கருணை வைத்தால்
அரன் நம்பால் கருணை வைப்பான்; அதனால் இங்கே
யாவருந்தம் உயிர்வளரப் பெறுவார்; இஃதே
எம்மதமும் போதிக்கும் உண்மையாமே.

நன்றி: சட்டக் கல்லூரி சிவராத்திரி மலர் (1967)

சமயத்தின் நோக்கம்



புலவர் ம. பார்வதிநாதசிவம்



1. அன்பென்ற குடையின் கீழ் அவனிமிசைப் பிறந்தோர்
அனைவருமே ஒன்றாக வேண்டுமெனும் கருத்தை
பண்புடனே தருவதுதான் சமயமெனும் மார்க்கம்
பாருயர உழைப்பதுதான் சமயத்தின் நோக்கம்

2. ஆண்டவனின் கொள்கையினை விளக்குவதே சமயம்
அவன்நெறியில் நிற்பதற்கு தூண்டுவதே சமயம்
வேண்டியவர் வேண்டாதோர் எனும் நிலையை நீக்கி
மேவுமுயர் நடுநிலையைக் காட்டுவதே சமயம்

3. கற்பதற்கே சமயமெனும் தவறான எண்ணம்
காலத்தை வீணாக்கும் அதனாலே எவரும்
நிற்பதற்கே சமயமெனும் நிலை உணர வேண்டும்
நிலத்துயர்கள் அனைத்துக்கும் இரங்கிடுதல் வேண்டும்

4. நன்றெண்ணு முளமதனை வளர்ப்பதுதான் சமயம்
நமக்குள்ளே பிரிவுகளைச் செய்வதல்ல சமயம்
கொன்றுண்ணும் மனப் போக்கைத் திருத்துவதே சமயம்
கொல்லாமை ஆண்டவனின் நோக்கமெனல் சமயம்

5. சமயத்தின் பேரில்வரு சண்டைகளைத் தவிர்ப்போம்
சமயத்தால் ஒன்றுபடு வாழ்வுதனைக் காண்போம்
சமயம்தான் உயிர்துணையாம் என்பதனை அறிவோம்
சமயநெறி தவறாமை வாழ்வாகக் கொள்வோம்

6. யாதுமூர் யாவருமேகேளிர் எனும் பாட்டை
யாமுய்ய முன்வைத்த பூங்குன்றன் கருத்தை
நீதியுடன் கண்டுணர்ந்தால் சமயத்தின் வேரை
நிலத்திடையே தெரிந்தோராய் வாழ்ந்திடுதல் கூடும்.



இந்து இளைஞர்காள், முந்துமினோ!

பாரிஸ்டர் செல்வி செ. சின்னையா





அன்றொரு நாவலர் ஆதவன் போல்வந்து
ஆற்றிய தொண்டுகள் சொல்லவோ
இன்னொரு நாவலர் எம்மவர் மத்தியில்
இல்லையென மனம் ஏங்குவதோ
நன்றொரு போரிட நம்மிடை மன்றத்தில்
நாவலர் ஆயிரம் தோன்றிடுநாள்
இன்று வருமென எண்ணிச் செயற்பட
இந்து இளைஞர்காள் முந்துமினோ!

ஆதியி லெந்தையர் வாழ்ந்த முறமைகள்
ஆழியுள் ஆழ்ந்து மறைந்தனவோ
நீதியும் நேர்மையும் குன்றிடவே நம்மை
ஆதி வியாதிகள் மோதினவோ
சாதியில் ஆயிரம் சண்டைகள் வந்துநம்
சாதியைக் கோதியே தின்றனவோ
போதிய வீரமும் ஞானமும் கொண்டுநற்
போரிடக் காளைகள் முந்துமினோ!

நீயே அது என்றுரைத்திடு மந்திர
நேர்த்தியும் சீர்த்தியும் தேரீரோ
பேய்மனம் போகிற போக்கிலே போனவர்
பேடிக ளாவது பாரீரோ
காயமும் நோயும் கலந்த பெருங்கதை
காசினி யெங்கணும் கேளீரோ
நேயமும் சீலமும் ஆயுதமாய்க் கொண்டு
நோயது தீர்த்திட முந்துமினோ!

தக்கபெருநிதி தேக்கி நிறைத்த எம்
தாதையர் தாழ்தொழ வாரீரோ
பக்குவமாய் அதைப் போற்றிப் பரப்பநம்
பக்கலில் அன்புடன் கூடீரோ
துக்க நிவாரணப் பேரிகை கொட்டித்
தெருவெங்கும் தோரணம் போடீரோ
இக்கணமே இந்து தர்மம் முழக்கிட
இந்து இளைஞர்காள் முந்துமினோ!

இந்தக் கவிதை 1969 ம் ஆண்டில் இலங்கை சட்டக் கல்லூரியின் இந்து மகாசபை வெளியிட்ட ''சைவ நீதி'' சஞ்சிகையில் பாரிஸ்டர் செல்வி. செல்வம் சின்னையா அவர்களால் எழுதப்பட்டு வெளியாகியிருந்தது. இவரே பின்னர் திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் என்ற பெயரில் சட்டத்தரணியாக இருந்தவர். இவர் சில வருடங்களுக்கு முன் காலமாகிவிட்டார்.



12

நிகழ்வின் நினைவுகள்



மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் விக்கிரகப் பிரதிஷ்டையும் மகா கும்பாபிஷேக நிகழ்வும் [1996]



மாமன்ற தலைமையகக் கட்டிடத்தின் முகப்புத் தோற்றம்.




மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட எடுத்துச் செல்லப்படும் விக்கிரகங்கள்.



கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடு.









மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்கள் கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திலிருந்து அலங்கார ரதத்தில் ஊர்வலமாக எடுத்துவரப்படுகிறது.

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் விக்கிரகப் பிரதிஷ்டையும் மகா கும்பாபிஷேக நிகழ்வும் [1996]



விக்கிரகங்களை தாங்கிய அலங்கார ரதம் மாமன்றத்தை வந்தடைகிறது.



பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகத்திற்கு எண்ணெய்க் காப்பு வைபவம் ஆரம்பமாக இருக்கிறது. அருகே மாமன்றப் பொதுச் செயலாளர்.



எண்ணெய்க் காப்பு வைபவத்தின் போது
திரு. மு. கந்தசாமி



எண்ணெய்க் காப்பு வைபவத்தின் போது
திரு. சின்னத்துரை தனபாலா.



எண்ணெய்க் காப்பு வைபவத்தின் போது மாமன்ற உறுப்பினர் [அமரர்] க. பாலசுப்பிரமணியம் அவர்கள்



எண்ணெய்க் காப்பு வைபவத்தின் போது மாமன்ற பிரதித் தலைவர் மா. தவயோகராஜா அவர்கள்.

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் விக்கிரகப் பிரதிஷ்டையும் மகா கும்பாபிஷேக நிகழ்வும் [1996]



எண்ணெய்க் காப்பு வைபவத்தின்போது மாமன்ற உறுப்பினர் திருமதி. வனஜா தவயோகராஜா அவர்கள்.




எண்ணெய்க் காப்பு வைபவத்தின்போது மாமன்ற உறுப்பினர் திரு. செ. தி. கனகலிங்கம் அவர்கள்.



வருகை தந்திருந்த பக்தர் கூட்டம்.



கும்பாபிஷேகத்தின் போது கலசங்கள் எடுத்துவரப்படுகின்றன.





கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறுகின்றன.

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் விக்கிரகப் பிரதிஷ்டையும் மகா கும்பாபிஷேக நிகழ்வும் [1996]



கும்பாபிஷேகத்தில் கற்பூர ஆரத்தி



பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகங்கள்





சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்திவைக்கிறார்கள்.





மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது குருக்கள் ஐயாவிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் விபூதிப் பிரசாதம் பெறுவதையும், மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் காளாஞ்சி பெறுவதையும் காணலாம்.

மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் கட்டிடப் பூர்த்தி சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்வு [1996]




பிரதிஷ்டையின் பின்னர், மாமன்றத் தலைவரும் ஏனைய உறுப்பினர்களும்



திரு. ஆ. குணநாயகம் அவர்களிடமிருந்து சிறப்பு மலர் பிரதியை திரு. சி. தனபாலா பெறுகிறார்.



அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி., மாமன்றத் தலை வரிடமிருந்து சிறப்பு மலர் பிரதியை பெறுகிறார்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களிடமிருந்து திரு. என் ஏ. வைத்தியலிங்கம் சிறப்பு மலர் பிரதி பெறுகிறார்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களிடமிருந்து திரு. குமார் பொன்னம்பலம் சிறப்பு மலர் பிரதி பெறுகிறார்.



இனைப்பாறிய நீதியரசர் திரு. விக்னராஜா அவர்களிடமி ருந்து திரு. சி. சுந்தரலிங்கம் சிறப்பு மலர் பிரதி பெறுகிறார்.

மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தில் அமைச்சர் [அமரர்] சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் நினைவுக்கல் திரைநீக்கம்





மாமன்றத் தலைவரும் பொதுச் செயலாளரும் உரையாற்றுகிறார்கள்.





முகாமைப் பேரவை உறுப்பினர் திரு. க. பாலசுப்பிரமணியம் அமைச்சரை வரவேற்பதையும், அமைச்சர் நினைவுக் கல்லை திலை நீக்கம் செய்து வைப்பதையும் காணலாம்.றுகிறார்கள்.



நிகழ்வின் போது இறைவணக்கம் செலுத்தப்படுகிறது. [இடமிருந்து வலமாக] திரு. வி. எஸ். துரைராசா, அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள், மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபின்னை, திரு. என். ஏ. வைத்தியலிங்கம்.


பெரியார்கள் வருகை



திருக்கைலாய பரம்பரை தருமபுர ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தம்பிரான் சுவாமிகளின் வருகை. [மே 1996]



மாமன்றத்திற்கு வருகை தந்த சுவாமி சாந்தானந்த சரஸ்வதி அவர்கள் சிறப்புரை ஆற்றுகிறார்.



திருவாவடுதுறை ஆதீன முதல்வருக்கு கொழும்பில் இந்து மக்கள் வரவேற்பு. மாமன்றப் பொதுச் செயலாளர் வரவேற்புரை.



மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா காணிக்கை செலுத்துகிறார்.



திருவாவடுதுறை ஆதீன முதல்வர் மாமன்றத்திற்கு வருகை தந்தபோது பாதபூசை செய்யப்படுகிறது.



திருவாவடுதுறை ஆதீன முதல்வர் பூசை வழிபாட்டில் கலந்துகொள்கிறார்.


பெரியார்கள் வருகை





மதமாற்றப் பிரச்சினைபற்றி கலந்தாலோசனை செய்வதற்காக, அமெரிக்கப் பிரதிநிதியொருவர் மாமன்றத்திற்கு வருகை தந்திருந்த போது. [08.10.2004]





தருமபுர ஆதீனம் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாமன்றப் பூசை வழிபாட்டில் கலந்துகொள்வதையும், அருளுரையாற்றுவதையும் காணலாம்.





தருமபுர ஆதீனம் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு மாமன்றத் தலைவர் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கிறார்.

மாமன்றத்தில் சிவராத்திரி நிகழ்வு






மாமன்றப் பிரார்த்தனை மண்டபத்தில் எழுந்தருளியருக்கும் ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சிவராத்திரி சிறப்புப் பூசை நடைபெறுகிறது.



திரு. இ. நமசிவாயம் முதற் பிரதி பெறுகிறார்.



இன்னொரு சிவராத்திரி நிகழ்வில் இளைப்பாறிய பிரதம நீதியரசர் சர்வானந்தா, நீதியரசர் விக்னேஸ்வரன்



அரவிந்தா ஆச்சிரமத் துறவி ஸ்ரீதயாள் உரை, பொதுச் செயலாளர் மொழிபெயர்க்கிறார்.



ஸ்ரீதயாள் அவர்களும் இரத்மலானை விடுதி மாணவர்களும்.



இந்து ஒளி சிவராத்திரி சிறப்பிதழ் வெளியீடு [2006] பிரதி தலைவர் திரு. தவயோகராஜா பிரதி வழங்குகிறார்.



இந்து ஒளி சிவராத்திரி சிறப்பிதழ் வெளியீடு [2006] பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன் பிரதி வழங்குகிறார்.






சிவராத்திரி சிறப்பு இசை நிகழ்ச்சிகள் [2006]




சிவராத்திரி பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட இரத்மலானை விடுதி மாணவ, மாணவிகள்.


மாமன்றத்தின் யாழ் பிராந்திய அலுவலகக் கட்டிடம்






நல்லை ஆதீன முதல்வர் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவதையும், அதற்கான பூசை மற்றும் கிரியைகள் செய்யப்படுவதையும் காணலாம்.










புதிதாக அமைக்கப்பட்ட யாழ். பிராந்திய அலுவலகக் கட்டிடத்தின் தோற்றம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தின் சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லக் கட்டிடத் தொகுதி திறப்பு விழா [ஜூலை 2001]





முதியோர் இல்ல கட்டிடத் தொகுதியை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் திறந்து வைப்பதையும், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஜீவானானந்தா மகராஜ் நினைவுக் கல்லை திரை நீக்கம் செய்து வைப்பதையும் காணலாம்.



திறப்பு விழா சிறப்பு வைபவம்



இந்து இளைஞர் மன்றச் செயலாளர் திரு. யுவராஜன் நன்றியுரையாற்றுகிறார்



நிகழ்வில்கலந்து கொள்ளும் பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



வைபவத்தில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.

வவுனியா அன்னதான மண்டபம்













மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான வவுனியா ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையினரால் மாமன்ற நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் அன்னதான மண்டபத்தின் அடிக்கல் நாட்டு வைபவத்தில், மாமன்றத்தின் சார்பில் திரு. சி. தனபாலா கலந்து கொண்டு சிறப்பிப்பதையும், மண்டபத்தின் கட்டிட வேலைகள் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

மாமன்றத்தின் சமூகப் பணிகள்



யாழ்ப்பாண மாவட்டத்தின் நோயாளர்களது நன்மை கருதி, மாமன்றம் அன்பளிப்புச் செய்த அம்புலன்ஸ் வாகனம்.



மாமன்ற உறுப்பினர்கள் நல்லை ஆதீன முதல்வருடன்.





கிழக்கு மாகாண அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மாமன்றம் அன்பளிப்பாக வழங்கிய பாய்கள். மாமன்ற அங்கத்துவ நிறுவனமான ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் ஊடாக விநியோகம் செய்யப்படுகிறது.



மாமன்றமும், நலன் விரும்பிகளும் இணைந்து நல்லை ஆதீனத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய வாகனம்.



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை கதிரொளி இல்லத்திற்கு மாமன்றத்தின் நிதியுதவி வழங்கப்படுகிறது.





கிளிநொச்சி யோகர் சுவாமி வயோதிபர் இல்லத்திற்கு மாமன்றத்தின் உதவிகள் வழங்கப்படுகிறது.



களுத்துறை சிறைச்சாலை பிரார்த்தனை நிலையத்தில் பூசை வழிபாடு



களுத்துறை சிறைச்சாலைக்கு மாமன்றப் பிரதிநிதிக் குழுவினர் விஜயம்.





களுத்துறை சிறைச்சாலைக்கு மாமன்றப் பிரதிநிதிக் குழுவினருடன் சென்றிருந்த சுவாமிஜி ஆத்மகனானந்தா மகராஜ், பிரமச்சாரி ரமண சைத்தன்யா, பாராளுமன்ற உறுப்பினர் திரு. தி. மகேஸ்வரன்.





மட்டக்களப்புக்கு அனுப்பப்படுவதற்காக நிவாரணப் பொருட்கள் சரஸ்வதி மண்டபத்தில் லொறியில் ஏற்றப்படுகின்றன. [ஜனவரி 2005]



சரஸ்வதி மண்டபத்தில் சுனாமி நிவாரணம் [ஜனவரி 2005]



சுனாமி நிவாரணத்தில் சர்வதேச கல்லூரிகளின் மாணவர்களும் பங்களிப்பு






இரத்மலானை இந்துக் கல்லூரி விடுதி மாணவர்கள் சுனாமி நிவாரணப் பொருட்களை ஒழுங்கு செய்கிறார்கள்.


மலையகத்திற்கு மாமன்றத்தின்
வெள்ள அனர்த்த நிவாரணம்





நிவாரணப் பணியில் இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதி மாணவர்கள்





நிவாரணப் பணியில் இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதி மாணவர்கள்.





மலையகத்திற்கு வெள்ள அனர்த்த நிவாரணப் பொருட்களுடன் லொறிகள் புறப்பட ஆயத்தமாகின்றன.

மாமன்ற நிகழ்வு – சுனாமி அனர்த்தப் பிரார்த்தனை



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ்



கம்பவாரிதி இ. ஜெயராஜ்.





சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் வேண்டி, 01. 01. 2005இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றம் ஏற்பாடுசெய்து நடத்திய சிறப்புப் பிரார்த்தனை நிகழ்வில், ஸ்ரீமகா வித்யா சர்வதேச குருபீடத்தைச் சேர்ந்த சிவாச்சாரியார்கள் வேதபாராயணம் ஓதுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.



குருமார்களின் வேதபாராயணம்.



சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரார்த்தனை வைபவத்தின்போது இடம்பெற்ற "இந்து ஒளி" வெளியீட்டு நிகழ்வு.

மாமன்றத்தின் சிறப்பு நிகழ்வுகள்





அகில இலங்கை இந்து மாமன்ற இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வின்போது, நீதியரசர் சி.வி. விக்கேஸ்வரன் அங்குரார்ப்பணம் செய்துவைத்து சிறப்புரையாற்றுகிறார்.









மாமன்றப் பொன்விழா வெளியீடாக வந்துள்ள பேராசிரியர் சி. பத்மநாதன் எழுதிய 'இலங்கையில் இந்து சமயம்' நூல் வெளியீட்டு விழாவில் சுவாமிஜி ஆத்மகனானந்தா ஆசியுரை வழங்குவதையும், மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபின்னை தலைமையுரை ஆற்றுவதையும் நூலின் முதற் பிரதியை திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபைத் தலைவர் திரு. இ. நமசிவாயம், நீதியரசர் சி. வி. விக்கேஸ்வரன் அவர்களிடமிருந்து பெறுவதையும் நூலாசிரியருக்கு நல்லை ஆதீன முதல்வர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் கணலாம்.

மாமன்ற முன்னாள் தலைவர் அமரர். வே. பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை நிகழ்வுகள்.



அமரர் பாலா.



வண. பற்றிக் ஹரிகன் பேருரை (2000)





1999 ம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு. தமிழ்நாடு இயல் இசை விரிவுரையாளர் திருமதி சுப்புலட்சுமி மோகன் பேருரையாற்றுகிறார்.





2001 ம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு. திரு. ஆ. சிவநேசச்செல்வன் பேருரையாற்றுகிறார்.

மாமன்ற முன்னாள் தலைவர் அமரர். வே. பாலசுப்பிரமணியம்
நினைவுப் பேருரை நிகழ்வுகள்.





2002 ம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு. சைவ சித்தாந்தப்
பேராசிரியர் வை. இரத்தின சபாபதி [சென்னை] பேருரையாற்றுகிறார்.



திரு. இலட்சுமி நரசிம்மன் அவர்களுக்கு திரு. சி.
தனபாலா பொன்னாடை போர்த்துகிறார்.



திரு. இலட்சுமி நரசிம்மன் பேருரையாற்றுகிறார்.
[2003]



உருவப்படத்திற்கு மாமன்றத் தலைவர்
மாலை அணிவிக்கிறார்.



திரு [சாண்டில்ய] இராமகிருஷ்ண மூர்த்தி
பேருரையாற்றுகிறார் [2004].

மாமன்ற முன்னாள் தலைவர் அமரர். வே. பாலசுப்பிரமணியம்
நினைவுப் பேருரை நிகழ்வுகள்.





2005 ம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு. கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சிவஸ்ரீ பாலகைலாசநாதசர்மா பேருரையாற்றுகிறார்.





2006ம் ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு. பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேருரையாற்றுகிறார்.





அமரர் ஆ. குணநாயகம் அவர்களது கட்டுரைகளின் தொகுப்பாக மாமன்றம் வெளியிட்ட "புதுமைக்கும் வழிகாட்டும் சைவ சமயம்" என்ற நூலின் வெளியீட்டு வைபவத்தின் போது மாமன்றத் தலைவரிடமிருந்து, இந்து சமய அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் சிறப்புப் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். இரண்டாவது படத்தில் [இடமிருந்து வலம்] [அமரர்] க. ஆறுமுகம், திரு. இ. நமசிவாயம், திரு. வி. கயிலாசபிள்ளை [தலைவர்], புலவர் அ. திருநாவுக்கரசு, வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.

பெரியார் ஆ. சின்னத்தம்பி அவர்களுக்கு நினைவு அஞ்சலி













2001.08.2006 ம் திகதி மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற – மாமன்றத்தின் தலைவராகவும், மாமன்ற அறங்காவலர் சபைத் தலைவராகவுமிருந்த பெரியார் ஆ. சின்னத்தம்பி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு.

இரத்மலானை மாணவர் விடுதியின் ஆறாவது ஆண்டு நிறைவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் [2004]













இரத்மலானை "சக்தி இல்லம்" மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு சி. தில்லைநடராஜா நினைவுப் பேருரையாற்றினார். சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.

இரத்மலானை மாணவர் விடுதியின் ஏழாவது ஆண்டு நிறைவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் [2005]



மேடையில் பிரமுகர்கள்.




நல்லை ஆதீன முதல்வர்.



மாமன்ற தலைவரின் அஞ்சலி.



திரு. வி. தேவராஜ் பேருரை





இந்த நிகழ்வில் வீரசேகரி வாரவெளியீடுகளின் ஆசிரியர் திரு வி. தேவராஜ் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். நல்லை ஆதீன முதல்வரும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.

இரத்மலானை மாணவர் விடுதியின் எட்டாவது ஆண்டு நிறைவும், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவுப் பேருரையும் [2006]













இந்நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி துணை அதிபரும் மாமன்ற உபதலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள் நினைவுப் பேருரையாற்றினார்.



செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்



மாமன்றத் தலைவர்




மாமன்ற விடுதிகள் குழுச் செயலாளர்
திருமதி அ. கயிலாசபிள்ளை




மாமன்றப் பொதுச் செயலாளர்

மாமன்றத்தின் அஞ்சலி நிகழ்வுகள்

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி **ஜீவானானந்தா** மகராஜ் அவர்களின் மறைவையிட்டு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றம் ஏற்பாடு செய்து நடத்திய அஞ்சலிக் கூட்ட நிகழ்வு.



உருவப்படத்திற்கு சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் மாலை அணிவிக்கிறார். அருகே மாமன்ற தலைவர்.



உருவப்படத்திற்கு மாமன்றப் பிரதித் தலைவர் மாலை அணிவிக்கிறார்.





நிகழ்வுக்கு வருகை தந்தவர்கள்.






நிகழ்வில் கலந்துகொண்ட இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகள்

மாமன்றத்தின் அஞ்சலி நிகழ்வுகள்

ஞானவித்தகர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் மறைவையிட்டு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாமன்றம் ஏற்பாடு செய்து நடத்திய அஞ்சலிக் கூட்ட நிகழ்வு.



ஞானவித்தகர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களின் உருவப்படம்



மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்.



செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் உரை. அருகே திரு. ஈழவேந்தன் [பா. உ], மாமன்றத் தலைவர்.



நிகழ்வுக்கு வருகை தந்தவர்கள்



நிகழ்வுக்கு வருகை தந்தவர்கள்



நிகழ்வில் கலந்துகொண்ட இரத்மலானை விடுதி மாணவர்கள்

இரத்மலானை மாணவர் விடுதி திறப்பு விழா நிகழ்வு [15.03.1998]



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், மாமன்றத் தலைவர், பிரதித் தலைவர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.



பூசை வைபவ நிகழ்வு.



கலாநிதி வேலாயுதபிள்ளை மண்டப நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்படுகிறது.



கலாநிதி வேலாயுதபிள்ளையின் நிழற்படத்திற்கு விடுதி மாணவர் ஒருவர் மாலை அணிவிக்கிறார்.



பேராசிரியர் க.சிவத்தம்பி உரையாற்றுகிறார்.



விடுதி மாணவர்களுக்கு கலாநிதி வேலாயுதபிள்ளையின் புதல்வன் உணவு பரிமாறுகிறார்.

இரத்மலானை சக்தி இல்லம் – திறப்பு விழா நிகழ்வு



பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் வரவேற்கப்படுகிறார்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களும்
பிரமுகர்களும் வரவேற்கப்படுகிறார்கள்.



சக்தி இல்லம்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் நினைவுக்கல்லை
திரைநீக்கம் செய்துவைக்கிறார்.



மாமன்ற பிரதித் தலைவர் மங்கள விளக்கேற்றுகிறார். அருகே
அதிபர் திரு. ந. மன்மதராஜன், விடுதிக் குழுச்செயலாளர்.

இரத்மலானை சக்தி இல்லம் – திறப்பு விழா நிகழ்வு



சக்தி இல்லம் மண்டபத்தில் பூசை வழிபாடு



வருகை தந்திருந்த பிரமுகர்கள் பூசை வழிபாட்டில்



மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்.



நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் உரையாற்றுகிறார்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் விடுதி மாணவிகளது அனுமதிக்கான பதிவை ஆரம்பித்து வைக்கிறார்.



விடுதியின் உள்ளே

இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.













இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.














பிறந்தநாள் வைபவமொன்றின்போது வாகீச கலாநிதி க. நாகேஸ்வரன் கதாப்பிரசங்கம் நிகழ்த்துகிறார்

இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.














இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.














இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.





பிறந்தநாள் வைபவமொன்றின்போது வருகை தந்திருந்த நல்லை ஆதீன முதல்வரும், ஏனைய பிரமுகர்களும் பிள்ளைகளுடன்.









இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகளின் பிறந்தநாள் வைபவம்.













இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகள்.













இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகள்.





இரத்மலானை இந்து கல்லூரி வளவிலுள்ள கற்பக விநாயகர் ஆலயத்தில் பூசைவழிபாடு.









இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகள்.











விடுதியில் ஒன்றுகூடல் நிகழ்வு.

இரத்மலானை மாணவர் விடுதியில் ஒன்றுகூடல் நிகழ்வு.



மங்கள இசை.



மங்கள தீபமேற்றப்படுகிறது.



முன்னாள் இராஜாங்க அமைச்சர்
திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் வரவேற்கப்படுகிறார்.



திரு. பொன். பாலசுந்தரம் உரையாற்றுகிறார்.




மாமன்றப் பொதுச்செயலாளர்
திரு. கந்தையா நீலகண்டன்.



மாமன்றத் துணைத் தலைவர்
திரு. சின்னதுரை தனபாலா.

இரத்மலானை செல்வா இல்லம் திறப்பு விழா நிகழ்வு



செல்வா இல்லத்தின் முகப்புத் தோற்றம்.



செல்வா இல்லத்தில் திருமதி. செல்வரத்தினம் அவர்களின் பெற்றோரின் நிழற்படங்களை செல்வரத்தினம் தம்பதியினர் திரைநீக்கம் செய்கிறார்கள்.



செல்வா இல்லத்தின் வழிபாட்டு அறை



பெற்றோர்களுக்கு தீப அஞ்சலி.

மாமன்ற நிகழ்வுகள்





மாமன்றம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த நித்யஸ்ரீ மகாதேவனின் இன்னிசை நிகழ்ச்சி. கௌரவம் செய்யும் நிகழ்வில் நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள்.

மாமன்றத்தில் நாவலர் நினைவு தினமும் "சிவ வழிபாட்டு மலர்" வெளியீடும்



நாவலர் திருவுருவச் சிலை



இந்தியன் ஓவசிஸ் வங்கியின் இலங்கை நாட்டுக்கான தலைமை நிர்வாகி திரு. அ. இராமசாமி அவர்களுக்கு திரு. சி. தனபாலா மலர் மாலை அணிவிக்கிறார்.



சிவஞானச் செல்வர் க. இராஜபுவனீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்துகிறார்.



திரு. அ. இராமசாமி சிறப்புரையாற்றுகிறார்





மாமன்ற பிரதித் தலைவரிடமிருந்து "சிவ வழிபாட்டு மலர்" பிரதிகளை பெற்றுக் கொள்கிறார்கள்.

மாமன்றத்தில் நாவலர் நினைவு தினமும் "சிவ வழிபாட்டு மலர்" வெளியீடும்



மாமன்ற உப பொருளாளர் திரு. க. ஜெகதீசன் அவர்களிட மிருந்து திரு. இ. நமசிவாயம் "சிவ வழிபாட்டுமலர்" பிரதியை பெற்றுக்கொன்கிறார்.



வருகை தந்திருந்தவர்களுள் ஒரு பகுதியினர்.



விடுதிப் பிள்ளைகள் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களிடமிருந்து "சிவவழிபாட்டு மலர்" பிரதிகளைப் பெற்றுக் கொன்கிறார்கள்



விடுதி மாணவர் ஒருவர் நாவலரைப்பற்றி சிற்றுரையாற்றுகிறார்.



மாமன்றப் பொதுச் செயலாளர் நன்றியுரை வழங்குகிறார்.



வருகை தந்தவர்களுள் ஒருபகுதியினர்.

மன்னாரிலுள்ள ஸ்ரீகனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம் திறப்பு விழா நிகழ்வு
[28.10.2004]



இல்லத்தில் வதியும் பிள்ளைகளுடன் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.



நிகழ்வின் முன் இறைவழிபாடு.





பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



விடுதிப் பிள்ளைகளை பொதுச் செயலாளர் பேட்டி காண்கிறார்.



மாமன்றப் பொருளாளருக்கு வரவேற்பு

மன்னாரிலுள்ள ஸ்ரீகனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம் திறப்பு விழா நிகழ்வு [28.10.2004]



மாமன்றப் பொதுச் செயலாளர் உரை.



பிரமுகர்கள் கௌரவிப்பு.

மன்னார் தையற்பயிற்சி நிலையம் – திறப்பு விழா நிகழ்வு.



பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



மாமன்றத் தலைவர் திறந்து வைக்கிறார்.



திருமதி. அ. கமிலாசபின்னை பெயர்ப் பலகையை திறந்து வைக்கிறார்.





பயிற்சி நிலையத்தில் பிரமுகர்களும் பயிற்சியாளர்களும்.

அகில இலங்கை இந்து மாமன்றமும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களில்
ஒன்றியமும் இணைந்து 'சைவமும் வாழ்வும்' என்ற தொனிப்பொருளில்
நடாத்திய இருநாள் ஆன்மீக வழிகாட்டல் அரங்கு (07.08.2004, 08.08.2004)





பிரமுகர்கள் அழைத்துவரப்படுகிறார்கள்.



நல்லை ஆதீன முதல்வருக்கு வரவேற்பு.



நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை.



கலாநிதி கு. சோமசுந்தரம் சிறப்புரை.



வாசீக கலாநிதி க. நாகேஸ்வரன் சிறப்புரை.

மன்னார் ஆன்மீக வழிகாட்டல் அரங்கு [07.08.2004, 08.08.2004]



மாமன்றப் பொதுச்செயலாளர் உரை.



நிகழ்வில் கலந்துகொண்டோர்.

கிளிநொச்சி ஆன்மீக மாநாடு நிகழ்வு.





சுவாமிகளுடன் மாமன்றப் பிரமுகர்களும் இல்லப் பிள்ளைகளும்.



மாமன்றத் துணைத் தலைவர் திரு. சி. தனபாலா உரை.



வாசீக கலாநிதி க. நாகேஸ்வரன் சிறப்புரை.

கிளிநொச்சி ஆன்மீக மாநாடு நிகழ்வு [08.05.2004]






சுவாமிகளுடன் கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் பிரமுகர்கள்.



சுவாமிகளுடன் திரு. சி. தனபாலா.



இல்லத்தில் வதியும் பிள்ளைகள்.





இல்லத்தில் வதியும் பிள்ளைகள்.

கிளிநொச்சி கருத்தரங்கு நிகழ்வு
[30.10.2004 — 31.10.2004]



நல்லை ஆதீன முதல்வர்.



கருத்தரங்கு நடைபெறுகிறது.





கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்.



கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்.



சுவாமிகளுக்கு திரு. சி. தனபாலா
அப்பியாசப் புத்தகங்களை வழங்குகிறார்.

மஸ்கெலியா சிவதொண்டர் அணி பயிற்சிப் பட்டறை நிகழ்வு
[27.08.2005 – 28.08.2005]



சிவ தீட்சை வழங்கப்படுகிறது.



மாமன்ற துணைத் தலைவர்
திரு. க. இராஜபுவனீஸ்வரன் சிறப்புரை.



வாசீக கலாநிதி க. நாகேஸ்வரன் சிறப்புரை.



அகில இலங்கை இந்து மாமன்ற, மஸ்கெலியா இந்து
மாமன்றப் பிரதிநிதிகள்.





பயிற்சிப் பட்டறை நடைபெறுகிறது.

மஸ்கெலியா சிவதொண்டர் அணி பயிற்சிப் பட்டறை நிகழ்வு
[27.08.2005 – 28.08.2005]



சிவஞானச்செல்வன். க. இராஜபுவனீஸ்வரன்
உரையாற்றுகிறார்.



மாமன்றப் பொதுச் செயலாளருடன், சமய விவகாரக்
குழுச்செயலாளர் திரு. மு. சொக்கலிங்கம்.

நந்திக்கொடிகள் விநியோகப் பணி



பிரதிக் கல்வி அமைச்சர்
கௌரவ மு. சச்சிதானந்தன் அவர்களுக்கு



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் முன்னாள் தலைவர்
சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களுக்கு



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் புதிய தலைவர் சுவாமி
சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் அவர்களுக்கு



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்
அவர்களுக்கு

சிவதொண்டர் அணி பயிற்சிக் கருத்தரங்கு
[20.04.2005 – 23.04.2005]
இடம் : இரத்மலானை, இந்துக் கல்லூரி



மாமன்றத் தலைவர் உரை.



கருத்தரங்கு நடைபெறுகிறது.



கருத்தரங்கு நடைபெறுகிறது.



பிரதம விருந்தினர் நீதியரசர் க. ஸ்ரீபவன் தம்பதியினர் வரவேற்கப்படுகிறார்கள்.



கருத்தரங்கில் பங்குபற்றியவர்கள்.



நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.

சிவதொண்டர் அணி பயிற்சிக் கருத்தரங்கு
[20.04.2005 – 23.04.2005]



"மூத்த சிவதொண்டர்" என்ற கௌரவம் பெறும் திரு. ச. சரவணமுத்து.



நிகழ்வின் முன் இறை வழிபாடு.

சேர் பொன். அருணாசலம் அவர்களின் 150வது பிறந்ததினம்



கலந்துகொண்ட பிரமுகர்கள்.



மாமன்றத் தலைவர் உரை.



உருவப்படத்திற்கு திரு. எஸ். பி. சாமி அஞ்சலி.



உருவப்படத்திற்கு திரு. க. இராஜுவனீஸ்வரன் அஞ்சலி


2003 பெப்ரவரியில் இந்தியா மும்பாயில் நடந்த
"பழைய பாரம்பரியங்களும், கலாசாரங்களும்"
சம்பந்தமான சர்வதேச மாநாடு.



மாமன்றத் தலைவர், பொதுச் செயலாளர்,
திருமதி. அ. கயிலாசபின்னை, ஏனையோர் ஊர்வலத்தில்.



மத்திய மாகாண கல்வி அமைச்சர் திரு. வி.
இராதாகிருஷ்ணனுடன் திரு. திருமதி கயிலாசபின்னை



மாமன்றத் தலைவர் உரை நிகழ்த்துகிறார்.



மாமன்றப் பொதுச் செயலாளர் உரை நிகழ்த்துகிறார்.



சுவாமி விக்னானந்தாவுடன் மாமன்றப் பிரதிநிதிகள்.

2003 பெப்ரவரி 4ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதிவரை
இந்தியா— மும்பாயில் நடந்த இந்த சர்வதேச
மாநாட்டுக்கு மாமன்றத் தலைவர், பொதுச்
செயலாளர், திருமதி அ. கயிலாசபின்னை
ஆகியோர் விஷேடமாக அழைக்கப்பட்டிருந்தனர்.

மாமன்றப் பொன்விழா ஆரம்ப நிகழ்வு
[04–02–2005]





பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைவழிபாடு. மாமன்றத் தலைவரும் துணைவியாரும்.



மங்கள தீபங்களை ஏற்றிவைக்கும் நல்லை ஆதீன முதல்வரும், ஏனைய சிவாச்சாரியார்களும்.



மாமன்றத் தலைவர் உரை.



ஐம்பது மங்கள தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளன.



இரத்மலானை மாணவர் விடுதிப் பிள்ளைகள்.

யாழ் இந்து மாநாடு நிகழ்வு
[15.07.2005, 17. 07. 2005]





பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.



ஊர்வலம்



மேடையில் பிரமுகர்கள்



மேடையில் பிரமுகர்கள்.



யாழ் மாவட்ட நீதிபதி திரு. இ. த. விக்னராஜா உரையாற்றுகிறார்.

யாழ் இந்து மாநாடு நிகழ்வு
[15.07.2005, 17. 07. 2005]



நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்

தமிழகப் பேராசிரியர் சோ.ந. கந்தசாமி.



நிகழ்வுக்கு வருகை தந்தோர்.



நிகழ்வுக்கு வருகை தந்தோர்.

வவுனியா சிவதொண்டர் மாநாடு நிகழ்வு.





பிரமுகர்கள் மாநாட்டு மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்கள்.

வவுனியா சிவதொண்டர் மாநாடு நிகழ்வு.
[29.10.2005, 30.10.2005]



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் ஆசியுரை.



சிந்தாமணி விநாயகர் ஆலய பிரதம குரு ஆசியுரை.



வவுனியா மாவட்ட நீதிபதி
திரு. மா. இளஞ்செழியன் வாழ்த்துரை.



மேடையில் பிரமுகர்கள்.



தமிழருவி த. சிவகுமாரன் சிறப்புரை.




சிவஸ்ரீ ம. பால கைலாசநாத சர்மா சிறப்புரை.

பொன்விழா சிறப்பு மாநாடு
[01–04– 2006, 02–04–2006]





யானை மீது சேக்கிழார் நாயனாரின் திருவுருவப் படத்துடன், மாநாட்டு மண்டபத்திற்கு பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுகிறார்கள்.





நல்லை ஆதீன முதல்வர் அவர்களும், சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் அவர்களும் மங்கள விளக்கேற்றுகிறார்கள்.





சிறப்பு மாநாடு நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குகிறார்.

பொன்விழா சிறப்பு மாநாடு
[01–04– 2006, 02–04–2006]





அறுபத்து மூன்று நாயன்மார்களது திருவுருவப் படங்களுடனும், கும்பங்களுடனும் ஊர்வலம்.





கும்பங்களுடனும், பான்ட் வாத்தியங்களுடனும் ஊர்வலம்.



நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் இறைவணக்கம்.



பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரை.

மாமன்ற பொன்விழா சிறப்பு மாநாடு நிகழ்வு.
[01–04– 2006, 02–04–2006]



செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்.



நாட்டிய நிகழ்ச்சி.





"இந்து மக்களுக்கு ஒரு கையேடு" நூலின் பிரதிகளை நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து திருமதி வசந்தா வைத்தியநாதன், திருமதி யமுனா கணேசலிங்கம் ஆகியோர் பெற்றுக்கொள்கிறார்கள். அருகே திருமதி சாந்தி பாலசுப்பிரமணியம்.





நிகழ்வுக்கு வருகை தந்தோர்.


இந்து மாமன்ற நிதி உதவியுடன் நிறுவப்பட்ட சுவாமி விவேகானந்தர் சிலை





கொழும்பு, விவேகானந்த சபை முன்றலில் நிறுவப்பட்டிருக்கும் சுவாமி விவேகானந்தரின் சிலை இது. இதற்கான செலவை அகில இலங்கை இந்து மாமன்றம் கொடுத்துதவியிருந்தது. இச்சிலை 15.01.1997 இல் நிறுவப்பட்டது.

மாமன்றத்தின் கல்விக் கருத்தரங்கு நிகழ்வுகள்.





கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு.






கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு.






கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்களிப்பு செய்தவர்கள்.

மாமன்றத்தின் கல்விக் கருத்தரங்கு நிகழ்வுகள்.





பலாங்கொடை கருத்தரங்கு.





பலாங்கொடையில்






பண்டாரவளையில் கருத்தரங்கு.

"இந்து நாகரிகம்" நூல் வெளியீட்டு நிகழ்வு [17.03.2007]





பூசை வழிபாடு நடைபெறுகிறது.



மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார்.



இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் சிறப்புரை.




மாமன்றப் பிரதித் தலைவர் திரு. மா. தவயோகராஜா சிறப்புப் பிரதி பெறுகிறார்.



திரு. த. மனோகரன் கௌரவிக்கப்படுகிறார்.

பிரார்த்தனை நிகழ்வு [21.04.2007]





பூசை வழிபாடும் பிரார்த்தனையும்.



சுவாமி ஆத்மகனானந்தா மகராஜ் உரை.



சுவாமி சர்வரூபானந்தா மகராஜ் உரை.



இராமகிருஷ்ண மிஷன் புதிய தலைவரும்,
பழைய தலைவரும்



திரு. சி. தனபாலா நந்திக் கொடிகளை வழங்குகிறார்.

'இந்து ஒளி' பத்தாண்டு நிறைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு [21.10.2006]



மாமன்றத் தலைவர் சிறப்பிதழின் முதற் பிரதியை பிரதம விருந்தினருக்கு வழங்குகிறார்.



பிரதம விருந்தினர் நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்கள் உரையற்றுகிறார்.



மாமன்றத் தலைவர், திரு. அ. கனகசூரியரை கௌரவிக்கிறார்.



நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்கள் திரு. த. மனோகரனை கௌரவிக்கிறார்.



நீதியரசர் க. ஸ்ரீபவன் அவர்கள் திரு. பொன். விமலேந்திரனை கௌரவிக்கிறார்.



நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுள் ஒரு பகுதியினர்.

வளர்ச்சிப் பாதையில் இந்து ஒளி



இரத்மலானை மாணவர் விடுதி நூலகத் திறப்பு விழா [30.12.2006]





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவு தினத்தையொட்டி விவேகானந்த சபை மாமன்றத்துடன் இணைந்து நடாத்திய ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கு. [16.12.2006, 17.12.2006]





பட்டமளிப்பு



பேரூர் ஆதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் மாமன்ற உபதலைவரான திரு. சின்னத்துரை தனபாலா அவர்களுக்கு "விடைக்கொடிச் செல்வர்" என்ற பட்டத்தை வழங்குகிறார். அருகே மாமன்ற பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன்.

கொழும்பில் விவேகானந்த சபையின் நூற்றாண்டு ஆரம்ப விழா [12.07.2002]



12.7.2002 இல் இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற ஆரம்ப விழாவில் இந்திய வெளிவிகார அமைச்சர் மாணபுமிகு யஸ்லந்த்சின்ஹா உரையாற்றுகையில்.




12.7.2002 இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற ஆரம்பவிழாவில் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னான்டோ பேசுகையில்



12.7.2002 இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற ஆரம்ப விழாவில் கௌரவ இந்து சமய விவகார அமைச்சர் கௌரவ தி. மகேஸ்வரன் கௌரவ செயலாளரினால் மலர் மாலை சூடப்படுகிறார்.



2.7.2002 இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ண காந்தி தலைவரினால் கௌரவிக்கப்படுகின்றார்.



12.7.2002 – இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெற்ற ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட சபையினர்.

கொழும்பில் விவேகானந்த சபை நூற்றாண்டு ஆரம்பவிழா
[13.7.2002]



13.7.2002 – நிகழ்ச்சியில்
அன்பர்களின் ஊர்வலம்.




13.7.2002 – நிகழ்ச்சியில்
விவேகானந்தாக் கல்லூரி

13.2.2002 – நிகழ்ச்சியில்
மாணவர்கள் ஊர்வலம்.



3.7.2002 – நிகழ்ச்சியில் விவேகானந்தாக் கல்லூரியில்
உள்ள விநாயகர் ஆலயத்தில்
சுவாமி ஆத்மகனானந்தாஜீ கற்பூர ஆராத்தி செய்கையில்



13.7.2002 – நிகழ்ச்சியில் விவேகானந்தாக் கல்லூரியில்
சுவாமி ஆத்மகனானந்தாஜீ கொடியேற்றுகிறார்கள்



13.7.2002 – நிகழ்ச்சியில்
விவேகானந்தாக் கல்லூரி முன்றலில்
மாணவர்கள்.



13.7.2002 – நிகழ்ச்சியில் விவேகானந்தாக்
கல்லூரி முன்றலில் இந்து மாமன்றப்
பொதுச் செயலாளர் ஆசிச்செய்தி



13.7.2002 – நிகழ்ச்சியில் கலந்து கொண்ட
விவேகானந்தாக் கல்லூரி ஆசிரியர்களும்
மாணவர்களும்.

கொழும்பில் விவேகானந்த சபை நூற்றாண்டு நிறைவுவிழா – 12.7.2003



12.7.2003 – விவேகானந்த சபை நூற்றாண்டு நிறைவு விழாவின் போது மங்கள இசை – திரு. செல்வராசா குழுவினர்.




12.7.2003 – விவேகானந்த சபை நூற்றாண்டு நிறைவு விழாவின் போது இறைவணக்கம் – விவேகானந்தாக் கல்லூரி மாணவிகள்.




நிறைவு விழாவின் போது இந்திய தூதுவர், பங்களூர் இராமகிருஷ்ண முதல்வர், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம தலைவர்.

நிறைவு விழாவின் போது
தலைவர் தே . ம. சுவாமிநாதன், கௌரவ அமைச்சர் தி. மகேஸ்வரன், நல்லை ஆதீன முதல்வர்.

திருக்கேதீஸ்வரம் — மகாகும்பாபிஷேகம்.



திருகேதீஸ்வரம் — மகா கும்பாபிஷேகம் — 6.7.2003 ஆலய குடமுழுக்கு காட்சி.




திருகேதீஸ்வர ஆலய கோபுர வாயிலில் மண்டலபிஷேகத்தில் கலந்து கொண்ட சபையினர் — திருமதி. வானதி ரவீந்திரன், திருமதி. வசந்தா வைத்தியநாதன், திரு. க. இராஜபுவனீஸ்வரன், திரு. க. விவேகானந்தன்.



திருகேதீஸ்வரம் — பாலாவித் தீர்த்தக் கரையில் திருக்கேதீஸ்வர ஆலய மண்டலாபிஷேகத்தில் கலந்து கொண்ட சபையினர்.



திருகேதீஸ்வரம் — ஆலய உட்பிரகாரத்தில் திருமதி. வசந்தா வைத்தியநாதன் ஆலய அமைப்பினை மாணவர்களுக்கு விளக்குகின்றார்.



திருகேதீஸ்வரம் — 8.3.2003 ஆலய மண்டலாபிஷேகத்தின் போது கலந்து கொண்ட பொது மக்களும், கல்லூரி மாணவர்களும்.

நெஞ்சில் நிறைந்தவர்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்தில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கும் மாமன்றத்தின் நெஞ்சில் நிறைந்தவர்கள்.



அமரர்
அருணாசலம் செல்லப்பா
அவர்கள்.



அமரர்
சி. நடேசன் அவர்கள்.



அமரர்
வே. பாலகுப்பிரமணியம்
அவர்கள்.




அமரர்
யோகம்மா மாணிக்கம் அவர்கள்




அமரர்
க. குணரத்தினம் அவர்கள்.

யாழ் மண்ணில் மாமன்றத்தின் சேவை.











அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர்களுள் ஒருவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்கள். இவர் யாழ் மண்ணில் மாமன்றத்தின் சமய சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரிதும் உறுதுணையாக இருக்கிறார். யாழ் சிவபூமி அறக்கட்டளையின் தலைவராகவிருந்து அதன் ஊடாக ஆற்றும் சேவைகளும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். கோண்டாவிலில் சிவபூமி பாடசாலை, மனவனர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான கல்விக் கூடம், சுழிபுரத்தில் சிவபூமி முதியோர் இல்லம் போன்றவைகளை அமைத்து இங்கு தங்கியிருப்போர் சைவச் சூழலில் வாழுகின்ற நிலையை உருவாக்கி அதன் ஊடாக அளப்பரிய தொண்டினைச் செய்து வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் பால்மா மற்றும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு நிலவிய கடந்த சில மாதங்களுக்கு முன்னர், அகில இலங்கை இந்து மாமன்றம் கொழும்பிலிருந்து கப்பலில் அங்கு அனுப்பிவைத்த பால்மா பொதிகளை, நோயாளர்களுக்கும் வலுவிழந்தோர்களுக்கும் மற்றும் நலன்புரி இல்லங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பங்கிட்டு வழங்கி உதவியிருந்தார்.

மாமன்றம் யாழ்ப்பாணம் – நல்லூரில் நிறுவியிருக்கும் கட்டிடத்தைப் பராமரிக்கும் பணியிலும், மாமன்றம் யாழ் மக்களுக்கு வழங்கியிருக்கும் அம்புலன்ஸ் வாகன சேவையின் பராமரிப்புப் பணியிலும் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடும் பங்களிப்பும் பெரிதும் போற்றத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் சிவபூமி அறக்கட்டளையின் சேவை



அகில இலங்கை இந்து மாமன்றத்தினதும், மனித நேயத்தினதும் ஆதரவுடன் இயங்கும் யாழ் சிவபூமி அறக்கட்டளை நடத்தும் மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான கல்விக் கூடம், அமெரிக்க கொடை வள்ளல் ஒருவரின் ஆதரவுடன் [கோண்டாவில் பொற்பதி வீதியில்] கம்பீரமாகக் காட்சி தருகிறது.



அகில இலங்கை இந்து மாமன்றம் அன்பளிப்புச் செய்த "சிவதொண்டர் சேவை அம்புலன்ஸ்" வாகனம் கோண்டாவில் சிவபூமி பாடசாலைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருக்கிறது.




யாழ். சுழிபுரத்தில் இயங்கும்
"சிவபூமி வயோதிபர் இல்லம்"




யாழ் கட்டிடச் சிற்பி

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மாமன்றக் கட்டிடத்தை அமைத்துத் தந்த ஜெய்சுதன் கட்டிட ஒப்பந்த நிறுவனத்தின் தலைவர் திரு. கனகரத்தினம் சண்முகநாதன்.

சைவத் தமிழ் காவலர்கள்




நல்லை நகர் பெற்றெடுத்த
பெருமகனார்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்




கிழக்கிலங்கை தந்த
பேராசான்
சுவாமி விபுலானந்தர்

சிவ தொண்டர்கள்



தவத்திரு
யோகர் சுவாமிகள்



தவத்திரு
செல்லப்பா சுவாமிகள்




தவத்திரு
செல்லத்துரை சுவாமிகள்

சைவப் பெருவள்ளல்



சைவத் தமிழ் உலகம்
போற்றும் சைவப்
பெருவள்ளல் இந்துபோர்ட்
சு. இராசரத்தினம் அவர்கள்.

இறைபணி



அமெரிக்காவில் ஹவாய் சுப்பிரமணிய
சுவாமி ஆச்சிரமத்திலிருக்கும்
இலங்கையைச் சேர்ந்த
சுவாமி தொண்டுநாதர் அவர்கள்.

பேசாலை மீன்பிடித்துறை



இந்து மீனவ மக்களின் நலன் கருதி இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையின் நிதியுதவியுடன் வாங்கப்பட்டு, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையிலும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் பராமரிப்பிலும் இயங்கிவரும் பேசாலை மீன்பிடித்துறையில் மாமன்ற உறுப்பினர்கள்.

சைவப் பெரியார்களும்
சைவத் தமிழ் அறிஞர்களும்



ஞானவித்தகர் அருட்கவி
சீ. விநாவித்தம்பி
அவர்கள்.



சைவப் பெரியார்
சு. சிவபாத சுந்தரனார்
அவர்கள்.



பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை
அவர்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம்
முன்னாள் தலைவர்கள்



அமரர் சி. குமாரசாமி அவர்கள்



அமரர் ஆ. சின்னத்தம்பி
அவர்கள்



அமரர் வே. பாலசுப்பிரமணியம்
அவர்கள்



அமரர்
சேர் கந்தையா வைத்தியநாதன்
அவர்கள்



நீதியரசர்
அமரர் வி. சிவசுப்பிரமணியம்
அவர்கள்



அமரர் எஸ். சோமசுந்தரம்
அவர்கள்



நீதியரசர்
அமரர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்கள்

காலத்தினாற் செய்த நன்றி

IN TIME OF NEED

இப்பொன்விழா மலர்த் தயாரிப்பு ஓர் அற்புத அனுபவம். விழா மலரொன்று இத்துணை பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டது இதுவே முதற் தடவை. தாமதமாக வந்தாலும் தரமாக அமைந்ததையிட்டு இறட்டிப்பு மகிழ்ச்சி.

யாழ் மாநாட்டுக் கட்டுரைகள், மட்டக்களப்பு மாநாட்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் அவற்றின் முக்கியத்துவம் கருதி தனிப்பிரிவுகளில் தரப்பட்டுள்ளன. இம் மலருக்கென விசேடமாக எழுதப்பட்ட கட்டுரைகள் சிறப்புக் கட்டுரைகள் என்ற மகுடத்தின் கீழ் அடக்கப்பட்டுள்ளன. ஆங்கிலக் கட்டுரைகள் வாசகர்கள் வசதி கருதி தனியாக இணைக்கப்பட்டுள்ளன. அங்கத்துவ சங்கங்களின் பணிகளை அவர்களது பிரதிநிதிகள் மூலமே சொல்ல வைத்துள்ளோம். பக்கங்கள் ஆயிரத்தை அண்மித்து விட்டதால் பாவனைக்கு இலகுவாக இரண்டு பாகங்களாகப் பிரித்துள்ளோம். ஆயினும் ஒரே தொடரிலக்கத்துடன் ஒரே கூட்டில் ஜோடிப் பறவைகள் போல் அவை இணைந்துறையும்.

சிவன் சக்தியென *இருபரமாய்ஸ்* இறைவன் காட்சி தருவதை மனதிலிருத்தி, *இருபரமாகவுள்ள* இம்மலரின் அட்டையில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த *இரு* ஈச்சரங்களையும் வடக்கிலிருந்து நாவலர், கிழக்கிலிருந்து விபுலானந்தர் என *இரு* ஸ்வத் தமிழ்க் காவலர்களையும் வடக்கிலும், தெற்கிலும் அமைந்த மாமன்றத்தின் *இரு* பெரும் கட்டிடங்களையும் பட்டொளி வீசிப் பறக்கும் நந்திக் கொடியைப் பின்னணியிலும் அமைத்திருக்கிறோம். 50 ஆண்டு நிறைவைக் குறிக்க 50 விளக்குகளுக்கிடையில் மாமன்றத்தின் சின்னமாய்த் திகழும் நடராஜப் பெருமானின் திருவுருவமும் முன் அட்டையை அலங்கரிக்கின்றன. உள்ளேயும் தெய்வீக மணம் கமழும் வகையில் தெய்வத் திருவுருவப் படங்களை இணைத்துள்ளோம்.

புதிய நூற்றாண்டின் பொக்கிஷமான இப் பொன்னான மலரின் பின்னாலே பலரின் உழைப்பு ஒளிந்துள்ளது. இம்மலர் தயாரிப்பில் மாமன்ற ஆராய்ச்சி அலுவலராகவிருந்த திரு. பால. இந்திரசர்மா ஆரம்பத்தில் பெரும் பங்களிப்புச் செய்தவர். இவரைத் தொடர்ந்து மாமன்ற தகவல் அலுவலர் திரு. அ. கனகசூரியர் மலரை நிறைவு செய்வதில் பெரும் பங்கு வகித்தார். அச்சகத்தில் பல நாட்கள் காலை முதல் இரவு வரை தொடர்ந்திருந்து நூற்றுக்கணக்கான நிழற்படங்களை வரிசைப்படுத்தி அழகாகத் தொகுத்துதவினார். மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. க. நீலகண்டன் அவர்கள் பலகாலமாகச் சேகரித்து வைத்திருந்த இப்படங்கள் மாமன்ற சமய, சமூகப் பணிகளைச் சிறப்புற வெளிக்காட்ட உதவியுள்ளன. மலர் தயாரிப்பில் திரு. ம. பாலகைலாசநாத சர்மா, திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோர் சிறப்பாக உதவினர்.

மலர் தயாரிப்பில் யுனி ஆர்ட்ஸ் நிறுவன ஊழியர்கள் மிக அருமையாக ஒத்துழைப்பு வழங்கினார்கள். விசேடமாக இரா. சுதர்சினி, எம். ஜெகதீஸ்வரன் மற்றும் கி. கோபிகிருஷ்ணா ஆகியோர் முகம் சுழிக்காது ஒவ்வொரு இடைச் செருகல்களையும் திருத்தங்களையும் சேர்த்து உதவினார்கள். ஒப்புநோக்கில் திரு. ஜே. ரீ. இராசநாயகம் பங்காற்றினார். அட்டைப்படம் மற்றும் உள்ளே உள்ள சித்திரங்கள் ஆகியவற்றை கணினிமூலம் வடிவமைப்பதில் சுதர்சினி கலை நுட்பத்துடன் எனக்குதவினார். இறுதியாக யுனி ஆர்ட்ஸ் நிறுவன அதிபர் திரு. பொன். விமலேந்திரன் அவர்கள் மலரின் ஒவ்வொரு நிலையையும் நேரடியாக மேற்பார்வை செய்ததுடன் பல வர்ண இதழ்களுடன் சிறப்பாக வெளிவர அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

இம்மலருக்கு விடயதானம் செய்தோருக்கும், கட்டுரைகளை சேகரித்து தருவதில் உதவிய பேராசிரியர் அ. சண்முகதாஸ், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோருக்கும், பலரும் பயன் பெறும் வகையில் மலர் பிரதிகளை வாங்கி உதவி புரிய இருப்பவர்கட்கும் எமது நன்றிகள். விடயதானங்கள் செய்தவர்கள் சிலரது நிழற்படங்கள் கிடைக்காததால் மலரில் இடம்பெறவில்லை.

மலர் தயாரிப்பில் பலவகைகளிலும் உதவி புரிந்த சகலருக்கும் மாமன்றத்தின் நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். வரலாற்றின் மைல்கல்லாம் இவ் வண்ண மலரின் தயாரிப்பில் என்னையும் இணைத்துக் கொள்ள சந்தர்ப்பத்தையளித்த இறையருளுக்கும் எனது நன்றி.

இந்து மாமன்ற மலர்குழு சார்பில்

எம். ஆர். ராஜ்மோகன்
சட்டத்தரணி
உதவிலவர், சுங்கத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம்
மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்

நகுலேஸ்வரம், கீரிமலை, யாழ்ப்பாணம்
NAGULESWARAM, KEERIMALAI, JAFFNA



முன்னேஸ்வரம், சிலாபம்
MUNNESWARAM, CHILAW



ஸ்ரீ முருகன் கோயில், கதிர்காமம்
SRI MURUGAN KOVIL, KADIRGAMAM



கந்தசுவாமி கோயில், நல்லூர்
KANDASWAMY KOVIL, NALLUR



திருக்கேதீஸ்வரம், மன்னார்
THIRUKKETHEESWARAM, MANNAR





துர்க்கை அம்மன் கோயில், தெல்லிப்பழை
THURKAI AMMAN KOVIL, TELLIPALAI



வல்லிபுர ஆழ்வார் கோயில், பருத்தித்துறை
VALLIPURA ALWAR KOVIL, POINT PEDRO



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு
SRI NAGAPHOOSHANI AMMAN KOVIL, NAINATHIVU



செல்வச் சந்நிதி முருகன் கோயில், தொண்டைமானாறு
SELVA SANNITHI MURUGAN KOVIL, THONDAMANARU


சிவன் கோயில், பொலன்னறுவை
SIVAN KOVIL, POLANNARUWA



திரௌபதி அம்மன் கோயில், உடப்பு
THIRAUPATHY AMMAN KOVIL, UDAPPU



கந்தசுவாமி கோயில், வவுனியா
KANDASWAMY KOVIL, VAVUNIYA



ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில், முல்லைத்தீவு
ODDUSUDDAN THANTHONREESWARAR KOVIL, MULLAITHIVU



திருக்கோணேஸ்வரம், திருகோணமலை
THIRUKKONESWARAM, TRINCOMALEE





ஸ்ரீ பொன்னம்பலவனேஸ்வரர் கோயில், கொழும்பு
SRI PONNAMBALAVANESWARAR KOVIL, COLOMBO



சிவன் கோயில், காலி
SIVAN KOVIL, GALLE



ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், மாத்தளை
SRI MUTHUMARIAMMAN KOVIL, MATALE



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், மட்டக்களப்பு
KOKKATICHOLAI THANTHONREESWARAR, BATTICALOA

அகில இலங்கை இந்து மாமன்றம்

பொன்விழா சிறப்பு மலர்


1955 50 2005




திருக்கேதீஸ்வரம்



திருக்கோணேஸ்வரம்




ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



சுவாமி விபுலானந்தர்



மாமன்ற கொழும்புத் தலைமையகம்



யாழ். மாமன்றக் கட்டிடம்

ISBN 978-955-1133-01-6

ALL CEYLON HINDU CONGRESS

A.C.H.C. Building., 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha, Colombo - 2, Sri Lanka. Telephone.: +94 11 2434990. Fax: +94 11 2344720

Website : http://www.hinducongress.org E-Mail : admin@hinducongress.org

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13, SRI LANKA.
TEL: +94 11 2330195, 2478133. FAX: +94 11 2330195. E-MAIL: unieart@sltnet.lk